# உபந்யாஸ மஞ்சரி



ஸ்ரீமதஹோபில மடம் வித்வான்

ஸ்ரீ உப .வே. வித்வான் பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி அருளியது

Sincere thanks to Oppiliappan Koil SrI V. Sadagopan SvAmi for kindly hosting this book in his website

www.sadagopan.org

Pictures Courtesy:
Ramanuja Dasargal at Pbase.com

eBook Assembly by:
Sri Murali Desikachari

# உபந்யாஸ மஞ்சரி



ஸ்ரீமதஹோபில மடம் வித்வான்

ஸ்ரீ உப .வே. வித்வான்
பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி
அருளியது

பரிசோதகர்: நெடுந்தெரு ஸ்ரீமான் கண்ணன் ஸ்வாமி
சம்பாதகர்: கோடிப்பாக்கம் நடாதூர் ஸ்ரீமான் கோஸகன் தம்பதிகள்
அச்சிட உதவியவர்: ஸ்ரீமான் பாக்யசாமி

நன்றி:
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா
தேசிக பவனம், மைலாப்பூர், சென்னை 600004

# பொருளடக்கம்


| வியாசம் எண் | வியாசத்தின் தலைப்பு | பக்கம் எண் | வியாசம் எண் | வியாசத்தின் தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|
| 1 | சதுரங்கம் | 1 | 32 | அநுமனைப் போன்ற ஆசார்யர் | 181 |
| 2 | உண்மையை யோசித்துப் பார் | 7 | 33 | நடப்பது நடந்தே தீரும் | 185 |
| 3 | மனிதனின் வயது | 13 | 34 | பற்றாக் குறை | 190 |
| 4 | பாசம் | 18 | 35 | பண்டிதர் யார்? | 194 |
| 5 | நாங்கள் நாங்களே நீங்கள் நீங்களே | 23 | 36 | கன்னிகாதானம் | 198 |
| 6 | மார்வம் என்பதோர் கோயில் | 27 | 37 | ஒரே இரவு, ஒரே பகல் | 203 |
| 7 | ஸாது தரிசனம் | 32 | 38 | படித்தவன் பணக்காரனா? | 207 |
| 8 | வேதம் ஓதுதல் | 37 | 39 | இரு சகோதரர்கள் | 212 |
| 9 | புஷ்பாஞ்சலி | 44 | 40 | பக்தனின் பெருமை | 217 |
| 10 | பிராட்டியின் அவதார விசேஷம் | 51 | 41 | காக்கும் இயல்பினன் | 221 |
| 11 | ப்ரபத்தியில் ஒரு விசேஷம் | 57 | 42 | எது உண்மை ? | 226 |
| 12 | தாஸ்யம் | 64 | 43 | ஸம்பத்தும் விபத்தும் | 232 |
| 13 | வைஷ்ணவன் எவன்? | 70 | 44 | ஸாயுஜ்யம் | 237 |
| 14 | மௌன விரதம் | 77 | 45 | மூன்று மனிதர்கள் | 241 |
| 15 | பறவைகள் | 82 | 46 | அமுதமும் விஷமும் | 246 |
| 16 | தேஹ ஸம்பத்து | 90 | 47 | ஒரு தனிகனின் கேள்வி | 250 |
| 17 | பெருமை பெறுவது எதனாலே ? | 96 | 48 | மனம் ஏன் மாறியது | 255 |
| 18 | கோபப்ரஸாதம் | 102 | 49 | யத்ர ப்ராதா ஸஹோதர: | 260 |
| 19 | பத்தும் மூன்றும் ஒன்றும் | 107 | 50 | உயிரா, மானமா? | 264 |
| 20 | இருபத்து நான்கு படிகள் | 113 | 51 | மூன்று குற்றங்கள் | 267 |
| 21 | விச்வாமித்ர முனிவரின் பெருமை | 117 | 52 | ஸம்மார்ஜனம் | 274 |
| 22 | கடன் | 122 | 53 | ச்ராத்தம் செய்வது ஏன்? | 278 |
| 23 | தர்மம் தலை காக்கும் | 128 | 54 | கோடரி | 285 |
| 24 | இடுக்கண் களையும் இறைவன் | 134 | 55 | பித்ரு காரியத்தில் ஒரு விசேஷம் | 290 |
| 25 | பிறர் வினை நமக்கு வேண்டாம் | 139 | 56 | மக்களின் போக்கு | 296 |
| 26 | ராமாநுஜ பதம் | 146 | 57 | தர்ம ஸூக்ஷ்மம் | 299 |
| 27 | ஜோஸ்யம் பலித்துவிட்டதே | 152 | 58 | பவநாசினி | 304 |
| 28 | ராமாநுஜர் காட்டிய விசிஷ்டாத்வைதம் | 159 | 59 | திருமகள் வசிக்கும் இடம் | 308 |
| 29 | ஸ்ரீபாஷ்யமும் ஸ்ரீபாஷ்யகாரரும் | 164 | 60 | பிறந்த இடத்தையே அடையும் | 312 |
| 30 | பகவத் பக்தர்களின் பெருமை | 171 | 61 | ஆசார்ய காளமேகம் | 315 |
| 31 | இளையபெருமாளும் இளையாழ்வானும் | 176 | 62 | பகவத் கீதையும் . திருப்பாவையும் | 319 |



ஸ்ரீ உப .வே. வித்வான்
பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி

(Picture Courtesy: Ramanuja Dasargal at Pbase.com)

# About the Author

Srivaikuntavasi Mahavidvan U.Ve. Perukaranai Madabushi Sri Chakravarthyachariar Swamy was among the few outstanding exponents of Vishishtadvaitha philosophy established and propagated by Shri Ramanuja who upheld the primacy of Vedas and refuted successfully the prevalent materialistic and nithilistic schools of thought. With a Nyaya Siromani from the Samskrit University Tirupathi in the year 1944, Swamy specialized in Tarka, Vedanta and Sahitya under eminent teachers like Shri Uttamur Viraraghavacharyar, Shri Neelameghacharyar, Shri D.T. Thathacharyar Swamy and Shri Ramanatha Sastrigal. The culminating tutelage in Shastras came about under the 42nd Pontiff of Shri Ahobila Mutt lasting for over six years. Swamy worked as a teacher for a few years and served also as Principal of Maduranthakam Samskrit College. He was an examiner and an active participant in several Vidvat Sadas for many years. He authored several works in both Samskrit and Tamil and has guided a number of students in research and higher studies. His discourses on Shri Bhashya, Shrimad Rahasyathraya Sara, Shrimad Ramayana and Tiruppavai are veritably a feast for the mind and the spirit of one and all. Among the many honours and titles conferred on him unsought, the title of Sara Saragna (Commander of quintessential knowledge) awarded by the 42nd Pontiff Shri Ahobila Mutt was the one he cherished the most, coming as it did from an esteemed scholar-saint of the last century. He was also an Asthana Vidvan of Sri Ahobila Mutt.

The Sribhashyachandrika, a Sanskrit commentary on Sribhashya is his magnum opus reflecting as it does to many subtle nuances and implication learnt from Shri Alaghiasingar (42) during the Kalakshepa periods. His Tamil commentary on Tiruppavai is an exhaustive treatise which is a boon not only to first-time learners but also to the many exponents of Tiruppavai, particularly during the December-January season every year.

Swamy was living at Shri Vedantha Desika Bhavanam, Mylapore, Chennai. His lectures and discourses at the Bhavanam attracted people, both young and old, who sought the verities of true knowledge, the riches of the mind and the solace of the spirit. Despite his deep scholarship, Swamy had a unique and simple way of imparting instruction to people at all levels. He lived a simple, detached and austere life, unmindful of the worldly riches. It was appropriate that Swamy lived and taught at the Bhavanam named after the great scholar Shri Vedanta Desika, who was as much known for his utter simplicity and detachment as for his deep and abiding multifaceted knowledge.

Some of the awards and titles conferred on Sri Perukkaranai Swamy were:

1. Siromani
2. Sara Sarj~nar
3. Brahma Vidyavachaspathi
4. Thiruppavai Kesari
5. Ramayana Sudhavarshi
6. Bhagavatha Sudhasvathi
7. Vidvat Yanyasaka Ratnam
8. Nichila Vidyavarthi
9. Desika Darsana Chudamani
10. Astika Ratnam
11. Vaishnava Simham
12. Abhinava Sudarsana Bhattaryar
13. Satvavadhukar
14. Janathipathi Sammanithar
15. Vyakhyana Kusalar
16. Maha Mahopadhyayar

**Perukkaranai Swami's 82nd Thirunakshatram**



Vidwath Goshti:(names in pradakshina order)

**Tirumangai Azhwar Goshti:**

1. Sri U.Ve. Villur Karunakaracharya Swami
2. Sri U.Ve. Karalapakkam Anantapadmanabhacharya Swami

**Nammazhvar Goshti**

3. Sri U.Ve. Uttamur Rajagopalacharya Swamy
4. Sri U.Ve. Mukundagiri Anantapadmanabhacharya Swami
5. Adhyakshaka : Sri U.Ve. Perukkaranai Swami.

**Kulashekhara Azhwar Goshti**

6. Sri U.Ve. Pulikunram Sthalasayanacharya Swami
7. Sri U.Ve. Mannarkudi Rajagopalacharya Swami

(Picture Courtesy: Ramanuja Dasargal at Pbase.com)

# 1. சதுரங்கம்

உலகத்தில் எத்தனையோ விளையாட்டுக்கள் இருக்கின்றன. பள்ளியில் பையன்கள் கோலிக்குண்டு, கிரிக்கெட், வாலிபால் முதலிய விளையாட்டுக்களை விளையாடுவார்கள், இந்த விளையாட்டெல்லாம் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்குக் கைப்பற்றப்படுகின்றன.

அவரவர் வயதுக்கும் உத்தியோகத்துக்கும் நடத்தைக்கும் தகுந்தபடி அந்த அந்த விளையாட்டுக்களில் இறங்குவது வழக்கம், காலையிலிருந்து குடும்ப ரக்ஷணத்திற்காகப் பல நிர்ப்பந்த வேலைகளைச் செய்கிறவர்கள் உடலிலும் மனத்திலும் ஏதோ ஒருவிதமான களைப்பை அடைவதனால் இந்த சிரமம் தீரச் சில விளையாட்டுக்களை கடைபிடிப்பது வழக்கம். கீழ்ச் சொன்ன விளையாட்டுக்களைப்போல் நாய்-புலி, தாயக்கட்டை, சதுரங்கம் முதலியவற்றையும் வீட்டில் சிநேகிதர்களும் ஆண் பெண் தம்பதிகளும் ஆடுவார்கள்,

தருமபுத்திரர் துரியோதனனுடன் அக்ஷங்களை (காய்களை)க் கொண்டு த்யூதம் என்னும் விளையாட்டை ஆடினார் என்பது பாரதத்தில் அனைவருக்கும் தெரிந்ததே. இதைத்தான் சதுரங்கம் என்றும் சொல்லுவதுண்டு. இந்த விளையாட்டு வேடிக்கையாகப் பொழுதுபோக்க ஆடுவதும் உண்டு. பந்தயம் வைத்துப் பணம் சம்பாதிக்க ஆடுவதும் உண்டு. தருமபுத்திரர் இம்மாதிரி ஆட்டத்தை ஆடிச் சகுனிமூலமாகத் தோல்வி அடைந்து தமது ராஜ்யத்தை இழந்தார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இப்படி பந்தயத்தை வைத்து ஆட்டம் ஆடுவது அவ்வளவு நன்மை தராது. யார் தோல்வி அடைந்தாலும் அவர்களுக்குச் செல்வம் போகிறபடியாலும், மற்றவர்கள் வறுமையை அடைவார்களாகையாலும் மனத்துக்கு வருத்தம் உண்டாவது நிச்சயம். ஆகையால் விஷயமறிந்தவர்களும், நியாயமான வழியில் இருப்பவர்களும் இப்படி பணத்தை வைத்து ஆடமாட்டார்கள். மனம் நிம்மதி அடைய வேண்டுமென்றும், பொழுது உல்லாசமாகப் போக வேண்டும் என்றும் எண்ணியே இந்தத் துறையில் இறங்குவார்கள். வீட்டில் தம்பதிகள் பொழுது போக ஆனந்த விகடன், கல்கி முதலிய பத்திரிக்கைகளைப் படிப்பது போலச் சதுரங்கம் என்னும் விளையாட்டையும் ஆடுவார்கள். இதை பல இடங்களில் நாம் பார்த்திருக்கிறோம். இம்மாதிரி மனிதத் தம்பதிகள் விளையாடுவதில் ஓர் அதிசயமும் இல்லை. ஸாக்ஷாத் பகவானும் அவருடைய மஹிஷியும் (திவ்ய தம்பதிகளுமே) இந்த விளையாட்டைக் கைப்பற்றுகிறார்களாம். அவர்களும் எத்தனை காலம் தான் வெறுமனே இருப்பார்கள்? பொழுதைப் போக்க ஏதாவது ஒரு வழியைப் பிடிக்க வேண்டும் அல்லவா?

முதலில் சதுரங்கம் எனபது என்னவென்று விளக்கி, அவர்கள் கைப்பற்றும் ரீதியைப் பிறகு விளக்குகிறோம். இரண்டு கட்சிக்காரர்கள் தங்கள் இருவருக்கும் நடுவில் ஒரு சதுரங்கப் பலகையை வைப்பார்கள். அந்தப் பலகையில் வெண்மை, கருமை, செம்மை ஆகிய நிறங்களில் கட்டங்கள் கட்டப்பட்டிருக்கும். சதுரங்க விளையாட்டுக்காக ஏற்பட்டுள்ள காய்கைகளை வைக்கவேண்டிய இடங்களும் அந்தப் பலகையில் இடம் பெற்றிருக்கும். பாய்ச்சிகளை உருட்டி அந்த அந்த இடங்களில் காய்களை வைத்து உல்லாசமாக ஆடிப் பொழுது போக்குவார்கள். இது உலக இயற்கை. இந்த வகையே கைப்பற்றி திவ்ய தம்பதிகளும் விளையாடுவார்கள்.

நம் ஸம்ப்ரதாயத்தில் சேதனம், அசேதனம், ஈஸ்வரன் என்ற மூன்று தத்துவங்கள் உள்ளன. இதில் சேதனன் என்பவர் மூவர் - பத்தன், முக்தன், நித்யன் என்று. ஸம்ஸார மண்டலத்தில் மூழ்கிக் கிடந்தும் பலவிதமான ஸுகதுக்கங்களை அநுபவித்தும் இருப்பவர் பத்தர் என்று கூறப்பெறுவர். ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றுக் கர்ம பாசத்தால் கட்டப்பட்டிருப்பவர் பத்தர் என்று

தாத்பர்யம். இந்தப் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை விட்டு, ஸ்ரீ வைகுண்ட லோகத்தில் எம்பெருமான் அனுபவத்தை பெற்று மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள் முக்தர்கள். கர்ம பாசத்திலிருந்து விலகி சுகானுபவம் பண்ணுகிறவர்கள் என்றதாயிற்று. கர்ம ஸம்பந்தமே எப்போதும் இல்லாமல் பகவானுக்கு அடிமையைப் பெற்று ஒருபோதும் ப்ரக்ருதி சம்பந்தம் இல்லாமல் ஸ்ரீ வைகுண்ட லோகத்தில் பகவதஅனுபவம் பண்ணுகிறவர்கள் நித்யஸூரிகள். இவர்களுக்கு எப்பொழுதுமே ப்ரக்ருதி மண்டலத்தில் கர்ம ஸம்பந்தத்தினால் பிறப்பே கிடையாது, முன்பு பத்தனாக இருப்பவன்தான் முக்தனாகிரான். அம்மாதிரி அல்லர் நித்யர்கள்.

அசேதனம் என்பது ப்ரக்ருதி, காலம், சுத்த ஸத்வம் என்று மூன்று வகைப்படும். இதில் ப்ரக்ருதி என்னும் ஒரு பொருளைச் சாஸ்திரத்தைக் கொண்டுதான் நாம் அறிய முடியும். அதைக் கண்ணால் பார்த்து அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அதன் காரியத்தைக் கண்களால் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது நம் கண்ணுக்குப் புலப்படும் மண், ஜலம், நெருப்பு, ஆகாயம் முதலியவையும், இவற்றினின்று உண்டான நமது உடல், வீடு, வாசல், கம்பம், இரும்பு, கலசம், தங்கம், சங்கிலி, மோதிரம் முதலியவையும் அந்தப் ப்ரக்ருதியின் பரிணாமங்கள் தாம் (மாறுதல்கள்தாம்). எப்படி ஒரு மண்ணுருண்டையினின்று கலசம், அகல், மடக்குப் போன்றவை உண்டாகின்றனவோ அதுபோல் ப்ரக்ருதியினின்று மஹத், அஹங்காரம் என்ற வரிசையில், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் முதலியவை உண்டாகின்றன.

நேற்று, இன்று, நாளை, க்ஷணம், திவஸம் என்ற ரீதியில் நம்மால் வ்யவகரிக்கப் பெறுவது காலம். சுத்த ஸத்வம் என்பது ஸ்ரீவைகுண்ட லோகம். இதையும் சாஸ்திரத்தைக் கொண்டே அறிய வேண்டும். ஈஸ்வரன் என்பவன் ஸ்ரீமந்நாராயணன். இந்தத் திவ்ய தம்பதிகள் தாம் உலகத்தை உண்டுபண்ணுவதும் ரக்ஷிப்பதும் அழிப்பதும் செய்கிறார்கள். ஆக இவர்கள் ஜகத்துக்குக் காரணம். இவர்களைத் தான் ப்ரஹ்மம் என்று வேதம் கூறுகிறது. இவ்விருவருக்கும் கீழ் கூறிய ஆறு பொருள்களும் அடங்கியவை. இதைத்தான், 'ஸ்வாதீன - த்ரிவித சேதனா சேதன - ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி - பேதம்' என்று ஆன்றோர் கூறுவர்.

இப்படி நமது ஸம்ப்ரதாயம் தத்துவங்களைக் கூறும். இங்கு நம் திவ்ய தம்பதிகள் சதுரங்கம் விளயைாடுகிற அழகே ஒரு அழகு, கீழ்க் கூறிய பிரகிருதி என்பது ஒரு பலகை. இதுதான் சதுரங்கப் பலகை. சதுரங்கப் பலகைக்கு வெண்மை. செம்மை. கருமை நிறங்கள் உள்ள கட்டங்கள் இருக்குமே, அம்மாதிரி இதற்கு உண்டா என்றால் இதற்கும் உண்டு. இந்த மூல ப்ரக்ருதி என்னும் பலகைக்கு ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்கள் உண்டு. இந்தக் குணங்களுடன் கூடிய ப்ரக்ருதியே நமக்குச் சரீரமாக மாறுகிறது. அப்பொழுது இந்த முக்குணமும் வேலை செய்வது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பொறுமை, நல்லறிவு, கோபதாபங்களோ, முதலியவையோ, தூக்கம் ஆலஸ்யம் முதலியவையோ நமக்கு ஏற்படுகின்றனவே, அவைதாம் இந்த முக்குணங்களின் காரியம். ஆக இந்தப் பலகைக்கு மூன்று குணங்கள் உள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அதில் ஸத்வம் - வெண்ணிறம், ரஜஸ் - செந்நிறம், தமஸ் - கருநிறம், என நாம் நினைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி இந்தப் பலகையின் மூலமாகப் படைக்கப்பட்ட ப்ரஹ்மலோகம், சிவலோகம், இந்திரலோகம் மற்றுமுள்ள இடங்கள் தாம் காய்களைப் போடும் இடங்கள். பிரமன், சிவன், இந்திரன் முதலான நம் வரையிலுள்ள ஜீவர்கள்தாம் காய்கள். இந்த ஜீவர்கள் பத்தர்கள். நித்யரும், முக்தரும் இந்தப் பலகைக்கு காய்களாக ஆக மாட்டார்கள். புண்ணியம், பாவம் என்ற வினைகளை உடையவர்கள்தாம் காய்களாக ஆவார்கள். அநாதியாக இந்தப் ப்ரக்ருதி

மண்டலத்தில் உழன்று கொண்டிருக்கிற நாம் எப்பொழுதும் புண்ணிய பாவங்களாகிற வினைகளைச் செய்துகொண்டிருக்கிறபடியால் கர்மஸம்பந்தம் நமக்கு உள்ளது,

'விதை முதலிலா மரம் முதலிலா'? என்ற கேள்வி எப்பொழுதும் உள்ளது. அதுபோல், 'வினை முதலில் இருந்து அதன் மூலமாகப் ப்ரக்ருதி ஸம்பந்தம் உண்டாகிறதா'? என்ற கேள்வி எப்பொழுதும் இருக்கும். இந்த ஸம்பந்தமும் வினையும் அநாதியானபடியால் இந்தகேள்விக்கு அவகாசமில்லை. ஆக இந்த தம்பதிகள், அவரவர் செய்த வினையாகிற பாய்ச்சிகளை உருட்டிப் பார்க்கிறார்கள். அப்பொழுது அதற்குத் தகுந்தவாறு அந்த அந்த உலகங்களாகிய கட்டங்களில் அந்த அந்த ஜீவனாகிற காய்களைப் போட்டு மகிழ்கிறார்கள். அவரவர்களுக்குத் தகுந்த வினையைக் கொண்டு அவரவர்களை அந்த அந்த ஸ்தானங்களில் வைக்கிறார்கள்.

அதாவது உலகத்திற்கு ஸ்ருஷ்டி, பிரளயம் என்ற இரண்டு தசைகள் உள்ளன. இப்பொழுது கண்ணால் அனைத்தையும் பார்க்கிறோமே. இதுதான் ஸ்ருஷ்டி தசை. இவை எல்லாம் அழிந்து, ப்ரக்ருதி என்ற ஒரே பொருளே எப்பொழுது இருக்கிறதோ அதுதான் ப்ரளய தசை. அப்பொழுது பத்த ஜீவர்கள் இந்தப் ப்ரக்ருதியில் ஓரிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். பொன்வேலை செய்பவன் அவ்வப்போது தங்கத்தை அராவும்போது ஏற்படும் தங்கத் தூள்களை ஒரு மெழுகில் ஒற்றி எடுத்து வைப்பதுண்டு. அதுபோல இந்த ஜீவர்கள் ப்ரக்ருதி எனப்படும் மெழுகில் ஒற்றி வைக்கப் பட்டிருக்கிறார்கள். 'இந்த ஜீவர்கள் அறிவில்லாத அசேதனப் பொருளைப் போல் ஓர் அறிவும் இல்லாமலும் நன்மை தீமைகளை ஆராய்ந்தெடுப்பதற்கும் செய்வதற்கும் தகுதியற்றவர்களாகவும் இருக்கிறார்களே, இப்படியே இவர்கள் இருந்தால் எப்படி நற்கதியைப் பெற இயலும்? இன்ப ஸுகங்களை எப்படி அடைய முடியும்?' என்று எண்ணி, பகவான் இந்த ப்ரக்ருதியைக் கொண்டு மண் நீர் நெருப்பு முதலிய பல பொருள்களைப் படைக்கிறான். இவற்றுள் ஒன்றோடொன்று பொருள்களைக் கலந்து அண்டம் என்ற ஒரு வஸ்துவை ஸ்ருஷ்டிக்கிறான். இந்த அண்டத்தில் பதினான்கு உலகங்கள் அடங்கியுள்ளன. ப்ரஹ்மலோகம் முதல் பாதாள உலகங்கள் வரை இதில் உள்ளது. இப்பொழுது நாம் வசிக்கும் பூலோகமும் இதில் உள்ளது.

இம்மாதிரி எத்தனையோ அண்டங்கள் பரமாத்மாவினால் ப்ரக்ருதி என்னும் பொருளை வைத்துக்கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அண்டத்தில் அடங்கியுள்ள உலகங்களில் எத்தனையோ பேர் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பிரமனும் சிவனும் இந்திரனும் குபேரனும் வருணனும் மற்றுமுள்ள நாமும் ஒவ்வொரு ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம். ப்ரஹ்மாவின் பட்டத்தில் யாரை வைக்கலாம் என்று பகவான் பார்க்கிறான்.

யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:
புநஸ் த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும.

என்ற கணக்கில். தன்னை யுககோடி ஸகஸ்ரம் எவன் ஆராதித்திருக்கிறான் என்பதை பகவான் கவனிக்கிறான். அந்த ப்ரக்ருதியில் ஒட்டிக்கொண்ட ஜீவன்கள் அனைவரும் ஏற்கனவே ஏற்பட்ட ஸ்ருஷ்டியில் புண்ய பாவங்களைச் செய்திருக்கிறார்களானபடியால், கீழ்க்கூறிய நல்வினையைச் செய்திருக்கும் ஒருவனை ஆராய்ந்தெடுத்து ப்ரஹ்ம பட்டத்தில் பகவான் வைக்கிறான். இம்மாதிரி நூறு அச்வமேதம் செய்து சதக்ருது என்று பேர் பெற்றவனை அவனிடத்தில் உள்ள முந்திய நல் வினையை முன்னிட்டு இந்திரப் பட்டத்தில் வைக்கிறான்.

இம்மாதிரியே சிவனையும் குபேரனையும் வருணனையும் நம்மையும் அவரவர் வினையை முன்னிட்டு ஸ்ருஷ்டிக்கிறான். பகவான் தானாகவே ஒருவனைப் ப்ராமணனாகவும், மற்றவனை மற்றொரு இனத்தவனாகவும், ஒருவனை பணக்காரனாகவும், மற்றவனை தரித்ரனாகவும், ஒருவனைப் புத்திசாலியாகவும், இன்னொருவனை மூடனாகவும் ஸ்ருஷ்டிக்கிறான் என்று நினைக்க வேண்டாம். அவரவர் செய்யும் நல்வினையையும் தீவினையையும் அநுசரித்துப் பிறப்பையும் குணத்தையும் ஸ்வபாவத்தையும் ஒழுக்கத்தையும் உண்டுபண்ணுகிறான். பொன்நகை செய்பவன் நமது விருப்பத்தை அநுசரித்துத்தானே வளையம், மோதிரம், சங்கிலி முதலியவற்றை செய்கிறான்? அவனாகவே ஒரு பொருளை செய்து, 'நீ இதை எடுத்துக்கொள்' என்று சொல்வதில்லை. அதுபோல் பகவானும் நமது வினையாகிற விருப்பத்தை முன்னிட்டு அவற்றை உண்டுபண்ணுகிறான்.

"தத: பரிவ்ருத்தௌ கர்மபல சேஷேண ஜாதிம் ரூபம் பலம் வர்ணம் மேதாம் ப்ரஜ்ஞாம் த்ரவ்யாணி தர்மாநுஷ்டாநம் இதி ப்ரதிபத்யதே" என்று ஆபஸ்தம்பரும் சொன்னார். ஆகையால் திவ்ய தம்பதிகளான லக்ஷ்மி நாராயணன் என்ற இவர்கள் இப்படி அவரவர்களுக்கு ஏற்பட்ட புண்ணிய பாவங்களை அநுஸரித்து அந்த உலகங்களில் ஆட்சியில் வைத்தும் வேலையில் வைத்தும் லீலாரஸத்தை அநுபவித்துப் பொழுது போக்குகிறார்கள்.

இதுதான் அவர்களுக்கு ஓர் விளையாட்டு. இதைத்தான் 'லோகவத்து லீலாகைவல்யம்' என்று வியாஸ மகரிஷி ஸூத்ரமிட்டார். ஸ்ரீபாஷ்யகாரரும், 'அகில புவநஜந்மஸ்தேம பங்காதிலீலே' என்று தமது ஸ்ரீபாஷ்ய ஆரம்பத்தில் குறிப்பிட்டார். ஆகையால் பொய் பேசுவது, களவு செய்வது, பிற பெண்களை க்கவர்வது காரணமின்றியே ஹிம்ஸை செய்வது, பாகவதர்களிடத்தில் அபசாரப்படுவது, அவர்களுக்கு உண்டாகும் மேன்மையைக் கெடுப்பது முதலிய தீய செயல்களை எவர் செய்கின்றனரோ அவர்களின் வினையை அநுசரித்துப் பிறப்பிலும் படிப்பிலும் பணத்திலும் உடலழகிலும் மற்றுமுள்ளவற்றிலும் ஸர்வேஸ்வரன் ஏதாவது ஒரு மாசை உண்டுபண்டுகிறான். நல்ல காரியங்களைச் செய்பவருக்கு நல்ல உடல், பணம், ஸுகம் முதலியவற்றைக் கொடுத்துச் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறான். இப்படி செய்வதுதான் திவ்ய தம்பதிளுக்குச் சதுரங்க விளையாட்டு, இந்த விளையாட்டை வேதங்களும் நித்யஸூரிகளும் கண்டு மகிழ்கின்றனர், இதைத்தான் ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸ்ரீஸ்துதியில் ஒரு ஸ்லோக ரூபமாக வரைந்துள்ளார். அந்த ஸ்லோகம் இதோ -

பஸ்யந்தீஷு ஸ்ருதிஷு பரித: ஸூரிப்ருந்தேந ஸார்தம்,
மத்யேக்ருத்ய த்ரிகுணபலகம் நிர்மிதஸ்தாநபேதம்
விச்வாதீசப்ரணயிநி ஸதா விப்ரமத்யூதவ்ருத்தௌ
ப்ரஹ்மேசாத்யா தததி யுவயோரக்ஷசாரப்ரசாரம்,

திவ்ய தம்பதிகளின் ஜகத்வ்யாபாரத்தை விவரிக்கும் இந்த ஸ்லோகம் இதை ஒரு விளையாட்டாக வர்ணிப்பதில் ரஸம் இருக்கிறது. பிராட்டிக்கு பரிஹாஸ ரஸம் உண்டாக்க பகவான் நாடகம் நடத்துவதாக பட்டர் கூறுகிறார். ஆனால் ஜகத்வ்யாபாரத்தில் பிராட்டிக்கு உள்ள தொடர்பு இந்த ஸ்லோகத்தால் உருவகப்படுத்தப்படுகிறது. இந்த ஆட்டத்தை சுருதிகளும் (பெண்களும்) ஸூரிகளும் (ஆண்களும்) சுற்றுமிருந்து ரஸித்துப் பார்க்கிறார்களாம். இங்கு சுருதிகள் பிரதானம்; ஸ்த்ரிகளும் பார்ப்பதாகச் சொல்வதின் ரஸம் ஜகத்வ்யாபாரத்திற்க்கும் பிராட்டியைத் தவிர வேறு யாருக்கும் ஸம்பந்தம் இல்லை என்பதே இதற்கு சாக்ஷி. சுருதிகளே என்பது தாத்பர்யம். இந்த விளையாட்டால் வேறுபயன் ஏதும் இல்லை - விளையாட்டிற்காகவே

செய்யப்படும் லீலை இது. "ஸூரிப்ருந்தம்" என்ற நபும்ஸகலிங்க பிரயோகம் ஏன்? அந்தப் புரத்தில் கூனர், அலிகள் தான் இருப்பார்கள். புருஷன் என்றால் பரம புருஷன் - ஸ்த்ரி என்றால் மஹாலக்ஷ்மி, மூன்றாவதாக இருப்பவர்கள் அலிகள் தானே - இவர்கள் நித்ய ஸூரிகளே என்றும் ரசிப்பது உண்டு.

"லோகவத்து லீலா கைவல்யம்" என்கிற வியாஸ ஸூத்ரத்தின்படி கேவல லீலைதான் பிரயோஜனம். பரம புருஷன் அவாப்த ஸமஸ்தகாமனானாலும் லீலாரஸத்தை அநுபவிக்கவே ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறான். ஆனால் இந்த விளையாட்டு "அசித வசிஷ்டான் ப்ரளயே ஜந்தூன் அவலோக்ய ஜாத நிர்வேதா I கரண களேபா யோகம் விதரஸி" என்று ஸ்வாமி தேசிகன் அருளியபடி அசேதன ப்ராயர்களாக பிரளய காலத்தில் கிடக்கும் சேதனர்களைக் கண்டு இரங்கி அவர்களுக்கு ஜ்ஞானத்தைக் கொடுத்து நல்லதைச் செய்து நற்கதியை அடையட்டும் என்னும் எண்ணத்துடன் கரணக ளேபராதிகளை கொடுத்து ஸ்ருஷ்டிக்கிறான்.

"முகுந்த கருணாம் வந்தே முக்தேஷு அதி வத்ஸலாம் I
ஸ்வரூப ஸமஸ்தவௌ யஸ்யா: நிர்ஹேதுக ஸஹேது கௌ II

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார். ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது நிர்ஹேதுக க்ருபையும் மோக்ஷம் கொடுக்கும்போது ஸஹேதுக க்ருபையும் என்ற கருத்தில் சொல்கிறார்.

ஆக இந்த விளையாட்டின் நோக்கம் பந்தயமோ வெற்றியோ தோல்வியோ என்பதில் கிடையாது. திவ்ய தம்பதிகள் கர்மானுகுணமாகவே ஸ்ருஷ்டிக்கிறார்கள். என்றும் அவர்களின் எல்லா லீலைகளும் க்ருபா விசேஷத்தின் பலன்களே என்றும் தேறுகிறது,

"ஸர்க ஸ்தித்ய வஸான கேளிரஸிகௌ" என்று அருளியபடி ஜகத் வ்யாபாரத்தை பெருமாளும் பிராட்டியும் [3]ஏகமத்யத்தோடு ரஸிக்கிறார்கள்.

"அகில புவன ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே" என்பது போன்ற பிரமாணங்களிலிருந்து பெருமாளும் பிராட்டியும் சேர்ந்தே எல்லாவற்றையும் ஸங்கல்பத்தாலேயே நிகழ்த்துகிறார்கள் என்று தெளிவு.
இந்த விஷயத்தை கம்பநாட்டாழ்வானும் தனது இராமயணத்தில் மிக ஸ்பஷ்டமாக கூறியுள்ளார். அவரது பாசுரம் இதோ-

'உலகம் யாவையும் தாம் உளவாக்கலும் நிலை பெருத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர் அன்னவர்க்கே அரண் நாங்களே' - என்பது.

"ஜகத் ஜன்மஸ்தேம ப்ரளயரசனாகேளி ரஸிக:" என்றார் தயா சதகத்தில். "பால: க்ரீடனகை: இவ' என்பது விஷ்ணுபுராணம். குழந்தை பந்தை எடுத்து விளையாடுவது போல் பகவானுக்கு இது ஒரு விளையாட்டு.

பகவான் நம் வினையை அநுஸரித்து தன் இஷ்டப்படி செய்பவன். அதில் திறமையையும் உடையவன். ஒருவனை இந்திரனாக ஆக்கலாம். குபேரனாகவும் ஆக்கலாம். சதுர்முகனாக்கவும் செய்யலாம். பக்தனாகவும் செய்யலாம் முக்தனாக்கவும் செய்யலாம். நமது

கர்மம் சுபமாக இருந்தால் ஸந்தோஷமடைவான். ஆசுபமாக இருந்தால் வெறுப்பான். அவ்வளவுதான். ஒரு அரசன் ஸமர்தன் ஸ்வதந்தன் அவன். ஒரு சோழியை காலனா ஸ்தானத்திலும் வைக்கலாம். ஒரு சபரன் ஸ்தானத்திலும் வைக்கலாம். இப்பொழுது நடப்பதையும் கவனியுங்கள். ஒரே கடிதம். அதை 100 ரூபாய் ஸ்தானத்திலும் இருக்கச் செய்யலாம். 1000 ரூபாய் ஸ்தானத்திலும் இருக்கச் செய்யலாம். மதிப்பு என்பது அரசாங்கத்தில் கீழ்பட்டது. அது போலத்தான் ஜீவனுடைய தசை. குபேரன் இந்திரன் ப்ரஹ்மா சிவன் ஏழை பண்க்காரன், நொண்டி ஸுந்தரன் குருடன் முதலியவையும் அவனதீனம். கருப்பு வர்ணம் உடையவன், சிவப்பு வர்ணம் உடையவன் எல்லாம் நம் கர்மாவை முன்னிட்டு அவன் அதீனம். ஸீதையை மிரட்டும் ராக்ஷஸிகள் எத்தனை வகையில் இருந்தனர் என்பதையும் ஸுந்தர காண்டத்தில் பார்க்கலாம். ஆக ரங்கநாதனே, நீதான் என்னை சரியான வகையில் வைக்க வேண்டும் என்றார் பட்டர். கீழ் சொன்ன விஷயத்தைதான் சமத்காரமாகப் பேசினார். அவர் பத்யம் இதோ -

"படுனனக வராடிகேவ க்லுப்தா ஸ்தலயோ: காகணிகா ஸுவர்ண கோட்யோ:।
பவமோக்ஷணயோ: த்வயைவ ஜந்து: க்ரியதே ரங்கநதே த்வமேவ பாஹி ॥

பையன் பந்தை எடுத்து பூமியில்தட்டி விளையாடினால் அப்பந்து கீழும் நடுவிலும் மேலும் செல்லும். அதுபோல்தான் கீழ் நரகத்திலும் நடுவான பூலோகத்திலும் மேல் லேகமான ஸ்வர்கத்திலும் இன்னும் மேலும் நாம் செல்கிறோம்.

இதைத்தான் மனதில் வைத்து "வந்தார் விரலி உன் மைத்துனன் பேர் பாட' என்று கோதை பாடினாள். 'பந்தனைந்த மென்விறலாள்' என்பன பல பாசுரங்கள் உள்ளன.

*****

# 2. உண்மையை யோசித்துப் பார்

எத்தனையோ பத்திரிக்கைகள் வெளிவருகின்றன. சிற்சில கதைகளையும் ஹாஸ்யம் ததும்பும் பற்பல விஷயங்களையும் வெளியாக்கும் பத்திரிக்கைகள் சில. வேதாந்த சாஸ்திரங்களில் கூறியுள்ள அபூர்வமான அர்த்தங்களை வெளிப்படுத்துகிறவை சில. ராமாயணம், பாரதம் முதலிய இதிகாச புராணங்களில் வந்துள்ள கதைகளை வெளிப்படுத்தி மக்களுக்கு நன்மையைப் போதிக்கும் பத்திரிக்கைகள் சில. வேதாந்த சாஸ்திரங்களிலும் புராணாதிகளிலும் சொன்னவற்றையே எளிய நடையில் பண்டிதரும் பாமரரும் பாலர்களும் நன்றாக அறியும் வண்ணம் விநோதமான வகையில் போதிக்கின்றன சில உயர்ந்த பத்திரிக்கைகள். இப்படி பலபத்திரிக்கைகளைப் படித்து விஷயத்தை நன்கு அறிந்த மக்களுக்கு உண்மையை புதிதாக ஒன்றும் உரைக்க வேண்டாம். எல்லாருக்கும் நான் சொல்லப்போகிற விஷயம் நன்கு தெரிந்ததே. ஆயினும் வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் ராமாயண பாரதாதிகளிலும் கூறப்படும் அர்த்தங்கள் பற்பல. அவற்றுள் மிகவும் ஸாரமான ஓர் அர்த்த விசேஷத்தை இங்கு இந்த வ்யாஸம் மூலமாக வெளிப்படுத்த முன்வந்துள்ளேன். இதைப் படித்த பிறகு, இவ் விஷயம் உண்மைதான்; நமக்கு தெரிந்ததுதான்; ஆயினும் நன்கு பராமர்சித்து இதற்கு முன்பு அறிந்துகொள்ள வில்லை. இப்போதுதான் இவ்வுண்மையை நன்கு அறிந்தோம் என்பது எல்லோர்க்கும் புலப்படும்.

மேற்கூறிய தலைப்பைக் கண்டதும் எல்லோர்க்கும் ஓர் ஐயம் உண்டாகலாம், அதாவது ஒருவன் பிழைகளைச் செய்திருந்தால் அவனைத் திருத்துகிறவர்கள் நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்லி, "நீ செய்வது பிழை, அப்படி அதைச் செய்யக் கூடாது. இது நன்மையைத் தராது. நீயே இவ்விஷயத்தில் உண்மையை யோசித்துப் பார்" என்று சொல்வதுண்டு. அவனும் தான் செய்வது குற்றம்தான், இது வாஸ்தவம் என்றெல்லாம் யோசித்துச் சீர்திருத்தம் அடைவான். அதுபோல நாம் எனன பிழை செய்திருக்கிறோம், அது எப்படித் தவறாயிற்று, இதில் என்ன உண்மையை யோசிக்க வேண்டும் என்று எல்லோருக்கும் சந்தேகம் ஏற்படலாம். ஆம், படிக்காத பாமரருக்குச் சாதாரணமாக இந்தப் பிழை உண்டாகவே கூடும். படித்தவருக்கும் மின்னொளிபோல், இந்த பிழையைத் திருத்துவதற்கு க்ஜானம் உண்டாகி மறைந்து போய்விடும். இது உலகத்தில் ஏற்படக் கூடியதே; அந்தப் பிழை என்ன ?

கேண்மின். பிறருடைய வீட்டிற்குச் சென்று அவரது பொருளை அபகரிப்பது, எந்த எம்பெருமான் நமக்கு எல்லா வித வசதிகளையும் கொடுக்கிறானோ, அவனது கோயிலுக்குச் சென்று நடுப்பகலில் அவனது பொருளைக் கொள்ளையடிப்பது, பொய் பேசுவது, பிறருடைய பெண்களைக் கெடுப்பது, கொலை செய்வது முதலிய எத்தனையோ பிழைகள் இருக்கின்றன. இந்தப் பிழைகளை இங்கு எடுத்துக் கூற வரவில்லை. ஒருவன் மனைவி மக்கள் அரண்மனை முதலிய எல்லாச் செல்வங்களுடனும் இருக்கிறான். அவன், 'இவள் என் மனைவி, இவன் என் மகன், இவன் என் பேரன், இது என் வீடு' என்றெல்லாம் எண்ணம் கொள்கிறானே, இதுதான் இங்கு பெரும் பிழை. மேற்கூறிய திருட்டுத்தனங்கள் முதலிய பிழைகளுக்குச் சாமான்யமான சிறையில் சிறை ஏற்படுகிறது. இந்தப் பெரும் பிழை செய்பவனுக்குச் ஸம்ஸாரமாகிற பெரிய சிறையே வாய்க்கிறது.

உண்மையில் ஆழ்ந்து கவனித்தால் புருஷனுக்கும் மனைவிக்கும் என்ன ஸம்பந்தம் ? இவன் யாரோ; அவள் யாரோ. தகப்பனுக்கும் புதல்வனுக்கும்தான் என்ன சம்பந்தம் உள்ளது ? பெரிய அரண்மனையில் வசிப்பதனாலேயே அதற்கும் இவனுக்கும் என்ன ஸம்பந்தம் உள்ளது ?

ஒருவருக்கொருவர் ஒரு விதச் ஸம்பந்தமும் பெறுவதில்லை. ஏதோ இவர்கள் செய்த வினை காரணமாகக் குறிப்பிட்ட காலங்களில் பரஸ்பர ஸம்பந்தம் இருப்பதுபோல் தோற்றத்தைக் கடவுள் செய்து வைக்கிறான். இது தவிர வேறு என்ன இதில் இருக்கிறது ?

சென்னையிலிருந்து பம்பாய் ரெயிலில் பலர் ஏறியிருக்கிறார்கள். அதில் ஒரு பெட்டியில் நூற்றுக்கணக்கான மனிதர்கள் உட்கார்ந்து போகிறார்கள். சிலர் பம்பாய்க்குச் செல்லுவர். மற்றும் சிலர் பூனா இன்னும் முன்பான பல இடங்களுக்குச் செல்வர். சிலர் நடுவில் சில ஸ்டேஷன்களில் ஏறி அமர்வர். வண்டி சிறிது தூரம் சென்றதும் பெட்டியில் உட்கார்ந்த சிலர் மிக்க ஸ்நேகத்தைப் பாராட்டி வருவர். இதற்கு முன்பு ஒருவரையொருவர் பார்த்ததில்லை. சில ஸ்டேஷன்களைக் கடந்ததும் திடீரென்று சிலர் இறங்கிவிடுவார்கள். இதற்குப் பிறகும் ஒருவரையொருவர் பார்க்கப் போவதில்லை. பணத்தைக் கொடுத்து எவ்வளவு தூரம் செல்லவேண்டும் என்று டிக்கெட் வாங்கியுள்ளார்களோ அவ்வளவு வரையில்தான் ஒருவருவருக்கொருவர் ஒருவிதமான ஸம்பந்தம் அடைகிறார்கள். பிறகு வண்டியில் உட்கார்ந்திருப்பவன் யாரோ ! இறங்கியிருப்பவன் யாரோ ! அவ்வளவுதான். அதுபோல் வினையாகிற பணத்தைக் கொடுத்து நாம் உடலைச் சம்பாதித்திருப்பதனால் அந்த வினை உள்ள வரையில்தான் ஸம்பந்தம். அதுபோனதும் இவன் யார் என்றே தெரியாது.

பஸ் முதலிய வண்டிகளில் பிரயாணம் செய்வதற்காகப் பஸ் நிலையங்களில் காத்துக்கொண்டிருக்கிறோமே, நம்முடன் அந்த நிலையங்களில் காத்துக்கொண்டிருக்கிறார்களே, நம்முடன் அந்த நிலையங்களில் பேச்சாடி உறவைப் பலர் கொண்டாடுகிறார்களே, அப்பொழுது இவர்களுக்கும் பரஸ்பரம் உண்டாகும் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவரவர் போகும் பஸ் வந்ததும் அவரவர்கள் ஏறிக்கொண்டு ஒருவரையொருவர் மறந்து அவர்கள் இல்லத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். இந்த உறவு எவ்வளவோ அவ்வளவுதான் மனைவி மக்கள் புருஷன் முதலியவருக்கும் உண்டான உறவு.
ஒருவனுக்கு இந்த பிறவியில் ஒரு மகன் பிறந்திருந்தான். அவன் ஏதோ ஒரு காரணத்தால் நோய் கண்டு இறந்து போனான். உடனடியாகவே அவன் முன்ஜன்மத் தந்தையின் சத்ருக்களின் வீட்டில் பிறந்துவிட்டான். இப்பொழுது நாம் இதைக் கவனிக்க வேண்டும். தனக்கு மகனாகப் பிறந்தபோது அந்த மகனை இவன் எவ்வளவு அன்புடன் வளர்த்திருப்பான் ! பகைவனின் வீட்டில் பிறந்தபோது அவன் எப்படி நினைத்திருப்பான்? ஆகையால் என்ன உறவு வைத்திருக்கிறது? எனவே பந்துக்கள், பகைவர்கள், ஜ்ஞாதிகள், நடுநிலைமையில் உள்ளவர்கள், நண்பர்கள், துவேஷத்தைப் பாராட்டுகிறவர்கள் என்று சொல்வதெல்லாம் ஒரு நொடியில் பறந்து போய்விடுகிறது. ஒரே பிறவியிலும் எவன் பந்துவோ அவன் பந்து இல்லாமல் போய்விடுகிறான். நண்பனும் பகைவனாக ஆகிறான். பகைவனும் ஸ்நேகிதனாகிவிடுகிறான். ஆகையால் எவனுக்கும் யாரும் பந்துவுமல்ல, சிநேகிதனுமல்லன், பகைவனுமல்லன்; ஏதோ ஒரு வினையை முன்னிட்டு அம்மாதிரித் தோற்றம் நமக்கு ஏற்பட்டுவிடுகிறது.

ஒருவனுக்கு அவசியம் பணம் வேண்டியிருந்தது. அதற்காக அவன்தன் வெள்ளித் தட்டையோ, மனைவியின் கழுத்திலுள்ள நகையையோ மார்வாடிக் கடையில் வைத்து பணம் வாங்கிக் கொண்டான். பணம் பெற்றானே தவிர அந்த வஸ்துவை மறுபடியும் மீட்டுக்கொள்ள அவனால் முடியவில்லை. சில வருஷங்கள் நகர்ந்தன. மார்வாடியும் காலதாமதமானதினால் அந்தப் பொருளைப் பிறருக்கு விற்றுவிட்டான். அதை வாங்கினவன் உபயோகப்படுத்த ஆரம்பித்தான். சிலகாலம் சென்றதும் பணத் தேவையை முன்னிட்டு மற்றவருக்கு விற்றுவிட்டான். அவனும் அப்படியே செய்தான். இங்கேதான் நாம் உண்மையை யோசிக்க வேண்டும். தட்டு நகை

முதலிய பொருள்கள் எத்தனை பேருடைய கைகளில் போயின? ஒருவனிடத்திலேயே நிலைத்து நின்றனவா? இல்லவே இல்லை.

அரசாங்கத்தில் இக்காலத்தில் பணத்தேவையை முன்னிட்டு நோட்டு அடித்து வெளிப்படுத்துகிறார்களே. இதில் ஒரு தத்துவத்தை யோசியுங்கள். மிகவும் அழுக்கு அடைந்ததும் கிழிந்ததுமான ஒரு நோட்டு (நூறு ரூபாய்) கையில் கிடைக்கிறது. இதைபார்த்ததுமே நாம் ஒரு நல்ல விஷயத்தை உணர்ந்து கொள்ளலாம். இந்த நோட்டு ஏன் அழுக்கு அடைந்தது? ஏன் கிழிந்தது? ஒருவனுடைய கையிலேயே இருந்தால் அப்படி இருக்காது. பலபேருடைய கைகளை அடைந்ததனால்தான் இந்த நிலையை அடைந்தது என்பதை நாம் நன்கு உணர்கிறோம். மேலே கூறிய தட்டு நகை முதலிய பொருள்களுக்கும் இந்த நோட்டுக்கும் வாசி இல்லை. இதனால் ஒவ்வொரு பொருளும் ஒருவனுக்கே உரிமையானதன்று என்பது நன்கு விளக்கமாகிறது. இதைப்போலவேதான் ஜீவனும் ஒருவருக்கு பிள்ளையாக இருப்பதும், மனைவியாக, இருப்பதும் மற்றும் பந்துக்களாக இருப்பதும், மற்றவர்களுக்கும் அப்படியே இருப்பதும் இயற்கை. எனவே யார் யாருக்கு ஸம்பந்தம் உடையவர்?

இக்காலத்தில் எத்தனையோ கட்சிகளையும் கட்சித் தலைவர்களையும் பார்க்கிறோம். ஒரு கட்சியில் உள்ளவர்கள் ஏதோ ஒரு வைமனஸ்யத்தை அடைந்து மற்றொரு கட்சியில் சேர்ந்து விடுகிறார்கள். அதிலிருந்தும் மற்றொரு கட்சியில் பிரவேசித்துவிடுகிறார்கள், எதிலும் நிலைத்திருப்பதில்லை. அதுபோலத்தான் ஜீவர்களும் ஒருவனுக்கே உரிமை பெற்றவராக இருப்பதில்லை.

ஒரு ராஜ்யத்தை ஒரு அரசன் ஆண்டுவந்தான். அந்த ராஜ்யம் செழிப்பாக எல்லாவித வசதிகளும் கூடியதாக இருந்தது. இதைக் கண்ட மற்றொரு ராஜ்யத்து அரசன் இதைக் கைபற்றவேண்டும் என்று நினைத்தான். இதை அறிந்துகொண்ட அந்த அரசன் பகைவன் தன் ராஜ்யத்தில் நுழையாமல் இருப்பதை உத்தேசித்து சேனைகளையும் பணத்தை அதிகமாக செலவு செய்து தயார் செய்தான். அத்துடன் வெடி குண்டு முதலியவற்றையும் உண்டுபண்ணி வைத்திருந்தான். இப்படி இருக்கும் சமயத்தில் அவ்வரசன் இறந்து வேறு எங்காவது பிறந்திருந்தாலோ, அல்லது பகைவனான அன்னிய அரசனின் வீட்டிலேயே பிறந்திருந்தாலோ என்ன பயன்? அப்பொழுது என்ன நடக்கும்? ஆகையால் ஒரு அரசன் மற்றொரு அரசனை துவேஷிப்பதோ, ஒரு ராஜ்யத்தில் உள்ளவர்கள் மற்றொரு ராஜ்யத்தில் உள்ளவர்களை நிந்திப்பதோ, ஒரு கட்சிக்காரன் மற்றொரு கட்சிகாரனிடம் பகைமை கொண்டாடுவதோ, ஒரு மதஸ்த்தர் இன்னொரு மதத்தில் உள்ளவர்களை நிந்திப்பதோ, ஒரு வர்ணத்தவர் மற்றொரு வர்ணத்தாரை துவேஷிப்பதோ பயனற்றது. அவரவர் செய்த ஒரு செயலை முன்னிட்டு சிறிது காலம் ஒருவருக்கொருவர் ஸம்பந்தம் உள்ளது போல் இருக்குமே தவிற, உண்மையில் பரஸ்பரம் யாதொரு ஸம்பந்தமும் இல்லை. இதை நன்கு உணராமல் இருக்கும்வரையில்தான் வெவ்வேறுவிதமான எண்ணம் மனிதருக்கு உண்டாகலாம். இதை நன்கு உணர்ந்தவர்கள் எல்லோரையும் சமமாகவே பார்ப்பார்கள். எதிலும் ஒருவித பற்றுதலை அடைய மாட்டார்கள்.

இப்படி ஒரு வைராக்ய விசாரம், இனி மற்றொரு பக்கம்.

இது நடந்த சம்பவம். பல வருஷங்களுக்கு முன்பு கர்நாடக மாநிலத்தில் ஒரு ஏழை வைதீக ப்ராமண குடும்பத்தில் பிறந்த பையன் அகில இந்திய போலீஸ் பரீக்ஷையில் தேறிவிட்டு மேல் பயிற்சிக்காக டில்லிக்கு 200 மைல் தொலைவில் உள்ள முசோரி என்ற இடத்திற்கு போவதற்காக

சென்னையில் ரயில் ஏறி இரண்டு நாட்களில் டில்லிப்போய் சேர்ந்தான். ப்ரதேச பாஷை ஹந்தி தெரியாது. ரயில் ஸ்டேஷனிலேயே எங்கு போய் தங்குவது என்று தெரியாமல் சோர்ந்து போய் உட்கார்ந்துவிட்டான். புதிய இடம் புரியாமல் ஊருக்கே திரும்பி விடலாம். போலீஸ் வேலையே வேண்டாம் என்று தீர்மானித்துவிட்டான். அவனையே கவனித்துக் கொண்டிருந்த ஒரு ரயில்வே அதிகாரி அவனிடம் நெருங்கிக் கேட்டார் ஹிந்தியில். "அப்பா, உனக்கு என்ன கஷ்டம் இப்போது?" பையன் புரியாமல் முழிக்கவே ஆங்கிலத்தில் மறுபடியும் கேட்டார். பையன் தன் கதையைச் சொல்லி தான் திரும்பி ஊருக்குப் போவதாகச் சொன்னான்.

அதிகாரி அவனை சமாதானப் படுத்தி "அப்படிச் செய்யாதே. நீ ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவன். பெரிய உத்யோகம் கிடைத்திருக்கிறது. முசோரிக்குப் போய் சேர். வேலையை விடாதே."

பையன் - "எப்படிப் போகிறது? எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே. ராத்திரி எங்கு தங்குவேன். பாஷை புரியவில்லையே."

அதிகாரி: - "கவலை வேண்டாம். நான் உனக்கு ஸ்டேஷனிலேயே இடம் வாங்கித் தருகிறேன். ராத்திரி தங்கி விட்டு காலையில் புறப்பட்டு 8 மணிக்கு தயாராய் இரு. நானே வந்து உனக்கு உதவி செய்கிறேன்."

பையன் சரி என்று சொல்லவே, அதிகாரி அவனை ஒரு அறையில் தங்க ஏற்பாடு செய்துவிட்டு மறுநாள் காலை 8 மணிக்கு வந்து அவனை அழைத்துக் கொண்டு ஒரு பஸ்ஸில் ஏற்றி 10 மைல் தூரத்தில் உள்ள காஷ்மீர் கேட் என்ற இடத்தில் உள்ள பெரிய பஸ் நிலயத்திற்கு போய் முசோரி போகும் ஒரு பஸ்ஸில் ஏற்றிவிட்டார்.

அதிகாரி: - "நீ ஜாக்கிரதையாக போய் போலீஸ் பயிற்சி காலேஜில் சேர். உனக்கு எல்லா க்ஷேமமும் உண்டாகும்.

பையன்: - "நீங்கள் யார்? உங்கள் பெயரையே சொல்லவில்லையே. எதற்காக முன்பின் தெரியாத என்னிடம் பரிவு காட்டி உபகாரம் செய்கிறீர்."

அதிகாரி:- "நான் யார், என்பெயர் முதலிய விவரங்கள் உனக்கு வேண்டாம். போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு திடீரென்று மறைந்தார். அந்த பையனுக்கும் இந்த அதிகாரிக்கும் என்ன சம்பந்தம்? இன்னொருபக்கம்.

வயதான ஒருவர் வெளியூரிலுள்ள தன் பிள்ளைக்கு உடம்பு சுகம் இல்லை என்று தெரிந்து பிள்ளையிடம் செல்லுவதற்காக ரயில் டிக்கெட் வாங்கிக் கொண்டார். ரயில் வந்தது. தாங்க முடியாத கூட்டம். பெட்டியில் ஏறமுடியாமல் தவித்து கஷ்டபட்டு ஒரு காலை வைத்து ஏறியும் விட்டார். அதற்குள் ஓடிவந்த ஒரு முரட்டு இளைஞன் தான் ஏறுவதற்காக கீழே பிடித்து தள்ளிவிட்டு தான் ஏறிக் கொண்டான். ரயில் நகர்ந்தது. கிழவர் கீழே விழுந்து சிறிய காயத்தோடும் பெரிய தாக்கத்தோடும் வீடு திரும்பினார். பிள்ளைக்கு குணமாகிவிட்டது என்று கடிதம் வந்துவிட்டது. மறுநாள் காலை தினசரி பத்திரிக்கையில் செய்தி:- அதே ரயில் வண்டி அன்று இரவு தடம்புரண்டு கவிழ்ந்து எல்லா உயிர்களையும் பலி கொண்டது.

இந்த கிழவருக்கும் அந்த இளைஞனுக்கும் என்ன ஸம்பந்தம்? கிழவர் பிழைத்தார். இளைஞன் என்ன ஆனான்?

எனவே உண்மையில் ஒருவருக்கொருவர் ஒருவித ஸம்பந்தமும் இல்லாமல் இருக்க அப்படி ஸம்பந்தம் இருப்பது போல் நினைத்து அது காரணமாக மயக்கம் கூடாது. "எல்லாம் பகவானுடைய செல்வம்; நமக்கும் பிறருக்கும் ஒருவித ஸம்பந்தமும் இல்லை; ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு கடவுள் நம்மை சிறிது நேரமோ, சிறிது காலமோ பிணைத்து வைத்திருக்கிறார்" என்று எண்ணியிருப்பதுதான் மங்களத்தை கொடுக்கும். எல்லாம் நன்மைக்கே.

சித்ரகேது எனும் ஒரு அரசன் இருந்தான். ராஜ்யம் பெரியது. அதை ஆள்வதற்கு மக்கள் அவனுக்கு இல்லை. பெருங்கஷ்டம். ஒரு சமயம் நாரதர் அங்கு வந்தார். அவரை வணங்கி பூஜித்து தனது கஷ்டத்தை தெரிவித்தான். அவர் இதனை மறுத்தார். அப்படியும் தனது மனைவிகள் 100 பேர் உள்ளனர். அதில் ஒருவற்கும் குழந்தை இல்லையே என்று புலம்பினான். அவர் மந்திரித்து பழத்தைக் கொடுத்தார். அப்பழத்தை மூத்த மனைவிக்குக் கொடுத்தான். கர்ப்பம் தரித்து அவளுக்கு ஓர் புதல்வன் பிறந்தான். குழந்தையினிடத்திலும் அதன் தாயின் இடத்திலும் அன்பை அதிகம் பாராட்டினான். இதனால் கோபமடைந்த மற்ற மனைவிகள் விஷத்தைக் கொடுத்து அந்த சிசுவை இறக்கச் செய்தார்கள். பிறகு இறந்த குழந்தையைப் பார்த்து புரண்டான், அழுதான், புலம்புனான். இதைச் சொல்லவும் வேண்டுமோ?. அப்பொழுதும் நாரதர் அங்கு வந்து இவனுக்கு ஆறுதலைச் சொன்னார். இவன் இறந்த குழந்தையை பிழைக்கச் செய்யவேண்டும் என்று மன்றாடினான். நாரதரும் பிழைக்கச் செய்தார். அப்பொழுது அப்பா 'குழந்தாய்!' என்று அதை கட்டிக் கொள்ள முயற்சித்தான். அப்பொழுது அந்த சிசு சொன்னதாவது. எந்த பிறவியில் நான் உனக்கு குழந்தை. எத்தனையோ பிறவிகள் எடுத்தேன். எத்தனையோ தாய் தந்தைகள் எனக்கு உண்டு. ஒரு சமயம் நீயும் எனக்கு குழந்தையாகப் பிறந்திருப்பாய். ஆடு மாடு மனிதன் ஈ கொசு எனற வகையில் பிறவிகள் நமக்கு ஏற்பட்டுள்ளன. கடைகளில் உள்ள பண்ய வஸ்துக்கள் எப்படி கை மாறுகிறதோ அதேப்ரகாரம்தான் நமக்கும் மாறுதல் என்று வேதாந்தத்தைச் சொல்லி மறைந்து விட்டது. பிறகு அவனுக்கு சிசு மூலமாகவும் நாரதர் மூலமாகவும் ஆங்கீரஸர் மூலமாகவும் உண்மை புரிய வந்தது. பிறகு வேதாந்த ஞானம் பெற்றவனாகி ஞானியானான். இக்கதை பாகவதத்தில் உள்ளது. ஆக ஒருவருக்கு ஒருவர் ஸம்பந்தமில்லை. ஒரு ஜீவனுக்கு ஒரு ஜீவன் தஞ்சமன்று. வேதாந்த தேசிகன் தனது ரஹஸ்ய த்ரய ஸாரத்தில் தீர உரைத்துள்ளார்.

"நம்பினேன் பிறர் நன் பொருள் தன்னையும், நம்பினேன் மடவாரையும் முன் எனலாம்" என்றார் மதுரகவியாழ்வார். எல்லாம் பிறர் பொருள் நம்பெருமானுடைய பொருள், அவனுக்கும் அவைகளுக்கும் தான் உண்மையான ஸம்பத்தம். நமக்கும் அவைகளுக்கும் எள்ளளவு கூட ஸம்பந்தமில்லை. நாம் புத்ரன் மனைவி பெண் பொருள் என்று ப்ரமிக்கிறோம். நமம நமது (மே) என்று எண்ணுகிறோம். ஆடு காட்டில் இருந்து 'மே' என்று கத்தினால் என்னவாகும். இதைக் கேட்ட புலி வந்து பாய்ந்து அதை சாப்பிட்டு விடும். அது போல் நாம் ஸம்ஸாரக்காட்டில் 'மே' எல்லாம் என்னுடையது என்று காத்தினால் யமனாகிற புலி நம்மேல் பாய்ந்து ஹிம்ஸிப்பான். இது தான் தத்துவம். இதை யோசிக்கவேண்டும். ஸந்யாஸிகள் துரந்தவர்கள். அவர்கள் கூட நம் புதல்வன், நம் பெண், நம் பேரன், என்று மடியில் வைத்தும் கொஞ்சியும் கூத்தாடுகிறார்கள். ஐயோ, மாயையின் கார்யத்தை நினைத்துப்பார்.

புதல்வன் வேண்டியவன் என்று அபிமானித்து நேரில் பணம் கொடுப்பது, பிறர் மூலமாக கொடுக்கச் செய்வது, புத்திரனோடும் பெண்ணோடும் பேசுவது இவையெல்லாம் உண்மை துரவியின் காரியமல்ல. யமலோகத்தில் நரக யாதனைப்போல் ஸ்வர்க லோகத்திலும் யாதனை உண்டு இவர்களுக்கு. துரவியானபடியால் ஸ்வர்கலோகம் பந்துவாலனம் முதலியவை உள்ளபடிய யவ்யாதனையும் உண்டு. தேவ இந்திரன் இப்படிப்பட்டவர்களை சென்நாய் ஓனாய் முதலியவைகளின் வாயில் இவர்களை தள்ளி கடிக்கச் செய்கிறான் என்பது சாஸ்த்திரம். ப்ரபன்னர்கள் இவர்கள் ஆக இவை எப்படி ஸம்பவிக்கும் என்று என்ன வேண்டாம். பாபன்னர்களான இவர்களுக்கு இவ்வாறு வாலனம் முதலியவை எவ்வாறு ஏற்படும். பாபன்ன ஆபாஸர்கள் இவர்கள். சரியான முறையில் நடந்திருந்தால் இவை உண்டாகாது. காலாந்தரத்தில் ஸரியான முறையில் முட்டி நடைபெறும் என்றுதான் சொல்ல முடியும். இவ்விஷயங்களை பரமபத ஸோபானத்தில் கண்டு அறியலாம். ஆக ஜாகரூகர்களாக இருக்க வேண்டும் எல்லோரும்.

*****

# 3. மனிதனின் வயது

உலகத்தில் பிறந்தவர்கள் எல்லோருமே ஒரே வயது உள்ளவர்கள் என்பதில்லை. சிலர் பத்து வருஷ காலம், சிலர் பதினைந்து, ஐம்பது, நூறு வருஷ காலம் என்ற ரீதியில் ஜீவித்திருக்கிறார்கள். மனிதர்களைத் தவிர மற்றப் பிராணிகளான ஆடு, மாடு முதலியவற்றுக்கு இருபது இருபத்தைந்து வருஷ காலந்தான் ஜீவனம் இருக்கிறது.

தசரத சக்ரவர்த்தி அறுபதினாயிரம் ஆண்டு காலம் ராஜ்யத்தை ஆண்டு வந்தார் என்றால் அவருடைய வயது மிகவும் அதிகம் என்று புலப்படுகிறது. இராமன் பதினோராயிரம் வருஷங்கள் ராஜ்யத்தை ஆண்டு வந்தார் என்று ஸ்ரீ ராமாயணம் கூறுகிறது. விசுவாமித்திர மகரிஷி எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஒவ்வொரு திக்கிலும் தவம் புரிந்தார் என்பதும் புராணங்களில் பிரஸித்தம். இப்படி முன்பு செய்த ஒரு புண்ணிய விசேஷத்தால் சிலருக்கு ஆயுஸ்ஸில் அளவு அதிகமாக இருந்த போதிலும் சாஸ்திரங்களில் ஏற்பட்டது நூறு வயதுதான். வெளிநாடுகளில் நூற்றுக்கு மேல் இருபத்தைந்து முப்பது வருஷங்களும் சிலர் இருக்கின்றனர் என்பதை பத்திரிக்கைகளில் நாம் படித்து வருகிறோம். ஆயினும் பிரம்மதேவனுக்கும் தேவதைகளுக்கும் பித்ருக்களுக்கும் மனிதர்களுக்கும் நூறு வயது என்றுதான் சாஸ்திரம் முறையிடுகிறது. இந்த நூறு வருஷம் என்பதில் கால அளவில் வேறுபாடு உண்டாகும். அதாவது நம் அனுபவத்தில் இருபத்துநான்கு மணி நேரம் கொண்டது ஒரு நாள். முப்பது நாள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம். பித்ருக்களுக்கு நம்முடைய ஒரு மாதம் ஒருநாள். தேவதைகளுக்கு நம்முடைய ஒரு வருஷம் ஒரு நாள். பிரம்மாவுக்கு எண்ணாயிரம் யுகம் கொண்டது ஒரு நாள். இம்மாதிரி வேறுபாடு இருந்த போதிலும் அவரவர்களுடைய நாள் அமைப்பை முன்னிட்டு நூறு வருஷகாலம்தான் ஆயுஸ். இப்படி நூறு வருஷகாலம் ஒருவனுக்கு வயது என்ற நியதி இருந்த போதிலும் அவ்வளவு வயது வரையில் ஜீவிக்கிறார்கள் என்பதில்லை. பிறந்து பத்து தினங்களிலோ, ஒரு வருஷத்திலோ. பத்து, நாற்பது, ஐம்பது முதலிய வருஷத்திலோ மரணத்தை அடைகிறார்கள்.

குரங்கு, எருது, நாய், வௌவால் முதலியவற்றுக்கு நமக்கு ஏற்பட்டதுபோல் நூறு வருஷ காலம் என்பதில்லை. சுமார் இருபது வயதுதான் அவற்றுக்கு. மனிதர்களிலேயே நூறு வயதுதான் என்று ஏற்பட்டிருந்த போதிலும், நூற்றுக்கு மேல் நாற்பது ஐம்பது வருஷங்கள் சிலர் இருப்பது போல் இவற்றிலும் சில பிராணிகள் இருபதுக்கு மேலாகவும் ஜீவித்திருக்கலாம். ஜாம்பவான் என்னும் கரடி நீலன் என்னும் குரங்குகள் எத்தனை யுகங்கள் ஜீவித்திருந்தன. பாதாள லோகத்து ஜனங்களுக்கு 50000 - 70000 என்ற கணக்கிலும் மேலும் ஸுக வாழ்க்கையுடன் ஜீவனம் அமைந்துள்ளதாக நாரத முனிவர் இந்திரனிடம் தாம் பார்த்து வந்ததாகச் சொல்லுகிறார். 'குரங்கு, மாடு முதலியவற்றுக்கு இருபதே வயது இருக்க, இந்த பூமியில் பிறந்து மனிதர்களுக்கு மாத்திரம் நூறு வயது ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? இவர்களை மாத்திரம் பூவுலகத்தில் நூறு வருஷம் வைத்து ஹிம்சிக்க வேண்டும் என்பது பிரம்மதேவனின் எண்ணமா?' என்ற ஐயம் எல்லாருக்கும் உண்டாகலாம். கதாகாலக்ஷேமம் பண்ணும் பௌராணிகர்கள் இதற்கு வேடிக்கையாகச் சொல்லும் கதையைச் சொல்லுகிறோம். கேண்மின்.

உலகத்தைப் படைக்கும் பிரம்மதேவர் பூவுலகத்தைப் படைத்ததும் அங்கு மனிதர்களையும், ஆடு மாடு முதலிய பிராணிகளையும் படைக்க விரும்பினார். இங்கே படைக்கப் பெறும் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் ஒரே விதமான ஆயுஸ்ஸைக் கொடுக்க வேண்டுமேன்றே எண்ணினார். இங்கே பிறந்தவர்களுக்கு ஸுகம் என்பது மிகச் சொற்பமானபடியாலும், துக்கம்

பெரும்பாலும் அதிகமானபடியாலும் மனிதர்களுக்கு அதிக வயதை அவர் கொடுக்க விரும்பவில்லை. ஆகையால் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் ஒரே வயதைத்தான் கொடுக்க விரும்பினார். அவற்றை ஸ்ருஷ்டித்துச் சில காலம் கழித்து, பிரம்மா முதலில் குரங்குகளைப் பார்த்து, 'ஓ குரங்குகளே! நாற்பது வயது உங்களுக்கு கொடுக்கிறேன். இன்னும் மேலே ஜீவித்திருக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் சொல்லலாம். இவ்வளவு வேண்டாம் என்றிருந்தாலும் நீங்கள் கூறலாம். உங்களுடைய விருப்பப்படி நான் செய்ய சித்தமாக இருக்கிறேன்' என்றார். குரங்குகள் இதைக் கேட்டதும் தலையில் கையை வைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தன.

பிரம்மா, 'ஏன் குரங்குகளே அழுகிறீர்கள்? உங்கள் விருப்பபடி நான் சித்தமாயிருக்க மனத்தில் கவலை ஏன் ?" என்றார்.

குரங்குகள், 'எங்களுக்கு நாற்பது வயது என்று சொன்னதைக் கேட்டதுமே மனம் அலைபாய்கிறது; துன்பம் நெஞ்சை அடைக்கிறது; எங்களுக்குப் பேசவும் முடியவில்லை. நாங்களோ குரங்குகள்; ஒரு கிளையிலிருந்து மறு கிளைக்கு ஓடிச் சென்று குதிக்கும் பிராணிகள். நாங்கள் வசிப்பதற்கு வீடு வாசல் என்பதே கிடையாது. மரங்களில் தாவிக்கொண்டே காலத்தைக் கழிக்கவேண்டிய பிராணிகள். வெயிலிலோ மழையிலோ இருந்து வாழ்கையைக் கடக்கவேண்டும். அதிக வெயில் உண்டானபோது அதைப் போக்கிக் கொள்ளச் சக்தியற்றவர்கள். அதிக மழைப் பெய்யும்போதும் உடலெல்லாம் சிலிர்த்து நாங்கள் படும் கஷ்டத்திற்கு அளவே இல்லை. இத்துடன் உண்பதற்காவது ஏதாவது வழி உண்டா என்றால் அதுவும் இல்லை. நாங்களே பழம் முதலியவற்றைக் கொடுக்கும் மரங்களை உற்பத்தி செய்துகொள்ள முடியாதவர்கள். எங்காவது காட்டிற்குச் சென்று பழம் முதலியவற்றை சாப்பிடலாம் என்றால் அங்கே மனிதர்கள் காவல் இருந்து எங்களைத் துரத்துகிரார்கள். புலி, சிங்கம் முதலியவற்றுக்கு நடுங்குகிறோம். மனிதர்கள் எப்போதாவது விரும்பி எங்களுக்கு ஆகாரம் கொடுத்தால்தான் நாங்கள் சாப்பிட முடியும். பிறருடைய கையை எதிர்பார்த்து ஜீவிக்கிறவர்கள் நாங்கள். எங்களுக்கு வயது நாற்பது என்று நீர் சொன்னதுமே துன்பம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஆகையால் எங்களுக்கு இருபது வயதே போதும்' என்றன. பிரம்ம தேவர் அப்படியே என்று சொல்லிவிட்டார்.

பிறகு எருதைப் பார்த்து 'உங்களுக்கே நாற்பது வயது கொடுக்கிறேன். உங்களுடைய அபிப்ராயம் என்ன'? என்று கேட்டார்.

எருது பிரம்மதேவனின் வார்த்தையைக் கேட்டதும் மிக்க மனக் கவலையுடன் கண்களில் நீரைப் பெருக்கிக்கொண்டு சொல்ல ஆரம்பித்தது - 'நாங்களோ மாடுகள். எங்களுக்கு சுகம் என்பதே கிடையாது. இரவு பகல் என்று வேறுபாடு இல்லாமல் எங்களை உபயோகப்படுத்தி வேலை செய்யும்படி மனிதர்கள் துன்புறுத்துகிறார்கள். பகலெல்லாம் நிலத்தை உழவேண்டிய வேலை. ஏதாவது செய்ய தவறினால் கம்பின் நுனியில் இரும்பாலான முள்ளை வைத்து எங்களை குத்துகிறார்கள். அப்பொழுது எங்களுக்கு உயிர் போய் உயிர் வருகிறது. மறுபிறவிதான் அப்போது எடுக்கிறோம். காலை வேளை போல் மாலை வேளையிலும் புன்செய் நிலங்களை உழும்படி எங்களை ஹிம்சிக்கின்றனர். பகலில் படாத பாடு பட்டு கவலையுடன் இருக்கும் நாங்கள் இரவில் சொஸ்தமாகத் தூங்கலாம் என்று எண்ணுகிறோம். ஆனால் அந்த எண்ணமும் நிறைவேறுவதில்லை. இரவில் வண்டி நிறைய நெல் மூட்டைகளை அடுக்கி, அந்த வண்டியில் எங்களைக் கட்டி வெளியூருக்கு அந்த வண்டியை இழுக்கும்படி செய்கிறார்கள். இவ்வளவு

கஷ்டப்படுத்தும் ஜனங்கள் எங்களுக்கு உணவையாவது சரிவர கொடுக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஏதோ நான்கு வைக்கோலை எங்கள் முகத்துக்கு எதிரில் தூவிவிட்டு தண்ணீரையும் சரிவர காட்டாமல் அவர்கள் நன்கு உணவை உண்டு சொஸ்தமாக தூங்குகின்றனர்.

நாங்கள் ஒரு சமயம் நினைத்ததுண்டு; "ஓர் ஊரில் எங்களை ஓர் உழவன் உணவையும் கொடுக்காமல் இரவு பகலின்றி துன்புறுத்திக் கொண்டிருந்தான். 'ஐயோ! மகா பாவி இப்படிச் செய்கிறானே! வேறு ஊருக்காவது போனால் கொஞ்சமாவது சௌக்கியத்தை அடையலாம்.' என்று எண்ணினோம். அப்பொழுது வெளியூரிலிருந்து வந்த ஒருவன் எங்களை ரூபாயைக் கொடுத்து வாங்கிக் கொண்டு போனான். 'மகா பாவியிடமிருந்து தப்பினோம். இனியாவது சுகத்தை அடைவோம்.' என்று பேசிக்கொண்டே போனோம். அவ்வூருக்குச் சென்றதும் முன்பு இருந்த இடமே பரவாயில்லை என்று தோன்றும்படியாக இவன் எங்களைச் செய்துவிட்டான். எப்போதும் வேலை வாங்கிக் கொண்டான். தீனியைக் காட்டுவதேயில்லை. இப்படி ஆயிற்று எங்கள் பிழைப்பு. ஆகையால் எங்களுக்கு நாற்பது வருஷம் வேண்டவே வேண்டாம்; இருபதே போதும்," என்றன. பிரம்ம தேவர் அப்படியே என்று சொல்லிவிட்டார்.

பிறகு நாயைப் பார்த்து முன்போலவே கேட்டார். இதற்கு நாய்கள் கூறிய பதிலாவது - "நாங்கள் அளவற்ற பாவங்களைச் செய்து இந்த பிறவியை எடுத்திருக்கிறோம். எங்கள் பிறவியைவிடக் கீழ்பட்ட பிறவியே கிடையாது. ஒருவன் மற்றவனை வெய்யும்போது 'சீ நாயே!' என்று ஏளனமாகப் கூறுகிறான். இது ஒன்றே எங்கள் பிறவி மிகவும் மட்டம் என்பதற்குச் சான்றாகும். நாய்ப் பிறவியைப் பெற்றுள்ள நாங்கள் மனிதர்களுக்கு எவ்வளவோ உபகாரம் செய்கிறோம். வீட்டு வாசலிலும் வீட்டின் தோட்டப்புறத்திலும் படுத்துக் கொண்டு காவல் புரிகிறோம். அந்நியன் எவனாவது வந்தால் குரைத்து அவனை விரட்டி, வீட்டு எஜமானுக்குக் காட்டிக் கொடுக்கிறோம். ஒவ்வொரு வீட்டிலும் களவு போகாமல் வஸ்துக்களைப் பாதுகாத்துத் தருகிறோம். களவு போய்விட்டால் மோப்பம் கொண்டு, திருடனையும் திருடப்பட்ட பொருள்களையும் காட்டிக் கொடுக்கிறோம். இவ்வளவு செய்தும் எங்களை வீட்டிற்குள்ளே போகவிடாமல் துரத்தியடிக்கிறார்கள். கோவிலுக்குள் சென்றுவிட்டால் அசுத்தி உண்டாகி விடுகிறது என்று எண்ணி ஸம்ப்ரோக்ஷணம் செய்கிறார்கள். வீட்டில் நிறைய பக்ஷணங்களை செய்துவிட்டு, 'இவர்கள் இறந்துவிட்டால் நாம் நன்றாகத் தின்னலாம்' என்று எண்ணும் பூனைகளை வீட்டிலேயே வைத்தும் வளர்த்தும் பாலைக் கொடுத்தும் உதவி புரிகிற ஜனங்கள், பலவிதமாக உபகாரம் செய்யும் எங்களைத் துரத்தியடிக்கிறார்கள். எங்களுக்கு எச்சியிலைலுள்ள மீந்திருக்கும் பருக்கைச் சோறுதான் ஆகாரம். எங்கோ ஏதோ ஒரு நாய்க்குத் தான் காரில் பயணமும், யஜமானனின் படுக்கையிலே படுக்கையும் ஏற்படுகின்றன. இப்படி பருக்கைகளையும் அசுத்தமான உணவையும் தின்று வயிறு வளர்க்கும் எங்களுக்கு இருபது வருஷகாலம் போதாது என்றெண்ணி நாற்பது வருஷங்கள் எங்களுக்குக் கொடுக்கிறீர். குரங்கு, மாடு இவற்றைப் போலவே எங்களுக்கும் இருபது வயது போதும்," என்று புலம்பி முறையிட்டன. பிரம்மதேவன் அவற்றிற்கு இரங்கி, "அப்படியே கொடுக்கிறேன்" என்று சொல்லிவிட்டார்.

பிறகு வௌவாலைப் பார்த்து முன்போலவே கேட்டார். வௌவால், "பிரம்மதேவரே!, குரங்கு, நாய், எருது இவற்றைவிட நாங்கள் எதில் சிறந்தவர்கள்? எங்கள் உடலமைப்பைப் பார்த்தாலே உடனே உயிரை விட வேண்டுமென்று எங்களுக்கேத் தோன்றும். எங்களுக்கு வாக்-குதம் என்று பெயர். வாயும் ஆசனவாயும் எங்களுக்கு ஒன்று. பட்சியின் இனத்தில் நாங்கள்

சேர்ந்தவர்கள் என்றும் சொல்லலாம். எங்களுக்குத் தனியிடம் கிடையாது. எங்கு இருள் அதிகமாக உள்ளதோ அங்கேதான் நாங்கள் வசிப்போம். இக்காலத்தில் எல்லா இடத்திலும் மின்சார விளக்குப் போட்டு இருட்டைப் போக்கடித்து விடுகிறார்கள். மலையில் உள்ள குகைகளையெல்லாம் வீடாக்கிவிடுகிறார்கள். எப்போதும் எங்கும் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறோம். இதுவே எங்களுக்கு ஒரு பெரும் சிக்ஷை. இப்படிப் பலத் துன்பங்களையடைந்துள்ள எங்களுக்கு இருபது வயரே போதும்" என்று வேண்டிக் கொண்டன. பிரம்மதேவர் இசைந்தார்.

இவ்வாறு நான்கு பிராணிகளிடத்திலும் நடந்த விஷயத்தை மனதில் வைத்துக் கொண்டு, இவற்றைவிட மனிதன் அறிவுள்ளவன்; ஆகையால் இவ்வுலகில் ஏற்படும் பல கஷ்டங்களைக் கண்டு பயப்படுகிறவன். எனவே அவன் நாற்பது வயதை விரும்பமாட்டான் என்று எண்ணி, அவனைப் பாரத்து, இந்த நான்கு பிராணிகளின் விஷயத்தையும் கூறி "உங்களுக்கு நாற்பது வயது வேண்டுமா அல்லது இருபது போதுமா?" என்று கேட்டார். இதைக் கேட்டதும் மனிதன் இரண்டு கைகளையும் தலையில் வைத்துக் கொண்டு, "பிரம்மதேவரே, நாங்கள் மனிதர் அல்லவா? எங்களுக்கு கைகளும் கால்களும் உண்டு. அறியும் தன்மையையும் பெற்றுள்ளோம். நீர் கொடுக்கும் இருபது வருஷங்களிலோ நாற்பது வருஷங்களிலோ எந்த ஸுகத்தை அனுபவிக்க முடியும்? எங்களுக்கு இந்த வயது போதாது" என்று புலம்பிக் கொண்டு மேன்மேலும் வயதை வேண்டிக் கொண்டான்.

பார்த்தார் பிரம்மா. அப்படியானால் அந்த நான்கு பிராணிகளுக்கும் கொடுக்க இருந்த இருபது இருபது வயதையும் (அதாவது 4 X 20 = 80), உங்களுக்குக் கொடுக்க இருந்த இருபதையும் சேர்த்து நூறு வயதாகக் கொடுத்துவிடுகிறேன்" என்று சொன்னார். இவ்வளவு கொடுத்தும் மனிதன் திருப்தி இல்லாமல் ஏதோ ஒருவாறு இசைந்தான். இம்மாதிரி மனிதனுக்கு ஏற்பட்டது நூறு வயது. இது உண்மை என்பதில் சிறிதும் ஐயமில்லை. கீழ்க் கூறிய நான்கு ஜந்துக்களின் இருபது இருபது வயதை இவன் அடைந்தான் என்பது அவை செய்யும் தொழிலை அந்த அந்த இருபது வருஷங்களில் இவன் செய்வதனாலேயே புலப்படும்.

முதல் இருபது வருஷங்கள் குரங்கின் வயது. எனவே குரங்குக்கு ஏற்படும் சேஷ்டைகள் இவ்வருஷங்களில் ஏற்படும். பால்யத்தில் அங்கும் இங்கும் விளையாடி அர்த்தமற்ற சேஷ்டைகளை இவன் செய்து வருகிறான். 'என்ன குரங்கு சேஷ்டை!' என்று பரிகசிப்பதும் உண்டு. இருபது முதல் நாற்பது வரையில் எருதின் வயது. எருது எப்படி பாரங்களை சுமக்கிறதோ அது போல குடும்பத்தில் பாரத்தைப் பெற்று அன்ன ஆகாரம் இல்லாமல் ஊரூராகத் திரிந்து வேலைகளைச் செய்கிறான். நாற்பது முதல் அறுபது வரை இவனது உண்மையான வயது. மனிதனுக்கு ஏற்பட்ட வேலைகளை அப்போதுதான் சரிவர செய்கிறான். புராணங்களை படிக்க வேண்டும் என்றும், கோவில்களுக்குச் சென்று எம்பெருமானைச் சேவிக்க வேண்டும் என்றும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்றும், பெரியோர்களிடத்தில் விநயத்துடன் இருக்க வேண்டும் என்றும், நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்றும் நல்ல எண்ணங்கள் உண்டாகின்றன.

அறுபது முதல் எண்பதுவரை நாயின் வயது. தேகத்தில் சக்தி குறைந்து விடுகிறபடியால் எங்கும் போக முடியாமல் வீட்டிலேயே தங்கி வீட்டைக் காவல் செய்வதும் ஏற்படுகிறது. இவனைவிட சிறியவர்கள், "வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்" என்று கூறிப் போய்விடுவார்கள். எண்பது முதல் நூறு வரையில் வௌவாலின் வயது. பகலிலேயே பார்வையற்றுவிடும்.

சுவாதீனமாக உட்காருவதோ படுப்பதோ முடியாமல் வீட்டில் தொங்கிக் கொண்டுதான் இருக்க முடியும். வாய் முதலிய துவாரம் வழியாகக் கஞ்சி முதலியவைப் பெருகிக் கொண்டே இருக்கும். மற்றும் சொல்ல முடியாத சில அநுபவங்களும் ஏற்படும். அந்த அந்த வருஷங்களில் மனிதனுக்கு ஏற்படும் சம்பவங்கள் எல்லாவற்றையும் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இப்படித் தனது இருபது இல்லாமல் மேலும் எண்பது பெற்றபடியால் இவனுக்கு நூறு வயது ஏற்பட்டது.

இதை பெரியாழ்வார் தனது பாசுரங்களில் காட்டியுள்ளார். "சீயினால் செறிந்தேறிய புண் மேல் செற்றல் ஏறிக்குழம்பிருந்து எங்கும் ஈயினால் அரிப்புண்டு மயங்கி எல்லை வாய்ச் சென்று சேர்வதன் முன்னம்". "சோர்வினால் பொருள் வைத்ததுண்டாகில் சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து ஆர்வினவில் வாய் திறவாதே அந்த காலம் அடைவதன் முன்னம்". "மேல் எழுந்ததோர் வாயுக் கிளர்ந்து மேல் மிடற்றினையுள்ளெழவாங்கி காலும் கையும் விதற்விதிற்றேறி கண்ணுறக்கம் அதாவதன் முன்னம்" என்று சொன்னார்.

திருமங்கை மன்னனும் "முற்ற முத்துக் கோல் துணையா முன்னடிநோக்கி வளைந்து இற்ற கால்போல் தள்ளி மெள்ள விருந்தங்கு இளையா முன்" "முதுகு பற்றிக் கை தலத்தால் முன் ஒரு கோல் ஊன்றி விதிர் விதிர்த்து கண் சுழன்று மேற்கிளைக் கொண்டு இருமி" "உறிகள் போல் மெய் நரம்பெழுந்து ஊன் தளர்ந்து உள்ளம் எள்கி நெறியை நோக்கி கண் சுழன்று நின்று நடுங்காமுன்" என்று அருளிச் செய்தார்.

இதனால் மனிதனின் வார்த்தக்யாவஸ்தை மிக க்ரூரம் என்பது நன்கு பரியும். ஆக கடைசி அவஸ்தை வௌவாலின் அவஸ்தை யைக்காட்டிலும் மிக கடினம். இவ்வாறு மனிதனின் ஆயுர்வ்யவஸ்தை.

*****

# 4. பாசம்

ஸர்வேச்வரன் உலகத்திலுள்ள ஜனங்களைப் படைக்கும் போதே ஒருவரிடம் ஒருவருக்குப் பாசம் உண்டாகும்படியே பாசத்தையும் சேர்த்துப் படைக்கிறான். பாசம் என்றால், 'இவன் நம்முடையவன்; நாம் இவனைச் சேர்ந்தவன்' என்ற அபிமானம், ஆசை. உலகத்தில் பரஸ்பரம் அபிமானத்துடன் தான் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். குழந்தைகளிடத்தில் தாய் தந்தையருக்கு இருக்கும் பாசத்தை நாம் பார்த்தே வருகிறோம். இது மாத்திரமல்ல, கணவன் மனைவியினிடத்திலும், மனைவி கணவனிடத்திலும், அண்ணன் தம்பிகளிடத்திலும், தம்பி அண்ணனிடத்திலும் கொண்டுள்ள பாசத்தைப் பார்த்துத்தான் வருகிறோம்.

தன் குழந்தை அழகில்லாமல் இருந்தாலும் குரூபமாக இருந்தாலும் அதனிடத்தில் பெற்றோருக்கு ஒரு விதமான பாசம் இருந்தே வருகிறது. இந்தக் குழந்தையினிடத்திலுள்ள அபிமானத்தில் லவலேசமும் பக்கத்துக் குழந்தை அழகாக இருந்தபோதிலும் அதனிடத்தில் பாசம் உண்டாவதில்லை. இம்மாதிரியே ஈச்வரன் இவர்களை ஸ்ருஷ்டித்து வைக்கிறான். தன் குழந்தையின் உடலிலுள்ள துர்நாற்றமோ, கண் முதலிய அவயங்களிலுள்ள அழுக்குப் போன்றவையோ தெரிவதில்லை. அவ்வளவு அதனிடத்தில் உள்ள பாசம். மனைவியினிடத்தில் உள்ள பாசம் அவளிடமுள்ள தோஷத்தையும் அழுக்கையும் காட்டுவதில்லை.

'ஸர்வ: காந்தம் ஆத்மீயம் பச்யதி' என்று கவி கூறுவது உண்டு. அதாவது தன்னைச் சேர்ந்த வஸ்து எப்படி இருந்தாலும் மிகவும் அழகுடையது என்றே அனைவரும் பார்ப்பர். ஒரு பொருள் தன்னைச் சேர்ந்ததாக ஆகிவிட்டால் அதனிடத்தில் இவனுக்குப் பாசம் வந்துவிடுமாகையால் எவ்வளவு குற்றங்கள் இருந்தபோதிலும் அவை இவன் கண்ணுக்குப் புலப்படா. பிறர் இவனிடத்தில் ஆயிரம் தூஷணங்கள் சொல்லிக்கொண்டிருந்த போதிலும் இவன் காதில் அவை விழா. இம்மாதிரியான பாசம் உண்டாகும்படி ஈச்வரன் இவர்களைப் படைக்கிறான்.

காக்கையை நாம் பார்த்திருக்கிறோம். அது பார்வைக்கு அழகில்லாதது; வர்ணத்திலும் கருநிறம் கொண்டது. நிறத்தில் ஏதோ ஒரு விதமாக இருந்தபோதிலும் அதன் குரலாவது நன்றாக இருக்கிறதா என்றால், அதுவுமில்லை. குயில் போலவா அது கத்துகிறது? கிளி போலவா நிறத்தைக்கொண்டுள்ளது? இப்படியிருக்க அதன் குஞ்சு மாத்திரம் எப்படி நன்றாக இருந்துவிடும்? ஜனங்கள் எல்லா விதத்திலும் வெறுக்கக்கூடிய குஞ்சைக் காகம் பொன்குஞ்சு என்றே சொல்லுகிறது. 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்று பழமொழியையும் கேட்டிருக்கிறோம். காக்கைகளே இப்படி நினைத்தால் ஆறறிவுள்ள மனிதர்கள் ஏன் அப்படி நினைக்க மாட்டார்கள்?

இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். ஒவ்வொருவனும் தன்னை எப்படி நினைக்கிறான், பாருங்கள். தன்னைப் போல் அழகுள்ளவன் யாருமே இல்லை என்று நினைக்கிறான். 'நான் தான் அழகில் மன்மதன்' என்றே சொல்லுகிறான். உண்மையில் அவன் கறுப்பாகவும், விகாரமான முகத்தை உடையவனாகவும், ஏற்றக் குறைபாடுகள் கொண்ட கைகால்களைப் பெற்றுள்ளவனாகவும் இருப்பான். அவன் நினைக்கிற நினைவோ, 'உலகத்திலேயே நான்தான் எல்லாவிதத்திலும் மேன்மையானவன்' என்பது. இவ்விஷயம் பெண்களுக்கு நன்றாகத் தெரியும். காலையில் எழுந்ததும் கண்ணாடிப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். பார்க்கிறவர்கள், "எல்லா வேலைகளையும் விட்டுக் கண்ணாடியில் உன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாயே; என்ன, நீ அழகில் சிறந்தவளா?" என்று சொல்லிவிட்டால் எவ்வளவு கோபம் வந்து விடுகிறது, பாருங்கள்! தனது உடலில் அவள் அவ்வளவு அபிமானம் வைத்திருக்கிறாள்.

இறைவன் படைத்த பிராணிகள் உலகத்தில் எத்தனையோ வகை உண்டு. ஒவ்வொரு பிராணியும் அழகாகவா இருக்கிறது? எறும்பு, மூட்டைப் பூச்சி, நாய், மீன், பன்றி எல்லாமே அழகுடையனவா? தேவ ஸ்ருஷ்டியில் சிலர் அழகாக இருக்கலாம். மனித ஸ்ருஷ்டியிலும் சிலரை அழகுள்ளவர் என்றும் சொல்லாம். நாய், பன்றி முதலியவற்றை அழகில் யாராவது சிலாகிப்பார்களா? ஆயினும் அந்த அந்தப் பிராணி, 'உடலமைப்பில் நான்தான் நன்றாக இருக்கிறேன்' என்று எண்ணிக் கொள்வதுண்டு. 'ஏனோ தேவனாகவோ மனிதனாகவோ நான் பிறக்காமல் இப்படிக் கோரமான பிறவியில் பிறந்துவிட்டேனே!' என்று நினைப்பதில்லை. தன் பிறவிதான் உயர்ந்த பிறவி என்றும், மற்றப் பிறவிகள் தாழ்ந்தவை என்றும் நினைப்பு. இம்மாதிரிப் பாசத்தைக் கொடுக்கும்படியாக ஸர்வேச்வரன் அவரவர் உடலில் போக்யதாபுத்தியை உண்டுபண்ணியிருக்கிறான். கடவுள் மாயாவியானபடியால் மாயையைக் கொண்டு ஜனங்களுக்குத் துரபிமானத்தை உண்டுபண்ணிவிடுகிறான்.

வேதாந்தங்களில் மாயை என்று சொல்வதுண்டு. இதைத் தான் 'ப்ரக்ருதி' என்று வழங்குவர். இது ஜனங்களை மோகிக்கச் செய்யும். எதிரிலுள்ள வஸ்துவை, இது இப்படிப்பட்டது என்ற விவேகத்தை உண்டுபண்ணாமல் மறைக்கக்கூடிய பொருள். இதைத் திரை என்று கீழ்கூறிய காரணத்தாலேயே பெரியோர் பணிப்பர். 'யவநிகா மாயா ஜகந்மோஹிநீ' என்று ஆளவந்தார் இதன் சுபாவத்தைக் கூறினார். ஒரு மனிதனின் முன்பு திரையைப் போட்டுவிட்டால் எதிரிலுள்ள வஸ்துக்கள் எவை, அவை எப்படிப்பட்டவை என்பதை அவனால் அறிய முடியாதல்லவா? அதபோலவே மாயை-ப்ரக்ருதி என்று சொல்லப்படும் பொருளை ஸர்வேச்வரன் ஜனங்களுக்கு முன்பு திரையாக அமைத்து அவர்களுக்கு மோகத்தைச் செய்விக்கிறான். இந்த மாயை என்னும் திரை ஜனங்களுக்குத்தான் மோகத்தை உண்டுபண்ணிவைக்குமே தவிரப் பகவானுக்கு மோகத்தை உண்டுபண்ணாது. 'திரை நடுவில் போட்டிருந்தால் இரு புறத்தாருக்கும் அறிவின்மையைக் கொடுப்பது போல் இந்த மாயை என்னும் திரை ஜனங்களுக்குப் போல் பகவானுக்கும் ஏன் மோகத்தை உண்டுபண்ணாது?' என்றால், இது விலக்ஷணமான ஓர் அதிசயத்தைப் பெற்ற திரை. கோஷா ஸ்திரீகளை நாம் பார்த்திருக்கிறோமே. அவர்கள் தங்களைப் பிறர் பார்க்காமலிருப்பதற்கு முகமூடி அணிந்திருப்பார்கள். அந்தத் திரை அவர்களுக்கு எதிரிலுள்ள வஸ்துக்களை மறைப்பதில்லை. ஆனால் பிறருக்கு இவர்களை அறிய முடியாத வண்ணம் செய்கிறது. தாய் தன்னை அறியாத கன்றில்லை. தன் கன்றை ஆயும் அறியும். உலகின் தாய் ஆகில் அய்யா? நீ அறிந்த எப்பொருளும் அவை உன்னை நிலை அறியா. மாயை இது என்கோலோ வாராதே விரவல்லாய்" என்று விராதன் இராமனை துதி செய்வதைக் கவனிக்கவும்.

பெரிய மாடிவீடுகளில் கண்ணாடிகளாலேயே ஜன்னல் அமைந்திருக்கும். அந்தக் கண்ணாடி மூலமாக மாடியிலுள்ளவர்கள் வெளியில் உள்ளவற்றைப் பார்ப்பார்கள். வெளியிலுள்ளவர்களோ மாடியிலுள்ளவர்களை அந்தக் கண்ணாடிமூலம் பார்க்க மாட்டார்கள்; பார்க்கவும் முடியாது. அப்படி அதிசயம் பெற்ற கண்ணாடி அது. அது போன்றது அந்த மாயைத் திரை. மாயைத்தான் செடி கொடியாகவும், குடிசை அரண்மனையாகவும், கைகால் ஆகிய அவயங்கள் கூடிய உடலாகவும் மாறுதல் அடைகிறது. 'அவரவருக்கு ஏற்பட்ட அந்த அந்தப் பொருள்களைத் தவிர வேறு எதுவும் போக்கியமான பொருள் அல்ல. இதுதான் உயர்ந்த போகத்தைக் கொடுக்கக்கூடியது' என்ற எண்ணத்தையும் மாயை உண்டுபண்ணுகிறது. 'ஸ்வவிஷயாயாஸ்ச போக்யபுத்தேர் ஜநநீம்' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்தார். ஆக இப்படித் தன் தனது வஸ்துக்கள்தாம் உயர்ந்தவை, அதிக ஸுகத்தைக் கொடுக்கக்கூடியவை; இவற்றைவிட

மேம்பட்ட வஸ்துக்களே இல்லை என்ற எண்ணம் எல்லார்க்கும் ஒருசமமாகவே இருந்து வருகிறது.

வயதாகிய ஒருவன். அவனுக்குப் பார்ப்பதற்குக் கண் இல்லை. காதும் வேலை செய்யாது. கையால் எதையும் சுவாதீனமாக எடுத்துக் கொள்ளவும் முடியாது. முகத்தில் மீசை தாடி நரைத்துவிட்டன. பற்கள் விழுந்துவிட்டன. உடலில் எல்லா அவயங்களும் சுருங்கிவிட்டன. தடியை ஊன்றிச் செல்வதற்கே உடலில் சக்தி இல்லை. மெதுவாக தடியைப் பிடித்து தான் எழுந்திருக்க முயற்ச்சிக்கிறான். ஆனால் என்ன நடக்கிறது தெரியுமா? தடிதான் எழுந்ததே தவிற இவன் எழுந்திருக்க முடியவில்லை. கண்களும் அந்தகாரத்தால் இருள் அடைந்து விட்டன. இப்படிப் பட்டவன் தனது உபயோகமற்ற உடலை விட்டுவிட மனத்தினால் கூட விரும்புவதில்லை. ஏன்? இதிலுள்ள ஒருவிதமான போக்யதாபுத்தி அவனை அம்மாதிரி செய்துவிடுகிறது.

இவ் விஷயத்தில் புராணத்தில் உள்ளதும் பெரியோர்மூலமாகக் கேட்டதுமான கதையை வரைகிறேன். ஓர் ஊரில் வேதம், சாஸ்திரம் முதலியவற்றில் வல்ல அந்தணர் இருந்தார். அவர் பல சீடர்களுக்குக் கல்வியைப் போதித்துக் கொண்டிருந்தார். சீடர்கள் மிக்க மரியாதையுடனும் பக்தியுடனும் அவரிடம் நடந்துகொண்டனர்.

முற்காலத்தில் வித்தையை அப்யஸிக்க வேண்டும் என்று எண்ணி ஓர் ஆசார்யனை அணுகினால் அவர் உடனடியாகச் சொல்லிவிடுவாரா? பல தடவை அவனைப் பரீக்ஷை செய்து அவன் மூலமாகத் தமக்கோ தம் வீட்டுக்கோ சில பணிவிடைகளைப் பெற்றுக் கொண்டு பிறகுதான் உபதேசம் செய்வார். இதை ஒட்டியே இந்த அந்தணரும் தம் சீடர்களை ஏதாவது பணிவிடைகளைச் செய்ய ஏவி விடுவார். சிஷ்யர்கள் மிக்க சந்தோஷத்துடன் ஆசார்யருக்கு வேலை செய்வார்கள்.

ஒரு நாள் ஒரு சீடன் ஆசார்யனின் நியமனத்தை முன்னிட்டு அவரது வஸ்திரங்களைத் திருத்தக் காவேரிக்குச் சென்றிருந்தான். காவேரி நுரையுடனும், மீன் முதலிய ஜந்துக்களுடனும் வெள்ளமாகப் பெருகிக்கொண்டிருந்தாள். சீடன் கவனக் குறைவால் ஒரு சிறிய மீனுடன் துணியைத் துவைத்துப் பிழிந்துவிட்டான். பிறகு துணிகளைப் பிழிந்த வண்ணமே ஆசார்யனிடத்தில் கொடுத்துத் தன் வேலையில் இறங்கினான். அந்தணர் வழக்கம்போல் அந்த வஸ்திரத்தில் புதிதாக ஜலத்தைக் கொட்டிப் பிழிந்து உதறினார்.

துணியைப் பிரித்ததும் அதில் இரத்தக்கறைகள் தென்பட்டன. அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'ஐயோ! இதென்ன கொடுமை? வஸ்திரம் கெட்டுப் போய்விட்டதே. மீனும் இறந்துவிட்டதே!' என்று கலங்கி, அந்தச் சீடனைக் கூப்பிட்டு வஸ்திரத்தைக் காட்டினார். சீடனுக்கு ஒன்றுமே புரியவில்லை. "ஏதோ தெரியாமல் விஷயம் நிகழ்ந்துவிட்டது. என்னை மன்னிக்க வேண்டும்" என்று வணங்கினான்.

ஆசார்யனுக்கோ கோபம் சாந்தமாகவில்லை. அதனால் சினத்துடன் அவனை, "நீ பன்றியாக உடனடியாக மாறவேண்டும்" என்று சபித்துவிட்டார். இதைக் கேட்டதும் சீடன், "இப்படி அழகிய மானுட உடலை விட்டுப் பன்றியாகவா மாறுவது? அது சேற்றிலும் மற்றும் அசுத்தமான பொருள்களிலும் புரண்டு திரிகிற பிராணி அல்லவா? அதன் உடலையா நான் பெறுவது?" என்று கஷ்டப்பட்டான். பிறகு தன்னுடன் படிக்கும் சீடர்களைப் பார்த்து, "ஆசார்யனுடைய

சாபமோ பலிக்காமலிருக்கப் போவதில்லை. எனக்கோ பன்றியுடலில் பிடிப்பு இல்லை. ஆகவே நீங்கள் நான் பன்றியாக மாறியதும் ஒரு தடியை எடுத்து என்னைக் கொன்று விடுங்கள். இவ்வளவு உபகாரம் நீங்கள் அவசியம் செய்ய வேண்டும்" என்றான்.

உடன் படிப்பவர்கள் அவனுடைய மனக் கவலையைப் பார்த்தும், அவனிடத்திலுள்ள அன்பைக் கொண்டும், "அப்படியே செய்கிறோம்" என்றார்கள். ஒரு மாதமாயிற்று. ஆசார்யன் சாபம் வீணாகுமா? ஏதோ ஓர் ஊரில் ஒரு பன்றியின் குட்டிகளில் இந்தச் சீடனும் ஒரு குட்டியாகப் பிறந்து, அசுத்தமான நீர் செல்லும் கால்வாய் ஒன்றில் புரண்டு கொண்டிருந்தான். சீடர்கள் ஆசார்யன் மூலமாகச் சில அடையாளங்களை அறிந்துகொண்டு, இந்தப் பன்றியைப் பார்த்து, 'இதோ நம்முடன் படித்த சீடன் பன்றியாக இருக்கிறான். இவனைத் தடியால் அடித்துக் கொல்ல வேண்டும்' என்று எண்ணி ஓடி வந்தனர். சிலர் தடியை எடுத்தனர். சிலர் பெருங் கற்களை எடுத்துத் துரத்தினர். பன்றிக்குட்டி அவர்களிடமிருந்து தப்ப முயன்றது. ஆயினும் இவர்கள் எல்லாரும் பன்றிக்குட்டியைச் சூழ்ந்து பிடித்துக்கொண்டார்கள். அப்போது அந்தக் குட்டி, "என்னை எதற்காகக் கொல்லுகிறீர்கள்? நான் என்ன குற்றம் செய்தேன்? என் மாமிசத்தை நீங்கள் தின்கிறவர்களும் அல்ல. ஏதோ நான் என் பிறப்புக்குத் தகுந்தவாறு ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கிறேன். என்னை விட்டுவிடுங்கள்" என்றது.

இதைக் கேட்டதும் சீடர்கள் சிரித்துக்கொண்டே, "என்ன! நீ முன்பு எங்களிடம் சொன்னதை மறந்துவிட்டாயா?" என்றார்கள்.

குட்டி, "நான் உங்களை எப்போது பார்த்தேன்? என்ன சொன்னேன்? ஒன்றும் புரியவில்லையே!" என்றது.

சீடர்கள், "நாம் முன்பு ஓர் ஆசிரியரிடத்தில் வித்தையைக் கற்றுக்கொண்டோமே; அப்பொழுது நீ ஒரு தப்புச் செயலைச் செய்ததற்காக ஆசிரியர் சாபம் கொடுத்ததை மறந்துவிட்டாயா?" என்றனர்.

இதைக் கேட்டதும் பன்றிக்குட்டிக்கு ஞாபகம் வந்துவிட்டது. "ஆமாம், முன்பு நான் என்னை அடித்துக் கொல்லுங்கள் என்றேன். அந்தச் சமயத்தில் எனக்கு இவ்வுடல் பிடிக்காமலிருந்தது. ஆகவே அப்படிக் கூறினேன். இவ்வுடலைப் பெற்றதும் இதைவிட உயர்ந்த உடலே கிடையாது; இதுதான் எனக்கு மிகச் சுகத்தைக் கொடுக்கிறது என்று எண்ணுகிறேன். மிக்க இன்பத்துடன் கூடிய இவ்வுடலை விட எனக்கு மனம் வரவில்லை. சொர்க்கம் என்று சொல்லுகிறார்களே, அது எதற்கு பிரயோசனம்? இவ்வுடலிலிருந்து நான் அநுபவித்துவரும் சுகத்துக்கு அந்தச் சுகம் இணையாகாது. ஆகவே என்னைக் கொல்லவேண்டாம். என் தோழர்களான இந்தப் பன்றிக் குட்டிகளோடு இருந்து வாழ்கிற வாழ்க்கை எனக்குப் பரம சந்தோஷத்தைக் கொடுக்கிறது" என்றது. இதைக் கேட்டதும் சீடர்கள் சிரித்துக்கொண்டு தமது இடம் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆகையால் தான் செய்யும் பாவ புண்ணியத்தை அநுஸரித்து எவன் எந்தப் பிறவி எடுத்தாலும் அந்தப் பிறவியில் அவனுக்கு விருப்பம் உண்டாகிவிடுகிறது. அவன் தன் உடம்பில் மிக்க போக்யதாபுத்தியை அடைகிறான். அவன் உடலிலேயே அதிகப் பாசம் ஏற்பட்டுவிடுகிறது. அது உண்மையில் நன்றாக இருந்தாலும் சரி, நன்றாக இல்லாவிட்டாலும் சரி, 'இதுதான் உயர்ந்தது, இதில்தான் பரம சுகம், மற்றவை உபயோகமற்றவை' என்ற எண்ணம் சூழ்ந்துவிடுகிறது. இந்த ஆசாபாசம் ஒருவராலும் அழிக்கமுடியாமால், எல்லா வர்ணத்திலுள்ளவர்க்கும், எல்லா

ஆசிரமத்திலுள்ளவர்க்கும், எல்லாப் பிறவியிலுள்ளவர்க்கும் வளர்ந்தே வருகிறது. இந்தப் பாசமாகிற கயிற்றை அறுத்து வெளிவந்தவர்கள் சிலரே; சில மகான்களே.

எவ்வளவுக்கு எவ்வளவு பாசத்தை ஒரு பொருளில் வைக்கிறோமோ அவ்வளவுக்கு மேல் நமக்கு அதன் மூலமாக சோகம் (கஷ்டமாகிற முள்) நம் ஹ்ருதயத்தில் தைக்கும் என்றான். சாதாரணமாக பென்ஸில் பேனா முதலிய சிறிய வஸ்துக்களில் ஆசை வைத்தால் அது காணாமல் போனால் எவ்வளவு தவிக்கிறோம் என்பதை கவனியுங்கள். பெறிய வஸ்துக்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். பக்ஷி ஆடு மாடுகளில் ஓர் விதமான அற்புதத்தை பார்க்கிறோம். பால் கொடுக்கும் வரை ஆசாபாசம் உள்ளது. பெரியதானதும் அந்த பாசம் போய்விடுகிறது. இது பகவானின் செயல். மனிதர்களும் இப்படி இருந்தால் சீக்கிறமாகவே பகவானிடம் பாசம் வைத்து நல்ல கதியை அடைய வழி ஏற்பட்டு விடலாம். மக்களுக்கு உலக இன்பத்தில் எவ்வளவு ப்ரீதி உள்ளது. சொல்ல முடியாது. இது அவிவேகிகளுக்கு உண்டு. அவ்வளவு அன்பு உன்னிடத்தில் இருக்க வேண்டும் என்று பகவானை வேண்டிக் கொண்டான் ப்ரஹ்லாதன். "மற்றை நம் காமங்கள் மாற்று" என்று கோதை சொன்னபடி பகவானிடத்தில் பாசம் வெறுக்கத்தக்கதன்று. இது உசிதமானது. மற்ற உலக இன்பங்களில் தகாதது. "சேம நல்வீடும் பொருளும் தர்மமும் சீறிய நற்காமமும் இன்றிவை நான்கு என்பர். நான்கினும் கண்ணனுக்கே ஆமது காமம். அறம் பொருள் வீடு இதற்கு என்று உரைத்தான் வாமனன் சீலன்" என்று இராமனுஜ திருவந்தாதியைப் பார்த்து நன்கு இதை உணரலாம். ஆனால் ஒரு விஷயம் "தாய் தந்தை மனம்பித்து. தனயன் மனம் கல்லு" என்று சொல்வர். விவாஹம் ஆனதும் பிள்ளை மனம் மனைவியினிடததில் பாசம் வைக்கிறது. இதுதான் அதிசயம். தொட்டில் சுகத்தைவிட படுக்கை ஸுகம் பெரியதாகிவிடுகிறது".

எப்படியும் பாசம் விடுவதில்லைஇ தாய் தந்தையினிடத்தில் பாசம் இல்லாவிடிலும். இது தான் உலக இயற்கை. எத்தனை மக்கள் கைகால் இல்லாமலும் கால் நொண்டியாகவும் ஆஹாரமில்லாமலும் தவிக்கின்றனர. ஆனால் தனது உடலில் மாத்திரம் பாசத்தை விடுவதில்லை. இறந்து போய் விடுவோமோ என்ற மனக் கவலைதாநே தவிற உடலில் கவலை இல்லை. பல செய்வினை வன்கிற்றால் திண்ணம் அழுந்தக் கட்டிவிட்டான் பகவான். ஆநுக்ரஹ ச்ருங்கலத்தால் நம்மை கட்டிவிட்டால் நற்கதியை அடைவோம். புத்ரன் பெண் மனைவி வீடு வங்களா என்கிற வஸ்துக்களில் ஆசா ச்ருங்கலத்தால் நம்மை கட்டினபடியால் இதிலிருந்து மீள முடிவதில்லை. இதுதான் பாசம். துறவிகளும் அல்லவா இதிலிருந்து மீளமுடியாமல் உழந்று கொண்டிருக்கிறார்கள். 'ஸ்நேகாத் அரண் யௌகஸ:' என்று கண் வமஹர்ஷ தன்னால் வளர்க்கப்பட்ட சகுந்தலையினிடத்தில் அதிகமாக பாசத்தை காட்டினார்.

பிட்யந்தே க்ரஹிண: கதம் நு தநயா விச்வேஷது: சை: நவை: என்றும் சொன்னார். அதாவது எனக்கே இவ்வளவு பாசம் இருக்க இல்லற வாழ்க்கையில் உள்ள க்ருஹஸ்தர்களுக்கு எவ்வாறு பாசம் நீங்கும் என்று ஆக பாசத்தை நீக்கினவன்தான் நற்கதியை அடைய முடியும்.

*****

# 5. நாங்கள் நாங்களே! நீங்கள் நீங்களே!

இந்தத் தலைப்பைக் கண்டதும் ஒருவரும் சந்தேகப்பட வேண்டாம். உலகத்தில் அவரவர் அவரவர்தாம். ஒருவன் மற்றொருவன் ஆகமாட்டான். அதுபோல் நாங்கள் நாங்கள்தாம்; நீங்களும் நீங்கள்தாம். நீங்கள் நாங்களாகமாட்டீர்கள்; நாங்கள் நீங்கள் ஆகமாட்டோம், அப்படியிருக்க இது என்ன தலைப்பு?

இந்தத் தலைப்பின் கருத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறோம். நன்கு கவனித்துப் படியுங்கள். ஒரு மகான் நன்கு படித்தவர்; வேதங்களைச் சரியான வயதில் கசடறக் கற்றவர்; வேதாங்கங்களையும் நன்றாக அப்யஸித்தவர். சாஸ்திரங்களில் கரை கண்ட ஞானம் உடையவர்; உபநிஷத்தின் உட்பொருளை ஸதாசார்யன் மூலமாகப் பயின்றவர். அவருக்கு நிகர் அவரே என்று சொல்லும்படியான அறிவைப் பெற்றவர். இம்மாதிரி அறிவைப் பெற்றது மாத்திரமின்றி அநுஷ்டானத்திலும் சிறப்பைப் பெற்றவர். கல்வியைக் கற்றது மாத்திரமின்றி நடைமுறையிலும் அதன்படி நடந்து வருகிறவர்களே மகான்கள்.

சிலர் சிறந்த ஞானத்தைப் பெற்றிருக்கலாம்; அவரது அநுஷ்டானம் நன்றாக இராது; உலகத்தவர் பரிகசிக்கும்படி நடந்துகொள்வர். உதாரணமாக, மேடையில் அமர்ந்து, "சிகையை வெட்டிக் கொள்ளக் கூடாது; பொய் பேசுதல் தவறு; காலங்களில் ஸந்தியாவந்தனம் செய்தல் வேண்டும். பிறர் பொருளை அபகரித்தல் குற்றம்" என்று இம்மாதிரி பல உபதேசங்களைச் செய்வர். ஆனால் உபதேசம் செய்பவர் சிகையை எடுத்துவிட்டிருப்பார்; பொய் சொல்ல தயங்க மாட்டார்; ஸந்தியாவந்தனமே சரியாக தெரியாதவராக இருப்பார்; பிறர் பொருளை விரும்பி, அதற்காக அக்ரமமான செயலைச் செய்வதில் வல்லவராக இருப்பார். இப்படி உபதேசிப்பது ஒன்றும், செய்வது ஒன்றுமாகப் பலரிடத்தில் கண்டுள்ளோம். இது உபயோகமற்றது. நாம் எப்படித் தெரிந்துகொண்டு இருக்கிறோமோ, எப்படி உபதேசம் செய்கிறோமோ, அநுஷ்டானத்திலும் அம்மாதிரியே நடந்துகொள்வதுதான் அழகு. இல்லாவிட்டால் ஒருவனுடைய கல்விஞானம் நாய்வாலுக்குச் சமமாகவே ஆகிவிடும். இக்காலத்தில் பணம் நிறைய உள்ளது. அது நல்ல வழியில் ஸம்பாதித்தது அல்ல. அக்ரமமாக ஸம்பாதித்தது. அதைக் கொண்டு யாசித்தோ வேறு வகையிலேயோ தர்மகார்யம் செய்வது பலனை அளிக்காது. பாபம்தான் சேறும் என்று சொல்லுவர். பத்ரிகையிலும் சிலர் எழுதுவர். ஆனால் செய்வது இம்மாதிரிதான். நாயின் வால் எதற்கும் உபயோகமற்றது. தன்னுடைய மறைக்க வேண்டியதை மறைத்து கொள்ளாது. அந்த வால் உயரேதானே தூக்கிக் கொண்டிருக்கும்? பசு, எருது முதலியவற்றின் வால் மர்ம ஸ்தலத்தை மறைத்துவிடும். ஈ, கொசு முதலியவற்றையும் ஓட்டிக்கொள்ளும். நாய் வாலோ அதற்கும் பயனற்றது. சிறு பையன்கள் விளையாட்டுக்காக அதன் வாலில் ஓலையைக் கட்டி கொளுத்துவார்கள். அதனால் அதற்கு தீங்குதான் உண்டாகும். அம்மாதிரிதான் கற்றவனின் ஞானம் அநுஷ்டானத்தில் அமையாவிட்டால் அனர்த்தத்தைத்தான் கொடுக்கும்.

சாஸ்திரங்களில் உசிதமான ஞானம் உடையவர் ஒருவர் தம்மை ஜனங்கள் புகழ வேண்டும் என்று எண்ணி, வித்வத்ஸபை ஒன்றை ஏற்படுத்தினார். அப்பொழுது பல வித்வான்கள் சூழ்ந்திருந்தனர். அந்த ஸபையை நடத்துகிறவர், வித்வான்களைப் பார்த்து, "இங்கு வந்துள்ள உங்களைக் கண்டதும் மனம் மகிழ்கிறது. அனைவரும் குடுமியுடனும் வேஷ்டியுடனும் புண்ட்ரங்களுடனும் இருப்பதைக் கண்டு மிகவும் ஸந்தோஷிக்கிறேன்" என்று நன்கு புகழ்ந்தார். ஸபை முடிந்ததும் வித்வான்கள் வீட்டுக்குச் சென்றார்கள். இரவு ஏழு மணி ஆயிற்று. இந்த ஸபை நடத்துபவர் தினமும் ராமாயணம் சொல்லுகிறவர். அன்றிரவு விபீஷண சரணாகதிப்

ப்ரகரணம் சொல்ல வேண்டியதாக இருந்தது: இவர் அதை எடுத்துச் சொல்லுகிறார் - "விபீஷ்ணாழ்வான் 'ஸர்வலோகசரண்யாய' என்று நான்கு ராக்ஷஸர்களுடன் ஸ்ரீ ராமனிடத்தில் வந்து தன் கஷ்டத்தை மிக்க உரத்த குரலில் சொல்லிக்கொண்டு வருகிறான். இந்தச் சத்தத்தைக் கேட்டதும் ஸ்ரீராமனிடம் உள்ள வானர முதலிகள் ஸ்ரீராமனிடம் வந்து ஒரே கூச்சல் போட்டன. 'சத்ருவான ராவணன் வசிக்கும் இடமான இலங்கையிலிருந்து இந்த ஐந்து ராக்ஷஸர்கள் வந்திருக்கிறபடியால் நமக்கும் ஸ்ரீராமனுக்கும் என்ன ஆபத்து வருமோ?' என்று எண்ணி, ஒரே மாதிரி எல்லாக் குரங்குகளும் பெருத்த கூச்சல் போட ஆரம்பித்தன. இது எப்படி இருக்கிறதென்றால் இன்று பகல் வித்வத்ஸபையில் ஒரு வித்வான் ஏதோ ஒரு விஷயம் சொன்னபோது, மற்ற எல்லா வித்வான்களும் ஒரே சமயத்தில் அர்த்தமற்ற கூச்சல் போட்டார்களே அப்படி அந்தக் குரங்குகள் போட்டன" என்றார்.

மேலும் இவர் பணத்தில் ஆசையாலும், அங்கு உபந்யாஸ மண்டபத்திலுள்ள சில லௌகிகர்களுடைய ஆதரவை அடைய வேண்டும் என்று எண்ணியும், "இந்த வித்வான்கள் இப்படித்தான் எப்போதும் கூச்சலிடுவார்கள்" என்று வித்வான்களைப் பரிகசித்து, லௌகிகர்களை மிகவும் புகழ ஆரம்பித்துவிட்டார். இப்படிச் செய்பவர் எவ்வளவு படித்திருந்தும் என்ன லாபம்? படிப்புக்குத் தகுந்த அறிவும் வளரவில்லை; அறிவுக்குத் தகுந்த ஆசாரமும் இல்லை என்று தானே இவரைச் சொல்ல வேண்டும்? குடுமி உள்ளவர்களிடம் அக்ஷதையை சேர்த்தால் கீழே விழுந்து விடுகிறது. க்ராப் செய்து கொண்டு வந்த உங்கள் தலையில் அக்ஷதை சேர்த்தால் அப்படியே இருக்கிறது. எனறும் புகழுகிறார. ஐயோ இப்படியும் ஒருவரா?

இப்படிப் போலியான மகானன்றிக்கே உயர்ந்த குணத்தை உடைய மகான் கீழே கூறப்பட்டவர். அவர் ஒரு சமயம் உலகத்தைப் பார்த்தார். எல்லா ஜனங்களும் எம்பெருமானிடத்தில் ஈடுபடாமல் தினந்தோறும் மூன்று நான்கு வேளை நன்றாகச் சாப்பிட வேண்டும், ருசித்துச் சாப்பிட வேண்டும். ஆடு மாடு போல இருக்க வேண்டும், அழகான உடை அணிந்து கொள்ள வேண்டும், நன்றாக அலங்கரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தனர். இஹலோக ஸுகம் பஹுக்லேசுத்துடன் கூடியது. அதில் பல ச்ரமங்கள் உள்ளன. அதை விட்டு விடவேண்டும் என்று சாஸ்திரம் படித்தவர்கள் கூறுகிறார்களே. அது தவறு. உமி தவிடு முதலியவைகளுடன் கூடியதானபடியால் நெல்லை விட்டு விடுகிறார்களா? முள்ளுடன் கூடியது பலாச் சுளை என்ற காரணத்தால் பல பழத்தை விட்டு விடுகிறோமா? அதனால் பழத்தை யாரும் வாங்குவதில்லையா? இப்படி சிலர் சொல்லுவர் மனிதர்கள். இவர்களைக் கண்டு, 'இவர்களுடன் நாம் சேர்ந்தால் நாமும் கெட்டுவிடுவோம், நம் புத்தியும் மாறிவிடும், ஒழுக்கமே போய்விடும். எம்பெருமானையே மறந்துவிடுவோம்' என்று நினைத்தார். அவர்களோ இவருடன் கலந்து, 'இவரையும் கெடுத்துவிட வேண்டும்' என்று எண்ணி அருகில் வரத் தொடங்கினர். அவர்களைக் கண்டதும் இவர் வெறுப்புடன் கூறுகிறார் -

அத்யப்ரப்ருதி ஹே லோகா:! யூயம் யூயம் வயம் வயம்
நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம்
அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம்
வயம் து கிங்கரா விஷ்ணோ:, யூயம் இந்த்ரியகிங்கரா:

"ஜனங்களே! இன்று முதற்கொண்டு நீங்கள் நீங்கள்தாம்; நாங்கள் நாங்கள்தாம். எங்களுக்கும் உங்களுக்கும் ஒருவிதச் ஸம்பந்தமும் இல்லை. நீங்கள் பணத்திலும் சிற்றின்பத்திலும் நிறைய அவா உடையவர்கள். நாங்கள் ஸ்ரீமந் நாராயணனிடத்தில் ஆசை உடையவர்கள். நீங்கள்

பணத்திலும் இகலோக இன்பத்திலும் ஆசை உடையவர்களானபடியால் ஐம்புலன்களுக்கு வேலைசெய்யும் வேலைக்காரர்கள். நாங்கள் எம்பெருமானுடைய வேலைக்காரர்கள். ஆகையால் உங்களுடன் நாங்கள் சேர மாட்டோம். எங்கள் தன்மையே வேறு; உங்கள் தன்மையே வேறு" என்கிறார்.

அதாவது, எம்பெருமானையே நம்பினவர்கள்; அவனைத் தவிர மற்ற விஷயங்களில் ஆவலே இல்லாதவர்கள்; அந்த ச்ரிய:பதியான ஸர்வேச்வரனிடத்தில் எக்காலமும் எல்லாவிதக் கைங்கரியங்களையும் செய்ய வேண்டும் என்று பாரிக்கிறவர்கள்; அவனைத் தவிர மற்ற விஷயங்களில் கண்ணோட்டமற்றவர்கள்; அவனிடத்தில் அவனது பணிவிடையைத் தவிர மற்ற எந்தப் பொருளையும் யாசிக்காதவர்கள் - இப்படிப்பட்டவர்கள் பெரிய மகான்கள். இந்த மகான்களின் கடாக்ஷம் நம்மேல் ஒரு நிமிஷம் விழுந்தாலும் போதும்; அது உயர்ந்த பதவியை அளித்துவிடும். 'மஹாத்மபிர் மாம் அவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத்விரஹோதிதுஸ்ஸஹ:' என்று ஆளவந்தார் கூறியபடி, இந்த மகான்களுடைய பிரிவு எம்பெருமானுக்கே பொறுக்க முடியாதாம். எம்பெருமான் ஒரு நிமிஷங்கூட இத்தகைய மகான்களின் பிரிவைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தவிக்கிறானாம். அப்படிப்பட்டவர்களே மகான்கள்.
இவ்வுலகில் பிறந்து, எவ்வளவோ கஷ்டங்கள் வந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல், பகவானையே ஸேவிக்க வேண்டுமென்று எண்ணி, அவனிடத்திலேயே மனத்தைச் செலுத்தியபடியால் இவ்வுலகக் கஷ்டங்களாகிய பாம்புகள் பல உடம்பைக் கடித்தபோதிலும், அந்தக் கடியை அறிந்து கொள்ளாமல் ஸதா எம்பெருமானைப் பற்றி பாடிக் கொண்டே இவர்கள் பொழுது போக்குவார்கள். சாதாரண ஜனங்கள் இவ்வுலக இன்பத்தில் மனத்தைச் செலுத்தினவர்களானபடியால் அதற்குத் தகுந்தாற் பொல் நடந்துகொள்ள வேண்டியதாக இருக்கும். பணமில்லாமல் எந்த ஸுகத்தைத்தான் இங்கே அநுபவிக்க முடியும்? அதற்காகப் பணத்தைச் சம்பாதிக்க முயலுவார்கள். தவறான வழியில் பணத்தைச் சேமித்து ஸுகத்தில் ஆழ்வார்கள். அதற்கும் முடியாவிட்டால் பெரிய பணக்காரனிடத்தில் சென்று யாசித்துப் பெறுவார்கள்.

எவ்வளவுதான் பணம் வந்தால் என்ன? எல்லாம் நம்முடைய சாண் வயிற்றுக்குத்தானே? இந்தச் சாண் வயிற்றை நிரப்ப, வயலில் சிந்திய செந்நெல் தானியமே பற்றாதா? குளத்திலும் கிணற்றிலுமுள்ள ஜலத்தை இரண்டு கைகளால் எடுத்துப் பருகினால் தாகம் தணியாதா? அழுக்கடைந்த கந்தல் துணி வழியில் சுலபமாகக் கிடைக்கக்கூடுமே. அதைக் கொண்டு நம் உடலை மறைத்துக்கொண்டால் ஆகாதா? இப்படியிருக்க, தமது வயிற்றுக்காக அல்ப அரசர்களை யாசிப்பதற்கு ஏன் போக வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு உண்டாவதே இல்லை. அரசர்களிடம் சென்று தமது வயிற்றுக்காக யாசிக்கிறார்களே, இது ஒரு நாளா, இரண்டு நாளா? தன் உடல் விழுமளவுதானே யாசிக்கவேண்டும்? தனஞ்சயத்தை (ஜாடராக்கினியை)த் தணிப்பதான தனம் இவ்வுலகிலுள்ள செல்வம், தனஞ்சயனை (அர்ஜுனனை) மேன்மையுறச் செய்யும் தனம் எம்பெருமான். இந்த எம்பெருமானாகிற தனம் நமக்கு நன்மையைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்போது ஆபாசமான உலகிலுள்ள தனத்துக்கு ஏன் ஆசைப்பட வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு உண்டாவதே இல்லை. ஆக, கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் இந்த ஐங்கருவி செல்லும் வழியே சென்று அந்த ஐங்கருவிகள் திருப்தி அடையவேண்டும் என்று எண்ணி, அதற்காகப் பணத்தில் ஆசை வைத்து, அக்ரமமான செயல்களில் ஈடுபட்டுக் காலத்தைக் கழிக்கும் மூட ஜனங்களின் ஸம்பந்தம் எங்களுக்கு வேண்டவே வேண்டாம் என்று மகான்கள் சொல்லுகிறார்கள். இந்த மகான்களும் வேலைக்காரர்கள்தாம்; எம்பெருமானிடத்தில் வேலை செய்யும் வேலைக்காரர்கள்தாம். ஆனால்

முதலில் கூறப்பட்டவர்கள், இந்த்ரியங்களுக்கு வேலைக்காரர்கள். அடுத்தவர்கள், வகுத்த விஷயமான எம்பெருமானுக்கு வேலைக்காரர்கள். உலகத்தில் ஒரு யஜமானிடத்தில் உள்ளவர்கள் அவனுக்கே வேலை செய்யவேண்டும்; மற்றவனுக்கு வேலை செய்வது உசிதமன்று. எந்த யஜமானன் நமக்கு மாதந்தோறும் சம்பளம் அளிக்கிறானோ அவனுக்குத் தானே வேலை செய்வது ந்யாயம் ஆகும்? மற்றொருவனுக்குச் செய்வது எப்படிப் பொருந்தும்? அதுபோலவே, நமக்குப் பிறந்தது முதல் கடைசி வரையில் அந்த அந்தச் சமயத்தில் எல்லாவிதமான உபகாரங்களையும் செய்து வருகிறான் எம்பெருமான்.

பிறக்கும்போதே பசியால் வருந்துகிற நமக்கு உணவாகத் தாயினிடத்தில் பாலை எம்பெருமான் உண்டுபண்ணுகிறான். இப்படி எல்லாக் காலத்திலும் அவன்தான் உதவுகிறான். இப்படி உபகரித்துவரும் எம்பெருமானுக்கு வேலைக்காரனாக இருப்பதை விட்டு, ஐங்கருவிகளுக்கு வேலை செய்து ஏன் பொழுதைப் போக்க வேண்டும்? ஆகையால் ஸ்ரீமன்நாராயணனிடத்தில் ஆவல் கொண்டு அடிமை செய்யும் எங்களுக்கும் வீண்பொழுது போக்கிக் கொண்டிருக்கும் உங்களுக்கும் ஒருவித ஸம்பந்தமும் இல்லை என்று அறுதியிடுவதே உண்மை தத்வம்.

"கா சிந்தா மம ஜீவநே யதி ஹரி விச்வம்பரோ கீயதே நோ சேதர்பக ஜீவனாய ஐ நநீஸ்தந்யம் கதம் நிஸ்ஸரேத் I இத்யாலோச்ய முஹு: முஹு: யதுபதே லக்ஷ்மிபதே கேவலம் த்வத் பாதாம் புஜஸேவனாய ஸததம் காலோ மயா நீயதாம்" II என்பது நீதிச்லோகம். உலகத்தை பரிக்கிறவன் பகவான். ஆக நம்மையும் அவன் பரித்துக் கொண்டுள்ளான். கர்பத்தில் சிசுவாக இருக்கும் ஸமயம் நாம் எவ்வாறு ஜீவத்தோம். பிறந்த பிறகுதான் நமக்காக தாயின் ஸ்தனத்தில் பாலையும் உண்டு பண்ணுகிறான். பிறகும் நம் ஜீவதை அவன்தானே செய்கிறான். ஸ்ரீரங்கம் ப்ராகாரத்தில் செப்பனிடும் காலம் ஒரு தவளை பெருத்தும் மழமழ வென்றும் எப்படி ஜீவித்திருந்தது. இவ்வாறு பல அபூர்வ விஷயங்கள் உள்ளன. ஆக அவனையே மஹான் துதி செய்வார்கள்.

ஈசன் தனது கையால் மேருமலையைத் தூக்கினான். வெள்ளி மலையில் உள்ளான். குபேரனுக்கு ஸ்நேஹிதன் அப்படியிருக்க கையில் கபாலத்தை வைத்துக் கொண்டு பிக்ஷையை வாங்க திரிகிறான். ஆதலால் தலையெழுத்துதான் நன்கு இருக்கவேணும். "சொல்லி குறைவிலன் வேண்டித்தரல்லாம் தரும் கோதிலான மணிவண்ணன் மாமாயன் இருக்க அவனை விட்டு புல்ன்களுக்கு ஏன் வேலை செய்ய வேண்டும்" என்று எண்ணுவர் மஹான்.

*****

# 6. மார்வம் என்பதோர் கோயில்

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஐந்து நிலைகளை அடைந்திருக்கிறான். பரம் என்ற நிலையையும், வியூகம் என்ற நிலையையும், விபவம் என்ற நிலையையும், அர்ச்சை என்ற நிலையையும், அந்தர்யாமித்வம் என்ற நிலையையும் அடைந்து, தன்னை அடைந்தவர்களுக்கு அந்த அந்த அநுபவங்களைக் கொடுத்துச் சந்தோஷிப்பிக்கிறான். அவனை அண்டினவர்களுக்காகவே இப்படிப் பல ப்ரகாரங்களைப் பெற்று விளங்குகிறான். 'வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த' என்று ஆன்றோர் பணிப்பர்.

வைகுண்டலோகத்தில் அழகிய அப்ராக்ருதத் திருமேனியைப் பெற்றுக்கொண்டு மகாலக்ஷ்மியுடன் பக்தர்கள், பாகவதர்கள் அனைவரும் வணங்கும் வகையில் ஸேவை ஸாதிக்கிறான். இந்த நிலைக்குத்தான் 'பரம்' என்று பெயர். இது அங்குள்ள முக்தர்களாலும் நித்யஸூரிகளாலுமே அநுபவிக்கப் பெறும். ப்ராக்ருத லோகமான பூலோக ஸ்வர்க்க லோகாதிகளில் உள்ளவர்களால் ஒருகாலும் அநுபவிக்க முடியாது. அங்கே சென்று அநுபவிக்கக் கூடியதானபடியால் இங்குள்ளவர்கள்களுக்கு அது துர்லபம். பெரும் தாகம் உள்ளவன் தண்ணீரைக்கண்டு குடித்துத் தாகத்தை ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பவன். அருகில் தண்ணீர் கிடைக்காமல் அலைந்து கொண்டிருக்கும்பொது, 'ஆவரண ஜலம் என்று ஒரு நீர் உண்டு; அதைப் பருகு' என்று சொன்னால் அவன் அதை எப்படி அடையாமல் வருந்துவானோ அது போலவே பகவானிடம் 'ஒரு நாள் காண வாராயே' என்று கதறிக் கொண்டிருப்பவனுக்கு வைகுண்டலோகத்தில் திவ்ய மங்கள விக்ரகத்தோடு ஸேவை ஸாதிக்கிறான் என்று உபதேசித்தால் அதைக் காண முடியாமல் இவனும் வருந்துவான்.

பரரூபம் வைகுண்டலோகத்தில் இருக்கிறபடியால் அது அதிதூரத்தில் உள்ளது. வியூகம் என்ற ரூபம் அதிதூரத்தில் இல்லாவிட்டாலும் அண்டத்துக்குள்ளேயே இருந்தும் பாற்கடல் போல் அடைய முடியாதது. கேட்டறியலாமே தவிரக் கண்டறிய முடியாதது. விபவம் என்ற நிலை ராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் சொல்லும், இந்த ரூபம் பூமியிலேயே அவதரித்து ஸஞ்சரித்தது. ஆனாலும் அந்தக் காலத்தில் அநுபவிக்கலாமே தவிரப் பிற்காலத்தவர்களால் அநுபவிக்க முடியாது. ராமாவதாரம் த்ரேதாயுகத்தில் நடைபெற்று அப்பொழுதே முடிந்துவிட்டது. அந்த ஸ்ரீராமனைத் துவாபரயுகத்தில் உள்ளவர்கள் வணங்கி வழிபட வேண்டுமென்றால் முடியுமா? துவாபர யுகத்தில் அவதரித்த ஸ்ரீகிருஷ்ணனைக் கலி யுகத்தில் உள்ளவர்களால்தான் வணங்க முடியுமா? நம்மாழ்வார் ஸ்ரீகிருஷ்ணனை நேரில் கண்டு அநுபவிக்க நினைத்தும் முடியாமல் எவ்வளவோ தவித்தார் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. "பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்து .. உன்னை என்றுகொல் கூடுவதே?" என்று தம் மனோரதம் பூர்த்தி அடையாமல் அழுது அழுது மோகத்தையும் அடைந்து பரிதவித்தார் அல்லவா? ஆகையால் பின்னுள்ளார்க்கு வணங்க முடியாத ரூபம் அது. பெருக்காறு போலே உள்ளது அந்த நிலை. அதிலே தேங்கின மடுக்கள் போலிருக்கிறது அர்ச்சாவதாரம். இந்த அவதாரம் கோயில் கொண்டிருக்கிறபடியால் எல்லாராலேயும் சுலபமாக வணங்கும்படியாக அமைந்திருக்கிறது. திவ்யதேசங்களிலும் க்ராமங்களிலும் திருக்கோயில் கொண்டு எம்பெருமான் திருமேனியை எடுத்து நிலைநின்றிருப்பதனால் அனைவராலும் சுலபமாக வணங்கப்படும் நிலையானபடியால் அந்த அவதாரம் ஆறுகளிலே தேங்கியுள்ள ஜலம் போல் ஆகிறது.

திவ்யதேசங்களில் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஸேவிப்பதற்கு வெளியூரில் உள்ளவன் அங்கே செல்ல வேண்டும். அதே திவ்யதேசத்தில் வசிப்பவன் தன் இல்லத்தைவிட்டுக் கோயில் இருக்குமிடம் செல்ல வேண்டும். அவ்வளவு சிரமத்தையும் சகிக்காமல் தன் இடத்திலேயே எம்பெருமான் எழுந்தருளியிருந்தால் சுலபமாக ஸேவித்துக் கொள்ளலாம் அல்லவா? பெருந்தாகம் உள்ளவன், 'ஆற்றிலே தண்ணீர் தேங்கியிருக்கிறது' என்று உபதேசித்தால் இதைக் கேட்டுச் சந்தோஷம் அடைவான்; ஆனாலும் அவனுக்கு அங்குச் செல்ல வேண்டிய சிரமம் உண்டு. வீட்டுக்குள்ளேயே அந்த நீர் இருக்கிறதென்றால் மிக்க மகிழ்ச்சி அடைவான். அது போல் கோயில் இருக்குமிடம் செல்லாமல் தன் ஹ்ருதயத்திலேயே எம்பெருமான் இருக்கிறார் என்றால் மகிழ்ச்சிக்கு அளவே இராது. பூமியிலுள்ள ஜலத்தை வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த ஒரு சிரமம்தான். அது போல் ஹ்ருதயத்திலுள்ள பகவானைச் சிரமப்பட்டுப் பார்க்க வேண்டியது ஒன்று உண்டு. இப்படி எம்பெருமானுக்கு ஐந்து நிலைகள்.

இதைத்தான் ஆசார்யர்கள் அழகிய உதாரணத்தோடு காட்டியுள்ளார்கள், "பூகத ஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரண ஜலம் போலே பரத்துவம்; பாற்கடல் போலே வ்யூஹம்; பெருக்காறு போலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே 'அர்ச்சாவதாரம்' என்று. இந்த ஐந்து நிலைகளில் அந்தர்யாமித்வம் என்ற நிலையை மனத்தில் வைத்துக்கொண்டுதான் 'மார்வம் என்பதோர் கோயில்' என்ற தலைப்பை குறிப்பிட்டோம். இந்தத் தலைப்பைப் பார்த்ததுமே பெரியாழ்வார் பாசுரம் நினைவிற்கு வரலாம் -

> சோர்வினாற்பொருள்வைத்ததுண்டாகிற்சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து
> ஆர்வினவிலும் வாய்திறவாதே அந்தகால மடைவதன் முன்னம்
> மார்வ மென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னுந் தெய்வத்தை நாட்டி
> ஆர்வமென்பதோர் பூவிட வல்லார்க் கரவதண்டித்தி லுய்யலு மாமே.
>
> (பெரியாழ்வார் திருமொழி 4-3)

உலகத்தில் மனித உடல் பெற்று ஒருவன் இஷ்டமான ஸ்நேகிதர்களையும் பெண் பிள்ளை, பெண்டாட்டி மற்றுமுள்ள பந்துக்களையும் பெற்றுப் பணத்தையும் சேமித்துச் சுகத்துடன் வாழ்கிறான். எவ்வளவோ இன்பங்களை அநுபவித்தபோதிலும் இவனுக்குக் கடைசிக் காலம் (மரணம்) என்பது ஒன்று உண்டே; அது வரும் சமயத்தில் வாய் திறந்து பேச முடியாமல் தவிப்பான். அந்தச் சமயத்தில் இவனுடைய நண்பர்களும், மனைவி, புத்திரன், மகள் முதலிய பந்துக்களும் இவனைப் பார்ப்பார்கள். அருகில் வந்து, 'ஐயோ! இவனுக்கு இந்தத் தசை வந்துவிட்டதே!' என்று சிறிதுகூட மனத்தில் நினைக்கமாட்டார்கள். 'பின் என்ன நினைப்பார்கள் அவர்கள்?' என்றால், 'பணம் எங்கு வைத்திருக்கிறான்? எவ்வளவு சம்பாதித்திருப்பான்? நமக்கு எவ்வளவு அதில் கிடைக்கும்? எல்லாத் தொகையையும் நாமே பெற்று விடலாமா?' என்றே எண்ணுவர். இப்படி எண்ணுவது இந்தச் சமயம் தகுமா தகாதா என்று யோசிக்காமல் இருப்பது மாத்திரமின்றி இவனிடம் வந்து கேட்கவும் ஆரம்பித்துவிடுவார்கள். "நீ யார்க்கும் தெரியாத வகையில் எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய்? எங்கு வைத்திருக்கிறாய்? பூமியில் புதைத்து வைத்திருக்கிறாயா? யாரிடமாவது கடனாகக் கொடுத்திருக்கிறாயா? வங்கியில் போட்டு வைத்திருக்கிறாயா? சீக்கிரம் சொல் சொல்" என்று ஒரு முறைக்கு ஒன்பது முறை கேட்பார்கள். அவர்கள் கேட்பதுதான் மிச்சமாகும். இவனோ வாயைத் திறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருப்பான். இப்படிக் கடைசிக் காலம் ஏற்படும். இதைத்தான் முகுந்த மாலையில் "கபவாத பித்தை: கண்டா வரோதன விதைன" என்று சொன்னார். "கபம் வாதம் பித்தம்"

என்றால் மனைவி புதல்வன் மகள் முதலியவர்கள். ஒரு சமயம் இந்த கிழவன் நான் பணம் வைக்க வில்லை. இந்த நபருக்கு 10 ஆயிரம், அந்த நபருக்கு 10 ஆயிரம் கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் 'இது புத்தி ஸ்வாதீனமில்லாமல் உளருகிறது என்பர். ஐயோ'. இவன் எவ்வளவு பணத்தைச் சம்பாதித்தால்தான் என்ன? எத்தனையோ பந்துக்களையும் நண்பர்களையும் அடைந்தால்தான் என்ன? இவனுடன் பணமோ பந்துக்களோ உடன் வரப்பொவதில்லை. இவன் செய்த புண்ணியம், பாவம் என்ற இரண்டுதாம் உடன் வரும். ஆகையால் இவன் பாவம் செய்திருந்தால் அதற்குத் தகுந்தபடி யமயாதனைகள் பல நேரிடும். புண்ணியம் செய்திருந்தால் நல்ல உலகம் கிடைக்கும். எனவே யமயாதனைக்குப் பயந்து பாவங்கள் அனைத்தும் தீர எம்பெருமானை ஹ்ருதயத்தில் நன்கு வைத்துப் பூஜித்தல் வேண்டும். இந்தக் கருத்தை ஆழ்வார் இந்தப் பாசுரத்தால் வெளிப்படுத்தினார்.

திவ்யதேசங்களிலும் க்ராமங்களிலுமுள்ள கோயில் எல்லாருக்கும் பொதுவாக இருக்கும். எல்லாரும் ஒன்று சேர்ந்து அங்கே சென்று பூஜிக்கலாம், ஸேவிக்கலாம், அங்குச் செல்லக்கூடாத ஸேவார்த்திகள் அங்குச் செல்வதால் தோஷங்கள் ஏற்படும் கோயிலுக்கு. பூஜிப்பவர்களில் சிலர் ஸ்நானம் அநுஷ்டானம் முதலியவற்றை நன்கு செய்து, பிறகு பூஜிக்கிறார்கள் என்பதில்லை. ஏதோ பணத்தை முன்னிட்டு ஒரு தொழில் என்று எண்ணி நடத்துவதால், ஈச்வரனுக்கு அங்கு அதிக ஸாந்நித்யம் இருக்கிறது என்று சொல்லவும் முடியாது. அர்ச்சகர்களுடைய மாகாத்மியத்தாலும் அவன் செய்யும் பூஜாவிசேஷத்தின் பலத்தாலுமே பகவானுக்கு ஸாந்நித்யம் அதிகம். 'அர்ச்சகஸ்ய ச மாஹாத்ம்யாத் அர்ச்சநாயாம் விசேஷத:ச ஸாந்நித்யம் அதிகம் ப்ரோக்தம்' என்று சாஸ்திரம் கூறுகிறது. எனவே வெளியிலுள்ள கோயில்கள் எல்லாமே எப்பொழுதும் நன்றாகவே ஒருவிதத் தோஷமும் இல்லாமல் அமைந்திருக்கின்றன என்று சொல்ல முடியாது. நம் ஹ்ருதயமாகிற கோயிலை அடைய அலைந்து செல்ல வேண்டியதில்லை; ஒருவிதத் தோஷமும் இல்லாமல் அமைந்திருக்கும்.

நமது சரீரத்தில் ஹ்ருதயம் என்பது தாமரை மொட்டுப் போல் இருக்கிறது. அது தலைகீழாக இருக்கும். அந்த இதயத்தில் ஓர் அக்னிஜ்வாலை மிகச் சிறிய உருவத்துடன் அசையாமல் இருக்கிறது. அந்தச் சுடர் நடுவே கருமுகில் வண்ணமுள்ள பகவான் லக்ஷ்மியுடன் தானாகவே நிலைநின்றிருக்கிறான். தன்னைத் தியானம் செய்ய வேண்டும் என்ற விருப்பத்துடன் இருக்கும் ஜனங்களை அநுக்ரகிப்பதற்காகவே இம்மாதிரியான நிலையைப் பெற்று எம்பெருமான் இதயத்தில் வசிக்கிறான்.

> நீலதோயதமத்யஸ்த்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா ।
> நீவாரசுகவத் தந்வீ பீதாபா ஸ்யாத் தனூபமா ।
> தஸ்யா:சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்த்தித: ।।

என்று வேதம் ஸ்பஷ்டமாக இதைக் கூறுகிறது. ஸ்வாமி தேசிகனும் வரதராஜ பஞ்சாசத்தில் (20) மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார் -

> தந்வீ ஹ்ருதி ஸ்புரதி காபி சிகா முநீநாம்,
> ஸௌதாமிநீவ நிப்ருதா நவமேககர்பா ।।

"ஆகாயத்தில் ஒரு மின்னல் அசையாமல் இருக்க வேண்டும். அதன் நடுவே புதிய மேகம் ஒன்றும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் எப்படியோ அதுபோல், தேவாதிராஜனே,

முனிவர்களின் இருதயத்திலுள்ள ஓர் அசையாமலிருக்கும் அக்னிஜ்வாலையின் நடுவே நீலமேக ச்யாமளனான நீ விளங்குகிறாய். உன்னை முனிவர்கள் அனைவரும் தியானம் செய்கிறார்கள்" என்கிறார். "நீ பல இடங்களில் வசிக்கிறாய். பிராட்டி தோன்றிய பெரிய திருப்பாற்கடலிலும் வசிக்கிறாய். ஸம்ஸார மண்டலத்துக்கு மேலே உள்ள ஸ்ரீவைகுண்ட லோகத்திலும் உயர்ந்த திருமாமணி மண்டபத்தில் நீ வசிக்கிறாய். இப்படிப்பட்ட திவ்யமான அழகிய வாஸஸ்தலங்கள் உனக்கு இருந்தபோதிலும் அதில் அதிக ஆதரம் காட்டாமல் மனிதர்களுடைய இதயம்தான் உயர்ந்தது என்று எண்ணி அதில் மிக்க மகிழ்ச்சியுடன் வசிக்கிறாய். மனிதனின் இதயமோ சரீரத்திற்குள் மிகவும் ஸூக்ஷ்மமான துவாரமாக உள்ளது. சரீரத்தைப்பற்றி அதிகம் சொல்லவே வேண்டாம். அதில் மிகவும் ஆபாசமான பொருள்கள் நிறைந்துள்ளன. அந்த மனிதனின் இதயத்தை விரும்பி வசிப்பது என்பது உன் பெருங் குணத்தைக் காட்டுகிறது. சேதனர்களிடத்திலுள்ள உன் அன்பு தவிர வேறு என்ன அதற்குக் காரணம் சொல்ல முடியும்? அந்த:களேபரமிதம் ஸுஷிரம் ஸுஸூக்ஷ்மம் ஜாதம் கரீச கதமாதரணாஸ்பதம் தே" என்றும் அருளிச்செய்தார். (வரதராஜ பஞ்சாசத் - 21)

எனவே எம்பெருமான் பிராட்டியுடன் மனிதர்களை அநுக்ரகிக்க எண்ணித் தலைகீழாக இருக்கும் தாமரை மொட்டுப் பொன்ற இதயத்துக்குள்ளே வாஸம் செய்கிறான். இந்த இதயம்தான் எம்பெருமானுக்குக் கோயில் ஆகிறது. இந்த கோயில் கொண்ட எம்பெருமானைத் தியானம் செய்து பாவங்களைப் போக்கி, யமயாதனைக்கு ஆட்படாமல் நல்ல கதியைப் பெற அனைவரும் முயல வேண்டும். தலைகீழாக இருக்கும் இந்த இதய புண்டரீகத்தை நிமிர்த்திப் பகவானை ஸேவிக்க வேண்டும். இதைக காட்டுவதற்காகவே, "கோயில் அமைத்துத் தெய்வத்தை நாட்டி" என்று ஆழ்வார் பணித்தார். இதை நிமிர்த்துவது என்பது எல்லாருக்கும் எளிதன்று; சில மகான்களுக்குத்தான் முடியும். கெட்ட குணங்களை அறவே ஒழித்திருக்கும் பெரியவர்களுக்குத் தான் இது சுலபமாக முடியும். அவர்கள் விஷயத்தில்தான் இதயத்தில் வசிக்கும் எம்பெருமான் காட்சி கொடுப்பான்.

ராகாதிதூஷிதே சித்தே நாஸ்பதீ மதுஸூதந: ।
ந ரதிம் குருதே ஹம்ஸ: கதாசித் கர்தமாம்பஸி ॥

ஆகையால், ராகாதிகளால் தூஷிக்கப்படாத ஹ்ருதயம் உள்ளவர்கள்தாம் ஹ்ருதயத்தில் வசிக்கும் எம்பெருமானை பார்க்க முடியும். இப்படி அந்தர்யாமியாக இதயத்தில் வசிக்கும் எம்பெருமானோடு நமக்கு ஒருவிதப் பகையும் இல்லாமல் இருந்தால் அவனை அங்கேயே நேராக ஸேவிக்கலாம். ஆகையால் இதற்காக வேறு எங்கும் செல்ல வேண்டாம். நம்முடைய பாவம் எல்லாம் சுலபமாகப் போய்விடுமாகையால் அதைப் போக்கக் கங்கைக்கோ குருக்ஷேத்திரத்திற்கோ போகவும் வேண்டாம்.

யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி ஸ்தித: ।
தேந சேத் அவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கம: ॥

இங்கு, 'யம:' என்பது யமனைச் சொல்வதற்கு வந்ததல்ல; நம் ஹ்ருதயத்தில் வசித்து நம்மை நியமிக்கும் எம்பெருமானைச் சொல்ல வந்தது. "சூரிய வம்சத்தில் எல்லாரையும் நியமிக்கும் எம்பெருமான் ஸ்ரீராமனாக அவதரித்தான். அந்த எம்பெருமான் உன் இதயத்தில் இருக்கிறான். அவனுடன் 'த்வம் மே, அஹம் மே' என்ற விவாதமற்று அவனைத்தியானித்தால் சுலபமாகவே நமக்கு நல்ல கதி ஏற்படும். இதற்காக வேறு ஒன்றும் செய்ய வேண்டாம்" என்பது இந்த

சுலோகத்தின் கருத்து. இப்படி எம்பெருமான் ஐந்து நிலைகளைப் பெற்றிருக்கிறான். அதில் அந்தர்யாமித்வம் என்ற நிலை நமது இதயத்திலேயே கோயில் கொண்டிருக்கிற நிலை. இந்தக் கோயில் வெளிக் கோயில்களைக் காட்டிலும் உயர்ந்தது, ஒருவிதத் தோஷமும் அற்றது என்பதை, 'மார்வம் என்பதோர் கோயில்' என்பதனால் பெரியாழ்வார் கூறினார்.

"வெற்பென்றிரும் சோலை வேங்கடம் என்று இவ்விரண்டும் நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல் நிற்பென்று இளம் கோயில் உள்ளம் வைத்துள்ளினேன். வெள்ளத்திளங்கோயில் கைவிடேல்" என்று இரண்டாம் திருவந்தாதியில் பாகவதனுடைய ஹ்ருதய கமலத்தில் மிக ஆதரவுடன் பகவான் வஸிக்கிறான் என்றார். கீழ்கூறிய இரண்டு மலைகளில் ஆனந்தத்தோடு நிவாஸம் செய்கிறாய். அது போல் என்னுடைய ஹ்ருதய கமலத்திலும் வாஸம் செய்கிறாய். எல்லாவற்றுக்கும் பாலாலயம் போல் அமைந்த க்ஷீராப்தியை மறந்து விடாதே" என்கிறார்.

'நாகத்தனை குடந்தை வெ:கா திருவெவ்வுள்' நான் திருவந்தாதி 36. 'கல்லும் கணைகடலும் வைகுந்த வானாடும்' பெரிய திருவந்தாதி 68. இந்த பாசுரங்களிலும் இதைக் காணலாம்.

மாமனார் க்ருஹத்தில் வாஸம்தான் சிறந்தது என்று சொல்வது வழக்கம். ச்வசுரக்ருஹநிவாஸ: ஸ்வர்கதுல்யோ நராணாம் என்பதும் உண்டு. அவ்வாறு மாமனார் வீடாகிற க்ஷீராப்தியில் வாஸம் செய்யும் லக்ஷ்மி பதியும் அதை பழகவிட்டு பாகவதர் ஹ்ருதயத்தில் வாஸம் செய்ய விரும்பி ஓடிவந்து விடுகிறான் என்றார் பெரியாழ்வார், "பனிக் கடலில் பள்ளி கோளை பழக விட்டு ஓடிவந்து என்மனக் கடலில் வாழவல்ல" என்பது அவர் பாசுரம்.

"குமரிப் பெண்ணின் ஹ்ருதயத்துள்ளே நான் குடியிருக்க வாடகை என்ன தரவேண்டும்" என்பதை கேட்டுள்ளோம். யுவதியினிடம் இதைக் கேட்க அவள் சொலவது 'குமரிப் பெண்ணின் ஹருதயத்துள்ளே குடியிருக்க நீ உன் தாய் தந்தையை விடவேண்டும்' என்பது. இதனால் அவர்களை மதிக்காமல் என்னிடமே இருக்க வேண்டும். அவர்களை விட்டுவிடவேண்டும் என்பது ஏற்படுகிறது. இங்கு ஆழ்வார் சொல்வதை கவனிக்க வேண்டும். என்னிடத்தில் வஸிக்க ஆசைப் படுகிறாயே, இதற்கு காரணம் அவர்கள்தாநே. அவர்கள் மூலம் தானே நீ உண்டானாய். அவர்களை பெண்ணின் மனசில் ஆசை வைக்கும் காதலுனும் அவர்கள் பெற்றோரிடத்தில் அதிக ஆசை வைக்க வேண்டும் என்பது. வெள்ளத்தினங் கோயிலிருந்துதாநே உனக்கு ஆவிர்பாவம். அந்த பாலாலயத்தை நீ மறக்காமல் ஆதரவு காட்ட வேண்டும் என்பது ஸாரார்த்தம்.

*****

# 7. ஸாது தரிசனம்

இவ்வுலகில் புண்ணிய கர்மாக்களைப் பலர் செய்கின்றனர். சிலர் வேள்வி முதலிய ஸத்கர்மாக்களையே பிரதானமாகக் கருதி அநுஷ்டித்து வருகின்றனர். மற்றும் சிலர் குளம் வெட்டுவது, கோவில் கட்டுவது முதலியவற்றையே முக்கிய நோக்கத்துடன் செய்வர். இன்னும் சிலர் தீர்த்த யாத்திரையையே விசேஷ புண்ணியம் என்று எண்ணிச் செய்வர். ஏழை மக்களுக்குத் தம்மால் இயன்றவரையில் அன்னம், வஸ்திரம் முதலியவற்றைக் கொடுத்து உதவுவதாகிற தானமே பிரதான தர்மம் என்று எண்ணிச் சிலர் செய்வர். இப்படித் தானம் செய்பவர்களிலும், சிலர் ஆப்தர்களுடன் கல்யாணம் முதலிய உத்ஸவங்களுக்குச் சென்றால் தங்களுக்கு வெகுமதியாகக் கிடைத்திருக்கும் வஸ்திரம் முதலியவற்றை அங்கு வந்திருந்தும் யோக்கியதை இல்லாத காரணத்தினாலோ வேறு எதனாலோ கிடைக்காமற் போனவர்களுக்குத் தாங்கள் கொடுத்து ஸந்தோஷப்படுத்துவார்கள். சில மகான்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வைத்த பொருள்களை அவர்களுக்குக் கொடுக்கவொட்டாமல் தடுத்துத் தாங்களே பெற்றுக்கொள்ளும் சிலரையும் பார்த்திருக்கிறோம். அவர்களைப்பற்றி நாம் சிந்திக்கவே வேண்டாம்.

இன்னும் சிலர், எப்பொழுதும் பகவானையே நினைந்து நினைந்து உருகிக் கண்களிலிருந்து நீரைத் தாரைதாரையாகப் பெருக்கிக்கொண்டு அவனிடத்திலேயே ஈடுபட்டிருக்கும் ஸாதுக்களுடன் கலந்து பரிமாறியும், அவர்களை வணங்கியும், அவர்களுடைய கடாக்ஷத்தை அடைந்தும் இருப்பதே உயர்ந்த தர்மம் என்று எண்ணுவர். இப்படி எத்தனையோ ஸத்காரியங்கள் உலகில் உள்ளன. இவற்றுள் எந்தக் காரியம் உத்தமமான புண்ணியம் என்றால் கடைசியில் சொன்ன ஸாது தரிசனமே எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்தது. இதற்கு நிகர் எதுவுமே இல்லை. சீக்கிரத்தில் நினைத்த மாத்திரத்தில் பலனை அளிக்கக்கூடியது இதுவே. ஆயுள், ஆரோக்கியம், ஐசுவரியம், மோக்ஷம் முதலிய எல்லாப் பலன்களையும் இது அளிக்க வல்லது. ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் இது பிரஸித்தமானது.

கங்கை, கோதாவரி, யமுனை, ஸரஸ்வதி, காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் நீராடுவதனால் பாவங்கள் அனைத்தும் விலகும்; உயர்ந்த க்ஷேமமும் உண்டாகும். இவை வெறும் தண்ணீர்தாமே என்று நினைக்க வேண்டாம்; எல்லாம் புண்ணிய தீர்த்தங்கள். "கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடகிற்கும்" என்று கங்கையின் பெயரைச் சொன்ன மாத்திரத்தால் பாவங்கள் விலகிவிடும் என்று ஆழ்வார் பேசுகிறார். "எழுமையுங்கூடி ஈண்டிய பாவம் இறைப் பொழுதளவினில் எல்லாம் கழுவிடும் பெருமைக் கங்கை" என்றும் இதன் பெருமையைப் பரக்கப் பேசியிருக்கிறார். கங்கே சங்கேதியோ ப்ருயாத் யோஜனானாம் சதைரபி என்றது சாஸ்த்ரம். எத்தனையோ மைல் கணக்கில் வெகுதூரத்தில் இருந்தாலும் கங்கை என்று சொல்லி ஸ்நானம் செய்தால் அனைத்து பாவங்களும் ஒழிந்து விடுமாம். 'விஷ்ணுவாம் பாதி' என்றும் சொல்வது. "கங்கையிற் புனிதமாய் காவிரி" என்று காவிரியின் பெருமையை மிகச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

கோதாவரியைப்பற்றி ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், "கோதாவரீ ஜகதிதம் பயஸா புநீதே; யஸ்யாம் ஸமேத்ய ஸமயேஷு சிரம் நிவாஸாத் பாகீரதீப்ரப்ருதயோபி பவந்தி புண்யா:" என்று புகழ்கிறார். "எந்தக் கோதாவரி நதியில் ஸங்கமகாலத்தில் கங்கை முதலிய நதிகள் சேர்ந்து தங்களுடைய பாவங்களைப் போக்கிக்கொண்டு மற்றவர்களையும் பரிசுத்தமாக்கிப் புண்ணியங்களாகின்றனவோ அப்படிப்பட்ட கோதாவரி உலகத்தையெல்லாம்

பரிசுத்தமாக்குகிறது" என்றார். "தூய பெருநீர் யமுனை" என்று யமுனையை ஆண்டாளே ச்லாகித்திருக்கிறாள். இப்படி ஸ்நானம் செய்வதனால் பரிசுத்தமாக்கும் புண்ணிய தீர்த்தங்கள் இவை.

நம்முடைய கண்களினால் கண்ட மாத்திரத்தினாலேயே நம்மைச் சுத்தமாக்கும் ஸேது. "ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய ஸர்வபாபை: ப்ரமுச்யதே" என்று பெரியோர் கூறுவதுண்டு. "வ்யபஜ்யத ஸரித்பதி: ஸக்ருத் அவேக்ஷணாத் தத்க்ஷணாத், ப்ரக்ருஷ்டபஹுபாதகப்ரசமஹேதுநா ஸேதுநா," "எம்பெருமானின் தயை, எம்பெருமானை ராமனாகப் பிறக்கச் செய்து, ஸமுத்திரத்தை ஸேதுவைக் கொண்டு இரண்டாகப் பிரித்தது. ஸமுத்திரத்தின் நடுவில் அணையை (ஸேதுவை)க் கட்டினால் ஸமுத்திரம் இரண்டாகப் பிரியும் அல்லவா? அந்த அணை எப்படிப்பட்டது என்றால், ஒரு தடவை அதை நாம் கண்களால் பார்த்துவிட்டால், அதே க்ஷணத்தில், எத்தனையோ ஜன்மங்களில் நம்மால் செய்யப்பட்ட கொடுமையான பாவங்கள் அனைத்தையும் அழித்துவிடும்" என்று சொல்கிறார். திருப்புல்லாணி - விஷ்ணுவின் இடதுகால் கட்ட விறலிலிருந்து உண்டான கங்கையே! என்று ப்ரார்த்தித்து ஸ்நானம் செய்ய வேண்டும். அப்பொழுது எம்பெருமானிடத்தில் தடங்கலின்றி பக்தி உண்டாகும். மேலும் மோக்ஷமாகிற உன்னதமான பலனும் கிட்டும். ஆதி சங்கர பகவத்பாதர் இதன் பெருமையை இப்படியாகப் புகழ்ந்திருக்கிறார்.

திருப்புல்லாணியில் ஸமுத்ரஸநானம் விசேஷபலனைக் கொடுக்கும். 'அர்த்த ஸேது ஸ்நானம்' எனச் சொல்வர். இரண்டு முறை செய்தால் பூர்ண ஸ்நாநம். இது ஸுலப மானது.

ஆகையால் மேல்கூறிய தீர்த்தங்கள் எல்லாம் வெறும் தண்ணீர்மயம் என்று நினைக்கக் கூடாது, உத்தமமான புண்ணிய தீர்த்தங்கள்.

இப்படியே திருக்கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பெற்று, கண்டு வணங்கினவர் களுக்கு எல்லாப் பலன்களையும் அளிக்கும் தெய்வங்களை வெறுங் கல் மரம் செம்பு என்று நினைக்கக்கூடாது. "எவனொருவன் ஆசார்யனை நம்மைப் போல் ஒரு சாதாரண மனிதர்தாம் என்று எண்ணுகிறானோ, கோயில்களிலுள்ள எம்பெருமானை ஸாதாரணமான மரம் மண் கல் என்று எண்ணுகிறானோ அவன் உடனே அழிந்து விடுவான், நரகத்தையும் அடைவான்" என்று சாஸ்திரம் கூறுகிறது.

கோயில்களிலுள்ள எம்பெருமான் எந்த உபாதான த்ரவ்யத்தால் செய்யப்பட்டான் (அதாவது மரம், கல், சுண்ணாம்பு, செம்பு) என்று ஆராய்ச்சி செய்வது 'மாத்ரு யோநிபரீக்ஷாதுல்யம்' என்று பெரியோர் பணிப்பர். ஆகையால் தீர்த்தங்களும் புண்ணிய தீர்த்தங்கள்; கோயில்களில் அர்ச்சையில் எழுந்தருளியிருப்பவனும் எம்பெருமானே. இதில் ஐயம் இல்லை. இந்தப் புண்ணிய தீர்த்தங்களும் எம்பெருமானும் நம்முடைய பாவங்களைப் போக்கி, க்ஷேமங்களைக் கொடுப்பது வாஸ்தவம். ஆனால் உடனடியாக இதைச் செய்வதில்லை. ஸாதுக்களின் தரிசனமோ அடுத்த க்ஷணமே நம்மைப் பரிசுத்தமாக்கிவிடும்; எல்லாப் பலனையும் கொடுக்கும். அப்படிப்பட்ட பெருமை பெற்றது ஸாது தரிசனம். இவ்விஷயத்தில் பெரியோர் பரம்பரையாகக் கூறியுள்ள ஒரு புராணக் கதையை இங்கு எடுத்துக் காட்டுகிறோம்.

ஓர் ஊரில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் கல்வி அனைத்தும் கற்றவர்; புராணங்களை பயின்றவர்; ஒழுக்கத்துடன் இருப்பவர்; நல்ல காரியங்களைச் செய்பவர்; பெரிய பணக்காரர்.

அவர் தமது செல்வத்துக்குத் தகுந்தாற்போல் பெரிய மடம் கட்டி அங்கே சிஷ்யர்களுக்கு ஆஹார ஸௌகரியங்களைச் செய்து வைத்து வேதம் முதலியவற்றைக் கற்றுக் கொடுத்தார். ஆங்காங்கு அன்னசாலைகளை ஏற்படுத்திப் பசியுடன் வந்தவர்களுக்கு அன்னதானமிடச் செய்தார். ஏழை மக்களுக்கு வஸ்திரம் முதலியவற்றைக் கொடுத்து உதவி செய்தார். பல இடங்களில் யாகம் முதலயவற்றைச் செய்து வைத்தார். தாமும் தம்மால் இயன்றவரை தமக்கு உசிதமான வேள்விகளைச் செய்து வந்தார். பல திவ்யதேசங்களில் கோவில்களைக் கட்டினார். பல இடங்களில் தடாகங்கள் முதலியன வெட்டித் தீர்த்தஸௌகரியம் செய்து வைத்தார். இப்படிப் பல நல்ல காரியங்களைச் செய்து வந்தபோதிலும் ஒரு நாள் இரவு இவர் மனத்தில் ஏதோ ஒரு எண்ணம் உண்டாயிற்று; அதாவது - 'வேதம், ஸ்ம்ருதி முதலியவற்றில் எத்தனையோ நல்ல காரியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை நாம் செய்துகொண்டுதான் வருகிறோம். ஆனாலும் இந்த நற்காரியங்களில் எது பிரதானம், உத்தமம்? இதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்' என்று.

காலை எழுந்தவுடன் ஒரு ஸபையை ஏற்படுத்தி அதன் மூலமாக அறிய முயன்றார். அந்த ஸபையில் வந்த பெரியோர்கள் அவர்வர்களுக்குத் தெரிந்த வரையில் சாஸ்திரங்களைக் கொண்டு எதை எதையோ சொன்னார்கள். இவர் திருப்தியடையவில்லை. சில நாள் கழிந்த பிறகு ஒரு குளத்தில் வழக்கம்போல் ஸ்நானம் முதலியவற்றைச் செய்து வீட்டுக்கு வரக் கிளம்பினார். அப்பொழுது நாரத மகரிஷி அங்கு வந்து இவரைப் பார்த்து, "நீர் ஏதோ மனக்கலக்கத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. அது என்னவென்று சொன்னால் அந்தக் கலக்கத்தைப் போக்கடிக்கலாம்" என்றார். உடனே இந்த அந்தணர் தம் மனத்திலிருக்கும் ஸந்தேஹத்தை எடுத்துரைத்தார். நாரதர் இதைக் கேட்டு, 'நாம் சொல்வதால் மாத்திரம் இவரது ஸந்தேஹம் தீராது' என்று எண்ணி, இவரைப் பார்த்து, "நான் ஒன்று சொல்லுகிறேன்; அதன்படி செய்தால் உம்முடைய ஐயம் தீரும்" என்றார். இதைக் கேட்ட அந்தணர், "அப்படியே செய்கிறேன்" என்று இசைந்தார்.

"அந்தணரே! இங்கிருந்து பத்து மைலுக்கு அப்பால் தெற்கே ஒரு மலை இருக்கிறது. அங்கு ஒரு தவளை வசிக்கிறது. அதைச் சீக்கிரத்தில் அணுகிக் கேட்டால் விடை கிடைக்கும்" என்றார் நாரதர். இதைக் கேட்டதும் அந்தணர் பரபரப்புடன் அந்த மலைக்குச் சென்று அந்தத் தவளையைக் கண்டுபிடித்தார். தவளை இவரைக் கண்டு ஸமீபத்தில் வந்து பேச ஆரம்பித்தது. இவருக்கு அடக்க முடியாத ஸந்தோஷம். இந்த ஸமயம் எதிர்பாராமல் அந்தத் தவளையை ஒரு மலைப் பாம்பு வந்து விழுங்கிவிட்டது. ஐயோ பாவம்! இவர் என்ன செய்வார்? மறுமடியும் நாரதர் இருக்குமிடம் வந்து நடந்ததைச் சொன்னார்.

நாரதரும், "தவளை போனால் போகட்டும். ஐந்து மைலுக்கு அப்புறம் ஓர் ஆலமரம் இருக்கிறது. அதில் கிளிக்குஞ்சு ஒன்று வசிக்கும். அதை அணுகிக் கேளும்" என்றார். அந்தணர் ஆலமரத்தினிடம் சென்று கிளிக்குஞ்சைப் பார்த்தார். கிளிக்குஞ்சு பேச ஆரம்பித்து, இவர் இருக்கும் பக்கம் திரும்பி வர முயன்றது. அப்போது அது பிடி தவறிக் கீழே விழுந்து ஒரு நாயால் கொல்லப்பட்டு இறந்துவிட்டது. அந்தணர் மறுபடி நாரதரிடம் வந்து நடந்ததைச் சொன்னார். அவர், "சரி, இங்கே அருகிலிருக்கும் குன்றின் பக்கத்தில் பசு ஒன்று கன்றுடன் இருக்கிறது. அந்தக் கன்றைக் கேளும்" என்றார். இவரும் ஓடினார். அந்தக் கன்றைப் பார்த்துக் கேட்கவும் கேட்டார். அந்தக் கன்று ஏதோ சொல்ல ஆரம்பித்தபோது திடீரென்று ஒரு புலி பாய்ந்து கன்றைத் தின்றுவிட்டது. இவர் பயந்து ஓடி வந்து நாரதரிடம் சொன்னார்.
நாரதர், "இதுதான் கடைசித் தடவை. இதைச் செய்துவிடும். வடக்கே ஓர் அரசன் இருக்கிறான்.

அவனுடைய பத்தினி பத்து மாதம் கர்ப்பவதியாக இருக்கிறாள். நீர் அங்கே போகும்போது அவள் குழந்தையைப் பெற்றெடுப்பாள். அந்தக் குழந்தையைத் தங்கத் தட்டில், பிறக்கும் போது ஏந்தும்படி செய்து அந்தக் குழந்தையை நீர் கேட்டால் உமது ஸந்தேஹம் நீங்கிவிடும்" என்றார்.

இதைக் கேட்டதும் அந்தணர், "எனக்கு ஸந்தேஹமும் போக வேண்டாம். நானும் அங்கே போக வேண்டாம். நான் மூன்று இடங்களில் சென்றபோதும் ஆங்காங்கே அவற்றுக்கு ஆபத்து ஏற்பட்டது. இங்கும் ஏதாவது அம்மாதிரி நடந்தால் அரசன் என் தலையை வெட்டிவிடுவான்" என்றார்,

நாரதர், இதைக் கேட்டதும் புன்னகை புரிந்து, "நீர் பயப்பட வேண்டாம். தைரியமாகச் செல்லும்" என்று ஆசீர்வதித்தார். அந்தணர் அவரது ஆசீர்வாததைப் பெற்றுக்கொண்டு அவ்வரசனிடம் சென்று, தங்கத் தட்டில் அந்தக் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்றார். அரசன் ஆச்சரியப்பட்டு அவ்விதமே செய்தான். பிறகு இவர் குழந்தையைப் பார்த்துப் பேசத் தொடங்கினார். குழந்தை சிரித்துக் கொண்டு தலையில் கையைக் குவித்து நமஸ்கரித்து, "உம்மை நாரதர்தாமே அனுப்பினார்?" என்று கேட்டு, "இன்னமும் உமக்கு விடை ஏற்படவில்லையா?" என்றது.

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!" என்றார் அந்தணர்.

"தவளையாகவும் கிளிக்குஞ்சாகவும் பசுங்கன்றாகவும் இப்போது குழந்தையாகவும் இருப்பது நான்தான். ஸாதுவான உம்முடைய தரிசனம்தான் படிப்படியாக என்னை உயர்ந்த பிறவியை அடையும்படி செய்தது. உம்முடைய தரிசனம் எனக்கு உண்டாகாமலிருந்திருந்தால் தவளையாகவே எத்தனையோ வருஷம் இருக்க வேண்டியதாக இருக்கும். இந்த க்ஷத்திரிய வம்சத்துக் குழந்தையாகப் பிறந்திருக்க நேரிடாது. உங்களுடைய அநுக்கிரகத்தால் தீர்க்கமான ஆயுள், ஆரோக்கியம், ஐசுவரியம் இவற்றைப் பெற்றுச் சக்கரவர்த்தி பதவியில் இருக்கப் பொகிறேன். மேலும், வேதமோதும் பிராம்மண குலத்தில் பிறந்து நித்யகர்மாநுஷ்டானங்களை விடாமல் சரிவரச் செய்து உயர்ந்த ஆசார்ய ஸம்பந்தத்தைப் பெறப்போகிறேன். அதன் மூலமாக நற்கதியைப் பெற்றுப் பரம நிஸ்ரேயஸமான மோக்ஷத்தையும் அடையப் போகிறேன். ஆகையால் எல்லா ஸத்காரியங்களைக் காட்டிலும் 'ஸாது தரிசனம்' என்னும் ஸத்காரியமே உத்தமமானது. இதைத்தான் நாரத மகரிஷி செய்கையிலே காட்ட விரும்பி இம்மாதிரி ஏற்படுத்தினார்" என்று சொல்லித் தங்கத் தட்டிலிருந்து கீழே விழுந்து 'க்வா, க்வா,' என்று அழ ஆரம்பித்துவிட்டது. அனைவரும் ஆச்சரியப்பட்டனர். அந்தணர் ஸந்தேஹம் தெளிந்து தமது இருப்பிடம் வந்து சேர்ந்தார்.

மேலும் ஆளவந்தார் தனது ஸ்தோத்ர ரத்னத்தில் 'மஹாத்மபிர்மாம் அவலோக்யதாம் நய' என்றார். அதாவது 'எம்பெருமானே தேவரீர் இதை செய்தால் போதும். மஹாத்மாக்களான ஸாதுக்கள் என்னைக் குளிர கடாக்ஷிக்க வேண்டும். இந்த அநுக்ரஹமே போதும் என்று. இதனால் சாது தரிஸனம் மிகைப்படுத்தப்பட்டது.

முக்யமான விஷயம் ஒன்று கேண்மின். சபரி இராமனைப் பார்த்துச் சொல்லுகிறாள். "சக்ஷுஷா தவ ஸௌம்யேன பூதாஸ்மி ரகுநந்தன" என்று. எவன் ராமனைப் பார்க்கவில்லையோ, எவனை இராமன் பார்க்கவில்லையோ, அவ்விருவருடைய பிறப்பு பயனற்றது. தன்னைத்தானும் நிந்தித்துக் கொள்வான் என்பது ராமாயணம். ஆக எனக்கு உன் தர்சனமும் கிடைத்தது. நீயும்

என்னை குளிர கடாக்ஷித்தாய். ஆகையால் நான் பாவங்களிலிருந்து விடுபட்டு ப்ரஹ்மலோகத்தை அடைகிறேன் என்றாள். இப்படி உன் தர்சனத்துக்குக் காரணம் மஹான்களை ஸந்தித்து அவர்களுக்கு பணிவிடை செய்தது தான். 'யானஹம் பர்யசாரிஷம்' என்றாள் அவர்களது தர்ஸனமும் பணிவிடையும் வீணாகாது. மிக உயர்ந்த பலத்தை கொடுத்தே தீரும். ஸ்வாமி தேசிகனும் ரகுவீரகத்யத்தில் "அவன்த்ய மஹ்ம" என்கிற சூர்ணிகையால் சொன்னார். ஆக உனது தர்சனம் மஹான்களுடைய பரிசர்யயால் ஏற்பட்டது. உன்னத பலத்தைக் கொடுக்கும் திறமையும் பெற்றது என்பது.

ஸம்பாஷா தர்சனம் ஸ்பர்ச: கீர்த்தனம் ஸ்மரணம் நதி: பாவனானி கிலைதானி ஸாதூநாம் இதிசுச்ரும. ஸேவ்யா: ச்ரேயோசர்திபி: ஸந்த: புண்ய தீர்த்த பலோபமா: க்ஷணோபாஸந யோ । கோபி நதேஷாம் நிஷ்பலோ பவேத் । ஸாதுநாம் தர்சனம் புண்யம் தீர்தபூதா: ஹிஸாதவ:" காலேன பலதம் தீர்தம் ஸத்ய: ஸாது ஸமாகம:.

'ஸாதுக்களை பார்ப்பது தொடுவது சொல்வது ஸ்மரிப்பது வணங்குவது, இவை பரிசுத்தியைக் கொடுக்கும். ஸ்ரேயஸ்ஸை விரும்பும் மனிதன். க்ஷண காலமாவது ஸாதுக்களுடன் சேரவேண்டும். அது நிஷ்டலமாகாது. சீக்ரத்தில் பலம் கொடுக்கவல்லது' என்று புராணம். சேர்ந்தால் ஸாதுக்களுடன் சேரவேண்டும்; இவர்களுடன் சண்டை செய்தாலும் நன்மையைக் கொடுக்கும். வஸிஷ்டருடன் விவாதம் செய்த விச்வாமித்ரர் ப்ரஹ்மரிஷியானார் என்பதைக் கேட்டுள்ளோம். மூடர்களுடன் சேர்க்கை நற்புத்தி பெற்றவனையும் கெடுத்து விடும். ஸுவர்ணமலையை ஆச்ரயித்த கருப்பான பக்ஷியும் ஸ்வர்ணமாக மாறிவிடுகிறது. ஆக அவர்களுடன் வாஸம் செய்ய வேண்டும்.

மஹான்களுடைய வீட்டில் புழு ஜன்மம் எடுத்தாலும் உயர்ந்தது. தனிகனுடைய வீட்டில் ஸ்ரீமானாக பிறப்பும் வேண்டாம் என்றார் ஆளவந்தார். எனவே மனிதனோ பக்ஷியோ எவனாக இருந்தாலும் வைஷ்ணவ ஸம்பந்தமிருந்தால் நல்ல கதியை அடைவான் என்கிற சாஸ்த்திரத்தை நோக்க வேண்டும்.

ஜலத்தின் சேர்க்கையால் எவ்வாறு மண் கட்டி கறைந்து விடுகிறதோ அதே போலத்தான் அஸத் புருஷர்களுடன் தர்சனம் ஸ்பர்சனம் சேர்க்கை ஸம்பாஷணம் முதலியவை நம்முடைய தர்மத்தையும் ஆசாரத்தையும் அழித்துவிடும்.

'உள் ஆசாரமில்லாமல் கேவலம் ஜடை பவித்ரமாலை முதலியவைகளை மாத்திரம் தரித்தும் யக்ஞோபவீதம், பவித்ரம் இருகையிலும் தரித்து வேஷதாரிகளான அஸத்துக்களுடன் சேர்வதும், பித்ருதர்பணம் ச்ராத்தம் முதலிய செய்ய வேண்டிய கடமைகளை செய்யாதவனும் எவனோ அவனுடன் சேர்வதால் நரகம்தான் வரும் என்றது நீதி.

"தல சயனத்துறைகின்ற ஞானத்தின் ஒளி உருவை நினைவார் என் நாயகரே", 'நச்சித்தொழுவாரை நச்சென்றன் நன் நஞ்சே', என்றும் பாகவத சேர்கையை திருமங்கை யாழ்வார் கூறினார்.

குலசேகரப் பெருமாளும் இதை வலியுருத்தினார். அயர் வெய்தும் மெய்யடியார்கள் தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண் பயனாவதே என்றார். இங்கு பதிகத்தில் பாகவதப் பெருமையும் அவர்களின் சேர்கைப் பெருமையும் நன்கு அனுபவிக்கப்பட்டுள்ளது.

# 8. வேதம் ஓதுதல்

உலகத்தில் அந்தணராகப் பிறந்த யாவரும் வேதாத்யயனம் அவசியம் செய்ய வேண்டும். வேதம் ஓதுவதுதான் இவர்களுக்கு முக்கியமான தர்மம். எத்தனையோ வைதீக தர்மங்களை இவர்கள் அநுஷ்டித்தபோதிலும் அதனால் எம்பெருமானுக்கு உகப்பு அவ்வளவு ஏற்படாது. வேதம் ஓதுவதனால்தான் அவன் திருப்தி பெறுவான். 'வேதத்தை அத்யயம் செய்யாமலிருக்கும் அந்தணர் வ்ராத்யர்களாக ஆகிவிடுகின்றர்' என்று பெரியோர் கூறுவர். இவர் இருபிறப்பாளன் (த்விஜந்மா) ஆனபடியால் வேதம் ஓதுவதனால்தான் இவனுக்கு த்விஜந்மத்வம் ஸபலமாகிறது.

இக்காலத்தில் எல்லா அந்தணர்களாலும் வேதம் முழுவதும் அத்யயனம் பண்ண முடியவில்லை. ஆனாலும் உபயுத்தமான புருஷஸூக்தம், உபநிஷத் பாகம் முதலியவற்றை இவர்கள் ஓதுகிறபடியால் அவ்வழியால் அது நிலைக்கிறது. இதையும் அத்யயனம் செய்யாமல் எத்தனையோ ப்ராம்மணர்கள் இருக்கிறார்களே என்றால் அவர்களும் ஸந்தியாவந்தனத்தையும் காயத்ரீயையும் விடாமல் ச்ரத்தையுடன் செய்கிறபடியால் அவர்களும் கடைத்தேறி விடுவார்கள். இதையும் செய்யாதவர்களுக்கு எதையும் சொல்ல முடியாது.

வேதாத்யயனம் செய்த அந்தணர்களினால்தான் உலகமே ஸுபிக்ஷமடைகிறது. "வேதமோதிய அந்தணரக்கோர் மழை" என்ற ரீதியில் இவர்களால்தான் மழையே பெய்கிறது. ஆகையால்தான் பழங்கால அரசர்கள் எல்லாருமே பிராமணர்களுக்கு இருப்பிடம், உணவு முதலிய எல்லா சௌகரியங்களையும் செய்து வைத்து, வேதம், சாஸ்திரங்கள் முதலிய எல்லாவற்றையும் கற்கும்படியும் கற்பிக்கும்படியும் ஏற்பாடு செய்து வைத்திருந்தனர்.

தசரத சக்கரவர்த்தி நீதி தவாறாமல் அறுபதினாயிரம் ஆண்டு அயோத்தியை ஆண்டு வந்தார். அவருடைய ராஜ்யம் ஸுபிக்ஷமாக இருந்தது. குடிமக்களை - விசேஷமாகப் பிராமணர்களை - அவர் ஆதரித்து வந்தார். அவருக்குப் பிள்ளைப்பேறு இல்லாததனால், தமக்குப் பிறகு ராஜ்யத்தை ஆள்பவர் யாரும் இல்லையே; அந்தணர்களை ஆதரிப்பவர் யார்? அவர்கள் வருந்துவார்களே என்றுதான் வருத்தமடைகிறார். இதைக் கம்பர் மிகவும் அழகாகக் கூறுகிறார்:-

> அருந்தவ முனிவரும் அந்த ணாளரும்
> வருந்துத லின்றியே வாழ்வில் வைகினார்,
> இருந்துயர் உழக்குவர் என்பின் என்பதோர்
> அருந்துயர் வருத்தும்என் அகத்தை என்றனன்.

ஆகையால் பிராமணர்களுக்கு அரசர்களின் ஆதரவு வேண்டும். இவர்கள் வேதத்தைக் கசடற ஓத வேண்டும். நாடு ஸுபிக்ஷம் அடைய வேண்டும்.

பெரியாழ்வாரும், "இருக் கெஜுச் சாம வேத நாண்மலர்கொண்டு உனபாதம் நண்ணாநாள் அவை தத்துறுமாகில் அன்று எனக்கவை பட்டினி நாளே" என்று, ரிக் யஜுஸ் ஸாமம் என்ற வேதங்களாகிய புஷ்பங்களைக் கொண்டு பகவானைத் தினமும் அர்ச்சிக்க வேண்டும் என்கிறார். ஆகையால்தான், 'வேதம் பிராமணர்களின் தனம்' என்று பெரியோர் கூறுவர்.

வேதத்தை அத்யயனம் செய்யும்போது முதலிலும் முடிவிலும் (முன்னும் பின்னும்) அவசியம் பிரணவத்தைச் சொல்ல வேண்டும். அதுதான் எங்கும் வழக்கம். எதற்காக என்றால்,

பிரணவத்திலுள்ள முதல் எழுத்தான அகாரத்தால் பகவான் சொல்லப் பெறுகிறான். அந்த பகவான்தான் எல்லா வேதங்களாலும் சொல்லப் பெறுகிறான் என்பதைக் குறிப்பதற்காக. உலகத்திலும் ஒருவனுடைய நிலம், வீடு முதலிய உடைமைகளைச் சுட்டிக் காட்டும்போது இவை இவனுடையச் சொத்துக்கள்; இவ்வளவு விஸ்தீர்ணம் உள்ளவை என்பதை இரண்டு (நாலு) பக்கங்களிலும் எல்லை (ஸர்வே)க் கற்களை நாட்டியுள்ளதைப் பார்த்துத்தானே நிச்சயம் செய்கிறோம்? அதுபோல் எல்லா வேதமும் பகவானுடைய சொத்து; அதாவது எல்லா வேதங்களாலும் சொல்லப்பெறுகிறவன் பகவான் என்பதைக் காட்டுவதற்காகவே ஆரம்பத்திலும் முடிவிலும் 'ஹரி: ஓம்' என்று சொல்லுகிறோம். அங்கும் ஓம் என்னும் பிரணவத்தால் ஹரி: அதாவது பகவான்தான் சொல்லப் பெறுகிறான் என்பதைக் குறிப்பதற்காகவே 'ஹரி: ஓம்' என்று சொல்வது.

இதையேதான், 'யத் வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித:| தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய; பர: ஸ மஹேச்வர: ||' என்று பெரியோர் சொல்லுவர். செப்பிலே கிடந்த ஆபரணத்தை வாங்கிப் பூண்டு, பின்னையும் அவ்வாபரணத்தை வாங்கிச் செப்புக்குள்ளே இட்டுவைக்குமாப் போலே, ஆத்யந்த பீஜமாக இருக்கிறது யாதொன்று, அது தன்னுடைய ப்ரக்ருதியிலே லீனமாயிருக்கிறது அகாரம், அது ரக்ஷகனைக் காட்டுவது" என்று இதன் அர்த்தத்தைப் பெரியோர் மிகவும் அழகிய ரீதியிலே காட்டியுள்ளனர்.

அதாவது - இக்காலத்தில் ஆபரணங்களைப் பெட்டியில் வைப்பது போல் முற்காலத்தில் செப்பில் (கலசத்தில்) வைப்பது வழக்கம். அந்த ஆபரணத்தை உடலில் தரிக்கும்போது செப்பிலிருந்து எடுத்துப் பூணுவதும், வேண்டாத ஸமயத்தில் உடலிலிருந்து எடுத்து அந்த செப்பிலேயே வைப்பதும் வழக்கம். அதைப் போல வேதோச்சாரணத்துக்கு ஆத்யந்த பீஜமாக இருக்கிறது பிரணவம். அதிலுள்ள அகாரம் பரமாத்மாவைச் சொல்லுகிறது. அவன் (பரமாத்மா) உயர்ந்த ரத்தினம். பிரணவம் என்பது கலசம். கலசத்தில் ரத்தினம் இருப்பது போல பிரணவத்தில் பகவான் இருக்கிறான். கலசத்திலிருந்து ஆபரணத்தை (ரத்தினத்தை) வெளிப்படுத்துவது போல் பிரணவத்தில் இருக்கும் பரமாத்மாவை வேதோச்சாரணம் மூலம் வெளிப்படுத்துகிறோம். ஆபரணத்தைப் பூண்டபிறகு மறுபடியும் கலசத்தில் வைப்பது போல வேதோச்சாரணத்தால் வெளிவந்த பகவானை மறுபடியும் பிரணவத்தில் வைப்பதற்காக முடிவிலும் பிரணவத்தைச் சொல்லுகிறோம். கலசத்தைத் திறப்பது, மூடுவது என்று இரண்டு வியாபாரங்கள் உண்டு. அதேபோல் இங்கும் காட்டுவதற்காகவே பிரணவத்தை ஆரம்பத்திலும் முடிவிலும் ஸ்வரபேதத்துடன் சொல்லுகிறோம். ஆகையால் பகவானைச் சொல்லுகிற அகாரத்தை உள்ளே அடக்கி வைத்துள்ள பிரணவத்தை வேதத்தின் ஆதியிலும் அந்தத்திலும் சொல்லுகிறபடியால் எல்லா வேதங்களும் பகவானையே சொல்லுகின்றன என்று ஏற்படுகிறது.

எங்கும் வேதாத்யயனம் செய்யும்போது ஆரம்பத்திலும் முடிவிலும் வேறு தேவதைகளைக் குறிக்கும் சொற்களைச் சொல்லி ஆரம்பிப்பதில்லை. உதாரணமாக, 'ஹர: ஓம், நமச்சிவாய' என்றோ, வேறு விதமாகவோ ஆரம்பிப்பதும் முடிப்பதுமில்லை. ஆகையால்தான் எல்லா வேதங்களும் 'ஹரி:' என்ற எம்பெருமானையே சொல்லுகின்றன என்று ஏற்பட்டது. நடுவில் வேதங்களில் அநேக இடங்களில் தேவதாந்தரங்களைக் குறிக்கும் சொற்கள் இருந்தபோதிலும், அந்தச் சொற்களும் அந்த அந்தத் தேவதைகளுக்கு அந்தர்யாமியான பகவானை (ஹரியை)க் குறிப்பதில்தான் நோக்கு உடையவை. எல்லா தேவதைகளும் பகவானுக்குக் கைகால் முதலிய அவயங்களாக இருக்கிறபடியால் அந்த அந்த அவயங்களோடு கூடின அவயவியான சரீரியான பகவான்தான் அந்தச் சொற்களின் தாத்பர்யபூதன் என்று சொல்ல வேண்டும். ஆகையால்தான்,

'ஸர்வே வேதா யத்பத மாமநந்தி' என்று சாஸ்திரமும் கூறுகிறது.

வேதாக்ஷராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி : ।
தாவந்தி ஹரிநாமாநி கீர்த்திதாநி ந ஸம்சய : ॥

என்றல்லவோ ப்ரமாணம் உள்ளது? 'வேதங்களிலுள்ள ஒவ்வொரு பதமும் பகவானைச் சொல்லுகிறது என்பது மாத்திரமல்ல; ஒவ்வோர் அக்ஷரமும் பகவானையே கூறுகிறது' என்றால், எல்லா வேதங்களும் பகவானைக் குறிக்கின்றனவா இல்லையா என்ற ஸந்தேஹம் எப்படி எழும்?

இப்படி வேதத்திலுள்ள ஒவ்வோர் அக்ஷரமும் பகவானைச் சொல்லுகிறபடியால் ஒரு தடவை வேதத்தைப் பூர்ணமாக உச்சரித்தால் எத்தனையோ தடவை ஹரிநாமத்தைச் சொல்லுவதுபோல ஆகிறது. இவ்வளவு மகிமை அடைந்தபடியால் தான், 'வேதாத்யயனம் அவசியம் செய்ய வேண்டும்; இதையே ஜபிக்க வேண்டும்' என்று பிரமாணம் கூறுகிறது :-

வேதமேவ ஜபேந் நித்யம் யதாகாலம் அதந்த்ரித: ।
ந ஹ்யஸ்யாஹு: பரம் தர்மம் உபதர்மோந்ய உச்யதே ॥

"இதற்கு (வேதாத்யயனத்துக்கு) ஸமமானதும் உயர்நததுமான தர்மம் கிடையாது; மற்றவை யாவும் தாழ்ந்தவையே." இப்படி எல்லா வேத அக்ஷரங்களும் பகவானையே சொல்லுகிறபடியால்தான் வேதாத்யயனம் முக்கிய தர்மமாயிற்று. மற்றத் தேவதைகளெல்லாம் பகவானுடைய அவயங்களானபடியால் அவர்களைச் சரீரமாக உடைய பகவான்தான் முக்கிய அவயவி. அங்காநி அந்யா: தேவதா: என்பதை வேதமே கூறுகிறது. ஆகையால்தான் ஸ்ரீ மத் ராமாயணத்தில், யுத்தகாண்டத்தில், ஸீதாதேவியின் அக்னிப் பிரவேச காலத்தில் எல்லாத் தேவதைகளுடன் கூடிய பிரம்மா ஸ்ரீராமனை ஸ்தோத்ரம் செய்தபோது,

அஹம் தே ஹ்ருதயம் ராம! ஜிஹ்வா தேவீ ஸரஸ்வதீ என்று, தாம் ஸ்ரீராமனுடைய ஹ்ருதயமாகவும் தம் பத்தினியான ஸரஸ்வதி தேவி நாக்காகவும் ஆவதாகக் கூறி புகழ்ந்தார். பரமசிவனும் பரமாத்மாவைப் பார்த்து, "தேவரீருக்குக் கேசவன் என்ற பெயர் வந்த காரணம், 'க' என்று சொல்லப்பெறுகிற பிரம்மாவும், 'ஈஸ்' என்று சொல்லப் பெறுகிற ஸர்வதேஹிகளுக்கும் ஈச்வரனான நானும் தேவருடைய அவயத்திலிருந்து உண்டானபடியால் தேவரீருக்கு 'கேசவன்' என்ற திருநாமம் உண்டாயிற்று" என்று கேசவ என்ற அக்ஷரங்களைக் கொண்டே ஸ்தோத்ரம் செய்தார். ஆகையால் இவ்வளவு மகிமை பெற்ற வேதத்தை அவசியம் அத்யயனம் செய்யவேண்டும்; அதுவும் காலத்தில் முறை தவறாமல் சோம்பலின்றிச் செய்வது உத்தமம்.

ச்ராவண்யாம் ப்ரோஷ்டபத்யாம் வா உபாக்ருத்ய யதா விதி
யுக்தஸ் சந்தாமஸி அதீயீத மாஸாந் விப்ர: அர்தபஞ்சமாந்

ச்ராவணம் தொடங்கி நாலரை மாதம் வேதாத்யயனத்துக்கு ஏற்பட்ட காலம். இந்த நாலரை மாதங்களில்தான் ஆசார்யரிடமிருந்து நியமத்துடன் மாணவன் வேதத்தைக் கற்க வேண்டும். மீதி மாதங்களில், ஆசார்யனிடமிருந்து கற்ற வேதத்தை த்ருடப்படுத்த உருச் சொல்ல வேண்டும். சுக்லபக்ஷத்தில் வேதங்களையும், கிருஷ்ணபக்ஷத்தில் வேதாங்கங்களையும் ஓத வேண்டும். இது சாஸ்திர மரியாதை.

அத ஊர்த்வம் து சந்தாமஸி சுக்லேஷு நியத: படேத் ।
வேதாங்காநி ச ஸர்வாணி க்ருஷ்ணபக்ஷேஷு ஸம்படேத் ॥

என்பது, கீழ்க் கூறிய விஷயத்தில் பிராமண வசனம்.

இம்மாதிரி சாஸ்திர மரியாதையை மீறாமல், நியமத்துடன் ஸதாசார்யனிடமிருந்து சரியான வயதில் உபநயன ஸம்ஸ்காரம் பெற்று வேதத்தைக் கற்றுக்கொண்டால் அந்த வேதத்தின் மூலமாக எல்லாப் பலன்களையும் ஸாதித்துக்கொள்ளலாம். நியமம் தவறிச் செய்தால் சரிவரப் பயனைக் கொடுக்காது. அது வேதத்தின் குற்றமன்று; நியமம் தவறிச் செய்த இவனுடைய குற்றம்.

ஒரு நோயாளி. தலை வலியும் உதரவலியும் அவருக்கு. டாக்டரிடம் சென்றார் அவர். டாக்டரும் மாத்திரைகளைக் கொடுத்து சாப்பிடு, தீரும் என்றார். நோயாளி பார்த்தான். என் இதை சாப்பிடவேண்டும். தலைவலி, உதரவலிதானே. இதற்காக பொடி செய்து தலையிலேயும் உதரத்திலேயும் தேய்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணி பொடி செய்து தேய்த்துக் கொண்டார். இப்படி செய்ததால் அந்த நோய் எப்படி நீங்கும்? நீங்கவில்லை. மறுபடியும் டாக்டரிடம் அணுகி உம்முடைய மருந்தால் குணமாகவில்லை என்றார். அவர் சொன்னது ஒரு நியமம். செய்தது வேறு வழி. அது எப்படி குணம் ஏற்படும். எதற்கும் வழி தவரக் கூடாது என்று மறுபடி மாத்திரை கொடுத்தார். இவர் அப்படியே செய்தார். குணமும் ஏற்பட்டது. ஆக எதிலும் நியமும் வேண்டும். புஸ்தகங்களைப் பார்த்து மந்தரங்களை தெரிந்து கொண்டாலும் பயன் ஏற்படாது நன்கு இதை யோசிக்கவும்.

உலகத்திலும் எல்லா வியாபாரங்களிலும் இப்படித்தானே? அததற்கு ஏற்பட்ட வழிமுறைகளைத் தவறிச் செய்தால் பயன் ஏற்படாது என்பது தெரிந்ததுதானே? யாகங்களிலும் செய்ய வேண்டிய வழியைத் தவறிச் செய்தால் பலன் ஏற்படாது அல்லவா? 'இந்த்ரசத்ரூர் வர்தஸ்வ' என்பதில் ஸ்வரபேதம் எற்பட்டு வேறு விதமாக முடிந்தது யாவரும் அறிந்ததே. யாகங்களில் ஒழுக்கம் தவறி நடந்ததனால் ப்ரஹ்மராக்ஷஸனாகப் பிறக்கிறான் என்பதையும் கேட்டிருக்கிறோம். ஆகையால் ஸ்வரத்திலும் மாறுதல் இருக்கக்கூடாது; ஒழுக்கத்திலும் மாறுதல் இருக்கக்கூடாது.

ஒழுக்கத்துடனும் முறையுடனும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பதற்குப் பெரியோர் ஒரு கதை கூறுவர் :-

ஓர் ஊரில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் நல்ல வைதிகர், அநுஷ்டான சீலர், எல்லாக் கல்விகளையும் கற்றவர், எல்லா வேதங்களையும் நன்கு அத்யயனம் செய்தவர்; பகவராதனம் செய்யாமல் சாப்பிடமாட்டார்; குழாய் ஜலத்தை அநுஷ்டானத்துக்கு உபயோகப்படுத்தமாட்டார்; கிணறு குளம் நதி முதலியவற்றிலதான் அவகாஹன (அமிழ்ந்து) ஸ்நானம் செய்வார். ஒரு ஸமயம் இவர் திவ்ய தேச யாத்திரையாக வடதேசம் சென்றார். பெரும்பாலும் எல்லா இடங்களிலும் இவரது அநுஷ்டானத்துக்குத் தகுந்தபடி நதி குளம் கிணறு முதலியவை கிடைத்தன. தற்செயலாக ஓர் இடம் சென்றபோது குழாய்ஜலம் தவிர வேறு தீர்த்தம் கிடைக்கவில்லை. அங்கே பத்து மைல் குழாய் ஜலம்தான்; வேறு தண்ணீர் கிடையாது. இவருக்கு அவசரமாகச் சுத்தஜலம் தேவை இருந்தது. எல்லா இடத்திலும் சுற்றிப் பார்த்தார்; கிடைக்கவில்லை.

அங்கு மகா தேஜஸ்வியாயும் ரிஷிகளைப் போன்றவருமான ஒரு மகானைப் பார்த்தார்; அவரைத் தண்டனிட்டு, "இங்கே குழாய்ஜலம் தவிர வேறு ஜலம் கிடைக்குமா?" என்று கேட்டார். அவர், "நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்? என்ன விசேஷம்?" என்று கேட்டார். இவர் ஊர்

முதலியவற்றையும், வேதாத்யயனம் செய்ததையும், நியமத்தையும் கூறினார். இதைக்கேட்ட அந்த மகான், "நீர் வேதாத்யயனம் செய்திருக்கிறீர். சுத்தஜலத்தைத் தேடி ஏன் கஷ்டப்படுகிறீர்? ஸுலபமாக நீர் ஸம்பாதித்துக் கொள்ளளாமே! வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவது போல் இருக்கிறதே!" என்றார்.

இவருக்கும் ஒன்றும் புரியவில்லை. "வேதாத்யயனத்துக்கும் சுத்தஜலத்துக்கும் என்ன ஸம்பந்தம்? எனக்கு இது ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றார். இதைக்கேட்டு அந்தப் பெரியவர் புன்சிரிப்புடன், "வருண மந்த்ரத்தைச் சொல்லிப் பக்கத்திலுள்ள ஒரு செடியைப் பறித்தால் தண்ணீர் பிரவாகமாகப் பெருகுமே" என்றார்.

இதைக் கேட்டதும் இவருக்கு பின்னும் ஆச்சரியம் அதிகமாயிற்று. அதுமாதிரியே செய்து பார்த்தார்; ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு அந்த மகான் வருண மந்த்ரத்தை ஜபித்து ஒரு புல்லைப் பறிக்க, தண்ணீர் கொட்ட ஆரம்பித்தது. இதைக் கண்டதும், "வேதாத்யயனம் செய்து இவ்வழியால் தண்ணீரை வரவழைக்க முடியவில்லையே! தேவருக்கு மாத்திரம் எப்படி முடிந்தது?" என்று வினவினார்.

"நானும் அத்யயனம் செய்திருக்கிறேன். ஆனால் தர்ம சாஸ்திரங்களில் கூறியபடி நாலரை மாஸங்கள் ஆசார்யனிடமிருந்து அத்யயனமும், பிறகு ஆவ்ருத்தியும் முறை தவறாமல் செய்திருக்கிறேன். இம்மாதிரி செய்தால் இந்த வேத மந்த்ரங்களைக் கொண்டு எல்லாக் காரியங்களையும் ஸாதிக்கலாம். இதற்கு இதுவே நிதரிசனம். நான் தினந்தோறும் வருண மந்த்ரத்தை ஜபித்து இம்மாதிரியே சுத்தமான தண்ணீரை வரவழைத்து உபயோகித்துக் கொள்ளுகிறேன்' என்றார். இதைக் கேட்டதும், 'எவ்வளவு சாஸ்திரங்களை கற்றுக்கொண்டால் என்ன? எவ்வளவு காவிய நாடகங்களைப் படித்தும் எழுதியும் என்ன? எவ்வளவோ யாகங்களைச் செய்தும் என்ன? முறையுடன் வேதங்களை அத்யயனம் செய்யாததனால், கற்ற வேதமும் ஸமயத்தில் உபயோகப்படவில்லையே!' என்று இவர் நினைத்தார். காளிதாஸன் வரப்ரஸாத கவி என்று புகழ்வதுண்டு. அவன் ஒரு சமயம் கங்கையை மனதில் நினைத்து ப்ரார்த்தித்தான். கங்காதேவியும் அவன் மந்திரத்துக்கு வசப்பட்டு தாரை தாரையாக பெருகினாள் என்பதையும் கேட்டுள்ளோம்.

ஆதி சங்கர பகவத் பாதர் கனகதாரா ஸ்தோத்ரம் செய்து கனகமழையை வரவழைத்தார். ஸ்வாமி தேசிகனும், ஸ்ரீஸ்துதி செய்து தாரை தாரையாக தன மழையை வரவழைத்து ப்ரஹ்மசாரிக்கு கொடுத்தார். இதையெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். 'பங்கோருபரி கங்கா நிபதன ந்யாயேன' என்று சொல்வதுண்டு. பக்தனான நொண்டியின் தலையில் கங்கை தானாகவே வந்து விழுந்தாள் என்பதும் உண்டு.

ஆகையால், நியமங்களுடன் வேதங்களை ஓத வேண்டும். இக்காலத்தில் ஆசார்யனிடம் ஒரு வருஷத்துக்கு நாலரை மாதக்கணக்கில் வேதாத்யயனம் செய்வது ஸுலபமான காரியமல்ல. எத்தனையோ வருஷ காலம் குருகுல வாஸம் செய்ய நேரிடும் - இப்படி அத்தியயனம் செய்தால். குருகுலத்தில் சிறிது காலங்கூட வாஸம் செய்து கற்பது ச்ரமஸாத்தியமாக இருக்கிறபடியால் எல்லா மாதங்களிலும் அத்யயனம் செய்யத் தொடங்கிவிட்டனர். இந்தத் தோஷம் போவதற்காகவே, "தைஷ்யாம் பௌர்ணமாஸ்யாம் அத்யாய-உத்ஸர்ஜந-அகரணப்ராயஸ்சித்தார்த்தம்" என்று ஸங்கல்பித்து 'காமோ கார்ஷீத் மந்யுர கார்ஷீத்' என்ற மந்த்ரஜபம் செய்கிறோம்,

ஆகையால், யதாகாலத்தில் யதாவிதி வேதாத்யயனம் செய்வதே முக்கியம். அந்தணராகப் பிறந்தவர் இப்படி வேதங்களை ஓதியும், யாகங்களைச் செய்தும், ஓதுபவர்களுக்கு உதவியும், அக்னி பரிசர்யை செய்தும் தமது அந்தணத்தன்மையை நிலைநாட்டிக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீராமன் தண்டகாரணியம் சென்ற போது, அங்குள்ள ரிஷிகள், "அரக்கர்களால் நலிவுபட்டு வேதாத்யயனம், அக்னிபரிசர்யை, தபஸ் முதலியவற்றைச் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுப் பிராமணத் தன்மையையே நாங்கள் இழந்து விட்டோம்" என்று அங்கலாய்த்து அநுதாபத்துடன் ஸ்ரீராமனிடம் முறையிட்டதாகக் கம்பர் கூறுகிறார் -

இறக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினார்
அரக்கர் என்று உளர் சிலர் அறத்தில் நீங்கினார்.
நெருக்கவும் யாம் படர் நெறி இலா நெறி
துறக்கவும் அரும் தவத்துறையும் நீங்கினோம்."

மாதவத்து ஒழுகலேம் மறைகள் யாவையும்
ஓதலேம் ஓதுவார்க்கு உதவல் ஆற்றலேம்
மூதெரி வளர்கிலோம் முறையில் நீங்கினோம்
ஆதலில் அந்தணரேயும் ஆகிலேம்

என்பது கம்பர் பாசுரம். ஆக வேதாத்யயனம் செய்யவேண்டும். செய்பவர்களுக்கு பலவகையில் உபகாரம் செய்யவேண்டும் என்று நிர்பந்தம் செய்கிறார். இப்படி இருக்க இவ்வாறு ஒரே கருத்துடன் எல்லோரம் கூறியிறுக்க நியமத்தை விட்டு எப்படி அனைவரும் செய்வது அத்யயனத்தை என்பதை யோசிக்கவேண்டும். இல்லையேல் எவ்வாறு கார்யம் பலிதமாகும். இதை ஒட்டிதான் பூர்வ புருஷர்கள் அத்யயனத்தை காப்பாற்றுவது கோயில் அர்ச்சிப்பது முதலியன செய்தார்கள்.

"அந்தணர் என்போர் அறவோர். மற்றெல்லாவிடத்தும் செந்தண்மை பூண்டு ஒழுகலால்" என்றார் வள்ளுவர். அம் - அழகிய, தண் - குளிர்ந்தத் தன்மையை உடையவர். அர் - ஆண்பால். கோபமில்லாதவன். தயாவான். வித்யதே ப்ராஹ்மணேதம், என்றான் ராக்ஷஸனான ராவணன்.

"குளித்து மூன்றனலை ஓம்பும் குறி கொள் அந்தணனம் என்றார் திருமாலையில். ஆக சரியான வழியில் ஸத்வ மார்க்கத்தில் அத்யயனம் செய்தால் எல்லாற்றையும் ஸாதித்துவிடலாம். கேவலம் உபகரணத்தைக் கொண்டே எதையும் ஸாதிக்க இயலாது. பாருங்கள் இரண்டு த்ருஷ்டாந்தத்தை.

1. அகஸ்த்யர் கலசத்தில் உண்டானவர். மான்தோலைதான் வஸ்த்ரமாக உடையவர். காட்டில் வாஸம் கிழங்குகளை புசிப்பவர். இன்னும் இம்மாதிரி செயலைப் பெற்றவர். கட்டைவிரல் அளவு பரிமாணம் உடையவர். அவர் தனது உள்ளங்கையிலே சமுத்ரத்தை அடக்கி ஆசனம் செய்தார்.

2. இப்படி ஸூர்யனுடைய ரதத்துக்கு ஒரே சக்ரம், குதிரை ஏழு, பாம்பால் கட்டப் பட்டவை அவை, வழியோ பிடிப்பு இல்லாத ஆகாசம், ஸாரதி அருணன் கால் இல்லாதவன். இவ்வாறு

இருந்தும் ப்ரதி தினமும் உதயம் அஸ்தமயமும் செய்கிறான். ஆகஸத்வகுணம் பெறுகி அதன் மூலமாக அத்யயனம் முதலியவைகளைச் செய்தால் எல்லா கார்யத்தையும் ஸாதித்துவிடலாம்.

மந்திரத்தைக் கொண்டு (கங்கா) ஜலத்தையும் வரவழிக்கலாம். (ஸமுத்ர) ஜலத்தையும் உட்கொள்ளலாம். இது ஸநியமாமன மந்திரத்தின் மஹிமை.

தேள் கொட்டிவிடுகிறது. பாம்பு தீண்டுவிடுகிறது. பூச்சிக் கடியால் உபாதை இவை மந்திரங்களைக் கொண்டு சீக்ரத்தில் இரக்கிவிடுகிறோம். ஔஷதி மூலமாக போக்கடிப்பதும் ச்ரமம். சீக்ரத்திலும் நடைபெறாது. புஷ்பகவிமானம் ஆகாயத்தில் மந்திரம் மூலமாகத்தான் ஆகாய மார்க்கத்தில் செல்லுகிறது. இப்பொழுது யந்திர மூலமாகச் செல்வது எவ்வளவு கடினம் என்பதை பார்த்துத் தானே இருக்கிறோம். எவ்வளவு அபாயம் ஏற்படுகிறது. மந்திரத்தால் ஸாதிப்பது அபாயகரம் அன்று. யந்திர தந்திரங்கள் எல்லாம் ஸுலபத்தில் பயன்படுவதில்லை. பேய் பிசாசு ஓட்டுவது சூன்யம் வைப்பது எடுப்பது எல்லாம் அதர்வண வேதத்தில் ஸுப்ரஸித்தமானது.

நாம் வேதத்தை ஸரிவர ஓதி அத்யயனம் செய்யா விட்டாலும் காயத்ரி மந்திரத்தையாவது ஸ்வரத்துடன் ஐந்து முடிவுகளுடனும் ஜபித்து வந்தால் ப்ராஹ்மண்யம் ஸித்திக்கும் என்பர் பெரியர். அதற்கு ஸமமான மந்திரம் எதுவும் இல்லை. ஆக ஸந்த்யாவந்தனமும் பாயத்ரி ஜபமும் விடாமல் செய்தால் நலத்தை தரும்.

*****

# 9. புஷ்பாஞ்ஜலி

நாம் நம் ஸ்வாமியான இறைவனுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் வேலைகளைச் செய்ய வேண்டும். எந்தக் காரியங்களைச் செய்தால் பகவான் நம்மிடத்தில் உகப்பை அடைந்து அநுக்ரகம் செய்வானோ அந்தச் செயல்களில் இழிவது உத்தமம். அப்படிச் செய்வதைத்தான் 'கைங்கர்யம்' என்று பெரியோர் கூறுவர். கைங்கர்யம் வேலைக்காரனின் தொழில். எதைச் செய்தால் பகவானுடைய திருவுள்ளம் சீறுமோ அவ்வேலைகளை அறவே விட்டொழிக்க வேண்டும்.

இங்கு, 'எந்தக் கைங்கர்யம் செய்தால் பகவான் உகப்பை அடைவான்? எந்த வேலைகளைச் செய்தால் பகவானுக்கு கோபம் உண்டாகும்?' என்றால், இதை நம் புத்தியால் தீர்மானிக்க முடியாது. மோக்ஷத்தில் நித்யஸூரிகளும் முக்தர்களும் ஈச்வரனுடைய அபிப்பிராயத்தை நேராகவே அறிந்துகொள்ள முடியும். ஆகையால் பிரத்யக்ஷத்திலேயே உணர்ந்து கைங்கர்யங்களைச் செய்வார்கள். இவ்வுலகத்திலுள்ள நம்மைப் போன்றவர்களுக்கு ஸர்வ விஷய ஜ்ஞாநம் இல்லாததால் ஈச்வரனுடைய அபிப்பிராயத்தை நேராக அறிந்துகொள்ளச் சக்தி இல்லை. எனவே, வேதம் புராணம் தர்மசாஸ்திரம் முதலியவற்றைக் கற்றறிந்தோ, கற்றவர் சொல்வதைக் கேட்டோ, இது நல்லது, இது தீயது என்று உணர்ந்து, காரியங்களைச் செய்ய வேண்டும். கூரத்தாழ்வார் தனது ஸ்தோத்ரத்தில் அருளிச் செய்ததை ஊர்ந்து கவனிக்கவும். "யத் த்வத்ப்ரியம் தததிஹபுண்யம் என்பது அவர் ச்லோகம். எதை செய்தால் பகவான் ப்ரீதியை அடைவானோ அதுதான் புண்யம். எதை செய்தால் வெறுப்பு அடைவானோ அது பாபம் என்றார்.

ஓர் அரசன் உத்யான வனங்களை ஏற்படுத்திப் பந்து முதலிய விளையாட்டுக்களை விளையாடுகிறான். அதனால் அவன் அங்கு ஏற்படும் லீலாரஸத்தை அநுபவிக்கிறான். அவனே அங்கே, இரு கட்சிகள் சேர்ந்து விளையாடும் ஸமயத்தில் அதைப் பார்த்து ஸந்தோஷிக்கிறான். அதாவது இரு கட்சிகள் சேர்ந்து விளையாடும்போது ஒரு கட்சி வெற்றியடையும்; மற்றொன்று தோல்வியடையும் என்பது ஸஹஜம். இதைப்பார்த்து மத்யஸ்தனான அரசன் ஸந்தோஷித்து லீலாரஸத்தை அடைகிறான். அவ்வரசனே பெரிய மாளிகைகளைக் கட்டிக் குடும்ப வாழ்க்கையுடன் இருந்து போக ரஸத்தை அநுபவிக்கிறான். அது போலவே ஈச்வரனும் போக விபூதி, லீலாவிபூதி (போகத்துக்காக ஏற்பட்ட வைகுண்ட லோகம் என்ற ஐச்வர்யம், லீலாரஸத்துக்காக ஏற்பட்ட இவ்வுலகமாகிற ஐச்வர்யம்) என்ற இரண்டு லோகங்களை ஏற்படுத்தி, அவற்றன் மூலமாகப் போகரஸம், லீலாரஸம் என்னும் ஆனந்தங்களை அநுபவிக்கிறான். நாம் எல்லாரும் எம்பெருமானின் லீலாரஸத்துக்கு உபகரணமாக இவ்வுலகில் இருக்கிறோம். அதாவது நம்மை வைத்துக்கொண்டு லீலாரஸத்தை அவன் அநுபவிக்கிறான். விளையாடுகிறவனுக்கு எப்படிப் பந்து அவன் லீலாரஸத்துக்குக் கருவியாக ஆகிறதோ, அப்படியே நாமும். 'ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:.' எப்படிப் பந்து அடிக்கப்பட்டபொழுது கீழேயும் நடுவிலும் மேலேயும் செல்லுகிறதோ, அதுபோல நாமும் நமது புண்ணிய பாவங்களை அநுசரித்து நரகத்திலும் பூலோகத்திலும் ஸ்வர்க்கத்திலும் அவனால் தள்ளப் பட்டுப் போகிறோம்,

நாம் நல்ல காரியங்கள், கெட்ட காரியங்கள் இவற்றில் எதைச் செய்தாலும் பகவானுடைய லீலாரஸத்துக்கு உபகரணமாக ஆகிறோம் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆயினும் ஆநுஷங்கிகமாக, நடுவில், நமக்கு ஸுகம் துக்கம்' என்பவை உண்டு. அதாவது கெட்ட

காரியங்களைச் செய்தால் அதனால் பகவான் கடுஞ் சினம் கொண்டு நரகத்தில் தள்ளுகிறான். அதன் மூலம் நமக்குத் துக்கானுபவம் ஏற்படும். இதைப்பார்த்துப் பகவான் லீலாரஸத்தை அடைகிறான்.

தேளுக்கு இடம் கொடுத்தால் ஜாமத்துக்கு ஒரு முறை கொட்டும் என்பார். ஆக அதை வதை செய்ய நினைத்தவன் வாலில் கயிற்றைக் கட்டி சூடான ஆற்று மணலில் புரட்டி லீலா ரஸத்தை அநுபவிப்பான். அதுபோல் இங்கும்.

இப்படி இம்முகத்தாலே பகவானுக்கு நாம் லீலாரஸ உபகரணமாகிறோம். நற்காரியங்களைச் செய்யும்போது நமக்கு ஸ்வர்கத்தை கொடுத்து ஸந்தோஷிப்பித்து அம் முகத்தாலேயும் அவன் லீலாரஸத்தை அநுபவிக்கிறான். அந்தப் பிரகாரத்தாலே நாம் அவனுக்கு லீலாரஸ உபகரணமாகிறோம். ஆகையால் இவ்விரு வகையாலும் அவனுக்கு நாம் லீலோபகரணமாக ஆன போதிலும், நமக்கு நடுவில் ஸுகம் துக்கம் என்பவை ஏற்படுகின்றனவே. அவற்றுள் துக்கம் வராமல் ஸுகம் வருவதற்கு நற்காரியங்களையே செய்வது உத்தமமாகிறது.

இப்படி நற்காரியங்களைச் சாஸ்திரங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், எத்தனையோ சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிறந்தது - புஷ்பங்களைக் கொண்டு எம்பெருமானை அர்ச்சித்தல். உலகத்திலும் உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்குக் கழுத்தில் மாலையணிவித்து மரியாதை செய்வது, அவர்களுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. யாராக இருந்தாலும் கழுத்தில் மாலையைப் போட்டாலோ, கையில் புஷ்பங்களைக் கொடுத்தாலோ உடனே அவர்களுக்கு மலரைக் கண்டதும் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டுவிடுகிறது. எனவே, புருஷோத்தமனான எம்பெருமானுக்கும் புஷ்பங்களால் ஸந்தோஷம் ஏற்படுவது ஸஹஜமே. பெரியாழ்வார் திருநந்தவனம் ஏற்படுத்தி மாலாகாரருடைய கைங்கரியத்தை செய்யக் கருதிப் பலவிதமாகப் புஷ்ப கைங்கரியங்களை செய்தார். தொண்டரடிப்பொடியாழ்வாரும் அவ்விதமே புஷ்ப கைங்கரியம் செய்தார். 'தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும் அடியனை' என்று அவர் தாமே அருளிச்செய்தார். 'தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது' என்று சூடிக்கொடுத்த நாச்சியாரும் அருளிச்செய்தார்.

'நெறிமையால் மலர்கள் தூவிப் பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே', 'நல்ல புனலொடு மலர்கள் தூவி எண்ணுமின் எந்தை 'நாமம் இப் பிறப்பறுக்கும்', 'தாமரை மலர்கள் நல்ல ஆய்ந்துகொண்டு ஏத்த வல்லார் அந்தமில் புகழினாரே' என்று திருவனந்தபுரப் பாசுரத்தில் நம்மாழ்வார், எம்பெருமான் திருநாமங்களைச் சொல்லிப் புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சித்தலை மிகவும் போற்றியிருக்கிறார். இதைக் கொண்டு தான் திவ்ய தேசங்களிலும் மடங்களிலும் லக்ஷார்ச்சனை, கோடி அர்ச்சனை முதலியவற்றை இப்போதும் செய்து வருகிறார்கள்.

பெரியாழ்வார், 'பகவானுக்குப் புஷ்பங்களைச் சூட்டி மகிழ்விப்பதுதான் பரம புருஷார்த்தம்' என்று கருதி, 'செண்பகப்பூச்சூட்ட வாராய்', 'மல்லிகைப் பூச்சூட்ட வாராய்' என்றெல்லாம் சொல்லி ஒரு பத்துப் பாசுரங்கள் பாடியருளினார்.

இங்கே, 'பகவானை அர்ச்சிப்பதற்காக எடுத்த புஷ்பங்களில் எவை கூடும்? எவை கூடா?' எனில், எல்லாம் பகவானுக்கு உகந்தவையே, 'இந்த புஷ்பம் கூடும், இது கூடாது' என்ற நிர்ப்பந்தம் இல்லை. எந்தப் புஷ்பத்தைக் கொண்டு அர்ச்சித்தாலும் பக்தி, சிரத்தை இவைதாம் முக்கியம்.

'ந கண்ட காரிகா புஷ்பம் தேவாய விநிவேதயேத்' என்று, கண்டங்கத்திரிப்பூ முதலியவை கூடா என்று இருக்கிறதே என்றால், இவை எம்பெருமானுக்குத் தகாதவை என்று சொல்வதற்காக வந்ததல்ல; இவற்றிலுள்ள முட்கள், இவற்றைப் பறிக்கும்போது பாகவதர்களின் கைகளைக் குத்திவிடும் என்பதற்காக இவை ஆகாதவை என்று சொல்லப்பட்டது என்று சமத்காரமாகப் பெரியோர் கூறுவர். ஆகையால், எந்தப் புஷ்பத்தைக் கண்டாலும் பகவானுக்குச் சூட்டி மகிழவேண்டும் என்று எவன் நினைக்கிறானோ அவனுடைய ஹ்ருதயம், நல்ல ஹ்ருதயம். அப்படி நினைக்காதவன் அஸத்கல்பன். இதை திருமங்கையாழ்வாரின் பாசுரங்களைக் கொண்டு அறியலாம். அப்பாசுரம் இதோ - "கள்ளார் துழாயும் கணவலரும் (அலரி) கூவிளையும் (பில்வபத்ரம்) முள்ளார் முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால் புள்ளாய் ஓர் ஏனமாய் புக்கிடந்தான் பொன்னடிக்கு என்று உள்ளத்தார் உள்ளத்தை உள்ளமாகக் கொள்ளோமே என்பது. இங்கு பதிகத்தில் இதனையே விஸ்தரித்திருக்கிறார்.

எல்லாப் புஷ்பங்களும் எம்பெருமானுக்கு உகந்தவையாயினும் சிற்சில புஷ்பங்களுக்குச் சில காரணங்களை இட்டு விசேஷம் உண்டு. அப்படிப்பட்ட புஷ்பங்களைக் கொண்டு எம்பெருமானை அர்ச்சித்தால் விசேஷ உகப்பு அவனுக்கு ஏற்படும். கனகாம்பரப்பூ ரூபத்தில் அழகு; சில புஷ்பங்கள் வாஸனையால் விசேஷ மேன்மை பெற்றவை; கந்தம் ரூபம் என்ற இரண்டு ஆகாரத்தாலும் மேன்மை பெற்றவை சில புஷ்பங்கள்; மல்லிகை மனோரஞ்சிதம் போன்றவை. இம்மாதிரி புஷ்பங்களின் இயற்கை இருக்கிறது.

தாமுளரே தமமுள்ளம் உள் உளதே' தாமரையின் பூவுளதே ஏத்தும் பொழுதுண்டே என்றார் ஆழ்வார். எம்பெருமான் கொடுத்த கைகாலுடன்தானே நாம் இருக்கிறோம். ஹ்ருதயத்தை எம்பெருமானிடம் வைக்காமல் வேறு விஷயங்களில் ஏன் வைக்கிறோம். அர்ச்சிப்பதற்கு புஷ்பங்கள் இல்லையா. எவ்வளவு காலத்தை வீணாக்குகிறோம். எம்பெருமானிடம் ஈடுபடுவதற்கு காலம் இல்லாமல் போய்விட்டதா? அப்படியிருக்க நரகத்துக்கு ஏன் செல்ல வேண்டும். இது அருமையான செயலாகிவிட்டதே' என்று புலம்புகிறார்.

"இப்படியுள்ள புஷ்பங்களைக் காட்டிலும் கருநெய்தல் (உத்பலம்) புஷ்பம் சிறந்ததாம். அதைக்காட்டிலும் பத்மம் சிறந்தது. அதைக்காட்டிலும் நூறு இதழ் கொண்ட தாமரை சிறந்தது. இதைவிடச் சிறந்தது ஆயிரம் இதழ் கொண்ட தாமரை. இதைக்காட்டிலும் வெண்தாமரை மேலானது. ஆயிரம் வெண்தாமரையைக் காட்டிலும் துளஸீபுஷ்பம் மேலானது. துளசியைக் காட்டிலும் கொக்குமந்தாரை மேலானது. அதைவிட ஸுவர்ண புஷ்பம் சிறந்தது. அதைவிட எனக்குப் பிரீதியைக் கொடுப்பது வேறொன்னும் கிடையாது" என்று பகவான் கூறினார்.

ஸர்வேஷாமேவ புஷ்பாணாம் ஸஹஸ்ரகுணமுத்தமம் ।
தஸ்மாத் பத்மம் ததா ராஜந் ! பத்மாத் து சதபத்ரகம் ॥
தஸ்மாத் ஸஹஸ்ரபத்ரம் து புண்டரீகமத: பரம் ।
புண்டரீகஸஹஸ்ராத் து துளஸீ குணதோதிகா ॥
பகபுஷ்பம் ததஸ்து ஸ்யாத் ஸௌவர்ணம் து ததோதிகம் ।
ஸௌவர்ணாச்ச ப்ரஸூநாத் து மத்ப்ரியம் நாஸ்தி பாண்டவ ॥

இப்படிப் புஷ்பங்களின் ஏற்றத்தாழ்வு சொல்லப்பட்டது. இந்தப் புஷ்பங்களைக் கொண்டு எம்பெருமானின் திருவடிகளை அர்ச்சித்தால், அவன் மிகவும் உகந்து அநுக்கிரகிப்பான். அதிலும் ஸ்வர்ண புஷ்பம் வாஸனையோடு கூடியிருந்தால் உத்தமம். மலர்ந்த தங்கப்பூ

வாஸித்தாப்போலே என்று சொல்லுவார். குரும்பு அறுத்த நம்பி மண் புஷ்பங்களைக் கொண்டு திருவேங்கடமுடையானை அர்ச்சித்தான். அதனால் ப்ரீதி பகவான்அடைந்து தங்க மாலையை கொண்டு வந்து நின்ற அரசனையும் எம்பெறுமான் வெறுத்தான் என்பதையும் கேட்டுள்ளோம். எந்த புஷ்பமானால் அர்ச்சித்தாலும் பக்தி வேண்டும் என்பது கீதையில் தேறின விஷயம்.

தொண்டைமான் சக்ரவர்த்தி பல கைங்கர்யங்களைச் செய்து பகவானிடம் நேராகவே பேசுவான் என்பது ஐதிகம். தங்கத்தால் செய்யப்பட்ட முக்தாஹாரத்தை நேரில் ஸமர்பிக்க வந்தான். அப்பொழுதும் எம்பெருமான் பேசவில்லையாம். அந்த ஸமயம் மண் உருண்டையால் புஷ்பம் செய்து விக்ரஹத்துக்கு அரச்சனை செய்யும் குயவனிடம் உறுகி மனம் அவனிடமே வைத்தானாம்.

இதில் ஒவ்வொரு புஷ்பமாக அர்ச்சிப்பதைவிட ஒரு ஸமயத்தில் பல புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சிப்பது சிறந்தது. அதைவிடச் சிறந்தது - இரண்டு கைகளாலும் புஷ்பங்களை வாரி அஞ்ஜலி செய்வதுபோல் எடுத்து அர்ச்சிப்பதே.

இப்படிக் கைங்கரியம் செய்யும்போது மிகவும் பக்தியுடனும் சிரத்தையுடனும், 'இப்படிப் பகவானை அர்ச்சிக்கும் பாக்கியம் நமக்குக் கிடைத்துள்ளதே!' என்ற ஸந்தோஷத்துடனும், கூலிக்கு வேலை செய்வது போலல்லாமலும் ஸ்வயம்ப்ரயோஜனமாகவும் கருதிச் செய்தால் நாம் செய்யும் ஸத்காரங்களைப் பகவான் நேரில் தலையை வணங்கி நம்மிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுகிறான்.

யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்தகதபுத்திபி: ।
தா: ஸர்வா : சிரஸா தேவ : ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம் ॥

இப்படி, எம்பெருமானை அர்ச்சிப்பதற்கு ஏற்பட்ட புஷ்பங்களைச் சொன்னோம். இவை கண்ணால் பார்க்கப்படும் புஷ்பங்கள். நம் கண்களுக்கு இலக்காகாதவையும், சாஸ்திரங்களை கொண்டே அறிய வேண்டியவையுமான புஷ்பங்கள் சில உண்டு. இந்தப் புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சித்தால் எம்பெருமான் மிக மிக ஸந்தோஷமடைவான். முக்கியமான புஷ்பங்கள் அவையே. 'அவை எவை?' என்றால் - அஹிம்சை, இந்த்ரியநிக்ரஹம், ஸர்வபூததயை, க்ஷமை, ஜ்ஞாநம், தபஸ், தியானம், ஸத்தியம் என்ற எட்டுப் புஷ்பங்கள்.

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம், புஷ்பம் இந்த்ரியநிக்ரஹ: ।
ஸர்வ பூததயா புஷ்பம், க்ஷமா புஷ்பம் விசேஷத: ॥
ஜ்ஞாநம் புஷ்பம், தப: புஷ்பம், த்யாநம் புஷ்பம் ததைவ ச ।
ஸத்யம் அஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத் ॥

1. அஹிம்ஸா - பிறரை ஹிம்ஸிக்காமலிருத்தல். ஒருவனை கத்தியைக் கொண்டு வெட்டுவதோ கொல்லுவதோ ஹிம்ஸையாகும். இது மட்டுமல்ல; பிறர் மனம் நோகும்படி நாம் வாயால் திட்டுவதோ செயலில் காட்டுவதோகூட ஹிம்ஸைதான். இவை முதலிய ஹிம்ஸைகளைப பிறருக்குச் செய்யாமலிருப்பது அஹிம்ஸை எனப்படும்.

2. இந்த்ரியநிக்ரஹ:- புலன்களை அடக்குதல். கண் காது மூக்கு முதலிய இந்திரியங்களை அவற்றின் இஷ்டபடி பட்டி மேய விடாமல் அததற்கு வகுத்த நல்ல விஷயங்களில்

பிரவேசிக்கும்படி செய்தல் - 'ஜிஹ்வே கீர்த்தய கேசவம்' என்ற ரீதியில். அம்பரிஷ அரசனை இங்கு உதாஹரணமாக்கலாம்.

3. ஸர்வபூததயா - எல்லாப் பிராணிகளிடத்திலும் இரக்கத்தைக் காட்டுதல். இவரால் பிற்காலம் உதவியுண்டாகும் என்ற எண்ணமில்லாமல் துக்கத்தைக் களைந்து உதவி செய்தல்.

4. க்ஷமா - பொறுமை. நம்மேல் பிறர் எவ்வளவு குற்றம் கூறினாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் விஷயத்தில் மனத்தில் கூட விகாரம் அடையாமல் பொறுமையுடன் இருத்தல். மேலும் அவருக்கும் நன்மை செய்தல் இங்கு க்ஷமாஷோடச ஸ்த்தோர்த்தை படிக்கவும்.

5. ஜ்ஞாநம் - சாஸ்திரங்களைக் கற்று எம்பெருமானை அறிதல். கர்மயஞ்சத்தைக்காட்டிலும் ஞானயஞ்சம் சிறந்தது. "ஞான தீபேன பாஸ்வதா" என்றார். இது கடைசிவரை நம்மிடம் உடன் வரும். ஸர்வப்ரகாசம் ஏற்படும்.

6. தப: - தவம் செய்தல். காயங்களுக்கு ச்லேசம் இது முக்யம்.

7. தியானம் - பகவானைத் தியானித்தல். இது பாஷ்யாதிகளில் ப்ரஸித்தம்.

8. ஸத்தியம் - உண்மை பேசுதல். ஸத்யம் பூதஹிதம் வாக்யம்.

இந்த எட்டும் பகவானுக்குப் ப்ரீதியைக் கொடுப்பதை முன்னிட்டுப் புஷ்பங்களாகக் கூறப்பட்டன. வாஸ்தவத்தில் மேற்கூறிய எட்டுக் குணங்களும் நம்மிடம் இருந்தால் பகவான் நம்மை அநுக்கிரகிப்பான் என்று தாத்பரியம்.

பெரியாழ்வார் பூச்சுட்டல் என்ற பத்துப் பாசுரம் அநுக்கிரகித்திருக்கிறார். அங்கு எட்டே புஷ்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன; பத்து அல்லது ஒன்பது புஷ்பங்களைச் சொல்லவில்லை. நான்காம் பாட்டில், 'உகந்திவை சூட்ட நீ வாராய்' என்றே சொன்னார். அங்கு ஒரு தனிப் புஷ்பத்தைக் குறிப்பிடவில்லை. மூன்றாம் பாட்டில், 'பச்சைத் தமனகத்தோடு' என்றும், நான்காம் பாட்டில், 'மருவும் தமனகமும் சீர்' என்று சொல்லி, 'உகந்திவைச் சூட்ட நீ வாராய்' என்றும் சொல்லியிருக்கிறபடியால் எட்டுக்கு மேற்கொண்டும் புஷ்பங்கள் குறிக்கப்பட்டுள்ளனவே என்ற ஸந்தேஹம் எழலாம். ஆயினும், மருவும் தமனகமும் புஷ்ப வகையில் சேர்ந்தனவா அல்லவா என்று ஆராய்ந்தால் அல்ல என்ற பக்ஷத்தில், பூச்சூட்டலில் சத்ரிந்யாயத்தால் இதைச் சேர்த்துப் படித்தது என்று கொள்ள வேண்டும். இலைகளானபடியால் புஷ்பங்கள் என்று வைத்துக் கொள்ளும் பக்ஷத்தில், 'செண்பகப்பூச் சூட்ட வாராய், மல்லிகைப்பூச் சூட்ட வாராய், கருமுகைப்பூச் சூட்ட வாராய்' என்ற ரீதியில் சொல்லாமல், இவைச் சூட்ட நீ வாராய் என்று சொன்னபடியால் இவற்றில் அதிக நைர்ப்பர்யம் இல்லை என்று தோன்றுகிறது. அஹிம்ஸை முதலிய எட்டுப் புஷ்பங்களை மனத்தில் வைத்துக்கொண்டே புஷ்பங்களின் பெயர்களையே குறித்து, 'சூட்ட வாராய்' என்று சொன்னது பொருத்தமுடையது என்றும் தோன்றுகிறது. எனவே, சாஸ்திரங்களில் கூறிய அஹிம்ஸை முதலிய எட்டு புஷ்பங்களை மனதில் வைத்துக்கொண்டுதான் இப்பதிகம் பாடினார் என்பது தெளிவு. இதில் எட்டுப் புஷ்பங்களில் மேற்கூறிய எட்டுக் குணங்களையும் அடக்கி ஊகித்து அறிந்து கொள்ள வேண்டியது.

"உங்கள் புழக்கடை தோட்டத்து வாவியுள்" என்ற ஆண்டாள் திருப்பாவை பாசுரத்தில் இந்த

எட்டு விதமான புஷ்பங்கள் பகரப்பட்டன என்பதை நம்முடைய கோதாஸூக்தி ஸுதா ஸ்வாதத்தில் நன்கு கண்டு அறியலாம். ஸ்வாபதேசத்தில் இது விவரிக்கப் பட்டுள்ளது.

மாலாகாரருடைய வ்ருத்தாந்தமும் அறிந்ததே. அவர் கண்ணனுக்கு மாலையையும் புஷ்பத்தையும் கொண்டு உபசரித்தார். மாலரகாரரையும் போலே உபசரிக்க வேண்டும். சுருள் மாறாத பூவிறே இவர் கொடுத்தது என்று ஆன்றோர் சொல்வர். ஸ்வயம் ப்ரயோஜனமாகவே ஆராதித்தார். பலத்தை எதிர் பாராமல், ததியாராதனமானவுடன் அநுக்ரஹம் சொல்வது போல் ஸ்ரீக்ருஷ்ணனும் யுஷ்மத் ஸந்ததி ஜாதானாம்' என்று அருள் புரிந்தார். உங்களுக்கும் உங்கள் ஸந்ததிக்கும் ஐச்வர்யம் நீண்ட ஆயுள் மேல் மேல் ஸௌக்யங்கள் பெறுக வேணும் என்று எம்பெருமானின் வாக்கு. அன்றாடம் மாலையை விற்று ஜீவிக்கிற குடும்பம். மாலையை தொடுக்கும்போது நேராகப் பார்த்து தோடுப்பதில்லையாம். அப்படி பார்த்தால் அதன் அழகைக் கண்டு தாங்களே உபயோகித்துக் கொள்ளலாம் என்கிற எண்ணம் உண்டாகும். இப்படி செய்தால் அன்றைய தினம் பிழைப்பு போய்விடுமாம். அப்படியிருக்க எம்பெருமானுக்கு இவர் ஸமர்ப்பித்து உபசரிப்பது எம்பெருமானுக்கு அளவில்லாத ஆனந்தம். ஆக இவ்வாறு அநுக்ரஹம் அருளினார். கஜேந்திராழ்வானுடைய கதையும் தெரிந்ததே.

'பத்ரம் புஷ்பம் பலம் தோயம்' என்பது கீதை. பகவான் வஸ்துக்களின் எந்தத் குறையை பார்ப்பதில்லை. பக்தியின் மேன்மையைதான் பார்க்கிறான். நாம் ஸமர்ப்பிக்கும் வஸ்துவைக் கொண்டு பசி நீக்குவது. நம்மைப் போல் அல்ல. அவாப்த ஸமஸ்தகாமன் ஆக பக்தியைதான் விரும்புகிறான். அப்படி ஸமர்ப்பித்தால்தான் கிடைக்க முடியாததான பொருள் கிடைத்தால் எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகுமோ அவ்வளவு ஸந்தோஷமடைகிறான். வில்லி ஜாதியில் பிறந்தவன் ராஜபுத்ரியை மணக்க ஆசைப்பட்டால் அது லபிக்குமோ. கிடைப்பது அறிது என்று நிச்சயித்துவிட்டான். ஏதோ அத்ருஷ்ட விசேஷம் கிடைத்து விட்டது. அந்த ஸமயம் அவனுக்கு மகிழ்ச்சி எப்படி இருக்கும். சொல்லத் தேவையில்லை. அவ்வாறு எம்பெருமான் பக்தியுடன் ஸமர்ப்பித்ததை பெற்று மகிழ்வானாம். ஆக நம் பக்திதான் அவனுக்கு முக்யம் என்றார் இராமானுஜர்.

இங்கு திருவாய் மொழி பாசுரத்தையும் நோக்குக. 8-10ல் இங்கே திரிந்தேற்கு இழிக்குற்றென் இருமாநிலம் முன் உண்டு உமிழந்த சேங்கோத்தப் பவளவாய் செந்தாமரைக்கண் என் அம்மான் பொங்கேழ் புகழ்கள் வாயவாய் புலன்கள் வடிவுஎன் மனத்ததாய், அங்கேய் மலர்கள் கையவாய் வழிப்பட்டோட அருளிலே. ஆக இங்கு லீலா விபூதியில் இருந்தாலும் மேல்ச் சொன்ன வகையில் எம்பெருமான் அநுக்ரஹித்தால் இதுவே போகரஸம் என்றார் ஆழ்வார்.

"நெறிமையால் மலர்கள் தூவி பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே" என்றார் ஆழ்வார். பெரிய கோயில் அர்ச்சகர் ஆராதனம் செய்கிறார். ஒரு சமயம் ஸேவார்த்தி ஒருவர் வந்து 100 ரூபாய் கொடுத்து அர்ச்சனை செய்கிறார். அது ஸமயம் மஹா தனிகன் ஒருவன் வந்தான். அவனிடம் அதிகமாக பணம் பெற்றவர். மேலும் பெறப் பொகிறவர். ஆகையால் பேசாமல் இருக்க முடியவில்லை. அவரது யோகக்ஷேமங்களையும் விசாரித்துக் கொண்டே அர்ச்சனையும் செய்கிறார். அவருடன் ஆதரவோமு அபிமானத்தோடும் பேசுகிறபடியால் தமது நிலையை மறந்து ஸுவரணபுஷ்கங்களையும் துளஸிதறத்தையும் நாமாவளியை சொல்லிக் கோண்டே மஹாதனிகன் மேலேயே அர்ச்சனை செய்துவிடுகிறார். விதுரனோடு ஸ்ரீக்ருஷ்ணன் ஸம்பாஷணம் செய்யும் போது அந்த வார்த்தையின் ஸவாரஸ்யத்தில் திக்பரமம் அடைந்து தோலை சாப்பிடுவதும் உள் சொளையை கீழே எறிவதுமாயும் இருந்தார் என்று சொல்வதும்

உண்டு. அதுபோல் தனத்து ஆசையால் தனிகரிடம் வார்த்தையாடும் ஸ்வாரஸயத்தில் எங்கு எதை சேர்ப்பது என்ற விவேகமற்று அர்ச்சனை புஷ்பங்களை தனிகனின் மேல் சேர்த்துவிடுகிறார். இவைக் கூடாது என்பதைக் காட்டவே "நெறிமையால் மலர் தூவி" என்றார் ஆழ்வார். இப்படியும் நடைபெறும் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

*****

# 10. பிராட்டியின் அவதார விசேஷம்

நாம் நமது தரிசனத்தில் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் ஸமமான முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். இருவரின் சேர்த்தியே நமக்கு மிகத் தஞ்சமாகிறது. இது வேதம், பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி முதலிய பிரமாண ஆசார பரம்பரையால் ஏற்பட்ட விஷயம். வெறும் ப்ரஹ்மசாரிப் பெருமாளான நாராயணனும் உபயோகமற்றவர்; எம்பெருமான் ஸம்பந்தமற்ற வெறும் லக்ஷ்மியும் உபயோகமற்றவள். எல்லாக் காலத்திலும் எல்லா நிலைகளிலும் எல்லா இடங்களிலும் மிதுனமான இருவரையும் அடைந்தே நாம் உஜ்ஜீவிக்க வேண்டும். அங்கும் இங்கும் எங்கும். லங்காதிபதியான ராவணன் எல்லா வேதங்களையும் கற்றவன், மகா சூரன், மூன்று உலகங்களையும் பந்தாக்கி ஆடினவன், கைலாச மலையை அசைத்தவன். அப்படிப்பட்டவன் மகாவிஷ்ணுவின் அவதாரமான சக்கரவர்த்தி திருமகனான ஸ்ரீராமனை உபேக்ஷித்துச் சீதையை (லக்ஷ்மியை) மாத்திரம் பற்றினான்; பல அனர்த்தங்களுக்கு ஆளானான். ராவணன் தங்கையான சூர்ப்பணகை மகா லக்ஷ்மியின்அவதாரமான சீதாதேவியை அநாதரித்து ராமனை மாத்திரம் பற்றினாள்; பல அனர்த்தங்களையும் பெற்றாள். ஆகையால் இந்த மிதுனத்தில் ஒருவரை அநாதரித்து ஒருவரை மாத்திரம் அடைந்தால் ராவணன்-சூர்ப்பணகை கதிதான் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த விஷயத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான் வேதாந்த ஆசிரியர், 'தைவதம் தம்பதீ ந:' என்று சுருங்க அருளிச் செய்தார்.

இப்படி இந்த மிதுனம் நமக்கு உத்தேச்யமானபடியாலும், இருவரும் சேர்ந்தே நமக்கு எல்லாவித அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களைக் கொடுக்கிறபடியாலும் எம்பெருமான் இவ்வுலகத்தில் எந்த எந்த அவதாரம் எடுத்தாலும் மகா லக்ஷ்மியும் அதற்குத் தகுந்தாற் போல் அவதாரமெடுத்து நமக்கு அருள்புரிகிறாள்.

ஸத்காரியங்களைச் செய்த மகான்களுக்கு அருள்புரிந்து பகவான் சொர்க்கம், தனம், ஐச்வரியம் முதலிய நன்மைகளைச் செய்ய நினைத்து மகாலக்ஷ்மியின் முகத்தைப் பார்த்து அவளுடைய இங்கிதங்களை உணர்ந்து அதற்குப் பராதீனனாக இருந்து அளிக்கிறான் என்று பெரியோர் பணிப்பர். இப்படி அவளுடைய முகஜாடையை அறிந்து செய்வதனால்தான் இருவருக்கும் ஐகரஸ்யம் ஏற்படுகிறது; சுவை பெருகுகிறது; அவர்களின் வியாபாரம் ரஸவத்தாக முடிகிறது. எனவே அவன் அவதாரம் செய்யும்போது இவளும் அவதரித்து வருகிறாள். உலகரீதியில் சில வியாபாரங்களைச் செய்து ஆனந்தத்தை அடைகிறார்கள்.

கூரத்தாழ்வானின் குமாரரான ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஸ்ரீரங்கநாதனைப் பார்த்து ஒரு ச்லோகம் அருளிச் செய்கிறார் -

> அநுஜ நுர நுரூப ரூப சேஷ்டா
> ந யதி ஸமாகம மிந்திராகரிஷ்யத் l
> அஸரஸமதவா அப்ரியம்பவிஷ்ணு
> த்ருவமகரிஷ்யத ரங்கராஜ! நர்ம ll (உத்தர சதகம் 49)

இதன் கருத்து - ரங்கநாதரே, உமது பத்தினியான பிராட்டி உம்முடைய அவதாரம்தோறும் உமக்கு ஒத்த உருவத்தையும் லீலைகளையும் உடையவளாக, உம்முடன் அவதாரத்தை செய்யாமல் இருந்தாளானால், உம்முடைய விலாஸமும் சேஷ்டையும் சுவையற்றனவாகவே

ஆகிவிடும், அல்லது வெறுக்கத்தக்கனவாகவே முடியும். இது நிச்சயம். ஆகையால் உம்முடைய திருமேனிக்கும் விளையாடல்களுக்கும் ஏற்ற திருமேனியையும் விளையாடல்களையும் கொண்டு உம்முடன் அவதாரம் செய்கிறபடியால் உம்முடைய அவதாரங்கள் இனிமை பெறுகின்றன. அவள் அவதாரம் செய்யாவிட்டால் நீர் ப்ரஹ்மசாரி நாராயணன் ஆனபடியால் உம்முடைய வியாபாரங்கள் உலகத்தில் பரிமளிக்கவே மாட்டா என்றபடி.

இதே ஆசார்யர், ஸ்ரீகுணரத்ந கோசத்தில் (48) ஸ்ரீரங்கநாயகியைப் பார்த்து இதே கருத்துள்ள ஒரு ச்லோக ரத்னத்தை அருளிச் செய்கிறார் -

யதி மநுஜதிரஸ்சாம் லீலயா துல்யவ்ருத்தே -
ரநு ஜநுரநுரூபா தேவி ! நாவாதரிஷ்ய : I
அஸரஸமபவிஷ்யந் நர்ம நாதஸ்ய மாத :I
தரதலதரவிந்தோ தந்த காந்தாயதாக்ஷி II

இதன் கருத்து - மகாலக்ஷ்மியே ! உன் நாதரான பகவான் மனிதனாகப் பிறந்தாலும் திர்யக் சரீரம் எடுத்தாலும், தேவ சரீரம் எடுத்தாலும் நீயும் அதற்குத் தகுந்தாற்போல் அந்த அந்தச் சரீரத்தை எடுத்து அவருடன் கலந்து பரிமாறி ஜனங்களுக்கு நற்காரியங்களை உண்டு பண்ணுகிறாய். அப்படி அந்த எம்பெருமானுக்குத் தகுந்தாற்போல் நீ சரீரபரிக்ரகம் பண்ணாமலிருந்தாயானால் அவருடைய வியாபாரமேல்லாம் ரஸவத்தாக ஆகவே ஆகாது; சுவையற்றதாகவே முடியும் என்றபடி.

இந்தக் கருத்தையே ஸ்வாமி வேதாந்த தேசிகனும் ஸ்ரீஸ்துதியில் (10) மிகவும் ரஸமாக அருளிச்செய்கிறார் -

ஆபந்நார்த்திப்ரசமநவிதௌ பத்ததீக்ஷஸ்ய விஷ்ணோ;.
ஆசக்யுஸ் த்வாம் ப்ரியஸஹசரீமைகமத்யோபபந்நாம் I
ப்ராதுர்பாவைரபி ஸம தநு: ப்ராத்வமந்வீயஸே த்வம்
தூரோத்க்ஷிப்தைரிவ மதுரதா துக்தராசேஸ் தரங்கை: II

"பெரிய பிராட்டியே ! உலகத்தில் துன்பமடைந்த பக்தனின் துன்பத்தைப் போக்க வேண்டுமென்ற ஸங்கல்பம் கொண்டுள்ளான் உன் கணவன். இது அவனுக்கு ஒரு யாகம் போலும். யாகம் செய்யும்போது அருகில் மனைவி இருக்க வேண்டும். இப்படி இல்லாதவன் வேள்வி செய்வதற்கே அதிகாரமற்றவன் ஆகிறான். ஆகையால் நீயும் அவனுடன் இருந்து அவனுக்குத் துணைவியாக நின்று இந்த வேள்வியை நடத்துகிறாய். எனவே அவன் ராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களை எடுக்கும்போதேல்லாம் நீயும் அவனுக்குத் தகுந்தவாறு சீதை, ருக்மிணி என்ற அவதாரம் எடுத்து உதவுகிறாய்.

இதற்கு அடுத்த ச்லோகத்தையும் கவனிக்க வேண்டும். ஸ்ரீவைகுண்டலோகத்தில் பரரூபம் என்ற திருமேனியைப் பகவான் அடைந்திருக்கிறான். அதிலிருந்துதான் எல்லா அவதாரத் திருமேனிகளும் உண்டாகின்றன. இதுதான் முதற் காரணமான திருமேனி. அப்படியே மகாலக்ஷ்மிக்கும் பரரூபம் என்ற திருமேனி உண்டு. அந்தத் திருமேனியிலிருந்து சீதை, ருக்மிணி முதலிய திருமேனிகள் தோன்றுகின்றன. இது இந்த அவதாரங்களுக்கு முதற் காரணமாகிறது. இப்படி அவதரித்து அந்த அந்தக் காரியங்களைச் செய்தபிறகு பரரூபம் என்னும் திருமேனியிலேயே அவதாரங்கள் மறைகின்றன. சமுத்திரத்தில் காற்றின்

வேகத்தினால் அலைகள் தோன்றுவதும் மறைவதுமாக இருப்பது போல் இது இருக்கிறது என்று இந்த ஆசிரியர் கூறுகிறார்.

இப்படி ஆசார்யர்கள் கூறுவது பிரமாணமின்றி இல்லை. விஷ்ணுபுராணத்தில் மகாலக்ஷ்மியைத் தேவேந்திரன் முதலியோர் ஸ்தோத்ரம் செய்யும்போது உள்ள ச்லோகங்களைக் கவனிக்க வேண்டும்.

> ஏவம் யதா ஜகத் ஸ்வாமீ தேவதேவோ ஜநார்தன:।
> அவதாரம் கரோத்யேஷா ததா ஸ்ரீஸ் தத்ஸஹாயிநீ ।।
> ராகவத்வே அபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி ।
> அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷா ஸஹாயிநீ।
> தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ ।।
> விஷ்ணோர்தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும் ।।
> [ 1-9-140, 142, 143 ]

இப்படி எம்பெருமான் அவதரிக்கும்போதெல்லாம் பெரிய பிராட்டியும் அதற்குத் தகுந்தாற்போல் அவதாரங்களை எடுத்துக் கொள்கிறாள் என்பது புராணம், வேதம், ஆசார்ய ஸ்ரீஸூக்தி முதலியவற்றினால் ஸித்தமாயிற்று. பகவான் பிரசித்தமாகப் பத்து அவதாரங்களை எடுத்துக் கொள்கிறான். அதில் நரம் கலந்த சிங்கம் என்ற ஓர் அவதாரம் உண்டு. இது எல்லாருக்கும் தெரியும். இந்த அவதாரத்தில் மகாலக்ஷ்மி பெண்சிங்கமாக ஓர் அவதாரம் எடுத்ததாக தெரியவில்லை. எம்பெருமான் ஒவ்வொரு அவதாரத்திலும் அதற்கு தகுந்தவாறு பிராட்டியும் அவதாரம் எடுக்கிறாள் என்பது இந்த அவதாரத்தில் எப்படிப் பொருந்தும்?' என்ற ஐயம் ஏற்படலாம்.
புராணங்களிலும், இராம கிருஷ்ணாதி அவதாரங்களில் ஸீதா ருக்மிணி அவதாரம் போல் ந்ருஸிம்ஹ அவதாரத்தில் பிராட்டியின் அவதாரம் தனிப்பட்டுச் சொல்லப் பெறவில்லை. ஆயினும் ஏதாவது ஒரு வழி உண்டா என்றால் உண்டு. இந்த ஐயத்தை நம் வேதாந்தாசார்யர் தவிர வேறு யாரால்தான் நீக்க முடியும்?

ஸ்ரீஸ்வாமியின் பாதுகாஸஹஸ்ரத்தை (846) நன்கு கவனிக்க வேண்டும் அதிலுள்ள ஒரு ச்லோகத்தை இங்கே குறிப்பிடுகிறேன்.

> முக்தாம்சுகேஸரவதீ ஸ்திரவஜ்ரதம்ஷ்ட்ரா
> ப்ரஹ்லாத ஸம்பதநுரூபஹிரண்ய பேதா ।
> மூர்த்தி : ச்ரியோ பவஸி மாதவபாதரக்ஷே
> நாதஸ்ய நூநமுசிதா நரஸிம்ஹமூர்த்தே : ।।

பகவான் ந்ருஸிம்ஹனாக அவதரித்தபோது பிராட்டி பாதுகையாக அவதரித்தாளாம். ஆகையால் அந்த அவதாரத்தில் மகாலக்ஷ்மியின் அவதாரம் இல்லை என்று சொல்ல முடியாது. இராம கிருஷ்ணாதி அவதாரங்களில் ஸீதா ருக்மிணி என்ற தகுந்த அவதாரங்களை போல் இந்த ந்ருஸிம்ஹ அவதாரத்தில் பிராட்டி பாதுகையாக அவதரித்தாலும் பெண்சிங்கமாக அவதரிக்கவில்லையே என்று சந்தேகப்பட வேண்டாம். பாதுகையே பெண் சிங்கம். சிங்கத்துக்குப் பிடரிமயிரும் கோரப் பற்களும் உண்டே. பிராட்டி அவதாரமான பாதுகையான பெண் சிங்கத்துக்கு இவை உண்டா என்றால், உண்டு என்கிறார். ரூபக முறையிலும் ச்லேஷமுறையிலும் பாதுகையைப் பெண்சிங்கமாக்கி வர்ணிப்பது ஸ்வாமியின் கைவந்த கலை;

மிகவும் சாதுரியமானது. பாதுகை தங்கக் கவசம் அணிந்துள்ளது அதில் முத்துக்கள் பதிந்திருக்கின்றன. கெட்டியான வைரக் கற்களால் அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது. அதில் முத்துக்களின் ஒளி நான்கு பக்கமும் பளபளவென்று வீசுகிறது. அது பிடரிமயிரை ஒத்திருக்கிறது. பாதுகையான பெண்சிங்கத்துக்குப் பிடரிமயிர் ஏற்பட்டுவிட்டது. வைரக்கற்கள் கோரப்பற்களை ஒத்திருக்கின்றன. ஆகையால் இந்த சிங்கத்துக்கு கோர பற்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆண் சிங்கமான நரசிங்கம் பக்திமானான ப்ரஹ்லாதனுடைய பக்திச் செல்வத்தை பார்த்து ஹிரண்யகசிபுவை ஸம்ஹாரம் செய்தது. இந்த பெண் சிங்கமும் உயர்ந்த தங்கமயமான கவசத்தைத் தரித்திருப்பதனால் பக்தர்களான நமக்கு ஆனந்த ஸம்பத்தை உண்டு பண்ணுகிறது. ஆகையால் நரம் கலந்த சிங்கமான பகவானுக்கு ஏற்ற பெண்சிங்கமாக ஆகிறது இந்தப் பாதுகை. எனவே ந்ருஸிமஹ அவதாரத்திலும் பிராட்டியின் அவதாரத்துக்கு குறையில்லை என்றார் இந்த ஆசார்யர்.

மேலும், பகவானுடைய ஒவ்வோர் அவதாரத்திலும் பிராட்டி ஒரே அவதாரம் எடுத்து வருகிறாள். கிருஷ்ணனாகப் பிறந்தபோது ஒரே ருக்மிணிதான். ஸ்ரீராமனாகப் பிறந்தபோது ஒரே சீதைதான். இரண்டு ருக்மிணி, இரண்டு சீதை என்பது இல்லை. எனவே ந்ருஸிம்ஹ அவதாரத்திலும் பிராட்டி ஒரே பாதுகையாக அவதாரம் செய்தாள். ஆகவே, இப்போது அஹோபில மடத்தில் மாலோலன் என்ற ந்ருஸிம்ஹன் தன் ஒரே திருவடியில்தான் ஒரே பாதுகையைத் தரித்திருக்கிறான். இது பிராட்டி பாதுகையாகப் பிறந்தாள் என்பதற்கு நற்சாட்சியாகவும் அமைகிறது. ஆகையால், எல்லா அவதாரத்திலும்போல் ந்ருஸிம்ஹ அவதாரத்திலும் பிராட்டியின் அவதாரம் பாதுகையாக உண்டு என்பதைப் பாதுகாஸஹஸ்ரத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் அழகிய ரீதியில் ரஸகனமாக அருளிச் செய்துள்ளார் என்பதை அநுபவித்தோம்.

'விஷ்ணோ: நேஹாநுரூபாம்' என்ற ப்ரமாணத்தின் படி பகவானுடைய மத்ஸ்ய கூர்மாத்வதாரங்களிலும் ததனு ரூபமாக அவதாரம் எடுத்து மார்பில் வஸிக்கிறாள் என்று சொல்ல வேணும். அது போலவே ந்ருஸிம்ஹாவதாரத்திலும் அநுரூபவேஷத்தை தரித்து வஸிக்கிறாள் என்றும் சிலர் சொல்லுவர். "அநுரூபரூப விபவை" என்கிறது சதுச்லோகி.

இங்கும் அங்கும் திருமாலன்றி இன்மை கண்டு என்று 710 பத்தில் ஆழ்வார் அநுபவிக்கிறார். உபாய தசையோடு ப்ராப்யதகையோடு வாசியற என்பது வ்யாக்யானம்.

சதுச்லோகியில் சொன்ன பிராட்டியின் பெறுமை ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் பகவான் அவதரித்த ஸமயமெல்லாம் இவளும் அவதரிக்கிறாள் என்று சொல்லப்படுகிறது. இங்கு, ஏன்? என்றால் இவளில்லாமல் அவனுக்கு ஸம்ச்ரிதரக்ஷணம் என்கிற யாகத்தில் அதிகாரமில்லை. நமக்கு யாகத்தில் ஸதர்மசாரணி இல்லாமல் எப்படி அதிகாரமில்லையோ, அவ்வாறுதான் ரக்ஷணயாகத்தில். நாம் செய்யும் சரணாகதி என்கிற யாகத்தில் பத்நி வேணும் என்கிற நிர்பந்தமில்லை. விதரனும் ப்ரமசாரியும்கூட செய்துக் கொள்ளவர். அவனது ஆச்ரிதரஷணம் யாகம் என்னும் யாகத்தில் அவள் அவசியம் வேண்டும். அது ஒரு யாகம். அவனுக்கு கமலை தர்ம பத்னி. கருணை முதலியவைகள் ரித்விக்குகள். இவன் தவிற இந்த தர்மம் மற்றவர்களால் செய்ய இயலாது என்றார் ஸ்வாமி தேசிகன். ஸஹதர்ம சரீ தவ என்றார். ஜனகன் இராமனைப்பார்த்து உன் உடன் இருந்து தர்மம் செய்கிறவள் என்றதால் அவளுக்குதான் ப்ராதன்யம் தோன்றும் என்று ரஸிப்பார்கள் பெரியோர். ஆகையால் ரக்ஷணத்தில் அவளுக்கு பலப்ரதாத்வம் ஆகிற உபாயத்வம் ஸ்வத: ஸித்திக்கும். இதை வைத்துதான் 'ஆகாரத்ரய

ஸம்பன்னாம்' என்று புருஷகாரத்வம் உபயத்வம் உபேயத்வம் என்று மூன்று விதமான ஆகாரம் கூறப்பட்டுள்ளது.

தகப்பனுக்கும் தனயனுக்கும் விவாதம். இது உலகத்தில் நடப்பது ஸஹஜம். பணவிஷயத்தில் பல விதமான போர். புத்ராதபிதனபாஜாம் பீதி : என்றார் சங்கர பகவத்பாதர். நீ என்னைச் சேர்ந்தவன் என்றான் பகவான். நாம் புத்ரர்களாயும் இல்லை. நான் என்னைச் சேர்ந்தவனே என்கிறோம். இது பகவானுக்கும் நமக்கும் விவாதம். ப்ரஹ்லாதனுக்கு தந்தை ஹிரண்யகசிபுவுக்கும் விவாதம். புத்ரன் நீ என் பிள்ளை. நான் உனக்கு தகப்பன். என் பெயரையே சொல். விஷ்ணுவின் பெயரைச் சொல்லாதே என்கிறான். இது நடக்கவில்லை. விஷ்ணுவாகிற கோடரிக்குக் கொம்பு இந்த பயல் என்று இவனை கொல்ல பல முயற்ச்சிகள். பலிக்கவில்லை. உன்னைக் கொல்ல வழி என்ன என்று கேட்டான். அப்பொழுது ப்ரஹ்லாதன் என்னைக் கொல்ல முடியாது. நான் சொல்லுகிற எம்பெருமான் தொட்ட தொட்டவிடமெல்லாம் இருக்கிறான். அப்படியில்லையென்றால் என் உயிரை நானே மாய்த்துக் கொள்கிறேன். என் உயிரில் எனக்கு ஆசை இருந்தால் நான் சொல்படி. இல்லாவிடில் அன்னவருக்கு அடியேன் அல்லன் என்றான். இவ்வாறு விவாதம் முற்றிற்று. இதுதான் ஸமயம் என்று எண்ணியும் தன்னாலே அமைக்கப்பட்ட அரண்மனைத் தூணில் இருக்க வழியில்லை என்று உறுதியுடன் கம்பத்தை காட்டினான். "அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே வளர்ந்திட்ட" என்றார் பெரியாழ்வார். இந்த ஸமயம் பிராட்டி பெருமாளுடன் அவதரிக்க ஆசைப்பட்டு சிங்க உருவை எடுத்துக் கொள்ளவும் முயற்ச்சித்தாள். அவஸரம் அவஸரம் என்று சொல்லியும் இவளுக்கு விளம்பமாயிற்று. லௌகீகத்திலும் அவஸரப்படுத்தியும் பெண்கள் அலங்காரம் முதலியவைகளை செய்து கண்ணாடிகளைப் பார்த்து விளம்பிப்பது வழக்கம். உடனே தூர்ணம் அவதரிக்க நிலை ஏற்பட்டது. உடன் ந்ருஸிம்ஹமாக அவதரித்தான். பிராட்டி பார்த்தாள். நமது அவதாரம் இல்லாமல் போய்விடுமே என்று எண்ணி பாதுகையாக அவதரித்தாள். அப்போழுது பாதுகையாக பிறந்து குழந்தையான ஹிரண்யனை கொல்ல வேண்டாம் என்று சொல்லுவதற்காக பகவானின் திருவடிகளை பிடித்துக் கொண்டாள். அஞ்ஞாதநிரஹை இவள். "பதக்ரஹணபுர்வம் அயாசதேவ' என்று அநுபவிக்கிறார் தூப்பில் பிள்ளை.

என் உயிர் நின்னால் கோறற்கு எளியது ஒன்றன்று. நான் முன் சொன்னவன் தொட்ட தொட்ட இடம் தோன்றினாயின் என் உயிர் நாநே மாய்பன். பின்பு வாழ்வு உகப்பன் என்னில் அன்னவற்கு அடியேன் அல்லன் என்றான் அறிவில் மிக்கான்" என்பது கம்பர் பாசுரம்.

எம்பெருமானுக்கு ஐந்து நிலைகள் உண்டு. அதில் அந்தர்யாமி என்பது ஒரு நிலை. அதில் எம்பெருமான் சங்குசக்ரதாரியாக பீதாம்பரத்துடன் நம் ஹ்ருதயத்தில் ஆவிர்பவிக்கிறான். அந்த நிலையிலும் பிராட்டி விடாமல் அவதரிக்கிறாள் என்பது மரபு. இதை ஸ்வாமி தேசிகன் தனது ப்ரபந்தத்தில் ஒரு பாட்டால் விளக்கி கூறுகிறார். அந்த பாசுரம் இதோ -

"காரணமாம் உயிராகி அனைத்தும் காக்கும் கருணைமுகில், கமலையுடன் இலங்குமாலும்" என்பது,

ஸ்ரீ என்கிற சப்தத்தாலேயே சொல்லப்பட்டது ஆகாரத்ரயம் என்பதை கவனிக்கவும்.

மூலமந்திரத்தில் "நம:" என்று உள்ளது. இதற்கு பரயோஜனையில், பந்தா: நகார: உத்திஷ்ட: என்கிற ப்ரமாண ரீதியில் விஸர்கத்தால் சொல்லப்படும் பரமாத்மா பர்தானமார்க்கம். ஆக

பகவான் சித்தோபாயம் ப்ரதாணம் என்ற அர்த்தத்தைக் கொள்கிறோம். அது போல் ஸ்ரீ: என்கிற இடத்தில் விஸர்கம் லக்ஷ்மியைச் சொல்லும் ச்.ர.ஈ என மூன்று பதம். ச் என்பது, கேட்கிறாள் ஆர்த்தவனியை, பகவானை கேட்க்கும்படிசெய்கிறாள் என அர்த்தம். இதனால் புருஷ காரத்வம், ச். ஈ. என்பதல் ஸ்ரீங்ஸேவாயாம் என்றதாதுவின்படி ஸேவ்யத்வம். இதனால் ப்ரப்யத்வம், ஈ என்பதால் இண் கதை என்ற தாதுவின்படி. ஈயதே அநயா என்று ப்ரபகத்வம். ஆக மூன்று ஆகாரமும் ஸ்ரீஎன்கிற சப்தத்துக்கு பொருள் ஆகிறது. நம: என்கிற இடத்தில் விஸர்கம் பரமாத்மாவை சொல்லும். அதுபோல் ஸ்ரீ: என்ற இடத்தில் விஸர்கம் மஹாலக்ஷ்மியைச் சொல்லும். இதனால் எம்பெருமான் அவதாரம்போது இவள் அவதாரம் ஸித்திக்கிறது. மூலமந்திரத்தில் ஓம் என்ற ப்ரணவம் பகவத் வாசகம் இந்த மந்திரத்தில் ஸ்ரீ: என்கிற சப்தம் மூன்று ஆகார விசிஷ்ட பிராட்டியைச் சொல்கிறது.

*****

# 11. ப்ரபத்தியில் ஒரு விசேஷம்

ஓர் ஊரில் ஒரு மகான் இருந்தார். அவர் எல்லாம் கற்றவர்; ராமாநுஜ ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். ஆகையால் விசிஷ்டாத்வைத மதத்தில் தேர்ச்சி பெற்றவர். ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவரானபடியால் ந்யாஸதிலகம், ந்யாஸவிம்சதி, ந்யாஸதசகம், சரணாகதிதீபிகை, ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம் முதலிய ஸ்ரீகோசங்களை அர்த்தத்துடன் நன்கு கற்றுப் ப்ரபத்தி சாஸ்திரத்தில் விசேஷத்துடன் கரைகண்ட அறிவாளியாக இருந்தார். அவர் சில சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதிப்பது வழக்கம். ஒரு சமயம் பகவத்கீதை காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தார். அநேக சிஷ்யர்கள் திரள்திரளாகக் கூடியிருந்து ஸ்வாமியின் காலக்ஷேபத்தை அநுபவிப்பது வழக்கம். கடைசி அத்தியாயத்தில் சரமச்லோகம் காலக்ஷேபம் நடந்து வந்தது.

இவர் சிஷ்யர்களைப் பார்த்துக் கூறுகிறார்:- சிஷ்யர்களே இது கீதையிலுள்ள சரமச்லோகம். இதில் வேத வேதாந்தத்திலுள்ள ஸாரமான அர்த்தம் சொல்லப்பெறுகிறது. கீதைக்கே முக்கியமான அர்த்தத்தைச் சொல்லுவதில் இங்கேதான் நோக்கம். இது ப்ரபத்தியைச் சொல்லுகிறது. ப்ரபத்தி, பரந்யாஸம், சரணாகதி, ந்யாஸம் என்பவை ஒன்றைத்தான் சொல்லுகின்றன. எவன் எந்தப் பலனை விரும்பினாலும் அதைப் பெற எம்பெருமான் ஒருவனிடத்தில் சரணாகதி செய்தால் அந்த எம்பெருமான் சந்தோஷமடைந்து அந்தப் பலனைக் கொடுக்கிறான். "எல்லா வழிகளையும் விட்டு என்னை ஒருவனையே சரணமாக நீ அடை. நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம்" என்பது இதனுடைய கருத்து. இதன் அர்த்தத்தை ஸ்ரீஸ்வாமி தேசிகன்,

ஸுதுஷ்கரேண சோசேத் யோ யேந யேநேஷ்ட ஹேதுநா ।
ஸ ஸ தஸ்யாஹமேவேதி சரமச்லோகஸங்க்ரஹ:॥ என்று சுருங்க அருளிச் செய்திருக்கிறார்.

சாகுந்தல நாடகத்தில் ஒரு ச்லோகம்.

யேன யேனவியுஜ்யந்தே ப்ரஜா : ஸ்நிக்தேன கர்மணா.
ஸ சபாபாத்ருதே தாஸாம் துஷ்யந்த இதி குஷ்யதாம் ॥ என்பது

எவன் எவனுக்கு எந்த எந்த பந்துக்களின் வியோகம் ஏற்பட்டாலும் அந்த ஸ்தானத்தில் இருந்து காப்பாற்றுகிறவன் துஷ்யந்தன் என்று ஒலைச்சாத்தச் சொன்னான். ஒரு பெண்ணுக்கு பர்தா மறித்தால் அந்த ஸ்தானத்திலும்தான் இருப்பதாக ஏற்படும் அதற்கு பரிஹாரமாக "பாபச் செயலில் தவிற என்று மேல் சொன்னது. இவ்வாறு காளிதாஸன் சொன்னதை நினைத்து சரமச் ச்லோகத்துக்குத்தான் ஒரு விதமாக பொருள் கூறினார். ஏன். மனிதன் அத்யல்பன். அவன் விஷயமாக ஏன் இப்படி கூற வேண்டும் என்று பகவான் விஷயத்தில் வைத்து ரஸகனமாக ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸாதித்தார்.

"ஹுதுஷ்கரேண சோ சேத்ய: தஸ்ய தஸ்ய அஹமேவேதி" என்பது.

ஜனங்கள் வெவ்வேறு பயன்களை விரும்புகிறார்கள். ஒருவன் குழந்தைகளை விரும்புவான். மற்றொருவன் மழையை; இன்னொருவன் ஐச்வர்யத்தை. இப்படி ஜனங்களின் மனோபாவம்

இருக்கிறது. அந்த அந்தப் பலனை அடைவதற்கு வேதங்களில் புத்திரகாமேஷ்டி, காரீரி இஷ்டி முதலியவை வழிகளாகச் சொல்லபபெற்றிருக்கின்றன. இவற்றைச் செய்வது கஷ்டம். இவற்றைச் செய்தால் அந்த அந்தப் பலனை அடைய முடியும். இந்தச் சமயத்தில் அவற்றைவிட்டு பகவானிடம் சென்று 'நானோ இந்த இந்தப் பலன்களை விரும்புகிறேன். அவற்றுக்கு வேதங்களில் சொன்ன வழிகளைச் செய்ய முடியாமல் தவிக்கிறேன். அவற்றைச் செய்தால் என்ன பயன்கள் வருமோ அவற்றைத் தேவரீரே அந்த வழிகளுக்குப் பதிலாக இருந்து அடியேனுக்கு அநுக்ரகிக்க வேண்டும்' என்று எம்பெருமான் திருவடிகளைக் கெட்டியாகப் பிடித்துப் கொள்வதுதான் சரணாகதி. மோக்ஷரூபமான பலனுக்கும் இந்தச் சரணாகதிதான் உபாயம். "மோக்ஷத்துக்கு காரணமான பக்தியோகத்தை என்னால் செய்ய முடியாததனால், அந்த ஸ்தானத்தில் தேவரீர் இருந்து அந்தப் பலனைக் கொடுக்க வேண்டும்" என்று பிரார்த்திப்பது. இப்படி செய்தால் மோக்ஷம் கட்டாயம் கிடைக்கும். ஆகையால் எல்லா விதமான பலனுக்கும் சரணாகதி உபாயமாகிறது. இப்படி மோக்ஷ ரூபமான பலனை உத்தேசித்து சரணாகதி செய்தபிறகு, இங்குள்ள வரையில் ஒருவிதமான குற்றமும் இல்லாமல் கைங்கர்யம் செய்துகொண்டு இருக்கவேண்டும் என்று உபதேசித்தார்.

பகவான் ரக்ஷகன். அநிஷ்டத்தை விலக்கி இஷ்டத்தைக் கொடுப்பவன். எந்த கார்யங்களைச் செய்தாலும் அவன் தான் ரக்ஷகன்; ப்ரபத்தியிலும் அவன்தான் ரக்ஷகன். ஆனால் ஒரு விசேஷம். நான் அந்த அந்த கர்மாக்களைச் செய்யாமல் தவிக்கிறவன். ஆக அதைச் செய்தால் வரும் பயனை அதை செய்யாமலே நீ கொடுக்க வேண்டும் என்பது ப்ரார்த்தனை. இதுதான் இங்கு விசேஷம். உபாயத்தை எதிர்பார்க்காமல் ரக்ஷிப்பது. நிரபேக்ஷ ரக்ஷகத்வ ப்ரார்த்தனை.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிஷ்யர்களில் ஒருவன் "ஸ்வாமிந்! தேவரீர் ஸாதித்தது நன்றாக புரிந்தது. ஆனால் ஒரு சந்தேகம் உள்ளது. நாம் மோக்ஷத்துக்காகச் சரணாகதி செய்தால் நம்முடைய பாவங்கள் எப்படி விலகுகின்றன? அதை விவரித்து ஸாதிக்க வேண்டும்" என்றார்.

ஆசார்யர் - நம்முடைய பாவங்கள் மலைமலையாக இருக்கின்றன. இவற்றுள் ஸஞ்சிதம், ப்ராரப்தம் என்று இரண்டு வகை உண்டு. ஸஞ்சித பாபங்கள் சரணாகதி செய்ததும் போய்விடுகின்றன. ப்ராரப்தத்தில், 'இந்தச் சரீரம் உள்ளவரையில் இருந்து பிறகு மோக்ஷத்துக்கு வருகிறேன்' என்று இவன் வேண்டிக் கொண்டபடியால், இவன் ஒப்புக்கொண்ட ப்ராரப்த பாகத்தைச் சரீரம் உள்ள வரையில் அநுபவித்துவிடுகிறான். மற்ற எல்லாப் பாவங்களும் தொலைந்துவிடுகின்றன. பிறகு மோக்ஷத்தை அடைகிறான்.

சிஷ்யன் - மனத்தில் நன்றாகப் புரிந்தது. சரணாகதி செய்பவன் இந்த உடல் உள்ளவரையில் பாவத்தைச் செய்யாமல் எப்படி இருப்பான்? அறியாத்தனமாகச் செய்த பாவங்கள் தாமாகத் தொலைந்துவிட்டாலும், தெரிந்தே சில பாவங்களை இவன் செய்வானே. பாம்புடன் ஒரு கூரையில் வாசம் செய்பவனுக்கு ஒரு சமயம் பாம்பின் உபத்ரவம் ஏற்படத்தானே ஏற்படும்? சரீரத்திலுள்ள இவனுக்குத் தெரிந்தே பாவம் ஏற்படுமே. அது போக என்ன வழி?

ஆசார்யர் - அப்படிப் பாவம் ஏற்பட்டால் அது போவதற்காக மறுபடி ஒரு தடவை சரணாகதி செய்ய வேண்டும்; பாவம் விலகிவிடும். அப்படிச் செய்யாவிட்டால் லகுவான சிக்ஷைகளைப் பகவான் கொடுத்து அநுபவிக்கச் செய்துவிடுவான்; அதாவது கண்ணில்லாமற் போவது, காது செவிடாவது, புத்ரன் பார்யை இவர்கள் அடங்காமலிருப்பது இப்படி சிக்ஷைகளை பகவான் செய்துவிடுவான்.

சிஷ்யர் - ஸ்வாமிந்! இப்படி அபராதங்களைச் செய்து, அதற்கு தண்டனையையும் அநுபவித்துப் பிறகு மோக்ஷத்தை அடைவது அவ்வளவு திருப்திகரமாக இல்லை. குற்றமே செய்யாமல் இங்கு உள்ளவரையில் பகவானுக்குக் கைங்கரியம் செய்து மோக்ஷத்தை அடைய வேறு வழி உண்டா?

ஆசார்யர் - நாம் சரணாகதி செய்யும்போது, 'இந்த சரீரம் உள்ளவரையில்' என்று வேண்டிக் கொண்டபடியால், ப்ராரப்த பாகம் ஒன்றை இசைந்திருக்கிறோம் அல்லவா? அதில் மேற்கொண்டு பாவங்களை (குற்றங்களை)ச் செய்வதற்குக் காரணமான பாவங்கள் இருக்கின்றன. இவற்றுக்கு, 'பாபாரம்பகபாபம்' என்று பெயர். அந்தப் பாபாரம்பகபாபமும் போக வேண்டும் என்று சரணாகதி செய்யும்போது வேண்டிக்கொண்டால், மேல்உள்ளவரையில் பாவமே ஏற்படாது. ஆகையால்தான் ஆசார்யர்கள் சிஷ்யர்களுக்குச் சரணாகதி செய்து வைக்கும்போது, பாபாரம்பகபாபமும் தொலைய வேண்டும்' என்று வேண்டிக்கொள்வார்கள்.

சிஷ்யன் - ஸ்வாமிந்! ரொம்ப ஸந்தோஷம். விஷயம் நன்றாக புரிந்தது. இம்மாதிரி தேவரீர் ஸாதித்தபடி சரணாகதி செய்துகொண்டவர்கள்கூடத் தெரிந்தே பாவங்களைச் செய்து வருகிறார்களே?

ஆசார்யர் - சாஸ்திரத்தின் உண்மை இது. குழந்தையை அடைவதற்குப் புத்திரகாமேஷ்டியைச் சிலர் செய்கிறார்கள். ஸந்ததியும் பெறுகிறார்கள்; சிலர் செய்தும் பலனை அடைவதில்லை. மழை பெய்ய, வேதங்களில் சொன்ன சில காரியங்களைச் செய்து, சிலர் பலனை அடைகிறார்கள்; சிலர் பெறுவதில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம்? பலனைப் பெறுகிறவன் சரியான வழியில் நின்று கர்மங்களைச் செய்கிறான். முறை தவறிச் செய்தால் எதுதான் பலனைக் கொடுக்கும்? சரணாகதியைச் சரியான முறையில் செய்யாமற் போனால் பலன் ஏற்படுவதில்லை. இது எண்ணினவன் குற்றமோ, செய்து வைத்த ஆசார்யனின் குற்றமோ, செய்யப்பட்ட சரணாகதி சரியான முறையில் இல்லாததனால் அதன் குற்றமோ என்றுதான் சொல்ல வேண்டும். 'உடல் உள்ளவரையில் பாவமில்லாமல் கைங்கர்யம் செய்ய வேண்டும்' என்று பாபாரம்பகபாபத்துக்கு அஞ்சிச் சரணாகதி செய்த பிறகும், மேல் தெரிந்தே க்ரூரமானவையும் தகாதவையுமான பாவங்களைச் செய்து வந்தால் அவன் விஷயத்தில் சரணாகதி எப்படிச் சரிவரச் செய்யப் பெற்றது என்று சொல்ல முடியும்? பகவான் ஒருவனையே சரணமாக அடைந்த பிறகும் ஒருவன் காளிகோயிலுக்கும் தேவதாந்தரக் கோயிலுக்கும் சென்றும், உற்சவங்களை நடத்தி வைத்தும் கண்ணில் தாரைதாரையாக ஜலத்தைப் பெருக்கிக் கொண்டு அந்தத் தேவதாந்தரங்களிடத்தில் ஈடுபட்டு வந்தால் அவன் செய்த சரணாகதி சரியானபடி நடக்கவில்லை என்றுதானே சொல்ல வேண்டும்? அதைப் போலத் தான் இதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

"மந்த்ராக்யம் முக்தி பீஜம் பரிணதிவசத: கல்பதே ஸத்பலாய" என்றார். விதை எவ்வாறு அங்குரம் நெல் காய் முதலிய வைகளுக்கு காரணமோ அது போல் இம்மந்திரம் மோக்ஷ பலத்துக்கு பீஜம். சரியான இடத்தில் அதை விதைக்க வேண்டும். எலி முகுந்ததையோ பழையதையோ விதைத்தால் எவ்வாறு பலிக்கும். விதை விதைப்பவன் அதற்கு தோஷம் இல்லாமல் சரியாக இருந்தால்தான் பலிக்கும். அவ்வாறே இங்கும்.

சிஷ்யன் - ஸ்வாமிந்! ஐயம் நீங்கிற்று. மனத்தில் நன்றாகப் பதிந்தது. ஆனாலும் மற்றொரு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சரணாகதி செய்தபிறகு இந்த உடல் உள்ளவரையில் ஒரு வித குற்றமும் இல்லாமல் ஒருவன் கைங்கரியம் செய்து வருகிறான். தெரியாத்தனமாகக்கூட அவனுக்குக் குற்றம் ஏற்படுவதில்லை. இது எல்லாருக்கும் தெரிந்ததே. ஆனால் அவன் பல

துன்பங்களை அநுபவிக்கிறான். பாவங்களைப் பிறகு தெரிந்து செய்திருந்தால் அவற்றின் பலனாக இந்தத் துக்கங்கள் ஏற்பட்டன என்று சொல்லலாம். அவனுக்கோ பாவமே பிறகு ஏற்படவில்லை. இதற்குக் காரணம் என்ன?

ஆசார்யர் - 'சரீரம் உள்ளவரையில்' என்று ப்ராரப்த பாகத்தை இவன் இசைந்திருக்கிறான் அல்லவா? அதில் துன்பங்களைக் கொடுக்கக்கூடிய பாவங்கள் இருக்கின்றன. அதன் பலனாக இது உண்டாகிறது.

சிஷ்யன் : - ஸ்வாமிந்! விஷயம் வாஸ்தவந்தான். சரணாகதி செய்யும்போதே இவன் இசைந்துள்ள ப்ராரப்தபாகத்தில் துக்கங்களைக் கொடுக்கக் கூடிய பாவங்களும் ஒழிய வேணடும் என்று வேண்டிக் கொண்டிருந்தால் பிறகு துன்பம் ஏற்படாது அல்லவா? 'பாபாரம்பகபாபங்கள் போக வேண்டும்' என்று வேண்டிக் கொள்வது போல், 'து:காரம்பகபாபங்களும் தொலைய வேண்டும்' என்று வேண்டிக் கொள்ளலாம் அல்லவா? சரணாகதிதான் எல்லாப் பலனையும் கொடுக்கும் என்று தேவரீர் ஸாதிக்கிறீரே,

ஆசார்யர் - அழகான கேள்வி. இதுவரையில் இதை யாரும் கேட்டதில்லை. இதற்குப் பரிகாரமும் யாரும் எங்கும் உசிதமாக ஸாதித்ததுமில்லை. ஆனால் ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்தியை நன்கு ஆராய்ந்தால் இதற்கு பதில் புலப்படும். தூப்புல் வள்ளலான தேசிகமணி தவிர வேறு யார்தாம் இதற்கு பதில் ஸாதிக்க முடியும்? ந்யாஸதிலகத்தில் பதினான்காவது ச்லோக ரத்தினத்தை மனத்தில் தரித்துப் பார். தானாகவே பதில் விளங்கும். ஸ்லோகம் -

சோகாஸ்பதாம் சமதந: ச்ரயதாம் பவாப்தௌ,
ராகாஸ்பதாம்ச ஸஹஜம் ந ருணத்ஸி து:கம் ।
நோசேதமீ ஜகதி ரங்கதுரீண! பூய:,
க்ஷேமாதிஷ்ட போகரஸிகாஸ் தவ ந ஸ்மரேயு: ॥

(ஸ்ரீந்யாஸதிலகம் - 14)

ஸுகவாழ்க்கையிலேயே இருந்து ஆனந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும் ஒருவன் அந்தச் சமயத்தில், 'ஐயோ, நாராயணா! தேவரீர் எனக்குச சீக்கிரத்தில் திருவடி ஸாதிக்கக்கூடாதா? ஏன் இந்த உலகத்தில் நான் இருக்கவேண்டும்?' என்று வேண்டிக்கொள்வானா? ஒரு காலும் வேண்டிக்கொள்ளமாட்டான். எம்பெருமானையே நினைக்கவும் மாட்டான். சாமானியமான கஷ்டங்களை அநுபவித்துக்கொண்டு உயர்ந்த சுகங்களை அநுபவிப்பனே பகவானை நினைப்பதில்லையே. அப்படி இருக்க இவன் எப்படிப் பகவானை நினைப்பான்? அதிகமாக, தேகத்தின் அநாரோக்கியம், புத்திர பந்துக்களின் வியோகத்தினால் ஏற்படும் சோகம் முதலியவை இருக்கும்போது கதறிப் பகவானை வணங்கி, 'உடனே திருவடி ஸாதிக்க வேண்டும்' என்று வேண்டிக் கொள்வான். இது உலக இயற்கை. ஆகையால் சரணாகதி செய்யும்போது, 'து:காரம்பகபாபமும் போக வேண்டும்' என்று எண்ணிச் சரணாகதி செய்தால், பகவான் அதை ஒப்புக்கொள்ளமாட்டான். மேற்கொண்டு துக்கமே இல்லாமல் இந்தச் சரீரம் உள்ளவரையில் இன்பங்களையே அநுபவித்து வந்தால் அத்யல்பமான அந்த இன்பங்களிலேயே மிக்க சுவை இவனுக்கு உண்டாகிவிடும். மேன் மேலும் அதிலேயே இவனுக்கு நாட்டம் ஏற்பட்டுவிடும். அப்போது பகவானையே இவன் மறந்துவிடுவான். துக்கங்கள் வரும்போதல்லவா பகவானின் ஸ்மரணம் வருகிறது? ஆகையால் துக்கங்களோடு கலந்துதான் பகவான் சுகங்களைக் கொடுப்பான். எனவே, பாபாரம்பகபாபம் போக வேண்டும் என்று சரணாகதி செய்வது போல,

து:காரம்பகபாபம் போக வேண்டும் என்று சரணாகதி செய்யக்கூடாது. அதற்குப் பகவான் இசையமாட்டான். இது தான் நம் தூப்புள் வள்ளல் தந்த சாஸ்திரார்த்தம்.

"கூவிக்கொள்ளும் காலம் குறுகாதோ" என்றார் ஆழ்வார். இதைப் படித்த ஒரு வ்ருத்தர். நித்யமும் தேவராஜன் ஸன்னதியில் ப்ரதக்ஷிணம் செய்துகொண்டும் கூவிக்கொள்ளும் காலம் குறுகாதோ" என்பதை உரக்கச் சொல்லிக் கொண்டும் போவார். இதை பார்த்த அர்ச்சகர் 'இவர் உலக இன்பத்தில் ஆசை உள்ளவர் என்பதை அறிவிக்க ஒரு நாள் மூல விக்ரஹத்தின் பின் ஒளிந்துகொண்டு இவர் இப்படி சொல்ல குறுகிவிட்டது குறுகிவிட்டது என்று உரைத்தாராம். இதைக் கேட்ட இவர் மறுநாள் ஏன் வருகிறார். அவ்வாறு நசை நமக்கு.

ஒரு ஆசார்யர் சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் ஸாதிக்கிறார். அவருக்கு வயிற்று வலி அதிகம். ஆக காலக்ஷேபம்சொல்லும்போது தனது வயிற்று வலியை பக்கத்திலுள்ள க்ருஷ்ணாஜினத்தில் ஏத்திவிடுவார். காலக்ஷேபம் ஆனதும் அதை வழக்கம்போல் தன்னிடம் வரச் செயதுவிடுவார் - இங்கு ஒர் சிஷ்யன் ஏன் இப்படிச் செய்யவேண்டும். வலியால் தான் ஏன் துடிக்கவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆசார்யன் சொன்ன பதில். வியாதியும் ஒரு ஆசார்யர் என்று. இதன் கருத்து, இது உள்ளபடியால்தான் மேலே பாபம் செய்யாமல் இருக்க புத்தி உண்டாகிறது. பகவானைப் பார்த்து 'சீக்கிரம் உன் திருவடியைத்தா, விரைவில் மோக்ஷம் அடைவேன்' என்று கேட்கிற புத்தியும் உண்டாகிறது. இவ்வாறு பகவானை ஸ்மரிக்க வேண்டும் என்று எண்ணிதான் பகவான் துக்காரம்பக பாபத்தை ப்ரபத்தியால் போக்குவதில்லை என்று.

ஆசார்யன் - ப்ரபத்தியில் ஒரு விசேஷம் சொல்கிறேன். கேண்மின். பாவங்கள் ஒவ்வொருவருக்கும் மலை மலையாகக் குவிந்து கிடக்கின்றன. இதை இரண்டு பாகமாக பிரிப்பர். ஸஞ்சிதம் ப்ராரப்தம் என்று. அதில் பலங்க கொடுக்க வேணும் என்று எண்ணத்துடன் எந்த பாகத்தை எடுத்துக்கொள்கிறானோ, அதற்கு ப்ராரப்தம் எனப் பெயர். இந்த பாகம் பல சரீரங்களைக் கொடுக்கும் வல்லமை பெற்றது. அதில் இப்பொழுது ஒரு சரீரத்தை எடுத்து அநுபவித்துக் கொண்டுள்ளோம். ப்ரபத்தி செய்தால் ஸஞ்சிதம் அழிந்துவிடும். ப்ராரப்தத்தில் இப்பொழுது எடுத்துக் கொண்டு அநுபவிக்கும் சரீரத்தைத்தவிர மற்ற பாகங்கள் வேண்டாம் என்று கேட்கிறபடியால் இந்த கர்மாவைத் தவிர மற்ற பாகங்களும் அழிந்துவிடும். இதற்கு அநுப்யுபகத ப்ராரப்தாசம் என பெயர். இதை விட ஒப்பொண்ட பாகத்துக்கு அப்யுபகதம் ப்ராரப்தம் எனப் பெயர். இதிலும் ஸுகதுக்கங்களைக் கொடுக்கும் கர்மபாகம் நிறைய உள்ளது. பக்தியோகத்துக்கு ப்ராரப்தத்தைப் போக்கடிக்க திறமை இல்லை. ப்ரபத்திக்கு அது உண்டு. அது மாத்திரம் இல்லாமல் இப்பொழுதே எல்லா பாபங்களும் போக வேண்டும் என்று நினைத்துப் பண்ணினால் அப்யுபகத ப்ராரப்தாம்சமும் நசித்துவிடும். பக்தியை அவதார ரஹஸ்ய சிந்தனையோடு செய்தால் ப்ராப்தமும் ஸர்வம் போய்விடும் என்பது ஸித்தாந்தம். ஆக பக்திக்கு ஸஞ்சித நாசகத்வம் போல். இதற்கு ப்ராப்த நாசகத்வமும் அப்யுபகத கர்மம் தவிர மற்ற கர்ம நாசகத்வமும் விசேஷம். இங்கு பாபாரம்பத பாப நிவர்த்திக்காகவும் ப்ரபத்தி செய்யலாம் என்பதுபோல் துக்காரம்பக பாப நிவ்ருத்யர்த்தமாகவும் செய்யலாமே என்பது உன்னுடைய கேள்வி. இதற்கு தான் ஸ்வாமி தேசிகன் செய்யக் கூடாது என்று சமத்காரமாக பதில் கூறினார்.

இங்கு ஒரு சந்தேகம். சிஷ்யன் கேட்கிறான். ஸ்வாமின் பாபாரம்பக பாபம் போக வேண்டும் என்று ஒருவன் ப்ரபத்தி செய்யாமல் இருந்தால் மேல் பாவங்கள் ஏற்படும். அதன் மூலம் க்லேசங்களும் உண்டாகும். வந்த பிறகு அந்த கஷ்டங்கள் (வயிற்று வலி) முதலியவை போவதற்காக ப்ரபத்தி செய்யலாமா.

ஆசார்யர் - தாராளமாக செய்யலாம். இது புந:ப்ரபத்தியில் சேராது. இதற்கு ப்ராயச்சித்த ப்ரபத்தி என்று பெயர்.

சிஷ்யன் - பாபாரம்பக பாபம் போக வேண்டும் என்று ப்ரபத்தி செய்வதால் லாபம் என்ன ? மேல் கொண்டு புத்தி பூர்கமாக பாபம் செய்தால் வரும் கஷ்டம் நீங்குவதற்குதானே செய்கிறோம். அப்பொழுது பாபமும் வர ப்ரஸக்தி இல்லை. கஷ்டமும் வர ப்ரஸக்தியில்லை. ஆக து:காரம்பக பாபம் போக ப்ரபத்தி செய்வது போலத்தானே ஆய்விட்டது. இதனால் உங்கள் கருத்து ஐயிக்கவில்லை. நான் கேட்டது போலத்தான் முடிந்துவிட்டது. மேலும் அப்யுபகத ப்ராரப்தத்தில் புண்யாம்சமும் இருக்கும். அதனால் மேல் சுகமும் ஏற்படும். இதனால் இவனுக்கு வைராக்யம் வர வழி ஏது. துக்காரம்பக பாபத்தை வேண்டிக்கொண்டால் துக்கம் வராமல் சுகமாகவே இருப்பான். அதன் மூலம் எம்பெருமானை நினைக்கமாட்டான் என்று சொன்னீரே. அதுபோல்தான் அப்யுபகத ப்ராரப்தத்தில் புண்யாம்சமும் இருப்பதால் சுகமும் வரும் ஆகையால் பகவானை நினைக்க வழி யேது என்ற கேள்வி உண்டாகுமே. ஆக முதலிலேயே ஸுகாரம்பக புண்யமும் போகவேண்டும் என்று கேட்கவேண்டியதுதானே.

ஆசார்யன் - வாஸ்தவம்தான். ஆனால் இங்கு மர்மத்தை யோசிக்கவேண்டும் துக்கமே கலசாத ஸுகத்தை அநுபவிப்பதற்கும் துக்கம் கலந்து அத்துடன் அநுபவிப்பதற்கும் வாசியுண்டு. முதல் அம்சத்தில் வைராக்யம் வர வழியில்லை. இரண்டாவதில் வைராக்யம் அவச்யம் வரும். நீயே அதை யோசித்துப்பார். துக்கம் வராமலும் சுகமும் வராமலும் இருக்க நினைத்தால் அப்பொழுது பண்ணும் ப்ரபத்தி ஆர்த பாபத்தாயாகவேதானே முடியும். ஆக இதெல்லாம் யோசித்து மனதில் நிம்மதியடைய வேண்டும்.

1, ஸ்வரக்கலோகம் எப்பொழுதும் ஆனந்தத்தையேக் கொடுக்க கூடியது. அதனால் அங்கு சென்றவனுக்கு வைராக்யம் வராது.
2. நரகம் எப்பொழுதும் வேதனையைக் கொடுப்பது. அதனால் அங்கு இருப்பவனுக்கு ஐயோ நாம் எப்பொழுது வெளியில் வருவோம் என்கிற எண்ணமே உண்டாகும். மனுஷ்யலேகத்தில் ஸுகம் துக்கம் கலந்து வருமாகையால் இதில் மனிதனுக்கு நப்பாசை இருக்க வழியுண்டு. ஆக சிஷ்யனே நீ யோசித்துப்பார். துக்காரம்பகமான பாபத்தையும் கழிக்க வேண்டும என்று ப்ரபத்தி செய்தால் அதை கொடுத்துவிட்டால் எப்படி இவனுக்கு வைராக்யம் வந்து பகபதனுபவத்தில் எப்படி ருசி ஏற்படும். மோக்ஷத்தில்தான் எப்படி நசை ஏற்படும். அதனால் அந்த பாவங்களைப் போக்கடித்து மோக்ஷம் வேண்டும் என்று கேட்கவும் தகா. அவனும் கொடுக்க மாட்டான்.

சிஷ்யன் - ஆசார்யரே, நன்கு புரிந்தது. ஆனால் ஒரு சந்தேஹம். அடியேன் கேட்ட ப்ரச்னத்துக்கு பதில் வரவில்லை. துக்கத்தைக் கொடுக்க கூடிய பாபாரம்பக பாபம் போகவேண்டும் என்று ப்ரத்தி ஒப்புக் கொண்டுன்ளோம். அப்படியானால் பாபமும் போய்விட்டது. அதனால் உண்டாகும் துக்கமும் போய்விடும். ஆக முன்போலத்தானே பகவதனுபவத்தில் ருசி ஏற்படாது?

ஆசார்யன் - நீ குசாக்ரபுத்தி. நன்கு தெரிந்து கொண்டுதான் ப்ரச்னை பண்ணுகிறாய். ஆனால் ஒன்றை யோசித்துப் பார். துக்கங்களுக்கு காரணமான சரீராந்தரங்களை இவன் வேண்டாம் என்று சொல்லிவிட்டான். இந்த சரீரத்தை ஒப்புக்கொண்டுள்ளான். இதில் பல ஸுக துக்கங்களுக்கு காரணமான பாகங்கள் உள்ளன. துக்கக ரணமான பாபங்களும், பாபங்களுக்கு

காரணமான பாபங்களும் உண்டு. நேராகவே துக்கத்தைத் தரக்கூடிய பாபங்களும் உண்டு. முதல் பாகம் போகவேண்டிக் கொண்டோம்.

இரண்டாவதான பாகமும் போகவேண்டும் என்று ப்ரார்த்தித்து அவனும் தந்து விட்டால் ஸ்வர்கத்துக்கு ஸமமாக ஆகிவிடும் மனுஷ்ய லோகமும். ஆக நப்பாசைதான் இருக்கும். வைராக்யம் வர வழியே இல்லை. ஆகவேதான் அப்படி நடக்காது என்று சொன்னது.

சிஷ்யன் - நன்கு புரிந்து விட்டது. இப்படி யார் உபதேசம் செய்யமுடியும். தினவு அடங்கும்படி சொல்வதற்கு உங்களுக்கு ஸமமாக யாருமில்லை. இவ்வளவு உள் புகுந்து பார்த்தவர்களும் இல்லை. ஆகவேதான் தங்களிடம் கேட்டு கொண்டேன். ஸந்தோஷம்.

*****

# 12. தாஸ்யம்

தாஸ்யம் என்றால் தாஸனின் (வேலைக்காரனின்) தன்மை, வேலை, கைங்கரியம் என்று பொருள்படும்; அதாவது அடிமை என்று ஆகும். உலகத்தில் ராஜாவினிடத்தில் ப்ருத்யன் அடிமைப்பட்டிருக்கிறான். பர்த்தாவினிடத்தில் பத்தினியும், பிதாவினிடத்தில் புத்திரனும் அடிமைப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். இப்படியே தமையனிடத்தில் தம்பி. இவ்வாறே இதைப்பல இடங்களில் பார்க்கிறோம். இத்தகைய அடிமை ஓர் உபாதிவசத்தாலே ஏற்பட்டது. அரசன் தன் வேலைக்காரனை வேலையில் இழியும்படி செய்து வேலையை வாங்கிக்கொள்ளுகிறான். ஆனால் இது சம்பளம் முதலிய காரணங்களால் ஏற்பட்டது. அரசன் இவனுக்குக் பொருளைக் கொடுக்காவிட்டால் இவன் எப்படி வேலைக்காரனாவான்? அரசனுக்கும் இவனுக்கும் என்ன ஸம்பந்தம் உள்ளது ? ஆகையால் ஒருவனுக்கு ஒருவன் ஸ்வாமியாக ஆவதும் யஜமானனாக ஆவதும் சேஷியாக ஆவதும் அர்த்தப்ரயுக்தம்.

கணவன் - மனைவியினிடத்தில் இந்த ஸம்பந்தம் உள்ளது. ஆனால் சிறிது வித்தியாசம் உண்டு. கணவன் மனைவிக்கு பொருள் முதலியவற்றைக் கொடுக்காமல் போய்விட்டாலும், கணவன் கணவனே; மனைவி அவனுக்கு மனைவிதானே? உயிருள்ள வரையில் இந்த ஸம்பந்தம் விடாது. புண்ய-பாபரூப கர்மஸம்பந்தம் உள்ளவரையில்தானே ஒருவன் ஒருத்திக்குக் கணவனாவதும், ஒருவனுக்கு ஒருத்தி மனைவியாவதும்? இது போலத்தான் மற்ற உறவுகளும்.

பரமாத்மாவுக்கும் ஜீவராசிகளுக்கும் உள்ள 'தாஸ்யம்' என்ற இந்த ஸம்பந்தம் எப்போதும் உள்ளது. இதைத்தான் 'சேஷ-சேஷிபாவம், ஸ்வாமி-தாஸபாவம்' என்றும் சொல்லுகிறோம். இது யஜமானன்-வேலைக்காரன் இவர்களுக்குப் போல் அர்த்தப்ரயுக்தமாக வந்ததன்று; தம்பதிகளுக்குப் போல் புண்ய பாப ரூப கர்மப்ரயுக்தமாகவும் வந்ததன்று; எப்போதும் உள்ளது. 'அநாதிஸித்தம்' என்பர் கற்றறிந்தோர்.

இந்த ஜீவாத்மாக்களும் பரமாத்மாவும் எது முதற்கொண்டு இருக்கிறார்களோ, எது வரையிலும் இருப்பார்களோ அது முதற்கொண்டும் அது வரையிலும் இந்த ஸம்பந்தம் உள்ளது. இவ்விருவருக்கும் ஆதியும் அந்தமும் இல்லை. ஆகையால் இந்த ஸம்பந்தத்துக்கும் ஆரம்பமும் முடிவும் இல்லை. இவ்வுலகத்தில் இந்தியா தேசத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும்தான் இந்த ஸம்பந்தம் என்பது இல்லை; வெளிநாடுகளான ஜப்பான், ஜர்மனி முதலிய தேசத்தவர்களுக்கும் இது உண்டு. தெய்வம், தேவாலயங்கள், சாஸ்திரங்கள் முதலியவற்றை இல்லை என்று சொல்லும் நாஸ்திகர்களுக்கும் இது இல்லை என்பதில்லை. இதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை; அவ்வளவுதான். மேல் ஏழு கீழ் ஏழு உலகங்களிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் - இவ்வுலகங்களிலுள்ள கொசு, பசு, சிங்கம், கரடி முதலியவற்றுக்கும்- பகவானுக்கும் உள்ள இந்த ஸம்பந்தத்தை ஒருகாலும் அழிக்க முடியாது.

இங்கு, தம்பதிகளுக்கோ பிதா - புத்திரர்களுக்கோ வைமனஸ்யம் ஏற்பட்டுவிட்டால் 'கடப்ரஹரம்' (டைவர்ஸ்) செய்து ஒழித்துவிடலாம். அது போல இதை ஒழிக்க முடியாது. இதை மனத்தில் வைத்துத்தான் கோதையும், 'உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது' என்றாள். 'நாராயணன் பரன்; நாம் அவனுக்கு நிலையடியோம்'; 'காரணமும் காவலனுமாகி என்றும் கமலையுடன் பிரியாத நாதனான நாரணனுக்கு அடியேன் நான்' என்று ஸ்வாமி தேசிகனும் ஸாதித்திருக்கிறார். ஆகையால் இங்குக் கர்மோபாதிகமாக ஏற்படும் சேஷ-சேஷிபாவம் போல அல்லாமல் அநாதிஸித்தமாயும் நித்யமாயும் உள்ளது ஜீவனுக்கும் பரமாத்மாவுக்குள்ள சேஷ-சேஷிபாவம்.

வைகுண்டலோகத்தில் விஷ்வக்ஸேனர்-ஸூத்ரவதி போன்ற பல தம்பதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட ஸம்பந்தம் உலகத்திலுள்ள தம்பதிகளுக்கு ஏற்பட்டது போல அன்றி எப்போதும் உள்ளது; எம்பெருமானுக்கும் மகாலக்ஷ்மிக்கும் போல். எனவே பகவானுக்கும் நமக்கும் ஏற்பட்ட ஸம்பந்தம் இயற்கையானது என்பது பலிதாம்சம். 'த்வத்தாஸ்யம் அஸ்ய ஹி மம ஸ்வரஸ-ப்ரஸக்தம்' என்றனர் ஆன்றோர்.

தாஸ்யம் இரண்டு வகைப்படும் - 'குணக்ருதம்' என்றும் 'ஸ்வரூபப்ரயுக்தம்' என்றும். யஜமானன் வேலைக்காரனிடத்தில் ஸௌலப்யம், ஸௌசீல்யம், தயை முதலிய குணங்களைக் காட்டித் தன்னிடத்தில் ஈடுபடும்படி செய்வான். நிறைய சம்பளம், போனஸ், வாடகை இல்லாத வீடு, லீவு முதலிய பல வசதிகளைச் செய்து கொடுத்தால் எந்த வேலைக்காரன்தான் அவனிடத்தில் வேலைசெய்ய விரும்பமாட்டான்? இதுதான் 'குணக்ருத தாஸ்யம்' என்பது. இளையாழ்வான் ஸ்ரீராமனிடத்தில் அதிகமாக ஈடுபட்டார். காரணம் என்ன ? அவரிடத்திலுள்ள நல்ல குணங்கள்தாம். இதைத் தம் வாயினேலேயே சொல்லுகிறார் - 'அஹமஸ்ய அவரோ ப்ராதா குணைர் தாஸ்யம் உபாகத:' என்று. இங்குச் சுவை மிக்க பொருளை ஈட்டில் கண்டுகொள்க. 'பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே' என்று, அயோத்தி ஜனங்கள் அனைவருமே குணங்களுக்குத் தோற்றார்கள் என்பது பிரசித்தமன்றோ?

பர்த்தா முன்கோபி, அங்கஹீனன், குடிகாரன், பார்யையின் கழுத்திலுள்ள தாலிச் சரட்டையும் பறித்துக் குடித்துவிடுவான்; க்ரூரமான வார்த்தையைச் சொல்லுவான்; அடிப்பான்; இன்னும் பல அக்ரமங்களையும் செய்வான். இவ்வளவு ஹிம்ஸைகளைச் செய்த போதிலும் அவனுடைய பத்னி மிகவும் பதிவிரதையானபடியால் பர்த்தாவினிடத்தில் கோபம் கொள்ளமாட்டாள்; புன்முறுவல் செய்வாள்; பல பணிவிடைகளைச் செய்வாள். 'என் கழுத்தில் இவர் தாலியைக் கட்டியபடியால் நான் இவருக்கு எல்லா விதமான பணிவிடைகளையும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இவருக்கு அடிமைப் பட்டவள்' என்று எண்ணி ஸந்தோஷத்துடன் நடந்துகொள்வாள். 'இப்படியும் ஒருத்தி இருப்பாளா?' என்று நினைக்க வேண்டாம் புராணங்களில் எத்தனையோ பதிவிரதைகளின் சரித்திங்களைக் கேட்டிருக்கிறோம். இப்போதும் எத்தனையோ பேர் இருப்பார்கள்.

'கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்' என்று இத்தகைய உத்தம ஸ்திரீரத்தினத்தை ஆழ்வார் கொண்டாடுகிறார். இவளிடத்தில் உள்ளது 'ஸ்வரூபப்ரயுக்த தாஸ்யம்.'

கடியன் கொடியன் நெடிய மால் உலகங் கொண்ட
அடியன், அறிவருமேனி மாயத்தன், ஆகிலும்
கொடிய என் நெஞ்சம் அவனென்றே கிடக்குமெல்லே
துடிகொள் இடை மடத் தோழீ அன்னை என் செய்யுமே

என்று இந்த ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யத்தை நம்மாழ்வார் நாயிகாபாவத்தில் நன்கு அநுஷ்டித்துக் காட்டினார்.

"என் கணவன் ஸ்வகார்யப் புலிதான்; விரும்பியதை அடைவதிலேயே நோக்கமுள்ளவன்; இதனால் பிறருக்கு ஏற்படும் கஷ்டங்களை எண்ணிப் பார்க்கமாட்டான்; பிறர் நோய் அறியாதவன்; ஒருவருக்கும் எட்டாதவன்; ஸுலபன் அல்லன்; வஞ்சித்து காரியம் கொள்வதில்

மகா சூரன்; இன்னார் இனையான் என்று அறிய முடியாத ஸ்வபாவம் உள்ளவன்; இப்படிப் பல கெட்ட குணங்கள் நிரம்பப்பெற்றவன்; ஆனாலும் என் நெஞ்சம் அவனைவிட்டு அகல மறுக்கிறது; இப்படி துர்க் குணங்கள் நிரம்பப்பெற்ற இவனை விட்டு மற்றொருவனை அணுகு என்றால் மாட்டேன் என்கிறது. அதுதான் 'கொடிய நெஞ்ச' மாயிற்றே?" ஸ்வரூபப்ரயுக்த தாஸ்யத்தை ஆழ்வார் இவ்விதம் மிகவும் அழகாக வெளிப்படுத்தியுள்ளார். திருமங்கையாழ்வாரும், 'வேம்பின் புழு வேம்பன்றி உண்ணாது; அடியேன் நான் பின்னும் உன் சேவடியன்றி நயவேன்' என்றார். வேப்பம்பழம் கசக்கும். அதில் புழு இருக்கும். அதைத்தான் அது விரும்பும். அப்புழுவை மாம்பழத்தில் எடுத்துவிட்டாலும் அது அதன் ருசியைக் கணிசியாது. இதற்கு அதில் விருப்பம் இல்லையாம். அதுபோல் பகவானிடத்தில் எனக்கு விருப்பம். மற்றவை நான் விரும்ப மாட்டேன் என்கிறார் இவ்வாழ்வார்.

சீதை ஸ்ரீராமனுடன் காட்டுக்குச் செல்லுகிறாள்; அத்ரி மகரிஷியின் ஆச்ரமத்தில் தங்குகிறாள். அந்த மகரிஷியின் பத்தினி பதிவிரதோத்தமையான அநுஸூயை ஸீதையைப் பார்த்து, "குழந்தாய்! உன் பர்த்தா ராமன் ராஜ்யத்தை இழந்தவன், செல்வம் இல்லாதவன், உண்ண நல்ல உணவும் உடுக்க நல்ல ஆடையும் அற்றவன். உனக்கு காட்டில் ராஜபோகங்களைக் கொடுத்து ஸந்தோஷிக்கும்படி செய்ய முடியாதாவன். ஆயினும் உனக்கு அவன் பர்த்தா ஆனபடியால், அவனித்தில் நல்ல புத்தியுடன் இரு. உபசாரங்களைச் செய்யாமல் இருந்துவிட வேண்டாம். பர்த்தா எப்படிப்பட்டவனாக இருந்தபோதிலும் அவனுக்கு பணிவிடைகளைச் செய்து உபசாரத்துடன் இருக்கவேண்டும். இதெல்லாம் பதிவ்ரதா தர்மம்" என்று பல உபதேசங்களைச் செய்தாள்.

ஒரு சமயம் ஸப்தரிஷிகள் யாகம் செய்தார்கள். தங்கள் தங்கள் பத்நியுடன் செய்ய வேண்டியதாக இருந்தது. அகநியில்தாநே ஹோமம் செய்யவேண்டும். அப்பொழுது அக்நி தேவதை ரிஷிகளின் மனைவியை பார்த்தான். அவர்கள் அழகில் ஈடுபட்டான். எப்படியாவது இவர்களுடன் ஒரு நாளாவது சேர விரும்பினான். இது நடக்கிற கார்யமாக இல்லை. அதனால் மெலிந்தான். இரவு பகல் தூக்கமில்லை. அக்நியின் மனைவிக்குப் பெயர் ஸ்வாஹாதேவி. அவள் விஷயம் தெரிந்து கொண்டாள். கனவனுக்கு ஆதரவு சொல்லி நான் அவர்களை உன்னுடன் சேர வைக்கிறேன் என்றாள். அக்நிக்கு மிக சந்தோஷம். ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு மனைவி வருவாள் என்று சொல்லி தன் மாஹாத்ம்யத்தால் அவர்கள் வேஷத்தை தரித்தாள். இது எப்படி அக்நிக்குத் தெரியும். அவன் அவர்களுடன் புணர்ந்ததாகவே நினைத்தான். ஆனால் அருந்ததியின் வேஷத்தை அவளால் தரிக்க முடியவில்லை. அகநிதேவதை ஸ்வாஹாவைப் பார்த்து எப்படியோ அவர்களுடன் சேர்த்து வைத்தாய். ஆனால் அருந்ததியுடன் புணராதது எனக்கு வருத்தம் என்றான். அப்பொழுது ஸ்வாஹா சிரித்துக் கொண்டு சொன்னாள். இதுவரையிலும் சேர்ந்தது என்னுடன்தான். புருஷனின் மயக்கமும் புத்தி கெட்டிருப்பதையும் இப்பொழுதாவது தெரிந்துக் கொண்டீர்களா என்றாள். வெட்கமடைந்தான் அக்நி. அருந்ததியின் வேஷம் எடுத்துக் கொள்ள முடியவில்லை ஸ்வாஹையினால். ஏன். அவள் அவள் அப்படிப்பட்ட பதிவ்ரதை. தன் வேடத்தையும் இதரர்களால் அடைய முடியாத வகையில் இருக்கும் தன்மையான பதிவ்ரதை. ஆகவேதான் விவாஹத்தில் அருந்ததி தர்சனம் செய்து வைப்பது. அருந்ததி வஸிஷ்டர்போல் பரதாரபர புருஷ பராங்குகர்களாக இவர்கள் இருக்கவேண்டும் என்று ஸ்வஸ்தி சொல்வது.

இதைக்கேட்டதும் சீதைக்கு வெட்கம் வந்துவிட்டது. அவள் சொல்ல ஆரம்பித்தாள் - "தாயே, என் பர்த்தா ராமன் கெட்ட குணங்களுடையவனாக இருக்கவேண்டும்; கெட்ட

நடத்தையுடையவனாக இருக்க வேண்டும்; உலகத்திலுள்ள ஜனங்கள் இகழக்கூடிய விதத்தில் இருக்கவேண்டும்; என் விஷயத்திலும் க்ரூரஸ்வபாவனாக இருக்கவேண்டும்; அப்போது நான் எவ்விதம் இருப்பேன் என்பதைக் கவனிக்க வேண்டும்; பர்த்தாவினிடத்தில் நல்ல நடத்தையுடன் இருக்கிறாளா, பர்த்தாவைத் திரஸ்கரித்துப் பேசுகிறாளா என்றெல்லாம் உலகத்தாருக்கு நன்கு விளங்கும். அதைக் காட்ட இப்போது வழி இல்லை. ஏனெனில், என் பர்த்தா குணங்களால் ச்ரேஷ்டன், இரக்கமுள்ளவன், பரஸ்திரீகளைக் கண்ணாலும் பாராதவன், என்னிடத்தில் மிக்க ஆசையைக் காட்டுகிறவன், தாய் தந்தை போல எனக்குப் பிரியமானவன். இப்படி இருக்கிறபடியால், என்னை கஷ்டப் படுத்தும்போது நான் சலிக்காமல் இருப்பேன் என்பதை எவ்விதம் காட்டுவது? காட்ட முடியாமல் இருக்கிறது" என்றாள். இங்குள்ள ஸ்ரீமத் ராமாயண ச்லோகங்களை நோக்குங்கள் -

யத்யப்யேஷ பவேத் பர்த்தா அநார்யோ வ்ருத்தவர்ஜித:।
அத்வைதமத்ர வர்த்தவ்யம் ததாப்யேஷ மயா பவேத் ॥
கிம் புநர் யோ குணச்லாக்ய : ஸாநுக்ரோசோ ஜிதேந்த்ரிய : ।
ஸ்திராநுராகோ தர்மாத்மா மாத்ருவத் பித்ருவத் ப்ரிய:॥

இப்படி இருவகைப்பட்ட தாஸ்யத்தில் எது சிறந்தது என்றால், ஸ்வரூபப்ரயுக்த தாஸ்யமே சிறந்தது. இதை அநுஷ்டிப்பவன்தான் சிறந்தவன். பிரதிபலனை எதிர்பாராமலன்றோ இவன் அடிமை செய்கிறான்? இவ்விடத்தில், 'பகவத் விஷயத்தில் இழிகிறதும் குணம் கண்டன்று; ஸ்வரூபப்ரயுக்தம் (வகுத்த விஷயம்) என்று'; 'குணக்ருத தாஸ்யத்திலும் காட்டில் ஸ்வரூபப்ரயுக்த தாஸ்யமிறேப்ரதாநம். அநுஸூயைக்குப் பிராட்டி அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது' என்ற ஆசார்ய ஸ்ரீஸூக்தி ரத்தினங்களின் சுவையை அநுபவித்து இன்பம் பெற வேண்டும்.

இங்கு, பெரியோர் சொல்லிக் கேட்ட கதையை வரைகிறோம் - ஓர் அந்தணர் கங்கையில் ஸ்நானம் செய்யக் காசி யாத்திரை சென்றார். அவர் போகும்போது அவ்வூரிலுள்ள அனைவரும் நிறையத் திரவியங்களைக் கொடுத்து வெற்றிலை பாக்கு பழம் புஷ்பம் தக்ஷிணை முதலியவற்றுடன் கங்கையில் சேர்க்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். பொதுவாக, நதிகளில் ஸ்நானம் செய்பவர் தக்ஷிணையுடன் தாம்பூலத்தை நதியில் சேர்ப்பது வழக்கம்.

இந்த அந்தணர் போகும்போது ஒருவன், "ஐயா! நான் மிக ஏழ்மைப்பட்டவன்; கையில் பணம் இல்லாதவன்; கங்கையில் எதையாவது ஸமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆசையுள்ளவன். என் மனைவி வெகுநாளாக இதற்காகவே காப்பாற்றி வைத்திருந்த காலணாவை என்னிடம் கொடுத்திருக்கிறாள். இதை எப்படியாவது கங்கையில் ஸமர்ப்பித்துவிட வேண்டும். சொல்வதற்கே வெட்கப்படுகிறேன். க்ஷமிக்க வேண்டும்" என்று சொல்லி, அந்தக் காசை அந்தணரிடம் சொடுத்தான்.

பிறகு அந்தணன் காசிக்குச் சென்று அங்கு கங்கையில் தன் மனோரதப்படி அந்த காசை கங்கையில் சேர்த்தான். அப்பொழுது கங்கை ஸ்வய உருவம் கொண்டு அந்த காசை வாங்கி வாழ்த்தினான். இந்த சமயம் பாதரக்ஷையை சீர்த்ருத்தி கொடுப்பவன் இந்த அந்தணனைப் பார்த்து, ஏன் பாதரக்ஷை அணியாமல் வீதியில் செல்கிறீர். நான் உனக்குத் தகுந்தால் போல் செய்து தருகிறேன். இந்த வியாபாரம்தான் எனக்கு இங்கு நடக்கிறது. ஆனால் அதற்காக காசு வாங்குவதில்லை. கங்கையைப் பார்த்தும் ஸ்நானம் செய்து போகிறவர்களுக்கு இந்த

தாஸ்யத்தை மனப்பூர்வமாக செய்கிற பழக்கம் என்று சொல்லி புதியதாக பாதரக்ஷையை செய்து கொடுத்தான். மேலும் கங்கா நதியின் ப்ரபாவத்தை ஆதி சங்கரர் கூறினதைப் பார்த்தால் மனம் தண்ணீராக உருகும். அவ்வாறு அதில் ஆழந்த அநுபவம் என்று சொல்லி அவர் சொன்ன பத்யங்களின் அர்த்தத்தை விளக்கினான். அதாவது - நூற்றுக் கணக்கான யோசனை தூரத்திலிருந்தாலும் கங்கை கங்கை என்று சொன்னால் போதும். இப்படி சொல்லி ஸ்நானம் செய்தால் ஸர்வ பாபங்களிலிருந்து விடுபட்டு விஷ்ணு லேகத்தை அடைவான்.

ஸம்ஸாரத்துக்கு பீஜம் நம் வினை இது விடுபட்டு விடுகிறது. இதன் நாமம் சொல்வது ஸுகத்துக்கும் செல்வத்துக்கும் காரணம் இதன் நாமோச் காரணம், யம தூதர்களை விரட்டுவதும் இதுதான்.

இதன் பெயரைச்சொல்பவன் பகவத் பாதத்தை அடைவான். ஆதலால் கங்கை என்று பெயர்.

அம்மணியே ஹிமய மலையினின்று உண்டானவளே ! - பூமிக்கே அலங்கார பூதயான ஹாராவளி போன்றவளே. ஸ்வர்க்கம் செல்ல வழி காட்டுபவளே. உன்னிடம் நான் ஒரு வரம் வேண்டக் கொள்கிறேன் உனது கரையில் வசிக்க வேண்டும். உனது திர்த்தத்தைப் பானம் செய்ய வேண்டும். உன் வீதியிலேயே வாழ வேண்டும். உனது பெயரை எப்பொழுதும் ஸ்மரிக்க வேண்டும். உன்னையே கண்டு குளிரப் பார்க்க வேண்டும். உன்னிடத்திலேயே மரணத்தை அடைய வேண்டும். உனது கரையில் உள்ள மரத்தின் பொந்தில் பறவையாக் ஜீவித்து வசிக்க வேண்டும். மத்ஸ்யமாகவோ ஆமையாகவோ பிறக்க வேண்டும். ராஜவானுடைய வீட்டில் விட்டில் எனக்கு பிறப்பு வேண்டாம். அரசனாகவும் ஆகவேண்டாம் என்பது - அவரது ச்லோகத்தின் தாத்பர்யம் ஆக கங்கா தேவிக்கும் அங்கு ஸ்நானம் செய்யும் பாகவதர்களுக்கு தொண்டு செய்வது எனது தர்மம். பரம சிவனே எம்பெருமானின் தாஸ்யத்தைக் காட்டிலும். அவன் திருவடியில் உண்டான கங்கைக்கு தாஸ்யனாக வேண்டும் என்று எண்ணி தலையால் தரிக்கிறான். ஆக, நாம் தாஸ தாஸனாக வேண்டும் என்கிற மனப்பான்மை என்று சொல்லி, இதன் பெருமையை விவரித்தான்.

அப்பொழுதுதான் இதன் பெருமையும் பகவத் தாஸ்யத்தின் பெருமையும் தெரியவந்தது. அடியார் அடியார் என்று நம்மாழ்வார் ஏழுபர்வதாஸ்யத்தை விரும்பினார். 'தவத் ப்ருத்யப் ருத்ய' என்பதையும் கேட்டிருக்கிறோம். பாதுகை சடகோபன் என்று வைத்துக் கொண்டு நம்மாழ்வாரைவிட மிகப் பெருமை பெற்றது. காட்டிலிருந்து திரும்பிப்போ என்று லக்ஷ்மணனை ராமன் சொன்னான். அபிஷேகம் செய்து கொள் என்று பரதனிடம் சொன்னான. இருவரும் இராமபிரான் வார்த்தையை கேட்கவில்லை. பாதுகை இரண்டு செய்தது. அவ்வளவு பாரதந்திரியம் பெற்றது. இருவரையும் வெள்றுவிட்டது என்றார ஸ்வாமி தேசிகன். ஆக, தாஸத் தன்மையை அறிந்து ஏவலை செய்ய வேண்டும். இதுதான் ஸாரம்,.

இளைய பெருமாள் லக்ஷ்மணன். ராமனைப் போல் யுவராஜகுமாரன். அவன் தன்னை இராமனுக்கு தாஸன் என்றே சொல்லுகிறான். உலகத்தில், வேலைக்காரர்கள் தங்களை வேலைக் காரன் என்ற ரீதியில் ஒப்புக் கொள்வதில்லை. வேலைதான் செய்ய எஜமானன் வீட்டுக்கு செல்கிறான். போகும்போது அவனைப் பார்த்தால் இவன் வேலைக்காரன். அவன் வீட்டுக்கு வேலை செய்யத்தான் போகிறான் என்று சொல்லும் வகையில் ட்ரஸை அமைத்துக் கொள்வதில்லை. பேண்ட், ஷர்ட், குல்லா, வேஷ்டி இவைகளை பார்த்தால் இவன்தான் யஜமானன் என்று சொல்லும் வகையில் இருக்கிறான். இப்படிதான் வேலைக்காரியும், புஷ்பம்,

சேலைகளை அணிந்து கொண்டு போகிறாள். இதுதான் நடக்கிறது. இங்கு அந்தஸ்து இருந்தும், லக்ஷ்மணன் தன்னை வேலைக்காரன் தாஸன் என்ற ரீதியில் அமைத்துக் கொண்டுள்ளான். இதுதான் ஆச்சர்யம் ! இதை, ஹனுமானிடம் லக்ஷ்மணன் கூறுவது "குணை: தாஸ்ய முபாகத! என்பது. லக்ஷ்மணனை பார்த்து ஹனுமான் கூறுவது இவருக்கு நீர் என்னாவது என்பது. இதற்கு விடை, நான் ராமன் புத்தியால் அவன் தம்பி. இப்படி இவர் நினைப்பு. என் நினைப்பு அவருக்கு தாஸன் என்பது.

ஹனுமன்தனும் முதலில் தன்னை இராமதூதன் என்று சொன்னான். பிறகு தாஸோ ளஹம் கோஸ வேந்த்ரஸ்ய' என்று தாஸன் என்று சொன்னான்.

*****

# 13. வைஷ்ணவன் எவன்?

உலகத்தில் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நான்கு வகுப்பினரைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 'ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத், பாஹூ ராஜந்ய: க்ருத:, ஊரூ ததஸ்ய யத் வைஸ்ய:, பத்ப்யாம் சூத்ரோ அஜாயத' என்று இந்த நால்வரும் எம்பெருமானுடைய திருமேனியிலிருந்து தோன்றியவர்கள் என்று வேதமும் கூறுகிறது. 'சாதுர் - வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்' என்று கீதாசார்யனும், 'இந்த நான்கு வர்ணங்களும் என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவை' என்று கூறினான்.

'உலகத்தில் எத்தனையோ வர்ணங்கள் (ஜாதிகள்) காணப்படுகின்றனவே; கீழ்க்கூறிய நான்கு ஜாதிகள்தாம் என்று எப்படிக் கூற முடியும்?' என்று ஐயப்பட வேண்டாம். இந்த ஸந்தேஹத்தைப் போக்கவே கீதாசார்யன், 'மயா ஸ்ருஷ்டம்' என்று அருளிச்செய்தான். 'நான் படைத்தது இந்த நான்கு வகையையே. மற்ற அநுலோமம் ப்ரதிலோமம் என்று சொல்லப் பெறும் ஸங்கர ஜாதிகளை அவரவரகளே படைத்துக்கொண்டனர்' என்பது 'மயா' என்பதனால் ஏற்படுகிறது அல்லவா? இதில் வைஷ்ணவர், ஸ்மார்த்தர், மாத்வர் என்னும் பிரிவுகளையும் பார்க்கிறோம். அப்படியே விசிஷ்டாதவைதி, அத்வைதி, த்வைதி என்ற விபாகங்களும் இருக்கின்றன.

இங்கு, 'வைஷ்ணவர்கள் அனைவருமே விசிஷ்டாதவைதிகள்தாமே. அதேபோல் ஸ்மார்த்தர்கள் அத்வைதிகள்தாமே. மாத்வர்கள் த்வைதிகள்தாமே. இதில் இரண்டு விதமான பிரிவுகளாகச் சொல்வதில் என்ன விசேஷம்?' என்றால், அதைச் சொல்லுகிறோம்.

ஊர்த்வபுண்ட்ரம் முதலிய வைஷ்ணவ சின்னங்களைத் தரித்துக்கொண்டு பிறவியிலயே ஒருவன் வைஷ்ணவனாக இருக்கலாம். அவனுக்குப் பல புதல்வர்கள் பிறக்கக்கூடும். அவர்கள் அனைவருமே பிறவியில் வைஷ்ணவர்கள்தாம். இதை மறுக்க முடியாது. ஆயினும், அவர்களில் ஒருவன், 'விசிஷ்டாத்வைத மதம்தான் சிறந்தது' என்று ஆராய்ச்சி செய்து, அந்த மதத்திலேயே ஊன்றியிருப்பான். அவன் விசிஷ்டாத்வைதி. மற்றொருவன், 'த்வைத மதம் சிறந்தது' என்று அதில் ஆழ்ந்திருப்பான். அவன் த்வைதி ஆகிவிடுவான். இன்னொருவன் இதேபோல அத்வைதி ஆகிவிடலாம்.

இது போலவே திர்யக்புண்ட்ரதாரிகளான ஸ்மார்த்தர் என்ற பேர் பெற்ற சிலரிடத்தில் பலர் பிறந்து அதில் ஒருவர் விசிஷ்டாத்வைதமதஸ்தராக ஆகலாம்; த்வைதமதஸ்தராகவும் ஆகலாம். கோபீசந்தனத்தைத் தரிக்கிற மாத்வர்களிடத்திலும் இதேபோல ஆகலாம். நஞ்ஜீயர் என்ற நம் பூர்வாசார்யர்களில் ஒருவர், பிறப்பில் ஒருவிதமாக இருந்தும், பராசரபட்டருடைய ஸம்பந்தத்தினால் விசிஷ்டாத்வைதியானார் என்பது தெரிந்ததே. யாதவப்ரகாசருடைய விருத்தாந்தமும் பிரஸித்தமே. ஆகையால் த்வைதி (மாத்வர்) ஆக இருந்து விசிஷ்டாத்வைதியாகலாம். அத்வைதி (ஸ்மார்த்தர்) ஆக இருந்து விசிஷ்டாத்வைதியாகலாம். இவையெல்லாம் மதங்கள். அவரவர் பிரமாணங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வருகின்றனர். இப்போது உலகத்திலுள்ள வ்யவஹாரம் ஒரு விதம். அவரவர் புத்தியை அநுஸரித்தும் ஆசார்யர்கள்ளுடைய அநுக்ரகத்தை அநுஸரித்தும் 'இதுதான் உயர்ந்த மதம்' என்று அந்த அந்த மதங்களில் பிரவேசித்து விடுகின்றனர். தற்சமயத்தில் அரசியலிலும் கட்சி மாறுவதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் ஸ்மார்த்தராகப் பிறந்து அத்வைதியாகவும் இருந்து பிறகு ஏதோ காரணவசத்தால் விசிஷ்டாத்வைதியாக மாறினால்

பிறகு வைஷ்ணவர்களுடைய நடை உடை பாவனைகளிலேயே இருக்கின்றனர். இது போலத்தான் மற்றவற்றிலும்.

தர்க்கம் வ்யாகர்ணம் மீமாம்ஸை அலங்காரம் என்கிற வகையில் பல சாஸ்திரங்களும் உள்ளன. இவைகளை அப்யஸிக்கிறவர்களும் உண்டு. தர்க்கத்தை படித்தவன் குமாரன் தர்க்கத்தையே படிக்கவேண்டும் என்பதில்லையே. வ்யாகர்ணத்தையும் படிக்கலாம். டாக்டர் பிள்ளை இன்ஜினீயர் ஆகலாம் அல்லவா? அவரவர்களுடைய விருப்பம்தான் காரணம். சமயல் செயபவன் புத்திரன் பாசகனாகவே இருக்கவேண்டும் என்கிற நிர்பந்தம் இல்லை.

இங்கு, யாரை வைஷ்ணவன் என்று சொல்லுகிறோம்? "யார் தங்கள் கழுத்தில் துளஸீமாலையையும் தாமரைமணி மாலையையும் தரித்துக்கொள்ளுகிறார்களோ, இரண்டு புஜங்களிலும் பகவானுடைய அடையாளமான சங்க சக்ரங்களைத் தரிக்கின்றனரோ, நெற்றி முதலிய இடங்களில் ஊர்த்வபுண்ட்ரத்தை இட்டுக்கொள்கின்றனரோ அவர்கள்தாம் வைஷ்ணவர்கள்" என்று பலர் பல விதமாகக் கூறுகின்றனர்.

இதைப்பற்றி விரிவாகக் கூற நாம் இங்கு இறங்கவில்லை. நம் ஆசார்யர்கள் அதிகமாக உகந்து அருளிய ஒரு வைஷ்ணவ லக்ஷணத்தை இங்கு இப்போது அநுபவிப்போம்.

'யார் வைஷ்ணவன்?' என்றால், பகவத் (விஷ்ணு) ஸம்பந்தமுடையவன். பகவத்ஸம்பந்தம் யாருக்கு உண்டு என்றால், ஒருவன் கஷ்டப்படும்போது அதைப் பார்த்தவுடன், 'ஐயோ! இவனுக்கு இப்படியும் கஷ்டம் உண்டாயிற்றே. இதை இவன் எப்படிப் பொறுப்பான்?' என்று எவன் மனத்தில் க்லேசம் அடைகிறானோ அவன் பகவத்ஸம்பந்தம் உடையவன்; அவன் தான் வைஷ்ணவன். உலகில் தனக்கு ஒரு கண் போனாலும் மற்றவனுக்கு இரு கண்களும் போக வேண்டும் என்று எண்ணுகிறவர் எத்தனையோ பேர் உண்டு. ஒருவனுக்கு வியாதி கடுமையாக இருந்து அவனைக் கஷ்டப்படுத்தும்போது அவன் நினைக்க வேண்டுவது என்ன என்றால், 'இப்படிப்பட்ட வியாதி நம் சத்துருவுக்கும் வரக்கூடாது' என்பது. அவன்தான் உத்தமன். அது போலவே முள்தைத்து அவஸ்தைப்படுகிறவனையும், வியாதியுடன் கஷ்டப்படுகிறவனையும், கல்தடுக்கிக் கீழே விழுந்து கஷ்டப்படுகிறவனையும், இதேபோல் இன்னும் பல சிரமங்கள் ஏற்பட்டு வருந்துபவர்களையும் பார்த்து எவன், 'இவ்வளவும் இவர்களுக்குப் போதாது; இன்னமும் வேண்டும்' என்று எண்ணாமல், 'ஐயோ! இந்தக் கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டனவே. என்ன செய்வார்கள்?' என்று அதிகக் க்லேசம் மனப்பூர்வமாக அடைகிறானோ அவன்தான் வைஷ்ணவன்.

ஒருவன் வியாதி முதலிய துன்பங்களால் சிரமப்படும்போது அவன் வீட்டுக்கு வந்து, 'ஐயோ! இந்த வியாதி வந்துவிட்டதா? மிகவும் சிரமப்படுகிறாயே!' என்று உதட்டளவில் மிகவும் விசாரிப்பான். தன் வீட்டுக்குப் போனதும் தன் மனைவி முதலியவரிடத்தில், 'இன்னும் இவனுக்கு வேண்டும்' என்று சொல்கிறவரும் உண்டு. இவர்களெல்லாரும் வைஷ்ணவ ஆபாஸர்கள். ஆகையால் கீழ்க்கூறிய வகையில் எவன் உண்மையில் நடந்து கொள்கிறானோ அவன்தான் உண்மை வைஷ்ணவன்.

இங்கு, ஈட்டிலுள்ள ஒரு ஸ்ரீஸூக்தியை எடுத்துக்காட்டுகிறோம் - "ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு, இல்லை என்னுமிடம் தக்கே தெரியும்காண் என்று ஜீயர் பலகாலும் அருளிச்செய்வர்; பிறர் அநர்த்தம் கண்டால் 'ஐயோ!' என்று இருந்தானாகில் நமக்கு

பகவத்ஸம்பந்தம் உண்டு என்று இருக்க அடுக்கும்; 'இத்தனையும் பட்டிடுவானுக்கு (படக்கடவன்)' என்று இருந்தானாகில் 'நமக்கு பகவத்ஸம்பந்தம் இல்லை' என்று இருக்க அடுக்கும்" என்று.

இப்படி அருளிச்செய்வதற்கு ஒரு காரணம் உண்டு - 'சராசராணி பூதாநி ஸர்வாணி பகவத்வபு; l அதஸ் ததாநு - கூல்யம் மே' என்ற ரீதியில், நாமும் பிறரும் பகவானுடைய சரீரம். இப்படி இருக்க, 'பிறனுக்கு அனர்த்தம் மேன்மேலும் வரவேண்டும்' என்று எப்படி நினைக்கலாம்? பகவத்ஸம்பந்தம் அற்றவன்தானே இப்படி நினைப்பான்? தன் கையே தன் கண்ணை குத்திக்கொள்ளுமா? கண்ணில் தூசி விழுந்தால் கையால் அதை எடுத்துவிட வேண்டுமே அல்லவா? அது போல், எல்லாம் பகவத் சரீரமானபடியால் நாம் பிறருடைய கஷ்டத்தைப் பார்த்து வருத்தப்பட வேண்டும்; அதை நீக்க முயற்சியும் செய்ய வேண்டும். இதுதான் இங்கே தத்துவம்.

இப்படிச் சிறந்த வைஷ்ணவத்தை நம்மாழ்வாரும் அநுஷ்டித்துக் காட்டுகிறார். ஆழ்வார் திருவாய்மொழி அருளிச்செய்தார். அதில் முதல் திருவாய்மொழி, 'உயர்வற' என்று ஆரம்பிக்கிறது. இது எம்பெருமானுடைய பரத்வத்தை மிகவும் ஸந்தோஷமாக அநுபவிக்கிறார். அது ஒரு பெரிய திருநாள் போலே இருந்தது. இந்த ஆழ்வார் தம் நெஞ்சை இழந்தார்; பகவானிடத்திலே செலுத்தினார்; அக்கம்பக்கத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் மறந்தார்; இப்படி தம்மையும் மறந்து, பிறரையும் மறந்து, எம்பெருமானிடத்திலேயே மனத்தைச் செலுத்தி, அவனுடைய பரத்வத்தை அநுபவித்துப் போந்த இவர், திடீரென்று அடுத்தத் திருவாய்மொழியில், 'வீடுமின் முற்றமும்' என்று பிறருக்கு உபதேசம் செய்ய தொடங்கிவிட்டார். ஒரு நூறு பாசுரமாவது அருளிச்செய்த பின்பு சிறிது சிறிதாக வேறு விஷயத்தில் மனம் சென்று பிறருக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தார் என்றாலும் சிறிது பொருந்தும். இப்படி இருக்க, இவர் இப்படிப் பிறருக்கு உபதேசம் செய்யக் காரணம் என்ன? உலகத்தில் சில விஷயங்கள் உயர்ந்தவையாக இருக்கலாம்; அவை மிகவும் ஸ்வல்பமாக இருக்ககூடும். கேஸரிபாத் மிகவும் ஸ்வாத்யமானது; ஆனால் அது ஒரு ஸ்பூன் அளவுதான் கிடைத்தது. அதை ஒருவன் சாப்பிட்டுவிட்டான். அதையே மேலும் சாப்பிட வேண்டும் என்றால் எப்படி முடியும்? உள்ளதே அவ்வளவுதான். அது போல் எம்பெருமானாகிற விஷயம் மிகவும் உயர்ந்ததுதான்; ஆனால் அது, குணம் முதலியவற்றினால் மிகவும் ஸ்வல்பமானது; ஆகையால், தாம் அநுபவித்த விஷயத்தின் எல்லையைப் பார்த்துவிட்டார்; மேற்கொண்டு அநுபவிக்க விஷயமே இல்லை; ஆகையால், அதிலிருந்து திரும்பி ஜனங்களைப் பார்த்து உபதேசிக்கத் தொடங்கிவிட்டார் என்று சொல்லலாமோ என்றால் அது சரியல்ல. எம்பெருமானுடைய ஸ்வரூபம், கல்யாணகுணம், விபவம், ஐச்வர்யம் முதலியவை ஓர் எல்லைக்குள் அடங்குமா? 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ' என்றல்லவோ வேதம் கூறுகிறது?

'ஆனந்தம்' என்ற ஒரு குணத்தைப் பற்றி அதற்கு அளவே கிடையாது என்று சொன்னது, எம்பெருமானின் ஸௌலப்யம், ஸௌசீல்யம், தயை முதலிய எல்லா குணங்களுக்கும் இப்படியே அளவே இல்லை என்பதில் தாத்பர்யம் என்றார் ஆளவந்தார். அது மாத்திரம் அல்ல; எம்பெருமானுக்கு குணங்கள் போல், ஸ்வரூபம், ரூபம், விபவம், ஐச்வர்யம் முதலியவை எல்லாம் உண்டு. இதில் ஒவ்வொன்றுக்கும் அளவு கிடையாது என்பதை கவனிக்க வேண்டும். ஆகையால் எம்பெருமானுக்கு (ஸ்பூன் அளவு கேஸரிபாத் என்பது போல) அளவு காட்ட முடியாது. 'தனக்கும் தன் தன்மையறிவரியான்' என்று நம்மாழ்வார் (8-4-6) அருளிச்செய்தார். ஸமுத்திரராஜனிடத்தில், ஸ்ரீராகவன் உடனே அவன் வராததைக் கண்டு ப்ரஹ்மாஸ்திரத்தைப்

பிரயோகித்துவிட்டான். ஸமுத்திர ராஜன் பயந்து அஞ்ஜலி பந்தத்துடன் வந்து ஸ்ரீராமனைத் துதி செய்யும்போது, கம்பர் சொல்லும் பாசுரம் கேண்மின்:-

அன்னை நீ, அத்தன் நீயே, அல்லவை எல்லாம் நீயே;
பின்னும் நீ, முன்னும் நீயே, பேறும் நீ, இகழ்வும் நீயே;
என்னை நீ இகழந்தது என்றது எங்ஙனே? ஈசனாய
உன்னை நீ உணராய், நாயேன் எங்ஙனம் உணர்வேன் உன்னை?

உலகத்தில் சில வஸ்துக்களின் அநுபவத்தில் வைராக்கியம் வந்துவிடுவதுண்டு. அது போல இந்த ஆழ்வாருக்கு பகவதநுபவத்தில் வைராக்கியம் வந்துவிட்டதோ என்றால் அதுவும் சரியல்ல. கேஸரிபாத் பெரிய அண்டா நிறையக் கிடைத்துவிட்டது. ஆயினும் அவ்வளவையும் சாப்பிட முடியுமா? சிறிது சாப்பிட்டதும் தெவிட்டுவிடும். அதனால் அதில் போதும் என்ற மனோபாவம் வரும். இப்படிச் சில விஷயங்கள் உண்டு. அது போல அல்ல பகவத் விஷயம். 'எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழிதோறும் அப்பொழுதைக்கப் பொழுது என் ஆராவமுதமே' என்றன்றோ இந்த ஆழ்வாரும் அருளிச்செய்கிறார்? எத்தனை காலம் அநுபவித்தாலும் அவ்வப்பொழுது புதிது புதிதாக அன்றோ எம்பெருமானின் அநுபவம் கொடுக்கிறான்? நித்ய அபூர்வமான வஸ்துவன்றோ பகவான்? 'பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் யான்?' என்று பிச்சேறும்படி அல்லவோ பகவான் அநுபவம் கொடுப்பது? உண்மையில் இந்த ஆழ்வார் எம்பெருமானித்தில் அளவில்லா காதல் வைத்திருக்கிறார். 'காதல் கடலில் மிகப் பெரிது' என்றார். 'சூழ்ந்த தனிற் பெரிய என் அவா' என்கிறார். 'உலகில் ஒன்றைவிட மற்றொன்று பெரியது. இந்த கணக்கில் உலகத்தில் எது மிகப் பெரியதோ அதைக்காட்டிலும் உன்னிடத்தில் எனக்கு இருக்கும் அவா மிகப் பெரியது' என்கிறார்.

ஆகையால், இந்த ஆழ்வார் திடீரேன்று பிறருக்கு உபதேசம் செய்ய ஏன் ஆரம்பித்தார் என்றால், தாம் அநுபவிக்கும் விஷயம் தான் தனியாக இருந்து அநுபவிக்கும் விஷயம் அல்ல; துணை இல்லாமல் பிரவாகத்தில் இறங்குவதுபோல் இருக்கும். ஆகவே பிறர் உதவியடைய ஸம்ஸாரிகளிடத்தில் கண்ணை வைத்தார். அவர்களைப் பார்த்ததும் 'ஐயோ!' என்ற எண்ணம் உண்டாயிற்று. தாம் பகவத் விஷயத்தில் எவ்வளவு ஆஸக்தராக இருக்கிறாறோ அவ்வளவு, விஷயங்களில் அவர்கள் ஆஸக்தராக இருக்கின்றனர். அதனால் பலவித அனர்த்தங்களையும் அடைகின்றனர். இதைப்பார்த்ததும் இதை பரஹரிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி, அவர்களுக்கு உபதேசம் செய்ய தொடங்கிவிட்டார். பிறர் அனர்த்தம் கண்டதும் ''ஐயோ!' என்று எண்ணி அதை பரிஹரிக்க முயல்கின்றவன் தான் வைஷ்ணவன். இதை ஆழ்வார் அநுஷ்டித்து காட்டினார்.

ஆகையால், ஆழ்வார் அநுஷ்டித்துக் காட்டியதும் ஆசார்யர்கள் உகந்தருளியதுமான வைஷ்ணவத்வம் இதுதான். இது எல்லா மனிதர்களுக்கும் வேண்டும். இது ஒன்றே இருந்துவிட்டாலும் கூட அவன் விஷயத்தில் பகவான் ப்ரசன்னனாகி சகல பலனையும் கொடுப்பான்; இது திண்ணம்.

எவன் ஸ்ரீவைஷ்ணவன்?

எவன் ஸ்ரீவைஷ்ணவன்? கேள்வியில் தொனிக்கும் சங்கை ஸ்ரீவைஷ்ணவன் அல்லாதவரும் உண்டு என்பதே. "விஷ்ணோரயம் வைஷ்ணவ:" என்று விஷ்ணு சப்தத்தின் மேல்

ஸம்பந்தார்த்தத்தில் ப்ரத்யயம் சேர்ந்து "வைஷ்ணவ:" என்று ஆகி விஷ்ணு ஸம்பந்தமுள்ளவன் என்ற அர்த்தம் ஏற்படுகிறது.

"யச்ச கிஞ்சத் ஜகத்யஸ்மின் த்ருச்யதே
சுரூதே வா I அந்தர் பஹிச்ச
தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: "

என்ற ச்ருதியின்படி உலகத்திலுள்ள எல்லா பொருள்களும் உள்ளும் புறமும் விஷ்ணுவினாலேயே வ்யாபிக்கப்படுகிறது என்பதால் விஷ்ணு ஸம்பந்தமில்லாத பொருள் ஏதும் இல்லை என்றும் எல்லாமே வைஷ்ணவம் என்றும் ஆகிவிடுகிறது. அப்படியானால் உலகத்தில் வைஷ்ணவன் என்றோ அவைஷ்ணவன் என்றோ வியவஹரிக்க முடியாதே! ஆகையால் வைஷணவன் என்ற சொல்லிற்கு விஷ்ணு ஸம்பந்த ஜ்ஞானம் உள்ளவன் என்று பரிஷ்காரம் பண்ண வேண்டியதாகும். அப்படியானால் விஷ்ணு சம்பந்த ஜ்ஞானமில்லாதவனே அவைஷ்ணவனாக ஆகுவான். கீழே சொல்லப்பட்ட ஒருவடினை விஷ்ணு சம்மந்தம் என்ற ச்ருதி அர்த்தம் புரிந்து கொண்டாலும் அவன் நம்பிக்கையில்லாதவனாக இருந்தால் அவனை எப்படி வைஷ்ணவன் என்று வ்யவரிக்க முடியுமா? ஆகையால் விஷ்ணு தாஸத்வ ரூப ஸம்பந்த ஞானம் என்று சிறிது மாற்றி, மேலும் விஷ்ணு தாஸ்ய ரஸிகத்வ ஞானம் என்று பரிஷ்கரித்தால் அவனை வைஷ்ணவன் என்று சொல்லலாம். "பாகவதர் என்பது பகவச் சேஷத்வ ஞான ரஸிகரை" என்று ஸ்வாமி தேசிகன் அருளிய படியே இங்கும் ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனை அப்படிச் சொல்லலாம்.

மேலும் ஸர்வ பிராணிகளிடத்திலும் ஸமமாக இருப்பவன், வர்ணாச்ரம தர்மங்களை சரியாக அநுஷ்டிப்பவன், பிறருடைய கஷ்டங்களைக் கண்டு அவற்றைத் தவிர்க்க முயல்பவன், ஏழைகளிடம் இரங்கி உபகரிப்பவன், தன்னை ஒருவன் நிந்தித்தால் நிந்திப்பவனிடம் சிறிதும் த்வேஷம் காட்டாமல் பொறுமையுடன் அவனை வணங்கி க்ஷமாபணம் யாசிப்பவன், துளஸி தாமரை மணி மாலைகளை தரித்து, தோள்களில் சங்கு சக்கரங்களை அடையாளமாகக் கொண்டு நெற்றியில் திருமண் காப்பு தரித்திருப்பவன் - இவர்களை யெல்லாம் வைஷ்ணவர்கள் என்று சொல்லும் பல புராண வசனங்கள் இருக்கின்றன. காரணம், இச் செயல்களெல்லாம் விஷ்ணு தாஸ்ய ரஸிகதையின் கார்யங்களாகச் சொல்லலாம். உதாரணமாக ச்ரவணம் கீர்த்தனம் விஷ்னோ: என்ற பக்தியின் கார்யங்களை பக்தியாக சொல்வதுபோல், வெளி அடையாளங்களாவது மனத்திலிருக்கும் பகவத்தாஸ பாவ ஜ்ஞானத்துக்கு அனுகுணமாக அமைகின்றன.

இப்படி இருப்பவனே உத்தம வைஷ்ணவன். ஸ்வ நிஷ்டாபிஞானாதிகாரம், உத்தரக்ருத்யாதிகாரம் இவைகளில் ஸ்வாமி தேசிகன் ஒரு ப்ரபன்னனின் நடையுடை பாவனைகள் எப்படி இருக்கவேண்டும் என்று அருளியிருப்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். மனத்தில் மாத்திரம் பாவத்தோடும் வெளி அடையாளங்கள் இல்லாதவர்களை மத்திய வைஷ்ணவ கோஷ்டியில் சேர்க்கலாம். மனதில் பாவமே இல்லாது வெளி வேஷத்தோடு நடப்பவர்கள் அதம வைஷ்ணவர்களே. குலசேகராழ்வார் அருளிய பெருமாள் திருமொழியில் பாகவதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பேசுகிறார் -

தேட்டருந்திறல் தேனினைத் தேன்னரங்கனைத் திருமாதுவாழ்
வாட்டமில் வனமாலை மார்வனை வாழ்த்தி மால் கொள் சிந்தையராய்

ஆட்டமேவிய லந்தழைத்து அயர் வெய்தும் மெய்யடியார்கள் தம்
ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண் பயனாவதே (2ஆம் திருமொழி)

கெட்ட எண்ணங்களோடு வெளிவேஷம் போட்டுக் கொண்டு திரியும் பாகவதர்கள் குப்பிகளில் விஷத்தை நிரப்பி மேலே தேன் என்று எழுதி விற்பனைக்கு சென்றால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்டவர்கள். தெரிந்து புரிந்தவடன் அவர்களிடமிருந்து தூர விலகத்தான் வேண்டியிருக்கும் உலக விவஹாரத்தில். அவர்களிடம் த்வேஷம் கொண்டால் நம்முடைய பாவசுத்திக்கு தீங்கு விளைக்கும்.

இப்படியாக ஸ்ரீவைஷ்ணவ ஸமூகம் எப்படியிருக்கும் என்று தேறினாலும், அந்த குலம் இப்போது பிரிந்து பிளந்து குலைந்து கிடக்கிறதே ! ஊர்த்வ புண்டரம், அதன் நிறம் அமைப்பு கச்சம் அங்கவஸ்த்ரம் தரிக்கும் பாணி, வணங்கும் முறையில் பேதம், பகவானிடம் சரணாகதி செய்வதில் வேற்றுமை இப்படி பலவிதமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் உள் பிரிவு ஏற்படுத்திக் கொண்டிருப்பதால் இவர்களிடம் கீழே புராண வசனங்களில் சொல்லப்பட்ட வைஷ்ணவ மனோ தர்மங்கள் இருப்பதாக் சொல்ல முடியாதே. இவர்களை வைஷ்ணவர்கள் என்று சொன்னால் எப்படி ஒப்ப முடியும்? இது சிந்திக்க வேண்டிய விஷயம்.

ஆகையால் "எவன் வைஷணவன்" என்ற தலைப்பைக் காட்டிலும் "எங்கே வைஷ்ணவன்" என்ற தலைப்பே பொருத்தமாகயிருக்கும். அது விசார விஷயமாகத் தோன்றுகிறது! ஆனால் உண்மையான உத்தமமான வைஷ்ணவனுக்கு இப்படிப்பட்ட விசாரம் செய்வது பொருத்தம் இல்லைதான்! ஸ்ரீவைஷ்ணவர்கள் க்ஷமிக்க வேண்டும்.

எவன் தீய புத்தியை உடையவனோ எல்லாம் எம்பெருமான் உடலாக இருக்க மற்றவன் கஷ்டப்படும் போது எப்பெருமான் சரீரத்துக்குத்தான் கஷ்டம் என்ற எண்ணம் நினைக்க இல்லையே, பொருமையினால் அவனுக்கு கஷ்டங்கள் வரவேண்டும் என்றும் நினைக்கிறானே. இப்படி பல தோஷங்கள் இருந்தவன் வைஷ்ணவன் ஆகமாட்டான். அவனுக்கு யமலோகம்தான் வரும் நல்கதி கைடையாது எனது ஆட்சியில் துன்பப் படுவான் என்று யமதர்மராஜனே தனது தூதர்களிடம் கூறுகிறான்.
இவன் வேண்டாதவன். இவன் வேண்டியவன் என்ற எண்ணமுள்ளவன் விஷ்ணுபக்தனாகான். குணங்கள் நிறைந்தவனும் தோஷமற்றவனுமான பகவானிடத்தில் மனது செலுத்தினவனுக்கு மாத்ஸர்ப்பம் முதலிய துர்குணங்கள் வரப்ரஸத்திலேயே இல்லை. ப்ரியமாயும் ஹிதமாயும் பேசுபவன் ஹ்ருதயத்தில்தான் பகவான் வஸிப்பான்.

தென் கலையாரில் ஒருவன், பக்ஷபாதத்தால் எல்லா கோயிலையும் தென்கலைகோயிலாக ஆக்கி விடுகிறேன் என்கிறான். வடகலையாரில் ஒருவன் எல்லா கோயிலையும் வடகலை கோயிலாக செய்து விடுகிறேன் என்கிறான். இதனால் காமம் க்ரோதம் முதலான துர்குணங்கள் ஏற்படுகின்றன. இப்படியுள்ளவர்கள் எப்படி வைஷ்ணவர்.

ஏகாந்தத்தில் ஸுவர்ணத்தைப்பார்த்தாலும் இது பிரர்த்ரவ்யம் என்று பார்க்க வேண்டும். அவன்தான் வைஷ்ணவன். மாத்ஸர்யத்தாலும் காமத்தால் அதை எடுப்பதிலும் பிறர் கஷ்டத்தில் ஸந்தோஷப்படுபவனும் விஷ்ணுபக்தன் ஆக வாய்ப்பில்லை. பிறர் செல்வத்தைப் பொருக்காதவன் பிறர் கஷ்டத்தை எதிர்பார்க்கிறவன் ஸ்நேஹிதனிடத்திலும்

பந்துக்களிடத்திலும் கலத்ரமிடத்தில் பிள்ளை பெண் வேலைக்காரனிடத்திலும் பணத்தை வாங்கிக் கொள்பவன் இவர்கள் எல்லாம் அதர்மர்கள் விஷ்ணுபக்தன் ஆகமாட்டான்.

எப்பொழுதும் மனப்பூர்வமாக வாஸுதேவ, கமலநயன விஷ்ணோ என்று ததேகபரனாக இருப்பவன் வைஷ்ணவன். டம்பன் தர்பன் போல் மேல் வேஷதாரிகள் விஷ்ணுபக்தரல்லர். ஆக நான் வைஷ்ணர்களிடம் அதிகாரத்தை செலுத்தமுடியாது எனக்கும் விஷ்ணு அதிகாரி.

நேர் மாறாக இருப்பவர்களிடம் அதிகாரம் செலுத்தி அவர்களை யமயாதனைக்கி வசமாக்குவேன் என்றான் யமதர்மராஜன். ஆக கீழ் கூறிய வைஷணவர்களாக இருக்க முயற்சி செய்யக் கடவோம்.

1, விஷ்ணு புராணத்தின் மூலம் நமக்கு ஏற்பட்டது என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

2, காமம் க்ரோதம் பொறாமை ஆக்ரஹம் புலனிஷ்டப்படி திரிகை, பணமுள்ளவனிடம் அஸூய முதலிய துர்குணங்கள் உள்ளவனிடம் விஷ்ணு வெருத்திருப்பான். என்னிடம் பக்தி செய்பவனாக இருந்தாலும் வைஷ்ணவன் ஆக மாட்டான். அவன் யமனுக்கு வச்யனாய் யாதனையை அநுபவிப்பான். அவனுக்கு ஸ்வர்கதி கிடையாது என்பது.

3. வடகலை தென்கலை மடம் முனித்ரயம் ஸ்மார்த்தர் மாத்வர் என்று வேறு பாடுவைத்துக்கொண்டு த்வேஷத்தை காட்டுபவனிடம் யமன் தன் அதிகாரத்தை க் காட்டுவான்.

4. உதாஹரணமாக வடைகலையார் எல்லோரையுமே வடகலைகாரர்களாக செய்ய வேண்டும் எல்லா கோயில்களிலும் வடகலை திருமண் போடவைக்க வேண்டும். எங்கள் கோயிலில் தென் கலையார், தங்களது ப்ரபந்தத்தை சொல்ல கூடாது எனக்கருதிகின்றனர். தென்கலையார் எல்லாம் தென்கலையாக்க வேண்டும் தங்கள் கோயிலில் அவர்கள் ப்ரவேசம் கூடாது. ஸவாமி சரணம் ஐயப்பா சரணம் என்று பிறர் சொல்வதையும் ஒப்புக் கொள்வோம் இவர்கள் சொல்லத் தடுத்திருக்க வேணும் என அபிப்ராயம் உடையவர்கள். இது போல் எல்லோரும் மடத்து சீடர்கள் ஆகவேண்டும் என்று இவர்கள் எண்ணுவது போல், எல்லோரும் எங்களது சீடர்கள் ஆக வேண்டும் என்றும் பரஸ்பரம் எண்ணுகிறார்கள். இதன் மூலம் காமம் க்ரோதம் பொறாமை ஒருவர்க்கு ஒருவர் விவாதம் ஏற்பட்டு கொலை பர்யந்தம் நடந்து விடுகிறது. ஆக இவர்கள் எப்படி வைஷ்ணவர்கள்? இவர்களுக்கு யமதர்ம ராஜன் ஏன் அரசனாக மாட்டான்? எம்பெருமான் தனக்குத்தான் எவ்வாறு பக்தர்கள் ஆவர்? இதை யோசிக்க வேண்டும். வைஷ்ணவ லக்ஷணம் பொருந்துவனாக நடத்தி எம்பொருமானுக்கு உகப்பாக இருக்கவேண்டும்.

*****

# 14. மௌன விரதம்

சாஸ்திரங்களில் எத்தனையோ விரதங்கள் இருக்கின்றன. விரதம் என்றால் நோன்பு. ஏகாதசி விரதம், துவாதசி விரதம், மௌன விரதம், உண்ணா விரதம் என்பவை போன்ற பல நோன்புகள் தர்ம நூல்களில் பரக்க சொலலப்பெற்றிருக்கின்றன. பல நோன்புகள் தர்ம நூல்களில் கூறப்படாதவையும், தங்கள் தங்கள் மனத்துக்குப் பிடித்தமானவையும், அவ்வப்போது தோன்றி அநுஷ்டிக்குமவையும் இருக்கின்றன. இந்த நோன்புகள் வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் கூறப்பெறாமலிருந்தபோதிலும் ஆசாரத்தினால் ஏற்பட்டவையானபடியால் இவற்றை அங்கீகரித்து அநுஷ்டித்துப் போருகின்றனர் பாமரர்கள். ஏகாதசி முதலிய நோன்புகள் சாஸ்திரங்களில் ஸித்தங்களானபடியால் அனைவரும் ஆதரித்து வருகின்றனர். இந்த நோன்புகளை அநுஷ்டிப்பவர்கள் இவற்றுக்கு உண்டான நியமங்களுடன் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இவை பயனற்றனவாக ஆகிவிடும். உதாரணமாக, ஏகாதசி விரதத்தை அநுஷ்டிப்பவன் காலையில் எழுந்து, கிரமமாக ஸ்நானம், ஸந்தியை முதலியவற்றைச் செய்து முடித்து, பகவதாராதனம் செய்து, ஆசார்யர்களால் உபதேசிக்கப்பெற்ற மந்திரத்தை பகவத்ஸந்நிதியில் விஜ்ஞாபித்து, ('ஏகாதசியில் ஆஹாரத்தை உண்ணாமல் இருந்து துவாதசியில் பாரணை செய்கிறேன். புண்டரிகாக்ஷனே, இந்த நோன்பைத் தவறுதல் இல்லாமல் நீ எனக்கு நடத்தித் தரவேண்டும்' என்று விஜ்ஞாபித்து), ஆசாரத்துடன் இருக்க வேண்டும். பகலிலும் இரவிலும் ஆஹாரம் இல்லாமலும் பகவத் ஸ்தோத்திரங்களைச் சொல்லியும் தூங்காமலும் இருந்து நடத்த வேண்டும்.

ஒருவன் ஏகாதசியன்று காலை நான்கு மணிக்கே ரெயிலில் பயணம் செய்து துவாதசி காலை ஆறு மணிக்கு வெளியூர் செல்கிறான். இவன் நியமத்துடன் இருப்பதனால் ரெயிலிலும் பஸ் வண்டிகளிலும் எதையும் சாப்பிடமாட்டான். இதைக் கொண்டே ஏகாதசியன்று உண்ணாமலிருந்தபடியால் ஏகாதசி விரத்தை அநுஷ்டித்தவனாக ஆகமாட்டான். 'நான்தான் ஏகாதசியன்று எதையும் சாப்பிடாமல் இருந்திருக்கின்றேனே; உபவாஸம் இருந்தது போலத்தானே அதுவும்?' என்று சொன்னால் அது பயன்படாது. அதற்கு உண்டான நியமங்கள் அவனிடத்தில் இல்லாதபடியால் உபவாஸபலன் ஏற்படாது. இதுபோலத்தான் எல்லா விரதங்களிலும் நியமங்கள் இருக்கின்றன. எனவே நியமங்களுடன் விரதங்களை அநுஷ்டித்தால் தான் பலன் ஏற்படும்.

ஹரிதின திலகம் என்பது ஸ்வாமி தேசிகனின் க்ரந்தம். அதில் ஏகாதசி வ்ரதம் என்று என்பதையும் நியமங்கள் என்ன என்பதையும் யார் யார் இருக்க வேண்டும் என்பதையும் பரக்கச் சொல்லியிருக்கிறார்.

நியமத்தோடு கூடிய ஏகாதசி விரதத்துக்கும் விலக்குகள் உண்டு. ஒருவன் 'ஏகாதசி நோன்பை அநுஷ்டிக்கிறேன் என்று பகவத் ஸந்நிதியில் ஸங்கல்பம் செய்துகொண்டிருக்கிறான். ஆனாலும் சில காரணங்களால் சில வஸ்துக்களைச் சாப்பிட நேர்ந்துவிடுகிறது. இதைக் கொண்டு அவனுக்கு உபவாஸம் பலிக்கவில்லை என்று சொல்ல முடியாது.

> அஷ்டைதாந்யவ்ரதக்நாநி ஆபோ மூலம் க்ருதம் பய: ।
> ஹவிர் ப்ராஹ்மணகாமாயாம் குரோர் வசநமௌஷதம் ॥

"தண்ணீர், கிழங்கு, நெய், பால், ஹவிஸ், நிமந்த்ரணம் இருத்தல், ஆசார்யர்களுடைய நியமனம்,

மருந்து இவை இந்த ஏகாதசி நோன்புக்குத் தடங்கலைச் செய்யமாட்டா. 'உபவாஸம் இருக்கிறேன்' என்று நிச்சயம் செய்துகொண்டவன் தேக அஸௌகரியம் ஏற்பட்டால் நெய், பால் முதலியவற்றை உண்டாலும் நோன்பு வீணாகாது."

ஒருவன் தன் பித்ருக்களை உத்தேசித்து ச்ராத்தம் செய்கிறான். அதற்கு இரண்டு ஸ்வாமிகளை, 'ஸ்ரீபாததீர்த்தம் ஸாதித்து ச்ராத்தத்தைப் பூர்த்தி செய்துவைக்க வேண்டும்' என்று ப்ரார்த்தித்திருந்தான். அவர்களும் ஒப்புக்கொண்டிருந்தார்கள். அன்றைத் தினம் காலை ஒன்பது மணிக்கு அந்த ஸ்வாமிகளுக்குச் சில அஸந்தர்ப்பங்கள் ஏற்பட்டுவிட்டன. அதனால் அந்த ச்ராத்தத்தை அவர்களால் பூர்த்தி செய்து வைக்க முடியாமற் போய்விட்டது. அப்போது அவன் என்ன செய்வான்? ச்ராத்தமோ நடந்தாக வேண்டும். ஊரிலுள்ளவர்கள் எல்லாருமே காபி, பலகாரம் சாப்பிட்டுவிட்டார்கள். அதனால் அவர்களையும் வைக்க முடியவில்லை. என்ன செய்வது? ஏதோ தெய்வாதீனமாக அவ்வூரில் ஆசாரசீலரான இரண்டு ஸ்வாமிகள் சாப்பிடாமல் இருக்கிறார்கள். அன்று ஏகாதசி தினம். எனவே அவர்கள் உபவாஸம் இருப்பவர்கள். அவர்களைக் கொண்டு இந்த ச்ராத்தத்தை நடத்தினால்தான் உண்டு. அவர்களோ உபவாஸம் இருக்கிறவர்கள் ஆனபடியால் நிமந்த்ரணத்துக்கு இருக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். அந்தச் சமயத்தில் ஒரு பெரியவர் சொன்னார் - "ஸ்மிருதிகளில், 'எட்டு விஷயங்கள் விரதத்தைப் பாதிக்கமாட்டா' என்று சொல்லியிருக்கிறது. அவற்றுள் ஒன்று - ஏகாதசியன்று நிமந்த்ரணம் இருத்தல்' என்றார். சாஸ்திரம் நமக்கு எல்லா வகையிலும் நன்மையையே கூறுகிறபடியால், இப்படிப்பட்ட சமயத்தில் நிமந்த்ரணம் இருந்து ச்ராத்தத்தைப் பூர்த்தி செய்துவைப்பது, உபவாஸத்துக்குச் சமமான பலனைக் கொடுக்கும் என்று தேறுகிறது. இதைக் கொண்டு, ஒவ்வோர் ஏகாதசியிலும் நம்மை நிமந்த்ரணத்துக்கு யார் அழைக்கப் போகிறார்கள் என்று எண்ணியிருப்பதோ, அப்படி நிமந்த்ரணம் இருப்பதோ நியாயமல்ல. இந்த நோன்பை ருக்மாங்கதன் என்ற அரசன் தானும் அநுஷ்டித்தான்; ஜனங்களையும் அநுஷ்டிக்கும்படி செய்தான் என்பது உலகப் பிரசித்தம்.

துவாதசி விரதத்தை அம்பரீஷர் என்ற மகா பாகவதர் அநுஷ்டித்தார் என்பதும் தெரிந்ததே. உண்ணாவிரதம் என்பதை எல்லாரும் நன்கறிவர். அவரவர் மனோரத பூர்த்திக்காக அரசாங்கத்தை எதிர்த்தோ, தம் மேலதிகாரியை எதிர்த்தோ இதைச் செய்து வருகிறார்கள். ஆனால் எல்லா விஷயங்களைப் பற்றியும் தம் மனம் போன வழியே உண்ணாவிரதம் இருக்கிறேன் என்பது சரியல்ல. சாஸ்திரங்களில் வகுத்ததாயும், நியாயமாயும் உள்ள விஷயங்களில்தான் இந்த விரதத்தைச் செய்தல் நல்லது. ராமனுக்கும் பரதனுக்கும் முடிசூடுதல் விஷயமாகப் பெருத்த ஸம்வாதம் ஏற்பட்ட சமயத்தில் பரதன் கூறுகிறான் -

> அநாஹாரோ நிராலோகோ தநஹீநோ யதா த்விஜ:।
> சேஷ்யே புரஸ்தாத் சாலாயா யாவந் ந ப்ரதியாஸ்யதி॥

"தலையைத் துணியால் மூடிக்கொண்டு, ஏழையான பிராம்மணன் எப்படி ஆஹாரமில்லாமல் உண்ணாவிரதம் இருப்பானோ அதுபோல், நானும் இருந்து பர்ணசாலையின் வாசலில் இராமன் திரும்பும் வரையில் படுத்துக்கொள்வேன்" என்றான்.

வீட்டில் சண்டை ஏற்படும். அதன் காரணமாக கோபமடைந்து சாப்பிடாமல் இருப்பார்கள். சிலர் காரணமின்றியே வியாழன் முதலிய தினங்கள் போஜனம் செய்யார். இவையெல்லாம் சாஸ்திரஸித்தமாகாது. ராமனும், பரதனிடம், இப்படி செய்வது சாஸ்த்ர முரண் என்று மறுத்தார்.

இனி, மௌன விரதத்தைச் சற்று ஆராய்வோம்.இந்த விரதம் சாப்பிடும்போதும், பிரதோஷ காலங்களிலும், பகவதாராதனம் செய்யும் காலத்திலும், வேள்வி செய்யும்போது சிற்சில காலங்களிலும், செய்ய வேண்டியது என்று சாஸ்திரம் கூறுகிறது. சாப்பிடும் சமயத்தில் மௌனமாக இருக்கவேண்டும். நான்கு பேர் ஓர் இடத்தில் ஒரே சமயத்தில் சாப்பிடும்போது பேச ஆரம்பித்துவிட்டால் வம்பளப்பு அதிகமாகவே போய்விடும். வம்பளப்பிலுள்ள ஸ்வாரஸ்யத்தினால் எதைப் பேசலாம் எதைப் பேசக்கூடாது என்பதையே மறந்துவிடுவார்கள். அந்த வீட்டு யஜமானனின் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கலாம். அந்தச் சமயத்தில் பத்துநாள் தீட்டை அவர்களுக்குச் சொல்லிக் கல்யாணமே நிறுத்தும்படி பேசிவிடுவார்கள். இது பெரிய அலௌகிகம். வீட்டில், நாம் தனியாக உட்கார்ந்து சாப்பிடும்போது, பேச ஆரம்பித்துவிட்டால், பதார்த்தங்களில் உப்பு இல்லை புளிப்பு இல்லை என்று சொல்லிக் கொஞ்சம் கொஞ்சமாக வாதத்தையே வளர்த்துவிடுவார்கள். பெண்டாட்டியும் ராக்ஷசியாக இருந்துவிட்டால் சண்டையின் முடிவு என்ன ஆகும் என்று சொல்லவே வேண்டாம். ஆகையால்தான் அப்பொழுது மௌனியாக இருந்து புசிக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்தச் சமயத்திலும், சிற்சில போது பேசினால் தோஷம் இல்லை என்றும் சொல்கிறது. உண்ணும்போது தனக்கு வேண்டிய பதார்த்தங்களை ஜாடையால் காட்ட இயலாவிட்டால் என்ன செய்வது? எல்லாருமே இங்கிதங்களைக் காட்டவா முடியும். அதனால் அந்தச் சமயத்தில் வேண்டியவற்றை வாயால் கேட்டுப் பரிமாறும்படி செய்து புசித்து, ஆத்மவஞ்சனை செய்யாமல் இருக்க வேண்டும்.

ப்ரதோஷ காலங்களில் மௌனியாக இருத்தல் வேண்டும் என்பது சாஸ்திரம். அந்தச் சமயங்களிலும் ஒரு பெரிய பாகவதரோ ஆசார்யரோ இவரிடம் வந்துவிட்டால் அப்போது குசலப்ரச்னம் செய்து பூஜித்துப் பிறகு பழைய மௌனவிரதத்தைக் கடைபிடிக்க வேண்டும். 'நான் மௌனவிரதம் இருக்கிறேன் என்று ஸங்கல்பம் செய்துகொண்டுவிட்டேன். ஆகையால் பாகவதரையோ ஆசார்யரையோ பார்த்தாலும் பேச மாட்டேன்' என்று முரட்டுப் பிடிவாதம் செய்கிறவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் சாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தவரல்லர்.

பாகவதர்களின் பெருமையையும் பகவானின் மகிமையையும் அறியாதவர்தாம் அப்படி இருப்பார்கள். நாம் ஸந்தியா வந்தனம் செய்கிறோம். காயத்ரி ஜபம் செய்யும்போது ஒரு மகான் வெளியூரிலிருந்து நம் இல்லத்திற்கு வந்துவிட்டார். ஜபகாலத்தில் ஒருவரோடும் பேச வேண்டாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்தச் சமயத்தில் வந்த அந்த மகானை, 'எழுந்தருளவேண்டும், என்னை அநுக்ரகிக்கவேண்டும்' என்று குசலங்களைச் செய்வது யுக்தமா, அயுக்தமா என்று ஆராய்வதே அனிஷ்டத்தைக் கொடுக்கும். வந்த மகானை நன்கு புரஸ்கரித்துப் பிறகுதான் ஜபத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும். நூற்றெட்டுத் தடவை காயத்ரி ஜபம் செய்கிறேன் என்று உட்கார்ந்தவன், ஐம்பது தடவை ஆனதும் மகான் வந்துவிட்டால், அவரை நன்கு புரஸ்கரித்து மேற்கொண்டு ஜபத்தைச் செய்ய ஆரம்பிக்கலாம். இதில் யாதோரு தோஷமும் இல்லை. அப்படிச் செய்யாமல் இருந்தால்தான் பகவானுக்கு அப்ரீதி உண்டாகும். பகவான் கருடவாகனத்தில் எழுந்தருளுகிறார் வீதியில். அந்தச் சமயத்தில் பாதி ஜபம் செய்தகொண்டிருந்தாலும் அதை நிறுத்திப் பகவானை நன்கு உபசரித்துப் பிறகு தொடர்வதுதான் நல்லது. இதுதான் தர்மஸூக்ஷ்மம்.

நகரம் அருள்புரிந்து நான்முகற்குப் பூமேல்
பகர மறைபயந்த பண்பன் - பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதி உருவெண்ணும்
அந்தியால் ஆம்பயனங் கென்?

என்றார் ஆழ்வார். நாம் தினந்தோறும் சந்தியில் ஜபம் செய்யும்போது பகவானுடையப் பெயரைத் தியானம் செய்து கொண்டே அநுஷ்டிக்க வேண்டும். அந்தச் சமயத்தில் வெறும் வம்பளப்பு ஏற்படுகிறது. பட்டுப் புடவையின் விலை என்ன? எங்கு உபந்யாஸம் செய்தால் இம்மாதிரி புடவையை வாங்கிக் கொடுப்பார்கள்? நேற்று வந்த இந்தச் சேலையை மனைவியைப் பார்த்து, 'நீ உடுத்துக் கொள்கிறாயா, நாட்டுப்பெண்ணிற்குக் கொடுக்கலாமா? பெண்ணுக்குக் கொடுத்துவிடலாமா? என்றெல்லாம் வார்த்தையை அளந்துகொண்டே ஜபம் செய்கிறோம். கடைசியில், 'ஆயிரத்தெட்டு காயத்ரி ஜபம் செய்துவிட்டேன்' என்று மாரைத் தட்டிக்கொள்கிறோம். "இப்படிப்பட்ட சந்தியா வந்தனத்தினால் என்ன பயன் ஏற்படும்?" என்றார் ஆழ்வார்.

இப்படி அநாவசியமான வார்த்தைகளை உச்சரிக்கிற நாம் பாகவதர்கள் வந்தால் அவருடன் குசல வார்த்தைகளை ஏன் கேட்கக் கூடாது.?

மேலும் பாண்டிய தேசத்து அரசன் பாகவதன். ஸந்தி முதலியவைகளை சரிவரச் செய்பவன். அவன் மலைய மலையில் பகவதாராதனம் செய்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அகஸ்த்யர் வந்தார். வந்தவரை விசாரிக்காமல் மதம் பிடித்த யானைபோல் இருந்து விசாரிக்காமல் இருந்துவிட்டான். இதைக் கண்ட அந்த மஹரிஷி நான் வந்தபோது மதம் பிடித்த யானைபோல் நீ இருந்தபடியால் யானையாகப் பிறப்பாய்" என்று சபித்தார். பிறகு அவனும் விஷயம் புரிந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். மகானுடைய கோபம் க்ஷணகாலம் தான் இருக்குமாகையால், அவர் ப்ரசன்னராய "எம்பெருமான் அநுக்ரஹம் ஏற்பட்டு நற்கதியை அடைவாய்" என்று அநுக்ரஹம் செய்தார். அந்த அரசன்தான் கஜேந்திரன். முதலையால் பிடிக்கப் பட்டு, துன்பமடைந்து, பூர்வ ஜன்மவாஸனை இருந்த படியால் 'நாராயணா மணிவண்ணா வாராய் என் இடர் நீக்காய்' என்றழைக்க பகவானே வந்து ரக்ஷணம் செய்தான்.

இது பாகவதக்கதை.

கோதாஸ்துதியில் "மௌனத்ருஹோ முகரயந்தி குணா: த்வதீயா:' என்றுள்ளது. இங்கு ஒரு ஐதீஹம் சொல்லுவர் - ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்வாமிதேசிகன் இருந்த ஸமயம். அப்பொழுது வெள்ளிக் கிழமை த்ரயோதசிப்ரதோஷம். அன்று ஸ்வாமி தேசிகன் ப்ரதோஷப்ரயுக்தமான மௌன வ்ரதத்தில் எழுந்தருளியிருந்தார். அது சமயம், கோதைபிராட்டி, ஆந்தொளிகையில் வீதியில் வலம் வந்தாள். ஸ்வாமி தேசிகன் கோதை எழுந்தருளியதும் எப்படி ஸேவிக்காமல் இருப்பார். வெளியில் வந்து மங்களாசாஸனம் செய்தாயிற்று. ஆனந்தம் பொங்கிற்று. எவ்வாறு ஆண்டாளுடைய குணங்களை பரக்கப் பேசாமல் இருக்க முடியும்? ஆகத் தானாகவே குணங்களை அநுஸந்தித்து, ஆண்டாள் விஷயமான ஸ்தோத்ரம் வெளிக்கிளம்பிற்று. 'உன்னுடைய திருக்கல்யாண குணங்கள் என்னை பேசாமல் இருக்க வைக்க முடியவில்லை' என்று அநுஸந்தித்தார். அதுதான் கோதாஸ்துதி' என்று ஐதீஹ்யம் என்று சொல்வதுண்டு.

மோக்ஷத்துக்காக ப்ரஹ்மத்யானம் விதிக்கப் பட்டது. அங்கு "மந்தவ்ய: என்றுள்ளது. அதுபோல் 'அதமுனி: என்றும் சொல்லியுள்ளது. அங்கு மௌனம் மனனம். அது தவிர மௌனம் சொல்லப்படவில்லை. "விசேஷதோ மௌனம் அபண்டிதானாம்" என்று வித்வத் கோஷ்டியில் படிக்காதவன் எதையும் பேசாமல் இருக்க வேண்டும். இவனோ மூடன். இவன் பேசினால் இவனது மூடத்தன்மை வெளியாகிவிடும்' என்றது நீதி.

விமானத்தில் ஏறி ஸ்வர்க்கம் செல்லுகிறார் மூவர். அப்பொழுது கீழே ஒரு பாம்பு தவளையைப் பிடித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அதை பார்த்தனர். ஒருவர் "ஐயோ, தவளை என்ன செய்தது. இதை அக்ரமமாக பாம்பு தின்கிறதே என்றான். அது சொன்னதும், விமானம் இவனை கீழே தள்ளிவிட்டது. மற்றொருவன் 'அதன் ஆஹாரத்தை அது புசிக்கிறது. இதில் என்ன தவறு' என்றான். இப்படிச் சொன்னதும் இவனையும் கீழே தள்ளிவிட்டது விமானம். இதைப் பார்த்தான் மற்றொருவன். இருவர் விழுந்ததையும் நோக்கி நாம் ஒன்றும் பேச வேண்டாம் என்று இருந்தான். அவன் ஸ்வர்க்கம் சென்றான். ஆக எதையும் பேசாமல் இருப்பதுதான் ஸர்வார்த்த ஸாதகம்.

*****

# 15. பறவைகள்

ச்ரிய: பதியான நாராயணன் உலகம் யாவையும் படைத்துக் கண்டு களிக்கிறான். இவன் படைத்த எந்தப் பொருளும் பயனற்றதாகவே இராது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விசேஷமான அர்த்தத்தை உணர்த்த வேண்டுமென்றே நினைத்து ஸ்ருஷ்டித்திருக்கிறான். அவரவர்களின் புண்ணிய பாவங்களை அநுசரித்து அந்த அந்த ஜந்துக்களைப் படைத்தாலும் அவற்றின் மூலமாகச் சில தர்மங்களை மக்களுக்கு உணர்த்தி வைக்கிறான்.

மனிதர்களைப் படைத்து அவர்கள் மூலமாகச் சில தர்மங்களை வெளிப்படுத்துவது கண்கூடாக இருப்பது நமக்குத் தெரிந்ததே. இது பெரிய அதிசயமல்ல. பறவைகளைப் படைத்து அவற்றின் மூலமாக லோகோத்தரமான தர்மங்களையும் சிற்சில உபதேசங்களையும் செய்து வைக்கிறானே; இதுதானே பரம ஆச்சரியம்! இதைச் சில பறவைகளை உதாரணமாக்கி விளக்குகிறோம்.

ஆகாசத்தில் எத்தனையோ பறவைகள் பறக்கின்றன. ஜனங்கள் சரியான வழியில் இருந்து தர்மங்களை அநுஷ்டித்து ச்ரேயஸ்ஸை அடைய வேண்டுமென்று எண்ணிச் சில தர்மங்களை அவை நமக்கு உபதேசிக்கின்றன. அவ்வப்பொழுது அவற்றின் செயலைக் கண்டு நாம் தர்மபுத்தியைப் பெற வேண்டும்.

குலிங்கம் என்ற ஒரு பக்ஷி உண்டு. இதற்கு, ஸாஹஸ பக்ஷி என்ற பெயரும் வழங்குகிறது. இது, 'ஸாகஸ வேலையைச் செய்யாதே' (மா ஸாஹஸம் குரு) என்று சொல்லிக் கொண்டே இருக்கும். இதன் வாயிலிருந்து வரும் ஒலி 'ஸாகஸ வேலையைச் செய்யாதே' என்ற ஓர் அர்த்த விசேஷத்தை அறிவிப்பது போல் தோற்றம். ஆனால் இது செய்வது வேறு; நேர் எதிரான காரியம். அதாவது, காட்டில் சிங்கம் உணவைத் தின்றுவிட்டுப் படுத்து உறங்கும். அப்போது சிங்கம் வாயைத் திறந்து கொட்டாவி விடும். அந்த சமயத்தில், அதன் பற்களில் ஒட்டிக்கொண்டிக்கும் மாம்ஸத் துண்டுகளை இந்த ஸாஹஸ பக்ஷி திடீரென்று வாயில் புகுந்து எடுத்துக் கொண்டு தப்பி வெளியில் வந்துவிடுமாம். சிங்கம் அதற்குள் வாயை மூடிக்கொண்டுவிட்டால் இதன் கதி என்ன ஆகும்? இதைவிடத் துணிச்சலான காரியம் வேறு என்ன இருக்கிறது? கண்ணை மூடித் திறப்பதற்குள் இந்தச் செயலை இது செய்கிறது. 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போல இல்லையா இதுவும்?

இந்த ஸாஹஸ பக்ஷியைத் தமக்கு ஒப்பாக வைத்து ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் தயா சதகத்தில் ஒரு விஷயத்தை நிரூபணம் பண்ணுகிறார் - 'கோரம் குலிங்க சங்குநேரிவ சேஷ்டிதம் மே' என்று. "திருவேங்கட முடையானின் தயைப்பற்றிப் புகழ்வது மகரிஷிகளுக்கும் அரிதான காரியம். அப்படியிருக்க நான் அதில் இழிவது அதிஸாஹஸமான வேலை. இதை அறிந்தும், ஸாஹஸமான வேலையை செய்வது தவறு என்று பிறருக்கு உபதேசித்தும் இருக்கும் நான் அந்த பக்ஷிக்கு ஸமமாகவே ஆகிறேன். இப்படிப்பட்ட அடியேனை திருத்திப் பணிகொள்ளப் பிரார்த்திக்கிறேன்" என்று.

இந்தப் பக்ஷியின் மூலமாக நாம் அறிந்து கொள்வது என்னவென்றால் "பரோபதேசவேலாயாம் ஸர்வே வ்யாஸ பராங்குசா: I ஸ்வஸ்வாநுஷ்டாநஸமயே முநயோபி ந பண்டிதா: II" என்பதே. எத்தனையோ மகான்கள் மேடையில் உட்கார்ந்து பிறருக்குத் தர்மோபதேசங்களைச் செய்வார்கள். தாங்களும் தர்மசாஸ்திரங்களில் சொல்லும் வகையிலேயே சிறிதும் பிறழாமல் நடப்பார்கள். அவர்களைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. 'குலிங்க சகுனியை

போல் கேவலம் வேஷதாரிகளாக மட்டும் இருக்கிறார்களே. அவர்களைத்தான் கவனிக்க வேண்டும். இவர்கள் மேடையில் உட்கார்ந்து மிகவும் பிரமாதமாக தர்மங்களை உபதேசிப்பார்கள். "சந்தியா வந்தனம் செய்ய வேண்டும்; பகவத் ஆராதனம் செய்ய வேண்டும்; கொலை செய்யக் கூடாது; திருடக் கூடாது; வெங்காயம் முதலியவற்றை சாப்பிடக்கூடாது" என்று இப்படியெல்லாம் பிறர் மனதை கவரும் வகையில் உபதேசிப்பார்கள். ஆனால் இவர்கள் வீட்டில் சாலக்ராமமே இராது. பூஜைக்கு வழியே இல்லை. யாராவது பார்க்கும்போது புளியைச் சிறு உருண்டையாக்கி சாலக்ராமம் என்று பிறர் பிரமிக்கும்படி செய்து ஆடம்பரப்படுத்துவார்கள். வெங்காயம், பூண்டு, முட்டை கோசு, பீட் ரூட் முதலியவற்றைதான் சமைத்து சாப்பிடுவர். இப்படி உலக இயற்கை. ஆகையால் பிறருக்கு உபதேசம் செய்வது ஒன்று; தான் அநுஷ்டிப்பது மற்றொன்று என்ற ரீதியில் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நாம் ஏமாந்து விடவேண்டாம் என்னும் அர்த்தத்தை இந்த பக்ஷி உலகத்துக்கு அறிவிப்பதபோல் இருக்கிறது.

ஆனைச் சாத்தன் என்ற ஒரு பக்ஷி உண்டு. இதை ஜனங்களுக்கு, "காலை எழுந்தவுடன் பகவன் நாமங்களைச் சொல்லுங்கள். 'க்ருஷ்ணா, க்ருஷ்ணா, ஹரி ஹரி' என்று பகவத் கீர்த்தனம் செய்து எழுந்திருங்கள். இது தான் உத்தாரகம்" என்று அறிவிக்கிறது, தான் அநுஷ்டித்துக் காட்டி.

இந்த பக்ஷி 'கீசு கீசு' என்ற கத்தும். உலகத்தில் ஒருவனுக்கு க்ருஷ்ணன் என்றும், தேசிகன் என்றும், ஸ்ரீநிவாசன் என்றும் பெயர் வைப்பதுண்டு. காலக்ரமத்தில் அவனைக் கூப்பிடும்போது, ஸ்ரீநிவாசனை 'சீனு' என்றும், தேசிகனை 'தொச்சு' என்றும், க்ருஷ்ணனை 'கிச்சு' என்றும் அழைப்பது வழக்கம்.

இந்த பக்ஷி காலையில் எழுந்ததும் 'க்ருஷ்ணா க்ருஷ்ணா' என்று சொல்வதற்கு பதிலாக, 'கீசு கீசு' என்று (கிச்சு - கிச்சு) என்று கத்துகிறது. மனிதர்களே கொச்சையாக சொல்லும்போது, பறவைகளைப்பற்றி சொல்ல வேண்டுமா? காலையில் ஆயர்பாடியில் முனிவர்களும் யோகிகளும் 'ஹரி ஹரி' என்று சொல்கிறார்கள். இந்த பக்ஷிகள் க்ருஷ்ணா க்ருஷ்ணா என்று சொல்லுகின்றன. இதை மனதில் வைத்துத்தான் கோதைப் பிராட்டி 'கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்' என்று சொன்னாள்.

காகம் - இந்த பறவையை மனிதர்கள் மிகவும் இழிவாகச் சொல்லுவார்கள். ஒரு மனிதன் எல்லா விஷயத்திலும் ஆசைப்பட்டு அதிகப் பரப்பைக் காட்டினால் அவனைக் 'காக்காய் மாதிரி பறக்கிறானே!' என்று பேசுவதுண்டு. இதிலிருந்தே காகம் எவ்வளவு இளப்பம் என்பது தெரியவரும். ஒரு மாமரத்தில் குயிலும் காக்கையும் வசித்து வந்தன. இதை ஒருவன் பார்த்தான். குயில் மிகவும் மதுரமாகப் பாடுகிறது. காக்கையோ கர்ணகடூரமாகக் கத்துகிறது. இதைக்கண்டதும், "இரண்டும் நிறத்தில் ஒன்றாக இருந்தாலும் இவை இரண்டுக்கும் ஒரே இடத்தில் வாஸத்தைப் பிரமன் கற்பித்தானே; அவனையல்லவா நிந்திக்க வேண்டும்? இந்தக் காகத்தை ஏன் நிந்திக்க வேண்டும்?" என்றான்.

இப்படியெல்லாம் காகத்துக்கு இழிவு இருந்தபோதிலும் இதற்கு உள்ள ஓர் உத்தம குணம் யாருக்குமே கிடையாது. நாம் சாப்பிட்டதும் எச்சில் இலையை வாசலில் போட்டு விடுகிறோம். அதை ஒரு காகம் பார்த்ததும் தன் இனத்தார் எல்லாரையும் கூப்பிட்டு உடன் உண்கிறது. 'ஏக: ஸ்வாது ந புஞ்ஜித, புஞ்ஜித தஸபி: ஸஹ' என்ற சாஸ்திரத்தின்படி நடக்கிறது. 'தான் ஒருவனே வாழ வேண்டும், மற்றவர் அழிந்துவிட வேண்டும்' என்ற கெட்ட குணம் இதற்கு இல்லை.

மனிதர்களில் இந்தக் குணம் பெரும்பாலும் உண்டு. ஓர் அன்ன சத்திரத்தில் நானாவிதமான பக்ஷணங்களோடு வந்தவர்கள் எல்லோருக்கும் ததீயாராதனை செய்து பத்துப் பத்து ரூபாய் பூரி தானம் வழங்கப் போகிறார்கள் என்று நன்றாகத் தெரிந்தபோதிலும் பிறருக்கு இதைச் சொல்லவே மாட்டான். "இம்மாதிரி நடக்கப் போகிறதாமே; இது உனக்குத் தெரியுமா? என்று பிறர் இவனைக் கேட்டாலும், "ஐயோ! இது நடக்கப்போகிறது என்று முன்பு சொன்னது வாஸ்தவம். ஆனால் ஏதோ அஸந்தர்ப்பத்தினால் ஒரு மாதம் கழித்து நடத்துவதாகத் தீர்மானித்துவிட்டார்கள். ஆகையால் நானும் அங்கே போகப் போவதில்லை" என்று சொல்லிவிட்டு, அவனுக்குத் தெரியாமல் இவன் போய் வருவான். ஆகையால் காகத்தைவிட இவன் கேடு கெட்டவன். இதை மனத்தில் வைத்து ஒரு கவி சொல்லுகிறான்:-

காகயாசகயோர் மத்யே வரம் காகோ ந யாசக: I
காக: காகாநாஹ்வயதே யாசகோ ந து யாசகம் II

ஸீதையினிடம் அபராதம் செய்து ப்ரஹ்மாஸ்திரத்தினால் அடிப்பட்டுப் பிழைத் தெழுந்த காகம் ஆகாயத்தில் பறந்துகொண்டே, 'ஸீதைக்கு ஸமம் யார் [கா?] தயையில் ராமனுக்கு ஸமம் யார்? [க: ] என்று சொல்லிற்றாம். அதனால்தான் அந்த இனத்துக்கே 'காக:' என்ற பெயர் வழங்கியதாம் என்றான் ஒரு கவி. 'காக்கையின் வாயிலும் கட்டுரை கொள்வர்' என்றார் ஆழ்வார். இதை முன்னிட்டுத்தான் காகத்திற்கு அன்னமிடுகின்றனர். மரத்தில் உண்டான தளத்தைக் கொண்டுதான் குயில் ஜீவிக்கிறது.

சகோர பக்ஷி - இதன் ஆஹாரம் சந்திர கிரணம் மட்டும்தான். இதன் குணம் மிகவும் உயர்ந்தது. தசரத சக்கரவர்த்தி தன் மகனான ராமனுக்கு முடிசூட்ட நினைத்தான். ஜனங்களின் அநுமதியை நாடினான். ஜனங்களும், 'நாங்கள் இதை வெகு காலமாகவே எதிர்பார்த்தோம். நீர் இப்போதுதான் ஆசைப்படுகிறீர், நீர் எல்லோருக்கும் சக்கரவர்த்தியாக இருந்தாலும் உமது புதல்வனான ராமனைத்தான் நாங்கள் விரும்புவோம்; உம்மை நாங்கள் விரும்பமாட்டோம்.

இது நியாயமா என்றால் இதுதான் நியாயம் என்போம். எவ்வளவோ தாகத்துடன் சகோர பக்ஷி வாடியிருந்த போதிலும் சந்திர கிரணத்தைத் தான் எதிர்பார்க்கும். அது தவிர சந்திரனுக்கு காரணமான க்ஷீராப்தியை கூட விரும்பாது. அது போல நாங்கள் ராமனை விரும்புவோமே தவிர அவனுக்கும் தகப்பனான உம்மை விரும்பமாட்டோம்' என்றனர்.

தேவே ஸதிதேபி தநயம் தவ ராமபத்ரம்
லோக: ஸவயம் பஜது நாம கிமத்ர சித்ரம் I
சந்த்ரம் விநா ததுபலம்பநஹேதுபூதம்
க்ஷீரோதமாச்ரயதி கிம் த்ருஷிதஸ் சகோர:II

சாதக பக்ஷி என்று ஒரு பறவை. இது உயர்ந்த பறவை. இதன் குணம் எல்லோராலும் போற்றத்தக்கது, உலகில் சிலரை பரமைகாந்தி என்று புகழ்கிறோமே. அவர்களுக்கு இது உதாரணமாம். அவர்கள் பகவானிடத்திலேயே மனத்தைச் செலுத்தி 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன். வாசு தேவ: சர்வம் என்று எண்ணியிருப்பவர்கள். பகவானைத் தவிர வேறு தேவதைகளிடத்தில் மனதை செலுத்தாதவர்கள். ச்ரீய: பதியான நாராயணன்தான் உயர்ந்த தேவதை. 'அங்கான்யந்யா தேவதா:' என்று வேதத்தில் சொன்னபடி, மற்ற தேவதைகள் அவனுடைய உடல்; அதுவே தவிர அவர்கள் பிரதான தேவதைகள்

ஆகமாட்டார்கள் என்று நினைத்துப பகவானிடத்திலேயே பக்தியைச் செலுத்துவார்கள். க்ஷுத்ர தேவதைகளைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். 'உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்' என்றபடி, உயர்ந்த புத்தியைப் பெற்றவர்கள்.

அந்த ஸர்வேச்வரன் கொடுத்த புண்ய பாபத்துக்கு அநுகுணமாகப் பெற்ற பதவியைக் கொண்டுதான் தங்கள் தங்கள் வேலையைச் செய்கிறவர்கள் தேவதாந்தரங்கள். ஒழுகுசங்கிலியில், நம்மைப் போல் அவர்களும் கட்டுப்பட்டவர்கள். குற்றம் செய்தவர்களை ஒரு காராக்ருஹத்தில் கைகளிலும் கால்களிலும் விலங்கைப் பூட்டி ஒர் அரசன் அடைத்து வைத்தான். அதிலிருந்து கட்டை அவிழ்த்து வெளியில் வர சக்தியற்றவர்களாக அவர்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதில் ஒருவன் தன்னைப் போல் கஷ்டத்தோடு இருப்பவனை பார்த்து, 'ஐயா, உமக்கு நான் பூஜை செய்கிறேன்; பலி கொடுக்கிறேன்; கோவிலைக் கட்டுகிறேன்; என்னை எப்படியாவது அவிழ்த்துவிடும்' என்று சொன்னால் மற்றவன் என்ன செய்வான்? அது போலத்தான் தேவாதாந்தரங்களை நாம் பஜிக்கலாகாது என்ற த்ருடமான எண்ணத்தை யார் அடைந்திருக்கிறார்களோ அவர்கள் தாம் பரமைகாந்திகள். மேலும் அந்த பகவானே நாம் அடையும் எல்லா பலன்களுக்கு உபாயம். அவனது கைங்கர்யத்தையும் அவனிடத்தில்தான் பெறவேண்டும். அந்த கைங்கர்யத்ததைத் தவிர வேறு எந்த பலனையும் அவனிடத்திலும் எதிர்பார்க்க மாட்டார்கள். சிலர், ஸ்ரீமானான நாராயணன்தான் தெய்வம் என்று எண்ணி தேவாந்த்ர கோவில்களுக்குச் செல்லாமல் இருப்பார்கள். ஆனால் அந்த பகவானிடத்தில் வேறு பலனை எதிர் பார்த்து வேண்டிக் கொள்வார்கள். வீடு வாசல் மக்கள் செல்வம் முதலிய பலனை அவனித்தில் எதிர்பார்ப்பதுண்டு. இவர்கள் ஏகாந்திகள். நிஷித்தமான வேலைகளை எப்படி விட்டுவிடுவார்களோ அதுபோல் காம்யங்களையும் விட்டொழிப்பார்கள் பரமைகாந்திகள். பரமா ஏக அந்தி உன்று பிரித்தால், பிராட்டி, பகவான் இவர்களிடமே நோக்குள்ளவர்கள் என்றும், ஆகையால் பரமை காந்திகள் என்றும் சொல்லலாம். மா=லக்ஷ்மி. ஏக: பரமாத்மா 'ஏகோ நைக: என்பது ஸஹஸ்ர நாமம். பர என்பதை இரண்டிடத்திலும் சேரு. த்வந்த்வஸமாஸம். இந்த ஸமாஸத்தில் முடிவில் இருக்கும் பதத்தை இரண்டிடத்திலும் சேர்ப்பர். அதுபோல் முதலில் உள்ள பதத்தையும் இரண்டிடமும் சேர்க்கலாம். ஆக உத்த்ருஷ்டமான லக்ஷ்மி. உத்த்ருஷ்டமான பகவான் இரண்டு பேருமே ப்ராப்யம். ப்ராபகம் என்ற எண்ணமுடையவர்கள் பரமை காந்திகள். இதனால் ப்ராப்யத்வம் ப்ராபகத்வம் இரண்டு பேருக்கும் உண்டென்று மந்திரத்தில் சொன்ன அர்த்தம் தெளிவாகிறது. இப்படிப் பட்ட பரமைகாந்திகளுக்கு சாதக பக்ஷி உதாரணமாகிறது. ''ஜகதி சாதகவத் க்ருதிந:' என்றார் வேதாந்த தேசிகர்.

சாதக பக்ஷி ஆகாயத்திலேயே வாயைத் திறந்துகொண்டு பறந்துகொண்டிருக்கும். இது தண்ணீரைப் பருக இந்திரனையே எதிர் பார்த்திருக்கும். இந்திரன் மேகம் மூலமாக மழையைப் பெய்வித்தால் அந்த மழையின் பிந்து இதன் வாயில் விழும். அதைப் பருகி இது சந்தோஷம் அடையும். கிணற்றிலேயோ குளத்திலேயே இருக்கும் தண்ணீரை இது குடிக்காது. எவ்வளவோ தாகமாக இருந்தபோதிலும் ஆகாயத்தில் வாயைத் திறந்து இந்திரனை எதிர் பார்க்குமே தவிற மற்றொன்றை எதிர்பார்ப்பதில்லை. இது இதன் உயர்ந்த குணம். 'ஏக: க்ருதீ ஸகுந்தேஷு யோந்யம் ஸக்ராந் ந யாசதே!' என்று கவிகள் கூறுவர். இந்தப் பக்ஷியினிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது பரமைகாந்த்யம்.

இந்தச் சாதக பக்ஷியை ஒரு கவி புகழ்ந்து பேசுகிறான் - ஸந்த்யேவாஸ்மிந் ஜகதி பஹவ: பக்ஷிண: ஸௌம்யரூபா: தேஷாம் மத்யே மம து மஹதீ வாஸநா சாதகேஷு I யைரத்யகைஷரத நிஜஸகம் நீரதம் ஸ்மாரயத்பி: ஸ்மருத்யாரூடம் பவதி கிமபி ப்ரஹ்ம க்ருஷ்ணாபிதாநம் II

"உலகத்தில் அழகான பக்ஷிகள் எத்தனையோ இருக்கின்றன. ஆயினும் சாதக பக்ஷியினிடத்தில்தான் எனக்கு அபிமானம் அதிகம். ஏனென்றால், இது மேகஜலத்தைத் தவிர வேறு நீரைப் பருகுவதில்லை. ஆகையால், இதைக் கண்டதும் மேகத்தின் ஞாபகம் வருகிறது. மேகத்தின் ஞாபகம் வந்தவுடன், நீலமேக ஸ்யாமளனான கிருஷ்ணன் ஞாபகம் வருகிறது. ஆக, சாதக பக்ஷி தொடர்பாகப் பரப்ரஹ்மமாகிற கிருஷ்ணனை நினைப்பூட்டுகிறபடியால் எல்லாப் பக்ஷிகளைக் காட்டிலும் இது உயர்ந்தது. அதனால் இதனிடத்தில் எனக்கு அதிக அபிமானம்'.

இப்படி ஒவ்வொரு பக்ஷியின் மூலமாகவும் உலகத்திலுள்ள மனிதர்கள் ஒவ்வொரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்காகவே எப்பெருமான் பக்ஷிகளைப் படைத்திருக்கிறான். உதாரணமாகச் சிலவற்றைக் கூறினோம். ஸ்ரீராமபிரானும், 'கபோதோ வாநரஸ்ரேஷ்ட கிம் புநர்மத்விதோ ஜந:' என்று புறாவின் மூலமாக சரணாகதி ரக்ஷணத்தை அவசியம் செய்ய வேண்டுமென்பதை உணர்ந்து "அறிவில்லாத பறவையினத்தில் பிறந்த புறாவே தன் சத்ருவுக்கேத் தன் பிராணனைக் கொடுத்துக் காப்பாற்றியது என்றால் சரணாகத ரக்ஷக குலத்தில் பிறந்த நான் சத்ருவின் தம்பியான அடைக்கலமென்று வந்த விபீஷணனை என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றாவிட்டால் உலகம் என்னை நிந்திக்கும்" என்றான்.

குருவிகளின் ஸ்வபாவத்தைப் பார்ப்போம். குஞ்சுகளுடன் தம்பதிகளான குருவிகள் கூண்டில் இரவில் வசிக்கும்பொழுது விடிந்ததும் தீனி தேடித் தனித்தனியாக வெளியில் சென்றுவிடும். இரவில் மறுபடியும் தம் இருப்பிடம் வந்து சேரும். ஓர் இரவுகூட ஆணை விட்டுப் பெண்ணோ, பெண்ணை விட்டு ஆணோ தனித்து வசிக்காது. இன்னொரு கூட்டிலும் வாசம் செய்யாது. இரவுவேளை வந்தால், அந்த அந்த ஜோடி தங்கள் தங்கள் இருப்பிடத்திற்குக் கட்டாயம் வந்து சேர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உண்டு. ஏதாவது காரணத்தினால் ஓர் இரவு வெளியில் தங்க நேர்ந்தால் மறுநாள் காலையில் ஒன்றுக்கொன்று சண்டை ஏற்படும்; தங்கள் இனத்தோடு சேர்க்க ஸம்மதிக்காது. பறவைகளாக இருந்தபோதிலும் இவற்றுக்கு ஏற்பட்ட கட்டுப்பாடு எவ்வளவு அழகாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். பாதிவ்ரத்யமும் பரதாரபராங்முகத்வமும் இவற்றுக்கு முக்கியமான தர்மம். அருந்ததி வஸிஷ்டர்களை கூறுவதுண்டு. பதிவ்ரதத்தில் இவர்களுக்கு ஒப்பானவர்கள் இல்லை. ஆகையால்தான் விவாஹ ஸமயத்தில் இரவில் அருந்தி நக்ஷத்ரத்தையும் வஸிஷ்டரையும் பார்க்கச் சொல்வது. இந்த விஷயத்தை நாம் இவற்றினிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். குருவிக்காரன் என்று நாம் சிலரை அழைக்கிறோமே; அதற்குக் காரணம் என்ன தெரியுமா? குருவித் தம்பதிகள் எப்படியோ அப்படிப்பட்டவர்கள்தாம் இவர்களும், இவர்களிலும் ஆணும் பெணணும் ஜீவனத்துக்காகப் பொழுது விடிந்ததும் தனித்தனியாக எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அஸ்தமித்துவிட்டால் இருவரும் தங்கள் இருப்பிடம் வந்தே சேரவேண்டும். அப்படி இல்லாவிட்டால் இவர்களைத் தங்கள் இனத்திலிருந்து தள்ளி விடுவார்களாம். இது இவர்களின் ஸங்கேதம். ஆகையால்தான் எங்களுக்குக் குருவிக்காரர் என்ற பெயர் உண்டாயிற்று என்று அவர்களே சொல்லும் வார்த்தை.

கிளி மதுரமாகப் பேசும். சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை. ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களிலும் அரசர்களின் அரண்மனைகளிலும் கிளியைக் கூண்டில் அடைத்து அதன் மதுரமான பேச்சைக் கேட்டு ஆனந்திக்கின்றனர். 'சுக பஞ்ஜரபந்தஸ் தே மதுராணாம் கிராம் பலம்' என்றார்கள் புலவர்கள். இதிலிருந்து நாம் அறிவது - ஒருவனுக்கு ஏதாவது ஒரு விதத்தில் மேன்மை இருந்தால் அவனுக்குக் கிளியைப் போல் பந்தம் ஏற்படும் என்பது. ஆகையால் ஒரு மேன்மையோடு உள்ளவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஜாகரூகனாக இருக்கவேண்டும்.

உலகத்தில் ஒருவன் நல்ல குணத்தையோ தோஷத்தையோ அடைவது சேர்க்கையினால்தான். ஸம்ஸர்கஜா தோஷ-குணா பவந்தி. ஸஹவாஸத்தினால்தான் நல்லது கெட்டதை அடைகிறான். நல்லவருடன் சேர்ந்தால் ஸத்புத்தி உண்டாகிறது; கெட்டவருடன் சேர்ந்தால் தீய புத்தி உண்டாகிறது. ஒரே பெற்றோருக்குப் பிறந்த கிளிகளில், ஒன்று முனிவர்களின் சேர்க்கையினால் நற்புத்தியை அடைந்து நற்காரியம் செய்தது. மற்றொன்று, வேட்டுவச்சேரியில் வளர்ந்து அவர்களின் ஸஹவாஸத்தினால் தீய புத்தியைப் பெற்று, 'தஹ பச' என்ற கெட்ட வார்த்தைகளைச் சொல்லி வந்தது. நல்ல ஸம்ஸர்க்கம் நமக்கு வேண்டுமென்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இப்படி எல்லா ஜந்துக்களிடமிருந்தும் நாம் கற்க வேண்டிய விஷயங்கள் பல உள்ளன என்பதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

ஹம்ஸத்தைப் பார்ப்போம். ஜலத்தையும் பாலையும் கலந்து கொடுத்தால் அது பாலை மாத்திரம் சாப்பிடும். ஜலத்தை பருகுவதில்லை. ஹம்ஸ ஜல க்ஷீரந்யாயம் என்பதுண்டு. இதன் மூலம் ஒருவனிடம் உள்ள தோஷங்களை விட்டு விடவேண்டும். குணங்களை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது. எப்பொழுதும் குணங்களைத்தான் புகழ வேண்டும். அவனிடமுள்ள தோஷங்களைப் பார்க்க கூடாது. குணம் தோஷம் இரண்டும்தான் மனிதனுக்கு இயற்கையாக உண்டு என்று எண்ணி புகழ்வது தான் உத்தமம்.

இங்கு ஒரு வேடிக்கை - ஸ்ரீபாஷ்ய காரர் விஷயமாக ஸ்வாமி தேசிகன் அநுபவம் -
ஒரு பொய்கை கரையில் வாட்டத்தோடு அன்னம் இருந்தது. அது ஏன் அப்படி என்று ஒருவர் கேட்டார். அதற்கு மற்றொருவர் 'சோர்வுதான் காரணம்' என்றார். 'அதற்குக் காரணமென்ன?' 'அதற்கு ஏற்பட்ட பெருமை போனது'. அதுதான் ஏன் ஏற்பட்டது? இயற்கையாக அன்னத்துக்கு ஏற்பட்டது. நீரையும் பாலையும் பிரிக்கும் தன்மை. அது போனபடியால் அதற்கு சோகம். ஏன் அத்தன்மை நீங்கியது? எம்பெருமானார் புகழ் உலகெல்லாம் பரவிற்று. புகழ் என்பது வெண் சங்குக்கு ஸமமாக வெளுப்புடையது. அதன் வெள்ளை நிறம் எங்கும் கலந்துவிட்டது. ஆக நீரெல்லாம் பால் ஆகிவிட்டது. இப்படி நேர்ந்ததால் பாலையும் நீரையும் பிரிக்க முடியவில்லை. அதனால் தங்களுக்கு ஏற்பட்ட சக்தி இழந்துவிட்டதே என்று அதற்கு கவலை. அதனால் பல சோகமாம் அதற்கு.

"அலர்ந்த அம்புயத்தில் இருந்து தேன் அருந்தி இன்னகல் இங்குலார் அசைந்து அடைந்த நடை கொளாதது அனம் ஏனோ? நலம் தவிர்ந்ததால் அதன் கொல் ? நாவின் வீறு இழந்ததால் நாவணங்கு நாதர் தந்த நாவின் வீறு இழந்ததால் என் சலம் தவிர்ந்து வாதம் செய்து அடி முண்டமிண்டரை சரிவிலேன் என களைத்து உரைத்த யதிராசர் தம் வலம் தரும் கைய நாயனார் வளைக்கு இசைந்த கீர்த்தியால் வாரி பாலதாம் அதென்றும் மாசில் வாழி வாழியே" என்பதாம்.

இனி கருடனைப்பார்ப்போம். இது பூஜிக்கத் தகுந்தது. இந்திரனிடம் சென்று போர் செய்து, அம்ருத கலசத்தை கொண்டுவந்து, கொடுத்து உதவி செய்தது. கருட பஞ்சாக்ஷரத்தில் கருட தண்டகத்திலும் இதன் பெருமையை விஸ்தருதம். இதனுடைய நிழலே விஷத்தை போக்கடிக்கும். இதன் த்வனி மங்களகரம். கருட சகுனம் எனப் புகழ்வதுண்டு. நாக பாசத்தால் கட்டுண்டு இருக்கும் சமயம் பகவானுக்கே ஓடி வந்து உதவி செய்தது. இது வேதமயம். பரதேவதை பகவான் ஸ்ரீமான் நாராயணன் என்று வேதம் தெரிவிக்கிறதே. அப்படி பகவானை தன்னிடத்தில் எழுந்தருளப் பணி பரதேவதா நிஷ்கர்ஷத்தை நமக்கு காட்டி கொடுக்கிறது. அது உயர்ந்தது ஆழ்வாரும் இந்த ஸேவையை வேண்டிக் கொண்டார்.

"கருட வாஹனனும் நிற்க ஜ்டேஷ்டைதன் மடியகத்து" என்றும், திருமாலையிலும் சொன்னார்.

இவ்வாறு பறவைகள் நடக்கும் பலவகையில் உபகரிக்கின்றன. அதைக் கொண்டு நாமும் திருந்த வேண்டும்.

ஆக ஹம்ஸம் ஸாரக்ராஹி. அதுபோல் நாம் இருக்கவேண்டும். கடவுளின் படைப்பு எதுவும் வீணில்லை. அருகம்புல் நீர் வ்யாதிக்கு உபயோகப்படும் என்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறோம். இப்படி எல்லா புல் பூண்டுகளும் நமக்கு உபயோகப்படத்தான் எம்பெருமான் படைத்திருக்கிறான்.
மேலும் அன்னங்களுக்கு முட்டை இடத்தெரியும். குஞ்சு பொரிக்கத் தெரியாது. ஆகையால் காக்கை கூண்டில் முடடையிட்டு விடும். காக்கைகள் தன் முட்டை என்று குஞ்சு பொரிக்கும். பெரியதானவுடன் இது நிறத்தையும் குரலையும் பார்த்து இவை நம் இனத்தைச் சேர்ந்ததல்ல என்று துரத்தும். இவைகளின் ராமர்த்யத்தைப் பார்க்கவும். இதை காளிதாஸன் சொல்கிறான். சிக்ஷை இல்லாபமலே அவைகளுக்கு பருத்வம் ஸாமர்த்யம் உண்டு என்பதை "ஸ்த்ரிணாம் அசிக்ஷிதபருத்வம் என்று.

மேலும் கோழிகள் காலை நேரத்தை தெரிவிக்கின்றன. பொழுது விடிந்தமையை அவைகள் எடுத்து உரைப்பது போல் 6 அறிவு படைத்திருந்தும் நாம் உணர்பதில்லை. ஆண்டாளும் கோழி அழைப்பதன் முன்னம் குடைந்து நீராடுவான் என்றாள். வந்தெங்கு கோழி அழைத்தனகாண் என்றும் சொன்னார்.

கோழி கூ வென்னுமால் தோழி நான் என் செய்வேன். ஆழி வண்ணர்வரும் பொழுதாயிற்று. கோழி மு என்னுமால் என்ற பெரிய திருமொழி பாசுரத்தையும் அங்குள்ள வ்யாக்யானத்தையும் கவனிக்கலாம். பொழுது விடிந்தமையைக்காட்டும் கோழிகளை கண்ணனோடு உரங்கும் பெண்கள் இவை இவ்வாறு காட்டுகின்றனவே. கண்ணன் எழுந்து சென்றுவிடுவான் என்று பெருமையால் வெய்கின்றார்கள் என்பது பாகவதம்.

1. கோழிபோல் இருப்பான். 2. கொக்கு போல் இருப்பான். 3. உப்புபோல் இருப்பான். 4. உம்மைப்போல் இருப்பான் என்பது உண்டு,

கோழிபோல் இருத்தல் - கோழி மும்முறை கத்தும். அஷ்டாசரம், த்வயம், சரமஸ்லோகம் மூன்றையும் நினைவு படுத்தும். ஸ்வர பேதம் கத்துதலுக்கு உண்டு. மேல் குப்பையுல் ஸாரக் ராஸி.

2. கொக்கு - சிறிய மீனை விட்டு பெரிய மீனை அடைவதற்கு த்யானம் செய்வது போல் இருக்கும். நாமும் அல்ப சுகங்களை விட்டு ப்ரஹ்மத்யானம் செய்ய வேண்டும்.

3. உப்பு கறையும் வஸ்து நாமும் ஆடி ஆடி அகம் கரைந்து என்று இருக்க வேண்டும்.

4. ததியாராதனத்தில் ஒரு பாகவதர் பொறுமையுடன் இடத்துக்காக 5-6 தடவை ததீயாராதனை ஆனபிறகும் பொறுத்திருந்தார். அவனைப் பார்த்து பட்டர் சொன்னது இந்த வார்த்தை. இப்படி இருத்தல்தான் வைஷ்ணவ லக்ஷணம் என்று.

ஜதுகா வௌவால். இதற்கு இரக்கையுண்டு. பற்களும் உண்டு. மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் வரும் சண்டை ஒரு சமயம் மிருகங்களுக்கு ஜயம் வரும்போல் இருந்தால் எனக்கு வற்கள் உண்டு. நான் மிருக இனத்தை சேர்ந்த்வன் என்று சொல்லும் பக்ஷிகளுக்கு ஜயம் வருவதுபோல் இருந்தால் எனக்கு இறக்கைகள் உண்டு. ஆக நான் பக்ஷியின் இனம் என்று சொல்லுமாம். இப்படித் தன்னை காப்பாற்றிக் கொள்ளும் இப்படி ஸ்வார்த மரக்ஷணத்தில் ஜாக ரூகர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும். இப்படி எத்தனையோ ஜந்துக்கள் மூலம் தெரிந்து கோள்ள வேண்டிய விஷயங்கள் உள்ளன.

ஒரு காட்டில் புள்ளிமான் விளையாடிக்கொண்டிருந்தது. நீர் பருக குளம் சென்றது. அங்கு தன் நிழலைக்கண்டது. புள்ளிமான் ஆனபடியால் அதன் கொம்பு வளைந்து வளைந்து அழகைக் கொடுத்தது. ஈச்வரனை துதி செய்தது. நீர் சாப்பிடும்போது அது தண்ணீரில் காணப்பட்டது. கால் மெல்லியது. விகாரமாக இருந்தது. அது நினைத்ததாம் - தலையில் கொம்பு அழகாக உள்ளதே, காலை மாத்திரம் ஏன் நமக்கு இப்படி படைத்தான். கடவுளின் செயல் நன்றாக இல்லையே என்று. அப்பொழுது நரி புலி இதைப்பார்த்து துரத்தி வந்தது. இதன்கால் மெல்லியதானபடியால் வேகமாக ஓட ஸௌகர்யம் உண்டாயிற்று. அப்பொழுது பகவானை ஸ்துதி செய்தது. தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்து ஒரு புதரில் ஓடிற்று. இதன் கொம்பு அதில் சுற்றிக் கொண்டது. இதனை செல்லவிடாமல் தடை செய்தது. அந்த ஸமயம் புலி இதனை பிடித்துக் கொண்டு இதை வதைத்தது. அப்பொழுது நினைத்ததாம் கொம்பின் அழகை நினைத்து துதி செய்தோம். காலை நினைத்து பகவானை நிந்தித்தோம். இப்பொழுது கொம்புதானே நமக்கு ம்ருத்யு என்றதாம். ஆக பகவானின் படைப்பு விசித்ரமானது.

*****

# 16. தேஹ ஸம்பத்து

ஜீவராசிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று யாராலும் சொல்ல முடியாது. ஆகாயத்தில் நக்ஷத்திரங்களையும், ஆற்றின் மணலையும், எம்பெருமானின் குணங்களையும், ஜீவர்களின் தோஷங்களையும் எப்படி எண்ண முடியாதோ அதுபோலத்தான் ஜீவர்கள் எத்தனை பேர் என்று எண்ண இயலாது. பரம காருணிகனான ச்ரிய: பதி நாராயணன், மெழுகில் ஒட்டிக் கொண்டிருக்கும் தங்கப் பொடிகள் போல், பிரளயகாலத்தில் ப்ரகிருதியில் ஸம்பந்தித்திருக்கும் ஜீவராசிகளுக்குத் தேகத்தைக் கொடுத்துப் படைக்க ஆரம்பிக்கிறான். ஈச்வரன் பரம தயாளுவானபடியாலும், தானாகவே விஷமமான படைப்பைச் செய்ய மாட்டான் ஆகையாலும் அவரவர் செய்த பாவ புண்ணியங்களைக் கணக்கிட்டுப் பார்த்து அவற்றுக்குத் தக்கவாறு உடலைக் கொடுக்கிறான். இதில் சிலர் புல் செடி கொடியாகவும் பிறப்பார்கள். சிலர் பூச்சி புழுவாகவும் பிறப்பர். மற்றவர் ஆடு மாடு முதலிய திர்யக்காகவும், பறவைகளாகவும் ஜனிப்பர். இம்மாதிரியே மனிதர்களாகவும் தேவர்களாகவும் உண்டாகின்றனர்.

புண்ணியத்தை அநுசரித்து மனிதப் பிறவியிலும் தேவப் பிறவியிலும் பிறப்பது போல் பாவத்தை அநுசரித்துப் புல் பூண்டாகவும் ஜனிக்கின்றனர்.

> வாசிகை: பக்ஷிம்ருகதாம் மாநஸைந்த்யஜாதிதாம் ।
> சரீரஜை: மர்மதோஷைர் யாதி ஸ்தாவரதாம் நர: ॥

என்று, சரீரத்தால் ஏற்பட்ட பாவங்கள் மூலமாக ஸ்தாவரமாகப் பிறக்கிறான் என்று ஸ்ம்ருதி கூறுகிறது. 'நைராத்ம்யம் ஸ்தாவராணாம் நஹி நிகமவித: ஸ்தாபயந்தி' என்று ஸாராவளியில் வேதாந்த தேசிகனும் கூறினார்.

இப்படிப் புல், செடி முதலியவையாக ஜீவன் ஜனிக்கிறான் என்பதில் ஓர் அதிசயமும் இல்லை. வஸ்திரம், கலசம் முதலியவையாகவும் இவன் பிறக்கிறானே, இதுதான் சந்தோஷப்படவேண்டிய விஷயம். எவ்வளவோ மகத்தான பாவங்கள் பண்ணினவன் சிறிதும் மூச்சுக்காற்று விட முடியாத நிலையில் உருவை எடுத்துக் கொள்கிறானே, இதுதான் வியக்கப்பட வேண்டிய விஷயம். நம் ராமாநுஜ ஸித்தாந்தத்தில் ஒவ்வொரு வஸ்துவிலும் ஜீவன் கர்மத்தை அநுசரித்து உட்புகுந்து அந்த உடலைப் பெற்றிருக்கிறான். இது வேதாந்தங்களில் தேறின பொருள். இதைத்தான் ஸ்ரீபாஷ்யகாரர் பல இடங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நரகநாசனை நாவில் கொண்ட அழையாத மானிடர் பருகும் நீரும் பாவம் செய்தனதாம் கொலே" என்றார் பெரியாழ்வார். வஸ்த்ரங்களிலும் ஜீவன் உள்ளான். சில பட்டு வஸ்த்ரம் எம்பெருமானுக்கு சாத்தப்படுகிறது. சில தாஸிகளுக்கு கொடுக்கப் படுகின்றது. இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். பகவானுக்கு சாத்தப்பட்டது எவ்வளவோ புண்யம் செய்தது என்றும் மற்றது பாவம் செய்தது என்றும். பாகவதர்களின் குக்ஷியில் சென்ற ப்ரஸாதத்துக்கும் மற்றவன் சாப்பிட்ட அன்னத்துக்கும் எவ்வளவு வித்யாஸம்.

"வண்டினமுரலும் சோலை .... அணி திருவரங்கம் என்னாது மிண்டர் பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்கிடுமின் நீரே என்றார் தொண்டரடிப் பொடியாழ்வார். இந்த சோறு பாபம் செய்தபடியால் இவர்கள் சாப்பிடுவதும் நாய் சாப்பிடுவதும் ஸமம் என்று தாத்பர்யம்.

பகவான், பாகவதர், மஹான் இவர்களுக்கு அன்னமிட்டால் இடுபவர்களுக்கு மாத்திரம் புண்யம் மேன்மை என்பதில்லை. இடப்பட்ட அன்னத்துக்கும் மேன்மை இது. அடுத்த பிறவியில் "பவநே ஷ்வஸ்த்வபி கீட ஜன்மமே. மஹான்களில் வீட்டில் புழுவாகப் பிறக்கக் கடவேன்" என்று, ஆளவந்தார் ஸாதித்தபடி உயர்ந்த ஜன்மத்தை அந்த அன்னம் பெறும். இப்படி மேன் மேல் உயர்ந்த பிறவையை அடைந்துவந்தால் மனிதர்களாகவும் தேவர்களாகவும் பிறக்க வாய்ப்பு உண்டாகிறது. இதனால் ஞான ஸம்பத்து உண்டாகும். ஆக, தேஹ ஸம்பத்தின் மூலம் ஞான ஸம்பத்து தேறும். மேல் நற்கதியைப் பெறலாம்.

ஒரு மஹான் வீட்டுக்கு வந்தால், ஸ்தாவரங்கள் ஸந்தோஷப்படுகின்றனவாம். புடலை பாகல் அவரை நினைக்கின்றதாம். அதிதி பூஜையில் இவரது வயிற்றில் போவோம். அதன் மூலம் மேன் மேல் நமக்கு க்ஷேமம் என்று. புஷ்பங்களால் பெருமாளை அர்ச்சித்தவனுக்கு மாத்திரம் க்ஷேமம் என்பதில்லை. அர்ச்சிக்கப்படும் புஷ்பமும் க்ஷேமம் பெறுகிறது. பாதுகா ஸஹஸ்ரத்தில் இதைக் காணலாம். "செங்கழி நீர் வாய் நெகிழந்து ஆம்பல் வாய் கூம்பினகாண்" என்ற பாசுரத்தில் இதைத் தெளியலாம். ஸாயம் ஆனதும் ஏன் ஆம்பல் கூம்புகிறது? ஐயோ என்னை கடவுளிடம் அர்ச்சனைக்கு உபயோகப்படுத்தவில்லையே என்ற கஷ்டத்தால். தாமரைப்பூ ஏன் மலருகிறது தெரியுமா? "நான் செவ்வையாக இருக்கும்போதே, கடவுளிடம் என்னை ஸமர்ப்பிப்பாய். நல்ல கதியை நீ பெருவாய். நானும் பெருவேன் !" என்று இவைகளிலும் ஜீவன் இருக்கிறபடியால், அதன் மூலம், இருவருக்கும் நற்கதி உண்டாகும்.

எண்ணக்கண்ட விரல்களால் இறைப்பொழுதும் எண்ணுகிலாது போய் உண்ணக்கண்டத்தம் ஊத்தை வாய்க்கு கவளம் உந்துகின்றார்களே' என்று ஆழ்வார் சொன்னார். மாலாகாரருக்கு, அலங்காரம் செய்ததால் கிடைத்த பலனைப்பார்க்கவும்.

> வேத வித்யா வ்ரதே ஸ்நாதே ச்ரோத்ரியே ஸ்வமாகதே
> நந்தந்தி ஔஷதய ஸர்வா: யாஸ்யாம: பரமாம்கதிம்
> யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா
> ஸ்தாவராண்ய பிமுச்யந்தே கிம் புன: பாந்த வாஜனா:

அத்யயனம் முதலிய நற்கார்யங்கள் செய்தவன் வந்ததும் வீட்டுத்தோட்டத்தில் உள்ள செடிகளெல்லாம் ஸந்தோஷமடைகின்றன. இவர் மூலம் நாம் பரம கதியை அடைவோம் என்று. மஹான்கள் கண்ணால் பார்க்கப்பட்டவை தொடப்பட்டவை எல்லாம் பாபங்களிலிருந்து விடுபட்டு வாழ்கின்றன.

அருகம் புல் துளஸி முதலியவை எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கப் பட்டால் அவைகள் ஸம்ஸாரமாகிற பாம்பின் விஷத்தையும் போக்கடிக்கும் ஔஷதியாக மாறுகின்றன என்றார் ஸ்வாமி தேசிகன்.

ஆக, இவ்வாறு பகவான், பாகவதர்களுக்கு உபயோகப்பட்ட பொருள்கள் எல்லாம் அடுத்த பிறவியில் மேன்மையைப் பெற்று க்ரமேண உயர்ந்த கதியை அடைகின்றன, என்பது ஸாரார்தம்.

இப்படி, ஒவ்வொரு பிறவியிலும், இருந்து கொண்டிருக்கும் இவன் ஏதோ ஒரு புண்ணியவிசேஷத்தால், மனிதப் பிறவியை அடைந்துவிடுகிறான். இது கிடைக்கப் பெறாத பிறப்பு. 'துர்லபம் மாநுஷம் ஜன்ம'. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்று,

ஆன்றோர் கூறுகிறார்கள். இந்த மானிடப் பிறவியில் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதற்குத் தகுந்தபடி உடலை அமைத்துக் கொடுத்திருக்கிறான் இறைவன். கண் காது மூக்கு நாக்கு த்வக் முதலிய ஐந்து ஞானேந்திரியங்களையும், வாக்கு பாணி பாதம் பாயு உபஸ்தம் என்ற ஐந்து கர்மேந்திரியங்களையும் அமைத்திருக்கிறான். இந்தப் பத்து விதமான இந்திரியங்களையும், எல்லாவற்றுக்கும் பொதுவான மனத்தையும் கொண்டு ஸர்வ ஸுகங்களையும் ஜீவன் இந்தப் பிறவியில் அநுபவிக்கிறான். இப்படி ஈச்வரன் கொடுத்த இந்திரியங்களோடு கூடிய இந்த உடலைச் சரியான வழியில் உபயோகப் படுத்தவேண்டும். நாக்கு என்ற கருவியை எதற்கு கொடுத்திருக்கிறான் என்றால் வஸ்துக்களை ருசிபார்த்து அல்வா, லட்டு முதலியவற்றைச் சாப்பிடவோ, கெட்ட வார்த்தைகளைச் சொல்லவோ என நினைக்க வேண்டாம். எம்பெருமானின் குணங்களையும் அவன் திருநாமங்களையும் பரக்கப் பேசுவதற்காகவுமே. இம்மாதிரியே ஒவ்வொரு கருவியையும் நல்வழியில் செலுத்தச் செய்ய வேண்டும். 'ஜிஹ்வே கீர்த்தய கேசவம்' என்பதை இங்கு மறக்க வேண்டாம்.

புள்ளூரும் பொன்மலையைக் காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே,
தொண்டர்க கினியானைக் கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே.
அவன் பெருமை பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே,
துழாய்மார்வனை ஆர்வத்தால் பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல கேட்டாமே,
சங்கமேந்தும் கையானைக் கைதொழா கையல்ல கண்டாமே,
உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே.
நினையாதார் நெஞ்சு என்றும் நெஞ்சல்ல கண்டாமே.

என்று பெரிய திருமொழியில் சொன்னவையெல்லாம் கண்டு, ஒவ்வொர் இந்திரியத்தையும் நல்வழியில் போகச் செய்ய வேண்டும்.

இதை அநுசரித்துப் பெரியோர் பணிப்பது ஒன்று உண்டு:
விசித்ரா தேஹஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும் ।
பூர்வ மேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதா திஸம்யுதா ॥ என்று,

ஈச்வரன் பரமதயையினால் நமக்குக் கொடுத்த உடலை அவனுக்கே அர்ப்பணம் செய்து பிறப்பின் ஸாபல்யத்தை அடைய வேண்டும். அவனுக்கு அர்ப்பணம் செய்வதாவது, அவனது கைங்கரியத்தில் ஈடுபடச் செய்வது: கைங்கரியம் என்றால் அவனுக்கு உகப்பான வேலையைச் செய்வது. எந்த வேலையைச் செய்தால் எப்பெருமான் நம்மிடத்தில் அதிக அன்பைக் காட்டுவானோ அத்தகைய வேலைகளைச் செய்வது. 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று திருப்பாவையில் கோதைப் பிராட்டி திருவாய் மலர்ந்தருளியபடி நாம் நடந்து, எம்பெருமானுக்கு உகப்பை உண்டுபண்ண வேண்டும். அப்போதுதான் நமது கிருஷிபலித்தது என்று அவன் சந்தோஷப்படுவான்.

இப்படி எம்பெருமானை உத்தேசித்துக் கைங்கரியம் செய்யுமிடத்தில், எந்தக் கைங்கரியத்தைச் செய்தால் பகவான் அதிக உகப்பை அடைவான் என்று பார்க்க வேண்டும். கைங்கரியங்கள் பல விதங்களாக அன்றோ இருக்கின்றன? மாலை கட்டுதல், விளக்கேற்றுதல், கோயில் சுத்தி செய்தல், துதி செய்தல், நமஸ்கரித்தல், ப்ரணாமங்கள் செய்தல், பூஜை செய்தல், வேத வேதாந்தங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் ஆராய்தல் முதலிய பல வகையில் எதைச் செய்தால் பகவானுக்கு அதிக அன்பு உண்டாகும் என்று பார்ப்போம். எந்த கைங்கர்யத்தைச்

செய்தாலும் பகவானுக்கு உகப்பு என்பது உண்டு; அதில் சந்தேகமே இல்லை. ஆயினும் அதில் வாசி இருப்பது போல் உகப்பிலும் வாசி உள்ளது. இவ்விஷயத்தில் இதுதான் உயர்ந்த கைங்கரியம் என்று நம்மால் நிச்சயிக்க முடியாது. நம் ஆசார்யர்கள் குசாக்ரபுத்திகளானபடியாலும், பகவானது அபிப்ராயத்தை நேராகவும் ப்ரமாண மூலமாகவும் ஆராய்ந்து பார்க்கும் சக்தி உள்ளவர்களானபடியாலும் அவர்கள் சொற்படி நாம் பின்பற்ற வேண்டும். அதிலும் ஸ்ரீராமாநுஜரும் ஸ்ரீதேசிகனும் எந்த விஷயத்தை எடுத்துச் சொல்லுகிறார்களோ அதில் ஐயப்பாடு என்பது இல்லவே இல்லை. அவர்கள் சொல்லும் பேச்சு ஆணித்தரமானது; அசைக்க முடியாத விஷயம் அவர்கள் கூறுவது. ராமாநுஜ சிஷ்யன், தேசிகசிஷ்யன் நான் என்றுகூறிக்கொண்டே அவர்கள் சொல்வதைப் பின்பற்றாமல் இருப்பவர் எவ்வளவோ உற்ஸவங்களையும் ததீயாராதனைகளையும் செய்து வைத்தாலும் பயனற்றவராகவே ஆவர். அவர்களைக் காட்டிலும் நாம் புத்திசாலிகள் அல்லர். அவர்கள் சொல்வதை அறிந்து கொள்வதற்கே சக்தி இல்லை என்றால் அவர்களுக்கு மேல் நம்மால் யாது சொல்ல முடியும்?

ஸ்ரீபாஷ்யகாரர் கடைசிக் காலத்தில் தம் சீடர்களிடம் சில விஷயங்களைக் கூறியுள்ளனர. "ஸ்ரீபாஷ்யத்தை வாசிப்பது, தமிழ் மறையை ஓதுவது, தேவாலயங்களில் தினமும் ஆராதித்துக் கைங்கரியம் செய்வது, யது மலையில் வசிப்பது, அர்த்தாநுஸந்தானத்தோடு த்வயமந்த்ரத்தை உச்சரிப்பது, சிறந்த பாகவதர்களிடத்தில் அடிபணிந்து இவன் என் பையன் என்று அவர்கள் அபிமானத்தைப் பெறுவது இவை முதலியவை எல்லா மங்களத்துக்கும் காரணம்" என்றார். இதிலும் முதல்முதலில் செய்ய வேண்டிய கைங்கரியம் ஸ்ரீபாஷ்யத்தைத் தத்தம் ஆசார்யர்களிடமிருந்து காலக்ஷேபம் செய்து பிறருக்குச் சொல்லிவைப்பது. இதில் சக்தியற்றவனாக இருந்தால் திருவாய் மொழி ஓத வேண்டும். இதிலிலும் சக்தியற்றவனாக இருந்தால் அந்த அந்த திவ்யதேசங்களிலுள்ள எம்பெருமானுக்கு அமுதபடி சாத்துவது. அதிலும் சக்தியற்றவனாக இருந்தால் த்வயமந்த்ரத்தை அர்த்தத்துடன் மனனம் செய்வது என்ற ரீதியில் அதிலும் ஒரு நியதியை காட்டினார். இவற்றுக்கு ஸங்க்ரஹமான ச்லோகத்தைப் பெரியோர் கூறுவதுண்டு :-

ஸ்ரீபாஷ்யம் த்ரவிடாகமப்ரவசநம் ஸ்ரீஸ்தலேஷ்வந்வஹம்
கைங்கர்யம் யதுசைலநித்யவஸதிஸ் ஸார்த்தத்வயோச்சாரணம் |
யத்வா பாகவதாபிமாநவஸதி: ச்ரேய: ஸதாம் இத்யலம்
சிஷ்யாந் ப்ராஹ யதீச்வர: பரமகாத் விஷ்ணோ: பதம் சாஸ்வதம் ||

படித்வா ஸ்ரீபாஷ்யம் ப்ரவசநமசக்தௌ சடரிபோர்
கிரி ச்ரத்தா தத்தத்ப்ரபுவிரசிதஸ்தாநநிவஹே |
ப்ரபோ : ஸேவா யத்வா ப்ரபதநமநோரர்த்தமநநம்
குடீம் க்ருத்வா தஸ்மிந் யதுகிரிதடே நித்யவஸதி: ||

இப்படி ஸ்ரீபாஷ்யகாரர் சொன்ன விஷயத்தை ஸ்ரீஸ்வாமி தேசிகன் தமது ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்ததாகவே ஐந்து கைங்கரியங்களைச் சுட்டிக் காண்பித்திருக்கிறார்:-

1. ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்.
2. அதுக்கு யோக்யதை இல்லையாகில் அருளிச்செயல் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல்.

3. அதுக்கு யோக்யதை இல்லையாகில் உகந்தருளின திவ்ய தேசங்களுக்கு அமுதுபடி திருவிளக்கு திருமாலைகளை உண்டாக்குதல்.
4. அதுக்கு யோக்யதை இல்லையாகில் த்வயத்தினுடைய அர்த்தாநு ஸந்தானம் பண்ணுதல்.
5. அதுக்கு யோக்யதை இல்லையாகில் என்னுடையவன் என்று அபிமானிப்பான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்திலே ஒதுங்கி வர்த்தித்தல் செய்யலாம்.

இப்படி ஸ்ரீபாஷ்யகாரர் சொன்னதையே ஸ்ரீஸ்வாமி தேசிகன் பின்பற்றி உரைத்து ஸ்ரீபாஷ்யத்தின் பெருமையைப் பரக்கப் பேசினார். ஸ்ரீபாஷ்யாதிகாரி என்றாலே ஒரு பெருமை உண்டு. வேதாந்தங்களில் கூறியுள்ள மறைமுகமான அர்த்தத்தை வெளியிட வந்தது வ்யாஸ ஸூத்ரம். இந்த ஸூத்ரத்தின் அர்த்தத்தை யதாவஸ்த்திதமாக அறியும்பொருட்டு இதர மதங்களை நிரஸிப்பதுடன் பாஷ்யமிட்டார் ஸ்ரீபாஷ்யகாரர். அப்படிப் பட்ட மகிமை பொருந்தியதும், 'ஸ்ரீ' என்ற அடைமொழியுடன்கூடியதுமான ராமாநுஜபாஷ்யத்தை வாசித்து இதரர்களுக்குப் போதித்து இருப்பவர் பெரிய மகான். 'திரிம்ஸத்வாரம் ச்ராவித-சாரீரகபாஷ்ய :' என்றபடி, முப்பது தடவை காலக்ஷேபம் ஸாதித்தார் ஸ்ரீஸ்வாமி தேசிகன் என்றால், அவருடைய பெருமை எவ்வளவு என்று யோசித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட ஸ்ரீபாஷ்யத்துக்கு அதிகாரியாவதே துர்லபம். இப்பொழுது உள்ளவர்கள் ஸ்ரீபாஷ்யத்துக்கு அதிகாரியாக இருப்பவர்களிடத்தில் அதிக - அரியாக (சத்துரு) இருக்கிறார்கள். என்னே! இப்படி எம்பெருமானுக்கு எல்லா இந்திரியங்களைக் கொண்டும் ஜ்ஞாந யஜ்ஞமாகிற இந்த ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பிக்கிற கைங்கரியம் ஸர்வோத்க்ருஷ்டம். ஆகையால் இப்படிப்பட்ட அதிகாரிகளை விசேஷமாக ஸத்கரிப்பது எம்பெருமானுக்கு மிக்க உகப்பைக் கொடுக்கும்.

எனவே ஒவ்வொருவரும் வேதாந்தவிவரணரூபமான ப்ரஹ்மஸூத்ரத்துக்கு வியாக்கியானமான ஸ்ரீபாஷ்யத்தைக் காலக்ஷேபம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். லௌகிகர்களாக இருந்தபோதிலும் இந்த ஸ்ரீபாஷ்யத்தில் சொன்ன அர்த்த விசேஷங்களை எளிய முறையில் அறிந்துகொள்ள முடியும். இது மிகவும் கடினமான விஷயம் என்று ஒதுங்கிப் போகவேண்டாம். பிரபல பண்டிதர்களும், எளிய ரீதியில் எடுத்துரைக்க வல்லமை பெற்றவர்களுமான மகான்களிடத்தில் சென்று அடிபணிந்து இதன் சுருக்கத்தைக் காலக்ஷேபமூலமாகத் தெரிந்து கொள்ளலாம். அப்படித் தெரிந்த வித்வான்களை முதல் முதலில் ஸத்கரித்து எப்பெருமானது உகப்பையும் பெறலாம். இதற்காகத்தான் ஸர்வேச்வரன் நமக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து உதவி புரிந்திருக்கிறான்,

மேலும் ஒரு விஷயம் கேண்மின் - யஜ்ஞம் யாகம் என்று சொல்லப்படும் வேள்வி மூன்று வகைப்படும். யாகம் என்பது தேவதையை ஆராதிக்கும் வேலை, கைங்கரியம். ஸ்ரீமந்நாராயணன் நமக்கு அபீஷ்ட தெய்வமானபடியால் அவனை ஆராதிப்பதுதான் யாகம். 'யஜ தேவபூஜாயாம்' என்று சொல்கிறபடி, பகவானுக்கு அர்க்ய பாத்யங்களை ஸமர்ப்பித்து நிவேதனம் செய்விப்பது முதலியவை யாகம் என்று ஏற்படுகிறது. இதற்கு த்ரவ்யமய யஜ்ஞம் என்று பெயர். இது ஒரு யஜ்ஞம். வாக்யஜ்ஞம் என்பது மற்றொன்று. வேதம் ஓதுதல், திருவாய்மொழி ஓதுதல் முதலியவை இந்த வகையில் சேர்ந்தவை. இதனாலேயும் பகவானுக்குப் பிரீதி உண்டாகும். 'வாக்யஜ்ஞேநார்ச்சிதோ தேவ: ப்ரீயதாம் மே ஜநார்தந:' என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஜ்ஞாந யஜ்ஞம் என்பது மற்றொன்று. வேதார்த்தங்களையும் அவற்றின் விவரணமான ஸூத்ரபாஷ்யார்த்தங்களையும் விசாரித்து நன்கறிவது இது. இதனால் பகவானுக்கு அளவில்லாத பிரீதி. இதைத்தான் பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல் என்றார். வேதம், திருவாய்மொழி ஓதுவது என்ற வாக் யஜ்ஞத்தைக் காட்டிலும், த்ரவ்ய யஜ்ஞத்தைக் காட்டிலும்

மிகச் சிறந்ததாக இதை ஆசார்யர்கள் கருதுகிறார்கள். 'ஸ்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞானயஜ்ஞ: ப்ரகீர்த்தித :' என்று பகவானும் சொன்னார்,

ஆகவே, எல்லாக்கைங்கரியங்களைக்காட்டிலும் ஜ்ஞாநயஜ்ஞமாகிற வேத வேதாந்த ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களின் விசேஷ அர்த்த ஜ்ஞாநத்தைச் சம்பாதிப்பதற்கு பகவான் கரணகளேபரம் முதலிய கருவிகளை நமக்கு கொடுத்து உபகரிக்கிறான். இதைத்தான், 'விசித்ரா தேஹஸம்பத்தி: ஈஸ்வராய நிவேதிதும் I பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா II' என்று சொல்லியிருக்கிறது.

பணத்தை ஸம்பத் என்பது வழக்கம். அது போல் மஸா புண்யம் செய்து தேஹ ஸம்பத்தை அடைந்துள்ளோம். கடலில் செல்லும் ஓடம் நடுவில் உடைவதற்கு முன் அக்கரை செல்ல வேண்டும். அதுபோல இந்த சரீரம் உடைவதற்கு முன்பே ஸம்ஸார ஸமுத்ரத்தின் கரையை தாண்டி அடைய வேண்டும. அதற்காக உடைவதற்கு முன்பே அதற்குத் தகுந்த உபாயத்தை அநுஷ்டிக்கக் கடவன் என்றது சாஸ்த்ரம்.

*****

# 17. பெருமை பெறுவது எதனாலே?

ஜனங்கள் எல்லாருமே தங்களை அனைவரும் வெகுமதிக்க வேண்டும், பெருமைப்படுத்த வேண்டும், புகழ வேண்டும் என்று நினைப்பது உலக இயற்கை. ஒருவன் எல்லாராலும் புகழப்பட்டும் பல சமயங்களில் ஸ்துதி செய்யப்பட்டும் இருக்கக் காரணம் எது என்பதை ஆராய்ந்து பார்ப்போம். சாதாரணமாக அவனவன் செய்த அதிர்ஷ்டமாகிற பாக்கியத்தின் பயனாக எல்லாராலும் துதிக்கப்படுகிறான் என்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். பாக்கியம் எனப்படுகிற அதிர்ஷ்டம் எல்லா விஷயங்களுக்குமே பொதுவான காரணம். இதில் விப்ரதிபத்தியே கிடையாது. அதிருஷ்டம் இல்லாமல் எவனும் எந்த வேலையைச் செய்தாலும் பயனளிக்காது என்பது எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டதே. தெய்வ ஸங்கல்பம் இல்லாமல் எந்த வேலைதான் பயனை அளிக்கக்கூடும்! ஆகையால், அது தவிர மற்றொரு காரணம் பெருமையைப் பெறுவதற்கு உண்டு. அதைப்பற்றித்தான் இங்கு எழுதுகிறோம்.

ஒருவன் நன்றாகப் படிக்கவில்லை; உயர்ந்த குணத்தையும் பெற்றவனல்லன்; ஒழுக்கத்துடனிருப்பவனும் அல்லன்; உயர்ந்த குலத்தில் பிறந்தவனுமல்லன்; பல விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டிய நுண்ணறிவு பெற்றவனுமல்லன்; பல வித்வான்கள் கூடியிருக்கும் அவையில் மிகவும் அழகாகவும் ரஞ்சகமாகவும் கருத்துக்களை எடுத்துரைக்கத் தெரிந்தவனுமல்லன்; ஆனால் அவனை ஜனங்கள் பெருமைப்படுத்தித் துதி செய்துவிடுகின்றனர். இதற்கு என்ன காரணம்? இதைச் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா? அவனிடத்திலுள்ள பணம்தான் அவனைப் பெருமைப்படுத்திவிடுகிறது. அவனிடத்திலுள்ள பணத்தைக் கண்டதும் அவனைப் புகழ ஆரம்பித்துவிடுகிறார்கள். 'நீதான் உயர்ந்த குலத்தில் பிறந்தவன், உன்னைவிட நுண்ணறிவு பெற்றவன் யாருமே இல்லை. உன்னைப் போல் பேசுபவரை எங்கே பார்க்க முடியும்? நினைத்த காரியத்தைச் சாதிக்கக் கூடிய சூரத்தன்மையை உன்னிடத்தில் அல்லவா காண வேண்டும்?' என்றெல்லாம் சொல்லிப் புகழ்ந்து விடுகிறார்கள். ஆக அவனுக்கு ஏற்பட்ட லக்ஷ்மீகடாக்ஷத்தால் உண்டான ஐச்வர்யம் அவனை மிகப் பெரியவனாக மாற்றிவிடுகிறது. கைநிறையப் பணம் வந்தால் அசடுகளும் சமர்த்தாக ஆகிவிடுவார்கள் என்று இதை முன்னிட்டுத்தான் பழமொழி சொல்வது.

தேவேந்திரன் ஒரு சமயம் உத்யான வனத்தில் ஐராவதம் என்னும் வெள்ளை யானைமேல் சென்று கொண்டிருந்தான். துர்வாஸர் என்னும் மகரிஷி அவனைப் பார்த்ததும் தம் கையிலுள்ள புஷ்பமாலையை அவன் கழுத்தில் அணிவித்தார். இந்திரன் தன் கழுத்திலுள்ள மாலையை யானையின் தலையில் எடுத்துப் போட்டான். மதத்தால் கர்வம் கொண்ட அந்த யானை உயர்ந்த அந்த மாலையைத் துதிக்கையால் எடுத்துத் தன் காலின் கீழ்ப் போட்டு மிதித்துவிட்டது. இதைக் கண்ட மகரிஷிக்குக் கோபம் அடங்கவில்லை. "இந்திரனே! நான் உனக்கு அணிவித்த மாலையை மகான்களுடைய பிரசாதம் என்று அங்கீகரிக்க வேண்டியிருக்க, அதை அலட்சியமாக யானையின் தலையில் போடுவதும், அது அதைக் காலில் போட்டு மிதிப்பதுமாகச் செய்து என்னை அவமதித்துவிட்டாய். ஆகையால் இந்திர லோகத்தில் நீ பதவியை இழந்து கஷ்டப்படுவாய்" என்று சபித்துவிட்டார்.

இந்திரன் பதவியை இழந்தான்; ஐச்வர்யத்தையும் இழந்தான்; மிகக் கஷ்டப்பட்டான். பிறகு அமுதத்தை எடுக்கச் சமுத்திரத்தைக் கடைந்தபோது மகாலக்ஷ்மி அதிலிருந்து ஆவிர்ப்பவித்ததும் அவளது அநுக்ரகத்தினால், இழந்த பதவியை அடைந்தான். இப்படி இந்திரன் சிம்மாசனத்தில் உட்கார்ந்தபிறகு, லக்ஷ்மீகடாக்ஷத்தால் இது ஏற்பட்டது என்று

நினைத்து, மகாலக்ஷ்மியைப் பலவாறு துதிக்கிறான். அதிலுள்ள சில ச்லோகங்களை இங்கு எடுத்துக் காட்டுகிறோம். அவற்றின் சுவையை அநுபவித்துப் பணத்தின் பெருமையைக் கண்டுகளியுங்கள்.

ஸத்யேந ஸத்வசௌசாப்யாம் ததா சீலாதிபிர் குணை: ।
த்யஜ்யந்தே தே நராஸ் ஸத்ய: ஸந்த்யக்தா யே த்வயா அமலே ॥
த்வயா அவலோகிதா: ஸத்ய: சீலாத்யைரகிலை குணை: ।
குலைச்வர்யைசச்ச யுஜ்யந்தே புருஷா நிர்குணா அபி ॥

ஸ ச்லாக்ய: ஸ குணீ தந்ய: ஸ குலீந: ஸ புத்திமாந் ।
ஸ சூர: ஸ ச விக்ராந்தோ யஸ் த்வயா தேவி வீக்ஷித: ॥
ஸத்யோ வைகுண்யமாயாந்தி சீலாத்யா: ஸகலா குணா: ।
பராங்முகீ ஜகத்தாத்ரீ யஸ்ய த்வம் விஷ்ணுவல்லபே ॥

லக்ஷ்மியின் கடாக்ஷம் ஏற்பட்டு ஐச்வர்யம் வந்துவிட்டால், புத்தியில்லாதவனும் உயர்ந்த குலத்தில் பிறக்காதவனும் நற்குணம் இல்லாதவனும் உயர்ந்த புத்தி, உயர்ந்த குலம், நற்குணம் அடைந்தவர்களாக ஆகிவிடுகின்றனர். உண்மையில் நாலு சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றவன், உயர்ந்த குலத்தில் பிறந்தவன், நல்ல ஒழுக்கம் சீலம் முதலியவற்றைப் பெற்றவன், லக்ஷ்மியின் கடாக்ஷமற்றவனாக இருந்தால் அவை இல்லாதவனாகவே கருதப்படுகிறான். ஆக, பணம் இருந்தால் மதிக்கப்படுகிறான். இல்லையென்றால் உயர்ந்தவனும் தாழ்ந்தவனாகக் கருதப்படுகிறான். பணத்தினால்தான் மனிதன் பெருமைப்படுகிறான் என்று இப்பொழுதும் பத்ரிகையில் சிலரை துதி செய்து புகழந்து எழுதுகிறார்களே. காரணம் என்ன? பணம்தான். பணத்தாசையால் இன்னொரு சமயம் மற்றவனைப் புகழ்ந்து எழுதுபவர். இது மாத்திரமா? அவனிடம் ஒழுக்கமில்லாவிட்டாலும் தனது புத்தியின் பெருமையைக் காட்டுவதற்காக உன்னதமான ரீதியில் எழுதுவது பண்டிதர்களின் செயல். ஐயோ, இந்த விஷயத்தை விஷ்ணுபுராணமே ஐயமறக் கூறுகிறது.

ஜ்ஞாநவ்ருத்தாஸ் தபோவ்ருத்தா: சீலவிருத்தாஸ் ததாபரே ।
தே ஸர்வே தநவ்ருத்தஸ்ய த்வாரி திஷ்டந்தி கிங்கரா: ॥

என்று தனத்தின் பெருமை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. வ்ருத்தன் என்றால் முதிர்ந்தவன், வயதானவன். ஒவ்வொரு விஷயத்திலும் ஒவ்வொருவர் வயதானவர்கள் (வ்ருத்தர்கள்). வயதையிட்டுச் சிலர் பெரியவர்கள். முப்பது வயதில் உள்ளவனைக் காட்டிலும் எண்பது வயதில் உள்ளவர் பெரியவர்தாமே? காலையில் எழுந்து ஸ்நானம் முதலிய உயர்ந்த சடங்குகளை சரிவரச்செய்து மிகவும் வைதிகராக இருப்பவர் இருபத்தைந்து வயதில் இருந்தாலும், ஆசாரமே என்ன என்பது தெரியாமலிருக்கும் எண்பது வயதுள்ளவரைக் காட்டிலும் பெரியவர். இதுபோல் சாஸ்திரங்களை நன்கு கற்று வாக்கியார்த்தத்தில் தோல்வியையே பெறாத மகா வியாபகர்கள் புத்திமான்கள் இருக்கின்றனர். இவர்கள் அறியாத வயதைப் பெற்றவர்களானாலும் சாமானியக் கல்விகளைப் பெற்று முதிர்ந்த வயதை உடையவரைக் காட்டிலும் பெரியவர்கள்தாம்.

விப்ராணாம் ஜ்ஞாநத: ச்ரைஷ்ட்யம் க்ஷத்ரியாணாம் து வீர்யத: ।
வைச்யாநாம் தாந்யதநத: சூத்ராணாமேவ ஜந்மத: ॥

பிராமணர்களில் வயதை முன்னிட்டுச் சிறப்புக் கிடையாது. அவனுடைய ஞானசம்பத்தை இட்டுத்தான் சிறப்பு. க்ஷத்திரியர்களுக்குப் பராக்கிரமத்தை இட்டுத்தான் சிறப்பு. வைச்யர்களில் எவன் அதிகமாகத் தனதானியங்களைப் பெற்றிருக்கிறானோ அவன் பெரியவன். சூத்திரர்களில்தான் முன் பிறந்தவன் பெரியவனாகக் கருதப்படுவான் என்பது சாஸ்திரத்தில் தேறின பொருள். அந்தணர்களிலேயே ஸ்ந்நியாஸ ஆசிரமத்தைப் பெற்றவர் வயதில் சின்னவராக இருந்தாலும் பெரியவராகக் கருதப்படுவார். ஆசிரமப்ரயுக்தமாகச் சின்னவர் பெரியவர் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஸ்ந்யாஸ ஆசிரமம் என்பது எல்லா ஆசிரமங்களைக் காட்டிலும் பெரியது. எனவே அந்த ஆசிரமத்தைப் பெற்றவர் பெரியவராகக் கருதப்படுகிறார். அங்கும் கிருகஸ்தாச்ரமத்தில் இருப்பவர் பெரிய ஞானியாக இருந்தால் ஸந்யாஸ ஆசிரமத்தில் உள்ளவரைக் காட்டிலும் பெரியவர் என்றே கருத வேண்டும் - அந்தணர்கள் எந்த ஆசிரமத்தில் இருந்தாலும் ஞானத்தை இட்டே அவர்களுக்குச் சிறப்பு ஏற்பட்டபடியால். ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் கிருகஸ்தாசிரமத்தில் இருந்தும் அவரது ஞானத்தை மதித்து அந்த மகானிடத்தில் ஸந்யாஸிகள் காலக்ஷேபமே செய்தார்கள். மேலும் துறவி வேஷம் பூண்ட ஆஞ்சனேயர் ராம-லக்ஷ்மணர்களைக் கண்டதும், 'இவர்கள் ஞானத்தால் சிறந்தவர்கள்' என்று அறிந்தபடியால், ஸாஷ்டாங்கமாக வணங்கி அவர்களைப் பெருமைப்படுத்தினார் என்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது சாஸ்திரஸித்தமான அர்த்தம்.

ஆக, வயதில் பெரியவர்கள், ஆசாரத்தில் பெரியவர்கள், ஞானத்தில் பெரியவர்கள், தவத்தில் பெரியவர்கள்-இப்படி ஒவ்வொரு விஷயத்தை இட்டுப் பெரியவர்கள் என்று உலகத்தில் பார்க்கிறோம். இதில் எல்லாரைக்காட்டிலும் தனத்தில் பெரியவன் அதாவது மகாதனிகன் தாழ்ந்தவன். வித்தத்தினால் (செல்வத்தினால்) அறியப்படுகிறவன் (வித்தவ்ருத்தன்), ஞானத்தினால் அறியப்படுகிறவனைக்காட்டிலும் (ஞானவ்ருத்தனைக் காட்டிலும்), சீலவித்தனைக் காட்டிலும் தாழ்ந்தவனே. இப்படி இருந்தபோதிலும் தனவிருத்தனுடைய வாசற்படியில் மகான்களான ஞானவிருத்தர் முதலியவர்கள் கையைக் கட்டிக்கொண்டும் கிங்கரர்போல் வாயைப் பொத்திக்கொண்டும் நிற்கிறார்கள். இதற்கு என்ன காரண்ம்? தனவிருத்தனிடமுள்ள தனம்தான் காரணம். இவர்களோ பணமில்லாமல் கஷ்டப்படுகிறவர்கள். குடும்பத்தை நடத்தக் கைமுதல் இல்லாததனால் அந்தப் பணக்காரர்களிடம் தொங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

எவ்வளவு கல்வி கற்றால் என்ன? எவ்வளவு ஆசாரத்துடன் இருந்தால் என்ன? எவ்வளவு நற்குணங்கள் பெற்றால் என்ன? இவையெல்லாம் பசியைப் போக்கிவிடுமா? தனம் இருந்தால் தானே அதைக் கொண்டு பசியைத் தணிக்க முடியும்? ஆகையால், இப்படிப்பட்ட மகான்களும் பணக்காரர்களைக் கண்டதும் எழுந்து நின்று கைகூப்பி வரவேற்பளித்துப் புஷ்பமாலையைக் கழுத்தில் அணிவித்துப் புகழ்மாலையை வாசித்துக் கௌரவப்படுத்துகின்றனர். இவ் விஷயத்தில் ஒரு கவியின் ரஸகனமான ச்லோகத்தைக் கேட்டு ஆனந்தப்பட வேண்டும்.

> கோ நாம நா நுவ்ருத்தம் விசேஷதோ தநவத: குருதே ।
> வித்தேசபவநபித்தே: ஸமீபமுபஸேவதே சம்பு: ॥

குபேரனுடைய இடம் வடக்குத் திக்கு. இந்திரனின் இடம் கிழக்கு. வடக்குக்கும் கிழக்குக்கும் நடுவிலுள்ள திசை ஈசான்யம். ஈச்வரன் என்ற ருத்திரன் அந்த மூலைக்கு யஜமானன். குபேரன் தனது இடமான வடக்குத் திக்கில் பெரிய மாளிகை கட்டிக் கொண்டு வசிக்கிறான்.

வடகிழக்கிலுள்ள பரமசிவன் அவனது வீட்டுச் சுவரில் தொங்கிக்கொண்டு நிற்கிறார். இதன் காரணம் என்ன? பணக்காரனை உபசரித்துச் சேவித்தால்தான் நமக்கும் பணம் கிடைக்கும் என்று. இங்கு இதை நாம் யோசிக்கவேண்டும். பரமசிவன் திரிமூர்த்திகளில் ஒருவர். நினைத்தமாத்திரத்தில் எல்லாவற்றையும் அழிக்கும் சக்தியைப் பெற்றவர். பலராலும் கோயில் கட்டி வணங்கி வழிபடும் தெய்வம். எல்லாம் அறிந்தவர், ஸர்வஜ்ஞர் என்று இவரை எல்லாரும் சொல்வதுண்டு. இப்படிப்பட்டவர் - பெரிய மகான் - குபேரனுடைய வீட்டுச் சுவரில் சாய்ந்துகொண்டு பணத்துக்காகத் தவம் கிடக்கிறார் என்றால் எவர்தாம் பணத்துக்காகப் பிரபுக்களை உபசரிக்கமாட்டார்கள்? பரமசிவனைப்போல் ஸர்வஜ்ஞராக இருந்தபோதிலும் பிச்சையெடுத்துச் சாப்பிடுபவர்கள்தாமே பண்டிதர்கள்? எனவே வயிற்றை நிரப்பப் பிரபுக்களை உபசரித்தே ஆகவேண்டும். ஆகையால், ஞானம் முதலியவற்றினால் எவ்வளவு பெரியவர்களாக இருந்தபோதிலும் தனத்தால் பெரியவனுடைய வீட்டுவாசலில் கைகட்டி இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகையால் மனிதர்களுக்குப் பணத்தினால்தான் பெருமை ஏற்படுகிறது.

இந்தத் தனிகனும் தான் பெருமையைச் சம்பாதித்துக் கொள்வதற்காக இந்த வித்வானின் பேச்சுக்களில் மயங்கித் தன்னையும் மறந்து பணத்தை வாரி இறைத்துவிடுகிறான். 'இவர் நம்மிடத்தில் பிறரைத் தூஷித்து நம்மைத் துதிசெய்கிறாரே பணத்துக்காக, இப்படியே நம்மையும் பிறரிடத்தில் பணத்தாசையால் தூஷித்துப் பிறரைத் துதிசெய்வார்' என்பதை நினைப்பதே இல்லை. தற்சமயம் தன்னை அவர் புகழ்வதைக் கொண்டே எல்லாவற்றையும் மறந்துவிடுகிறான். பெரும்பாலும் வித்வான்களுக்கு இது ஒரு குணம்: நல்லதோ கெட்டதோ தெரியாது. இயற்கையாகத் துதி செய்வது என்பது ஏற்பட்டுவிடுகிறது. துந்துபி என்பது ஒரு வாத்தியவிசேஷம். அதை அடிக்கும்போது அதன் முகத்திலிருந்து 'தனம் தனம்' என்றே வருகிறது. அறிவில்லாததான அதன் வாயிலிருந்து உண்டாகும் சப்தம் தனத்தையே பேசுகிறது என்றால் அறிவுள்ள மனிதனின் வாயிலிருந்து தனம் தனம் என்ற சொல் ஏன் கிளம்பாது?

> துந்துபிஸ் து நிதராம் அசேதநஸ் தந்முகாதபி தநம் தநம்தநம்
> ஏவமேவ நிநத: ப்ரவர்த்ததே கிம் புநர் யதி ஸசேதநோ ஜந:

தனமுள்ளவன் எவனாக இருந்தாலும் சரி, அவனைத் துதித்துப் பணத்தைப் பறித்துக்கொள்ளும் தன்மை அறிஞர்களுக்கும் உண்டு. ஒரு சமயம் தேவேந்திரன் தன் பதவியிலிருந்து நழுவிவிட்டான். அப்போது மகாபலி சக்ரவர்த்தி பதவியைப் பெற்றான். பிரம்மஞானம் பெற்றவர்களும், இதுவரையில் இந்திரனுக்கு அநுகூலமாக இருந்தவர்களும், அவனைப்பற்றியே யாகம் முதலியவை செய்து வந்தவர்களுமான மகரிஷிகள், இந்திரன் பதவியை விட்டு நழுவினதைக் கண்டு, அவனால் நமக்கு ஸத்காரம் ஏற்படாது என்று கருதி, மகாபலியைத் துதிக்க ஆரம்பித்து விட்டார்கள். முன்பெல்லாம் ரிஷிகள் வேள்வி செய்யும்போது இந்திரனைப்பற்றிய 'இந்த்ரோ மே பலே ஸ்ரித:' என்ற மந்திரத்தைக் கூறிவந்தனர். மகாபலி பதவிக்கு வந்ததும், 'பலிர் மே பலே ஸ்ரித:' என்றனர். 'அக்நிர் மே பலே ஸ்ரித:' என்பதை விட்டு, 'நமுசிர் மே பலே ஸ்ரித:' என்று சொல்ல ஆரம்பித்தனர். இதை ஒரு கவி பரக்கக் கூறுகிறான் -

> ப்ரஹ்மர்ஷயோபி தநுஜேந்த்ரஸபாம் ப்ரவிஷ்டா:,
> மந்த்ராக்ஷராணி மகவாதிபதாங்கிதா நி I
> ஊஹேந தாநவபதாந்யுபவேசயந்தோ
> ஹர்ஷாய பேடுரஸுரேந்த்ரபுரோஹிதாநாம் II

இப்படிப் பணத்தைக் கொண்டு காலத்தைக் கழிக்க வேண்டுமாகையால், அதைச் சம்பாதிக்கக் கருதிப் பணமுள்ளவர்களைச் சிலாகித்துப் பேசச் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறது. அவர்களுடைய குலம், குணம், புத்தி முதலியவற்றை மறந்துவிடுகின்றனர். இப்படிப் புகழாதவன், இகலோக ஸுகத்தை இழந்துவிடுகிறான். எனவே இக்காலத்தில் பணத்தினால்தான் மனிதனுக்கு மகிமை ஏற்படுகிறது. ஆனால், ஞானம் முதலியவற்றால் உண்மையில் மகிமையைப் பெற்றவனுடைய புகழ் என்றைக்கும் அழியாது; பணக்காரனுடைய பெருமை தற்காலத்தில் மாத்திரம்தான் இருக்கும். இதுதான் உண்மை.

பணத்தால்தான் மனிதனுக்கு மதிப்பு. உத்கர்ஷம் புகழ் என்று சொன்னோம். வேலையில்லாத புத்ரனை ஸம்பாதனம் இல்லாததால் தாய் திட்டுவாள். "சோம்பேறி, உனக்கு சோறு வடித்து கொட்டுவது எப்படி"? என்று. பிதாவும் அவன் விஷயத்தில் ஸந்தோஷப்படமாட்டான். ஸஹோதரன் இவனுடன் பேச ஸம்மதிக்க மாட்டான். வேலைக்காரன் சரியான ஸமயம் சம்பளம் கொடுக்கவில்லை என்று கோபம் கொள்வான். பிள்ளையும் தனக்கு உபயோகமில்லாத பிதாவின் வார்த்தையை செவிகொடுத்து கேளான். பரமஸுஹ்ருத் என்பவனும் இவனைக் கண்டதும் ஏதாவது பணம் கேட்பான் என்று தூரத்தில் பார்த்தவுடன் விலகி விடுவான். ஆக இவனை மதிப்பார் இல்லை என்றான் பர்த்ருஹரி என்னும் கவி. இது வரையில் செல்வத்தான் பெரியவன் என்பதைச் சொன்னோம்.

இனி பார்ப்போம். ஒரு மூடனை ஆயிரம் பேர்கள் சேர்ந்து ஒரு காரண வசத்தால் மேடையில் மணையை சேர்த்து உட்காரவைத்தால் பெரியவன் ஆகிவிடுவானா? சதாந்தம் நியாயம் என்று சொல்வது உண்டு. நூற்றுக் கணக்கான குருடர்கள் வெள்ளை நிறமுள்ள காகத்தைப் பார்த்தேன் என்று பலாத்கரித்துப் பேசினால் வெள்ளை நிறமுள்ளதாய் இருந்துவிடுமா? ஏதோ சந்கேதம் வைத்து பூஜை செய்ததால் பெரியன் ஆகிவிடுவானா? நாம் ஸங்கேதத்தை விட்டு குணத்தை சொன்னால் நம்மை கோஷ்டியில் சேர்க்கமாட்டார் என்று நினைத்து உண்மையை விட்டு மற்றவர் போன வழியில் செல்கிறான். இதுதான் உண்மை. கட்டுப்பாடு என்பதுதான் அவர்களுக்கு ப்ரதானம். நல்மார்க்கமில்லை. ஆக குணம் படிப்பு தயை மரியாதை ஸர்வபூத ஸுக்ருத்வம், கீதையில் சொன்ன அமானித்வாதிகள் இவைகள் எவனிடமுள்ளதோ அவன்தான் பெரியவன். கோடிக்கணக்கான மக்கள் தேவதாந்தரத்தினிடம் ஈடுபடுகின்றன. விழாக்களும் நடத்துகின்றன. அதனால் எம்பெருமானைவிட பெரியவன் ஆகிவிடுவார்களா? கக்ஷிக்காரனும் பலம். தோத்திரமும் பல இரைச்சலோ அதிகம். ஆனாலும் நல் நடத்தை இல்லை என்றால் எப்படி பெரியவனாக முடியும். ஆக உண்மையில் பெருமை பெறுவதற்கு ஆத்ம குணாதிகள்தான் காரணம். "மஹாத்மா காந்திஜி அவர்களுக்கு பெருமை உண்டாயிற்று. ஊரெல்லாம் கொண்டாடினார்கள். இதற்கு காரணம் பணமா. அவர் கதர்த் துணியைத்தான் கட்டிக் கொண்டவர். அவர் அஹிம்ஸை முதலான தர்மங்களை உபதேசித்து அனைவருடனும் ஸௌஹார்த்தத்தை காட்டினார். அங்கு பணம் காரணமா.

ஒருவருக்கு நான்கு நாட்டுப் பெண்கள். அதில் ஒருத்தி மாமனார் மாமியார் கணவனைச் சேர்ந்த பந்துக்கள் முதலியவரிடமும் பாசத்துடனும் கார்யங்கள் செய்வதில் திறனும் பர்தாவுக்கு அநுகூலமான நற்குணமுமுடையவள். ஆக அவளுக்கு பெருமை அதிகம். இவளை எல்லோரும் துதி செய்வார்கள். மற்றவர்கள் ராக்ஷஸிகளாகவும் தன் கார்யத்திலேயே கண்ணோட்டமுடையவர்கள். அவர்களை எப்படி மற்றவர் நினைப்பார்கள். பெருமை அவர்களுக்கு எப்படி வரும். இப்படித்தான் ஆசார்யன் சீடன் பர்தா, மனைவி புத்ரன் தகப்பன்

விஷயங்களிலும் கண்டு கொள்வது. ஸ்ரீராமபிரானுக்கு பெருமை என்பது உண்டு. அதுதானே உஜ்வலம். இதைதான் நாம் ஆலோசித்து நடக்கும் முறையை அநுஸரிக்க வேண்டும்.

கைகேயி சூர்பணகை அயோமுகி கூனி இவர்கள் எல்லாத்தன்மையையும் ஒரே உருவாக வந்த நாட்டுப் பெண்ணுக்கு பெருமை ஏது. பர்தாவும் அவளிடம் பயந்து எதையும் சொல்லாமல் தவிக்கிறான். இப்படித்தான் இந்த உலகம்.

துறவியாக ஆகிவிட்டார். மடாதிபதியாகவும் ஆனார். ஆனால் ஞானமில்லை என்றால் அவரை எப்படி ஆதரிப்பார்கள். ஆத்ம குணமில்லை என்றால் எப்படி ஆதரிப்பார். சில இடங்களிலே ஸங்கேதத்தால் ஆதரவு. மூட ஜனங்கள். ஆட்டு மந்தை போல் மேல் விழுவர். அவர் எப்படி பெரியவர்? ஆக ஆத்ம குணம் ஞானம் இருப்பவர்தான் பெரியவர்.

*****

# 18. கோபப்ரஸாதம்

இப்பொழுது ஒரு ரஸகனமான விஷயத்தை வரைய விரும்புகிறோம். இந்த தலையங்கத்தைக் கண்டதும் திகைத்து நிற்க வேண்டாம். 'கோபப்ரஸாதம்' என்று சொன்னால், 'கோபமும் ப்ரஸாதமும்' என்ற பொருளும் ஏற்படும். பெரியவர்கள் தப்பு காரியங்களைச் செய்யும் சிறியவர்களைக் கோபிப்பதுண்டு. நல்ல காரியங்களைச் செய்கிறவர்களிடத்தில் ப்ரஸாதத்தைக் காட்டுவதும் உண்டு. இது உலகியற்கை. இதை நாம் இங்கு கூற வரவில்லை.

ஒரு மகான் ஒருவரைக் கோபித்துக் கொள்ளுகிறாரே சில காரணங்களையிட்டு, அந்த மகானின் அந்த கோபம் ப்ரஸாதமாக முடிகிறது. அதாவது மகான்களின் கோபம் ப்ரஸாதமாகப் பரிணமிக்கிறது. இதுதான் ஆச்சரியம். பெரும்பாலும் மகான்களின் கோபம் எப்போதும் அநுக்ரகரூபமே.

சாதாரணமாக உலகத்தில் கல்விச் செல்வம், ஒழுக்கம், வைராக்கியம் முதலிய நற்குணங்கள் இல்லாத பாமரர்களின் கோபம் பிறருக்குத் துன்பத்தையே விளைவிக்கும். அப்படியன்று நற்குணங்களே உருவான மகான்களின் கோபம்.

உலகத்திலும் நற்குணம் பொருந்திய ஒரு யஜமானன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனிடத்தில் எல்லா நற்குணங்களும் உண்டு; ஆனால் கோபம் அதிகம். தன்னிடம் வேலை செய்கிறவர்களிடத்தில் எப்போதும் சிடுசிடுவென்று எரிந்து விழுவான். 'இவ்வளவு கோபிஷ்டனாக இருக்கிறானே; வேலையிலிருந்து நம்மை நீக்கிவிடுவானே?' என்று அவனிடம் பயப்பட வேண்டியதே இல்லை. பெரும்பாலும் மேற்பார்வைக்குச் சாது மாதிரி இருக்கும் யஜமானனுக்குத்தான் பயப்பட வேண்டும். அவன்தான் வெளியில் தெரியப்படுத்தாமல் கடைசியில் காரியத்தில் காட்டிவிடுவான். கோபம் உள்ளவன் எப்போதும் கெடுக்கமாட்டான்; சிடுபுடு என்று மேல்விழுவதுடன் சரி; காரியத்தில் நன்மையைதான் செய்வான். 'கோபம் உள்ளவர்களிடம் தான் குணமும் உண்டு' என்று சொல்வது வழக்கம். அதைப்போல மகான்களின் கோபம் நல்லதில் பர்யவஸிக்கிறது.

இதற்கு மற்றோர் உதாரணத்தைத் தெளியக் காட்டுகிறோம். சூரியன் தன் கிரணங்களையிட்டு உலகத்தைக் கொளுத்துகிறான். ஜனங்கள் தாங்க முடியாமல் 'ஐயோ! என்று கதறித் தவிக்கின்றனர். சூரியனுடைய இவ்வளவு கடுமையான கொளுத்துகையும் எதில் முடிகிறது? யோசித்துப் பாருங்கள். மழை பெய்வதில்தானே முடிகிறது? எவ்வளவுக்கு எவ்வளவு கொளுத்துகிறானோ அவ்வளவுக்கு அவ்வளவு மழை. தன் கிரணங்களைக் கொண்டு நன்கு கொளுத்தி சமுத்திரத்திலிருந்து நீரை எடுத்து ஆவியாக்கி மேகங்கள் மூலம் நன்கு வர்ஷிக்கச் செய்கிறான். ஆக, தாபமே வர்ஷத்தில் முடிந்து ஹர்ஷத்தை உண்டுபண்ணுகிறது. அதுபோலத்தான் மகான்களுடைய கோபமும்.

சில இடங்களில் ப்ரஸாதமே கோபமாக மாறுவதுண்டு; 'அவ்யவஸ்த்தி தஸித்தானாம் ப்ராஸாதோபி பயங்கர:' என்ற ரீதியில். சில சஞ்சல சித்தர்கள் தமக்கு பெருமை வரவேண்டும் என்ற எண்ணி பலர் எதிரில் சிலருக்கு எதையாவது கொடுத்துவிடுவார்கள். இது நமக்கு கிடைத்துவிட்டது என்று சந்தோஷப்பட முடியாது. எந்த சமயத்தில் அவர் மூலமாக என்ன கெடுதி ஏற்படுமோ என்று பயந்துகொண்டேதான் இருக்கவேண்டும். நிம்மதியாக இருக்க

முடியாது. அவரே பத்து நாட்கள் கழித்து வட்டியுடன் வசூல் பண்ணிவிடுவார். இதையும் உலகத்தில் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்டதன்று மகான்களின் கோபம்.

இந்த விஷயத்தைப் புராணங்களிலுள்ள சில கதைகளையிட்டு நிரூபிக்கிறோம்.

தசரத சக்ரவர்த்தி தம் புதல்வர்களான ராம லக்ஷ்மணர்களைக் காட்டுக்கு அனுப்பியபிறகு, மிகுந்த வருத்தத்துடன் கௌஸல்யையைப் பார்த்து, முன்பு நடந்த ஒரு விருத்தாந்தத்தைச் சொல்லுகிறார் - 'நான் ஒரு சமயம் காட்டுக்கு வேட்டையாடச் சென்றிருந்தேன். ஒரு தபஸ்வியின் குமாரன் தன் பெற்றோர்களுக்காக ஒரு கலசத்தில் தண்ணீரை மொண்டுகொண்டிருந்தான். சப்தம் மாத்திரம் காதில் விழுந்தது. ஒரு யானை தண்ணீரைக் குடிப்பதாக அந்த ஒலியினால் பிரமித்து அம்பெய்திக் கொன்று விட்டேன்: அருகில் சென்றதும், ஒரு தபஸ்வி குமாரன் என்பதை உணர்ந்து, அவனை அவன் பெற்றோர்களிடம் சேர்ப்பித்து நடந்ததைச் சொன்னேன். அப்போது அவர்கள் ஆறாத் துயருற்று, 'எங்களைப் போல் நீயும் புத்திர வியோகத்தினால் கஷ்டப்படக்கடவாய்' என்று சபித்தார்கள். இந்தச் சாபம் கஷ்டத்தைக் கொடுக்க கூடியதாக இருந்தபோதிலும் நன்மையையே செய்தது. வெகு காலம் புத்திரனில்லாத எனக்குப் புத்திர உத்பத்தியை நிச்சயம் செய்து கொடுத்தது.'

இதையே ஒரு கவி சமத்காரமாகப் பேசுகிறான் -

> சாபோப்யத்ருஷ்டதநயாநநபத்மசோபே
> ஸாநுக்ரஹோ பகவதா மயி பாதிதோயம் I
> க்ருஷ்யாம் தஹந்நபி கலு க்ஷிதிம் இந்தநேத்த:,
> பீஜப்ரரோஹஜநநீம் ஜ்வலந: கரோதி II

சாபமே அநுக்ரகத்தில் முடிந்தது என்பதை ஓர் அழகிய உதாரணத்தையிட்டு நிரூபிக்கிறான் கவி. ஒரு நிலத்தில் கரும்பைப் பயிரிட்டு அறுவடையானதும் மறுபடி அதிலேயே நெல்லைப் பயிரிட வேண்டுமென்றால் என்ன செய்கிறார்கள்? முதலில் நெருப்பயிட்டுக் கரும்பின் அடிக்கட்டைகளை எல்லாம் கொளுத்துகிறார்கள். இப்படிச் செய்யாவிட்டால் நெல்லை நன்கு பயிரிட முடியாது. இப்படி நெருப்பிட்டுக் கொளுத்தினால் உபரோதம் இல்லாமலிருப்பதோடு, உரமாகவும் ஆகி, நெல் விதையின் வளர்ச்சியையும் தூண்டிவிடுகிறது. இது போலத் தான் மகான்களுடைய கோபத்தின் காரியமாகும்.

ஒரு சமயம் இரண்டு கந்தர்வர்கள் அப்ஸரஸ் ஸ்திரீகளுடன் நிர்வாணமாக ஜலத்தில் கிரீடை செய்து கொண்டிருந்தபோது நாரத மகரிஷி வந்தார். அவரைப் பார்த்துங்கூட நிர்வாணமாகவே ஜலத்தில் விளையாடிக்கொண்டே இருந்தனர். இதைக் கண்டு கோபித்த அவர், "நீங்கள் மரம் போல், என்னைக் கண்டும் வணங்காமல் இருந்தபடியால் மரமாகவே ஆகவேண்டும்" என்று சபித்துவிட்டார். இதைக் கேட்டு, அவர்கள் வருந்தி, அவரை வணங்கி மன்னிப்புக் கேட்க, "ஸ்ரீகிருஷ்ணனுடைய அருளினால் உங்களுக்குச் சாபவிமோசனம் ஏற்படும்; அவருடைய தரிசனமும் கிடைக்கும்" என்றார். அவர் சொன்னபடி இருவரும் இரட்டை மருதமரங்களாக ஆனார்கள். ஸ்ரீகிருஷ்ண தரிசனமும் ஏற்பட்டது. அவன் செய்த அத்தனை பாலலீலைகளையும் 'யமலார்ஜுநத்ருஷ்டபால - கேளிம்' என்ற கணக்கில் அநுபவித்தார்கள். இவ்வளவுக்கும் காரணம் மகானான நாரத மகரிஷியின் சாபம்தான்.

தசாவதாரம் செய்த பகவானுடைய கதைகளைக் கேட்டு நாம் ரஸிக்கிறோம். விபவத்தில் நேரிலும் கண்டு அநுபவித்திருக்கிறார்கள். இப்படி எப்பெருமானுடைய கதைகளைக் கேட்டு க்ஷேமங்களை நாம் அடைகிறோமே; இதற்குக் காரணம் என்ன? பகவான் இந்த உலகத்தில் அவதரிக்காவிட்டால் அந்தக் கதைகளை அநுபவிப்பது ஏது? ஆக அவனுடைய அவதாரங்கள்தாம் காரணம். இது நிற்க. பகவானும் ஸ்ரீவைகுண்டலோகத்தில், 'உலகத்திலுள்ள ஜனங்களுடன் எப்போது கலந்து பரிமாறுவோம்? நாம் பூலோகத்தில் பிறந்து அவர்களுக்கு ஸேவை கொடுத்து அவர்களுடைய கஷ்டங்களை நீக்கி நம் இடத்துக்கு அழைத்து வந்து அவர்களுடன் ஸுகத்தை எப்போது அநுபவிப்போம்?' என்று உள்வெதுப்புடன் துடித்துக் கொண்டிருக்கிறான். இது வாஸ்தவமான விஷயம். இப்படி இரு திறத்தாருக்கும் நன்மை வேண்டும். இந்த நன்மைக்கெல்லாம் மூலகாரணம் எவை என்று ஆராய்ந்தால், பகவானுக்கு ஏற்பட்ட மகரிஷிகளின் சாபங்கள்தாம்.

பிருகு மகரிஷியின் மனைவியை, இந்திரனுக்கு உதவி செய்ய வந்த பகவான், தம் சக்ராயுதத்தால் கொன்றுவிட்டார். சினம்கொண்ட மகரிஷி பகவானைச் சபித்தார். 'தஸ்மாத் த்வம் மாநுஷே லோகே ஜநிஷ்யஸி ஜநார்தந! । தத்ர பத்நீவியோகம் த்வம் ப்ராப்ஸ்யஸே பஹுவார்ஷிகம் ॥ மனுஷ்ய லோகத்தில் நீ பிறக்க வேண்டும்' என்று சாபம் கொடுத்தார். பகவான் 'எனக்கும் இதனால் நன்மை ஏற்படும். ஜனங்களுக்கும் நன்மை உண்டாகும்' என்று எண்ணி, அந்தச் சாபத்தைத் தலைமேல் தாங்கினார்.

மகான்களுக்குப் பெரும்பாலும் கோபமே வராது; அவர்கள் ஆறு சத்துருக்களையும் (காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யம்) ஜயித்தவர்களானபடியால் துஷ்டர்கள் செய்யும் தப்புக் காரியங்களைப் பார்த்து அவர்களைச் சிக்ஷிப்பதுடன், நல்ல ச்ரேயஸ்ஸை உண்டுபண்ண வேண்டுமென்று எண்ணி, சில இடங்களில் கோபத்தைக் காட்டுவார்கள். இந்தக் கோபத்தை ஒரு கணமேனும் ஒருவராலும் தடுக்க முடியாது. உலகத்தைப் படைக்கும் ப்ரம்மதேவனின் படைப்பையும், உலகத்தை அழிக்கும் ருத்ரனுடைய அழித்தலையும் பகவானால் தடுக்கமுடியும். ஆனால் மகான்களுடைய கோபத்தை பகவானாலும் அடக்க முடியாது. எனென்றால் அவர்களுடைய சாபத்துக்கு இவனே இலக்காக ஆகிறானே!, அவர்கள் கோபத்தினால் சபித்தால் 'சற்று இரு என்றோ' 'பெற்றுக்ககொள்ள மாட்டேன்' என்றோ சொல்கிறானோ!? இல்லையே!. ஆக பகவானாலும் ஒரு க்ஷண காலம் கூட அவர்களின் கோபத்தை அடக்க முடியாது. இதை திருவள்ளுவரும் மிக அழகாக திருக்குறளில் சொல்லுகிறார்:-

> குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயும் காத்தல் அரிது. (அறத்துப்பால் - அதிகாரம்-3)

இங்கு 'காத்தல்' என்பதற்கு 'தடுத்தல்' என்று பொருள். இந்த குறளுக்கு மற்றொரு பொருளும் கூறலாம். காத்தல் - ரக்ஷணம்; அதாவது மகான்கள் தங்களுக்கு திடீரேன்று உண்டாகும் கோபத்தை க்ஷண காலம் கூட காப்பாற்றி வைத்துக் கொள்ள மாட்டார்கள். மின்னல்போல் வந்த சுவடு தெரியாமல் மறைந்து விடும் 'கோபம் வந்ததா என்ன? நம்பவே முடியவில்லையே?' என்று சொல்லும்படி இருக்கும்.

> உத்தமே க்ஷண கோபக ஸ்யாத், மத்யமே கடிகாஸ்தம் ।
> அதமே ஸ்யாத ஹோராத்ரம், ம்ருத்யந்த மதமாதமே ॥

உத்தம புருஷனிடத்தில் கோபம் ஒரு க்ஷண காலம் தான் தங்கியிருக்கும். மத்யமனித்தில் இரண்டு நாழிகை. அதமனிடத்தில் ஓர் இரவு பகல். அதமாதமனிடத்தில் மரணம் வரையிலும் இருக்கும். உத்தமோத்தமர்களான மகான்களின் கோபம் க்ஷண காலம் கூட இருக்காது என்பது தெளிவு.

இப்படிப்பட்ட மகான்கள் கோபிக்க மாட்டார்கள். கோபித்தாலும் க்ஷண காலம் கூட அது நிலைத்து நிற்காது. அப்படி இருந்தாலும் அது அநுக்ரஹத்தில் முடிந்து நன்மையையே விளைவிக்கும்.

ஸூர்யன் ஆதபத்தைக் கொண்டு கொளுத்துகிறான். அதனால் மணலும் சுட்டுவிடுகிறது. குடை பிடித்துப் போகிறவர்கள் கூட கஷ்டத்தை அடைகிறார்கள். உடலெல்லாம் வெந்து போகிறது. வியர்வை சொல்ல இயலாது.

> மருதாகம வார்தயாபி சூந்யே ஸமயே ஸம்ப்ரதி ஸம்ப்ரவ்ருத்ததாபே.
> உரசி சிசவே புபுஷுவே அதி சத்பூத் க்ருதிம் ஆனசரனிலே ந

என்றான் ஒரு கவி. தாபமே அதிகம். காற்றும் இல்லை. பாம்புக்குஞ்சுகள் தவிக்கின்றன. தாய் பாம்பும் என்ன செய்யும். தன்னுடைய வாயினால் காற்றை ஊதி அவைகளை சமாதானப் படுத்தியது. பாம்புக்கு வாதாசனம் எனப் பெயர் உண்டே. இப்படி சூர்யன் தபிக்கிறான். ஆனால் இப்படியிருந்தால் உடனே மழை என்று சொல்லுகிறோம். கிரணத்தைக் கொண்டு நமக்கு தாபத்தை உண்டு பண்ணுகிறவனே கிரணத்தால் பூமியில் உள்ள தண்ணீரை எடுத்து மழையையும் கொடுக்கிறான். இது எல்லோருக்கும் கண்கூடு.

யாக்ஞவால்கர் ஒரு மஹரிஷி. பெரிய மஹான். அவருக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தி ஸொத்தைப் பெற்றுக்கொண்டாள். அதுதான் அவளுக்குச் செல்வம். மற்றொருத்தி ப்ரஹ்மஞானம் என்னும் ஸொத்தை அடைந்தாள். அவளுக்கு சீடர்கள் மூன்று பேர். சந்தர காண்தன், மஹா மேதன் விஜயன் என்று பெயர். அவர்கள் ப்ராமண குலத்தில் பிறந்தவர்கள். அவர்களுக்கு 14 ஆயிரம் சீடர்கள். இவர்கள் பரமசிவனிடத்தில் நிர்வாணன் என்றும் பஸ்மதாரி என்றும் சில ஹீனச் சொற்களை சொல்லி கேலி செய்தார்கள். அதனால் வெகுண்ட சிவன் மூன்று ஆசார்யர்களையும் 14 ஆயிரம் சீடர்களையும் சபித்துவிட்டார். அவர்கள் கரன் தூஷணன் த்ரிசிரஸ் என மூவராகவும் 14 ஆயிரம் ராக்ஷசர்களாகவும் பிறந்தனர். இந்த ஆசார்யரும் சீடர்களும் ருத்ரனிடம் சரண் புக அவன் ப்ரஸன்னனாக ராமனின் மூலம் போர் செய்து க்ஷேமத்தை அடைவீர்கள் என்று பரம பாகவதர்களானபடியால் "தருணை ரூப ஸம்பைன்னௌ" என்று சூர்பனகை சொன்னவுடன் பூர்ம ஜன்ம ஸ்மரணம் ஏற்பட்டு ஸ்ரீராமனிடம் போர் புரிய வந்து மாண்டனர். ஸ்ரீராம பாணத்தால் மாண்டு ஸ்வர்க்கத்தையும் அடைந்தனர். இக்கதை சேஷ தர்மத்தில் பீஷ்ம யுதிஷ்ட்ர ஸம்வாதத்தில் உள்ளது. ஆகவே மகான்களின் கோபம் நன்மையில் முடியும். விஸ்வாமித்ரரிடம் உண்டான வசிஷ்டரின் கோபம் விஸ்வாமித்ரரை ப்ரஹ்ம ரிஷியாக்கிவிட்டது அல்லவா? மேலும் பரசு ராமன் க்ஷத்ரியர்களுக்கு தனுர் வித்தையை கற்றுக் கொடுக்கமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்திருந்தார். கர்ணன் அவரிடம் நான் க்ஷத்ரியன் அல்லன் என்று சொல்லி தனுர் வித்தையைக் கற்றுக் கொண்டான். வண்டு பரசுராமனின் தொடையை துளைத்தது. கர்ணன் மடியில் அவர் தூங்குகிறார். எழுப்ப வேண்டாம் என இருந்தான். பிறகு தானாக எழுந்தார். கர்ணனைப் பார்த்து நீ என்னை

எழுப்பாமல் இருந்தபடியால் ப்ராமணன் அல்ல, க்ஷத்ரியன் என்று சொல்லி சபித்தார். இது இவனுக்கு தான் க்ஷத்ரியன் என தெரியப் படுத்திவிட்டது. இந்த சாபம் ப்ராமணன் அல்ல, க்ஷத்ரியன்தான் என ஞானத்தை கொடுத்தபடியால் அநுக்ரஹமாகவே ஆயிற்று என்று நினைத்தான்.

இதேல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். முக்மான விஷயம் ஒன்று சொல்கிறேன். நாம் அளவில்லா பாபம் செய்கின்றோம். பகவானுடைய விதிநிஷேதங்களை செய்வதில்லை. எம்பெருமானுக்கு நம்மேல் கோபம். அது எதில் முடிகிறது ? சிக்ஷையைக் கொடுக்கிறான். அது நன்மையில்தானே சேறுகிறது. காகத்தினிடம் கோபம் கொண்டு ப்ரஹ்மாஸத்ரத்தை ஏவினான். அதனால் கண்ணை இழந்தது. அது ஹிதத்தில் முடிந்ததாகவே கருதுகிறோம்.

சீறி அருளாதே என்றாள் கோதை. இதன் கருத்து என்ன ? சீறுவதும் அருளில் முடியும் என்பது. ஆக பகவானின் கோபம் ப்ரஸாதமாகவே அமையும். சித்ரகேது என்பவன் பார்வதியை பரிஹாஸம் செய்தான். அவளும் சாபமிட்டாள். அதற்கு அவன் உனது கோபம் ப்ரஸாதத்தில்தான் பர்யவஸிக்கும் என்று அதை தலையால் பெற்றான். இப்படி பல இடங்கள்.

*****

# 19. பத்தும் மூன்றும் ஒன்றும்

ச்ரிய: பதியான நாராயணன் ஸாதுக்களைக் காக்கவும் துஷ்டர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநிறுத்தவும் இப் புவியில் அவதரிக்கிறான் என்பது ஆஸ்திகர்களின் கொள்கை. இதைத்தான் 'பரித்ராணாய ஸாதுதூநாம்' என்ற ச்லோகத்தில் அர்ஜுனனைக் குறித்துக் கீதாசார்யன் கூறியது. ஸ்ரீமத் பாகவதத்திலும் இதையே சுகப்பிரம்மம் வத்ஸா பஹார கட்டத்தில் நான் முகன் வாயிலாகக் கூறியிருக்கிறார் -

ஸுரேஷு, ரிஷிஷு, ஈச! ததைவ ந்ருஷ்வபி
திர்யக்ஷு யாதஸ்வபி தே அஜநஸ்ய ।
ஜந்ம அஸதாம் துர்மதநிக்ரஹாய ச,
ப்ரபோ ! விதாத : ஸதநுக்ரஹாய ச ॥ (10-14-20)

"ஸர்வேச்வரனே! நீ பிறப்பற்றவன். ஆயினும் புண்ணிய பாவ வினைகளை அநுஸரித்து நாங்கள் எப்படி இந்த பூமியில் பிறக்கிறோமோ அதுபோல் கர்மஸம்பந்தம் அற்றிருந்தும் நீ இச்சையினால் இந்த உலகத்தில் தேவகுலத்திலும், ரிஷி குலத்திலும், மனுஷ்ய குலத்திலும், திர்யக் ஜாதி முதலியவற்றிலும் பிறப்பை எடுத்துக் கொள்கிறாய். இது எதற்கென்றால், அஸத் புருஷர்களின் கொழுப்பை அடக்குவதற்கும், ஸத்துக்களை அநுக்ரகிப்பதற்கும்தான்" என்று பிரம்மா கண்ணனைக் குறித்துக் கூறுவதாக இந்த ச்லோகம் அமைந்துள்ளது.

இந்த கருத்தையே ஸ்ரீமத்ராமாயணத்தில் வால்மீகி பகவான் கூறுகிறார் -

ஸ ஹி தேவைருதீரணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி: ।
அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந: ॥

"துஷ்டனான ராவணனின் வதத்தை விரும்பிய தேவர்களினால் பிரார்த்திக்கப்பட்டு, ஸநாதனனான (நித்தியனான) விஷ்ணு, இந்தக் கர்மபூமியில் ராமனாகப் பிறந்தான்" என்பது இதன் கருத்து.

இந்தக் கர்மபூமியை 'இருள்தரு மாஞாலம்' என்பர். இதில் பிறப்பவர்களையும் வசிப்பவர்களையும் அஞ்ஞானமாகிய இருட்டுச் சூழ்ந்துகொண்டு ஸத்விஷயங்களை அறிய விடாமல், பலவிதத் துன்பங்களைக் கொடுக்க ஹேதுவாகிறது. மேலும், இந்த உடல் மாம்ஸம், பூயம், சோணிதம், விட், மூத்திரம் முதலியவை நிறைந்து அருவருப்பைக் கொடுக்கக்கூடியதாக அமைந்திருக்கிறது. ஆகையால்தான் நாம் வேள்வி முதலியவற்றைச் செய்யும்போது, அக்னியில் நாம் சமர்ப்பித்த ஹவிஸ்ஸை, நாம் சொன்ன மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டு வந்து, தேவதைகள் இந்தப் பூமியில் கால்களை வைக்காமல், ஒரு முழம் உயரத்தில் இருந்துகொண்டு, மூக்கின் வாயிலாக இந்தப் பூமியின் வாஸனை உட்புகாமல் இருக்க த்ருடமாகப் பிராணாயாமம் செய்துகொண்டு பெற்றுக் கொள்ளுகிறார்களாம். அப்படிப்பட்ட மனுஷ்யலோகத்தில் அந்தத் தேவதைகளுக்கும் மேம்பட்டவனும் அகர்மவச்யனுமான ஸ்ரீமகாவிஷ்ணு ஸ்ரீராமனாகப் பிறந்தான் என்றால் அவனுடைய ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்யாதி திருக்கல்யாண குணகணங்களின் பெருமையை என்னவென்று சொல்வது? ராவணனுடைய வதத்துக்காகவும், தேவதைகளின் பிரார்த்தனைக்காகவும் அவதரித்தான் என்றதனால் துஷ்ட நிக்ரஹமும் சிஷ்டபரிபாலனமும் சொல்லப்பட்டன.

இவ்வாறு சிஷ்டபரிபாலனத்துக்காகவும், துஷ்ட ராவணநிக்ரஹத்துக்காகவுமே ராமனாகப் பிறந்தபடியால் தகப்பனாக தசரத சக்ரவர்த்தி பட்டாபிஷேகம் செய்ய உத்தேசித்த ஸமயத்தில், அவனுக்காகவும் உலகத்தாருக்காகவும் வேர்களின் எதிரில் ஒப்புக்கொண்டு, ஸ்ரீரங்கநாதனை ராமன் வணங்கியபோது, தகப்பன் விரும்பிய பட்டாபிஷேகத்தை வேண்டிக்கொள்ளாமல் தன் விருப்பத்தையே வேண்டினான் -

மஹதே தைவதாய ஆஜ்யம் ஜுஹாவ ஜ்வலிதே அநலே I
சேஷம் ச ஹவிஷஸ் தஸ்ய ப்ராஸ்யாஸ்யா த்மந: ப்ரியம் II

"நன்கு ஜ்வலிக்கிற அக்கினியில் பகவானை உத்தேசித்து ஹவிஸ்ஸை ஸமர்ப்பித்து, மீதியை அமுது செய்து, தன் மனோரதப்படி காரியம் நடைபெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்." இதில் தகப்பனான தசரதனுடைய மனோபீஷ்டமான காரியம் நடைபெற வேண்டிக்கொள்ள வில்லை. தனக்கு இஷ்டமான பட்டாபிஷேகத்தின் தடங்கலையும் காட்டுக்குச் செல்வதையுமே வேண்டிக்கொண்டான். காட்டுக்கு சென்று தேவதைகளின் விருப்பப்படி ராவணனை ஸம்ஹரிப்பதற்காக அன்றோ அவன் அவதரித்தது?

ஸாது ரக்ஷணம் அவனுக்கு வேண்டும். இவர்களை பரமபதம் வரையில் அழைத்து மோக்ஷத்தைக் கொடுக்க அவனது எண்ணம். "நம் பிறப்பு நம்மையும் அவனையும் அகற்றும். அவன் பிறப்பு இருவரையும் சேர்க்கும்" என்பர்.

மேலும், ஸ்ரீராமன், பட்டாபிஷேக தினத்துக்கு முன்னிரவில் ஸீதையுடன் பர்யங்கத்தில் உபவாஸத்துடன் உட்கார்ந்து, பல மகரிஷிகளுடனும் ஸந்யாஸிகளுடனும் புண்ணிய கதைகளைச் சொல்லிக் கொண்டும் கேட்டுக் கொண்டும் தூங்காமல் விரதத்துடன் இருந்தான். அப்பொழுது ஸீதாபிராட்டி, "நாதா! நீர் உம்முடைய தகப்பனார் சொற்படி பட்டாபிஷேகத்துக்கு ஸந்நத்தமான காரியங்களைச் செய்துகொண்டு ஸுகமாக வாழலாம் என்று இருக்கிறீரே. தேவதைகளின் பிரார்த்தனை என்ன ஆயிற்று? நீர் அவர்களுக்குக் கொடுத்த வரம் வீணாக வேண்டியதுதானா?" என்று சில இங்கிதங்களையிட்டுத் தெரியப்படுத்தினாள். அதைக் கேட்ட ராமன், "அடி பைத்தியமே! இவ்வளவு பழகியும் என்னை நீ அறிந்து கொண்டது இதுதானா! ஏன் அவசரப்படுகிறாய்? சற்றுப் பொறு. நான் 'வரதன்' அல்லனோ? ஸுமந்த்ரர் வந்துவிடுவார். நம் காரியம் செவ்வனே நடக்கும்" என்று சொன்னான். இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோதே ஸுமந்த்ரர் அங்கு வந்து ஸ்ரீராமனை ஸேவித்தார். அங்குள்ள ச்லோகம் இது -

தம் தபந்தபிவாதித்யம் உபபந்நம் ஸ்வதேஜஸா I
வவந்தே வரதம் வந்தீ விநயஜ்ஞோ விநீதவத் II

இங்கு 'வரதம்' என்று வால்மீகியின் பதவிந்யாஸத்தின் சுவையை ரஸிக்க வேண்டும்.

இவ்வாறு ஸுமந்த்ரர் மூலமாகக் கைகேயியின் அரண்மனைக்குச் சென்று, ராமன் தன் தகப்பனார் கவலையுடன் இருப்பதையும் கண்டு, கூற்றுத்தாய் சொற்படிதான் காட்டுக்குப் போகத் தீர்மானித்துக் கொண்டான். உடனே தன் தாயிடம் சென்று ஸமாதானம் சொல்லிவிட்டு, ஸீதையிடமும் விஷயத்தைச் சொல்லிச் சில தர்மங்களையும் உபதேசம் செய்து, "நீ அயோத்தியில் இன்ன இன்ன மாதிரி இரு. நான் காட்டுக்குப் போய் வருகிறேன்" என்று கூறினான்.

இதைக் கேட்ட ஸீதை, தானும் ஸ்ரீராமனுடன் காட்டுக்கு வரச் சில தர்மங்களைச் சொல்லிக் கடைசியில் ஒரு ரஸகனமான விஷயத்தைக் கூறுகிறாள். அதை உணர்த்தும் ச்லோகம் இது:-

> இமம் ஹ ஸஹிதும் சோகம் முஹூர்த்தமபி நோத்ஸஹே I
> கிம் புநர் தச வர்ஷாணி த்ரீணி சைகம் ச து:கிதா II

"நாரதரே ! ஸுமந்த்ரர் இங்கு வந்து உம்மை அழைத்துச் சென்றார். பிறகு முஹூர்த்த காலத்தில் இங்கு நீர் வந்து விட்டீர். இந்த முஹூர்த்த காலம் உம்மை விட்டுப் பிரிந்திருந்ததையே என்னால் தாங்க முடியவில்லை. அப்படியிருக்க, உம்மை விட்டுப் பிரிந்து பதினான்கு வருஷ காலம் எப்படி உயிருடன் இருப்பேன்?" என்று ஸீதை சொன்னாள்.

உலகத்தில், காதலனிடத்தில் அதிக அன்புள்ள காதலிக்கு அவனை க்ஷணகாலம் விட்டுப் பிரிந்திருந்தாலும் அது ஒரு யுகம் பிரிந்திருந்தாற் போல் தோற்றும்; அளவற்ற துயரத்தைத் தரும். உடம்பில் பல மாறுதல்களும் ஏற்படும். ஒருவருக்கொருவர் தம்பதிகள் த்ருடாலிங்கனம் செய்துகொண்டு இருக்கும் ஸமயத்திலேயே ஒரு க்ஷண காலம் ஆலிங்கன சைதில்யம் ஏற்பட்டால் அதுவே தாங்க முடியாத துன்பத்தைத் தருமாம். "புல்லிக் கடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள் வற்றே பசப்பு" என்று திருவள்ளுவரும் சொன்னார். அப்படியிருக்க, விட்டுப் விரிந்தால் உடலில் வைவர்ண்யத்தைச் சொல்ல வேண்டுமா? அதிக காலம் பிரிவு ஏற்பட்டால் உயிருக்கே ஆபத்து வந்துவிடாதா? இது உலக இயற்கை. அந்த நிலையிலுள்ள ஸீதாபிராட்டி, 'ஸ்ரீராமனுடைய பிரிவு தாங்க முடியாதது' என்று வெளிப்படுத்தித் தன்னையும காட்டுக்கு அழைத்து செல்ல வேண்டுகிறாள்.

இங்கு, கைகேயி, ஸ்ரீராமன் பதினான்கு வருஷகாலம் காட்டில் வசிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். இந்தக் காலத்தை ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிக்கும்போது அப்படியே 'பதினான்கு' என்றும், 'ஏழு ஏழு' என்றும், 'ஒன்பது ஐந்து' என்றும் பல பிரகாரமாக எண்ணிக்கை நிர்தேசம் பண்ணப்பட்டுள்ளது. இப்படிக் குறிப்பதற்குப் பல விசேஷங்கள் உண்டு என்பது ஆராய்ந்தால் தெரியும்.

அதைப் பற்றிய விரிவை மற்றொரு சமயத்தில் எழுதுவோம். இவ்விடத்தில் கீழ்க் கூறிய வகையில், 'ஏழு ஏழு', 'ஒன்பது ஐந்து', 'பதினான்கு' என்று கூறாமல், 'பத்து மூன்று ஒன்று' என்ற வகையில் கூறியதன் கருத்து என்ன என்பதை ஆராய்வோம்.

வால்மீகி பகவானுக்கு, இம்மாதிரி சொல்லாமல் பதினான்கை குறிப்பதற்கு வேறு பதங்களைப் பிரயோகித்து ச்லோகத்தை அமைக்கத் தெரியாதா? இவருடைய ஒவ்வொரு சொல்லிலும் அர்த்தபுஷ்டி உண்டு. ஸாதாரணமாக 'ச' என்னும் சொல்லைக்கூட வீணாக பிரயோகிக்க மாட்டார். 'சகாரகுக்ஷி' என்று வ்யாஸரைச் சொல்லலாம். 'பீஷ்மம் ச த்ரோணம் ச ஜயத்ரதம் ச' என்று அர்த்தமில்லாமல் ச்லோகத்தை நிரப்பிப் பிரயோகிப்பார் என்பது லோகப் பிரஸித்தம். அப்படிப்பட்டவரல்லர் ஸ்ரீமத் ராமாயண காவ்யகர்த்தாவான வால்மீகி முனிவர். 'தர்மஜ்ஞஸ் ச க்ருதஜ்ஞஸ்ச', 'வித்வாந் க: கஸ் ஸமர்த்தஸ் ச கஸ்சைகப்ரிய தர்சந:' என்று காவ்ய ஆரம்பத்திலேயே அநேக 'ச' காரப் பிரயோகம் பண்ணியிருக்கிறாரே என்று நினைக்க வேண்டாம். 'பதினாறு குணங்களுடன கூடிய உத்தம புருஷன் யார்? என்ற கேள்விக்குக் கருத்து என்னவென்றால், முப்பத்திரண்டு குணங்களுடன் கூடிய உத்தம புருஷன் யார்

என்பதில் நோக்கம். அதற்காகத்தான் 'உம்மை' யைச் சொல்லக்கூடிய சொல்லை (ச என்பதை)ப் பல தடவை பிரயோகம் செய்தார்.

'தர்மஜ்ஞஸ் ச - தர்மத்தை அறிந்தவன்', 'ச' என்பதனால் அதர்மத்தையும் அறிந்தவன் என்று காட்டுகிறார். உலகத்தில் தர்மம், அதர்மம் ஆகிய இரண்டையும் செய்வதற்காகவும் விடுவதற்காகவும் அறிந்துகொள்ள வேண்டும் அல்லவா? 'க்ருதஜ்ஞஸ் ச-நாம் செய்யும் உபகாரத்தை அறிந்து கொள்பவன்.' ச என்பதனால், நாம் செய்யும் அபகாரத்தை மனத்திலும் நினைக்காதவன் என்று பொருள். 'ந ஸ்மரத்யபகாரணாம் சதமப்யாத்மவத்தயா । கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி' என்றல்லவொ ராமனுடைய குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன? ஸமர்த்தஸ் ச-சத்ருக்களிடத்தில் தன் வலிமையைக் காட்டுவான். ஸத்புருஷரிடத்தில் தன் வலிமையைக் காட்டமாட்டான். ராமம் ஸத்யபராக்ரமம். த்வேஷிகளிடத்தில் ஸத்தியமான பராக்கிரமத்தை உடையவன். ஸதி அபராக்ரமம் - ஆச்ரிதரிடத்தில் பராக்கிரமத்தைக் காட்டாதவன். இப்படி ஒவ்வோர் இடத்திலும் 'ச' என்பதன் விசேஷார்த்தத்தைக் கண்டுகொள்ள வேண்டும். ஆக, வால்மீகியின் ஒவ்வொரு பத அமைப்புக்கும் விசேஷார்த்தங்களை ஆராய்ந்து ரஸிக்க வேண்டும்.

எனவே, இங்கு, 'பத்து மூன்று ஒன்று' என்று பதினான்கு வருஷத்தைக் குறிப்பதற்கும் காரணம் இருக்கவேண்டும். ஸ்ரீராமன் ஸீதையைவிட்டு தனியாக காட்டுக்கு செல்வதாகச் சொன்னதும் ஸீதை இப்படி கூறி, "நீர் தனியாக போகக் கூடாது, என்னையும் அழைத்துப் போகவேண்டும்" என்று மேல் நடக்கவேண்டிய விஷயங்களை நினைவு மூட்டுவதற்காக இதைத் தெரிவிக்கிறாள். அதாவது "நாம் வைகுண்ட லோகத்தில் இருக்கும்போது தேவதைகள் ராவணனுக்கு பயந்து சரணாகதி செய்தார்களே; அப்போது மனத்தில் ஒரு ஏற்பாடு செய்துகொண்டோம். தசரதச் சக்ரவர்த்திக்கு நீர் புத்திரனாகப் பிறக்கவேண்டும்; நான் ஜனகரின் யஜ்ஞ சாலையில் பிறக்கவேண்டும். நமக்கு விவாகம் ஆனதும் பட்டாபிஷேக சமயத்தில் அதன் தடங்கல்களை ஏற்படுத்திக்கொண்டு காட்டுக்கு செல்ல வேண்டும்; அங்கே பதிநான்கு வருஷம் தங்கவேண்டும். ரிஷிகளின் ஆச்ரமங்களிலேயே ஆறு மாஸம், எட்டு மாஸம், ஒரு வருஷம் என்ற கணக்கில் பத்து வருஷங்களைக் கழிக்கவேண்டும். பிறகு பஞ்சவடியில் மூன்று வருஷங்களைப் போக்கவேண்டும். பின்பு நான் ராவணனுடைய சிறையில் (அசோக வனத்தில்) ஒரு வருஷம் மிக்கத் துன்பத்துடன் உமது பிரிவை சகிக்க முடியாமல் இருக்க வேண்டும். இதன் மூலம் ராவண வதம் செய்ய வேண்டும் என்றல்லவா ஏற்பாடு செய்து கொண்டோம்? அதன்படி நடக்க நான் இல்லாமல் நீர் மாத்திரம் காட்டிற்குச் சென்றால் என்ன செய்ய முடியும்?" என்பதை நினைவூட்டவே இவ்விதம் சொன்னாள். உலகத்திலும் பெரிய பதவியில் உள்ளவர்கள் வெளிநாட்டுக்கு செல்வதாக இருந்தால், 'இன்ன இன்ன இடங்களில் தங்கவேண்டும்; இன்ன இன்னதைச் செய்யவேண்டும்' என்று காரிய க்ரமங்களை ஏற்பாடு செய்து கொண்டு புறப்படுவது வழக்கம். அதுபோல இந்த திவ்ய தம்பதிகளும் முன்பே இப்படி ஏற்பாடு செய்துகொண்டார்கள். இதன்படியே காட்டுக்குச் சென்றதும் அந்த அந்த ஆச்ரமங்களில் பத்து வருஷ காலத்தை கழித்தனர். பிறகு பஞ்சவடியில் மூன்று வருஷ காலம்; அசோக வனத்தில் ஸீதை மட்டும் ஒரு வருஷம். 'ஏகம் ச து: கிதா' என்று சொன்னதிலிருந்தும் இது ஸ்பஷ்டமாகிறது. பதிநான்கு வருஷங்களில் பதிமூன்று வருஷங்களில் பிரிவேஇல்லை. அப்போது துக்கத்திற்கு பிரஸக்தியே இல்லை. ஒரு வருஷ காலமே பிரிவு. ஆதனால் ஒரு வருக்ஷமே துக்கம். இதைக் காட்டவே, 'ஏகம் ச து: கிதா' என்று சேர்த்து பிரயோகித்தார் வால்மீகி.

இப்படி விசேஷார்த்தத்தை மனதில் வைத்துத்தான் பதிநான்கு என்று சொல்லாமல் பிரித்துச்

சொன்னாள் ஸீதா பிராட்டி ஸ்ரீராமனிடத்தில். இதை அறிந்து கொண்டுதான் ராமன், "உன்னை விட்டு சொர்க்க லோகத்திலும் எனக்கு விருப்பம் இல்லை. என் குலத்துக்கும் உன் குலத்துக்கும் தகுந்தாற் போல் நீ பேசியது பொருத்தமே. உன்னையும் அழைத்துச் செல்லுகிறேன்" என்று சொன்னான்.

"ய:த்வயா ஸஸ்ர்க: நிரயோ ய: த்வயாவினா, இதிஜாநன் பராம்ப்ரீதிம் நய மாம்யத்ர கச்சஸீ" என்பது ராமாயணம். உன்னுடன் இருப்பதுதான் எனது ஸ்வர்க்கம். உன்னைவிட்டு பிறிந்திருப்பது நரகம் என்றாள் ஸீதை.

காட்டில் சென்றால் பல கஷ்டங்கள். வெயில் முள் பாம்பு காடு முதலிய உபத்ரவம். ஆக மிக ச்ரமம் என்று சொன்னாயே. அது உன் பிரிவில்தான் உண்டு. அதுதான் எனக்குத் தாபம் கொடுக்கும். கம்பன் இந்த பொருளை ரஸகனமாக கூறுகிறான்.

"பரிவ இழந்த மனத்தனனாய் பெருங்காடு" என்று ராமனை விட்டு பிறிந்து இருப்பதுதான் நரகம் என்று சீதாபிராட்டிச் சொல்வதாகச் சொன்னார்.

விவாஹம் நடந்தது. மனைவி வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு இவைகளை முறைப்படி மடித்து தருகிறாள். அப்பொழுது கணவன் மனைவியைப் பார்த்து 'இவ்வளவு காதலுடன் இருக்கிறோம். நாளை நான் வெளிதேசம் போக வேண்டும். என்ன செய்வது என்றான். இதைக் கேட்டதும் விரஹம் தாங்கமுடியாமல் மெலிந்தாள். அத்துடன் தன் கையில் அணிந்திருந்த வளைகளும் கையிலிருந்து நழுவிவிட்டன. அதேக்ஷணத்தில் அவள் அப்படி க்ருசமானதைப் பார்த்தான். நாம் சென்றால் என்ன நடக்குமோ என்று பயந்து ஐயோ நான் செல்லவில்லை என்றானாம். அடுத்த க்ஷணத்திலேயே நழுவின வளையல்கள் தவிற மீதி வளைகள் ஒடிந்துவிட்டன. அவ்வளவு பெருத்துவிட்டாளாம் என்றான் கவி. ஆக பிரிவு என்பது க்ருரம். அநுமான் முதலில் சீதையைப் பார்த்தான். விரஹத்தால் மெலிந்திருந்தாள். கனையாழியைக் கொடுத்தவுடன் அதைப்பார்த்து தன்மீது வைத்துக் கொண்டு என்னென்னமோ செய்தாள். உடனே பெருத்து விட்டாள். இதைக் கண்டதும் அநுமானுக்கு ஸந்தேஹம் வந்ததாம். இவள் ஸீதையா அல்லவா என்று. நாம் யாரிடமோ கணையொழியை கொடுத்து விட்டோம் என்று ஸந்தேஹமடைந்து பயந்து விட்டான். பிறகு உண்மையை அறிந்தான்.

என் நீர்மை கண்டிறங்கி இது தாது என்னாத என் நீல முகில் வண்ற்குன் சொல்லி யான் சொல்வேனோ என்கிற பாசுர வ்யாக்யானத்தைப் பார்த்து ரஸிக்கவும். நீர்மை = வைவர்ண்யம், தன் பக்கத்தில் இருக்கும்போது வைவர்ண்யத்தை எப்படி காணமுடியும் என்று பட்டரை கேட்டதற்கு தமிழனுக்கு இது தெரியாதா என்று பதில் சொன்னதை பார்க்கவும். "அணைத்த கை நெகிழ்ந்தவளவிலேயே வெளுத்தபடி கண்டால் பிரியத்த தாது 'என்று இருக்க வேண்டாவோ.

புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள்வற்றே பசப்பு (வெண்மை) என்றார் வள்ளுவர். இப்படி சங்கத்தார் செய்யும் உண்டு - காதலர் தொடுவழித்தொடுவழி நீங்கி விடுவழி விடுவழி பயத்தலானேன் என்பது.

நாயகன் தொட்ட தொட்ட இடம் நீங்கி விட்ட விட்ட விடமெல்லாம் பயத்தலானேன் -

வைவர்ண்யத்தையுடையவளானேன். ஆக கண்டு இறங்கி என்பதே உசிதம். கேட்டு இறங்கி என்பது அரஸிகத்வத்தை காட்டும்.

காதலனும் காதலியும் பிறிந்திருக்கும் தசை. இது விரஹாவஸ்தை. அப்பொழுது அவர்களின் சோகம் வாயால் தான் சொல்ல முடியுமா? பெருங்கஷ்டம். காதலி கணவன் இல்லாத ஸமயம் மாடியில் கஷ்டத்துடன் இங்குமங்கும் நடை போடுகிறாள். அது ஸமயம் மலைய மலையிருந்தும் தென்றல். இது அவளுக்கு மிக பாதகம். அது ஸமயம் குரங்குகளை வெய்தாளாம். ஏன்? இக்குரங்குகள் அணைகட்டும்போது மலைகளை எடுத்து ஸேது நிர்மாணம் செய்தன. அத்துடன் இந்த மலைய பர்வதத்தையும் பெயர்த்து கட்டியிருந்தால் இதிலிருந்து தென்றல் வீசாது. இதை ஏன் அவைகள் பெயர்த்து கட்ட வில்லை. எனக்கு இப்பொழுது பாதகமாக உள்ளதே என்றாள்.

திருமங்கை மன்னன் பரகால நாயகியாக ஆனாள். அவள் அவஸ்தையைப் பார்த்தாள் தாய். பாசுரங்கள் சில. ஏனே என் பெண்ணை வதைக்கிறாய்? விரக தசையானபடியால் சாந்தும் சந்தன குழம்பும் ஜில் என்று பூசினோம். ஐஐயோ என்று அலருகிறாள். தணலை ஏன் முலைத்தடங்களில் கொட்டுகிறீர்கள் என்கிறாள். இரவு வேளை சந்திரனை மாடியில் பார். சிலுப்பாக இருக்கும் என்று அழைத்துச் சென்றோம். ஆஆ கஷ்டம் வெயிலில் ஏன் அழைக்கிறீர்கள். தயிக்கிறதே என்றாள். ஸமுத்ரகரைக்கு அழைத்துச் சென்றால ஸமுத்ரம் புலம்புவதற்கு மேலாக இவளும் புலம்புகிறாள். மாந்தளில் ஸமானமான இவன் மேனியின் வண்ணம் மாறுபட்டிருக்கிறது. வளைகளும் கையில் நிற்காமல் நழுவி கீழே விழுந்து விடுகிறது. ஒரு க்ஷண காலமும் பலகல்பத்துக்கு ஸமம் என்கிறாள். தூக்கமே இல்லை. தோழி என்று கூப்பிட்டு நான் என் செய்வேன் என்று புலம்புகிறாள். இவ்வாறாக அவளது அவஸ்தை. ஓ பகவானே இவள் விஷயத்தில் என்ன செய்ய நினைத்திருக்கிறாய் என்றெல்லாம் விரஹாவஸ்தையை பலபடியாகச் சொல்லி அவஸ்தை படுகிறாள். மேலும் ஸ்ரீகிருஷ்ணன் கன்றுகளையும் மாடுகளையும் மேய்க்கச் சென்ற போது கோபிகளின் வார்த்தை உன் பிறிவு வதைக்கிறது. ஒரு நிமிஷகாலமமு பலயுகங்களுக்கு ஸமமாக உள்ளதே. இது பகல் வேளையில் நடக்கும் ஸம்பவம். நீ வந்த பிறகோ உன்னை பார்த்து ஸந்தோஷிக்கிறோம். ஆனால் கண்ணுக்கு இமையிருப்பதால் இமை கொட்டும்போது பார்க்க முடியவில்லை. அப்போழுதும் எங்களது ச்ரமம் வாயால் சொல்ல முடியவில்லை. ஏதோ இந்த நான்முகன் எங்களுக்கு இமையைக் கொடுத்தான் அவன் மஹா பாபி என்று அவனை வெய்கிறோம் என்றனர்.

சிலப்பதிகாரத்தில் ஒரு பாசுரம் நினைவுக்கு வருகிறது. கரியவனை மாயவனை.... கண்எடுத்து பாராதார் கண் என்ன கண்ணே.. இமை கொட்டி பார்க்கும் தான் கண் என்ன கண்ணே ? என்பது.

இப்படி வரஹ தசையில் இவளது அவஸ்தை. இது சுடுகாட்டிலும் பெரிய அவஸ்தை. ஆக என்னை உடன் அழைத்துச் செல் என்று நிர்பந்தித்தாள். ஆக பத்து வருடமும் மூன்று வருடமும் ஒரு வருடமும் எப்படி நான் பிறிந்திருப்பேன் என வேண்டிக்கொண்டாள்.

*****

# 20. இருபத்துநான்கு படிகள்

அயர்வறும் அமரர்கள் அதிபதியான எம்பெருமானின் திவ்யதேசங்கள் நூற்றெட்டு என்று நம் முன்னோர் கூறுவது வழக்கம். இவையெல்லாம் மயர்வறுமதிநலம் அருளப் பெற்ற திவ்யஸூரிகள் எனப்படும் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பண்ணப்பெற்றவை. இந்த எல்லாத் திவ்யதேசங்களிலும் எம்பெருமான் அர்ச்சாரூபியாய் ஸகல ஜனங்களுக்கும் ஸர்வ அபேக்ஷிதங்களையும் கொடுத்துக் கொண்டும், 'அர்ச்ய: ஸர்வ-ஸஹிஷ்ணு:' என்ற ரீதியில் நம்முடைய எல்லா அபராதங்களையும் பொறுத்துக்கொண்டும் ஸேவை ஸாதிக்கிறான். இவை அனைத்துக்குமே ஒவ்வோர் அம்சத்தை முன்னிட்டு உத்கர்ஷம் உண்டு.

அதிலும் நம் முன்னோர் நான்கு திவ்யதேசங்களுக்குப் பிராதான்யம் கொடுத்திருக்கின்றனர். கோயில் (ஸ்ரீரங்கம்), திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரம் என்ற இந்த நான்கு திவ்யதேசங்களைக் காலை பகல் மாலை மூன்று வேளைகளிலும் ஸந்த்யாவந்தனம் செய்ததும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்தானம் செய்யாமலிருப்பதில்லை.

ஸ்ரீரங்கமங்களநிதிம் கருணாநிவாஸம், ஸ்ரீவேங்கடாத்ரிசிகராலயகாளமேகம் ।
ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்ஜ்வலபாரிஜாதம், ஸ்ரீசம் நமாமி சிரஸா யதுசைல தீபம் ॥

என்று, ஸந்தியாவந்தனம் செய்ததும் இந்த ச்லோகத்தை நம் எல்லாரும் அநுஸந்திப்பது அனைவருக்கும் தெரிந்ததே. மேலும், இந்த நான்கு திவ்ய தேசங்களிலும் நடை வடை குடை முடி என்று விசேஷங்கள் உண்டு. கோவிலில் நடை மிகவும் அழகு. திருமலையில் வடையின் ப்ரபாவம் எல்லாருக்கும் தெரியும். பெருமாள் கோவிலில் குடை விசேஷம். திருநாராயண புரத்தில் வைர முடி விசேஷம்.

இப்படி இந்த நான்கு திவ்வ தேசங்களுக்கும் பெருமை உண்டு. அதிலும் பெருமாள் கோவிலுக்கு மற்றும் பல விசேஷ பெருமைகள் உள்ளன. இது காஞ்சி என்று பெயர் பெற்று விளங்குகிறது. க என்று சொல்லப்படும் பிரம்மாவினால் பூஜிக்கபெற்ற பகவான் வசிக்கும் திவ்ய தேசமானபடியால் இதற்கு இந்த பெயர் வந்தது. இதன் மகிமையை ஹம்ஸ ஸந்தேசத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் பரக்ககக் கூறியிருக்கிறார்.

தாமாஸீதந் ப்ரணம நகரீம் பக்திநம்ரேண மூர்த்நா
ஜாதாமாதௌ க்ருதயுகமுகே தாதுரிச்சாவசேந ।
யத்வீதீநாம் கரிகிரிபதேர் வாஹவேகாவதூதாந்
தந்யாந் ரேணூந் த்ரிதசபதயோ தாரயந்த்யுத்தமாங்கை: ॥ என்று.

தேவப்பெருமாளின் உத்ஸவம் விமரிசையாக நடக்கிறது. அப்பொழுது எம்பெருமான் கருடன், ஆனை, பரி முதலிய வாகனங்களில் எழுந்தருளுகிறார். வாகன ஆரூடனான எப்பெருமானை ஸ்ரீபாதம்தாங்கிகள் மிகவும் அழகாக எழுந்தருளப் பண்ணுகிறார்கள். ஒவ்வொரு வாகனத்திலும் தேவாதிராஜன் எழுந்தருளும்போது அதிக அதிகமான சோபையுடன் கண்டவர் தம் மனம் கவரும்படி ஸேவைஸாதித்து அநுக்ரகிக்கிறான். அந்த திவ்யதேசத்தில் ஸ்ரீபாதம் தாங்கிகள் மிகக் கடும் விசையுடன் எழுந்தருளப் பண்ணுவது வழக்கம். அவர்களுடன் ஸேவார்த்திகள் கூட உடன் செல்வது முடியாது. அந்தச் சமயத்தில் ஸ்ரீபாதம் தாங்கிகளின் திருவடிகளிலிருந்து பாததூள் வெளிக்கிளம்பி ஆகாயம் வரையில் பரவுமாம். வாகனாதிரூடனான

தேவப்பெருமாளை ஸேவிப்பதற்காக ஸ்வர்க்க லோகத்திலிருந்து ஆகாயத்தில் வந்துள்ள தேவர்கள் அந்தத் தூளைத் தங்கள் சிரத்தினாலே தாங்கிக் கொள்வார்கள். அப்படிப் பட்ட மகிமையைப் பெற்றது இந்தத் திவ்யதேசம்.

மேலும், இந்தத் திவ்யதேசத்தின் மகிமை வாசாமகோசரம் என்று எண்ணி ஸ்ரீஸ்வாமி தேசிகன், "வந்தே ஹஸ்திகிரீசஸ்ய வீதீசோதககிங்கராந்" என்று அருளிச்செய்தார். தேவப் பெருமாளின் வீதியைச் சுத்தம் செய்கிற வேலைக்காரர்களை வணங்குகிறேன் என்றால் இதன் மகிமையை அளக்க முடியாது.

'தேவப் பெருமாளின் வீதியாவது வேதாந்தம். அந்த வேதாந்தத்தின் அர்த்தத்தை அபார்த்தநிரஸநபூர்வகமாக வெளிப்படுத்தினவர்கள் நம் ஆசார்யர்கள். அவர்களை வணங்குகிறேன்" என்பது அதன் உட்கருத்து. இந்தத் திவ்யதேசத்து எம்பெருமானான பேரருளாளனாலே அல்லவா நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயம் விளங்கிற்று? ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்த வள்ளல் ராமாநுஜர் முதலில் யாதவப்பிரகாசனிடம் ஸாமானிய சாஸ்திரங்களையும் சில வேதாந்தபாகங்களையும் கற்று, அவர் மூலமாகத் தமக்கு அவத்யம் வருவதை அறிந்து, கங்கா யாத்திரையிலிருந்து மீண்டு திரும்பி வந்து திகைத்து நின்றபோது, தேவப் பொருமாள் வேடனாகவும் பிராட்டி வேட்டுவச்சியாகவும் வேடம் பூண்டு இவரைக் காத்தார்கள். மேலும், திருக்கச்சி நம்பி மூலமாக இந்த எம்பெருமான் ஆறு வார்த்தைகளை ராமாநுஜருக்குத் தெரிவித்தான். இதன் மூலமாக நம் ராமாநுஜர் ஸ்ரீபாஷ்யகாரரானார். வேதாந்த வீதியை முள், கல் முதலிய தோஷங்கள் இல்லாமல் சீர்ப்படுத்திச் சோதித்துக் கொடுத்து, இதரர் சொல்லும் அபார்த்தங்களையும் கண்டித்து, ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார். ஆக, காஞ்சீபுரம் இல்லாவிட்டால் அந்த எம்பெருமான் எங்கே! அந்த எம்பெருமான் இல்லாவிட்டால் ஸ்ரீபாஷ்யகாரரை உணர்த்துபவர் யார்? நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமே விளங்குவது எப்படி? ஆக ஸ்ரீவஷ்ணவ ஸித்தாந்த ஸ்தாபனமே இந்த திவ்யதேசத்தின் பிரபாவத்தினால் ஏற்பட்டது என்பதை மறக்க முடியாது. மறைக்கவும் முடியாது.

மேலும் கருட உத்ஸவம் இந்த ஊரில்தான் விசேஷம். 'அத்தியூரான் புள்ளையூர்வான்' என்று கருட உத்ஸவத்தை முன்னிட்டு ஆழ்வார்கள் இந்த திவ்ய தேசத்தை மிகச் சிறப்பாக கூறியுள்ளார்கள் என்பதும் சர்வ விதிதம். இப்படி பல படியால் காஞ்சி என்ற திவ்ய தேசத்திற்கு மகிமை ஏற்பட்டுள்ளது. அத்த யூரான் புன்னையூர்வான் அணிமணியின் துத்தீசேர் நாகத்தின் மேல் துயில்வான். முத்தீமறையாவான், மா கடல் நஞ்சுண்டான். தனக்கும் இறையாவான் எங்கள் பிரான், என்பது பூதத்தாழ்வார் பாசுரம். இப்படி மங்களாசாஸனாத் ஹிமயமலை முதல் கடல் வரையில் தேசவரை கருடோத்ஸவ விசேஷம் தேவப்பெருமாளுக்கே. இவர் இரவில் நாகத்தின் மேல் சயனித்துக் கொள்கிறார். காலையானதும் எழுந்து விடுகிறார். பணிபதிசயனீயாத உத்தித: த்வம் ப்ரபாதே என்பது தேசிக ஸ்ரீஸூக்தி. இதற்கு மற்றொரு வகையிலும் பிரபாவத்தை சொல்லுகிறேன், கேண்மின்.

இருபத்துநான்கு என்ற எண்ணிக்கை இவ்வூரில் பல விஷயங்களில் உள்ளது. குடை இருபத்துநான்கு சாண் கொண்டது. வாணவெடிகள் இருபத்துநான்கு வகைகள். த்வஜஸ்தம்பத்தில் இருபத்துநான்கு அடுக்கடுக்காக போடப்படும் கவசங்கள் உள்ளன. அனந்த ஸரஸ்ஸில் இருபத்துநான்கு படிகள். கோவின் பிராகாரச் சுவர் இருபத்துநான்கு அடுக்குகள் கொண்டது. கோவிலின் கீழிலிருந்து திருமலைக்குச் சென்று எம்பெருமானை ஸேவிப்பதற்கு படிகள் உள்ளன. இவையும் இருபத்துநான்கே. இப்படி இருபத்துநான்கு எண்ணிக்கை

கொண்ட விசேஷம் இவ்வூரில்தான் உள்ளது. ஸ்ரீமத் ராமாயணம் இருபத்துநான்காயிரம் கிரந்தங்கள் கொண்டது என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. இதற்கு காரணம் இருபத்துநான்கு எழுத்துக்கள் கொண்ட காயத்ரியின் அர்த்தத்தை விவரிப்பதற்காக அந்த மகா காவியம் அவதரித்தபடியால் இருபத்துநான்காயிரம் கிரந்தங்கள் கொண்டதாக வால்மீகி பகவான் அருளிச்செய்தார். அவ்வாறே அந்த மகா காவியத்தின் பிரதான அர்த்தமான பகவானை அறிந்துகொள்வதற்கு இருபத்துநான்கு எண்ணிக்கை கொண்ட விசேஷங்கள் இந்த ஆலயத்தில் ஏற்பட்டிருக்கின்றன. 'காயத்ரியில் ப்ரதான ப்ரதிபாத்யமான அர்த்தம், ஸ்ரீராமாயணத்தில் ப்ரதான ப்ரதிபாத்யமான அர்த்தம் தேவப் பெருமாளே' என்பதை அறிவிக்கவே இந்த ஆலயத்தில் இந்த விசேஷம் என்று எல்லாரும் சொல்லுவர். இப்படிச் சொல்வது ஒரு புறம் இருக்கட்டும்.

அப்பைய தீக்ஷிதர் என்ற மகான் இந்த விசேஷத்தின் பெருமையை ரஸகனமாக அருளிச்செய்திருக்கிறார். இவர் அத்வைத மதத்தைச் சேர்ந்தவர்; ஆயினும் ஸ்ரீஸ்வாமி தேசிகனிடத்தில் மிக்க பக்தி பெற்றவர். ஸ்ரீதேசிகனின் பெருமையை நன்கறிந்து, அவர் இயற்றிய யாதவாப்யுதயம் என்ற மகா காவியத்திற்கு வியாக்கியானம் செய்தவர். 'ஸ்ரீமத்வேங்கட நாதஸ்ய காவ்யேஷு லலிதேஷ்வபி । பாவா: ஸந்தி பதேபதே' என்று ஸ்வாமியின் காவியத்தைப் பலவாறு போற்றியவர். திருமலைக்குப் போகும்போது அமைந்துள்ள இருபத்துநான்கு படிகள் விஷயமாக இந்த அப்பைய தீக்ஷிதர் இயற்றிய சுலோகத்தை இங்கே குறிப்போம் -

> ஸம்ஸாரவாரிநிதிஸந்தரணைக போத -
> ஸோ பாநமார்க சதுருத்தரவிம்சதிர் யா ।
> தாமேவ தத்வவிதிதம் விபுதோதிலங்க்ய
> பச்யந் பவந்த முபயாதி கரீச நூநம் ।।

வேதாந்த சாஸ்திரத்தில் இருபத்துநான்கு தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், ப்ருத்வி, கர்மேந்திரியம் ஐந்து, ஜ்ஞாநேந்திரியம் ஐந்து, பஞ்ச தந்மாத்ரைகள், மனம் ஆக இவையெல்லாம் அசேதனத்தின் பிரிவுகள், சேதனன் என்பவன் ஜீவன், இவை எல்லாவற்றிற்னும் மேற்பட்டவன் பரமசேதனன் பரமாத்மா. தன்னையும் அசேதனமான இருபத்துநான்கு தத்துவங்களையும் நன்கு அறிந்தவன்தான் சுலபமாகப் பரமாத்மாவை உணரவும் அடையவும் முடியும். அசேதனமான இந்தப் பொருள்களை அறிந்துகொள்வது, 'அவை தோஷத்தோடு கூடியவை' என்று அறிந்து விடுவதற்காக. இப்படி அறிந்தவன்தான் ஸம்ஸார ஸாகரத்திலிருந்து விடுபட்டுப் பரமாத்மாவை அடைவான். இந்த அசேதனம் இருபத்துநான்கு வகையாக இருக்கிறபடியால் இவை இருபத்துநான்கு படிகளாகின்றன. 'ஸம்ஸார ஸாகரத்தை தாண்டுவதற்கு, சேதனனான இவன் தான் இருபத்துநான்கு படிகளை ஏறி வைகுண்ட லோகம் போல் உள்ள அத்திகிரியில் இருக்கும் தேவாதிராஜனான பேரருளாளனை ஸேவிப்பது மோக்ஷத்தை அடைவது போல் ஆகிறது' என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இப்படி வேதாந்தத்தில் சொல்லக் கூடிய விசேஷ அர்த்தத்தைக் காட்டுவதற்காகவே கீழிருந்து மேலுள்ள பகவானை ஸேவிப்பதற்கு இருபத்துநான்கு படிகள் கட்டப்பட்டு அமைந்திருக்கின்றன போலும். இப்படிப பற்பல விசேஷங்களினால் காஞ்சி என்ற திவ்யதேசத்திற்கு ஸர்வ திவ்யதேங்களைக் காட்டிலும் வாசாமகோசரமான வைபவம் ஏற்பட்டுள்ளது.

நான்முகனே உத்தமமான இந்த திவ்ய தேசத்தில் அச்வமேத யாகம் செய்தான். அதில் இந்திரன் முதலான மந்திரங்களைச் சொல்லி யாகம் நடந்தது. இந்திராதிகளைச் சொல்லியும்

ஹவிர்பாகத்தைப் பெற வரவில்லை. ஏன் என்றால் இந்திரனைக் குறித்தா இவர் யாகம் செய்தது. பகவானைக் குறித்து அல்லவா. ஆனால் இந்த ஹவிர்பாக ரஸத்தை அவர்கள் நாக்கால் பருக வில்லை. பின் கண்ணால் பருகினார்கள். எம்பெருமான் பிரஹ்மாவினுடைய தவத்துக்கு வசப்பட்டு நேராக ஸேவை ஸாதித்தான். எல்லோரும் கண்டு ஆநந்தித்தனர் என்றார் ஸ்வாமி தேசிகன்.

இந்த வேள்வியை தடுக்க பிரமன் பத்நியான ஸர்ஸ்வதி வேகவதி நதியாக வந்தாள். அது ஸமயம் பகவான் யதோக்தகாரியாக அவளை வர வொட்டாமல் தடுத்தான். யாகம் நடந்தது பலமும் கிட்டியது. ஒரே பகவான் தன்னை இரண்டுப் பிரிவாகச் செய்து ஸேவை ஸாதித்தான். ஒன்று யதோக்தகாரி. இரண்டாவது தேவப் பெருமான். ஆக இவரே உபாயம். ப்ராப்யம் என்பதை தெரியப் படுத்தினார். ஸ்வாமி தேசிகன் இதை ஏகம் வேககதீமத்யே ஹஸ்திசை லேசத்குச்யதே. உபாயப்பலபாவேன் ஸ்வயம் வ்யக்தம் பரம்மஹ: என்றார்.

அப்பய தீக்ஷிதரின் வரதராஜ ஸ்தோத்திரத்தில் இன்னும் ஒருச்லோகத்தை பார்ப்போம். இவர் யாதவாப்யுதயம் என்னும் காப்பியத்துக்கு உரை எழுதினார் என்பது மாத்திரமில்லை. வ்யாஸஸூத்ரத்துக்கும் ராமாநுஜர் எழுதிய பாஷ்யத்தை அநுஸரித்து நயமயூகமாலிகா என்னும் நூல் எழுதியுள்ளார். அவரது மற்றொருச்லோகத்தின் கருத்தை எழுதிகிறோம். தேவாதிராஜனே நான் உன்னிடம் இரண்டு குற்றம் செய்துள்ளேன். அதை பொருத்துக்கொள்ள வேண்டும் என்கிறார். அதற்கு தேவப் பெருமாள் பலகுற்றங்கள் உள்ளனவே ஆக இரண்டே என்று எப்படி என்ன இது விசேஷ குற்றம் என்கிறார். முன் பிறவியில் நான் உன்னை வணங்காதது ஒன்று. அதெப்படி தெரியும் என்றார். இப்பொழுது அழுக்குடல் வந்ததைக் கொண்டே இதை அறியலாம் என்றார். மற்றொன்று இப்பொழுது உன்னை வணங்கியதால் அடுத்த பிறவி இல்லை. ஆக அப்பொழுது வணங்கப்ரஸக்தி இல்லையே. ஆக இந்த இரண்டையும் பொருத்துக் கொள் என்று ரஸகனமான பத்யம் பாடினார். அந்த ஸ்லோகம் இதோ -

வபூ: ப்ராது ர்வாவாத் அநுமிதம் இதம் ஜன்மநீ புரா முராரே ந க்வாபி க்வசிதபி பவந்தம் ப்ரணதவான் I நமன் முக்த: ஸ்ப்ரதி அதநு: அக்ரேபி அநதிமான் கரீச க்ஷந்தவ்யம் ததிதம் அபராத த்வயமபி II

*****

# 21. விச்வாமித்திர முனிவரின் பெருமை

விச்வாமித்திரர் முதலில் அரசராக இருந்து, வஸிஷ்ட முனிவரின் ஆச்ரமத்துக்குச் சென்று, அவர் செய்த உபசாரங்களைப் பெற்று, அவருடன் பின்பு விரோதத்தையடைந்து, பல திக்குகளில் வேள்வி தவம் முதலியவற்றைச் செய்து பிரம்மரிஷிப் பட்டத்தைப் பெற்றார் என்பது ஸ்ரீமத்ராமாயணத்தில் பாலகாண்டத்தில் சதானந்தர் வாயிலாகக் கூறப்பட்டுள்ளது. பிறகு அந்த வஸிஷ்ட மகரிஷியுடன் பெருநட்புப் பெற்று ஒருவருடன் ஒருவர் தோழர் ஆனார்கள் என்பது பிரசித்தமானது. இந்த முனிவருக்கு இப்படிப்பட்ட மகத்துவம் வந்ததற்குக் காரணம் வஸிஷ்ட மகரிஷியின் அருளே என்பதை, 'அசௌ வஸிஷ்டநிர்தேசாத் ப்ரஹ்மர்ஷித்வமவிந்தத I' என்று கவிகள் சொன்னார்கள். இப்படி வஸிஷ்டருடைய அநுக்ரகத்தினால் பிரம்மரிஷித்துவம் கிடைத்தது போலவே அந்த முனிவரின் அருளினாலேயே இவருக்கு லோகநாயகனான ராமபிரானைக் குறித்து ஆசார்யத்துவமும் ஏற்பட்டது. எல்லா விதத்திலும் மேன்மை பெற்று, உலகத்திற்குப் பிதாவாகவும் மாதாவாகவும் குருவாகவும் உள்ள பகவான், ஒருவனுக்குச்சிஷ்யனாக இருந்து கல்வி கற்றுக் கொள்வது. 'இன்னாருடைய சீடன் நான்' என்று சொல்வது முதலியவை சாதாரணமாகப் பொருந்தமாட்டா. எவ்வளவோ அளவற்ற புணணியங்கள் செய்து பாக்கியசாலியாக இருப்பவர்களைத்தான் பகவான் தனக்கு ஆசார்யன் என்று சொல்லுவான். வஸிஷ்ட மகரிஷி ஸுர்ய வம்சத்திற்கே குலகுருவாக இருந்து வந்தார்; அந்த வம்சத்தில் பிறந்த திலீபன், அஜன், தசரதன் முதலியவர்களுக்குக் குருவாக விளங்கினவர்; மகா புண்ணியசாலி. ஆகையால்தான் தசரதன் புதல்வனான ராமனுக்கும் ஆசார்யராக இருந்தார். 'வஸிஷ்டவ்யபதேசிந:' என்று, தன் குருவான வஸிஷ்டரைப் புகழ்ந்து பேசி, அவருடைய சிஷ்யன் நான்' என்று ராமன் கூறுகிறான். இதிலிருந்தே வஸிஷ்டர் மகாபாக்கியத்தைப் பெற்றவர் என்பது தெரிய வருகிறது,

ஸ்ரீராமன் பலை அதிபலை என்ற மந்த்ரங்களையும் பலவிதமான அஸ்த்ரங்களையும் விச்வாமித்திரரிடம் பெற்று, அவரது யாகத்தையும் பூர்த்தி செய்து வைத்து, ஆசார்யருக்குச் சிஷ்யனின் கடமைகள் என்னவோ அவற்றைச் செய்து ஆசார்யரைத் திருப்தராகும்படி செய்து வைத்தார். அவரது வேள்வியைப் பூர்த்திசெய்து வைத்தது குருதக்ஷிணையாக முடிந்தது. பிறகும், 'இமௌ ஸ்ம முநிசார்தூல கிங்கரௌ ஸமுபஸ்த்திதௌ I ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாம தே II' என்று, "தேவரீரடைய சீடர்கள் நாங்கள். மேலும், தேவரீர் உத்தரவுப் படி ஏவல்தேவைகளைச் செய்யக் காத்திருக்கிறோம். நியமனத்தை எதிர்பார்க்கிறோம்" என்று விச்வாமித்திர மகரிஷியிடம் ராம லக்ஷ்மணர்கள் கூறுகின்றனர் என்றால் விச்வாமித்திரரின் பெருமை வாசாமமோசரம் என்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. இப்படி ஸர்வேச்வரனுக்கு ஆசார்யனாக இருக்கும் தன்மை இந்த முனிவருக்கு வஸிஷ்டருக்குப் போல் கிடைத்தது என்றால் இது எவ்வளவு பெருமையைக் கொடுக்கிறது! இதற்கெல்லாம் வஸிஷ்டரின் அநுக்கிரகமே காரணம். இவ்விஷயத்தில் பெரியோர் கூறும் ஒரு புராணக் கதையை வரைகிறேன்.

வஸிஷ்ட முனிவரும் விச்வாமித்திர முனிவரும் மிக்க நட்புடன் இருந்தார்கள். விச்வாமித்திரர் தாம் பல வேள்விகளையும் கடுந்தவத்தையும் புரிந்து, அநேக விதமான புண்ணியங்களைச் ஸம்பாதித்தார். ஒரு நாள், 'இப்படிப் பெரிய சிரமத்தைப் பாராட்டாமல் பெரும் புண்ணியத்தைச் ஸம்பாதித்தேன். இதனால் நமக்கு என்ன லாபம் கிடைக்கும்?' என்று யோசித்தார். இந்த புண்ணியங்கள் மூலமாக இகலோகத்தில் பெரிய மாடிவீட்டைக் கட்டிக்கொண்டு சுகமாக இல்வாழ்க்கை நடத்தலாம். சுவர்க்கலோகம் சென்று ரம்பை, ஊர்வசி முதலியவர்களுடைன்

சுகமாகப் போகத்தை அநுபவிக்கலாம். குபேரப் பட்டணத்தை ஆளலாம். இந்திரனுடைய பதவியையும் பெறலாம். அல்லது பிரம்மாவின் ஐச்வர்யத்தைப் பெற்று வாழலாம். எவ்வளவு வாழ்ந்தாலும் இந்த வாழ்வு எத்தனை நாள் இருக்கக்கூடும்? அநுபவிக்கும்போதும் பல துன்பங்கள் ஏற்படும் கோடிக்கணக்கான யுகங்கள் ஸாக்ஷாத் மகாவிஷ்ணுவை ஆராதித்துப் பிரம்மப் பட்டத்தை அடைந்த பிரம்மாவிற்கும் மதுகைடபர் மூலமாக வேத அபஹாரம் ஏற்பட்டுக் கஷ்டம் உண்டாயிற்று. தேவேந்திரனும் தன் ராஜ்யத்தை இழந்து பலவிதத் துன்பங்களுக்கு ஆளானான். இப்படிப் பலவிதமான துயரங்களுக்கு இருப்பிடமான இந்தச் செல்வம் நமக்கு வேண்டாம். பரமானந்தம் என்று சொல்லப்படும் பிரம்மானந்தத்தில் மட்டும்தான் எவ்விதத் துயரமும் கிடையாது. அதைத்தான் பெற்று அநுபவிக்க வேண்டும் என்று மோக்ஷத்தில் அவா ஏற்பட்டது.

ஆகவே, மற்றப் பயன்களில் அவருக்கு ஆசை குறைந்துவிட்டது. திராட்சைப் பழங்களின் சுவையைப் பருக ஆசைப் பட்டவன் புளியம்பழத்தை நுகர ஆசைப்படுவானா? ஆகையால் மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற விருப்பம் உள்ளவராக, அதற்குத் தடங்கலான இகபரலோகத்தில் சுகத்தைக் கொடுக்கக் கூடிய புண்ணியங்களை அயலாருக்கு விநியோகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பெற்றார். அதற்காக, தாம் செய்த புண்ணியங்களை விருப்பம் உள்ளவர் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று பறைசாற்றினார். கோயில்களில் உயர்ந்த பதார்த்தங்களை விநியோகம் செய்யப்போவதாகக் கேட்டால் ஜனங்கள் திரள்திரளாக எப்படி வருவார்களோ அது போல விச்வாமித்திரருடைய வார்த்தையைக் கேட்டதும் ரிஷிகள் திரண்டு ஓடி வந்தனர். முனிவர் அவர் அவர்களுக்கு தகுந்தவறும் விரும்பியவாறும் தமது எல்லாப் புண்ணியங்களையும் கொடுத்துச் செலவு செய்தார். இவ்விஷயத்தைக் கேள்வியுற்ற வஸிஷ்ட மகரிஷி கடைசிச் சமயத்தில் விச்வாமிததிரரிடம் வந்து சேர்ந்தார். கௌசிகரான இவர் வஸிஷ்டருக்கு எதைக் கொடுப்பது என்று யோசித்தார்.

'எல்லாப் புண்ணியங்களையும் அனைவருக்கும் கொடுத்துவிட்டேனே. இந்த முனிவருக்கு எதைக் கொடுப்பது?' என்று தீர்க்க காலம் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். கடைசியில் தீர்மானம் செய்தார். 'முப்பத்திரண்டு ஆயிர வருஷகாலம் கடுந்தவம் செய்திருக்கிறேன். இதை யாருக்கும் கொடுக்க வேண்டாம் என்று நினைத்தேன். வஸிஷ்டரோ என் மிக்க நட்புக்கு உரியவர். எதையும் கொடுக்காமல் இவரை அனுப்புவது நியாயமல்ல' என்று எண்ணி, வஸிஷ்டரைக் கூப்பிட்டு, அர்க்யம் பாத்யம் முதலியவற்றை அவருக்குக் கொடுத்து உபசரித்து, நீண்ட காலம் தாம் செய்த தவப் புணணியத்தை அவருக்குக் கொடுத்துவிட்டார். வஸிஷ்டர் அதைப் பெற்றுக் கொண்டு தமது இல்லம் அடைந்தார். இப்படி விச்வாமித்திரர் தமது புண்ணியபலன் அனைத்தையும் அயலாருக்குக் கொடுக்க வேண்டும் என்ற பெருவேள்வியை முடித்துவிட்டார்.

சில காலம் சென்றது. வஸிஷ்டர் தமது ஆசிரமத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு நாள் தீர்க்க ஆலோசனையில் ஆழ்ந்தார். 'நம்முடன் பகைமைப்பட்டு, நம் மூலமாகப் பிரம்மரிஷிப் பட்டத்தையும் பெற்றுப் புகழ்பெற்று விளங்கினவர் விச்வாமித்திரர். அவர் விரக்த அக்ரேஸரராய் மோக்ஷத்தை அடைய விரும்பிப் பரமாத்மாவினிடம் லயித்திருக்கிறார். நாமும் அம்மாதிரி ஆக வேண்டும்' என்று அவர் ஆவல் கொண்டார். அதனால் தாம் செய்த புண்ணியமனைத்தையும் அயலாருக்குக் கொடுக்க விரும்பி, அனைவரையும் அழைத்தார். விச்வாமித்திரருக்கும் சீடர் மூலமாகச் சொல்லியனுப்பினார். தேவதைகளும் மற்றுமுள்ள ரிஷிகளும் வந்து வஸிஷ்டரிடமிருந்து புண்ணியங்களைப் பெற்றுச் சென்றனர். விச்வாமித்திர முனிவர் தாம்

எல்லாப் புண்ணியங்களையும் அயலாருக்குக் கொடுத்து எதிலும் விருப்பமில்லாதவராக இருந்தபடியால், முதலில் போக விருப்பமற்றவராகவே இருந்தார். ஆயினும் வஸிஷ்டர் சீடர்மூலமாகச் சொல்லி அனுப்பினபடியால், 'சென்றுதான் பார்ப்போம்' என்று எண்ணி, வஸிஷ்டரின் ஆசிரமத்திற்குச் சென்றார்.

இவர் செல்வதற்கு முன்னமே எல்லாப் புண்ணியங்களையும் விநியோகப்படுத்திவிட்டார் வஸிஷ்டர். ஆனாலும், ஸ்வர்க்கலோகத்தில் ஸகல முனிவர்களுடன் ஏழரை நாழிகை ஒன்று கூடி ஸத்ஸங்கம் மூலமாக விசாரத்தைச் செய்திருந்தார். அந்தப் புண்ணியம் ஒன்றுதான் வஸிஷ்டரிடம் இருந்தது. அதில் நான்கில் ஓர் அம்சத்தை விச்வாமித்திரருக்குக் கொடுக்க ஆவல் கொண்டார் வஸிஷ்டர். இதைப் கேட்டு, "இது அப்படி உயர்ந்த புண்ணியத்தில் சேர்ந்ததல்ல; இதை நான் விரும்பவில்லை" என்றார் விச்வாமித்திரர்.

பல மகரிஷிகளும் இதை உயர்ந்த புண்ணியத்தில் சேர்க்க ஒப்புக்கொள்ளவில்லை. வஸிஷ்ட முனிவரின் ஆசிரமத்திற்குப் பலதேவதைகளும் மகரிஷிகளும் வந்திருந்தபோதிலும் இவரது புண்ணியத்தில் ஓர் அம்சத்தைப் பெற திக்கஜங்கள், அகஸ்தியர், ஆதிசேஷன், சூரியன் ஆகியோர் மாத்திரம் வராமல் இருந்தனர். அவர்களுக்குத் தங்கள் தங்கள் வேலைகள் இருந்தபடியால் அவற்றை விட்டு வர முடியாமற் போயிற்று. அவர்களைக் கூப்பிட்டு, 'ஸத்ஸங்கம் மூலமாகச் செய்த பிரம்மவிசாரம் உயர்ந்த புண்ணியத்தில் சேருமா சேராதா?" என்று கேட்கலாம் என்று பார்த்தால், அவர்கள் வரச் சம்மதிக்கவில்லை. வஸிஷ்ட முனிவர் தாமே அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று, தமது கீழ்க்கூறிய புண்ணியத்தில் நாலில் ஒரு பங்கைக் கொடுத்து, அவர்கள் செய்யும் வேலையை இந்தப் புண்ணியத்தின் மூலமாக நடத்த ஏற்பாடு செய்து, அவர்களைத் தம் ஆசிரமத்துக்கு அழைத்து வந்தார். அந்தப் புண்ணியத்தின் பெருமையினால் சூரியன் இல்லாமலே கதிரவன் வேலை நடந்தது. நான்கு யானைகள் இங்கு வந்தபோதிலும் உலகம் ஒருவித அசைவுமின்றி அப்படியே நின்றது. ஆதிசேஷன் இங்கு வந்துவிட்டாலும் பூமி கம்பமின்றியே இருந்தது. அகஸ்தியர் இவ்விடம் இருந்தபோதிலும் விந்தியமலை உயராமலே இருந்தது. இதைக் கண்ட அனைவரும் வியப்படைந்தனர்.

'இது உயர்ந்த புண்ணியம்' என்பதை அறிந்த கௌசிகர் ஓர் அம்சத்தைப் பெற்றுத் தம் ஆசிரமத்துக்கு வந்தார். வந்ததும் அங்கே தர்மதேவதையைக் கண்டார். தர்மதேவதை, "நீர் முப்பத்திரண்டு ஆயிர வருஷகாலம் செய்த தவப்பயனை வஸிஷ்டருக்குக் கொடுத்தீர். அந்தத் தவத்தின் பலனாக, ஸவர்க்க லோகத்தில் ஸத்ஸங்கம் மூலமாக வஸிஷ்டர் பிரம்ம விசாரத்தைச் செய்தார். அதில் நான்கில் ஒரு பங்கை நீர் பெற்றபடியால் ஸ்ரீமந்தாராயணனே உம்முடைய திருவடிகளில் விழுந்து சிஷ்யவிருத்தியைச் செய்யப் பொகிறான். நாலில் ஓர் அம்சத்தை அகஸ்தியர், சூரியன் முதலியவர்களுக்குக் கொடுத்து அவர்களின் காரியங்களைச் செய்துவிட்டமையால் அந்த நான்கில் மற்றோர் அம்சம் கழிந்துவிட்டது. அரை பாகம் அவருக்கு அப்படியே இருக்கிறது, அதனால் பகவான் அதிகமாக சிஷ்ய விருத்தியை அவருக்குச் செய்யப்போகிறார்" என்று சொன்னது. இதைக் கேட்ட கௌசிகர் மிக்க விஸ்மயமடைந்து புன்னகை செய்து கொண்டார்.

இந்த விஷயத்தை ஸர்வஜ்ஞரான வஸிஷ்ட பகவான் நன்கு உணர்ந்தவரானபடியால், கௌசிகர் தசரத சக்கரவர்த்தியிடம் வந்து தமது யாகத்தை இடையூறின்றிச் செய்துவைக்க ஸ்ரீராமனைப் பிரார்த்தித்தபோது, கொடுக்க மாட்டேன் என்று சொன்ன தசரதனைப் பார்த்து,

ஸ்வதர்மம் ப்ரதிபத்யஸ்வ நாதர்மம் வோடுமர்ஹஸி ।
ஸம்ச்ருத்யைவம் கரிஷ்யாமீத்யகுர்வாணஸ்ய ராகவ ॥
இஷ்டாபூர்த்தவதோ பூயாத் தஸ்மாத் ராமம் விஸர்ஜய ।
தவ புத்ரஹிதார்த்தாய த்வாமுபேத்யாபியாசதே ॥ பாலகாண்டம் (21)

என்று பல காரணங்களைச் சொல்லி, ராமனை அனுப்பும்படி செய்து வைத்தார். ஆகவே, விச்வாமித்திரர் இராமபிரானைச் சீடனாகப் பெற்றது, முதலில் தம்மிடமிருந்து முப்பத்திரண்டு ஆயிர வருஷகாலம் செய்த புண்ணியத்தைப் பெற்ற வஸிஷ்டருடைய அநுக்ரகத்தினால் விளைந்ததுதான்.

இதனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. ஒரு சீடனுக்கு உயர்ந்த ஆசார்ய சம்பந்தம் ஏற்படுவதும் ஓர் ஆசார்யனுக்கு உன்னத சிஷ்ய சம்மதம் ஏற்படுவதும் அதிக புண்ய பயனாக இருக்கும் என்பது. பீஷ்மாசாரியர் பரசுராமனிடம் தனுர் வித்தையை கற்றுக் கொண்டார். அவர் சிஷ்யன் பீஷ்மன். பரசுராமன் ஆசார்யரானார். "சிஷ்யாத் இச்சேத் பராஜயம்" என்ற வகையில், சிஷ்யரான பீஷ்மர் பரசுராமனையும் வென்றார் என்றால் பீஷ்மருடைய ப்ரபாவம் எவ்வளவு என்பதை பார்க்க வேண்டும். அம்பா, அம்பாலிகா விஷயமாக விவாஹம் நடந்தபோது நான் மணந்து கொள்ளமாட்டேன் என்று சொன்ன பீஷ்மரிடம் சொல்லி மணக்கச் செய்கிறேன் என்று சொன்ன பரசுராமர் போரில் தோற்றார். த்ரோனாச்சார்ய பீஷ்மர்களும் தன் சிஷ்யனான அர்ஜுனனிடம் தோல்வி அடைந்தனர். சீடனிடம் தோல்வி அடைந்தாலும் குணம் என்றெண்ணி பூர்ணமாக வித்தையை இவர்கள் கற்றுக் கொடுத்தனர். த்ரோணர் தன் புத்ரனான அஸ்வத்தாமாவுக்கு சொல்லிக் கொடுக்காத விஷயங்களை சீடன் அர்ஜுனனுக்கு பயிற்சி செய்து வைத்தார். ப்ரஹ்மாஸ்தரத்ததை திரும்பி பெற்றுக் கொள்ளும் வகையில் அர்ஜுனனை தயார் செய்தார். அஸ்வத்தாமாவுக்கு இவ்விஷயத்தை கற்பித்துக் கொடுக்கவில்லை. இதனால் அர்ஜுனனிடம் உள்ள மதிப்பு தன் குமாரனிடம் இல்லை என்பது ஸ்பஷ்டம்.

ஸாந்திபினியிடம் சிஷ்யனாக பகவான் க்ருஷ்ணன் அமைந்தான் என்றால் இவருடைய அத்ருஷ்டம் மஹாத்தானது. இதன் மூலம் இறந்த ஆசார்யன் குமாரனையும் யமலோகம் சென்று மீட்டுக் கொடுத்தார். இப்படியல்லவோ சீடன் இருக்கவேண்டும். நம் ராமானுஜனுக்கு கூரத்தாழ்வார் முதலியாண்டான் சிஷ்யர்களாக அமைந்தனர். இது ராமானுஜன் அத்ருஷ்டம். அதின் இஷ்டம் அத்ருஷ்டம். "ராமானுஜார் யவசக: பரிவர்திஷீய' என்று ராமாநுஜ ஆசார்யனின் இஷ்டப்படி தாம் நடந்துகொள்வதாக கூரத்தாழ்வான் சொன்னார்.

எந்த ராமாநுஜமுனியின் திருவடி திருமுடி ஸம்பந்தத்தால் மனிதனுக்கு பரமபதம் கிட்டுமோ அந்த உடையவர் தனது முக்தியை கூராத்தாழ்வார் சம்மந்தத்தால் ஏற்பட்டது என்று தனது வசனத்தாலேயே சொல்கிறார் என்றால் ஆழ்வான் பெருமை வாசாம கோசரம் என்பதில் என்ன ஸந்தேஹம்?

இக்காலத்தில் ஆசார்யனும் உள்ளனர். சீடர்களும் உள்ளனர். என்ன லாபம்? சிஷ்யன் ஸத்கதியை அடைய ஆசார்யனோ உபதேசிப்பதில்லை. இவனும் சத்விஷயத்தின்படி நடப்பதில்லை. ஸங்கேத மாத்திரம் தான். புகழ் வந்தால் போதும் என்பதில் கண். இப்படிப்பட்ட சிஷ்யர்கள் எத்தனை பேர் இருந்தால் என்ன? ஆசார்யன் என்ற பெயர் வந்தால் போதும் என்ற எண்ணம்தானே தவிர, அவன் உஜ்ஜீவிக்க வேண்டும் என்கிற எண்ணம் லவலேஸமும் இல்லை.

கால கதி இதுதான். பரமபதம் மோக்ஷம் என்பது உண்டு. பகவான் இருக்கிறான். தர்மம் தலைகாக்கும் என்பதை மறந்துதான் வேலை செய்கின்றனர்.

மதுர கவி நம்மாழ்வாரை ஆசார்யராகக் கொண்டவர். ஆசார்யரான நம்மாழ்வார் எந்த ரீதியில் தர்மத்தை அநுஷ்டித்துக் காட்டினார். அவரது பாசுரங்களைக் கொண்டே நன்கு அறியாலாம். "கண்ணினுன் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெரும் மாயன் என்னப்பனில்" என்று பகவானை மதிக்காமல் ஆழ்வானான ஆசார்யனை மதித்தார்? ஏன்? ஸம்ஸாரமானது காராக்ரஹம். அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன் என்றார் ஆழ்வார். மேலும் "திண்ணமழுந்தக் கட்டி பல செய்வினை வன் கயிற்றால் புண்ணை மறைய வரிந்து என்னைப் பாரவைத்தாய் புறமே" என்றும் சொன்னார். இதைத்தான் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன் என்று மதுரகவி சொன்னார். அதிலிருந்து சிஷ்யனை விடுதலை செய்ய விரும்புவன் ஆசார்யன். பகவானோ நம்மை ஸம்ஸாரத்தில் கர்ம பாசம் என்னும் கயிற்றினால் கட்டுண்ணுபடி செய்பவன். காராக்ரஹத்தில் தள்ளும் அவனை நாம் பூஜிப்பதா? அதிலிருந்து விடுதலை செய்பவனை பூஜிப்பதா? யோசித்துப் பாருங்கள். யசோதையால் கட்டமுடியவில்லை கண்ணனை. கண்ணன் பார்த்தான். என்னை உன்னால் கட்டமுடியாது. நானே கட்டு உண்ணுகிறேன் என்று அவள் தன்னை கட்டும்படி செய்துகொண்டான் என்பது பூர்வர்களின் உரை. அதைவிட ரஸகனமான உரை உண்டு. அது என்ன என்றால் நாம் செய்த பாப பாசத்தால் நம்மை கட்டுண்ணும்படி செய்பவன். ஆக ஸம்ஸார ஸாகரத்தில் தள்ளுபவன் எம்பெருமான். ஆசார்யனோ அவிழ்த்து விடுபவன். ஆக நாம் ஈச்வரனை விட ஆசார்யனை மதிக்க வேண்டும் என்கிறார். ஆசார்யர்களே பணத்தின் ஆசையால் ஸம்ஸார பாசத்தால் இங்கேயே இருக்கவேண்டும் இதை அவிழ்த்துக் கொள்ள கூடாது என்றும் எண்ணினால் அவர்கள் நம்மை எப்படி அவிழ்த்துவிடுவார்கள். அந்தோ. அவ்வளவு பணம் பந்து புத்ரன் முதலியவர்களிடம் பாசமாக இல்லாத ஆசார்ய சம்பந்தமும் விரக்தனான சிஷ்ய சம்பந்தமும் அத்ருஷ்டாயத்தம்.

*****

# 22. கடன்

ருணம் என்பதற்குக் கடன் என்று பொருள். ஏதாவதொரு குடும்பச் செலவு நிமித்தமாக ஒருவன் மற்றொருவனிடத்தில் பணத்தைக் கடனாகக் கேட்டு வாங்கிக்கொள்கிறான். கடன் கொடுத்தவனை 'உத்தமர்ணன்' என்றும், கடன் வாங்குபவனை 'அதமர்ணன்' என்றும் சொல்வது வழக்கம். எப்பொழுதுமே கடன் வாங்கிய அதமர்ணன் கீழ்பட்டவனே; வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காதவரையில் கடன்பட்டவன்தானே இவன்? கடன் வாங்கியும் திருப்பிக் கொடுக்காமலே காலத்தைச் சிலர் கழிப்பர். ஏமாற்றிவிடலாம் என்று இவர்கள் நினைப்பார்கள். இப்படி எத்தனையோ பேர் உள்ளனர். 'கேட்காத கடனும் பாராத பயிரும்' என்று சொல்வது உலக வழக்கம். கேட்டுக்கூடக் கொடுக்க இசைவில்லாதவர்கள் கேட்காமலிருந்தால் எப்படிக் கொடுப்பார்கள்? இப்படி அயலாரை ஏமாற்ற நினைக்கும் இவர்கள்தாம் கடைசியில் ஏமாற்றமடைகிறார்கள். ஏனென்றால், இந்த ஜன்மத்திலோ மறு ஜன்மத்திலோ ஒன்றுக்குப் பத்தாக வட்டிபோட்டுப் பகவான் இவர்களிடமிருந்து ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு வசூல் செய்து கொடுத்துவிடுகிறான்.

ஒரு பிரபுவினிடத்தில் யாசிக்கப் பலர் செல்லுகின்றனரே. இவர்களில் சிலர் நிறையப் பணம் பெறுகின்றனர். சிலர் சிறிதளவுதான். மற்றும் சிலர் ஒன்றுமே பெறுவதில்லை. இதற்குக் காரணம் என்ன? முற்பிறவிகளில் இவர்களுடைய நடத்தையை அநுசரித்து இப்போது இவ்வாறு நேர்ந்தது என்றே சொல்ல வேண்டும். பிரபுவும் முற்பிறவியில் அவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்ற நினைக்கவில்லையானாலும் மற்றும் சில காரணங்களால் கொடுக்காமல் இருந்துவிட்டான். அந்தக் கடனை இப்பொழுது வேறு வியாஜத்தை முன்னிட்டு அடைத்து விடுகிறான். ஆகையால் கடன் வாங்கியதோ கொடுத்ததோ வீணாக ஆகமுடியாது. கடனைக் கொடுக்காமல் இறந்துவிட்டான் என்றும், ஏமாற்றிவிட்டான் என்றும் அபவாதம்தான் நிற்கும். ஆகையால்தான், 'யோர்த்தே சிசி: ஸ ஹி சிசி:, ந ம்ருத்வாரிஸுசி: ஸுசி: ' என்று தர்மசாஸ்திரம் கூறுகிறது. தன் உடலை சோப்புப் போட்டுத் தேய்த்து ஜலத்தில் குளித்ததனாலோ மண்ணைப் பூசித் தேய்த்து மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு தண்ணீரில் குளித்ததினாலோ ஒருவன் சுத்தன் ஆகமாட்டான்; வாங்கிய கடனைக் கொடுத்தால்தான் சுத்தனாவான் என்றது.

இவ்வாறு பணம் மூலமாகத்தான் கடன் வாங்குவது அடைப்பது என்பது மாத்திரம் இல்லை. ஒருவர் நமக்கு ஓர் உபகாரம் செய்தால் அதற்குத் தகுந்தாற்போல் பதிலுதவி செய்யாத வரையில் நாம் கடன்பட்டவர்தாம். பிரதியுபகாரம் செய்துதான் நம் கடனை நீக்கிக் கொள்ளவேண்டும். பகவானைத் துளஸீ புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சிக்கிறோம்; ஸஹஸ்ரநாமங்களைச் சொல்கிறோம்; பிரதக்ஷிணப் பிரணாமங்களைச் செய்கிறோம். இவற்றினால் பகவானும் நம்மிடம் கடன்பட்டவனே. இந்தக் கடனைத் தீர்க்க ஏதாவது வழிசெய்து கழித்து விடுவான். 'கோவிந்தா' என்று அன்று சொன்னதை நினைந்து நினைந்து உருகி, 'ருணம் ப்ரவ்ருத்தம்' என்று சொல்லி, 'அந்தக் கடன் மனத்தை விட்டு நீங்கவில்லை' என்று கதறினான் கிருஷ்ணன்.

ஒரு யஜமானனது இல்லத்தில் ஒருவன் வேலை செய்கிறான். சரீர சிரமத்தையும் பாராமல் ஓயாது உழைக்கிறான். சரீரம் தேய்ந்துவிடுகிறது. சம்பளமோ மிகவும் ஸ்வல்பம். பார்ப்பவர்கள் என்ன சொல்கிறார்கள்? "ஜன்மாந்தரத்தில் ஏதோ கடன் பட்டான்; அதனால்தான் உடம்பைத் தேயும்படி உழைத்துக் கடனை நீக்கிக் கொள்கிறான்" என்று.

கொடுத்து வைத்தால் கிடைக்கும் என்று சொல்லுகிறார்களே! இதுக்கு என்ன பொருள். போன பிறவியில் ஒருவனுக்குக் கொடுத்தால் அது கடன்தானே. இந்தப் பிறவியில் கடவுள் அதை தீர்த்துவைப்பார் என்பது.

பிறப்பைப் பெறும்போதே நாம் மூன்று கடன்களுடன் பிறக்கிறோம். ரிஷிகளிடத்திலும் தேவர்களிடத்திலும் பித்ருக்களிடத்திலும் கடன்பட்டிருக்கிறோம். உபநயனம் செய்து கொண்டு, குருகுலத்தில் வஸித்து, வேதத்தை அத்யயனம் செய்வதனால் ரிஷிகளின் கடனை அடைக்கிறோம். மணம்புரிந்து வேள்வி முதலிய சடங்குகளைச் செய்து தேவர்களின் கடனைத் தீர்க்கிறோம். ஸந்ததியை உண்டுபண்ணிப் பித்ருக் கடனைப் போக்குகிறோம், ஸ்ரீராமன் புத்திரனாகப் பிறந்த பிறகுதான் தசரத சக்ரவர்த்தியின் கடைசிக் கடனான பித்ருருணம் கழிந்தது என்று 'தசரத-சர மருண-விமோசன' என்று ரகு வீரகத்யத்தில் சொல்லப்பட்டது.

தீலிபன் புத்திர ஸந்ததியைப் பெற்ற பிறகு கடனிலிருந்து விடுபட்டான் என்பதைக் காளிதாஸன் மிகவும் சமத்காரமாகச் சொல்லுகிறான் -

ந ஸம்யதஸ் தஸ்ய பபூவ ரக்ஷிதுர்
விஸர்ஜயேத் யம் ஸுதஜந்மஹர்ஷித: ।
ருணாபிதாநாத் ஸ்வயமேவ கேவலம்
ததா பித்ரூணாம் முமுசே ஸ பந்தநாத் ॥ (ஸ்ரீரகுவம்சம் 3-20)

திலீபன் என்ற அரசன் ஸந்ததியில்லாமல் வருத்தமுற்றான். ஆசார்ய நியமனத்தை முன்னிட்டுக் காமதேனுவின் புதல்வியான நந்தினியை ஆயாஸத்தையும் பொருட்படுத்தாமல் பேணி வந்தான். அதன் பயனாகக் குழந்தை பிறந்தது. வெகு நாளாக மகப் பேறு இல்லாமல் இப்போது கிடைத்தபடியால் ஆனந்தத்துக்கு எல்லை சொல்ல முடியுமா? இப்படி அளவற்ற சந்தோஷ சமயத்தில் அரசர்கள் என்ன செய்வார்கள்? தப்புச்செயல்களைச் செய்து சிறையில் விலங்கிடப்பட்ட திருடர் முதலியவர்களைக் கட்டிலிருந்து விடுவிப்பார்கள். திலீபனோ அரசை நன்கு ஆண்டு வந்தான். அவனது ராஜ்யத்தில் சூதாடுபவர் இல்லை; மதுபானம் செய்பவர்களும் இல்லை; திருடர்களும் இல்லை; 'ந ஸ்வைரீ ஸ்வைரிணீ குத:?' என்றபடி ஜாரனும் தாஸியும் இல்லை. இவர்கள் இருந்தால்தானே சிறையில் இவர்களை அடைக்கவும் கட்டவும் முடியும்? கட்டியிருந்தால்தானே கட்டிலிருந்து அவிழ்த்துவிடமுடியும்? ஆகையால் அந்தச் சமயத்தில் ஒருவரையும் கட்டிலிருந்து அவிழ்த்துவிட முடியவில்லையாம். ஆனால் பித்ரு ருணம் என்ற கட்டிலிருந்து அவன் தானே அவிழ்த்து விடப்பட்டானாம். இப்படி அழகாகக் கவி வர்ணிக்கிறான்.

ஸ்வாயும்புவ மந்வந்தரத்தில் ஸுதபஸ் என்ற பிரஜாபதி இருந்தார். அவரது மனைவியின் பெயர் ப்ருச்நி. இவர்கள் இருவரும் பிரம்மா நியமித்த படைப்பு என்ற தொழிலை விட்டு பகவானை உத்தேசித்துக் கடுந்தவம் புரிந்தனர். பகவானைப் போல் புத்திரனையும் வேண்டிக்கொண்டனர். அவர்களுக்கு ப்ருச்நிகர்ப்பன் என்ற பெயருடன் பகவான் புதல்வனாகப் பிறந்தான். அதிதி ப்ரஜாபதி என்ற அவர்களுக்கே உபேந்திரனாகவும் பிறந்தான். அவர்களே தேவகி வஸுதேவர்களாகப் பிறந்ததும் கிருஷ்ணனாக அவதரித்து அவர்கள் வேண்டிக் கொண்ட வரம் என்ற கடனை அடைத்தான் பகவான்.

அஷ்ட வஸுக்களில் சிறந்தவர் த்ரோணர். அவரது மனைவியின் பெயர் தரை. இவர்கள் பகவானின் குழந்தைப் பருவத்து விளையாட்டுக்களை அநுபவித்து அதனால் பக்தியைப் பெற விரும்பினார்கள். அதற்காக அவர்கள் நந்தகோபாலனாகவும் யசோதையாகவும் பிறந்தபோது அந்தக் கடனை நீக்க ஆயர்பாடியில் சென்று தன் லீலாம்ருதஸரஸ்ஸில் அவர்களை மூழ்கச் செய்து மகிழ்வூட்டினான் கண்ணன். இப்படி ஓர் அவதாரத்திலேயே இரண்டு தம்பதிகளின் பிரார்த்தனையைப் பூர்த்திசெய்ய நினைத்து, ஒரு தம்பதிக்குக் குழந்தையாகப் பிறந்தான்; மற்றொரு தம்பதியினிடத்தில் தன் விளையாட்டைக் காட்டி மகிழ்வித்தான். இப்படிக் கடன் என்பது பணத்திலும் உண்டு; உபகாரத்திலும் உண்டு. பிறவியிலும் உண்டு; வரத்திலும் உண்டு. இவை தவிரப் புண்யபாபம் என்ற வினையிலும் உண்டு,

ஒருவன் மற்றொருவனுக்குத் தந்தையாகவும் தாயாகவும் மகனாகவும் வேறுவிதப் பந்துவாகவும் பிறப்பது அவரவர் செய்த வினையை அநுசரித்தது என்பதில் ஸந்தேகமில்லை. இதுவும் ஒரு விதமான கடனை நிவிருத்தி செய்வதற்காகவே. புத்திரன் முற்பிறவியில் ஒருவனிடத்தில் தான் செய்த நன்மை தீமைகளின் பயனை அடைவதற்குத் தானே அவனுக்குப் புதல்வனாகப் பிறக்கிறான்? பிறந்து அந்தக் கடனைத் தீர்த்துக்கொள்கிறான். இம்மாதிரியேதான் ஒவ்வொரு பந்துவும். இதைத்தான் சாஸ்திரம் கூறுகிறது -

ருணாநுபந் தரூபேண பசுபுத்ரஸுதாதய:।
ருணக்ஷயே நிவர்த்தந்தே கா தத்ர பரிதேவநா ॥

ஆகையால் நாம் ஒரு பிறவியில் ஒருவனுக்குத் தீமையோ நன்மையோ செய்திருந்தால் அடுத்த பிறவியில் அதற்குத் தகுந்தாற்போல் நமக்கு அவன் நன்மையையோ தீமையையோ செய்வான். இப்படிச் செய்து ஒருவருக்கு ஒருவர் கடனைத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

இதற்கு ஓர் உதாரணம் கேண்மின் -

ஓர் ஊரில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் பரம பாகவதர். சுத்தாத்மா; வேதம் அனைத்தையும் ஓதியவர்; பிறருக்கு மனத்தாலும் அபகாரம் செய்ய நினைக்கமாட்டார். காலை எழுந்ததுமுதல் படுக்கும்வரை நித்ய கர்மாநுஷ்டானத்தை தவறாமல் நடத்துபவர். காமம், கோபம், லோபம் முதலியவற்றை வென்றவர். அவர் ஒரு சமயம் திவ்யதேச எம்பெருமான்களை ஸேவித்து ஆனந்திக்க நினைத்தார். அதற்காக திவ்யதேச யாத்திரையாக சென்றார். பல திவ்யதேசங்களுக்குச் சென்று எம்பெருமானை தரிசித்து அகம் கரைந்து, கண்ணீர் மல்கி ஆனந்த சாகரத்தில் மூழ்கினார்.

கடைசியாக அவர் ஒரு திவ்யதேசத்திற்கு செல்ல விரும்பி பக்கத்திலுள்ள கிராமத்தில் தங்கினார். அவர் அந்த ஊருக்கு சென்றபோது மாலை நேரமாகிவிட்டது. சூரியன் அஸ்தமித்துவிட்டான். மெல்ல மெல்ல இருள் சூழ்ந்துவிட்டது. அந்த கிராமத்திலேயே அன்றிரவை கழிக்க நினைத்தார். அந்த ஊர் கோடியில் ஓர் இல்லத்தில் மந்தமாக ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இவரது மனம் அந்த இல்லத்தையே நோக்கியது. மெல்ல மெல்ல அந்த வீட்டை அடைந்தார். வீடு தாழிட்டு இருந்தது. கதவை பளீர் என்று தட்டினார். உள்ளிருந்து ஒரு பெண்மணி கதவை திறந்து மின்னல் கொடி போல காட்சி அளித்து, "நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்?" என்று கேட்டாள். இவர் தமது நிலமையைக் கூறி, "இரவு இங்கே தங்கி காலையில் போகலாம் என்று நினைக்கிறேன்," என்றார். இதைக் கேட்டதும் அவள் ஏற இறங்க இவரை பார்த்தாள். இவரது மேனி அழகையும் முக ஒளியையும் வாக்கின் மென்மையையும் கண்டு 'இவரை பர்த்தாவாகப்

பெற பாக்கியம் பெற்றிலோமே' என்று மனம் நொந்து, 'ஸ்வாமி, இரவை நீங்கள் இந்த வீட்டில் சுகமாக கழிக்கலாம். நான் கொடுக்கும் உணவையும் உண்ணவேண்டும்' என்று சொன்னாள். அவள் மனம் இவரித்தில் லயித்துவிட்டது. தன் பர்த்தாவையும் ஏமாற்றி இவரை இசைவித்து எங்காவது அழைத்துச் சென்றுவிடவேண்டும் என்று எண்ணினாள் அந்த கொடும்பாதகி.

கபடமற்ற மனம் உடைய இவர் புனித மனத்துடன் அவள் கொடுத்த ஆகாரத்தை உட்கொண்டார். வாசல் திண்ணையிலேயே 'நாராயணா' என்று சொல்லி அலுப்பால் உறங்கிவிட்டார். காட நித்திரையில் ஆழ்ந்தார். நடு நிசி. பெண்மணி தூக்கம் இல்லாமல், பர்த்தாவின் தூக்கத்தை எதிர்பார்த்துக்கொண்டே படுத்தாள். பர்த்தா நன்கு உறங்கிவிட்டான். இதுதான் சமயம் என்று எண்ணி, அவள் கதவைத் திறந்து, வாசற்பக்கம் தாழிட்ட பின்பு, தூங்குகிற அந்தணனைப் பார்த்தாள். 'என்ன அழகு!' என்று சொல்லிக் கொண்டே தன்னையும் அறியாமல் இவரை அணைத்துக்கொண்டாள். அந்தனர் திடுக்கிட்டு எழுந்து, "இது என்ன அநியாயம்! குலப்பெண்கள் செய்யும் காரியமா இது? கற்பை காற்பதல்லவோ தர்மம்? நான் பரதேசி பிராமணன். என்னை காதலிப்பது நீதியும் அன்று; உனக்கு லாபமும் இல்லை. தரும நெறி நழுவாமல் நடந்து வந்த துறவி போன்ற எனக்கு இது ஒரு பரீக்ஷையா?" என்று சொல்லி வெறுத்தார். இவர் எவ்வளவு சொல்லியும் அவள் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

"அம்மணி! உன் பர்த்தா உள்ளே உறங்கிக் கொண்டிருக்கிறார். அங்கே சென்று உன் காதல் வெறியைத் தணித்துக்கொள். இதுதான் நியாயம்" என்று சொன்னார். இதைக் கேட்டப் பெண்மணிக்கு அந்தணரிடம் காதலும் சினமும் கலந்து வெள்ளமிட்டு ஓடின. உடனே உட்பக்கம் சென்றாள். பெட்டியிலிருந்த கத்தியை எடுத்து தன் பர்த்தாவைக் கொன்றுவிட்டாள். அப்படியே வெளியில் வந்து "ஸ்வாமி என் பர்த்தா இறந்துவிட்டார். ஆகையால் நீர்தான் எனக்கு கதி. பர்த்தாவும் நீர்தான்" என்று சொல்லிக் கொண்டு பலாத்காரமாக கட்டிக் கொண்டாள். இவர் இந்த காட்சியைக் கண்டதும் 'இது எந்த விபத்தில் முடியுமோ!' என்று நடுங்கி அவளை திரஸ்கரித்துவிட்டு வாசலில் ஓட ஆரம்பித்துவிட்டார். பெண்களுக்கு புத்தி சாதுர்யம் அதிகம் அல்லவா? அவள் எண்ணம் நிறைவேறாமல் போகவே, காதல் மிக்க கோபமாக மாறியது. கத்தியை எடுத்துக் கொண்டு, "ஐயோ! ஐயோ!" என்று கூச்சலிட்டாள். ஜனங்கள் சேர்ந்துவிட்டனர். "மகா பாவி! இந்த அந்தணன் நேற்றிரவு என் வீட்டிலேயே சாப்பிட்டு என் பர்த்தாவையும் கொன்று, பலாத்காரமாக என் கற்பையும் அழிக்கிறான். இது என்ன அநியாயம்! உண்ட வீட்டிலேயே தீமையைச் செய்கிறான். என்னை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்" என்று கூச்சலிட்டாள். திரள் திரளாக கூடிய ஜனங்கள் அந்த பெண்ணின் வார்த்தையையே உண்மை என்று எண்ணி அந்தணரை ஒரே கட்டாக கட்டி அவ்வூர் அதிகாரியிடம் கொண்டு சேர்த்தனர். இம்மாதிரி நிலையில் பெண்களின் வாக்குத்தான் ஓங்கி நிற்கும் என்பதில் சந்தேகமில்லை. அதிகாரி, 'புருஷன் இப்படி செய்வது சகஜம்தான்' என்று சொல்லி, அவரது இருகைகளையும் கத்தியால் துண்டித்துவிட்டான்.

'தெய்வமே, இது என்ன அநியாயம்' என்று ஓலமிட்டுக் கொண்டு நீர் ததும்பிய கண்ணுடன் அவர் அவ்வூரைவிட்டு வெளியேறினார். என்ன செய்வார், பாவம்!. ஒரு பாவமும் அறியாதவர்; அவர் கதி இப்படியாகிவிட்டது. கிடைக்கும் உணவை சாப்பிட கைகள் இல்லாமல் போய்விட்டன. மன வருத்தமுற்று, தாம் குறிப்பிட்ட திவ்யதேசத்தை அடைந்தார். கோவில் வாசலில் பகவானை வாயார வாழ்த்தினார். பகவான் கருணைகொண்டு ஆகாச வாக்கு ரூபமாகச் சொன்னார் "வாசலில் நிற்கும் அந்தணனை சகல மறியாதைகளுடன் அழைத்துவந்து தீர்த்த பிரசாதங்களை கொடுத்து ஸேவை செய்து வைக்கவேண்டும்" என்று. இதைக் கேட்டதும் பரபரப்புடன் அர்ச்சகர்

பரிசாரர்களும் அதிகாரிகளும் பயத்துடனும் சிரத்தையுடனும் அந்தணரை வாத்ய கோஷம் முழங்க கர்ப கிருகத்திற்கு அழைத்துச் சென்றனர். 'இதுவும் ஒரு தெய்வச் செயல்தான்' என்று நினைத்து, அவர் ஸர்வேச்வரனை ஆபாத சூடம் அநுபவித்து ஆனந்த பாஷ்பம் பெருக்கிக் கொண்டு 'பகவனானே! உன் அற்புத லீலையை என்னவென்று சொல்வது? இன்று எனக்கு ஸேவை சாதிக்கஅருள் புரிந்த நீ நேற்று, 'இவன் கொலையாளி அல்ல; அந்த பெண்ணே கொலையைச் செய்து பழியை இவன் மேல் சுமத்தியிருக்கிறாள்' என்று சொல்லி என்னை நிரபராதி என்று காட்டியிருக்கக் கூடாதா? உன்னை புஷ்பங்கள் எடுத்து அர்ச்சிக்கக் கூட கைகள் இல்லையே! 'நாராயணா ஓ மணி வண்ணா' என்று கதறிய கஜேந்திரனுக்கு புஷ்பத்தை எடுத்துக்கொள்ள ஒரு கையாவது இருந்தது. உன்னை கண்டு வணங்குவதற்கும் கையில்லாத பாவியானேன்!" என்று உச்ச ஸ்வரத்தில் கூச்சலிட்டு அழுதார்.

அப்பொழுது ஆகாசவாக்கு உண்டாயிற்று - "வேதியரே, இவை எல்லாம் கர்மருணத்தின் செயல்கள். நீர் முற்பிறவியிலும் அந்தணராகவே பிறந்திருந்தீர். பொய் பேசாதவர்; அக்ருத்யத்தை மனத்தாலும் நினையாதவர். ஒரு சமயம் அந்தி வேளையில் குளக்கரையில் சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தீர். அப்போது ஒருவன் உம் எதிரில் கத்தியைத் தீட்டிக் கொண்டு வந்து, "இவ்வழியாக ஒரு பசு சென்றதா என்று கேட்டான்?". நீர், "இவ்வழியாகத்தான் சென்றது" என்று கைகளால் காட்டினீர். உடனே அவன் அவ்வழியே சென்று பசுவைக் கொன்றுவிட்டான். அந்தப் பசுதான் இப்பொழுது உம்முடைய கைகளைத் துண்டிக்க காரணமாக இருந்தப் பெண். அந்தப் பெண்ணின் புருஷன்தான் பசுவைக் கொன்றவன். தன்னைக் கொன்றது காரணமாகவே அந்தப் பசு பெண்ணாகப் பிறந்து அவனையே பர்த்தாவாக அடைந்து அவனைக் கொன்றது. இதுதான் உண்மை. இப்படி மறுபிறவியை அடைந்து ஒருவருக்கொருவர் கடன்களை நிவர்த்திசெய்து கொண்டீர்கள். ஆகையால் தெய்வம் இதில் என்ன செய்ய முடியும்? அவரவர் செய்த பாவ புண்ணியங்கள் கடனாக இருந்துகொண்டு, அவற்றுக்குத் தகுந்தாற்போல் பலனை கொடுக்கின்றன. இதைத்தான் 'ருணாநுபந்த ரூபேண பசுபுத்ரஸுதாதய:' என்பது" என்றது,

பிறகு அந்தணருக்கு பகவானின் அருளால் கைகள் முளைத்துவிட்டன. மனச்சாந்தியையும் பெற்றார். பகவானைத் துதித்தார். திவ்யதேச யாத்திரையை முடித்துக் கொண்டு தமது இல்லத்திற்கு திரும்பி வந்து சேர்ந்தார்.

எண்ணை வியாபாரி. அவன் தினமும் இரண்டு மாடுகளை செக்கில் பிணைத்து ஆடுபவன். அதில் கிழத்தால் மலிந்த மாடு ஒன்று. அதை செக்கில் கட்டி ஹிம்ஸிக்கிறான். ஐயோ! என்ன செய்வது. வருத்தம் அம்மாட்டுக்கு. அது நினைத்தது. முன் பிறவியில் இவனிடம் கடன் வாங்கி கொடுக்காமல் இருந்திருப்பேன். அதன் காரணமாக இவ்வாறு அழைக்க நேர்ந்திருக்கிறது என்று. இதே ஸமயம் (இந்த மாட்டின் பூர்வஜன்மத்தில் மனிதனாகப் பிறந்த ஸமயம்). இந்த செக்குக்காரனிடம் 200 ரூபாய் கடன் வாங்கி கொடுக்காமல் இருந்தபடியால் தன் தகப்பனார் மாடாகப் பிறந்து ஹிம்ஸையை அடைகிறது என்ற ஸ்வரம் மகனுக்கு உண்டாயிற்று. அக்கடனை நீக்கவேண்டும். அப்பொழுதுதான் ஹிம்ஸை ஏற்படாது என்று உடனே காலை எழுந்து மகன் இந்த செக்குக்காரனிடம் 200 கொடுத்தான் தன் தகப்பன் கடன் இது என்று சொல்லி. அவனும் அதைப் பெற்றுக் கொண்டான். அன்றிரவே இந்த முதிர்ந்த மாடு இறந்துவிட்டது. இதனால் உழைக்கவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை. ஹிம்ஸையும் இல்லை. ஆக எப்படியாவது கடனை தீர்க்க வேண்டும். தன்டனையைப் பற்றி நாம் விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இது எல்லோர் வீட்டிலும் ஒவ்வொரு விஷயத்திலும் உள்ளன. பையன் சொன்னதைக் கேட்காமல்

எந்த வேலையும் செய்யாமல் திரிந்து கொண்டிருந்தால் நாம் என்ன சொல்வோம். கடன் எத்தனை நாளைக்கோ என்றுதான் சொல்லுவோம். டாக்டரிடம் கணக்கில்லாமல் பணத்தைக் கொடுத்து குணமானாலும் குணமாகாமல் போனாலும் இதைத்தானே சொல்வோம். கடன் பட்டுள்ளது செலவு செய்துதானே ஆகவேண்டும் என்று வருத்தம் சொல்லுவோம். எதிர் பாராமல் ஒருவன் நமக்கு நிறைய பணத்தைக் கொடுத்தால் அவன் நம்மிடம் கடன்பட்டடிருக்கிறான் என்று சொல்வதுண்டு. முகமே தெரியாமல் நமக்கு ஒருவன் உபகாரம் செய்தால் இதைத்தானே சொல்லுவோம். லக்ஷக் கணக்கில் பணத்தைக் கட்டி இழந்துவிட்டால் முன் ஜன்மத்தில் அவனை நாம் ஏமாற்றினோம். இப்பொழுது அவன் நம்மை அழவைக்கிறான் என்போம். திருடன் கொள்ளையடித்த பணத்தை திருடினால் நாம் இதை இவனிடமோ மற்றவரிடமோ முன் பிறவியில் நடத்தினோம். ஆக இது நமக்கு ஏற்பட்டது என்று கஷ்டத்தை ஆற்றிக் கொள்வோம்.

ஒரு விஷயம் கேண்மின். கடன் கொடுத்தவன் வாங்கினவனிடம் கேட்பான். அவனும் சமயம் சொல்வான். அந்த சமயம் நாம் அவன் வீட்டு வாசலிலிருந்து கேட்போம். பதில் சரியானதாக ஏற்படவில்லை. பிறகு கொஞ்ச நாள் கழித்து அவன் வீட்டுத் தின்னையில் உட்கார்ந்து கேட்போம். அப்பொழுதும் வராது இருந்தால், அவன் வீட்டுக்கு உள்ளேயே படுத்துக் கொண்டு கொடுத்தால் போவேன் என்போம். நாம் கடன் பட்டபடியால் இதைத் தீர்த்துக்கொள்ள சில ஆலயங்களில் இன்று கேட்கிறோம். நாம் அடைவதில்லை. ஆக சில ஆலயங்களில் உட்கார்ந்து கேட்கிறான். அப்படியும் நாம் இசைவதில்லை. அதற்காக சில ஆலயங்களில் படுத்துக் கொண்டு கடனை வாங்கிக் கொள்கிறான். இந்த விஷயத்தைக் காட்டத்தான் மூன்று திருக் கோலத்தில் சேவை ஸாதிக்கிறான்.

இதை ஆழ்வார் நினைத்துதான்

> "நின்றது எந்தை ஊரஹத்து இருந்தது எந்தை பாடகத்து
> அன்று வெக்கினைக் கிடந்தது முன்னெல்லாம்
> அகின்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்
> நின்றதும் இருந்ததும கிடந்ததும் என் நெஞ்சுளே" என்றார்

எவன் எவன், எப்படி எப்படி, யார் யார் இடத்தில், எந்த எந்த வகை, எப்பொழுது எப்பொழுது, கடன் பட்டிருக்கிறானோ அவனவன் கடனை, அவனவனித்தில், எப்படி எப்படி தீர்க்கவேண்டும் என்பதை, அந்த அந்த சமயம் யோசித்து, தெய்வம் செய்கிறது. இதுதான் ஸாரம்.

*****

# 23. தர்மம் தலைகாக்கும்

தர்மம் அதர்மம் என்று இரண்டு உண்டு. தர்மம் செய்பவனை தர்மிஷ்டன் என்றும், அதர்மம் செய்பவனைப் பாவி என்றும் சொல்லுவார்கள். இதில் அதிகமாக தர்மத்தை செய்பவனை தர்மீஷ்டன் என்றும் அதிக பாபங்களை செய்பவனை பாபிஷ்டன் என்றும் சொல்ல வேண்டும் வ்யாகரண நூல்படி. கரிஷ்டன் மஹிஷ்டன் வசிஷ்டன் என்பதை கவனிக்கவும். சாஸ்திரங்களில் 'இதைச் செய்' என்று சொல்லப்பட்டு, நமக்கு இன்பங்களைக் கொடுப்பது தர்மம். 'இதைச் செய்ய வேண்டாம்; இதனால் தீங்குகள் விளையும்' என்று சொல்லப்படுவது அதர்மம்; தர்மத்தைச் செய்பவன் நியாயமான மார்க்கத்தில் செல்பவன். நியாய மார்க்கத்திலிருந்து நல்ல காரியங்களைச் செய்யும் தர்மிஷ்டன் என்றைக்கும் கஷ்டத்தை அடையமாட்டான். அவன் செய்யும் தர்மமே அவனைக் காக்கும். ஆகையால்தான் அக்ரமமான காரியங்களைச் செய்ய மகான்கள் இசையமாட்டார்கள்.

ஸ்ரீராமன் தான் அரசிழந்து காட்டிற்குச் சென்ற சமயத்தில் லக்ஷ்மணனைப் பார்த்துக் கூறுகிறான்: 'ந ஹீச்சேயம் அதர்மேண சக்ரத்வமபி துர்லபம்', 'அதர்மபயபீதஸ்ச நாத்மாநமபிஷேசயே' என்று. "லக்ஷ்மணா, நான் அதர்மத்திற்குப் பயப்படுகிறவன்; தப்புக் காரியங்களைச் செய்ய விரும்பாதவன். அயோத்தியில் முடிசூட்டிக் கொள்வது எனக்கு மிகவும் சூலபமானதே. ஆயினும் அதர்ம மார்க்கத்தில் அரசைப் பெற விருப்பமில்லை. அயோத்தி என்ன? தேவலோகத்திலிருந்து இந்திரபதவியை அடைந்து அரசு பெறவும் எனக்குச் சக்தி உண்டு. என் கோதண்டமும் பாணமும் எங்கே சென்றன? அநீதி மார்க்கத்தில் இருந்து பணம் சம்பாதிக்கக்கூடாது என்பதனால்தான் சும்மா இருக்கிறேன். தர்மத்தைக் கடைபிடித்து நாம் ரக்ஷித்தால் அது நம்மைக் காக்கும் என்றான்.

உலகத்திலும் அதர்மத்தை விரும்பாமலிருப்பதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. பரலோகத்தில் சென்று இன்பங்கள் நமக்கு இல்லாமற் போய்விடுமோ என்று பயந்து இவ்வுலகத்தில் அதர்மத்தைச் செய்ய மாட்டார்கள். அக்கிரமங்களைச் செய்தால் யமன் நம்மை அழைத்துச் சென்று தனது உலகத்தில் பல யாதனைகளுக்கு ஆளாக்குவான் என்ற பயத்தினால் தப்புக் காரியங்களைச் செய்ய மாட்டார்கள். நாம் தப்புச் செய்யும் போது உலகத்தவர் பார்த்துவிட்டால், 'ஐயோ! இவன் மகாபாவி; சாஸ்திரத்துக்கு முரணாக வேலைகளைச் செய்பவன்; எதற்கும் அஞ்சாதவன். இவனுடன் சேர்ந்தாலே நமக்கும் பாவம் உண்டாகும்' என்று பரிகசித்து நிந்திப்பார்கள் என்ற காரணத்தாலும் பாவங்களில் ஈடுபடமாட்டார்கள். இவ்வாறு இவனைப் பார்த்து அவனும் அவனைப்பார்த்து இவனும் என்ன சொல்வார்களோ என்று பயப்படுவார்கள்.

> பரலோகபயாத் கேசித், யமதண்டபயாத் பரே ।
> பரஸ்பரபயாத் கேசித் பாபம் நேச்சந்தி மாநவா: ॥

இந்த மூன்று காரணங்களைக் கொண்டு உலகத்து ஜனங்கள் அக்ரமமான வேலைகளைச் செய்யாதிருக்கின்றனர். இந்த மூன்று விதப் பயமுமற்று இஷ்டப்படி திரிந்து ஆடுமாடுகளைப் போல் நடக்கிறவர்களைப்பற்றி நாம் மனத்தினாலும் நினைக்கவேண்டாம்.

அதர்மத்துக்குப் பயந்து தர்மமார்க்கத்தில் செல்லுகிறவன் என்றைக்குமே கஷ்டப்படமாட்டான். அவனுக்கு தெய்வம் சகாயம் செய்யும். அளவற்ற சுகத்தைப் பெறுவான். இதைத் தான் நாம் இங்குக் கூற வந்தோம். தர்மமோ சக்ஷதி ரக்ஷித: என்பது நியாயம்.

ஓர் ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் நிறையப் பணமுள்ளவன். பணத்தைப் பிறருக்குக் கொடுத்து லேவாதேவி செய்பவன். பண ஆசை பிடித்தவன். இவன் கடன் கொடுக்கும் பொழுதே எழுநூறு ரூபாய் கொடுத்து ஆயிரம் ரூபாய்க்குப் பாண்டு எழுதி வாங்கிக் கொள்வான். 'நாமும் சுகப்பட வேண்டும்; ஜனங்களும் நம்மைப் போல் சுகமடைய வேண்டும்' என்ற எண்ணம் இவனுக்கு லவலேசமும் கிடையாது. தன் லாபத்திலேயே நோக்கமுள்ளவன்.

பெரும்பாலும் எல்லா வியாபாரிகளுக்குமே இந்த எண்ணம் உண்டு. பஸ் ஓட்டுகிறவன் ஜனங்களுடைய சௌகரியத்தை நோக்குகிறானா? ஆஸ்பத்திரி ஏற்பாடு செய்து வைத்தியம் செய்கிறவன் ஜனங்களுடைய க்ஷேமத்தையா எதிர்பார்க்கிறான்? இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வைத்தியம் செய்து கொண்டால் தனக்கு லாபம் வரும் என்றுதானே எதிர்பார்க்கிறான். கடை வைத்துள்ளவன் எல்லோருமே கடையை திறந்தவுடன் கல்பூரத்தால் ஆர்த்தி செய்து நிவேதனமும் செய்து கடவுளை வணங்குகிறான். ஏன். வியாபாரம் நன்றாக நடக்க வேண்டும் என்று. இவ்வாறே மருந்து ஷாப் வைப்பவனும் நடத்துகிறான், வியாபாரம் அதிகம் நடப்பதற்கு. இதனால் தெரிந்துகொள்கிறோம். எல்லோருக்கும் வியாதி வரவேண்டும் என்றுதானே அபேக்ஷிக்கிறான். ஜவுளிக்கடை, மளிகைக்கடை வைப்பவர்கள் தங்கள் நலத்தைத்தான் கவனிக்கிறார்களேயன்றி ஜனங்களுடைய க்ஷேமத்தை எதிர்பார்ப்பதில்லை. அதிகாரிகளும், 'ஜனங்களுக்குச் சேவை புரியவே நாம் ஏற்பட்டிருக்கிறோம்' என்பதை மறந்து, தங்களது லாபத்திலேயே நோக்கமுடையவர்களாக இருக்கின்றனர் என்பது சகஜமாகிவிட்டது. ஆயினும் இந்த லேவாதேவி செய்யும் வியாபாரி மிக்க பேராசை பிடித்தவன். நாலு ஐந்து வட்டிக்குக் குறையாமல் கடன் கொடுக்க மாட்டான். இவன் கெடு வைத்தபடி பணத்தை வசூல் செய்துவிடுவான்.

இவன் ஒரு சமயம் பலருக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டான். வெகு நாள் சென்றன. இந்தப் பணத்தை வசூல் செய்வதற்குக் குதிரைவண்டியில் ஏறிக்கொண்டு ஆங்காங்கே சென்றான். பணமும் வசூலாகிவிட்டது. ஒவ்வோர் இடத்திலும் அவரவர் கொடுத்த அசல் வட்டி எல்லாவற்றையும் தனித்தனியே பையில் போட்டுக் கட்டி எடுத்துக் கொண்டு வண்டியிலேறிக் கொண்டு ஊருக்குத் திரும்பினான். வரும்போது வழியில் ஒரு பணப்பை கீழே தவறி விழுந்துவிட்டது. வீட்டிற்கு வந்ததும் ஒவ்வொரு பையையும் கணக்கிட்டுப் பீரோவில் வைத்தான். அப்பொழுதுதான் தன்னிடமிருந்து ஒரு பை காணாமற்போனதை அறிந்தான்.

அப்பொழுது இரவு மணி பத்து. இனி என்ன செய்வான்? காலை விடிந்ததும் கவனித்துக்கொண்டே வண்டி வந்த வழீயாகப் பார்த்தான். கிடைக்கவில்லை. பணத்தில் அதிக ஆசை வைத்திருந்த இவனுக்குப் பணப்பை தொலைந்து போன படியால் தூக்கமும் இல்லை; நிம்மதியும் இல்லை. கவலை அதிகமாகிவிட்டது. எவ்வளவோ அதிகமான லாபத்தை இவன் அடைந்திருந்தபோதிலும் நஷ்டமான பணத்தைப்பற்றியே வருத்தம் அதிகமாக இருந்தது. இதை எப்படியாவது பெற வேண்டும் என்று எண்ணி ஒரு சூழ்ச்சி செய்தான். "என் பணப்பை வண்டியில் வரும்போது கீழே நழுவி விழுந்துவிட்டது. அந்தப் பையைப் பணத்துடன் யார் கொண்டுவந்து கொடுக்கிறார்களோ அவர்களுக்கு நூறு ரூபாய் இனாம் தருகிறேன்" என்று ஊரில் ஒவ்வொரு வீதியிலும் தண்டோரா அடித்தான்.

அந்த ஊரில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் நன்கு வேதமோதியவர்; தர்மநெறியை மீறாதவர்; நல்லொழுக்கமுடையவர்; தெய்வபக்தியுள்ளவர். அவர் பரம ஏழையாயினும் பிறர் பொருளை விரும்பாதவர். வழியில் ஏதாவது பணம் கிடைத்தாலும் அதைக் காஷ்டலோஷ்டத்துக்குச்

சமமாக நினைப்பவர். அவர் அன்றிரவு வரும்போது இந்தப் பணப்பையைக் கண்டார். வழியில் இதைக் கண்டதும் சொந்தக்காரனிடம் கொடுத்துவிட எண்ணி வீட்டுக்கு எடுத்து வந்தார். மனைவி மக்கள் எல்லாரும் இதைப் பார்த்து, "இதை யாரிடமும் சொல்ல வேண்டாம். நாமே எடுத்துக் கொள்ளலாம்" என்று பலவந்தம் செய்தார்கள். ஆயினும், 'இது பிறர் பொருள் ஆகையால் இதில் ஆசைவைக்கக்கூடாது' என்று எண்ணி, அவர் இதைச் சொந்தக்காரனிடம் கொடுத்துவிட வேண்டும் என்று ஒரே மனதாக இருந்தார். மறு நாள் வியாபாரி ஒவ்வொரு வீதியிலும் தண்டோராப் போட்டதைக் கேட்டதும், அவனிடத்தில் இந்தப் பையைக் கொடுத்து நூறு ரூபாய் பெற்றுக் கொள்ளலாம் என்று மனத்துள் மகிழ்ந்தார். உடனே கையை எடுத்துக் கொண்டு முன்சொன்ன வியாபாரியிடம் சென்றார். பணப்பையைக் கொடுத்தார்.

"நான் வெளியூரிலிருந்து வீட்டுக்கு வரும்போது வழியில் இந்தப் பை கிடைத்தது. இதைச் சொந்தக்காரரிடம் கொடுக்க வேண்டுமென்று எண்ணினேன். நீங்களும் தண்டோரா முறையில் பறைசாற்றினீர்கள். இதை உங்களிடம் கொடுத்தேன்" என்று சொன்னார்.

வியாபாரி நஷ்டதிரவிய லாபம் என்று மகிழ்ச்சியடைந்தான். பையை வாங்கி ரூபாயை எண்ணினான். அதில் அவன் வைத்திருந்த தொள்ளாயிரம் ரூபாய் இருந்தது. பிறகு, "அந்தணரே, நீர் போய்வாரும்" என்றான். இவர், "நூறு ரூபாய் கொடுப்பதாகப் பறைசாற்றினீர்களே; அதைக் கொடுங்கள்" என்றார். சூழ்ச்சி மூலமாகப் பணத்தைப் பெறத் தண்டோரா அடித்த வியாபாரி நூறு ரூபாயைக் கொடுக்க இசைவானா?

"அந்தணரே! இந்தப் பையில் ஆயிரம் ரூபாய் வைத்திருந்தேன். நீர் நூறு ரூபாயை எடுத்துக் கொண்டு மீதி தொள்ளாயிரம் ரூபாய்தானே வைத்திருக்கிறீர்? நூறு ரூபாயை எடுத்துக்கொண்டு மறுபடியும் ஏன் நூறு ரூபாயைக் கேட்கிறீர்? இவ்வளவு பேராசையா? அந்தணர் குலத்தில் பிறந்தும் இவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறீரே!" என்று திட்டி, அவரை வேலைக்காரன் மூலமாக அடித்து வெளியில் தள்ளித் தாழிட்டுவிட்டான்.

'தர்மநெறியில் தவறுதலின்றி நடந்த நமக்குமா இந்த கதி!' என்று எண்ணி வருத்தமுற்ற அந்தணர் தமது இல்லத்துக்கு வந்தார். அன்று இரவெல்லாம் ஒரே வேதனை: 'பணப்பையைப் பிரிக்காமல் அப்படியே கொடுத்திருந்தும் நூறு ரூபாயை நாம் எடுத்துக்கொண்டதாகப் பழியை நம்மேல் சுமத்தினானே!' என்ற கவலை இவருக்கு அதிகரித்தது. 'வியாபாரி இப்படி மோசம் செய்துவிட்டானே; இவனது கர்வத்தை அடக்கவேண்டும்' என்ற எண்ணமும் உண்டாயிற்று.

காலையில் எழுந்ததும் அந்தணர் ஊரிலுள்ள நியாயஸ்தலத்துக்குச் சென்றார். நடந்ததை அப்படியே கூறித் தமது மனக்கவலையை எடுத்துரைத்து நியாயம் வழங்க வேண்டுமென்று முறையிட்டார். நியாயாதிபதி, "நாளை வாரும்" என்று சொல்லி ஆலோசனையில் ஆழ்ந்தார். மறுநாள் காலை; நியாய ஸ்தலம். அந்தணரும் வியாபாரியும் வந்திருக்கின்றனர். பொது மக்கள் சூழ்ந்துகொண்டு இவ்விஷயத்தில் என்ன தீர்ப்பு நடக்கப் போகிறது என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நீதிபதி அந்தணரைக் கூப்பிட்டு, "உமது குறை என்ன?" என்று கேட்டார். அந்தணர் எழுந்திருந்து, "நியாயம் வழங்குபவரே! நான் வரும்போது வழியில் பணப்பை கிடைத்தது வாஸ்தவம். அதை உடையவனிடம் கொடுக்க வேண்டும் என்று நினைத்து எடுத்தேன். அதை நான் பிரித்தும் பார்க்கவில்லை. இந்த வியாபாரி பறைசாற்றியதைக் கேட்டு இவரே இதற்கு உடையவர் என்று எண்ணி இவரிடம் கொடுத்து, இவர் சொற்படி நூறு ரூபாயைக் கேட்டேன். இவர் கொடுக்கச் சம்மதிக்காமல் அபாண்டமான பழியை

என்மேல் சுமத்தி அடித்து விரட்டிவிட்டார். நான் பணத்தில் ஆசையுள்ளவனாக இருந்தால் பணப்பையையே ஏன் இவரிடம் காட்ட வேண்டும்? அப்படியே அதில் இருந்த அனைத்தையும் எடுத்துக்கொண்டிருக்கலாமே" என்றார்,

உடனே நீதிபதி வியாபாரியைக் கேட்டார். வியாபாரி எழுந்தான். "ஐயா, நான் இந்த ஊரில் ஒரு பெரிய வியாபாரி; எல்லாருடைய மதிப்புக்கும் உரியவன்; பெரிய பணக்காரன். அனைவரும் என்னை நன்கு அறிந்திருக்கின்றனர். பணத்தாசையால் அற்பமான செயலைச் செய்யமாட்டேன். என் பணப்பை தொலைந்தது வாஸ்தவம். 'அதைக் கொண்டு கொடுப்பவருக்கு நூறு ரூபாய் இனாம் தருகிறேன்' என்று சொன்னதும் வாஸ்தவம். என் கையில் ஆயிரம் ரூபாய் இருந்தது. இவர் கொடுத்த பையைப் பிரித்து இவரெதிரில்தான் எண்ணினேன். தொள்ளாயிரம்தான் இருந்தது. ஆகவே இவர் நூறு ரூபாய் எடுத்துக் கொண்டு பையைக் கொடுத்திருக்கிறார் என்பதில் சந்தேகமே இல்லை. அப்படியிருக்க மறுபடியும் எப்படி நூறு ரூபாயைக் கொடுக்க முடியும்? யோசித்து நீங்களே கூறுங்கள்" என்றான்,

நீதிபதி தீர்க்க ஆலோசனை செய்தார். பணத்தில் பேராசையை அடைந்த வியாபாரியின் தந்திரம் இது என்று உணர்ந்தார். அந்தப் பணப்பையை வாங்கித் தாமே எண்ணினார். தொள்ளாயிரமதான் இருந்தது.

"வியாபாரியே, நீரும் பொய் சொல்லமாட்டீர். அந்தணர் பணப்பையை மறைக்காமல் உம்மிடம் கொண்டுவந்து கொடுத்தபடியால் அவரும் பொய் சொல்லமாட்டார். உண்மையில் அவர் பணத்தில் ஆசையுள்ளவராக இருந்தால் ஏன் உம்மிடம் திருப்பித்தரவேண்டும்? ஆகையால் இந்த விஷயத்தில் எனக்கு ஒன்று தோன்றுகிறது. அதாவது ஆயிரம் ரூபாய் வைத்திருந்த பணப்பை உம்மிடமிருந்து தொலைந்து போனபடியால் தொள்ளாயிரம் ரூபாய் கொண்ட இந்த பை உம்முடையதன்று. இது வேறொருவருடையதுதான் என்பதில் சந்தேகமில்லை. ஆயிரம் ரூபாய் கொண்ட பையை உம்மிடம் யாராவது கொண்டுவந்து கொடுத்தால் அதைப் பெற்றுக் கொண்டு அவருக்கு நூறு ரூபாய் கோடுத்துவிடும். இதில் உமக்குச் சம்பந்தமில்லை. வீட்டுக்குச் செல்லலாம்" என்றார்.

அந்தணரைப் பார்த்த நீதிபதி, "இந்தப் பையில் தொள்ளாயிரமே இருக்கிறபடியால் இந்து ரூபாய் கொண்ட பை தொலைந்துவிட்டது என்று யாராவது சொன்னால் அவருக்கு இதைக் கொடும். அதுவரையில் நீரே வைத்துக் கொள்ளும்" என்று சொல்லி, அந்தணரிடம் பையைக் கொடுத்துவிட்டார். வியாபாரிக்கு ஒன்றும் சொல்ல முடியவில்லை. தலையில் கையை வைத்து வீட்டுக்குச் சென்றான். பேராசை பெருநஷ்டத்தில் முடிந்தது.

தர்மத்திலிருந்து வழுவாதிருந்த அந்தணருக்குப் பெரிய லாபம் கிடைத்தது. அவருடைய தர்மம் லாபத்தில் முடிந்து இன்பத்தை விளைவித்தது. அவர் பையைப் பெற்றுக் கொண்டு தமது இல்லத்துக்கு வந்து சுகமாக வாழ்ந்தார்.

மேலும் இராமாயணக்கதையைப் பாருங்கள். இந்திரஜித் மாயையினால் ஸீதா உருவைப் படைத்தான். தனது தேரில் அதை எல்லோரும் காணும்படி கத்தியால் வெட்டினான். அந்த மாயா ஸீதை - லக்ஷமணா, ராமா என்று கதறுகிறது. இவன் அந்த ஸீதையின் கூந்தலைப் பிடித்துக் கொண்டு சிரஸை அறுக்கப் போகும்போது ஹநுமான் முதலிய வானரங்கள் தடுத்தன. அப்பொழுதும் அவன் "எந்த ஸீதைக்காக லங்கையில் வந்து போர் செய்கிறீர்களோ, அவளது கதி

என்ன ஆயிற்று. உங்களுக்கும் இப்படித்தான் வதம் ஏற்படப் போகிறது" என்று பலாத்காரமாக சிரஸை அறுத்தான். இதை பார்த்த குரங்குகள் ராமனிடம் முறையிட ராமனும் மூர்ச்சையடைந்தான். அது ஸமயம் ராமனுக்கு பல உபதேசம் பித்ருவாக்ய பரிகாலனம் தர்மம் என்ன ஆயிற்று. அநர்த்தத்துக்குத்தானே காரணமாயிற்று. ஸீதையை அபஹரித்த ராவணனுக்கு தீங்கு என்ன ஏற்பட்டது? ஆக தர்மா தர்மங்கள் வீண். மேலும் ராஜ்யத்தை இழந்ததே அதர்மம். அதனால் அந்த ஸௌஹர்யம் இல்லை. பணமிருந்தால்தான் ஸ்நேஹிதன் பந்துக்கள் மற்றவை எல்லாம். தர்மம் செய்வதற்கும் பணம் தேவை என்றெல்லாம் உபதேசம் செய்தான். ஆனாலும் சோகம் எப்படி போகும். விபீஷணன் இந்த செயல் எல்லாம் மாயையால் செய்த செயல். தர்ம மார்க்கத்தில் உள்ள உங்களுக்கு ஒருவித தீங்கும் ஏற்படாது. பதிவ்ரதையான ஸீதை அவனால் எப்படி ஸ்பர்சிக்கமுடியும்? கவலை வேண்டாம். எப்பொழுதும் தர்மம் நம்மை காக்கும் என்று சொல்லி சமாதானப்படுத்தினான்.

இராமனும் இந்த்ரஜித்தினுடைய மாயைச் செயல்களை அறிந்து லக்ஷ்மணனுக்கு ஸமாதானம் சொல்ல, மேற்கொண்டு செய்ய வேண்டியதை செய்ய ஏற்பாடு செய்தான்.

மேலும் மாயையால் செய்யும் கார்யம் எவ்வளவு நாழிகை இருக்கும்? இந்திரஜால வித்தையை கற்றவன் எல்லோரும் அறியும்படி மாமரத்தையும் பழத்தையும் உண்டு பண்ணுகிறான். அதை புசிக்க முடியுமா? புசித்தால்தான் சிறிது நேரம் ஆனதும் வயிற்றில் மண்ணாகிவிடுகிறது.

ஒருவன் கேட்டான் மாயாவியைப்பார்த்து. இந்த ஜாலவித்தையை ஏன் வெளியில் காட்டுகிறாய். பணத்துக்காகத்தானே ? இதன் மூலம் நிறைய பணம் ஸம்பாதித்து மாடு, வீடு, பங்களா, நகை முதலியவைகளை செய்யலாமே என்று. அவன் சொன்ன பதில்: இம்மாதிரி மாயாவித்தையால் பணம் திரட்டி ரூபாயை கடையில் கொடுத்தால் சற்று நேரத்துக்கெல்லாம் அது மண்ணாகிவிடும். அவ்வப்போது மாயையினால் பணம் திரட்டி பங்களா கட்டினால் நேராக கட்டினாலும் 2-1/2 நாழிகைக்குத்தான் இருக்கும். பிறகு இடிந்து தலைமேல்தான் விழும். ஆக மிக உபத்ரவம் என்று சொன்னான். அது போலத்தான் இந்திரஜித்தின் செய்கை. இதனால் ஸ்ரீராமனுக்கு அவத்யம் ஒன்றுமில்லை. எப்படியும் தர்மம் தலை காக்கும்.

மற்றொரு விஷயம். ரஸமானது. பஞ்ச பாண்டவர்கள் காட்டில் வஸிக்கும்போது ஒரு பொய்கையில் தாஹத்தால் தண்ணீர் அருந்த எல்லோரும் மரண மடைந்தனர். யுதிஷ்ட்ரரும் தண்ணீர் அருந்தச் செல்லும்போது யக்ஷதேவதை நான் கேட்ட ப்ரச்னங்களுக்கு பதில் சொல். பிறகு சாப்பிடலாம் என்று சொல்லிற்று. பிறகு அதுவும் கேட்க இவரும் பதில் சொன்னார். இதற்கு யக்ஷப்ரச்னம் எனப் பெயர். ஸந்தோஷமடைந்த யக்ஷன் வரம் கொடுக்கிறேன் கேள் என்று சொல்லிற்று. இவரும், நகுலன் பிழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கு யக்ஷன் சொன்னதாவது. போர் நடக்கும் ஸமயம். இப்போது பீமனையோ அர்ஜுனனையோ பிழைக்க விரும்ப வேண்டும். அதை விட்டுவிட்டு நகுலன் பிழைக்க வேண்டும் என்று கேட்கிறாயே. இது ஆச்சர்யம் என்றது. அதற்கு விடை யுதிஷ்ட்ரர் சொன்னதாவது. தர்மம்தான் எனக்கு வேண்டும். என் தகப்பனாரான பாண்டுவிற்கு இரண்டு மனைவிகள். குந்தி என்றும் மாத்ரீ என்றும். அதில் குந்திக்குப் பிள்ளையாய் நான் ஜீவித்திருக்கிறேன். மாத்ரியின் பிள்ளை இருவரும் ஜீவிக்க வில்லை. ஆக அவளுக்கு மூத்த பிள்ளையான நகுலன் பிழைக்கவேண்டும் என்றுப் ப்ரார்த்தித்தேன் என்றார். அதைக் கேட்ட யக்ஷன் உன்னுடைய தர்மபுத்தியைப் பார்த்து ஸந்தோஷமடைந்தேன். நீ தர்மம் நழுவாதவன். ஆகையால் எல்லோரையும் பிழைக்கச் செய்கிறேன் என்று எல்லோருக்கும் ஜீவனம் கொடுத்தான்.

இங்குதான் நாம் கவனிக்க வேண்டும். தர்ம புத்திரருடைய செயலை. தர்மம் தலைகாக்கும் என்பது சரியாகிவிட்டதல்லவா? இங்கு பாரதச்லோகம். இவை

ச்யாமோ யஏஷ: ரக்த்தாக்ஷ: ப்ருஹச்சால இவோன்னத:
வ்யோமோரஸ்க: மஹா பாஹு: நகுலோ மம ஜீவது

யக்ஷன் ப்ரியஸ்தே பீமஸேனோயம் அர்ஜுநோ வ: பரோமத:
ஸகஸ்மாத் நகுலம் ராஜன் ஸாபத்னம் ஜீவமிச்சஸி

தர்மபுத்ர: தர்ம ஏவஹதோஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித:
தஸ்மாத்தரம் நத்ய ஜாமி மாநோ தர்மோசவநீத் ஸதா.

குந்தி சைவது மாதர்ச த்வே பார்யேது பிதா: மம
உபே ஸபுத்ரே ஸ்யாதாம்வை இதிமே தீயதே மதி:

யக்ஷன் தஸ்ய தே சந்தாச்ச காமாச்ச ஆந்ருசம்ஸ்யம் பரோ மா:
தஸ்மாத்ரே ப்ராதர: ஸர்வே ஜீவன்து பரதர்ஷப:

*****

# 24. இடுக்கண் களையும் இறைவன்

ச்ரிய: பதியான ஸர்வேச்வரனை எல்லா வேதங்களும் ஒரே மிடறாக ஸமஸ்த கல்யாண குணாகரன் என்று கூறுகின்றன. ஸ்ம்ருதிகளும் இதை அடியொற்றியே பகவானை உயர்நலம் அனைத்துக்கும் இருப்பிடம் என்று வலியுறுத்திக் கூறுகின்றன. இதிகாச புராணங்களிலும் இந்த அர்த்தத்தை நன்கு தெரிந்துகொள்ளலாம். ஆழ்வார்களும், 'வல்வினையேனை ஈர்கின்ற குணங்களையுடையாய்' என்றும், 'உயர்வற உயர் நலம் உடையவன்' என்றும், 'எண்பெருக்கந்நலத்து' என்றும் இந்தக் கல்யாண குணங்களில் ஆழங்காற்பட்டுப் பல பாசுரங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

'வசீ வதாந்ய:' என்று ஆரம்பித்து 'ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி:' என்று எம்பெருமானுடைய குணங்களைப் பற்றி பலவாறாவாக ஆளவந்தார் அநுபவித்து பேசியிருக்கிறார்.

எம்பெருமானாரும், 'ஸ்வாபாவிகாநவதிகாதிசயஜ்ஞாந' என்று ஆரம்பித்து, 'குணகணௌகமஹார்ணவ' என்று ஸர்வேச்வரனின் குணங்களை அடுக்காகக் கூறியுள்ளார். மேலும், 'ப்ரணதார்த்திஹர, ஆபத்ஸக' என்றும் கூறியுள்ளார். தன்னை அடைந்தவர்களின் துயரத்தை நீக்குகிறவன்; ஆபத்காலத்தில் தோழன் போல் இருந்து, துயரத்தை விலக்குகிறவன் என்ற இந்த இரண்டு குணங்களும் பகவானிடமுள்ள எல்லாக் குணங்களைக் காட்டிலும் மேம்பட்டவை, முக்கியமானவை என்று தெரியப் படுத்துவதற்காகவே இவை இரண்டையும் தனியாகக் கூறினார்.

உண்மையில் ஒரு பிரபு அழகாக இருக்கிறான்; இனிமையாகப் பேசுகிறான்: வள்ளலாக உள்ளான்; புத்திசாலியாகவும் இருக்கிறான்; எல்லாம் அறிந்து நன்கு வேலைகளையும் செய்கிறான். இப்படி இருந்தாலும் ஜனங்களிடத்தில் இரக்கத்தைக் காட்டி அவர்களின் துன்பத்தைத் தீர்க்காமல் இருந்துவிட்டால் அவன் மேன்மையை அடையமாட்டான். அவனை யாரும் மதிக்கவும் மாட்டார்கள். ஒரு சல்லிக் காசுக்கும் உபயோகப்பட மாட்டான். ஆபத்து உண்டானபோது அதைக் கண்டு, 'ஐயோ! இவனுக்கு இப்படிப்பட்ட துர்தசை வந்துவிட்டதே!' என்று தானும் கலங்கி, அவனுடைய கஷ்டத்தைப் போக்க முயலுகிறவனே உத்தம புருஷனாவான்.

ஒரு நண்பனுக்குத் துயரம் உண்டானால் அதைக் கண்டு அவனது உண்மைத் தோழன் உடனே அதை நீக்க முயற்சி செய்வான் அல்லவா? அப்பொழுதுதானே அவன் உண்மைத் தோழனாவான். 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்று திருவள்ளுவரும் கூறுகிறார். அவையில் ஒருவனது வஸ்திரம் இடுப்பிலிருந்து அவிழ்ந்தால் அவனது கை எவ்வளவு பரபரப்புடன் அந்த வஸ்திரத்தைப் பிடித்துக்கொள்ள முயலுமோ அது போலத் தன் நண்பனின் துயரத்தைக் களைய முயல வேண்டும். இப்படிச் செய்கிறவன்தான் உண்மை நண்பன் என்று உலகத்தோர் புகழ்வர். பரமன் நமது ஆபத்காலத்தில் தோழன் போல் இருந்து நமது கஷ்டத்தை விலக்குகிறான். இதை நினைத்தே 'ஆபத்ஸக' என்று கத்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்தார். ஆகவே இந்த குணமே எல்லா குணங்களிலும் உயர்ந்தது. இதைத்தான் 'ஸம்ரக்ஷகத்வம், ஸம்ரக்ஷித்ருத்வம்' என்று சொல்லுகிறது. ரக்ஷணம் என்றால் ஒருவனுடைய அனிஷ்டத்தை அதாவது துயரத்தை நீக்கி இஷ்டத்தை கொடுப்பது.

பகவானை அண்டினவர்கள் சரணாகதர்கள். அவர்களை பகவான் காப்பவன். 'சரணாகதஸம்ரக்ஷிதா' என்று பகவானுக்கு ஒரு பிருது உண்டு. இதைப்பற்றிதான் இங்கு விவரிக்க வந்துள்ளோம். ஸ்வாமி தேசிகன் இதைப் பற்றி ஒரு ச்லோகம் இட்டிருக்கிறார். அந்த ச்லோகம் இதோ-

பூயோபி ஹந்த வஸதிர் யதி மே பவித்ரீ
யாம்யாஸு துர்விஷஹ வ்ருத்திஷு யாதநாஸு ।
ஸம்யக் பவிஷ்யதி தத: சரணாகதாநாம்
ஸம்ரக்ஷிதேதி பிருதம் வரத த்வதீயம் ॥ (வரதராஜ பஞ்சாசத் - 35)

இதன் கருத்து - தேவாதிராஜரே! நான் தேவரீரை சரணம் அடைந்திருக்க்றேன். எவ்வளவோ பாவங்களை நான் செய்திருந்தபோதிலும் உமது திருவடிகளை அடைந்துவிட்டபடியால் எனக்கு நரகம் வராது. எமன் என்னை ஹிம்சிக்க மாட்டான். பொறுக்க முடியாத வேதனைகள் எனக்கு வரா. ந கலு பாகவதா யமவிஷயம் கச்சந்தி. அப்படி ஒரு சமயம் எனக்கு எமலோகத்தில் பல யாதனைகளை அநுபவிக்க சூழ்நிலை ஏற்பட்டால் உம்மை உலகத்தில் உள்ளவர் தூற்றுவர். சரணமடைந்தவனை நல்ல முறையில் காப்பவர் நீர் என்று உலகம் முழுவதும் உம்மை இந்த பிருதைக்கூறி போற்றுகிறது. அது உமக்கு எப்படி பொருந்தும்? இதை நீர் காத்துக் கொள்ளவேண்டியது அவசியம் இல்லையா? உம்மை ஆபத்ஸகன், சரணாகத ரக்ஷகன் என்று உலகம் புகழ்கிறது. என் துயரத்தை நீர் நீக்காவிட்டால் உம்மை நிர்க்ருணன் என்று உலகத்தார் நிந்திக்கமாட்டார்களா? ஆகவே உம்முடைய தன்மையை நிலைநிறுத்துவதற்காக எனக்கு துயரம் வராமல் காக்க முற்பட்டிருக்கிறீர் என்றவாறு.

இப்படி அருளிச் செய்த ஆசார்ய ஸார்வபௌமரான வேதாந்த தேசிகனுடைய கருத்து என்ன என்பதை ஆராய்வோம். நரகம் சென்று பொறுக்க முடியாத பல யாதனைகளை நான் அநுபவித்தாலும் அது எனக்கு பெரிய துயரம் அன்று. எத்தனையோ தடவை எமலோகம் சென்று வேதனை அநுபவித்தாற்போல் இதுவும் ஆகும். ஆக இதில் நான் துயரப்பட வேண்டிய அவசியம் இல்லை, 'அபூத பூர்வம் மம பாவி கிம் வா ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி து:கம்' என்று ஆளவந்தார் அருளிச் செய்த கணக்கிலே இதுவும் ஒன்றாயிற்று. பின் எனக்கு என்ன துயரம் என்றால், ஆபத்காலத்தில் ஒருவன் பகவானைக் கூப்பிடும்போது பகவான் நேராக வந்தோ மறைவில் இருந்தோ அவனது துயரத்தை துடைக்காமல் இருந்துவிட்டால் அவனது ஆபத்கால ரக்ஷகத்வம் போய்விடும் அல்லவா? கஷ்ட காலத்தில் பகவானை நினைத்தால் அந்த ஈச்வரன் அனைவரையும் ரக்ஷிக்கிறான் என்ற எண்ணம் ஜனங்களுக்கு முன்பு இருந்தது. இப்பொழுது மாறிவிடும். ஈச்வரனே இல்லை என்றோ, அவன் இருந்தாலும் நிர்க்ருணன் - இரக்கமற்றவன் என்றோ உலகத்தில் பெயர் பரவி விடும். ஐயோ! என்ன செய்வது? இதுதான் என் கஷ்டம். இந்த துயரத்தை போக்க நீர் முயல வேண்டும். அதாவது சராணகத ரக்ஷகத்வத்தை நீர் காத்துக் கொள்ள வேண்டும் என்பது கருத்து.

பிரஹ்லாதஆழ்வான் எம்பெருமான் திருநாமத்தையே சொல்லி வந்தபடியால் தகப்பன் பல ஹிம்சைகளை செய்வித்தான். அதனால் உண்டான இவரது துயரத்தை பகவான் தீர்த்தான். துச்சாதனன் மூலமாக ஏற்பட்ட த்ரௌபதியின் துயரத்தையும் பகவான் களைந்தான். கஜேந்திர ஆழ்வாருடைய துயரத்தையும் ஸர்வேச்வரன் துடைத்தான். எல்லா இடங்களிலும் இவர்களுக்கு ஏற்பட்ட துயரம் என்னவென்றால் கீழ் கூறிய வகையில் ஏற்பட்ட துயரமே அல்லாது வேறல்ல. 'பகவான் ஒருவன் இருக்கிறான். அந்த இறைவன் இரக்கமுள்ளவன். ஆபத்காலத்தில் தன்னை

அழைப்பவர்களை அவன் தோழன் போல வந்து காப்பவன்' என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. ஜனங்கள் இதை உண்மை என்று நினைக்கிறார்கள்.

இப்படியிருக்க, சமயத்தில் வந்து ரக்ஷிக்காமல் இருந்தால் நாட்டில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள்? 'ஈச்வரனே இல்லை. இருந்தாலும் தயையற்றவன்; கூவி கூவி அழுகிற இவர்கள் விஷயத்தில் காப்பாற்றாமல் இருக்கிற படியால்' என்றெல்லாம் நினைப்பார்கள். ஆகவே இவர்களது துயரத்தை போக்கவே மறைமுகமாகவோ நேரிலிருந்தோ பகவான் காப்பாற்றினான். கஜேந்திர ஆழ்வானைக் காத்த வரலாறு புராணங்களில் பிரசித்தமானது. இதை ஆழ்வார்கள் பல இடங்களில் பரக்க பேசியிருக்கிறார்கள்.

இதைச் சொல்லும்போதெல்லாம் எல்லா ஆழ்வார்களும் ஒரே அபிப்பிராயத்துடன் சொற்களை வழங்குகின்றனர். 'கதறி கை கூப்பி என் கண்ணா கண்ணா என்னா உதவுப் புள்ளூர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த', 'கைநாக திடர் கடிந்த' 'மதுசூதா கண்ணனே கரிக்கோள் விடுத்தவனே', 'அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த', 'யானையின் துயரம் தீர புள்ளூர்ந்து சென்று,' 'பொள்ளை கரத்த போதகத்தின் துன்பம் தவிர்த்த புனிதனிடம்', 'போரானை பொய்கை வாய் கோட்பட்டு நின்றலறி நீரார் மலர்கமலம் கொண்டோர் நெடுங்கையால் நாராயணா ஒ மணிவண்ணா நாகணையாய் வாராய் என் ஆரிடரை நீக்காய் என .. அதனை இடர் கடிந்தான் எம்பெருமான்', 'ஓரானைக் கொம்பொசித் தோரானைக் கோள்விடுத்த சீரானை', 'பூந்தண்புனல் பொய்கை யானைநிடர் கடிந்த பூந்தண்டுழாயென்தனி நாயகன்' என்று ஆனையின் துயரம், ஆனையின் கோள், ஆனையின் இடர் என்று சொல்வதை கவனித்தால் இவர்களது அபிப்ராயம் ஒரே மாதிரியாகவே இருக்கும் எனத் தோன்றுகிறது.

ஆனைக்குத் துயரம் மூன்றுவிதமாக உள்ளது. புஷ்பங்களை பறிக்க யானை பொய்கையில் இறங்கியதும் முதலை அதன் காலை கவ்விக் கொண்டது. அதனால் யானைக்குத் துயரம்.

இரண்டாவது கஜேந்திரன் என்ற யானை முன்பு இந்திரத்யும்னன் என்ற அரசனாகஇருந்து பகவானை ஆராதித்துக் கொண்டு வந்த சமயத்தில் அகஸ்திய முனிவர் வருவதை காணாமல் இருந்தபடியால், அவரது சாபத்தால் இந்தபிறவி எடுத்து வாழ்ந்துவந்தது. முன்செய்த விஷ்ணு பூஜையின் மகிமையினால் இப்பொழுதும் நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு பகவானை அர்ச்சித்து வந்தது. விஷ்ணுவை பூஜிப்பதற்காக பெரியதொரு தாமரை தடாகத்தில் புஷ்பங்களை பறிக்க இறங்கியது. அதே நீர் நிலையில் முன்பு ஒருகால் தேவலர் என்ற முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது ஹூஹூ என்ற கந்தர்வன் அவரது காலைப் பற்றியிழுத்தான். கோபம் கொண்ட முனிவர் அவனை முதலையாகும்படி சபித்தார். அந்த முதலைதான் யானையின் காலைப் பிடித்து கவ்வியது. இந்த யானை விஷ்ணு பூஜையில் மனத்தையும் உடலையும் செலுத்தியபடியால் இந்த வழிபாடு இடையூறு இல்லாமல் நடைபெற வேண்டுமே. முதலையோ நம்மை கவ்விக்கொண்டது. அழியக் கூடிய உடலைப்பற்றி எனக்கு கவலையில்லை. செவ்வி மாறாமல் இந்த புஷ்பங்களை பகவானுடைய திருவடிகளில் எப்படிச் சமர்ப்பிக்க முடியும்?' என்று வருந்தியது. இது இரண்டாவது துயரம்.

மூன்றாவது துயரம் ஒன்று உண்டு இந்த யானைக்கு. 'இப்படி நாம் கதறும்போது பகவான் உதவாமல் இருந்தால், ஸர்வேச்வரன் ஆபத்ஸகன், ஸத்யன் என்று உண்மையில் இருக்க அவனை ஆபத்தில் ரக்ஷிக்காதவன், தயை அற்றவன் என்று உலகத்தார் சொல்லப் போகிறார்களே' என்ற துயரம். இப்படி மூன்று துயரம்.

இங்கே திருவாய்மொழியில் இரண்டாம் பத்தில் எட்டாவது திருவாய்மொழி, இரண்டாம் பாட்டின் வியாக்யானத்தை படித்து சுவைக்கவேண்டும்.

1. கொய்கையிலே போய்ப்புக்கு முதலையாலே இடர்பட்ட ஆனையினுடைய து:கத்தை வாஸனையோட போக்கினவன்.

2. 'பூவிற் செவ்வியழியாமே திருவடிகளிலே இடவேணும்' என்று நினைத்து அது பெறாமையால் வந்த இடரைப் போக்கின.

3. ஆனையிடராவது - "ஸர்வேச்வரன் ஆபத்ஸகன் என்று இருந்தோம்; இவன் இப்படி ஆபந்நனாக உதவாதொழிவதே. நிர்க்ருணனாய் இருந்தானீ ! என்று நாட்டிலுள்ளார் நினைக்கிற் செய்வதென்?" என்று அத்தாலே வந்த இடராகிலுமாம் என்று மூன்று விதமாகத் துக்கத்தை விவரித்திருக்கிறார் வியாக்யாதா.

இந்த அர்த்தங்களில் மூன்றாவது அர்த்தம் மிக்க சுவை உடையது. இதை நினைத்துத்தான் வேதாந்த தேசிகன் மேற்ச் சொன்ன சுலோகத்தை அருளிச் செய்தார் போலும்.

ஹரி ஹரி ஹரி என்றாள். அபயம் அபயம் என்றாள். உனக்கு அபயம் என்றாள். கரியனுக்கு அருள் புரிந்ததே அன்று கயித்தின் முதலையின் உயிர் மடித்தாய். என்றார் பாரதியார் பாஞ்சாலியின் சபதத்தில். இங்கு எனக்கு அபயம் தா என்று சொல்லாமல் உனக்கு அபயம் என்றாள். மும்முறையும் சொன்னாள் அபயம் என்று. எதத் அம்ருதம் அபயம் என்றும் உபநிஷத் கூறிற்று. இதெல்லாம் கவனிக்கவும்.

துர்யோதனனால் தூண்டடப்பட்ட துர்வாஸர் அக்ஷய பாத்திரத்தை அபஹரிக்க வந்தவர். பாஞ்சாலி கானகத்தில் கண்ணனிடம் வேண்ட ஓடிவந்தார் காப்பாற்ற என்பதும் ப்ரஸித்தம். மனிதனுடைய ஆபத்காலத்தில் ஸுஹ்ருத் எப்படி ஓடிவந்து காப்பாற்றுவானோ அவ்வாறு எம்பொருமான் வனவாஸத்தில் த்ரௌபதியின் இடுக்கண் களைய வந்தான். இதை பாகவதத்திலும் பார்க்கலாம்.

"யோ நோ ஜுகோப வனமேத்ய துரந்தக்குச் ராத்" என்பது ச்லோகம்.

பெரும் காடு. சமயமோ இரவு. இராத்ரி பகல் புரியாதவன் புது மனிதன். எங்கு எப்படிபோவது என்று தெரியவில்லை. அது ஸமயம் ஒர் மஹான் வந்து வழியைக் காட்டினால் எவ்வளவு ஸந்தோஷம். சொல்ல வேண்டுமா. அதுபோல் ஜீவனுடைய அந்திம தசை பூதஸூக்ஷ்மங்களோடு இந்திரியங்களோடு அடைப்பட்டுவிட்டான். இனி வெளிக்கிளம்ப வேண்டும். வழியோ நூற்று ஒன்று. எந்த வழியில் போவது என்பதை அறிய முடியவில்லை. என்ன நடக்குமோ எப்படி போவதோ என்று திக்ப்ரமம். அது ஸமயம் ஹார்தனான பகவான் விளக்கைப் போட்டு மோக்ஷமார்க்கம் செல்லும் வழியான ப்ரஹ்ம நாடியை (நூற்றி ஒன்றாவது) காட்டி அநுப்புகிறான் என்றால் இதைவிட ஆபத்ஸ கத்வம் அவனுக்கு சொல்ல வேண்டியது என்ன. ஸ்வாமி தேசிகனும் "த்ராதாபதி ஸ்திதிபதம் பரணம் ப்ரரோஹ என்றார் தேசிகன். "ஹார்த: ஸ்வயம் நிஜபதே விநிலேசயிஷ்யன். நாடீம் ப்ரவேசயஸி. நாத சதாதிகாம் த்வம் என்றும் பேசினார். ஹார்தாநுக்ரஹீத: சதாதிகயா என்றார் ஸூத்ரகாரர்.

எவனும் சில சமாசாரங்களை எல்லோரிடமும் சொல்ல மாட்டான். சில விஷயங்களை தாய் தந்தையிடம் சொல்வான். அவர்களிடமும் சொல்லாமல் மனைவியிடம் மாத்திரம் சொல்வான். சில விஷயங்களை அவளிடமும் சொல்லான். ஸ்நேஹிதனிடம் மட்டும் தெரிவிப்பான். அந்த ஸ்நேஹிதனும் இவன் ஏதாவது நம்மிடம் அபேக்ஷிப்பான் என்று எண்ணி தூரமாக விலகி விடுவான். அவன் உண்மை ஸுக்ருத் அல்ல. அந்த ஸமயத்திலும் விலகாமல் இவனுடன் இருந்து ரக்ஷிப்பவன் உதவிபுரிகிறவன் பகவான். ஆக ஆபத்காலத்திலும் உடன் இருந்து ரக்ஷிப்பவன். மற்ற ஸ்நேஹிதர்கள் அட்டைகள் போல் பணம் இருக்கும் வரையில் சுவைப்பவர்கள். இவன் அப்படியல்ல. மேலும் நமக்கு எந்த விதமான ஆபத்து நேர்ந்தாலும் உதவி புரிகிறவன் என்பது மாத்ரமல்ல. நமக்கு வரும் ஆபத்து போல தனக்கு வந்தாலும் அதையும் பொருட்படுத்தாமல் ஆபத்து பெற்றவனான மற்றவனை ஆதியிலிருந்து எவன் ரக்ஷித்து உதவிசெய்கிறானோ அவன்தான் ஆபத்ஸகன். உலகத்தில் சிலரிடம் இதைக் காணலாம். சில ஸமயம் தான் ஆபத்துடன் இருந்தாலும் அதே ஸமயம் நண்பனுக்கு கஷ்டம் வந்தால் தன்னையும் பார்க்காமல் உதவுவது உண்டு. தனக்கு உடல் சரியில்லாத ஸமயம் நண்பனுக்கும் அவ்விதம்தான். அப்பொழுது தனக்காக வைத்யத்துக்காக இருக்கும் பணத்தை தமக்கு இல்லாமல் போனாலும் போகிறது இதைக் கொண்டு அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பவரும் உண்டு.

ஸுக்ரீவனும் ராஜ்யம் மனைவி இவர்களை இழந்தவன். ராமனும் இழந்தவன். ராமன் என்ன செய்தான்? க்ருஹ்யதாம் எஷ பாணனா என்று சொன்ன ஸுக்ரீவனுக்கு ஸகாவான படியால் அவனது துயரத்தைத்தான் களைய வேண்டுமென்று முதலில் களைந்தான். ஒரு மரத்தில் இரண்டு பக்ஷிகள். அது இந்த சரீரத்தில் ஜீவனும் பரமாத்மாவும் இருக்கிறார்கள். இருவரும் ஸ்நேஹிதர்கள். ஏன் இருக்கிறார்கள். நட்பு மூலமாக நம்முடைய துன்பத்தைக்களையத்தான் அவர்களது இருப்பு. த்வா ஸகாயா ஸமான் என்பது ச்ருதி.

தண்ணீரும் பாலும் சேர்ந்துவிடுகிறது. இவைகளின் ஸ்நேஹபாவம் மிக உயர்ந்தது. நாம் நெருப்பில் பாலைவைத்து காய்ச்சிகிறோம். தண்ணீரை எடுப்பதற்காக. பால் என்ன நினைக்கிறது தெரியுமா. நம்முடைய ஸுக்ரத்தான தண்ணீரை அழிக்கச் செய்கிறார்களா என்று அதற்காக நெருப்பை அனைக்கக் கருதி பொங்கிவழிகிறது. இதைக்கண்ட தண்ணீர் நமக்காக நெருப்பில் விழுந்து தன்னையும் அழியிமாறுப்பண்ணுகிறதே. ஐயோ பாவம் என்று பாலில்தான் மறுபடியும் விழுந்து பாலை பொங்காமல் செய்கிறது. இதனால் பால் பொங்குவதும் இல்லை. நெருப்பில் விழுவதும் இல்லை. பாருங்கள் எவ்வளவு ஸ்நேஹபாவம். அசேதனமான தண்ணீருக்கும் பாலுக்கும். அவ்வாறல்லவா ஸுஹ்ருத்பாவம் வேண்டும்.

> க்ஷீரே ணாத்ம கதோதகாய ஹி குணா : ததா: புரா தே அகிலா:
> க்ஷீரே தாப மவேக்ஷ்ய தேனபயஸா ஸ்யாத்மா க்ருசானௌ ஹுத: ll
>
> கந்தும் பாவகம் உன்மன: ததபவத் த்ருஷ்ட்வா மித்ராபதம்,
> யுக்தம் தேன ஜலேன சாம்யதி ஸதாம் மைத்ரி புனஸ்த்வீத்ருசீ.

*****

# 25. பிறர்வினை நமக்கு வேண்டாம்

உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. எனினும், அவற்றுள் முக்கியமானது ஒன்று உண்டு; இந்த ஒரு விஷயத்தை அறிந்தவன்தான் அறிவாளியாவான்; உயர்ந்தவனாகவும் கருதப்படுவான்; பகவானுக்கும் அத்யந்தம் அபிமதனாக ஆவான்; உயர்ந்த பலனையும் பெறுவான்.

அந்த விஷயம் எது என்றால், மற்றவன் செய்யும் காரியங்களைப் பார்த்துத் தூஷிக்காமலிருப்பதுதான். ஒருவன் அநீதியான கர்மாக்களைச் செய்கிறான். இது உலகத்தில் இயற்கைதான். இதைக் கண்டு, அவன் செய்யும் குற்றங்களைக் காணாதவன் போல் இருப்பதுதான் உயர்ந்த தர்மம். 'அவன் எதைச் செய்தால் நமக்கு என்ன? பாவமோ புண்ணியமோ அவனை அடையப்போகிறது. அதில் நாம் ஏன் பங்குகொள்ள வேண்டும்?" என்ற எண்ணத்துடன் இருப்பதுதான் நல்லது.

உண்மையில் பூமண்டலத்தில் பிறப்பவர்கள் அனைவருமே பாவத்தினால்தான் பிறப்பை அடைகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. குன்றனைய குற்றம் செய்தவர்கள் சுமக்க முடியாத பாவங்களைச் சுமக்கின்றனர். காலையில் எழுந்திருந்து இரவு படுக்கும் வரையில் தெரிந்தோ தெரியாமலோ பல பாவங்கள் நமக்கு ஏற்படுகின்றன.

உதாரணமாகச் சித்திரை மாஸம் முதல் தேதி ஆரம்பித்துக் கடைசித் தேதி வரையில் அவனவன் செய்யும் பாவங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால், பிறரிடம் அவனவன் தான் அதிகமான பாவங்களைச் செய்யவில்லை என்றுதான் சொல்லுவான். மனத்தைத் தொட்டு அவனே யோசித்துப் பார்த்தால் அவனவனுடைய பாவங்களுடைய எண்ணிக்கை மனத்தில் நன்கு புலப்படும். பிறரிடம் வேண்டுமானால் இஷ்டப்படி கூட்டியும் குறைத்தும் சொல்லுவான். தன் யோக்யதை தன் மனத்துக்குப் புரியாதோ? ஆக, அளவற்ற பாவங்களை இவன் செய்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆசார்யர் தன் சிஷ்யனிடம் நோட்டு புத்தகத்தைக் கொடுத்து ஒரு பக்கம் நீ செய்த பாபச் செயல்களையும் மற்றொரு பக்கம் புண்யச் செயல்களையும் எழுது. உண்மையாக இருக்க வேண்டும் என்று சொன்னார். அவர் ஸாத்வீக சிஷ்யன். அப்படியே செய்கிறேன் என்று மறுநாள் நோட்டுப்புத்தகத்தில் பாபச் செயலுக்கு பக்கம் போராது என்று சொல்லி கொடுத்தான. புண்யச் செயல் பக்கம் காலியாகவே இருந்தது. இப்படியிருக்க ஏன் பிறர் பாபங்களை வாங்கவேண்டும்.

இப்படி இருக்க, பிறர் செய்யும் தீவினைகளை ஏன் பார்க்க வேண்டும்? அதை ஏன் எடுத்துச்சொல்ல வேண்டும்? 'சப்யமாநஸ்ய யத் பாபம் சபந்தம் அதிகச்சதி' என்கிற ரீதியில், பிறன் செய்யும் பாவத்தை வாயால் சொல்லி அந்தப் பாவத்தையும் ஏன் தலையால் சுமந்துகொள்ள வேண்டும்? 'அஸ்தி சேத்துல்யபாபீ ஸ்யாத், நாஸ்தி சேத் த்விகுணம் பவேத்.'

ஒருவன் பாவத்தைச் செய்தது உண்மையாக இருந்தால், அதை மற்றொருவன் எடுத்துச் சொன்னால், செய்தவன் போல் இவனும் பாவியாக ஆகிவிடுகிறான்! உண்மையில் அவன் செய்யாமலிருந்து, அதைச் செய்தவனாகக் கூறினால், சொல்கிறவனுக்கு இரண்டு பங்கு பாவம் உண்டாகிறதாம். ஆகையால் நம் வினையையே நம்மால் சுமக்கு முடியாமலிருக்கப் பிறரிடத்தில் பாவங்களைச் சொல்லி அந்த வினையையும் ஏன் நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்?

ஒரு பணக்காரன் அவனைப் பார்த்தவுடன் அவனது பணத்தை எப்படியாவது வசூல் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா. அதை அல்லவா நினைத்து பொய்சொல்லியோ திருடியோ அபேஸ் பண்ணிவிடுகிறோம். அதேபோல்தான் பிறரை தூஷித்து அவன் பாபத்தை பெற்றுக் கொள்கிறோம். அந்தொ.

ஒருவன் திருடுகிறான்; சூதாடுகிறான்; கள்ளைக் குடிக்கிறான்; தப்புக் கணக்கு எழுதுகிறான். இப்படிப் பல கெட்ட செயல்களைச் செய்கிறான். இவன் இருக்கும் ஊரில் உள்ள பெரியவர்கள் இதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் அவனுக்கு ஹிதமான தர்ம உபதேசங்களைச் செய்து நல்வழிப்படுத்தச் சக்தி இருந்தால் அவனைத் திருத்த வேண்டும். அப்படிச் சக்தியற்றவர்களாக இருந்தால், வம்பளக்காமலாவது இருக்க வேண்டும். 'எதையோ அவன் செய்கிறான்; அதை நாம் ஏன் வாயால் சொல்ல வேண்டும்?' என்று இருக்க வேண்டும். அல்லது அவன் இவனுக்கு மிகவும் ஆப்தனாக இருந்தால், தனியாகப் பகவானிடம் சென்று, "ஐயோ! இப்படிக் கெட்டுப் போகிறானே; நல்ல புத்தியைத் தரக்கூடாதா?" என்ற பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் இவ்வளவுதான் இவன் செய்ய வேண்டியது. இதைத் தவிர, தங்கள் சிநேகிதர்களிடம் சென்று இதைப் பல பிரகாரமாகப் பல தடவை சொல்லுதல் கூடாது. இதனால் அவனது பாவத்தில் இவன் பங்கு பெறுகிறான். நஷ்டமே தவிர லாபமில்லை.

ஓர் ஊரில் ஓர் உத்தம ஸ்ரீவைஷ்ணவர் இருந்தார். நல்ல அதிகாரி; நல்ல அநுஷ்டாதா. நன்கு படித்தவர். எல்லாக் குணங்களும் அவரிடம் உண்டு. அத்துடன் பிறர் செய்யும் குற்றங்களைக் கண்கொட்டாமல் பார்த்திருக்கும் ஸ்வபாவமும் உண்டு. அதைப் பற்றிப் பரிசீலித்து, விமர்சித்துப் பிறரிடத்தில் பரிகசித்துக்கொண்டும் இருப்பார். அவருடைய அகத்துக்கு எதிரிலேயே ஒரு தாசியின் வீடும் அமைந்திருந்தது. அவள் தனக்கு ஏற்பட்ட தொழிலைச் சரிவர நடத்தி வந்தாள். இவர் காலை எட்டு மணிக்குள் தம் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வாசல்திண்ணையில் உட்கார்ந்துவிடுவார். தினந்தோறும் அவளுடைய வீட்டுக்கு வருகிறவர்களைக் கணக்கிட்டுக் கொண்டும், பிறரிடம் சொல்லிப் பழித்துக் கொண்டும் காலத்தை கழித்து வந்தார். தொழில் நடத்தும் தாசிகூடக் கணக்கில் ஏமாந்துவிடுவாள். சித்திரகுப்தனும் இதில் ஏமாந்திருக்கலாம். இவர் ஒருகாலும் இதில் ஏமாறமாட்டார்.

உண்மையில் இவர் விஷயங்களில் தெளிவு பெற்றவரானபடியாலும் அநுஷ்டாதாவானபடியாலும் தமது பாரமைகாந்த்யத்துக்குத் தகுந்தாற்போல் ஸ்வரூபத்துக்கு அநுகுணமாக இருந்திருக்க வேண்டும்; அதாவது, 'நம்மை ஒருவன் காரணமில்லாமலே பரிபவங்கள் செய்தால், நமது பாவத்தை அவன் வாங்கிக்கொள்ளுகிறான். ஏதோ ஜனங்கள் நம்மிடம் விரோதம் கொண்டு துவேஷபுத்தியினால் எதையோ சொல்லுகின்றனர். இவர்கள் மிக்க மோக முள்ளவர்களாக இருக்கின்றனர். ஐயோ! சாஸ்திர மரியாதையையும் ஸன்மார்க்கத்தையும் கைவிட்டு, நரகமாகிய நெருப்புக்கு விறகாக இவர்கள் ஆகின்றனரே!' என்று இரக்கம் கொள்ள வேண்டும் அவர்களிடத்தில்.

இப்படி இருக்கவேண்டியது போக, இவர் அந்தத் தாசியின் நடவடிக்கைகளைப்பற்றி விமர்சித்துக்கொண்டும் தூஷித்துக் கொண்டும் இருந்தார். இதனால் கடைசியில் என்ன முடிந்தது. காலகதியானவுடன் தாசி நல்ல கதியடைந்தாள். அவளது பாவச் செயல்கள் அவள் நல்ல கதியை அடையத் தடங்கலாக ஆகவில்லை. அவளது பாவங்கள் அனைத்தையும்

இவரன்றோ அடைந்தார்? அதன் பலனாகத் துர்கதியும் அடைந்தார். ஆகவே பிறர்வினை நமக்கு வேண்டாம்.

இவ்விஷயத்தில் பௌராணிகர்கள் கூறும் கதை ஒன்று உண்டு:- ஓர் ஊரில் பரம்பரைப் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இருந்தார். இவர் வைதிக லௌகிக வித்யைகளில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். 'சுந: புச்சம் இவாநர்த்தம் பாண்டித்யம் தர்மவர்ஜிதம்' என்ற ரீதியில் அல்ல இவரது பாண்டித்யம். உஷ:காலத்திலேயே எழுந்திருந்து, சரியான காலங்களிலேயே எல்லாத் தர்மங்களையும் செய்பவர். அப்பழுக்கு ஒன்றுமில்லாதவர். எல்லாராலேயும் போற்றக்கூடியவராகவே இருந்தார். ஒருவிதமான குற்றத்தையும் இவரிடம் யாரும் சொல்லமாட்டார்கள். இப்படி எல்லா விதமான மேன்மையோடு இவர் கூடியிருந்தபோதிலும், சரீரத்தில் ஒரு தோஷம் ஏற்பட்டுவிட்டது. திடீரென்று ஒரு நாள் காலையில் தம் உடம்பைப்பார்த்தார். உடலில் பல இடங்களில் வெண்புள்ளிகள் காணப்பட்டன. நாளடைவில் அவை வளர்ந்து பெரியவையாயின. உடம்புக்கே ஒரு வைவர்ண்யத்தைக் கொடுத்துவிட்டது. தம்மையே வெறுத்துக்கொண்டார். இந்த வியாதி நிவிருத்தியடையப் பல உபாயங்களைக் கைக்கொண்டார். பணத்துக்காக இவர் அலைய வேண்டுமா? எவ்வளவோ மருந்துகளையும் சாப்பிட்டார். ஒன்றாலும் பயன் ஏற்படவில்லை.

பிறகு ஜ்யோதிஷ சாஸ்திரம் அறிந்த ஒரு வித்வானைக் கலந்து ஆலோசித்தார். "இதற்கு ஏதாவது பரிகாரம் உண்டா?" என்று கேட்டார். அவர் இந்தத் தனிகருடைய ஜன்மபத்திரிகையை வாங்கி பரிசீலித்தார். இதன் பரிகார மர்மத்தை நன்கு தெரிந்து கொண்டார். ஆனாலும் அதன் முழு உண்மையையும் வெளியில் சொல்லாமல் தனிகரைப் பார்த்து. "நான் சொல்லுகிறபடி இரண்டு மாத காலம் செய்து வாரும். அப்பொழுது பாரும். உமது உடம்பிலுள்ள இந்த வியாதி சீக்கிரத்திலேயே நசித்துவிடும்" என்றார். தனிகர் இதைக் கேட்டதும், "உடனே அந்த முறையைச் சொல்லும். அப்படியே செய்கிறேன்" என்று அவசரப்பட்டார்.

ஜ்யோதிஷ வித்வான், "தனிகரே, நீர் தினந்தோறும் உம்முடைய கர்மாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டுத் தூங்கிவிடும். மாலை மூன்று மணிக்கு மேல் எழுந்திருந்து முகம் கைகால் உடல் முதலியவற்றை நன்கு சுத்தம் செய்துகொண்டு, நான் கொடுக்கும் ஸுகந்த வாஸனையுள்ள சூர்ணங்களையும் தைலங்களையும் உடம்பில் பூசிக்கொண்டு, நல்ல ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு, உமது குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு, இரண்டு பர்லாங்குக்கு அப்பாலுள்ள உமது மைத்துனியின் வீட்டுக்குப் போம். அங்கு ஸகஜமான முறையில் அவளுடன் பேசிக்கொண்டிரும். அவளது பர்த்தா வியாபார நிமித்தம் அயல்நாடு சென்றிருப்பது உமக்குத் தெரியும். ஜனங்கள் எதாவது உம்மைப்பற்றி வம்பளந்தாலும் அதைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டாம். நீரும் யோக்கியர்; அவளும் பதிவிரதை. உங்களைப்பற்றி அவள் பர்த்தாவும் நன்கு அறிவர். உலகத்தைப்பற்றி நமக்கென்ன? இரவு ஒன்பது மணிக்கு அதே வண்டியில் ஏறி உமது வீட்டுக்குத் திரும்பி வந்துவிடலாம். இம்மாதிரி இரண்டு மூன்று மாதம் செய்து வந்தால் உமது வியாதி தானாகவே பறந்து ஓடிவிடும்" என்றார்.

இதைக் கேட்டதும் தனிக வித்வான் அப்படியே செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டு, அது போலவே செய்ய ஆரம்பித்தார். பதினைந்து தினங்கள் சென்றன. ஊரில் உள்ளவர்கள், "இது என்ன அநியாயம்! வயது முதிர்ந்தும் இந்தக் கிழத்துக்கு அலங்காரம் என்ன? ஆடை ஆபரணங்கள் என்ன? ஸாரட்டில் ஏறிக்கொண்டு போகும் ஜோரைப் பார். மைத்துனியை

இப்படியா வசப்படுத்துவது? என்ன அக்ரமம்! பணம் இருந்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாமா? மைத்துனியை வெறுமனே பார்ப்பதற்கு ஒரு நாள் இரண்டு நாள் சென்றால் போதாதா? தினமுமா செல்ல வேண்டும்? இவருடைய ஸகலபாடியும் இல்லை. ஆடையாபரண அலங்காரங்கள் எதற்கு? ஆகையால் இதில் ஏதோ விசேஷம் இருக்கிறது" என்று சிலர் கூறினர். மற்றும் சிலர் இவ்விஷயத்தில் பச்சையாகவே சொல்லித் தூஷிக்க ஆரம்பித்தனர். "இவரது ஞானம் அநுஷ்டானம் எதற்காக? ஒரு மாஸம் முன்புவரை இவர் மிகவும் யோக்யராகவே நடந்து வந்தார். அதற்குள் புத்தி மாறி விட்டதே! என்ன பாவம்?" என்றனர்.

இப்படி இவரைப் பற்றி அவ்வூரார் பலவாறு தூஷிப்பதும் பரிகசிப்பதுமாகவே இருந்தனர். எல்லாம் இவர் காதில் விழுந்ததும், பொறுக்க முடியாமல் தவித்தார். வியாதியே சிகித்ஸாப்ரகாரத்தைவிட நல்லது என்று தோன்றியது. ஜ்யோதிஷரிடம் மறுபடியும் போய்க் கேட்டார். அவர் "இதற்காக நீர் கவலைப் பட வேண்டாம்; சகித்துக் கொண்டு மூன்று மாத காலம் இருந்துவிட்டீரானால் உமது வியாதி பூராக தேவலையாகிவிடும். கவலைப்படாதீர்" என்று சொன்னார். அவர் சொன்னபடியே இவர் விடாமல் செய்ய ஆரம்பித்தார். இரண்டு மாதகாலம் ஆயிற்று,

இவரது உடலில் ஏதோ ஒருவிதமான குணபாகம் ஏற்படும் போல் அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன. இது நல்ல முறைதான் என்று மூன்று மாதகாலமும் செய்து முடித்தார். கடைசியில் இவருடைய உடல் முன்போலவே ஆகிவிட்டது. நடுவில் வந்த அந்த வெண்புள்ளிகள் மறைந்துவிட்டன: வைவர்ண்யமும் இல்லை.

இவர் தம் மைத்துனி வீட்டுக்குப் போவதை நிறுத்திவிட்டார். ஆனால் அந்தக் குஷ்டரோகம் எங்கே சென்றது என்றால், அந்த ஊரில் இவரைப்பற்றி வம்பளந்த ஜனங்களிடத்தில் பரவ ஆரம்பித்தது. குஷ்டரோகம் உள்ளவனைத் தூஷித்தபடியால் அவரது குஷ்டம் இவர்களது உடல்களில் பரவிக் கஷ்டத்தை விளைவித்தது.

இந்த வைதிகர், ஜ்யோஷரைப் பார்த்து, "நான் ஒரு மருந்தும் சாப்பிடாமலே இந்த வியாதி குணமானதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு வித்வான், "இதுதான் ரகசியம்: உமது ஜாதகத்தைப் பார்த்தேன். உம் மேல் ஏதாவது லோகாபவாதம் ஏற்பட்டால் இந்த வியாதி தீரும் என்று இருந்தது. அதற்குத் தகுந்தபடி உமக்கு வீண்பழி வரும்படி இந்த உபாயத்தைக் கையாண்டேன். வேறு ஒன்றுமில்லை. ஒருவன் அபாண்டமாக ஓர் அபவாதத்தை ஒருவன் மேல் சுமத்தினால், சுமத்தப்பட்டவனுடைய பாவம் சுமத்துகிறவன் மேல் வருகிறது என்பது சாஸ்திர மரியாதை. அதன்படி உம்மேல் அபவாதத்தை ஊரிலுள்ளவர்கள் சொன்னபடியால் உம்முடைய பாவம் அவர்களை அடைந்துவிட்டது. உமக்கு ரோகம் நிவிருத்தமாயிற்று; அவர்களை அடைந்தது" என்றார்.

ஆகையால் பிறரிடத்தில் குற்றம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதை நாம் மனத்தினாலும் நினைக்கக் கூடாது; வாயாலும் சொல்லப் கூடாது. பிறர்வினை நமக்கு வேண்டாம்.

மேலும், ஒருவன் மகாபாவியாக இருக்கலாம். அவன் பகவானை அடைந்துவிட்டானேயானால் பாகவதன் ஆகிறான். அந்தப் பாகவதன் முன்பு செய்த பாவங்கள் தூஷகனுக்குத் தெரிந்திருந்த போதிலும் அதை வாயால் சொல்லித் தூஷிக்கக் கூடாது. அதே பாகவதன் பிறகு துஸ்ஸஹமான பாவங்களைச் செய்கிறவனாக இருந்தபோதிலும் அதையும் தூஷிக்கக் கூடாது.

சாதாரணமாக, உலகத்திலுள்ள மக்கள் பாவங்கள் செய்தால் அதை நாம் சொன்ன மாத்திரத்தில் அதன் பலன் நமக்குக் கிடைத்துவிடும். அந்தச் சாதாரண மனிதனே பாகவதனான பிறகு சில துஸ்ஸஹமான பாவங்களைச் செய்தால் அந்தச் சமயத்தில் அருகில் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? 'முன்பு ஏதோ ஒன்றும் தெரியாதவனானபடியால் செய்துவிட்டான். இப்போது ஸ்வரூபம் உணர்ந்து பகவானை அடைந்தும் இப்படிச் செய்கிறானே!' என்று சொல்லுவார்கள். இதுவும் ஒரு வகையான தூஷணத்தில் சேர்ந்ததுதான். இதுவும் கூடாததுதான். 'நமக்கு என்ன?' என்று உதாஸீனமாகவே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவரது வினை நம்மை அடைந்துவிடும். இதுதான் சாஸ்திரம். 'த்விஷந்த: பாபக்ருத்யாம்' என்ற உபநிஷத்து, 'பாகவதனுடைய பாவத்தை த்வேஷிகள் அடைகின்றனர்' என்று சொல்லிற்று. பாகவதரிடத்தில் கோபம் கொண்டு அடிப்பது, தூஷிப்பது, பிறர் மூலமாக தீமைகளை உண்டுபண்ணுவது முதலியன எப்படி பாகவத அபராதத்தில் சேருமோ அப்படியே பாகவத அபவாதமும் பாகவத அபராதத்தில் சேரும்.

சாதாரண மனிதன் ஏதோ ஒரு பாவத்தைச் செய்தான். அதைப் பற்றி வம்பளந்தால் அந்த பாவம் மாத்திரம் இவனிடம் வரும். பாகவதர் ஒரு பாவத்தைச் செய்தால் அதை வம்பளந்தால் அந்த பாவம் மட்டும் அல்லாமல் அவரது மற்ற எல்லா பாவங்களும் வரும். ஏனெனில் இந்த அபவாதம் பாகவத அபராத கோடியில் சேருகிறது.

ஆகவே பாகவத அபராதத்திற்கு பயப்பட வேண்டும்;

ப்ரஹ்மவித்பாபவர்காணாம் அநந்தாநாம் மஹீயஸாம் ।
தத்த்வேஷிஸங்க்ரமம் ஜாநந் த்ரஸ்யேத் ததபராதத : ॥

என்று ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் சாதித்தார். நம்மாழ்வாரும் 'செய்குந் தாவரும் தீமை உன்னடியார்க்குத் தீர்த்து அசுரர்க்குத் தீமைகள் செய் குந்தா!' என்று இந்த அர்த்தத்தை அழகாகக் காட்டினார். இவ்விடத்தில் ஈட்டு ஸ்ரீஸூக்தியை சுவைத்து அநுபவிக்கவேண்டும். "முன் ப்ராதிகூல்யம் பண்ணினவர்கள் அநுகூலித்து நாலடி வர நின்றவாறே, பினனை அவர்கள் சத்துருக்கள் மேலே போகடுமாயிற்று. கடலுக்குத தொடுத்த அம்பை அவன் முகம் காட்டினவாறே மருகாந்தாரத்தில் அஸுரர்கள் மேலே விட்டாற்போலே. அங்ஙன் ஒரு போக்கடி கண்டிலனாகில், 'உரஸா தாரயமாஸ பார்த்தம் ஸஞ்சாத்ய மாதவ:।' பகதத்தன் விட்ட சக்தியை அர்ஜுனனைத் தள்ளித் தன் அந்த:புரத்திலே ஏற்றாப்போலே, தான் ஏறிட்டுக் கொண்டு அநுபவித்தல் செய்யுமித்தனை" என்று வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது.
பகவான் சமுத்திரராஜனை வழிவிட வேண்டினார். அவன் முகம் கொடுக்கவில்லை. கோபமடைந்த வீரராகவன் 'ஸாகரம் சோஷயிஷ்யாமி' என்று பிரம்மாஸ்திரத்தை எடுத்து விட்டார். சமுத்திரராஜன் பயமடைந்து அடிபணிந்தான். முன்பு சினங்கொண்டு தொடுத்த பாணத்தை இவனது விரோதிகளிடத்தில் பிரயோகித்துவிட்டார் என்பது பிரஸித்தம்.

ஒரு பாகவதர் அஜாதசத்துரு. அவருடைய குணம், நடை, உடை, பாவனை, சரித்திரம் இவற்றைக் கண்ட ஒருவரும் அவரிடத்தில் ஒரு குற்றமும் செய்யவில்லை. ஆக அவருக்குச் சத்துரு கிடையாது. அவர் பாவமே பண்ணவில்லை என்றும் சொல்ல முடியாது. அவருடைய பாவங்கள் கடைசியில் எங்கே போகும் என்ற சங்கை உண்டாகும். இதற்கு ரஸகனமாகப் பதிலை அருளிச்செய்தது இந்த ஸ்ரீஸூக்தி. பகதத்தனுக்கும் அர்ஜுனனுக்கும் உண்டான போரில் பகதத்தன் 'சக்தி' என்ற ஆயுதத்தை விட்டான். அப்போது பகவான் அர்ஜுனனைத்

தள்ளிவிட்டுத் தம் மார்பிலேயே அந்தச் சக்தியை ஏற்றுக் கொண்டார். அது போலவே ஆச்ரிதருடைய பாவங்களைத் தான் அடைந்து அநுபவித்துவிடுகிறான். இங்கு, தயாசதகத்திலுள்ள 'அவதரண ... பாவிநோ ஜன்மபேதாந்' என்கிற ச்லோகார்த்தரஸத்தை ஆழ்ந்து அநுபவிக்கலாம். (தயாசதகம் - 35)

அதாவது, சரணாகதர்களுடைய பாவங்கள் எங்கே செல்லுகின்றன? பாவம் என்பது பலனைக் கொடுத்துத்தானே தீரும்? சாதாரண மனிதர்கள் தம் தம் வினைப்பயனை அநுபவித்துவிடுகிறார்கள். பகவானை அடைந்தவர்கள் அம்மாதிரி அநுபவிக்க முடியாது. பகவானை அடைந்தபிறகும் வினைப்பயனை அநுபவிக்கிறார்கள் என்றால், அவனை அடைவதனால் என்ன லாபம்? எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்' என்பதுதானே அவனது திருமுகப் பாசுரம்! இவர்களுக்கு விரோதி இருந்தால் அவர்களிடத்தில் பாவம் செல்ல வழி உண்டு. இல்லாவிட்டால் அவை எங்கே செல்லும்? இதற்காகப் பகவான் அவர்களுடைய பாவங்களைத்தான் ஏறிட்டுக் கொண்டு, பல பிறவிகளை எடுத்து அநுபவித்து விடுகிறான். இல்லாவிட்டால் மீனாகவும் ஆமையாகவும் பன்றியாகவும் கலப்பு மனிதனாகவும் ஏன் பிறக்க வேண்டும்? உண்மையில் அவனுக்கு இவ்வாறு பிறவியை அடையப் பாவம் லவலேசமும் கிடையாது. அப்படியிருக்க இப்படிப் பிறந்து மதி கேடர்களாலே அவமதிப்பையும் ஏன் அடைய வேண்டும்?

ஆகையால் இங்கு என்ன தோன்றுகிறது என்றால், சரணாகதர்கள் பல பிறவியை அடைந்து பல துக்கங்களை அடைவதற்கு காரணமான பாவங்களை உடையவர்களானபடியால் அவர்களுக்கு பிறவி வரப் பிரசக்தி இல்லாமையால் அந்த பலனை அநுபவிக்க இது ஒரு லீலை என்ற வியாஜத்தினால் இறைவன் பல அவதாரங்களை எடுத்து அநுபவிக்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும். இம்மாதிரி அழகாக உத்ப்ரேக்ஷித்து ஸ்வாமி தேசிகன் சமத்காரமாக ஸாதித்திருக்கிறார். "தான் ஏறிட்டுக் கொண்டு அநுபவித்தல் செய்யுமித்தனை" என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியையும் அநுபவித்து ரஸம் பெறவேண்டும்.

இங்கு உண்மை என்னவென்றால், வினை என்பது பகவானின் நிக்ரஹாநுக்ரஹரூபம். நாம் நற்காரியங்களைச் செய்தால் பகவானுக்கு ப்ரீதி உண்டாகிறது. தீவினைகளைச் செய்தால் அவனுக்கு நம்மேல் கோபம் உண்டாகிறது. நாம் அல்பஜ்ஞர்களானபடியாலே உடனே அதை மறந்துவிடுகிறோம். பகவான் ஸர்வஜ்ஞனானபடியால் எப்போதும் மறக்க மாட்டான். நாம் சரணாகதி செய்தபிறகு இந்தப் பாவங்களை அவன் அநுபவிப்பதாவது, நம்மிடம் அவனுக்கு உள்ள கோபத்தை அப்ரீதியைப் 'பொறுத்தேன்' என்று அவன் நினைப்பதுதான். இதைத்தான் 'தன் மார்பிலே ஏற்றிக் கொள்வது' என்று சொல்வது. இது தத்துவஸ்திதி.

இப்படி வினை (பாவம்) என்பது பகவானுக்கு நம்மிடத்தில் ஏற்பட்ட கோபமானபடியால், நாம் ஸ்வயமாகவே எவ்வளவோ பாவங்களைச் செய்து அப்ரீதியை ஸம்பாதித்திருக்கிறபடியால், பிறர் செய்யும் தீவினைகளையும் சொல்லி, அவர்களுடைய வினைகளையும் நாம் ஏன் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்? விலை கொடுத்து வினையை ஏன் வாங்கிக் கொள்ளவேண்டும்? காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொள்வார் உண்டோ?

ஆகவே பிறரைப்பற்றி நாம் எப்போதும் தூஷிக்கக் கூடாது. இப்படி இருப்பவன்தான் உத்தம புருஷன்.

பிறர் நம்மை தூஷித்தால் பல வகையில் சந்தோஷப்படவேண்டும்.

1. அவன் நம்மிடம் செய்யும் பரிபவத்தால் நமது பாபத்தை வாங்கிக் கொள்கிறான். அதனால் நம் பாபம் கழிகிறது. அவன் இதை அறியாமல் இருக்கிறான் என்பது.

2. இவ்வளவு உபகாரம் நமக்கு செய்கிறான் என்று அவனிடத்தில் தயைக்காட்டவேண்டும்.

3. அவனது தூஷணத்தால் நாம் செய்கிற பாபங்கள் மறவாது இருப்பதால் மறுபடி செய்யகூடாது என்பதை நினைவு படுத்துகிறான்.

4. அவன் செய்யும் தூஷணங்கள் சரீரத்தைப் பற்றிதான். சேஷத்வம் பொதுவானபடியால் ஆத்மாவை தட்டாது என்றும்.

5. ப்ராரப்த கர்மம் சிகை அறுக்கிறது என்பதும் அவர்கள் பக்கம் க்ருதஞ்தை செலுத்தவேண்டும் என்பதும்

6. பகவான் லீலாவிபூதியில் விளையாடுகிறான். நம்மூலமாக லீலாரஸத்தை அநுபவிக்கிறான். அவன் ப்ரேரணையின் மூலம் நம்மை தூஷித்து ரஸம் அநுபவிக்கிறான் என்று.

இப்படி நினைத்தால் மனதில் விகாரம் வர வழியே இல்லை. இப்படி இருப்பவன் உத்தமன்.

*****

# 26. ராமாநுஜ பதம்

பிங்கள ஆண்டு பிறந்துள்ளது. ஆன்றோர் அன்றே நீண்ட ஆலோசனையுடன் இதற்கு இந்தப் பெயரை இட்டனர். பெரியோர் ஒருவருக்கு ஒரு பெயரை இட்டால் அந்தப் பெயர் அர்த்தமின்றி இராது. நன்கு ஆலோசித்துத்தான் ஒவ்வொரு வேலையையும் அவர்கள் செய்வார்கள்.

'ஆர்த்ராம் புஷ்கரிணீம் புஷ்டிம் பிங்களாம் பத்மமாலிநீம்' என்றது ஸ்ரீஸூக்தம். மகாலக்ஷ்மியைப் 'பிங்களாம்' என்றது. திருமகளுக்கு இந்தப் பெயர், பொன்னிறமான திருமேனியை உடையவளானபடியால். இப்படி அனைவரும் பொன்போல் விரும்பக்கூடிய மங்களகரமான மகாலக்ஷ்மியின் பெயரை இந்த ஆண்டு பெற்றபடியால், இந்த ஆண்டும் ஸமஸ்தமான ஜனங்களுக்கும் ஆயுள், ஆரோக்கியம், ஐச்வர்யம், ஞான சம்பத்து, தன தானிய சம்பத்து, ஆசாரிய சம்பத்து முதலிய எல்லா வகையான மங்களங்களையும் கொடுக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

மங்களகரமான இந்தப் பிங்கள வருஷத்தில் அன்றோ நம் ராமாநுஜன் அவதரித்தார்? அவர் அவதரித்த பிறகே மக்கள் அனைவரும் நல்ஞானம், நல்லொழுக்கம் முதலிய நற்குணங்களைப் பெற்று வாழ்ந்தனர்.

இந்தப் பூவுலகில் ஸர்வசேஷியான பகவான் ஒவ்வொரு ஜீவராசியிலும் அவதரித்திருந்தான். ஆயினும் அவனைக் கண்டு வணங்கி அவன் மூலமாக நல்ல ஞானம் பெற்று ஜீவர் மோக்ஷத்தை அடைந்தனர் என்று சொல்ல முடியாது. ராமாநுஜன் தோன்றிய பொழுதே நாரணர்க்கு நாம் அடிமைப் பட்டவர்கள் என்பதை உணர்ந்து உய்ந்தார்கள். இதை,

> மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து, எங்கள் மாதவனே
> கண்ணுற நிற்கிலும் காணகில்லா, உலகோர் களெல்லாம்
> அண்ண லிராமாநுசன் வந்து தோன்றிய அப்பொழுதே
> நண்ணரு ஞானம் தலைக்கொண்டு, நாரணற் காயினரே,

என்று இராமாநுச நூற்றந்தாதி பரக்கப் பேசியுள்ளது. இப்படி மங்களகரமான ராமாநுஜர் இந்த ஆண்டில் தோன்றியபடியால் இதுவும் மங்களகரமாயிற்று.

மேலும், பகவான் பல பொருள்களைப் படைத்திருக்கிறான். மண் நீர் நெருப்பு காற்று ஆகாயம் முதலிய பூதங்களையும், ஆண், பெண், சமுத்திரம், வண்டு, யானை, மான், முதலிய ஜந்துக்களையும் படைத்திருக்கிறான். ஒவ்வொரு பொருளையும் படைத்து நமக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமுடைய பகவானின் திருவுள்ளம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வோர் பொருளிலுமிருந்து ஒவ்வொர் உயர்ந்த தன்மையை அறிந்து அதன்படி நாமும் நடக்க வேண்டும் என்ற பகவானின் கருத்தை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, மண் என்னும் பூமி மிகப் பொறுமை பெற்றது. எவ்வளவு அநீதிச் செயல்களை நாம் அதனிடத்தில் செய்தபோதிலும் அது பொறுமையுடன் அசையாமல் உள்ளது. காற்று எல்லா விஷயங்களுடன் ஸம்பந்தப்பட்ட போதிலும் அவற்றில் பற்றுதல் இல்லாமலிருக்கிறது. ஆகாயம் பரவியுள்ளது போல் இந்த ஜீவாத்மாவும் வினைப்பயனாக ஒவ்வொரு சரீரத்திலும் பரவியிருக்கிறான். தண்ணீரிலுள்ள தெளிவைப் பார்த்து நம் மனம் தெளிவை அடைய வேண்டும். வண்டு போல் சாரமான அம்சத்தையே எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி

ஒவ்வொரு பொருளிலிருந்தும் ஒவ்வொரு குணத்தை எடுத்துக் கொண்டு நாம் க்ஷேமத்தைப் பெற வேண்டும். இதற்காகவே பகவான் இவற்றைப் படைத்திருக்கிறான். எனவே இவற்றில் ஒவ்வொன்றும் நமக்கு ஒவ்வொரு குருவாக அமைகிறது.

பிங்களை என்ற ஒரு தாசியும் ஒரு குருவாகக் கருதப்பெறுகிறாள் புராணங்களில். பிங்களை என்பவள் ஒரு ஜார புருஷனை இரவு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். தன் வீட்டையும் கட்டில் படுக்கை முகம் உடல் எல்லாவற்றையும் அலங்கரித்து வைத்துக் கொண்டாள். இரவானதும் பத்து நிமிஷத்துக்கு ஒரு தரம், முன்பு 'உன் வீட்டுக்கு நான் வந்து சேருகிறேன்' என்று சொன்ன ஜாரப் புருஷனை வாசலில் வந்து பார்ப்பாளாம். இப்படிப் பல தடவை பார்த்தும் அவன் வராததனால் அவனிடத்தில் ஆசையைவிட்டு அந்தத் தொழிலையே விட்டுவிட்டாள். 'நிராசா பரமம் ஸுகம்' என்று தேர்ந்தாள். எந்தப் பொருளிலும் ஒரு ஆசையைக் காட்டுவது துர்குணத்தில் சேர்ந்தது. துக்கத்தையும் அளிக்கக் கூடியது என நினைத்து பகவானிடத்திலேயே ஆசையை வைத்து அவள் நன்றாகத் தூங்கினாளாம். 'பிங்களாவத் நிராச: ஸுப்யாம்' என்றனர் பெரியோர். ஆகவே அவளும் ஒரு ஆசார்ய கோஷ்டியில் சேர்ந்தவள். அந்தப் பெயரைக் கொண்டது இந்த வருஷம். பிங்களையைப் போல் வேறு பொருள்களில் ஆசையைவிட்டு பகவானின் திருவடித் தாமரைகளிலேயே அதிக வியாமோகம் பெற்ற நம் ஆசார்ய ரத்தினமான ராமாநுஜன் இந்த வருஷத்தில் அவதரித்தார். 'யோ நித்யம் அச்யுதபதாம் புஜ யுக்மருக் மவ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே' என்பதை நோக்குக.

இந்த ஆசார்யருக்கு இளையாழ்வான், சடகோபன், பொன்னடி, எம்பெருமானார், லக்ஷ்மணமுனி, கோயிலண்ணன், ராமாநுஜன் என்று பல பெயர்கள் உண்டு. இவற்றுள் ராமாநுஜன் என்ற சொல்லைப் பற்றி சிறிது ஆராய்ந்து அவரது அருளைப் பெறுவோமாக.

1. ராமனுடைய தம்பி ராமாநுஜன் என்ற பொருள் கொள்ளும்போது, தசரதபுத்திரனான ராமனின் தம்பி, அதாவது லக்ஷ்மணன்; அவனுக்குச் சமமானவன் என்று பொருள்படும். பலராமனின் தம்பி என்று அர்த்தம் கொண்டால், கிருஷ்ணனுக்குச் சமமானவன் என்று பொருள்படும்.
2. ராமன் எவனுக்குத் தம்பியோ அத்தகையவன் என்று அர்த்தம் கொள்ளும்போது, ராமனுக்கும் தமையன் என்று ஆகும். தசரதனின் புதல்வனான ராமனுக்கும் அண்ணன் - மேம்பட்டவன். ராமனைக் கருணாமூர்த்தி என்று சொல்வது வழக்கம். 'கருணாகாகுத்ஸ்த' என்றார் வேதாந்த தேசிகர். கருணையே உருவாகத் தோன்றிய ராமனையும் இவர் மிஞ்சியவர். மாதவனான ராமன், ஆத்ம அநாத்ம விவேகம் பெற்று நாள்தோறும் பக்தியைச் செய்பவர்களுக்குத் தனது இடமான வைகுண்ட லோகத்தைக் கொடுப்பான். நம் ராமாநுஜரோ தம்மை அடைந்தவர்களை எளிய வழியில் நடத்தி அந்த லோகத்தைத்தமது தகவினாலேயே கொடுப்பார்.

ஞானம் கனிந்த நலங்கொண்டு, நாடோறும் நைபவர்க்கு, வானம் கொடுப்பது மாதவன், வல்வினையேன் மனத்தில், ஈனம் கடிந்த இராமாநுசன் தன்னை எய்தினர்க்கத் தானம் கொடுப்பது, தன்தக வென்னும் சரண்கொடுத்தே என்றது நூற்றந்தாதி. மேலும், 'உன் பெருங்கருணை தன்னை என பார்ப்பர், இராமாநுசா உன்னைச் சார்ந்தவரே' என்றும் சொல்லிற்று. நம்முடைய கெட்ட குணங்களையும் கெட்ட செயல்களையும் அறிவின்மையையும் கவனிக்காமல் இராமாநுஜர் தமது கரையற்ற கருணைக்கடலை கொண்டே நம்மிடத்தில் அநுக்ரகம் செய்கிறார் என்பது இதிலிருந்து ஏற்படுகிறது.

பரசுராமனைவிட மேம்பட்டவர் என்ற பொருளையும் கொள்ளலாம். பரசுராமன் இருபத்தொரு தலைமுறைகள் ஒரு க்ஷத்திரியப்பூண்டும் இல்லாதபடி எதிரிகளை வென்றான். இவர் ஸாங்க்யர் யோகியர் தார்க்கிகர் பௌத்தர் பாசுபதர் ஜைனர் முதலிய வேதவிரோதிகளாகிய எதிரிகளைப் பூமியில் மறுபடியும் முளைக்காதபடி அழித்தார். பரசுராமரால் க்ஷத்திரிய வம்சம் அப்போது அழிந்தபோதிலும் மறுபடியும் முளைத்துவிட்டது. ராமாநுஜராலே அழிக்கப்பட்ட எதிரிகள் மறுபடியும் முளைக்க வழி இல்லாமலே போய்விட்டது.

3. 'ராமை எவருக்குத் தங்கையோ அத்தகையவர்' என்று கொண்டால் மகாலக்ஷ்மியின் அம்சமான கோதைப் பிராட்டி நம் ராமாநுஜருக்குத் தங்கையாகிறாள் என்ற பொறுள் ஏற்படும். 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே' என்பதை நோக்கி இதைத் தெரிந்துகொள்ள வேண்டும். பெரும்பூதூர் மாமுனிக்கு நான் நால்பின் வாழியே என்றும் இதற்கு பொருள் கூறலாம். அதாவது மாமுனி பிறந்த நக்ஷத்ரம் திருவாதுரை. ஆண்டாள் பிறந்த நக்ஷத்ரம் பூரம். ஆக புனர்பூசம், பூசம், ஆச்லேஷம், மகம். நான்கு நக்ஷத்ரங்கள் நடுவில் உள்ளன. ஆகையால் ராமாநுச நக்ஷத்ரத்துக்கு பின் நான்கு நக்ஷத்ரம் கழித்து அவதரித்தவள் என்று ஏற்படும். இப்படி பலபடியாக இந்தப் பதத்திற்குப் பொருள் கூறுவர் பெரியோர். ஆயினும் நாம் இங்கு ஒரு பொருளைக் கூற விரும்புகிறோம்.

ப்ரதமோளச்நந்தரூபஸ்ச த்விதீயோ லக்ஷ்மணஸ் ததா ।
த்ருதீயோ பலராமஸ்ச கலௌ ராமாநுஜோ முநி: ॥

என்ற வசனத்தைப் பார்த்தால், ஆதிசேஷனாகப் பகவானுக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்பவர்தாம் லக்ஷ்மணனாகவும் பலராமனாகவும் ராமாநுஜனாகவும் அவதரித்தார் என்று ஏற்படுகிறது. ஆகவே ஒருவரே நான்கு ரூபம் எடுத்துக்கொண்டு பல கைங்கர்யங்களைச் செய்திருப்பது திண்ணம். இவர்களுள் லக்ஷ்மணனை ராமாநுஜன் என்று சொல்வது வழக்கம். 'ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜம் ச' என்றது ராமாயணம். ஆதிசேஷனையும் ராமாநுஜன் என்று சொல்லலாம். 'ராமாநுஜஸ் த்வாதிசேஷ:' என்றது நிகண்டு. இவர்கள் இருவரையும் எந்தக் காரணத்தை முன்னிட்டு ராமாநுஜன் என்று சொல்லுகிறோமோ அந்தக் காரணத்தை முன்னிட்டே பலராமனையும் நம் ஆசார்யரான இவரையும் ராமாநுஜன் என்கிறோம். லக்ஷ்மணனிடத்தில் ராமாநுஜன் என்ற சொல்லை வழங்குவதற்கு, போஜராஜன் என்ற மகாகவி வழிகாட்டியுள்ளான். அந்தக் கவி இயற்றிய ராமாயண சம்பூவிலுள்ள ஒரு ச்லோகத்தை ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

ஸ்வத ஸ்ஸித்தம் யஸ்மிந் இதர துரவாபம் விஜயதே, ஸுமித்ராபுத்ரத்வாதபி ஜகதி ராமாநுஜபதம் ।
யதீயா க்ஷித்வந்த்வப்ரதிநிதி பவேத் அம்புஜயுகம், நிசீதே நிர்நித்ரம் யதி தமபி ஸாக்ஷாத்க்ருத ஸ: ॥

என்பது போஜராஜனின் அழகிய வாக்கு. ராமாநுஜன் என்ற சொல், ராமனின் தம்பியான லக்ஷ்மணனைச் சொல்வது போலவே பரதனையும் சத்ருக்னனையும் சொல்லலாம். இந்த இருவருங்கூட அண்ணனுக்குத் தம்பி முறையிலன்றோ உள்ளனர்? ஆனால் ராமாநுஜன் என்ற சொல் அவர்களிடத்தில் சேராமல் இருக்கிறது என்பதை, 'இதர துரவாபம்' என்ற பதத்தினால் இந்தக் கவி காட்டுகிறான். எனவே அதற்குக் தக்கவாறு இதற்குப் பொருள் கூற வேண்டுமென ஏற்படுகிறது. இதைச் சிறிது ஆராய மனத்தைச் செலுத்துவோம்.

இங்கு ராமாநுஜன் என்ற இடத்தில் 'ராம' என்ற சொல் தசரதனுடைய புதல்வனான ராமனைக் குறிக்க வந்ததன்று. பின் எதை என்றால், ஸாக்ஷாத் நாராயணனான பரமாத்மாவை. 'ராமோ விராமோ விரஜ:' என்று ஸஹஸ்ரநாமத்தில் ராம: என்ற சொல் பகவானின் பெயராகச் சொல்லப்பெற்றிருக்கிறது. இங்கே, தசரதனுடைய புதல்வன் என்ற பொருள் அல்ல; ஸஹஸ்ரநாமம் அனைத்துமே எம்பெருமானின் குணக்ருதமான பெயரைச் சொல்லுவதற்காக வந்தபடியால். 'யாநி நாமாநி கௌணாநி' என்று ஆரம்பத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் இங்கு ராமபதம் ஏதோ ஓர் அர்த்தத்தைக் கருதி நாராயணனைச் சொல்லுகிறது என்று கொள்ள வேண்டும். 'யோகிகளின் ஹ்ருதயத்தில் அவன் விளையாடுகிறான்; அவர்களை ஆனந்திப்பிக்கிறான்' என்று அர்த்தம்.

பரமசிவன் பார்வதியைப் பார்த்து, 'ராம ராம ராம' என்று மூன்று தடவை சொல்லுவதனாலேயே ஸஹஸ்ரநாமம் சொன்ன பலனைப் பெறலாம் என்றார். அவருடைய கருத்தும் இதையொட்டித்தான். எப்படி ஒரு நாயகன் நாயகியான தன் மனைவியை ஆனந்திப்பிக்கச் செய்கிறானோ, அவளது மனத்தில் விளையாடுகிறானோ, அதுபோலவே பகவானும் நம் மனத்தில் இருந்துகொண்டு விளையாடுகிறான். ஆனந்திப்பிக்கிறான். பரமசிவனிடத்திலும் அப்படித்தான். உண்மையில் நாம் அனைவரும் - பரமசிவன் உட்பட-பகவானுக்கு மனைவியானபடியால் நாயிகா நாயகபாவத்தை இட்டு அர்த்தம் கொள்வது ஸ்வரஸமாகவே அமைகிறது.

மேலும், பரமசிவன் மகாலக்ஷ்மியின் அம்சபூதன் ஆனபடியால் பகவானுக்கு நாயிகையாக ஆகிறான் என்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீஸூக்தத்தில், 'ஆர்த்ராம் ஜ்வலந்தீம், ஆர்த்ராம் புஷ்கரிணீம், ஆர்த்ராம் ய:கரிணீம்' என்று மூன்று இடங்களில் மகாலக்ஷ்மியை 'ஆர்த்ராம்' என்று சொல்லியிருக்கிறது. குளிர்ந்த சுபாவமுள்ளவள், குளிரச் செய்பவள் என்ற இரண்டு பொருள்களை இங்கே சிலர் கூறுவர். ஆயினும் இதில் அவ்வளவு அர்த்தபுஷ்டி இல்லை. இந்த இரண்டு பொருளையும் ஒரு பதமே சொல்லுவதற்குப் போதுமானதன்றோ? ஆகவே வித்யாரண்யபாஷ்யத்தில் ரஸகனமான பொருள் கூறியிருப்பதைச் சுவைத்து இன்புற வேண்டும். 'ஆர்த்ராநக்ஷத்ரோத்பந்நாம் ருத்ரரூபாம் வா' என்று அங்கு அர்த்தம் சொல்லியிருக்கிறது. இதனால், லக்ஷ்மியே பரமசிவரூபமாக விளங்குகிறாள் என்பது ஸ்பஷ்டமாகிறது. பகவானுடைய அம்சமே எல்லா ஜீவர்களும் என்பது ஸூத்ர பாஷ்யாதிகளில் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். 'அம்சோ நாநாவ்யபதேசாத்' என்பது ப்ரஹ்மஸூத்ரம்.

பகவானைப் போலவே அவன் மனைவியான பிராட்டியும் விபு ஆனபடியால் எல்லா ஜீவர்களும் பிராட்டிக்கும் அம்சபூதர்கள். ஆகவே பரமசிவனும் அவளது அம்சமாக ஆகிறான் என்பதில் சந்தேகமே இல்லை. எனவே பிராட்டியின் அம்சமானபடியால் பரமசிவனும் பகவானுக்கு நாயகி ஆகிறான். நாராயணன் அவனது ஹ்ருதயத்தில் ரமிக்கிறான், ஆனந்திப்பிக்கிறான். 'உமையுணர்த்த வண்டலம்பும் தாரலங்கல் நீண்முடியான்தன் பெயரே கேட்டிருந்து அங்கு ஆரலங்கல் ஆனமையால் ஆய்ந்து' என்றார் திருமழிசையாழ்வார்.

ஆகவே, ராம என்ற சொல் நாராயணனைக் குறிக்கிறது என்பது ஸ்பஷ்டமாகிறது. அவனது அநுஜன் என்பதற்கு உடன் பிறந்தவன் என்று அர்த்தம். பிறப்பு என்பது தாயின் வயிற்றிலிருந்து பிறந்தமையைச் சொல்ல வந்ததல்ல. 'அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்' என்று ஆழ்வார் விவக்ஷித்த அர்த்தத்தையே இங்கும் கொள்ளவேண்டும். அதாவது நாராயணனுக்கு நான் அடிமைப்பட்டவன் என்ற அறிவைப் பெற்றவன் என்று தெரிகிறது. 'அஹமஸ்யாவரோ

ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:' என்பதிலிருந்து லக்ஷ்மணனுக்கு இப்படிப்பட்ட அறிவு உண்டு என்பது நன்கு விளங்கும். 'பகவானுக்கு நான் அடிமைப்பட்டவன்' என்ற எண்ணம் எல்லாருக்குமே இருந்தபோதிலும், லக்ஷ்மணனுக்கு இந்த விஷயத்தில் எவ்வளவு தீவிரமான அத்யவஸாயம் இருக்கிறதோ அவ்வளவு மற்றவர்க்கு இல்லை என்பது தெரிந்த விஷயமே. ஸர்வ காலத்திலும் ஸர்வ தேசத்திலும் சேஷத்வஞானம் என்பது ஆதிசேஷனுக்கன்றோ உண்டு? ஆகையால் அல்லவா சேஷன் என்ற பெயர் அவருக்கு உண்டாயிற்று? 'சேஷ இதீர்யதே ஜநை:' என்றார் ஆளவந்தார்.

ஆகையால் அவரது அவதாரமான லக்ஷ்மணனுக்கும் பலராமனுக்கும் நம் ஆசார்யரான இவருக்கும் சேஷன் என்ற பெயரைக் கூறலாமாகையால், ராமாநுஜன் என்ற சொல் ஆதிசேஷனைப் போலே இந்த மூவருக்கும் சாலப் பொருத்தமாகிறது. இதைக் காட்டவேதான் போஜராஜன், 'ஸ்வதஸ்ஸித்தம்' என்று முதலிலேயே குறிப்பிட்டான் என்பது ரஸமான விஷயம்.

எம்பெருமானின் படுக்கையான இவருக்கு பல பெயர் இருந்தாலும் 'சேஷன்' என்கிற பெயரில் விருப்பம் என்றார் ஸுந்தர பாஹு ஸ்தவதில். அநந்தன் என்றும் பெயரில் இவருக்கு அவ்வளவு நோக்கமில்லை. சக்ரவர்த்தி திருமகன் என்றும் தாசரதி என்றும் சொன்னாலும் ராமனுக்கு ப்ரீதியாம். வஸுதேவஸூனு என்றும் பார்த்தஸாரதி என்றும் பாண்டவதூதன் என்றும் சொன்னால் க்ருஷ்ணனுக்கு உகப்பாம். அதுபோல். மேலும் "ராமாநுஜன்" என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள்கூறலாம். ரா மா நு ஜ ன் என்று பதம் பிரித்து மக்களுக்கு ப்ரஹ்மாநந்தமாகிற மோக்ஷத்தைக் கொடுத்து உய்விக்க எம்பெருமான் அநுப்ரவேசம் செய்த அநந்தாழ்வான் (ஆதி சேஷன் என்றும் அதனால் ஆதிசேஷநே ராமாநுஜனாகப் பிறந்தான் என்றும் பொருள் கிடைக்கும். இதனை விரித்து பொருள் கூறும் ப்ரகாரத்தை மற்றொரு சமயம் கூறுவோம்.

நாராயண என்பது நான்கு எழுத்துக்கள் கூடியது. ராமாநுஜ என்பதும் அவ்வாறே. நான்கு அக்ஷரங்களையுடைய நாராயண என்று சொல் இல்லை என்றால் எவ்வாறு மக்கள் அதை உச்சரித்து நற்கதியை அடைய முடியும். இது போலத்தான் ராமாநுஜ என்ற பதமில்லாமலிருந்தால் மக்களுக்கு ஸத்கதி ஏது. இதைச் சொல்லும் ப்ரமாணம்

'நசேத் ராமாநுஜேத்யேதத் சதுரா சதுரக்ஷ ரி
காம் தசாம் ப்ரதியத்யேரன் ஜந்தவோஹந்த மாத்ருசா: I

மேலும் ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம: என்பது த்வயம் மந்த்ரம். வைஷ்ணவர்களான நமக்கு த்வய மந்திரம் வேறு. உச்சரிக்கவேணும் ப்ரகாரம் அந்யாத்ருசம். இதை எப்படி என்பதை ஸ்ரீஸ்வாமி தேசிகன் யதிராஜ ஸப்ததியில் காட்டியுள்ளார். அநுகல்பபூத முரபித்பத் ஸதாம் அஜஹத் த்ரிவர்கம் அபவர்கவைபவம் சலசித்தவ்ருத்தி வினிவர்தனௌஷதம் சரணம் யதீந்த்ர சரணம் விருணிமஹே என்பது. எம்பெருமானுடைய திருவடி எப்படி எல்லாபலத்தையும் கொடுக்குமோ அவ்வாறே ராமாநுஜனுடைய திருவடிகளும் கொடுக்கும் வல்லமை பெற்றது. ஆனால் அந்த சரணம் அமுக்யம். இந்த சரணம் முக்யம். இங்கு அவருடைய ஐதீஹ்யம் காட்டப் பட்டுள்ளது.

திருநாராணபிரத்தில் அரையர் ஒருவர் இருந்தார். அவர் பெருமாளுடன் பேசுவார். பெருமாளும் பேசுவார். அவர் எப்பொழுதும் பாசுரங்களைச் சொல்லி அபிநயம் நயம் செய்வார்.

எம்பெருமானும் இவரது அபநயங்களைப் பார்த்து சிரக்கம்பனம் செய்து ஆடுவார். ஆனால் அரையர் கர்விஷ்டர் இராமாநுஜரிடம் பக்தி இல்லாதவர். பகவானே நம்முடன் பேசும்போது இவர் எதற்கு என்பவர். ஒரு சமயம் எம்பெருமானிடம் எனக்கு மோக்ஷம் உண்டா என்று கேட்டார். பகவானும் இல்லை என்றார். நான் பாடினேனே உம்மைப் பற்றி என்றார். நானும் பதிலாக ஆடனேன் என்றார். ஆனால் என் செய்வது என்று கேட்க ராமாநுஜருடைய திருவடியை ஆச்சர்யத்தால்தான் மோக்ஷம் என்றார். பிறகு அவரை ஆச்சர்யத்து முக்தி பெற்றார்.

*****

# 27. ஜோஸ்யம் பலித்துவிட்டதே!

உலகில் எத்தனையோ கலைகள் விளங்குகின்றன. அவற்றுள் ஜ்தோதிஷமும் ஒன்று. வேதங்களைப் போலவே ஜ்தோதிஷ சாஸ்திரங்களில் சொல்லப்படும் அனைத்தும் உண்மையானவையே. அவற்றில் எதுவும் பொய்யாகாது. இதன் மர்மத்தை அறிந்தவர்கள் ஜ்யோதிஷத்தில் நிபுணர்கள். நன்கு ஆராய்ந்து பார்த்தவர்கள் சொல்லுவதில் அணுவளவும் பிசகு இராது. வேதங்களின் ஆறு அங்கங்களில் ஜ்யோதிஷம் அடங்கியது.

நாம் அனைவரும் வேதங்களில் கூறியிருப்பவை யாவும் உண்மை என்றே கருதுகிறோம். சில மந்தமதிகளுக்கு நம்பிக்கை வருவது கடினமாக இருக்கும். அவர்களுக்கும் இந்த விஷயத்தில் உறுதியான நம்பிக்கை வருவதற்காகவே இஹலோகத்தில் சில பயன்களைக் குறித்து இஷ்டி முதலியவை சொல்லப்பட்டிருக்கின்றன. மழை இல்லாமல் கஷ்டப்படும் காலத்தில் 'காரீரி' இஷ்டியைச் செய்கிறான். புத்திரன் இல்லாதவன் புத்ரகாமேஷ்டியைச் செய்கிறான். பணம் இல்லாதவன் வாயு தேவதாகமான யாகத்தைச் செய்கிறான். செய்தவுடன் அந்த அந்தப் பலன்களைப் பெற்று மகிழ்கிறான். இதனால் சில விஷயங்களில் நம்பிக்கை ஏற்படுகிறபடியால் இதைக் கொண்டு பரலோகத்தில் ஏற்படும் பலன்களும் அதற்கு உபாயங்களும் அந்த வேதங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறபடியால் அவற்றைச் சொல்லும் வேதங்களிலும் த்ருடமான விஸ்வாஸம் உண்டாகும் என்பதில் ஸந்தேஹமில்லை.

இதைப் போலவேதான் வேதாங்கமான ஜ்யோதிஷ ஸாஸ்திரத்திலும் விச்வாஸத்தை வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஜ்யோதிஷ வித்வானிடம் முன்பின் தெரியாத ஒருவன், தன் ஜாதகத்தைக் கொடுத்தால், அவர் அதை நன்கு ஆராய்ந்து பார்த்துப் பலன்களைக் கூறுகிறார். நடந்த விருத்தாந்தங்கள் யாவும் உண்மையாகவே இருக்கின்றன. இதைக் கொண்டு, நடக்கப்போகும் விஷயங்களிலேயும் அவர் சொல்வது உண்மைதான் என்பதில் எப்படி ஸந்தேஹம் ஏற்படும்?

ஆனால் இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு - பல இடங்களிலும் பெரிய விளம்பரப் பலகையைத் தொங்கவிட்டுக் கொண்டு ஜோஸ்யம் பார்ப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இவர்கள் எல்லாரும் சொல்வதில் எல்லாமே உண்மையாக இருக்குமென்று நம்ப முடியாது. ஜ்யோதிஷ நூலில் கரை கண்டு பழகியிருக்க வேண்டும். நல்ல திறமை பெற்றிருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்கள் சொல்வதில் ஒருவித அப்பழுக்கு இராது.

ஜன்ம பத்திரிகை சரியானபடி கணிக்கப் படாமலிருந்தால் பெரிய வித்வான்கள் சொல்வதில்கூடப் பிழை ஏற்பட்டுவிடும். அது அவர்கள் குற்றமன்று. சரியான காலக் குறிப்புகள் இல்லாமையினால் ஏற்படும் குற்றங்கள் அவை. ஆகவே தேர்ச்சி பெற்ற ஜ்யோதிஷப் புலவராக இருக்கவேண்டும். ஜாதகமும் சரியாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்த வித்வான் சொல்லும் பலனும் சரியாகவே அமைந்திருக்கும்.

இப்படிப்பட்ட ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் மயங்காதவர் யாரும் இல்லை. ஜ்யோதிஷ வித்வான் ஒருவருடைய ஜாதகத்தைப் பார்த்துப் பலன்களைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது அங்கே பலர் கூடிவிடுகின்றனர். தங்களுக்கு ஏற்படும் பலன்களையும் அறிய ஆவல் ஏற்படுகிறது. நடந்த விஷயங்களைப் போல் தங்களுக்கு நடக்கப் போவதும் நடந்தே தீரும் என்பதில் ஸந்தேகமே இல்லை. ஆயினும் அதில் ஓர் ஆவல், இவர்களை ஜாதகத்தைப் பார்க்கும்படி

தூண்டிவிடுகிறது. இது உலக இயற்கை. ஸீதையும் ஜோஸ்யத்தில் மயங்கினாள் என்பது ஸ்ரீமத்ராமாயணப் பிரஸித்தம்.

ஸீதாப்பிராட்டி ஸ்ரீராமன் காட்டிற்குச் செல்லும்போது தன்னையும் அவசியம் அழைத்துச் செல்ல வேண்டுமென்று வற்புறுத்துகிறாள். சக்ரவர்த்தி திருமகன் காட்டில் பல கஷ்டங்கள் ஏற்படும் என்று சொல்லியும் ஸீதை கேட்கவில்லை. கடைசியாக அவள் தன் தகப்பனாரின் வீட்டில் இருந்தபோது ஏற்பட்ட ஒரு ஜ்யோதிஷ ஸம்பந்தமான நிகழ்ச்சியைக் கூறுகிறாள் :-

அத சாபி மஹாப்ராஜ்ஞ! ப்ராஹ்மணாநாம் மயா ஸ்ருதம் ।
புரா பித்ருக்ருஹே ஸத்யம் வஸ்தவ்யம் கில மே வநே ।
வநவ வாஸக்ரு தோத்ஸாஹா நித்யமேவ மஹாபல ॥

'நாத! நான் முன்பு தகப்பனார் வீட்டில் இருந்தபோது சில ஜ்யோதிஷ வித்வான்கள் வந்தார்கள்; என் ஜாதகத்தைப் பார்த்தார்கள். 'உயர்ந்த உத்தம புருஷன் இவளுக்குப் பர்த்தாவாக அமைவான். ஆனால் இந்தப் பெண் அந்தப் புருஷனுடன் கொஞ்சகாலம் காட்டிலும் வஸிப்பாள்' என்று சொன்னார்கள். இதைக் கேட்டதும், உத்தம புருஷநே பர்த்தாவாக ஆவான் என்பதில் எல்லாருக்கும் சந்தோஷம் இருந்தபோதிலும், காட்டில் வாஸம் என்று கேட்டதும் கஷ்டம் ஏற்பட்டது. எனக்கும் அப்போது மனத்தில் வருத்தம் உண்டாயிற்று. இப்போது இந்த அயோத்தியில் பன்னிரண்டு வருஷமாக நாம் ஸுகமாக இருந்தபோதிலும், 'ஏகாந்தமாக நாம் இருவரும் காட்டில் எப்போது வாஸம் செய்யப் போகிறோம்? அன்று அந்த வித்வான் சொன்னது பலிக்க வேண்டுமே' என்ற எண்ணத்துடன் இருந்தேன். இப்பொழுது கைகேயியின் வரத்தைக் கேட்டதும், அந்த ஜ்யோஸயம் பலித்துவிட்டதே என்ற மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். ஆகவே நீங்கள் என்னையும் அவசியம் அழைத்துச் செல்ல வேண்டும்." என்று சொல்லுகிறாள்.

ஆகவே, ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் எல்லாரும் மயங்குகிறார்கள் என்றும், அதில் சொல்வது பலித்தே தீரும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

இந்த ஸீதாப்பிராட்டியே, ஸ்ரீராமாயண யுத்தகாண்டத்தில், ராம லக்ஷ்மணர்கள் நாகபாசத்தினால் கட்டுண்டு மூர்ச்சையாகக் கீழே படுத்துக்கொண்டிருக்கும்போது, புஷ்பக விமானத்தில் ஏற்றி வரப்பட்டு அவர்களைப் பார்த்ததும், ஜ்யோதிஷ ஸாஸ்திரமே பொய் என்றும், அந்த நூலை அறிந்தவர்கள் பொய் சொல்லுகிறவர்கள் என்றும் தூஷிக்கிறாள்.

ஊசுர் லக்ஷணிநோ யே மாம புத்ரிண்யவித வேதி ச ।
தேத்ய ஸர்வே ஹதே ராமே ஜ்நானிநோந்ருதவாதிந: ॥
யஜ்வநோ மஹிஷீம் யே மாமூசு: பத்நீம் ச ஸத்ரிண: ।
தேத்ய ஸர்வே ஹதே ராமே ஜ்நாநிநோந்ருதவாதிந:॥
ஊசு: ஸம்ஸ்ரவணே யே மாம் த்விஜா கார்த்தாந்திகா: ஸுபாம் ।
தேத்ய ஸர்வேஹதே ராமே ஜ்நாநிநோந்ருதவாதிந: ॥
வீரபார்த்திவபத்நீத்வம் யே தந்யேதி ச மாம் விது: ।
தேத்ய ஸர்வே ஹதே ராமே ஜ்நாநிநோந்ருதவாதிந: ॥

"ஜ்யோதிஷ வித்வான்கள் என்னை மக்கட்பேறுடையவர்கள், அவிதவை என்று சொன்னார்களே, ஆச்வமேதம் முலிய வேள்விகளை செய்பவனுடைய பத்தினி என்றும் வீர

அரசனின் பத்தினி என்றும் சொன்னார்களே. இப்போது என் பர்த்தா இறந்து கடக்க, அவர்கள் ஜ்யோதிஷம் மூலம் சொன்னது பொய்யாகிவிட்டதே! அவர்கள் அனைவரும் பொய்யர் ஆனார்கள்" என்கிறாள். இதனால் ஜ்யோதிஷம், ஆரூடம், ரேகை முதலிய ஸாஸ்த்திரங்களை நம்பவேண்டாம் சொன்னதாகத் தானே முடிகிறது?

மேலும், ஸாமுத்ரிகா லக்ஷண சாஸ்திரத்தையும், இதைப் போலவே தூஷிக்கிறாள். சிற்சில அங்க அடையாளங்களைக் கொண்டு மனிதனின் பெருமையை அறிவது வழக்கம். ஆஜானுபாகுவாக இருந்தால் உத்தம புருஷனாக இருப்பான். சில மத்ஸ்யங்கள் (மச்சங்கள்) சில சில இடங்களில் இருந்தால் அதைக் கொண்டும் பலனை அறிவதுண்டு. ஸீதையும் தன் உடம்பிலுள்ள அடையாளங்களைக் கொண்டு தன் மேன்மையை நினைத்திருந்தாள். இப்போது ராமன் இறக்க அந்த அடையாளங்கள் யாவும் வீணாயின என்று வருந்துகிறாள்.

> இமாநி கலு பத்மாநி பாதயோர் யை: கில ஸ்த்ரிய: ।
> ஆதிராஜ்யேபிஷிச் யந்தே நரேந்த்ரை: பதிபி: ஸஹ ॥
> வைதவ்யம் யாந்தி யைர் நார்யோ லக்ஷணைர் பாக்யதுர்லபை: ।
> நாத்மநஸ் தாநி பஸ்யாமி பஸ்யந்தீ ஹதலக்ஷணா ॥

இதனால் ஜ்யோஸ்யம் அதனுடன் சம்பந்தப்பட்ட ஸாமுத்ரிகாலக்ஷண சாஸ்திரம் முதலியவை பொய்யானவை என்று ஏற்படவில்லையா என்று சிலருக்குச் சந்தேகம் எழலாம். இதன் உண்மை வருமாறு:-

உண்மையில் ராமன் இறக்கவில்லை என்பது மத்யஸ்தர்களுக்குத் தெரிந்த விஷயம். ராமன் மூர்ச்சையடைந்தான். கருடன் வந்து தொண்டு புரிந்ததும் மூர்ச்சை தெளிந்துவிட்டது. மேலும் யுத்தம் செய்ய ஆரம்பிக்கிறான்; ராவணனை ஸம்ஹரிக்கிறான். ஸீதையுடன் பட்டாபிஷேகத்தையும் செய்துகொள்கிறான். இது எல்லாருக்கும் தெரியும். இவர்கள் மூர்ச்சையுடன் சயனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, இவர்கள் இறந்துவிட்டதாகவே நினைத்து ஸீதை இப்படிக் கூறினாள். 'ஹதே ராமே-ராமன் இறந்தபிறகு' என்று சொன்னாள். உண்மையில் ராமன் இறந்தானா? இல்லை. இவளுக்கு அம்மாதிரி க்ஷணகாலம் தோற்றம் அளித்தான். அது போலவே சாஸ்திரம் பொய் என்றும், அதைச் சொன்ன ஞானிகள் பொய்யர் என்றும் அவள் சொன்னதும் க்ஷணகாலத் தோற்றமே. ஸீதையை த்ரிஜடை ஆச்வாஸப்படுத்தும்போது, "இந்த புஷ்பக விமானம் உன் பர்த்தா உண்மையிலேயே இறந்திருந்தால், உன்னை ஏற்றிக்கொள்ளவே செய்யாது; க்ஷணகாலமும் வைத்துக் கொள்ளாது. உடனே உன்னைக் கீழேத் தள்ளிவிட்டிருக்கும்" என்கிறாள். இதிருலிருந்தே இது ராவணனுடைய மாயை என்பதை ஸீதை உணர்ந்துவிட்டாள்; தெளிவு பெற்றாள்; ஆகையால் இங்கு ராமனும் இறக்கவில்லை; சாஸ்திரம் பொய்யல்ல; சாஸ்திரஜ்ஞரும் பொய்யரல்லர்.

மேலும், 'ஹதே-ராமே - ராமன் இறந்த பிறகு இவர்கள் பொய்யர்கள். ராமே ஹதே ஸதி - ராமன் இறந்திருந்தால் இவர்கள் பொய்யர்கள்' என்று இரண்டு படியாக அர்த்தம் கொள்ளலாம். முதற் படியில், ராமன் இறந்துவிட்டான்; ஆக இவர்கள் பொய்யர் என்றும் ஏற்படும். இரண்டாவது படியில், ராமன் இறந்திருந்தால் இவர்கள் பொய்யர் என்று அர்த்தமாகும். 'சிக்ஷீணாம் புநராத்யாநாம் வாசம் அர்த்தோநுதாவதி' என்ற ரீதியில், இவளுக்கு ராமனுடைய பல-பராக்ரம-ஸௌர்ய-வீர்யங்கள் தெரிந்தபடியால், மேலே வரும் ஸம்பவங்களை அநுஸரித்துத்தான்

இவளுக்கு வாக்ப்ரயோகம் ஏற்பட்டது. இதை அறிந்துதான் வால்மீகியும் இம்மாதிரி பிரயோகித்தார்.

மேலும், 'ஸர்வேஹதே ராமே' என்ற இடத்தில், 'அஹதே ராமே' என்றும் பதம் பிரிக்கலாம். அப்போது அந்ருதவாதிந: என்பது காகு. இப்படி ஸ்வரபேதம் கொண்டால் ஒருவிதச் சிரமமுமில்லை. ராமன் கொல்லப்படாமலிருந்தால் ஞானிகள் பொய் சொல்பவர்களா? ராமே அஹதே ஸதி ஜ்ஞாநிந: அந்ருதவாதிந: கிம்?

இம்மாதிரி பல வகையில் இந்த ச்லோகங்களுக்குப் பொருள் கூறலாமாகையால் எல்லாம் ஸமஞ்ஜஸமாகிறது. 'ஸர்வேஹதே' என்ற இடத்தில் அகாரப்ரஸ்லேஷம் கொண்டு 'அஹதே' என்று கொள்வது உசிதம். காவியங்களிலும் ராமாயணத்தில் பல இடங்களிலும் இம்மாதிரி ப்ரஸ்லேஷம் கொண்டு அர்த்தம் கூறுவது வழக்கம்: ஸ்வரஸம்; ஸந்தர்ப்பாநுகுணமுமாகிறது; அர்த்தத்தை போஷிக்கவும் செய்கிறது. உதாரணமாக இரண்டு இடங்களைக் காட்டுகிறோம் :-

1. ராமன் ஸமுத்திரராஜனிடம் வந்து, 'இலங்கைக்குச் செல்ல வழி கொடு' என்று கேட்கிறான். அதற்காக அன்ன ஆஹாரமின்றி மூன்று தினங்கள் நியமத்துடன் தர்ப்பத்தின் மேல் படுத்துக்கொள்கிறான். அப்பொழுதும் ஸமுத்திரராஜன் தன் ஸ்வரூபத்தைக் காட்டவில்லை. 'ந ச தர்ஸயதே மந்தஸ் ததா ராமஸ்ய ஸா கர: I' என்றார் வால்மீகி.

நாம் இங்கே சிறிது ஆராய்ந்து பார்ப்போம். ராம தூதரான ஆஞ்ஜநேயர் இலங்கைக்குச் சென்று சீதையைப் பார்க்க ஸமுத்திரத்தைத் தாண்ட ஆரம்பித்தார். அப்போது இந்த ஸமுத்திரம் தன்னுள்ளே கிடக்கும் மைநாக பர்வதத்தைப் பார்த்துக் கூறுகிறது:-

> ஸலிலாதூர்த்வம் உத்திஷ்ட, திஷ்டத் வேஷகபிஸ் த்வயி I
> அஸ்மாகம் அதிதிஸ்ஸைவ பூஜ்யஸ்ச ப்லவதாம்வர: II

"மைநாகமே ! உனக்கு மேலும் கீழும் நாற்புறமும் வளர்வதற்குச் சக்தி உண்டு. ஸமுத்திரத்திலிருந்து மேலே எழுந்திரு. இந்தக் குரங்கு உன்னிடத்தில் இளைப்பாறிக் கொண்டு மேலே செல்லட்டும். நமக்கு ஓர் அதிதி கிடைத்திருக்கிறான். இவன் எல்லா வகையிலும் பூஜிக்கத் தக்கவன். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ஸகரராஜாவினால் உண்டுபண்ணப் பட்டவன் நான். எனவே எனக்கு ஸாகரம் என்று பெயர். இஷ்வாகு ஸந்ததியில் பிறந்த ஸ்ரீராமனுக்கு இவன் ஸசிவனாக ஆகிறான். இவனை வரவேற்பது உனக்கும் நன்மையைக் கொடுக்கும்; எனக்கும் மேன்மையைக் கொடுக்கும். இல்லாவிட்டால் என்னை எல்லாரும் பழிப்பார்கள்" என்று சொல்லிற்று.

இப்படிச் சொன்ன ஸமுத்திரராஜன், இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ராமனே நேரில் வந்து தன் வாயால் கெஞ்சிக் கூத்தாடி மூன்று நாள் உபவாஸத்துடன் பிரார்த்தித்தபோதும் தன் வடிவைக் காட்டி வழியைக் கொடுக்கவில்லை. கண்ணனுக்கு யமுனாநதி தானாகவே வழி கொடுத்தது போலன்றோ கொடுக்கவேண்டும்? இந்தத் தோஷத்தை இவனிடத்தில் சுட்டிக் காட்டுவதற்காகவே வால்மீகி இவனை முட்டாள் - 'மந்த:' என்றார். உண்மையிலேயே, ஸமுத்திரராஜன் முட்டாளா? இல்லவே இல்லை. 'அமந்த:' என்று இங்கு பதம். 'சமர்த்தன்' என்று பொருள். சமர்தனானபடியால் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை. யமுனையைக் போல் வழியைக் கொடுத்துவிட்டால் ஸேதுபந்தனம் முதலியவற்றுக்கு வழியே இல்லை.

பிற்காலத்திலுள்ளவர்கூட ராமன் கட்டிய ஸேதுவைப் பார்த்து மோக்ஷத்தை அடைய விரகே இல்லை. பின்பும் ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம் செய்யும்போதும் உலகத்திலுள்ள ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதி, 'ராமா! என் ஸ்வபாவத்தை நான் மாற்றிக் கொள்ள முடியாது. அணையைக் கட்டி அதன் வழியாக இலங்கைக்குச் செல்லலாம்' என்று இவ்வளவே சொல்லிற்று. ஆகவே ஸேது பந்தனம் முதலியவை நடக்கவேண்டும் என்று எண்ணியே மிகவும் ஸாமர்த்தியமாகக் கடல் நடந்துகொண்டது. இதைக் காட்டவே வால்மீகி, 'தர்ஸயதே மந்த:' என்று பிரயோகித்தார். இரண்டு விதமாகப் பிரித்து அர்த்தம் கொள்ளலாம் என்று போலும்.

2. மற்றோர் இடம் :- ஸா மே ந ஸய்யாமாரோடுமிச்சத் யலஸகாமிநீ ।

ராவணன் மந்த்ராலோசனை செய்யும்போது சொல்லும் வார்த்தை இது: 'அந்த ஸீதை என் படுக்கையில் ஏறுவதற்கு விரும்பவில்லை' என்பது இதன் பொருள். 'ஸாமேந' என்ற இடத்தில் 'மே' என்று பதம் பிரித்துப் பொருள் கூறினோம். 'ஸா அமேத ஸய்யாம்' என்றும் பதம் பிரிக்கலாம். 'அந்த ஸீதை அமேந - தரித்ரேண' என்று பொருள். அதாவது ராஜ்யத்தைவிட்டு காட்டுக்கு வந்து ஒருவித ஸம்பத்தும் இல்லாமல் பெரும் தரித்திரனான ராமனோடுகூடப் படுக்கையில் இருக்க விரும்புகிறாள். அல்லது, ஸமாப்யதிகதரித்ரனான புருஷோத்தமனான ராமனோடு படுக்கையில் ஏற விரும்புகிறாள். அதாவது, ஆதிசேஷனாகிய படுக்கையில் பகவானான ராமனுடன் இருந்து விளையாட விரும்புகிறாள் என்றும் பொருள் கூறலாம்.

இப்படிப் பல இடங்களில் அகாரப்ரஸ்லேஷம் செய்து விசேஷார்த்தங்கள் கூறுவது பெரியோர்களின் வழக்கம். அது போல் இங்கும் 'அஹதே ராமே' என்று பதம் பிரித்து அர்த்தத்தை அநுஸந்திப்பது ரஸாவஹமாக இருக்கும்.

ஆகவே எந்தச் சாஸ்திரமும் பொய்யல்ல. அதை நன்கு அறிந்து வஞ்சனையின்றி லோபமின்றிச் சொல்பவர்களும் பொய்யர் ஆகமாட்டார்கள். உதாஹரணமாகப் பஞ்சாங்கத்தைப் பார்த்துக் கொள்வோம். திதி வார நக்ஷத்திரங்களில் ஏதாவது பிசகு ஏற்படுகிறதா? இன்ன கிழமையில் இன்ன நக்ஷத்திரத்தில் அமாவாஸ்யை என்ற இந்தத் திதியில் சூரியக் கிரகணம் ஏற்படும் என்று வெகு நாட்களுக்கு முன்பே குறிப்பிட்டுவிடுகிறார்கள் சாஸ்திரப்படி. அதில் சிறிதளவும் மாறுதல் இல்லாமல் அப்படியே ஏற்படுகிறது. ஸூர்ய சந்த்ர க்ரஹணங்கள் ஆகாசத்தில் எங்கேயே வெகுதூரத்தில் நடக்கின்றன. இங்கிருந்து எத்தனையோ நாட்களுக்கு முன் குறிப்பிடுகிறார்கள். அளவும், காலம் முதலியவையும் மாறுபடுவதில்லை. இவை எல்லாவற்றையும் திடீரென்று ஒருவர் எப்படி சொல்லமுடியும்? இதற்காக ஏற்பட்ட ஜ்யோதிஸ்ஸாஸ்திரம் மூலம் அதனை நன்கு அப்யஸித்தவர்களே சொல்லமுடியும். ஆகவே இது வேதத்துக்குப் பிரதான அங்கமாகச் சொல்லப்பட்டது.

இங்கு சமத்காரமாக ஒரு கதையுண்டு. அதை எழுதுகிறோம். ஓர் ஊரில் ஒரு பிச்சைக்காரன் இருந்தான். தினமும் காலை பிச்சை எடுத்து சாப்பிடுவது வழக்கம். தினமும் காலை எழுந்து தனது வேலையை முடித்துக் கொண்டு போய் பிச்சை எடுப்பது வழக்கம். ஒரு நாள் வழக்கமான வீட்டுக்குப் போனான். வாசல் கதவு உள்ளே தாளிட்டிருந்தது. திறக்கும்வறை கொஞ்சம் உட்கார்ந்திருக்கலாம் என்றெண்ணி வாசல் திண்ணையில் உட்கார்ந்தான். வீட்டுக்குள் ஓர் கிழவி தோசை சுட்டுக்கொண்டிருந்தாள். அப்பொழுது வாணலியில் தோசையை வார்க்கும்போது சொர் என்று சப்தம் வருமல்லவா. இவன் வெளியில் உட்கார்ந்தபோது அந்த சப்தம் காதில் விழுந்தது. இவன் இதைக் கொண்டு தோசை வார்கிறாள் என்பதை ஊகித்தான்.

இப்படி 15 தடவை சொர் என்ற சப்தம் வந்தால் 15 தோசை வார்த்தான் என்று ஊகித்து கொண்டான். பிறகு கதவை திறந்துவிட்டு கிழவி வந்தாள். அவளைப்பார்த்ததும் ஏதாவது பசிக்கு சாப்பாடு கொடு என்று வினவினான். அந்த கிழவி ஒன்றுமில்லை என்றும் போ என்றும் கத்தினாள். அதற்கு இவன் ஏனம்மா பொய் பேசுகிறாய். நான் ஜோஸ்யக்காரன். நீ தோசை வார்த்தாய். அதில் 15 அப்படியிருக்க இல்லை என்கிறாயே, இது நியாயமா என்றான். கிழவியும் நான் தோசை வார்த்தது எப்படி தெரியும், அதிலும் 15 என்று எப்படித் தெரியும் என்று இவன் ப்ரபல ஜ்யோஸ்யக்காரன்தான். சாதாரண பிச்சைக்காரன் அல்லன். என நினைத்து 3 தோசை இவனுக்கு கொடுத்தாள். இதை வாங்கிக் கொண்டு நான் சொன்னது சரிதானே நீயே பார் என்று சொல்லிவிட்டு அதை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தான். அந்த கிழவி ஊரில் எல்லோரிடமும் இவன் சாமான்யமான பிச்சைக்காரன் மாத்ரமல்லன். ஜோஸ்யமும் நன்கு சொல்பவன் என்று வெளியில் ப்ரசாரம் செய்து விட்டாள். ஊரில் நன்கு ப்ரசாரம் ஆகிவிட்டது.

ஒரு சமயம் வண்ணான் ஒருவனுடைய கழுதை தொலைந்துவிட்டது. அவன் தேடியும் காணப்படவில்லை. அப்பொழுது இந்த ஜோஸ்யக்காரன் நினைவு அவனுக்கு வந்தது. வண்ணானும் இவனிடம் கெஞ்சி கூத்தாடி என் கழுதை எங்கு இருக்கிறது கிடைக்குமா என்று எல்லாம் கேட்டான். இரவு வேலையில் கழுதைகள் ஓடிப்போகாமல் இருக்க ஒவ்வொரு கழுதைகளின் காலை ஒன்றோடு ஒன்று சேர்த்து கட்டி வைப்போம். ஒன்றாக இருந்தால் அதன் முன் இரண்டு கால்களை பின்னி வைப்போம். அப்படி செய்யாமல் இருந்துவிட்டேன் என்றும் கேட்டான். இவனும் தான் ஜோஸ்யக்காரன் அல்ல என்பதை தெரியப்படுத்தாமல் நாளை நான் இதற்கு கணிதம் போட்டு சொல்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டான். சாயங்காலம் இவன் அந்த கழுதையை தேட ஆரம்பித்தான். எங்கோ ஒரு மூலையில் மேய்ந்துகொண்டிருந்ததை கவனித்தான். உடன் அதைக் கட்டி தனது தோட்டத்துக்கு ஸமீபத்திலுள்ள குட்டிச் சுவரின் அருகில் கட்டிவிட்டான். மறுநாள் காலை வண்ணான் இவனைக் கேட்க, நான் ஜோஸயம் பார்த்தேன். அதில் தெரியவந்தது - ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ள சுவரின் பக்கத்தில் கட்டப்பட்டுள்ளது. அதை ஓட்டிக்கொண்டு போ என்று பதில் சொன்னான். வண்ணானும் அவன் சொற்படி போய் பார்க்க கழுதை கண்ணில் தெரிந்ததும் வெகு ஸந்தோஷத்துடன் ஓட்டிக்கொண்டு போனான். அதன் பிறகு இந்த ஜோஸ்யகாரன் ப்ரபலமாக ஜோஸ்யம சொல்லுபவன் என்று தம்மட்டை அடித்துவிட்டான்.

ஒரு சமயம் அந்த ஊர் பெரிய அதிகாரி வீட்டில் இரண்டு வெள்ளிப் பாத்திரங்கள் காணாமல் போய் விட்டது. அதிகாரி என்ன செய்வது என்று யோசித்தான். அது சமயம் வேலைக்காரன் இந்த ஜொஸ்யகாரனை புகழந்து பேச அவனும் ஸம்மதித்து இவனை அழைத்து வரச்சொன்னான். வேலைக்காரனும் வெள்ளிப்பாத்திரம் திருடு போனதை இவனிடம் சொல்ல. இவனும் அதிகாரியைப்பார்த்து உனது பாத்திரம் காணாமல் போனதை கண்டு பிடிக்கத்தாநே என்னை வரவழைத்தீர்கள் என்றான். அதிகாரியும் இதை எப்படி இவன் உணர்ந்தான். ஆக இவன் ப்ரபல ஜோதிஷன் என்று நினைத்து அவனிடம் எப்படி போயிற்று அது கிடைக்குமா என்றெல்லாம் கேட்டான். இவனும் 2 தினங்களில் கணித சாஸ்த்திப்படி பார்த்து விடை சொல்கிறேன் என்று சொன்னான்.

பிறகு அதிகாரி, ப்ரபல ஜோதிஷனிடம் சொல்லியிருக்கிறேன். அவர் உண்மையை சொல்லிவிடுவார். திருடனுக்கு பெரிய தண்டனை கொடுக்கப் போகிறேன என்று பறை சாத்தினான். இது விஷயம் ஊரில் பரவ உண்மை திருடன் தன் உள்ளுக்குள்ளே நடுங்கினான். என்ன செய்வது என்பது புரிய வில்லை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். இரவு 9 மணிக்கு

ஜோதிஷனிடம் சரணமடைந்தான். இவனும் கம்பீரமாக அதை என்னிடம் கொடுத்துவிடு. நான் எப்படியாவது சமாளிக்கிறேன் என்று அவைகளை வாங்கிக்கொண்டான். பிறகு மறுதினம் இரவில் அதிகாரியின் தோட்டத்துக்குள் அவைகளை புதைத்தான். அதற்கு மறுநாள் அதிகாரியிடம் சென்று கணித சாஸ்த்திரப்படி பார்த்ததில் உங்கள் தோட்டத்துக்குள் அவை புதைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது என்றான். அதிகாரியும் பார்க்க இவைகளை கண்டு ஸந்தோஷமுற்று அரசனிடம் சொல்ல இவனை ஆஸ்தான ஜோதிஷராக நியமித்தான். இதுதான் ஆச்சர்யம். கால ஸ்திதி எப்படியுள்ளது என்பதை மக்களே பாருங்கள்.

இப்படித்தான் உலகம் நடக்கிறது. ஒரு பொய்யை ஒன்பது தடவை பேசினால் உண்மையாக ஆகிவிடுகிறது. ஏமாற்றம் அடையாதீர்கள். நீங்களும் ஏமார வேண்டாம். மற்றவரையும் ஏமாந்துபோகும்படி செய்ய வேண்டாம்.

வைத்ய சாஸ்த்ரம்போல் ஜோதிஷ ஸாஸ்த்ரமும் உயர்ந்ததுதான். ஆனால் சரிவர கற்றவர்கள் சொன்னால் பலிக்கும். அரைகுரை வைத்யம் கற்றவர்கள் சொல்வது சில சமயம் விபரீதத்தில் முடியும். சில ஜோதிஷர்கள் வாக்கில் சனி இருக்கும் என்பதுண்டு. அவர்கள் எதை சொன்னாலும் அது அப்படியே பலித்துவிடும்.
சில ஸாதுக்கள் மஹான்கள் அவர்கள் நடக்கப் போவதைத்தான் சொல்ல திறமை பட்டவர்கள். சிலர் ருஷப்ராயர்கள். அவர்கள் எதைச் சொன்னாலும் அப்படியே பலித்துவிடும். அது அவ்வளவு ப்ரபாவம் பெற்றவர்கள். முன் சொன்னவர்கள் வாக்கு இருக்கும் அர்த்தத்தை அநுசரித்துதான் வரும். பின் சொன்னவர்களின் வாக்கை அநுசரித்து பொருள் ஏற்படும். இது விசேஷம்.

> லௌகீகாநாம் சாதூநாம் அர்த்தம் வாக் அநுவர்ததே ।
> ருஷீநாம் புனராத்யானாம் வாசம் அர்தோ அநுதாவதி ॥

*****

# 28. ராமாநுஜர் காட்டிய விசிஷ்டாத்வைதம்

நம் பூர்வர்களான நாதமுனிகள் ஆளவந்தார் முதலிய ஆசார்யர்கள் விசிஷ்டாத்வைதம் என்ற நம் சித்தாந்தத்தை பரக்கப் பேசியிருக்கிறார்கள். அதையொட்டி நம் ராமாநுஜரும் ஸ்ரீபாஷ்யம் முதலிய தமது நூல்களில் நன்றாக ஸ்தாபித்திருக்கிறார். ஸ்ரீவைஷ்ணவர்களான நாம் இந்த சித்தாந்தத்தை இசைந்திருக்கிறோம். ஆக விசிஷ்டாத்வைதம் என்ற சித்தாந்தம் நமக்கே உரியதாக தேறியிருக்கிறது. இப்படியிருக்க, 'ராமாநுஜர் காட்டிய விசிஷ்டாத்வைதம்' என்று எழுதினால் இதர மதத்தில் உள்ளவர்களும் விசிஷ்டாத்வைதத்தை இசைந்திருக்கிறார்கள் போல தோன்றுகிறதே, அது அநுபபன்னமாயிற்றே என்று ஐயம் கொள்ளலாம்.

ஆம், விசிஷ்டாத்வைதம் என்ற விஷயத்தை எல்லா மதத்தினரும் இசைந்திருக்கிறார்கள் என்றே கொள்ளவேண்டும். அனைவரும் ஒப்புக் கொண்ட விஷயம் இது. இதில் சந்தேகமே இல்லை. விசிஷ்டாத்வைதம் என்ற சொல்லில் ஒருவருக்கும் வேறுபாடு கிடையாது. பொருளில் மாத்திரம் வேறுபாடு உண்டு. ஆகவே, ராமாநுஜர் காட்டிய விசிஷ்டாத்வைதம், இதர மதத்தில் கூறப்பட்ட விசிஷ்டாத்வைதத்தை காட்டிலும் வேறுபாடு உடையது என்பதை தெரிவிக்கவே இப்படி தலையங்கத்தை அமைத்தோம். இதை அனைவரும் அறியும்படி ஒவ்வொரு மதத்திலும் உள்ள விசிஷ்டாத்வைத ப்ரகாரத்தை எடுத்து விவரிக்கிறோம்,

உலகிலுள்ள மக்கள் உய்ய வேண்டும் என்று எண்ணி எம்பெருமான் ராமாநுஜரை இந்தப் பூஉலகில் அவதரிக்கும்படி செய்தான். அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளளான எம்பெருமானார் வேதாந்தத்தின் விழுப்பொருளான நம் விசிஷ்டாத்வைத சம்பிரதாயத்தை நன்கு வளர்த்து நமக்கு உபதேசித்தார். நாதமுனி ஆளவந்தார் முதலிய பெரியோர்கள் ஏற்கனவே இந்த நம் ஸம்பிரதாயத்தைப் பல கிரந்தங்கள் வாயிலாக உபதேசித்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனபோதிலும் இதரமத நிரஸனபூர்வகம் பல வகைகளிலும் நம் ராமாநுஜர் ஒருவரே இதை ரக்ஷித்தார். 'நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை:. த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை:' என்று ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச்செய்தார்.

தார்க்கிக மதம், ஸாங்க்ய மதம், பாசுபத மதம், பௌத்த மதம், அத்வைத மதம் முதலிய எல்லா மதங்களையும் நிராகரித்து இந்த நம் மதத்தை ராமானுஜர் ஸ்தாபித்தபடியால் நம் விசிஷ்டாத்வைத மதத்திற்கு ரக்ஷணம் ஏற்பட்டது. ஆகையால்தான் ராமாநுஜ மதம் என்றே இதற்கு உலகத்தில் பெயர் விளங்கியது. இதைக் கணிசித்தே, 'ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் | திகந்தவ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ ||' என்று பெரியோர், 'ராமாநுஜருடைய உயர்ந்த ஆஜ்ஞையாகிற விசிஷ்டாத்வைத மதம் உலகமெல்லாம் பரவ வேண்டும்' என்றும், 'ஜனங்கள் உய்ய இது ஹிதமானது' என்றும் கூறினார்கள்.

'காணாதசாக்யபாஷண்டைஸ்த்ரயீதர்மோ விலோபித: | த்ரிதண்டதாரிணா பூர்வம் விஷ்ணுநா ரக்ஷிதா த்ரயீ ||' என்று, எம்பெருமானான மகாவிஷ்ணுவே த்ரிதண்டதாரி ராமாநுஜராகப் பூமியில் அவதரித்து, மூன்று வேதங்களையும் காத்து அருளினான் என்று பெரியோர் கூறுவர்.

> தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும், தாழ்சடையோன்
> சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும், நான் மறையும்
> நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே
> பொற்கற்பகம், எம் ராமாநுஜமுனி போந்தபின்னே.

என்ற திருவரங்கத்தமுமதனாரின் நூற்றந்தாதிப் பாசுரமும் (99) இங்கு நோக்கத்தக்கது.

'தர்க்கவாதங்களைச் செய்யும் ஜைன மதம், பௌத்த மதம், பாசுபத மதம், அத்வைத மதம் முதலிய எல்லா மதங்களுமே ராமாநுஜர் பூமியில் அவதரித்த பிறகு சும்மெனாதே கைவிட்டோடி இருப்பிடம் தெரியாமல் எங்கோ பதுங்கிவிட்டன' என்கிறார். இதில் இங்கு 'நான்மறையும் நிற்கக் குறும்புசெய் நீசரும்' என்பதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். இதனால் அத்வைத மதம் சொல்லப் பெறுகிறது. மற்ற மதங்கள் வேதங்களையே அங்கீகரிக்காமல் தான்தோன்றியாகத் தோன்றின. அவைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. "மூலப்ரமாணமான வேதங்களை இசைந்தும், அவற்றுள் சிலவற்றை ஒப்புப்கொண்டு, சிலவற்றை விட்டு, ஒரு மதத்தைக் கிளப்பி, 'இது தான் வேதாந்தங்களில் ஸாரமாகச் சொல்லப்பெறும் மதம்' என்று சில நீசர்கள் வாதம் புரிகிறார்களே! அந்தோ!" என்று அவர்களை இழிவாகக் கூறுகிறார். இப்படிச் சொல்பவர்கள் வேதங்களில் குறும்பு செய்கிறவர்கள், நீசர்கள்.

வேதங்களில் பல இடங்களில் குறும்பு செய்து அபார்த்தங்களைக் கூறுகின்றனர் பிற மதத்தினர். அவற்றுள் ஒரு விஷயத்தைப் பற்றி எடுத்துக் காட்டுவோம். அவ்விடத்தில் ராமாநுஜர் எவ்வாறு வேதார்த்தத்தைக் கூறி நல்வழியே செல்கிறார் என்பதை இங்கே கவனிப்போம்.

சித், அசித், ஈச்வரன் என்று மூன்று தத்துவங்கள் உள்ளன. போக்தா, போக்யம், ப்ரேரிதா என்று இந்த மூன்றையும் விவரித்துக் காட்டியது வேதம். சித் என்றால் ஜீவாத்மாக்கள். அசித் என்றால் அசேதனப் பொருள். ஈச்வரன் பகவான். நான், நான் என்று இந்த ஆத்மா தனக்குத் தானாகவே தோற்றமளிக்கிறபடியால் இவன் சித் எனப்பெறுகிறான். ஆத்மா ஞானரூபன், ஸ்வயம்ப்ரகாசன். அறிவு இல்லாமையினாலும், தனக்குத் தானாகவே தோற்றமளிக்க வல்லமை அல்லாமையினாலும், ப்ரக்ருதி முதல் ப்ருதிவி பர்யந்தமான பொருள்களும் அதன் பரிணாமங்களும் அசித் என்று சொல்லப் பெறுகின்றன. நான் என்று ஆத்மா தனக்கு மற்றொரு பொருளின் உதவியின்றித் தோன்றுவது போல, கலசம் முதலிய அறிவில்லாத பொருள்கள் தமக்குத் தாமே தோற்றமளிப்பதில்லை என்பது எல்லோருக்கும் ஸ்பஷ்டம். இந்தச் சேதன அசேதனப் பொருளுக்கும் ஈச்வரனுக்கும் ஒருவகையான ஸம்பந்தம் உண்டு. அந்த ஸம்பந்தத்தை சரீராத்மபாவ ஸம்பந்தம் என்பர். அதாவது ஈச்வரன் ஆத்மா; சேதன அசேதனப் பொருள் சரீரம். யஜ்ஞதத்தன், கோபாலன், மாதவன் என்று சிலரை அழைக்கிறோமே, இவர்கள் ஏதோ ஒரு வகையான உடலைப் பெற்றவர்கள். அந்த உடலும் அதை ஏவுகிற ஆத்மாவும் ஒன்றன்று. இந்த உடல் அழியும் பொருள்; அதனுள் இருக்கும் ஆத்மா அழியாதவன். இவ்விருவருக்கும் ஒரு ஸம்பந்தம் உண்டு. அதைத்தான் சரீராத்மபாவ ஸம்பந்தம் என்கிறோம். அது போலவே, சேதன் அசேதனப் பொருளுக்கும் ஈச்வரனுக்கும் சரீராத்மபாவ ஸம்பந்தம். இதை வைத்துக் கொண்டுதான் 'சேதநாசேதநவிசிஷ்டம் ப்ரஹ்ம' என்று சாஸ்திரங்களில் கூறுவது இயல்பு. வைசிஷ்ட்யம் என்றால் ஸம்பந்தம் எனப் பொருள். தண்டவிசிஷ்ட: புருஷ:; ரூபவிசிஷ்ட: கட:' என்று சொல்லும் இடத்தில் 'தடியோடு கூடியவன் புருஷன்; ரூபத்தோடு கூடியது கலசம்' என்று சொல்லுமாப் போலே தடிக்கும் புருஷனுக்கும் உள்ள ஸம்பந்தம் சில சமயம் இருக்கும்; மற்றொரு சமயம் போய்விடும். உடலுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தமும் சரீரம் உள்ளவரைதான் இருக்கும். பிறகு அழிந்துவிடும். ஆனால் பகவானுக்கும் சேதன்-அசேதனப் பொருளுக்கும் உள்ள சரீராத்மபாவ ஸம்பந்தம் என்றைக்கும் ஒழிக்க ஒழியாதது. ஆகவே, 'சேதநாசேதந விசிஷ்டம் ப்ரஹ்ம. சேதன-அசேதனங்களைச் சரீரமாக உடையது, சேதன அசேதனங்களுக்கு ஆத்மாவானது ப்ரஹ்மம்' என்று ஏற்பட்டது. இதைத்தான் நூல்களில்,

'விசிஷ்டம் ப்ரஹ்ம' என்று சொல்லியிருக்கிறது.

இப்படிப் பகவான் எல்லாப் பொருள்களையும் உடலாகக் கொண்டவன் என்பதை விவரிப்பதற்காகவே அந்தர்யாமி ப்ராஹ்மணம் என்ற உபநிஷத்பாகம் வெளிவந்தது; 'யஸ்ய ப்ருதிவீ சரீரம், யஸ்யாப: சரீரம், யஸ்ய தேஜஸ் ஸரீரம்' இத்யாதியாக இப்படி ஸமஸ்தப் பொருள்களையும் பகவான் உடலாகப் பெற்றவன். இவனைத் தவிர மற்றொருவன் இல்லாமையினாலும், 'விசிஷ்டம் ப்ரஹ்ம. ஏகமேவ தத்வம். இப்படிப் பட்ட இவன் ஒருவனே பொருள்' என்று தீர்ந்தது. இதை மனத்தில் கொண்டு நம் வேதாந்த தேசிகன் 'ந்யாயஸித்தாஞ்ஜனம்' என்ற தமது கிரந்தத்தில் முதலில், 'ஸமஸ்தசிதசித்-ப்ரகாரகம் ப்ரஹ்ம ஏகமேவ தத்வம்' என்றார். இதுதான் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம். 'விசிஷ்டஸ்ய அத்வைதம் - ஏகத்வம்' கீழ்க் கூறியபடி விசிஷ்டம் ஒரே பொருள் என்பது நம் ராமாநுஜ ஸித்தாந்தம். 'விசிஷ்டயோ: அத்வைதம்' என்று ஸமாஸம் கூறி, மற்றொரு வகையிலும் பொருள் கூறலாம்.

அநாதியான இந்த ஸம்ஸாரத்தில் ஸ்ருஷ்டி என்றும், பிரளயம் என்றும் இரண்டு தசைகள் உண்டு. பிரளயதசையில் தேவன், மனிதன், மரம், செடி, கொடி, கலசம் வீடு முதலிய பெயர்களும் இல்லை; அப்படிப்பட்ட உருவமும் இல்லை. அதனால் அந்தச் சமயத்தில் சித், அசித் என்ற இரண்டும் ஸூக்ஷ்மமாக இருக்கும். ஸ்ருஷ்டி தசையில் இந்தப் பெயரும் உருவமும் இருக்கிறபடியால். அப்பொழுது ஸ்தூலமாக இருக்கும். இரண்டு தசைகளிலும் ப்ரஹ்மம் என்பது இவற்றை உடலாகவே வைத்துக் கொண்டுள்ளபடியால், ஸூக்ஷ்ம சேதந அசேதந விசிஷ்டமாகவும், ஸ்தூல சேதந அசேதந விசிஷ்டமாகவும் ப்ரஹ்மம் உள்ளது என்பது தேறுகிறது. ஆகவே, ஒரே ப்ரஹ்மத்துக்கு இந்த இரண்டு நிலைகளும் வருகிறபடியால், 'ஸூக்ஷ்ம சேதந அசேதந விசிஷ்டமும், ஸ்தூல சேதந அசேதந விசிஷ்டமும் ஒன்று' என்று பொருள் இசைந்துள்ளார்கள் நம் முன்னோர்கள்.

இப்படி மறைகளில் கூறியிருந்த போதிலும் இதை உணராமல் இருந்துவிட்டனர் அத்வைதிகளும் த்வைதிகளும். அந்தோ! உணரவில்லை என்பது மாத்திரம் அல்ல; தங்களுக்குப் பிரதிகூலமான வேதபாகங்களை அப்ரமாணம் என்றும் சொல்லி விட்டனர். ஆபாஸமான அர்த்தங்களைக் கூறுவதற்கும் இசைந்தனர். இதைத் திருவுள்ளம் கொண்டுதான், 'நான் மறையும் நிற்கக் குறும்புசெய் நீசர்.' என்று அருளினார் அமுதனார்.

"இப்படிச் சேதன அசேதனங்கள் உடல் என்றும், ஈச்வரன் ஆத்மா என்றும், இந்த சரீராத்மபாவம் எப்பொழுதும் அழியாதது என்றும் ஒப்புக் கொண்டால், பிரளயகாலத்திலும் இந்தப் பொருள்கள் இருக்க வேண்டுமாகையால் அப்போது, 'ப்ரஹ்ம ஒன்றுதான்; அது அத்விதீயம்' என்று சொல்லும் ச்ருதிகளுக்குக் கதி என்ன?" என்று அத்வைதிகள் கேட்கின்றனர். அவர்களை விலக்குமாறு - ராமாநுஜ மதத்தைச் சேர்ந்தவர்கள்தாம் விசிஷ்டாத்வைத மதத்தினர் என்று நினைக்க வேண்டாம். அத்வைதிகளும் விசிஷ்டாத்வைத மதத்தினரே. எல்லா ஸித்தாந்திகளும் விசிஷ்டாத்வைதத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். இதில் சந்தேமே இல்லை.

அத்வைதிகளை முன்பு கவனிப்போம். அவர்கள் மூன்று பேர் - மாயாவாதிகள், உபாதிவாதிகள், சக்திவாதிகள் என்று. 'மாயா விசிஷ்டம் ப்ரஹ்ம காரணம்' என்று சங்கர மதாநுயாயிகள் கூறுகின்றனர். 'உபாதிவிசிஷ்டம் ப்ரஹ்ம காரணம்' என்பது பாஸ்கருடைய மதம். 'சக்திவிசிஷ்டம் காரணம்' என்பது யாதவ மதம். இவர்களும் பிரளய காலத்திலும் மாயை, உபாதி, சக்தி என்ற பொருள்களையும் ப்ரஹ்மத்தையும் ஒப்புக் கொள்ளவேண்டியது

அவசியமானபடியால், 'ஏகம், அத்விதீயம்' என்ற ச்ருதிக்குப் பொருள் கூறுவது எப்படி என்ற கேள்வி எழும். மாயை, உபாதி, சக்தி ஆகியவை ப்ரஹ்மத்துக்கு விசேஷணமாகையாலும், ப்ரஹ்மத்தினிடத்தில் பொருந்தியிருக்கிறபடியாலும், அவை தனியாக இல்லாமையினாலும் 'ஏகம்' என்ற ச்ருதிக்கு விரோதமில்லை. 'தடியுடன் கூடிய புருஷன் ஒருவன் வீட்டில் இருக்கிறான்; குண்டலதாரி புருஷன் வந்தான்' என்றால், 'தடி புருஷன், குண்டலம் புருஷன் என்று இரண்டு பொருளாயிற்றே !' என்று கேட்பவர் உண்டோ? என்று பரிஹரிப்பார்கள். இந்தப் பரிஹாரம், 'சேதநா சேதந விசிஷ்டப்ரஹ்மம் ஒன்று' என்று சொல்கிற ராமாநுஜ மதத்திலும் ஒக்கும்.

சுத்தப்ரஹ்மமே உலகத்தை உண்டுபண்ணுகிறது என்று எந்த மதத்திலும் சொல்ல முடியாது. ஸ்வயம்ப்ரகாசமான ப்ரஹ்மம் தன்னை எப்போதும் உள்ளபடி அறிந்து கொண்டிருக்கிறபடியால், தன்னிடத்தில் எப்படிப் பல பேத வஸ்துக்களை உண்டுபண்ண இயலும்? ஆகவே மாயை என்ற ஒரு வஸ்து ப்ரஹ்மத்தை மறைக்கிறது என்று கொள்ளுகை அவர்களுக்கு வேண்டியது. 'உபாதி இல்லாமல் ப்ரஹ்மமே ஜீவனாக மாறுதலை அடைகிறது' என்றால், ஜீவனுக்கு ஏற்படக்கூடிய தோஷங்கள் எல்லாம் ப்ரஹ்மத்துக்கே ஏற்பட்டுவிடும். ஆகவே உபாதி, சக்தி என்ற பொருள்களை அவர்கள் இசைந்தனர். எல்லா இடத்திலும் வியாபித்துள்ள ப்ரஹ்மத்தில் எந்தப் பிரதேசத்தில் உபாதிஸம்பந்தம் ஏற்படுகிறதோ அந்தப் பிரதேசம் ஜீவன் என்பது பாஸ்கர மதத்தின் கொள்கை. போக்த்ரு சக்தி, போக்ய சக்தி, நியந்த்ரு சக்தி என்று மூன்று வகைப்பட்ட சக்தியுடன் கூடியது ப்ரஹ்மம். அந்த அந்த அம்சங்களில் போக்த்ரு-போக்ய-நியந்த்ரு ரூபமாக ப்ரஹ்மமே மாறுதல் அடைகிறது என்பது யாதவப்ரகாச மதம். இப்படியே ஜீவனையும், அவனது புண்ய பாபங்களாகிற கர்மங்களையும் பிரளய காலத்திலும் எல்லோரும் இசைய வேண்டும்.

இப்படி இசையாமல் ஜகத்ஸ்ருஷ்டியை ஒப்புக் கொண்டால், புதியதாக ஜீவனையே படைக்க வேண்டி வரும். அப்போது, 'ஒரு புறம் மனுஷ்யனாகவும், மிருகமாகவும், மற்றொரு புறம் மரமாகவும் ஊமையாகவும் குருடனாகவும் ஜீவர்களைப் படைப்பதற்கு வழி என்ன?' என்ற கேள்வி எழும். 'இதற்கு அவனவன் வினை தான் காரணம்' என்று உத்தரம் சொல்வதொழிய வேறு ஸமாதானம் இல்லை. ஆகவே கர்மத்தையும் அதைக் கொண்ட ஜீவனையும் இசைந்தே தீரவேண்டுமாகையால், பல பொருள்களைப் பிரளயகாலத்தில் அங்கீகரிக்கவேண்டியதாயிற்று. இவர்கள் அனைவரும் அத்விதீயச்ருதியை, 'விசிஷ்டம் ப்ரஹ்ம ஒன்று' என்று சொல்லித்தான் நிர்வகிக்க வேண்டும். இப்படி எல்லா மதத்திலும் 'விசிஷ்ட ப்ரஹ்மமே காரணம்' என்று சொல்ல வேண்டி வருவதனால், அனைவருமே விசிஷ்டாத்வைத மதத்தைச் சேர்ந்தவர்களே. இங்கு, 'சேதன அசேதனங்கள் உண்டு' என்றும், 'ஈச்வரனுக்கு அவை உடல்' என்றும், 'ஈச்வரனே ப்ரதானம், இவை அவனுள் அடங்கியவை' என்றும் மறைகளில் ஸ்பஷ்டமாக கூறியிருக்க, இந்த அர்த்தத்தை விடுத்து, மாயை, உபாதி, சக்தி ஆகியவற்றைக் கல்பித்து அபார்த்தம் கூறுவது எவ்வகையிலுமே பொருத்தமன்று. ச்ருத்யர்த்தத்தை விடுவதும், புதிய அர்த்தத்தைக் கல்பிப்பதும் ஆகிய யாவும் இதர மதத்தினருக்குக் குற்றங்களாக ஆகின்றன. ஆகையால், எல்லா மதத்தினருமே ராமாநுஜர் காட்டிய விசிஷ்டாத்வைத மதத்தில் ஒருவிதத் தோஷமும் கூற முடியாதாகையால், நாம் இதைக் கடைப் பிடிக்கிறோம்.

இந்த அர்த்தத்தை அதிகரணஸாராவளியிலும் தத்வ முக்தாகலாபத்திலும் நம் ஸ்வாமி வேதாந்ததேசிகன் அழகாக அருளிச்செய்திருக்கிறார். அந்த ச்லோகங்களாவன:-

மாயோபாதிஸ்வசக்திவ்யதிகரிதபரப்ரஹ்மமூல: ப்ரபஞ்சோ

யேஷாம் தேப்யத்விதீயச்ருதிமபிததயந்த்யத்ர தத்தத்விசிஷ்டே ।
அப்ராதாந்யாத் ததா ந: ப்ரக்ருதிபுருஷயோரந்தராத்ம-ப்ரதாநே
வாக்யேஸ்மிந் ஸ்தூலஸூக்ஷ்மாந்வய இதி ஜகதோநந்யபாவோபபத்தி:
- அதிகரணஸாராவலீ, அத் 2, பாதம் 1, 13, (166)

ஸாவித்யம் கேபி ஸோபாதிகமத கதிசித் சக்திபிர் ஜுஷ்டமந்யே,
ஸ்வீக்ருத்யைகாத்வீதீயச்ருதிமபி ஜகதுஸ் தத்விசிஷ்டைக்ய-நிஷ்டாம் ।
நித்யத்வம் விக்ரஹத்வம் ப்ரக்ருதிபுருஷயோர் ஹேதுதாம் விஸ்வகர்த்து:,
தத்வைசிஷ்ட்யம் ச சாஸ்த்ரப்ரமிதமஜஹதாம் கோபராதோதிரிக்த: ॥ - தத்வமுக்தாகலாபம்.(172)

*****

# 29. ஸ்ரீபாஷ்யமும் ஸ்ரீபாஷ்யகாரரும்

இருள்தருமா ஞாலத்துள் இருக்கும் மக்கள் அனைவரும் உய்ய எண்ணிப் பகவான் வேதமாகிற விளக்கைக் கொடுத்தருளினான். பகலில் ஏற்படும் சூரியனின் வெளிச்சம், வெளியிலுள்ள பொருள்களைக் காட்டி வெளியிருட்டை நீக்குமேயன்றி அக இருளை நீக்க வல்லதன்று: வேதம் என்ற விளக்கு, எல்லா இருளையும் நீக்கும். இதன் உதவிக் கொண்டுதான் ஆத்ம ஸ்வரூபத்தையும் பகவத்ஸ்வரூபத்தையும் அசேதனப் பொருளையும் அறிந்து நற்கதி பெறுகிறோம்.

வேதம் என்ற விளக்கைப் பகவான் நமக்கு அருளினால் அளித்தபோதிலும், அதன் உண்மைப் பொருளைப் அறிந்து நற்கதி பெறுகிறவர் சிலரே. சிலர் அதன் உண்மைப் பொருளை அறியாமலும், வேறுவிதமான அர்த்தங்களைக் கூறியும், விளக்குப் பூச்சிகளைப் போல் அதிலேயே விழுந்து மாண்டுவிடுகின்றனர்.

வேதம் மூன்று பாகங்களாக அமைந்துள்ளது - கர்ம காண்டம், தேவதா காண்டம், ப்ரஹ்ம காண்டம் என்று. முதல் காண்டமான கர்ம காண்டத்தின் பொருளை எடுத்துக் கூறுவதற்காக ஜைமினி என்ற மகரிஷி ஸூத்ரம் இயற்றினார். தேவதா காண்டம் என்ற இரண்டாவது காண்டத்தை விளக்குவதற்குக் காசக்ருத்ஸ்னர் என்ற மகரிஷி ஸூத்ரம் செய்தார். மூன்றாவதான ப்ரஹ்ம காண்டம் என்ற உபநிஷத்துக்களின் பொருளைக் கூறுவதற்கு வேதவியாஸர் என்ற மகரிஷி ஸூத்ரம் வகுத்தார்.

த்ரயீ என்று சொல்லப்பெறும் வேதத்திற்கு மங்கள ஸூத்ரம் போன்ற ஸூத்ரத்தை அம்ருதம் என்று பெரியோர் சொல்வர். 'பாராசர்யவசஸ்ஸுதாம்' என்றார் ஸ்ரீபாஷ்யகாரர். உலகத்தில் பாணினி ஸூத்ரம், வாத்ஸ்யாயன ஸூத்ரம், கௌதம ஸூத்ரம், ஜைமினி ஸூத்ரம் என்றாற் போல் மகரிஷிகள் செய்த ஸூத்ரங்கள் பல உள்ளன. ஆயினும், ஸூத்ரம் என்றால் ப்ரஹ்மஸூத்ரமே பெரும்பாலும் பெரியோர்களால் குறிக்கப்பெறுகிறது. இந்த ஸூத்ரங்களுக்குப் பாஷ்யங்களைப் பலர் செய்திருக்கின்றனர். அவர்களுக்கு, பாஷ்யகாரர் என்று பெயர். ஆனாலும், ப்ரஹ்ம ஸூத்ரத்திற்குப் பாஷ்யம் இட்டவர்களைத்தான் அடைமொழி இல்லாமல் பாஷ்யகாரர் என்று அழைப்பது வழக்கம். மற்றப் பாஷ்யகாரர்களை மகா பாஷ்யகாரர் என்றும், ந்யாய ஸூத்ர பாஷ்யகாரர் என்றும் அடைமொழியுடன் குறிப்பிடுவார்கள்.

மேலும், மற்றப் பாஷ்யங்களுக்கு, பாஷ்யம் என்றுதான் பெயர். நம் ஸ்ரீராமாநுஜர் இயற்றிய பாஷ்யத்திற்கு 'ஸ்ரீபாஷ்யம்' என்று பெயர். ஆகையாலேயே இவருக்கு 'ஸ்ரீபாஷ்யகாரர்' என்று பெயர். வெறுமனே பாஷ்யகாரர் என்று சொல்லுவதில்லை. ஆகவே ஸ்ரீபாஷ்யம் என்றும், ஸ்ரீபாஷ்யகாரர் என்றும் நம்முடைய பாஷ்யத்தையும், நம் ராமாநுஜரையும் கௌரவத்துடன் சொல்லிப் போற்றுவது வழக்கம். ப்ரஹ்மஸூத்ரம் என்றும், ப்ரஹ்மஸூத்ர பாஷ்யம் என்றும் ஒவ்வொர் அடைமொழியைச் சேர்த்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஸஹஸ்ரநாமம் என்றாலே விஷ்ணு ஸஹஸ்ரநாத்தைத்தான் குறிக்கும். பாகவதம் என்றாலே ஸ்ரீகிருஷ்ணனுடைய கதைகளைச் சொல்லும் ஸ்ரீமத் பாகவதத்தைத்தான் குறிக்கும். அது போலவே இங்கும் அறியத்தக்கது.

விசாலமான மனத்தையுடைய நம் ராமாநுஜர் ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு ஆழ்ந்த கருத்துக்களுடன், வேதங்களுடைய அர்த்தத்தைத் திருவுள்ளத்தில் பற்றி, அழகாக ஸ்ரீபாஷ்யம் என்ற உரையை

இயற்றினார். இந்த ஸ்ரீபாஷ்யத்தை மக்கள் அனைவரும் போற்றுகின்றனர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் உள்ளவர்கள் இதை மிக்க ஆதரவுடன் போற்றுகின்றனர் என்பது மாத்திரம் அல்ல; மதாந்தரத்திலுள்ளவர்களும் இதை ஆதரவுடன் புகழ்கின்றனர். இதில் உண்மையில் ஒருவிதக் குற்றமும் இல்லாமலிருந்தபோதிலும், ஏதாவது ஆபாஸமான குற்றத்தை எடுத்துக் கூறி, இதை நாம் கண்டித்துவிட்டோம் என்று உலகத்தாருக்கு அறிவிக்க, இந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்தியான ஸ்ரீபாஷ்யக்ரந்தத்தை அநுவதிப்பதற்கு எடுத்துச் சொல்லும்போது, 'ஸ்ரீமத்பாஷ்யத்தில், ஸ்ரீபாஷ்யத்தில்' என்றே கூறுவார்கள். அவர்களுக்கும் இது மதிப்பிற்கு உரியதாகவே விளங்குகிறது.

ஒருவன் தன் தாயினிடம் ஏதோ காரணத்தால் வெறுப்புக் கொண்டான். அது முற்றியது. ஒரு சமயம் தாயை அடிக்க எண்ணினான். கையில் தடியையும் எடுத்து ஓங்கிவிட்டான். அப்பொழுது கையில் சுளுக்கு ஏற்பட்டு வலிக்க ஆரம்பித்தது. அவன் அந்த வலி தாங்க முடியாமல் தாயை அடிக்குக் கையை ஓங்கியபோதிலும் 'அம்மே!' என்று கதறுகிறான். அவன் வாயில் வருவது போல், ஸ்ரீபாஷ்யத்தைத் தூஷிக்க நினைக்கிறவர்களும் கௌரவத்துடன் இதை ஸ்ரீபாஷ்யம் என்றே சொல்லுவார்கள்.

வேதங்களால் போற்றப்பெறும் பகவானைத் தூஷிக்க நினைத்த துரியோதனன், கண்ணன் தூது வந்த சமயத்தில், 'அவசா: ப்ரதிபேதிரே' என்ற ரீதியில் தன்னையும் அறியாமல் எழுந்து வணங்கினான். அதுபோலவே, பகவானையும் அவனுடைய கல்யாண குணங்களையும் எடுத்துக்கூற வந்த பாஷ்யத்தைத் தூஷிக்க வந்தவர்களும் ஸ்ரீபாஷ்யம் என்றுதான் தமது க்ரந்தங்களில் எழுதுவார்கள். வைய வந்த வாயும் சூர்ப்பணகை போல் வாழ்த்துமித்தனை. இப்படிப் பட்ட கௌரவத்தைப் பெற்றது ஸ்ரீபாஷ்யம்

தேசாந்தரங்களில் உள்ளவர்களும் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள ஸ்ரீபாஷ்யத்தை மொழிபெயர்த்துப் படித்துப் பார்த்தார்களாம். இப்படியே சங்கரபாஷ்யம், த்வைதபாஷ்யம் முதலியவற்றையும் படித்தார்கள். பிறகு, நம் ராமாநுஜர் செய்த பாஷ்யமே உலக விவகாரத்தை ஓட்டினார்போல் இருக்கிறபடியால் உயர்ந்தது என்று புகழ்ந்தார்களாம்.
ஸ்ரீபாஷ்யம், உபநிஷத்துக்களின் அர்த்தத்துக்கு ஒருவித விரோதமில்லாமலும், பகவானுடைய திருவுள்ளத்திற்கு உகந்தும் இயற்றப் பெற்றிருப்பதனால், முதல் ச்லோகம் ஆரம்பித்துக் கடைசி வரையில் ஒரு தடவை பாராயணம் செய்தாலே மிக்க பரிசுத்தியை அளிக்கும். நாம் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுவோம். ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் பகவத்கீதை முதலிய புனிதக் கிரந்தங்களைப் பாராயணம் செய்வதனால் எந்தப் பலனை அடைவோமோ அந்தப் பயனை இதைப் பாராயணம் செய்தால் பெறலாம். மகாபாவிகளுக்கும் இதன் பாராயணம் பிராயச் சித்தமாகிறது. கங்கை முதலிய புண்ணிய நதிகளில் விசேஷ நாட்களில் ஸங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம், தானம் செய்தால் உண்டாகும் பலனை இது எளிதில் கொடுத்துவிடுகிறது.

ஸ்ரீகிருஷ்ணன் தன் அவதாரத்தை முடித்துக்கொண்டு கடைசியில் தன் இடத்தை அடைந்தான். அப்போது தன் ஒளியைத் தன்பைப் பிரதிபாதிக்கும் பாகவதத்தில் வைத்துவிட்டானாம். 'ஸ்வகீயம் யத் பவேத் தேஜஸ் தச்ச பாகவதே ந்யதாத்' என்பது பிரமாணம். ஸ்ரீராமன் தன் ஒளியை ஸ்ரீமத் ராமாயணத்தில் வைத்துவிட்டானாம். ஆகையாலேயே குசலவர்கள் ராமாயணத்தைப் பாடியபோது, ஒருவருக்கும் தெரியாமல் சிம்மாசனத்தை விட்டுக் கூட்டத்தின் நடுவில் உட்கார்ந்துவிட்டான். இதற்கு என்ன கருத்து என்று ஆராய்ந்தால், 'நான் அவதாரத்தை

முடித்துக் கொண்டுவிட்டேன்; என்னைப் பூஜித்து அடையும் பலனை, என்னைச் சொல்லக்கூடிய ஸ்ரீமத் ராமாயணத்தைப் பூஜித்து அடைவீர்களாக. என் சிங்காசனத்தில் அதை வைத்துப் பாராட்டுங்கள்; என் எல்லாப் பிரபாவத்தையும் அதில் வைத்துவிட்டேன்' என்று. இதைத்தான், 'ஸ சாபி ராம: பரிஷத்கத: சநை:' என்றது ராமாயண ஸ்லோகம்.

இதனால் ஸ்ரீமத் பாகவதம் பகவானான ஸ்ரீகிருஷ்ணனின் திவ்யமங்கள விக்ரஹரூபம்; ஸ்ரீமத் ராமாயணம் ராமனுடைய திவ்ய மங்கள விக்ரஹரூபம் என்று ஏற்படுகிறது. இதுபோலவே ராமாநுஜருடைய ஸ்ரீஸூக்தியான ஸ்ரீபாஷ்யமும் பகவானான பரப்ரஹ்மத்தின் திவ்யமங்கள விக்ரஹரூபம் என்று ஆன்றோர் கூறுவர்: இதனால் இதைத் திருத்தவே மாட்டார்கள். உண்மையில் ஒருவித அசுத்தியும் அதில் இல்லை.

பஞ்சபாண்டவர்கள் த்ரௌபதியுடன் அஜ்ஞாதவாஸத்தைக் கழிப்பதற்காக விராட நகரத்தில் ஒரு வருஷம் வசித்தார்கள். அப்போது விராடராஜனின் புதல்வியான உத்தரையின் கூந்தலை அழகுபடுத்த த்ரௌபதி ஸைரந்த்ரிகை வேஷம் பூண்டாள். இவள் என்ன செய்வது வழக்கமென்றால், கூந்தலை வாருவது, வாசனைத் திரவியங்களைத் தடவுவது, பின்னல் பின்னுவது, புஷ்பங்களைச் சூட்டுவது போன்றன. இப்படிச் செய்பவர்களை ஸைரந்த்ரிகை என்பர். இந்த ஸைரந்த்ரிகை ஸ்தானத்தில் ஸ்ரீபாஷ்யகாரரின் ஸ்ரீஸூக்தி அமைந்துள்ளதாம். இது, வேதவாக்கு என்ற பெண்ணின் கூந்தலைக் கட்டி அழகுபடுத்துகிறது. இதைத்தான், 'சிரந்தநஸரஸ்வதீ-சிகுரபந்த-ஸைரந்த்ரிகா:' என்றார் வேதாந்தசாசிரியர் (யதிராஜஸப்ததி-36). இத்தகைய பெரும் பெருமை வாய்ந்த ஸ்ரீபாஷ்யத்தை முப்பது தடவை காலக்ஷேபம் பிறருக்கு ஸாதித்தார் இந்த ஆசிரியர். இருபத்தெட்டாவது தடவை காலக்ஷேபம் ஸாதித்தபோது தத்வடீகை என்ற உரையை இதற்கு வகுத்தார். இந்த ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்தியில் ஆழ்ந்த பொருள்கள் உள்ளடங்கியிருக்கிறபடியால் எத்தனை தடவை வாசித்தாலும் பண்டிதர்களுக்குத் திருப்தியே உண்டாவதில்லை. ஒவ்வொரு தடவையும் ஸ்ரீஸூக்தியை ஸேவிக்கும்போது புதிய புதிய அர்த்தங்கள் தோன்றும். பரிசயம் செய்யச் செய்யதான் இதன் காடிந்யம் புலப்படும். அதிக பரிசயம் செய்யாதவர்களுக்கு, மேலெழுந்தாற்போல் ஓர் அர்த்தம் தோன்றுமாகையால், 'மிகவும் எளியது இந்த க்ரந்தம்' என்று எண்ணுவார்கள். அதிகமாகப் பரிசயம் செய்பவர்களுக்குத்தான் இதிலுள்ள விசேஷங்கள் புலப்படுமாகையால், இதன் காம்பீர்யம் ரஸிக்கத் தக்கதாக இருக்கும். 'பரிசிதகஹநாந் ந: ப்ரஸ்நுவீத ப்ரஸாதம்' என்றார் வேதாந்தாசிரியர். இந்தக் காரணத்தினால்தான் தமது ஆயுட்காலம் முழுவதையும் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகளிலேயே பொழுதுபோக்கினார். 'யதிப்ரவர பாரதீ ரஸபரேண நீதம் வய:' என்றும், 'நிர்விஷ்டம் யதிஸார்வபௌமவசஸாம் ஆவ்ருத்திபிர் யௌவநம்' என்றும் கூறியருளினார்.

அதிகரணஸாராவளி என்ற க்ரந்தத்தை இயற்றிய பொழுது ஸ்ரீதேசிகன், 'ஸத்யைகாலம்பி பாஷ்யம்' என்று ஸ்ரீபாஷ்யத்தின் பெருமையை மிகவும் சிறப்பாகப் பேசினார். எல்லாப் பாஷ்யங்களைக்காட்டிலும் இந்தப் பாஷ்யத்திற்கு ஏற்றத்தை 'ஸத்யைகாலம்பி' என்ற பதத்தினால் காட்டியருளினார். உண்மையான பரப்ரஹ்மம் என்ற பரம்பொருளை ஸ்தாபிப்பதற்காகவே நம் ராமாநுஜர் இந்த க்ரந்தத்தை இயற்றினார். மற்றப் பாஷ்யங்களுக்கு இந்தப் பெருமை கிடையாது. இதைச் சிறிது விளக்கிக் கூறுவோம்.

அத்வைத மதத்தில் எல்லாவற்றையும் பொய் என்று கூறுகிறபடியால், அவர்களுடைய பாஷ்யம் ஸத்யமான பொருளைக் கூறுவது என்று சொல்ல முடியாது. உண்மையில் ஜகத்தைப் பொய் என்று சொன்னாலும் பரப்ரஹ்மம் உண்மை என்று அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறபடியால்

ஸத்யமான பொருளை அந்தப் பாஷ்யம் கூறுகிறதே என்று சந்தேகப்படலாம். ஆனாலும் ஓர்வகைக் குணமும் இல்லாத பரப்ரஹ்மத்தையே அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறபடியால், குணங்களோடு கூடிய விசேஷ பரப்ரஹ்மத்தை அவர்கள் இசையாத படியால், அத்தகைய உண்மைப் பொருளை அவர்களின் பாஷ்யம் கூறவில்லை. யாதவப்ரகாசருடைய பாஷ்யமும், பாஸ்கரருடைய பாஷ்யமும் உண்மையான ப்ரஹ்மத்தைக் கூறுகின்றன. ஆயினும் அவர்கள் சக்தியையும் உபாதியையும் உண்மைப் பொருள் என்று கூறினாலும், அந்தப் பொருள் பாதிதமாகிறது என்று இசைகிறபடியால், அந்தப் பாஷ்யங்களும் சரியல்ல. ஸத் என்றால் சித் என்று அர்த்தம். தி என்றால் அசித் என்று பொருள். யம் என்றால் இவற்ளை ஏவுகிறவன் என்ற அர்த்தம். இப்படிப் பட்ட சேதன அசேதனப் பொருளை நியமிக்கிற ப்ரஹ்மமே சத்தியம். இந்த அர்த்தத்தைக் கூறுகிறது ராமாநுஜ பாஷ்யம். இதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் 'ஸ்த்யைகாலம்பி பாஷ்யம்' என்று ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தார்.

குல்லாவிற்குத் தகுந்தாற்போல் தலையைச் சீவுவது எங்கும் கிடையாது. தலைக்குத் தகுந்தாற்போல்தான் குல்லாயை வாங்குவது. இது உலக இயற்கை. சங்கரபாஷ்யம் முதலிய ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யங்கள் இதற்கு மாறானவை. அவர்கள் முதலில் அத்யாஸ பாஷ்யம் என்ற ஒரு பூர்வ பீடிகையை ஆரம்பித்துத் தங்கள் மனத்திற்கு ஏற்றாற்போல் ஓர் அர்த்தத்தை நிஷ்கர்ஷம் செய்து கொண்டு, 'இதுதான் வேதாந்தங்களுக்கும் ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கும் ஸாரமான பொருள்' என்று தீர்மானித்தார்கள். அதைக் கொண்டு ப்ரஹ்மஸூத்திரத்திற்குத் தங்கள் அபிப்பிராயத்திற்கு இணங்கப் பொருள் கூறிவிட்டனர். இதற்கு ஏற்றாற்போல், வேதாந்தபாகம் என்ற வேதசிரஸ்ஸான பேதச்ருதியையும் ஸகுண ச்ருதியையும் ப்ரமாணம் இல்லை என்று ஸ்தாபிக்க முயன்றனர். ஆகவே சிரஸ்ஸைக் குல்லாவிற்குத் தகுந்தாற்போல் சேதித்துவிட்டனர். இது அவர்களுடையப் பெருங்குற்றம். நம் ஸ்ரீராமாநுஜர் இம்மாதிரியான குமார்க்கத்தில் இறங்காமல், உபநிஷத்துக்களிலும் அவற்றின் விவரணமான ஸூத்ரங்களிலும் சொன்ன ஸாரமான பொருள்களையே மனத்தில் கொண்டு, ஒவ்வோர் அக்ஷரத்தையும் வியர்த்தமாக்காமல் விவரணம் செய்தார். இதைக் காட்டவே, 'ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே' என்று ஆரம்ப பாஷ்யம் ஏற்பட்டது. இதனால் ஒவ்வோர் அக்ஷரத்திலும் அர்த்தத்தைப் பர்யாலோசனை செய்து பாஷ்யம் இயற்றப் பெறுகிறது. நம் மனத்திற்குத் தோன்றின அர்த்தம் சொல்லப்படுவதில்லை என்பது தெளிவாகிறது.

மந்திரத்திலேயும், அந்த மந்திரத்தில் சொல்லப்பட்ட தேவதையினிடத்திலேயும், அந்த மந்திரத்தை உபதேசித்த ஆசார்யனிடத்திலேயும் பக்தி அவசியம் இருக்கவேண்டும். பக்தி இருந்தால்தான் நற்கதி பெற முடியும: மந்திரத்தின் அர்த்தங்களையும் நன்கு அறிதலும் இயலும். உபநிஷத்தாகிற மந்திரம், அதில் சொல்லப் பெறும் ஸ்ரீமந்நாராயணனான தேவதை, அதை உபதேசித்த பகவான் இந்த மூன்று பேரிடத்திலும் நமக்குப் பக்தி வேண்டும். அதுபோல், வியாஸஸூத்ரத்திலும், அதனால் சொல்லப்பெறும் பரப்ரஹம்த்தினிடத்திலும், இந்த ஸூத்ரத்தை உபதேசித்த வியாஸரிடத்திலும் நமக்குப் பக்தி வேண்டும். இப்படி இருப்பவனுக்குத்தான் வேதாந்த அர்த்தமும் ஸூத்ரார்த்தமும் நன்றாய்ப் புலப்படும். அது மற்றவர்களுக்கு இல்லாத காரணத்தினால், ஸூத்ரார்த்தத்தை நன்கு அறிய அவர்களால் முடியவில்லை. இப்படியே நம் ஸ்ரீபாஷ்யத்திலும் அதில் சொல்லப் பெறும் ஸ்ரீநிவாஸனாகிற பகவானிடத்திலும், இதை உபதேசம் செய்த ஸ்ரீபாஷ்யகாரரிடத்திலும் பக்தி இருப்பவனுக்கே ஸ்ரீபாஷ்யார்த்தம் நன்கு விளங்கும். மற்றவனுக்கு அது சுலபமன்று. 'தத்பாஷ்யம், ஸ ச பாஷ்யக்ருத், ஸ ச ஹரி: ஸம்யக் ப்ரஸீதந்து ந:' என்றனர் பெரியோர்.

இந்த ஸ்ரீபாஷ்யத்தை நம் ராமாநுஜர் அநேக சாஸ்திரங்களில் பரிசயம் பெற்ற கூரத்தாழ்வார் என்ற தம் சிஷ்யரைத் தம் சகாயத்திற்கு வைத்துக் கொண்டு இயற்றினார் என்று பெரியோர் சொல்லுவர். கூரத்தில் அவதரித்த இந் ஆழ்வானுடைய மகிமை வாசாமகோசரமானது. ஸ்ரீபாஷ்யகாரரைவிட இவர் வயதில் முதிர்ந்தவர்; திறமையிலும் அறிவிலும் மிகப் பெரியவர் என்றே சொல்லலாம். இவரது ஸம்பந்தத்தினால்தான் ஸ்ரீபாஷ்யகாரருக்கே அதிகமான ஏற்றம் உண்டாயிற்று என்றும் சொல்லலாம். தரிசனத்திற்காகத் தமது தரிசனத்தை (கண்ணை)க் கொடுத்துக் காப்பாற்றியவர் இவர். இவரைப்பற்றிப் பெரியோர் பணிக்கும் ஒரு ச்லோகத்தை இங்குக் குறிக்கிறோம் -

அர்வாஞ்சோ யத்பதஸர ஸிஜத்வந்த்வ மாச்ரித்ய பூர்வே
மூர்த்நா யஸ்யான்வயமுபகதா தேசிகா முக்திமாபு :
ஸோயம் ராமாநுஜமுநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம்
யத்ஸம்பந்தாத் அமநு தகதம் வர்ண்யதே கூரநாத : ||

எந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடி ஸம்பந்தத்தை அடைந்து பிற்பாடரான ஆசார்யர்கள் மோக்ஷத்தை அடைகிறார்களோ, எந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய திருமுடி ஸம்பந்தத்தை முன்னிட்டு முந்திய ஆசார்யர்கள் மோக்ஷத்தைப் பெற்றார்களோ அப்படிப்பட்ட ராமாநுஜமுனியும் இந்தக் கூரத்தாழ்வானின் ஸம்பந்தத்தினால் தான் தமக்கு ஏற்படும் முக்தி கரஸ்தம் என்று நினைத்தாராம். ஆகவே இவருடைய பெருமை வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதது என்பதில் என்ன சந்தேகம்?

'மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்' என்று திருவரங்கத்தமுதனாரும் ஆழ்வானைப் புகழ்ந்து பேசினார். இப்படி அளவில்லாத பெருமையை இவர் பெற்றார் என்றால் ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பெருமை குறைந்துவிடுமோ என்று நினைக்க வேண்டாம். சிஷ்யனின் பெருமை வளர வளர ஆசார்யனுக்கன்றோ பெருமை அதிகமாகும்? மஹாலக்ஷ்மியைப் பகவானைக்காட்டிலும் உயரந்தவளாகக் கூறினால் பர்த்தாவான பகவானைப் புகழந்ததாகவன்றோ அமையும்? 'சிஷ்யாத் இச்சேத் பராஜயம்' என்றன்றோ சாஸ்திரம் சொல்லுகிறது? இது ஆசார்யனின் ஸ்துதியில் முடியும்.

ஓர் அரையர் பகவானிடத்தில் அதிக பக்தி கொண்டவர்; ஆழ்வார் பாசுரத்தின்படி அபிநயம் செய்து காட்டுபவர். இவர் செய்யும் அபிநயத்தைக் கண்டு பகவான் இவரிடத்தில் மிக்க காதல் கொண்டு இவருடன் பேசத் தொடங்கிவிட்டார். இப்படி நாளடைவில் தம்மிடத்தில் பகவான் நேராகப் பேசுவதைக் கண்டு இவர் கர்வம் கொண்டார். நம்மைவிட மேலானவர் யாருமில்லை என்று மனம் கலங்கினார். இப்படியிருக்க, இவர் பகவானிடத்தில் எல்லாப் பாகவதர்களையும் தூஷிக்க ஆரம்பித்துவிட்டார். நாட்கள் சென்றன. பகவான் இவரைத் திருத்தநினைத்தார். ஒரு சமயம் பகவான் இந்த அரையரைக் கண்டு, "இந்த பாகவததூஷணம் ஆழ்வார்களிடத்திலும் செல்லுமோ?" என்று கேட்டார். அரையர் ஆம் என்றார். "செல்லாமல் என்ன? ஆழ்வார்களும் ஆமஸ்துதியில் இறங்கினவர்களே!" என்றார். "எங்கே?" என்று பகவான் கேட்க, "திருமங்கையாழ்வார் ஒருவரே போதும்" என்றார்.

"செங்கமலத் தயனனைய மறையோர் காழிச்
சீராம விண்ணகரென் செங்கண் மாலை
அங்கமலத் தடவயல்சூழ் ஆலி நாடன்

அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம்
கொங்குமலர்க குழலியர்வேள் மங்கை வேந்தன்
கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன
சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்
தடங்கடல்சூழ் உலகுக்குத் தலைவர் தாமே

என்ற பாசுரத்தைத் தலைசாய்த்து நீர் கேட்டதில்லையோ? இந்த பாசுரத்தில் உள்ள நான்கு அடிகளில், ஓர் அடியால் உம்முடைய குணங்களைக் கூறினார். மற்ற மூன்று அடிகளினாலும் தமது மகிமையைப் பேசிவிட்டார். தம்முடைய பிருதங்களையும் தமக்கு ஏற்படட அசாதாரணமான பெருமைகளையும் பேசித் தம்மைப் புகழ்ந்தாரே தவிர உம்மை அதிகம் புகழவில்லை. இது என்ன பகவத்குணாநுபவம்!" என்றார் அந்த அரையர்.

அப்போது பகவான் புன்சிரிப்புடன், "என் பக்தர்களின் மகிமையைப் பேசுவது என் ஸ்தோத்திரத்தில்தான் முடியும். அது அவர்களுக்குக் குற்றமாகாது. எங்கும் என்னைப் புகழ்ந்து பேசுவது, என் குணங்களைப் பேசுவது, நான் வஸிக்கும் திவ்ய தேசங்களைப் பேசுவது, அங்குள்ள பாகவதர்களைப் பேசுவது, அங்கு நடைபெறும் நானாவிதமான பூஜைகளையும் யாகயஜ்ஞங்களையும் பேசுவது, எல்லாம் என் ஸ்தோத்திரத்தில்தான் கடைசியில் முடியும். இது அவர்களுக்குக் குற்றமன்று" என்றாராம்.

இதைக் கேட்ட அரையர் தலைவணங்கி தம் குற்றத்தை அறிந்து, பாகவதர்களைத் துதிசெய்து ஆராதிக்க ஆரம்பித்தாராம். ஆகவே, பாகவதபூஜை என்பது பகவானின் பூஜையில் முடிகிறது என்பது தெளிவாகிறது. இதுபோலவே ஆழ்வானுடைய மகிமையைச் சொல்லுவது ஸ்ரீபாஷ்யகாரரின் மகிமையில் முடிகிறது என்று கொள்ளவேண்டும்.

மேலும் ஸ்ரீபாஷ்யகாரரின் மகிமையை அநுபவிப்போம். ஒருவன் தாகத்தால் நாக்கு வறண்டிருந்தான். எங்காவது தண்ணீர் கிடைக்குமா என்று பார்த்தான். சிறிது தூரத்தில் ஒரு தடாகத்தைக் கண்டான். தன் வேட்கையைத் தணிக்க ஓடி வந்தான். முதலில் சேறு அதிகமாக இருந்தபடியால் அதில் சிக்கிக் கொண்டான். கஷ்டப்பட்டு அதிலிருந்து வெளிவந்தான். மீன் பிடிப்பதற்காகப் போட்டிருந்த வலையில் மாட்டிக் கொண்டான். மேலும் கஷ்டத்துடன் செல்ல முயன்றான். அங்கு ஒரு யந்திரம் இருந்தது. அதைத் தாண்ட முடியவில்லை. பெருமுயற்சி செய்தும் முடியாமல் அருகிலுள்ள பள்ளத்தில் விழுந்து விட்டான். யாராவது நம்மை இந்தக் கொடிய சிக்கலிலிருந்து விடுவிப்பார்களோ என்று வருந்தினான். அதே சமயத்தில் இவன் செய்கையைக் கண்ட ஒருவன் ஓடோடி வந்து, தடியைக் கொடுத்துப் பள்ளத்திலிருந்து விடுவித்து, இவனை மெதுவாக கரையை அடைவித்தானாம். அதுபோலவே துர்த்தசை பகவானுக்கும் ஏற்பட்டுவிட்டது.

இதர சமயவாதிகளிடம் அகப்பட்டுக் கொண்டான் பகவான். சைவசமயம் என்ற சேற்றில் சிக்கிக் கொண்டான். கபிலர்களின் கற்பனைவலையில் அகப்பட்டான். த்ருஹிணமதமாகிய யந்திரத்தை அடைந்து, தாண்ட முடியாமல் தவித்தான். பள்ளத்திலும் விழுந்தான். அது எந்தப் பள்ளம் என்றால், மாயா வாதிகளாகிற அத்வைதிகளின் வஞ்சனையாகிய பெரும் பள்ளம். இதிலிருந்து வெளிக்கிளம்ப முடியாமல் தவித்துக் கொண்டு, 'ஐயோ! ஸர்வ சக்தனான எனக்கும் இந்தக் கதியா! என்னை மீட்பவர் எவரும் இல்லையா?' என்று கதறினான். அப்போது நம் ராமாநுஜர் தம் கையிலுள்ள த்ரிதண்டத்தைக் கொடுத்துப் பள்ளத்திலிருந்து பகவானை

வெளிக்கிளப்பினார். வலைகளையும் அறுத்தார். யந்திரத்தையும் உடைத்தார். பகவானின் கையைப்பிடித்து அவனுக்கு நற்கதியையும் கொடுத்தார். இப்படி இவர் அவதரித்திராவிட்டால் பகவானின் கதி என்னவாகியிருக்கும்? இதைத்தான் வேதாந்தாசிரியர் யதிராஜ ஸப்ததியில்,

கபர்மத கர்தமம் கபிலகல்பநாவாகுராம்
துரத்யயமதீத்ய தத் த்ருஹிணதந்த்ரயந்த்ரோதரம் l
குத்ருஷ்டிகுஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண:
கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி: ll (38)

என்றார்.

சைவமதச் சேற்றையும், கபிலரின் வலையையும், த்ருஹிணரின் யந்திரத்தையும், குத்ருஷ்டிகளின் வஞ்சனையையும், உபநிஷத்துக்களிலும் அதன் விவரணமான ப்ரஹ்மஸூத்ரங்களிலும் சொல்லப்பட்ட நீதிகளைக் கொண்டு விலக்கினார் யதிராஜர். இவற்றை எடுத்துக்காட்டவே ஸூத்ர வியாக்கியானமாக ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்தார். இவர் இந்த ஸ்ரீபாஷ்யத்தை இயற்றாமலிருந்திருந்தால் பரப்ரஹ்மத்திள் கதி என்ன ஆகியிருக்குமோ ! அது மாத்திரமா? நாமும் அவர்களின் சேற்றிலும் வலையிலும் வஞ்சனையிலும் சிக்கிக்கொண்டு தவித்துக் கொண்டுதான் இருக்க வேண்டியதாகும். பகவான் நம் எல்லோரைக் காட்டிலும் உயர்ந்தவன்; சேஷி; நாம் அவனுக்கு சேஷபூதர்கள்; இதுதான் ப்ரணவத்திற்கு முக்கியமான பொருள்; வேதங்களிலும் சொல்லப் பெறும் விழுப்பொருள். - இந்த அர்த்தத்தைத்தான் ஸூத்ரகாரர் தெளிவாக அருளிச் செய்தார். இதையேதான் ஸ்ரீபாஷ்யகாரர் பலபடியாகப் பல அதிகரணங்களில் எடுத்துக் கூறினார். இந்த அர்த்தத்தை அறிந்தவன் சேற்றில் விழுந்து தவிக்கமாட்டான்; வலை முதலியவற்றில் சிக்கமாட்டான். இதுதான் ஸ்ரீபாஷ்யத்திற்கு ஸாரமான அர்த்தம்.

ப்ரபத்யே ப்ரணவாகாரம் பாஷ்யம் ரங்கமிவாபரம் l
பரஸ்ய ப்ரஹ்மணோ யத்ர சேஷித்வம் ஸ்புடமீக்ஷ்யதே ll

*****

# 30. பகவத்பக்தர்களின் பெருமை

ச்ரிய:பதியான நாராயணன் ஸர்வோத்க்ருஷ்டன் என்பது ச்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் புராணங்களிலும் பரக்கப் பேசப்பட்டுள்ளது. இவன்தான் நித்தியஸூரிகள், முக்தர்கள், பத்தர்கள், மற்றுமுள்ள அசேதனப் பொருள்கள் இவை எல்லாவற்றைக் காட்டிலும் எல்லா விதத்தினாலும் பெருமை பெற்றவன். இவனைக்காட்டிலும் மேம்பட்டவனும் இல்லை; ஸமமானவனும் இல்லை. 'ந தத்ஸமஸ்ச அப்யதிகஸ்ச த்ருச்யதே' என்றது வேதமும்.

இந்த ஈச்வரன் எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்டவன் என்பதை எல்லா அவதாரங்களிலும் தானாகவே காட்டியிருக்கிறான். ஆயினும் ஸ்ரீகிருஷ்ணா வதாரத்தில் இவ்விஷயத்தை ஸ்பஷ்டமாகத் தானே காட்டினான்.

வழக்கமாக, கோகுலத்தில் செய்யும் இந்திரபூஜையை, ஸ்ரீகண்ணனுடைய நியமனத்தின் பேரில் தவிர்த்துக் கோவர்த்தன மலையையே பூஜைசெய்ய, அதனால் கோபம் கொண்ட தேவேந்திரன் ஏழு நாள் விடாமல் பெருமழை பொழிந்திட, ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தனகிரியை எடுத்துக் குடையாகப் பிடித்து ஆநிரைகள், மற்றும் ஆய்ப்பாடியிலுள்ளவர்கள் எல்லாரையும் காப்பாற்றித் தேவேந்திரனின் கர்வத்தை ஒழித்தான். தேவேந்திரன் கண்ணனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அபராதக்ஷாபணம் செய்துகொண்டு போனான்.

இதுபோல, ஒரு துவாதசியன்று அவேளையில் நந்தகோபாலர் யமுனையில் நீராட, வருணபகவான் அவரை எடுத்துச் செல்ல, கோபம் கொண்ட பகவான் வருணனை ஜயித்து அவரை மீட்டு அழைத்து வந்தார்.

தம் ஆசார்யரான ஸாந்தீபனி மகரிஷியின் புத்திரனை எமனிடமிருந்து மீட்டு வந்தார்.
ஒரு ஸமயம் பெருங் காட்டில் தூமகேது போல் பயங்கரமான காட்டுத் தீயினால் பீடிக்கப்பட்ட ஆயர்பாடியிலுள்ளவர்களை அந்த நெருப்பை வாயினால் விழுங்கிக் காப்பாற்றினார்.

பிரம்மதேவர் வத்ஸங்களை அபஹரிக்க, அவரது கர்வத்தை ஒழித்து அவரை ஜயித்தார். பாணாஸுர யுத்தத்தில் தம் பரிவாரங்களுடன் வந்து பாணாஸுரனுக்கு உதவி புரிந்த பரமசிவனை ஜயித்தார்.

இப்படிப் பிரம்மா, சிவன், இந்திரன் முதலிய கர்வமடைந்த தேவர்களை அடக்கி அவர்கள் மூலமாகவே, தானே பரதெய்வம், ஸர்வோத்க்ருஷ்டன் என்பதைக் கிருஷ்ணன் வெளிப்படுத்திக் கொண்டான். ஆகவே, 'பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே' ஆக நின்றான்.

இப்படி இவன் எல்லாரைக்காட்டிலும் மேம்பட்டவனாக நின்றபோதிலும் இவனுக்கு மேற்பட்டவர் ஒருவர் இருக்கிறார். அவர் யார் என்றால், இவனிடம் பக்தி கொண்ட பாகவதர் பக்தர் என்று சொல்லப்பெறுகிற மகான்கள்தான். இந்த மகான்கள் பகவானைக்காட்டிலும் எல்லா விதத்திலும் பன்மடங்கு மேம்பட்டவர். பகவான் தன்னிடம் கூடாத அஸுரப் பிரகிருதிகளை வென்று அவர்களுக்கு மேம்பட்டவனாக நிற்பான். தன்னிடம் ஸ்நேஹபூர்வம் பக்தி செய்து கூடின பாகவதர்களிடம் தோல்வியுற்று நிற்பான். இது ஒரு பெரிய ஆச்சர்யம்.

ஸ்ரீஸஹஸ்ரநாமத்தில் விஜிதாத்மா, விதேயாத்மா என்று படிக்கிறோம் அநுதினமும் நாம். இங்கு வியாக்யானம் செய்யும் ஸ்ரீசங்கர பகவத்பாகவதர், 'அவிதேயாத்மா' என்று பதம் பிரித்து, 'ஈச்வரன் ஸ்வதந்த்ரன்; அவன் எல்லாரையும் அடக்குகிறவன்; தான் ஒருவருக்கும் அடங்காதவன்' என்று பொருள்படும்படி உரையிட்டார்.

நம் ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்ரீபராசரபட்டர், 'விதேயாத்மா' என்றே பதம் பிரித்து, 'அந்த ஈச்வரன் பக்தர்களுக்கு அடங்கினவன், அவர்கள் இட்ட வழக்காக நடப்பவன்' என்று சுவைமிக்க பொருளைக் கொண்டார். இடக்கை வலக்கையறியாத ஆயர்பாடியிலுள்ள கோபஸ்திரீகளிடத்தில் தாஸ்யத்தை யன்றோ இவன் அநுஷ்டித்துக் காட்டினான்! 'தாஸ்யம் கோகுலபும்ஸ்சலீஷு குருஷே' என்றார் லீலாசுகர்.

வேதத்திலும், 'பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம்', என்று பகவான் பக்தபரதந்த்ரன் என்று சொல்லப் பெற்றிருக்கிறது. இங்கு 'ஆத்மேச்வரம்' என்பதற்கு, 'எல்லா ஆத்மாக்களுக்கும் அவன் ஈஸ்வரன்' என்று பொருள் கொள்வது ஸாரமற்றது. இதற்கு ரஸகனமான பொருள் ஒன்றைக் கேண்மின்: ஆத்மா ஈச்வர: யஸ்ய' என்று ஸமாஸம் கொண்டு, 'எவனுக்கு ஜ்ஞாநியான ஆத்மா ஈச்வரனோ-யஜமானனோ' என்று பொருள் கூறினால் சுவைமிக்க பொருள் கிடைக்கும். 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன், வாசுதேவ; ஸர்வம்' என்று சொல்லப்பெற்ற ஜ்ஞாநி இவனுக்கு ஆத்மாவானபடியால் அந்த ஜ்ஞாநியான ஆத்மா, இந்த எம்பெருமானுக்கு ஈச்வரனாக நிற்கிறான். எனவே அந்த ஜ்ஞாநிக்கு இவன் கட்டுப்பட்டவன் என்று தெரிகிறது. இந்தச் சுவை நிறைந்த பொருளை மனத்தில் வைத்துத்தான் ஸ்ரீபராசரபட்டர், விதேயாத்மா' என்று பதம் பிரித்துப் பொருள் உரைத்தார். இப்படி எல்லாரிலும் உயர்ந்த எம்பெருமானுக்கும் மகான்கள் உயர்ந்தவர்கள் என்று ஏற்பட்டது.

ஆகையால்தான் இவ்வளவு மகிமைப் பெற்ற பாகவதர்களிடத்தில் ஒருவிதத்திலும் ஒருபோதும் அபசாரப்படக்கூடாது. ஒரு மனிதன், தான் செய்யக்கூடாத (விடவேண்டிய) விஷயங்களில் முக்கியமானது பாகவத அபசாரம். முக்கரணங்களாலும் பாகவதாபசாரத்தைச் செய்யக்கூடாது. அப்படி நேர்ந்துவிட்டால், அதற்குப் பரிஹாரமாக அவர்களிடத்திலேயே க்ஷமையைப் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும். மற்றத் தெய்வங்களிடத்திலோ பகவானிடத்திலோ அடிபணிந்து வேண்டிக்கொண்டாலும் குற்றம் போகாது; பகவானைக் காட்டிலும் அவர்கள் உயர்ந்தவர்களானபடியால்.

பகவானிடத்தில் குற்றம் செய்துவிட்டால், அது போகப் பகவானிடத்திலும் க்ஷாபணம் செய்து கொள்ளலாம்; பாகவதர்களிடத்திலும் செய்து கொள்ளலாம். பாகவதர்களிடத்தில் அபசாரப்பட்டால், அது நீங்க, அவர்களிடத்திலேயே க்ஷாபணம் செய்துகொள்ள வேண்டும். எல்லாருக்கும் மேம்பட்ட அந்தப் பகவானிடத்தில் வேண்டிக்கொண்டாலும் அந்தக் குற்றம் போகாது.

சீதாப்பிராட்டியினிடத்தில் குற்றம் செய்த காகாஸுரன் இங்குமங்கும் ஓடிக் கடைசியில் அவள் முன்னிலையிலேயே விழுந்தான். சீதாதேவி கருணையினால் 'சிரஸ்ச பாதயோஸ்தஸ்ய யோஜயாமாஸ ஜாநகீ' என்ற ரீதியில், அந்தக் காகத்தினுடைய தலையை ஸ்ரீராமனுடைய திருவடிகளில் சேர்த்துவைத்துவைத்தாள். இப்படி இவள் தன்னிடத்திலே அபசாரப் பட்ட இவனுடைய குற்றத்தைப் பொறுத்து ஸ்ரீராமனின் திருவடிகளில் சேர்ப்பித்தபடியால்தான், இதை உணர்ந்த ராமன் காகத்தை அநுக்ரகித்தான்.

இப்படியே, இவ் விஷயத்தை அம்பரீஷோபாக்கியானத்தினால் தெளிவாக அறியலாம். பகவானால் ஏவப்பெற்ற சக்ராயுதம் அம்பரீஷரிடத்தில் அபசாரப்பட்ட துர்வாஸரைத் துரத்த, தமக்குப் புகலிடம் தேடி அவர் மூன்று உலகங்களிலும் ஓடிக் கடைசியில் பிரம்மாவை அடைந்தார். அங்கே தமக்கு ரக்ஷணம் கிடைக்காமால் பரமசிவனையும் அடைந்தார். பரமசிவன், "மகாவிஷ்ணுவின் சக்ராயுதமானபடியால் அவருக்கு அடங்கிக் கீழ்ப்படிந்திருக்கும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. எனக்குத் தெரிந்த ஓர் உபாயத்தைச் சொல்லுகிறேன். ஸ்ரீமகாவிஷ்ணுவே எல்லாருக்கும் தெய்வம்; ஆனதால் அவரை அடையும்" என்று உபதேசித்து அனுப்பி விட்டார். பிறகு, 'உபாயோஸ்மி ஹரே! ஸ்ம்ருதௌ' என்றபடி, பகவானை அடைய, பரமசிவனும் ஆசார்யனானபடியால் அவர் சொற்படியே பகவானை அடைந்தார். அங்கும் பகவான், "நான் பக்தபராதீனன்; அஸ்வதந்த்ரன்; பக்தர்களான ஜ்ஞாநிகள்தாம் எனக்கு உயிர். அவர்கள் சொற்படிதான் நான் கேட்பவன். பதிவிரதைகளான பெண்கள் எப்படிப் பர்த்தாவை உபசரிக்கிறார்க்ளோ அப்படி என்னை உபசரித்து ஆராதிக்கிறபடியால் அவர்களுக்கு நான் கீழ்ப்படிந்தவன். அதனால் இவ்விஷயத்தில் எதையும் செய்யச் சக்தியற்றவனாக உள்ளேன். ஆனால் இதற்கு ஒரு வழி உண்டு; நீர் எந்தப் பாகவதரான அம்பரீஷரிடத்தில் அபசாரப்பட்டீரோ அவரிடத்திலேயே சென்று மன்னிப்பு கோரினால் ஒருவேளை பரிஹாரம் ஏற்படலாம்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

துர்வாஸர் பகவான் சொற்படி அம்பரீஷரிடம் சென்று மன்னிப்புக் கோர, சக்ராயுதம் சாந்தமாகிவிட்டாது. இதனால் பாகவதர்களிடத்தில் தப்புச் செய்தால் அவர்களிடத்திலேயே மன்னிப்புக் கோர வேண்டும் என்பதைப் பகவானே வெளியிடக் காட்டினார்.

பகவானிடத்தில் அபசாரப்பட்டால் பாகவதரிடத்தில் க்ஷமைகொள்ள அந்த அபசாரம் நீங்கும் என்பதை ஸ்ரீராமபிரான் காட்டியருளினார். வாலிவதத்துக்குப் பிறகு நான்கு மாதகாலம் ஸுகமாக இருந்து பிறகு சீதையைத் தேடலாமென்று ராமர் நியமித்தார். ஸுக்ரீவன் தாரையின் போகமயக்குகளால் நான்கு மாதம் கழிந்தும் அதை உணராமல் ஸமயாதிலங்கனம் செய்துவிட்டான். மிகச் சினங் கொண்ட ராமர் மிகச்சீறி இளையபெருமாளை அனுப்பினார். அவர் ராமருடைய வார்த்தையை ஸுக்ரீவனிடம் சொல்ல, ஸுக்ரீவன் பயந்து, தன் குற்றத்தை க்ஷமித்தருள வேண்டும் என்று வேண்டிக்கோள்ள இளையபெருமாளும் பெருமாளும் சாந்தராக ஆனார்கள்.

கௌதம மகரிஷியின் தர்மபத்தினி அஹல்யை. அவள் தேவேந்திரனிடத்திலுள்ள மோகத்தினால் தன் பர்த்தாவுக்கு துரோகம் செய்தாள். பிறகு கௌதம சாபத்தால் கல்லாக இருந்தவள் ராமபாத தூளியினால் நிஜஸ்வரூபத்தை அடைந்துவிட்டாள். இதனால், பாகவதரிடத்தில் அபசாரப்பட்டாலும் பகவானுடைய அநுக்ரகத்தினால் தப்பு நீங்கிச் சுத்தமாகி விடலாம் என்று ஏற்படுகிறதே என்று சிலர் ஸந்தேஹப்படலாம். இதை நன்கு ஆராய்ந்து உண்மையை உணர வேண்டும்.

கௌதம மகரிஷி அஹல்யையைச் சபித்ததும் அவள் தன் குற்றத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்டாள். பிறகு முனிவர் "ராமர் இங்கு எழுந்தருளும்போது சாபவிமோசனம் ஏற்படும்" என்று அநுக்ரகித்தபடியால்தான் இந்தச் சாபம் ராமபாத தூளிகளால் நீங்கியது. அப்படி அவர் சொல்லாமலிருந்தால் ராமபாத தூளிகள்தாம் என்ன செய்ய முடியும்? ஐயாயிரம் வருஷங்கள் கழித்துக் கங்கையில் நீராடினால் இந்தச் சாபம் போகும் என்றோ, அல்லது இங்கு ஒரு மாமரம் கிளம்பும்; பல வருஷங்கள் கழித்து; அதில் ஒரு பழம் உண்டாகும்; அதை சாப்பிட்டால் உன்

சாபம் நீங்கும் என்றோ அவர் சொல்லியிருந்தால் அப்போது அந்தச் சாபம் எப்படி நீங்கும் என்று நீங்களே சிந்தியுங்கள். அவர் சொற்படி இரண்டில் ஒன்றை செய்தாலல்லவோ பாவம் போகும்? ராமபாததூளிதான் என்ன செய்யும் அப்போது?

எனவே, ராமபாததூளியினால் சாபம் நீங்கியது என்பது கௌதமர் சொற்படியே நடந்தபடியால், இவருக்கு அவளிடத்தில் அபசாரத்தை க்ஷமித்து அநுக்ரகம் ஏற்பட்டது என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது என்பதை உணர வேண்டும்.

ஆகையால் பகவானிடத்தில் அபசாரப்பட்டால் அவரிடமோ பாகவதரிடமோ க்ஷமைகொண்டால் போகும். பாகவதரிடத்தில் அபசாரப்பட்டால் பகவானிடத்தில் க்ஷமைகொண்டால் ஒரு காலும் போகவே போகாது; பாகவதரிடத்திலே க்ஷமைகொண்டால்தான் போகும் என்று இருக்கிறபடியால் பகவானைக் காட்டிலும் பாகவதர்களுக்குப் பெருமை அதிகம்.

சரணாகதி என்பது எல்லாப் பாவங்களையும் நீக்கி வைகுண்டலோகத்தில் பகவதநுபவமாகிய பலனைக் கொடுக்கக் கூடிய உபாயம். இது பகவானிடத்தில் செய்யக்கூடியது. இது எல்லாரும் அங்கீகரித்த விஷயம். பாகவதாபசாரம் ஆகிய கொடிய வினையும் பகவானிடத்தில் க்ஷாபணம் செய்து கொள்வதாகிய சரணாகதியினால் போகவேண்டிய ஒன்றுதானே? அப்படிப் போகாமலிருந்தால் சரணாகதியின் மகிமை குறந்துவிடுமே! ஸ்ரீபாஷ்யகாரரும் கத்யத்தில், "பகவதபசார-பாகவதாபசார-அஸஹ்யாபசாரரூப ... க்ஷமஸ்வ" என்று பாகவதாபசாரமும் பகவானிடத்தில் பண்ணும் சரணாகதியினாலேயே போகும் என்று ஸாதித்திருக்கிறாரே. அப்படி இருக்கப் பாகவதாபசாரம், பாகவதர்களிடத்தில் க்ஷமாபணத்தில்தான் விலகும்" என்று எப்படிச் சொல்ல முடியும்? இதற்குப் பரிஹாரம் கேண்மின்:

ஒருவன் கோடிக்கணக்கான பிறவிகளை எடுத்து இந்தப் பிறவியில் சரணாகதி செய்துகொள்ளுகிறான். கீழ் நடந்த பிறவிகளில் க்ரூரமான பாகவதாபசார அஸஹ்யாபசாரங்கள் கட்டாயம் நேர்ந்தே இருக்கும். இதில் ஸந்தேஹமே இல்லை. ஸ்ரீ ஆளவந்தாரே, "சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பாபகர்மாக்களில் ஒவ்வொன்றையும் ஆயிரம் தடவைகளுக்குக் குறையாமல் நான் செய்திருக்கிறேன். அப்படிச் செய்யப்படாத பாவங்களே இல்லை" என்று சொல்லுவதனால், நம்மைப் போன்றவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆக, முற்பிறவிகளில் செய்த பாகவதாபசாரங்கள் இந்தப் பிறவியில் செய்த பகவத்சரணாகதியினால் போகாவிட்டால் இவனுக்கு நற்கதியே கிடைக்க வழியில்லாமற் போய்விடும். அந்த அந்தப் பிறவிகளில் இருந்த பாகவதர்கள் இப்போது இல்லாததனால் அவர்களிடத்தில் எப்படி க்ஷாபணம் செய்ய முடியும்? பிறவியிலேயே ஏற்பட்ட பாகவதாபசாரம்தான், அந்தப் பாகவதர் பரமபதித்துவிட்டால் அவரிடத்தில் இவன் எப்படி க்ஷாபணம் செய்துகொள்ள முடியும்? ஆக, பாகவதாபசாரம் இரண்டு விதம்; ஒன்று, 'இந்தப் பிறவியில் இந்தப் பாகவதரிடத்தில் அபசாரப்பட்டேன்' என்று, இப்போது நடக்கும் சரணாகதி செய்யும் பிறவியில் அறியப்படாமலிருப்பது. அந்த அந்தப் பிறவியில் செய்யும்போது புத்திபூர்வகமாகத்தான் செய்திருக்கிறான்; ஆனால் இப்போது அது விதிதமன்று. மற்றொன்று, இப்போது இந்தப் பிறவியில் நன்றாகத் தெரிந்தது. அதாவது ஒரு பாகவதரிடத்தில் ஒருவன் புத்திபூர்வகமாக அபசாரத்தைச் செய்தால் பிறகு, அவன் செய்தது ஞாபகத்தில் வருகிறபடியால் இது விதிதமான பாகவதாபசாரம். முன்பு சொன்னது அவிதிதம். இவற்றுள், அவிதிதமான பாகவதாபசாரம் பகவத்சரணாகதியினால் தொலைந்துவிடும். விதிதமானது பாகவதர்களிடத்தில் செய்யும் க்ஷமாபணத்தினால் ஏற்பட்ட அவரது அநுக்கிரகம் வழியாகப் பகவானுக்கு ப்ரஸாதம் ஏற்பட்டுத்

தொலையும். இதைத்தான், 'பகவதபசாரபாகவதாபசார...க்ஷமஸ்வ' என்ற கோர்வையில் சேர்த்து ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்தது.

ஆகையால், அவிதித பாகவதாபசாரமோ இந்தப் பிறவியிலேயே ஏற்பட்டதும், அந்தப் பாகவதர் பரமபதித்தபடியால் அவரிடம் க்ஷாபணம் செய்துகொள்ள முடியாததுமான அபசாரமோ பகவத்சரணாகதியாலேயே போய்விடும். மற்றவை, அவரிடத்திலேயே க்ஷாபணம் செய்து போக்கிக் கொள்ள வேண்டும் என்பது சாஸ்திரங்களில் தேறின பொருள். இதை ஸ்ரீதேசிகன் ஸாதித்துள்ள கத்ய வியாக்யானத்தை நன்கு ஸேவித்து உணர்ந்துகொள்ளலாம்.

*****

# 31. இளைய பெருமாளும் இளையாழ்வானும்

தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரனான இராமனைப் பெருமாள் என்று அழைப்பது ஸம்பிரதாயம். அவன் தம்பியான லக்ஷ்மணனை இளைய பெருமாள் என்பர். நம், ராமநுஜரான லக்ஷ்மணமுனியை இளையாழ்வான் என்று அழைப்பர். இவ்விருவருக்கும் பல வகைகளில் ஒற்றுமை உண்டு. இங்கே சிலவற்றை மட்டும் கூறி, இவ்விருவரின் ஸாத்ருச்யத்தைக் காட்டுகிறோம். இருவருக்கும் ராமாநுஜன் என்ற பெயர் பொருத்தம் உண்டு என்பதை அனைவரும் அறிவர்.

இலக்குவன் ஆதிசேஷனுடைய அவதாரம் என்பது பல பிரமாணங்களினால் பிரசித்தமானது. 'சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம்' என்ற பாசுரப்படி, பாதுகை என்பது ஆதிசேஷனுடைய திருவவதாரம். 'நிவாஸசய்யாஸநபாதுகா' என்று ஆளவந்தார் கூறினார். லக்ஷ்மணனும் பாதுகையும் ஒருவரே என்பதும், பாதுகாஸஹஸ்ரத்திலுள்ள 'பரதசிரஸி லக்நாம் பாதுகே ... ஸ்வதநுமபி வவந்தே லக்ஷ்மண: சேஷபூத:' என்ற ச்லோகத்தால் ஸுவ்யக்தமாகிறது: 'சேஷபூத: லக்ஷ்மண: என்றதனாலும், 'ஸ்வதநுமபி' என்றதனாலும் ஆதிசேஷனே லக்ஷ்மணனாக, அவதரித்தான் என்றும், பாதுகையும் லக்ஷ்மணனும் ஒன்றே என்றும் தெளிவாக ஏற்படுகின்றன அல்லவா? எனவே, லக்ஷ்மணன் ஆதிசேஷ அவதாரம். இது போலவே இளையாழ்வானான ராமாநுஜரும் ஆதிசேஷனின் அவதாரம்.

ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிய திவ்யஸூரி ஸ்தோத்திரத்தில், 'ராமாநுஜன் சேஷாவதாரம்' என்று ஸ்பஷ்டமாகக் காட்டப்படுகிறது. அதில் உள்ள ச்லோகம் - மேஷார்த்ராஸம்பவம் விஷ்ணோர் தர்சநஸ்தாபநோத்ஸுகம் I - துண்டீரமண்டலே சேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே II என்பது.

ஸ்ரீராமாநுஜருக்கு ஸாக்ஷாத் சிஷ்யரான வடுகநம்பி என்று சொல்லப்பெறும் ஆந்த்ரபூர்ணரும் இதைத் தெளிவாகக் காட்டியிருக்கிறார் -

வேதாந்தஸித்தாந்தஸமர்த்தநாய, பாஹ்யாந்தரப்ராந்தமதாபநுத்யை I
சேஷாம்சக: கேசவயஜ்வதேவ்யாம் தேஜோநிதி: கஸ்சிததாவிராஸீத் II என்று
சேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர் வேதி ஸாத்விகை: I
விதர்க்யாய மஹாப்ராஜ்ஞைர் யதிராஜாய மங்களம் II

என்றும் இவரைப் புகழ்ந்திருக்கின்றனர். வேங்கடாத்ரி என்ற மகாகவி தமது விச்வகுணாதர்ச சம்பூவில் இவரைச் சேஷனுடைய அவதாரம் என்றே பணிக்கிறார்.

ராமாநுஜாய குரவே நரவேஷபாஜே, சேஷாய தூதகலயே கலயே ப்ரணாமாந் I
யோ மாத்ருசாநபி க்ருசாந் பரிபாதுகாம:, பூமாவவாதரத் உதஞ்சித போத பூமா II என்று,

இப்படி பல ஆசார்யர்கள் இந்த இளையாழ்வானை சேஷாவதாரம் என்றே ஒருமுகமாக சொல்லுகின்றனர். வேதாந்தாச்சார்யார் மாத்திரம் இவரை சேஷனுடைய அவதாரம் என்று கூறவில்லை.

அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்ச ததாபர: I
பலபத்ரஸ் து கலௌ கஸ்சித் பவிஷ்யதி II

என்று பவிஷ்ய புராணத்தில் இவரைச் சேஷாம்சம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதை அநுஸரித்ததுதான்.

ப்ரதமோ நந்தரூபஸ்ச த்விதீயோ லக்ஷ்மணஸ் ததா ।
த்ருதீயோ பலராமஸ் ச கலௌ ராமாநுஜோ முநி: ॥

என்ற முன்னோர்களின் பாசுரமும்.

வைகுண்ட லோகத்தில் பரம ஆனந்தத்துடன் பர்யங்கத்தில் பக்தர்களும் பாகவதர்களும் சூழப் பரம த்ருப்தராய் இருக்கும் பகவான் தம் பர்யங்கபூதனான எல்லா விதமான கைங்கர்யங்களையும் செய்து சேஷன் என்ற பெயர் பெற்ற ஆதிசேஷனைப் பார்த்து,

ச்ருதிர் நஷ்டா ஸ்ம்ருதிர் லுப்தா ப்ராயேண பதிதா த்விஜா: ।
அங்காநி ச வி சீர்ணாநி ஹா விருத்தோ வர்த்ததே கலீ: ॥

"ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் அழிந்துவிட்டன. அந்தணர்கள் தங்களுடைய நித்ய கர்மாநுஷ்டானங்களை விட்டுவிட்டனர். வேதாங்கங்களும் சிதறிப் போயிந. கலியுகம் மேன்மேலும் விருத்தியடைகிறது. ஆகவே, நீ என் பஞ்சாயுதங்களின் சக்தியை ஏந்திக்கொண்டு உலகத்தில் ராமாநுஜ தரிசனம் என்ற பெயர் விளங்கும்படியாக ராமாநுஜராக அவதரித்து, வேதம், வேதாந்தம், ஸ்ம்ருதி முதலியவற்றுக்குக் காப்பாக உரையிட்டு ஜனங்களை உஜ்ஜீவிக்கும்படி செய்" என்று உத்தரவிட்டார். அதன்படி இவர் அவதரித்தார்.

மந்நியோகாத் பூதபுர்யாம் அஹீநாமீச்வர : கலௌ ।
ஸ்ரீராமாநுஜரூபேன ஜநிஷ்யதி ஸதாம் முதே ॥

இளையபெருமாள் தசரதனுடைய புத்ரகாமேஷ்டி மூலமாகப் பிறந்தவர். ராமாநுஜரும் புத்ரகாமேஷ்டி மூலமாகவே பிறந்தவர். இவரது பிதா ஆஸூரி கேசவாசார்யருக்கு ஸர்வக்ரது என்ற பிருதமும் உண்டு. இவர் காந்திமதி என்ற பெண்மணியை மணந்து இல்வாழ்க்கை நடத்தி வந்தார். வெகு காலமாகியும், சந்ததி இல்லாமலிருந்து, பிறகு பெரியோர்களின் நியமனத்தினால் ப்ருந்தாவன க்ஷேத்திரம் என்று பெயர் பெற்ற திருவல்லிக்கேணியில் புத்ரகாமேஷ்டி செய்து முடித்தார். வேள்வி நிறைவேறியது. அன்றிரவு ஸ்ரீபார்த்தசாரதி, "நானோ என் படுக்கையான ஆதிசேஷனோ உனக்குப் பிள்ளையாகப் பிறந்து வேத வேதாந்தங்களை ரக்ஷிக்க வருகிறோம்" என்று ஸ்வப்னத்தில் சொன்னார் எனற வரலாற்றையும் கண்டுகொள்ள வேண்டும். ஆகவே இருவரும் புத்ரகாமேஷ்டியின் மூலமாகப் பிறந்தவர்கள்.

இளையபெருமாள் விசாலமான மனத்தைப் பெற்றவர் என்பது ராமாயணப் பிரசித்தம். 'என் ஒருவனுக்கு மரணம் வந்தாலும் பாதகம் இல்லை; வம்சத்துக்கே விநாசம் ஏற்படக்கூடாது' என்ற பரந்த மனத்துடன் துர்வாஸர் என்ற மகரிஷியிடம் அவர் நடந்துகொண்டார் என்பது தெளிவானது.

இளையாழ்வானும், "பதிஷ்யே ஏக ஏவாஹம் நரகே குரு-பாதகாத்। ஸர்வே கச்சந்து பவதாம் க்ருபயா பரமம் பதம் ॥" என்று விசாலமான மனத்துடன் மந்திரார்த்தங்களை ஆசார்ய நியமனத்தை உல்லங்கனம் செய்து உபதேசித்தார் என்பது பிரசித்தமானது.

பகவானான ஸ்ரீராமனுடைய திருவடியை அடைவிப்பதற்கு லக்ஷ்மணன் எப்போதும் ராமனை விட்டுப் பிரியாமலே இருந்தார். 'யத்ர ராம' ஸலக்ஷ்மண:' என்றார் வால்மீகி. விபீஷணன் இலங்கையைவிட்டு ராமனிடம் சரணாகதி செய்யச் சமுத்திரத்தின் தென்கரையை அடைந்தான். 'இலக்குவனோடு கூடிய ராமன் இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தான்' என்றார் வால்மீகி. இதன் கருத்து - ராமனை அடைவதற்கு லக்ஷ்மணனுடைய உதவி வேண்டும் என்பது. 'நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய' என்று மற்றோரிடத்தில் கூறினார்.

இளையாழ்வானும் பகவானுடைய திருவடியை நம்மை அடையும்படி செய்கிறார். 'உலகோர்கள் எல்லாம் அண்ணல் ராமாநுசன் வந்த தோன்றிய அப்பொழுதே .. நாரணற்கு ஆயினரே' என்பது நோக்கத் தக்கது. 'இவை என்றனுக்கு அன்று அருளால் தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன் தான் அது தந்து' என்பதையும் நோக்கவேண்டும்,

த்வயமந்திரத்தின் அர்த்தமான சரணாகதியை இளையபெருமாள் இராமன் காட்டுக்குச் சென்றபோது, 'ஸ ப்ராதுஸ் சரணெ காடம் நிபீட்ய ரகுநந்தந: । ஸீதாமுவாச அதியஸா: ராகவம் ச மஹாவ்ரதம் ॥ பவாம்ஸ் து ஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷு ரமஸ்யதே । அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஸ்சதே ॥ என்ற பாசுரங்களை அநுஷ்டித்து விவரித்தார். இளையாழ்வானும் சரணாகதிகத்யம் என்று பெயரிட்டு த்வயார்த்தத்தை உலகுக்குத் தாமே அநுஷ்டித்துக் காட்டினார்.

இளைய பெருமாளை அனுமான் பார்த்து, "இவருக்கு நீர் என்ன ஆவீர்?" என்று கேட்க, "அஹமஸ்யாவரோ ப்ராதாகுணைர் தாஸ்யம் உபாகத:. ராமர் என்னைத் தம் தம்பி என்று நினைத்திருப்பார். அவருடைய குணங்களுக்குத் தோற்று நான் தாஸன் என்று நினைத்திருப்பேன்" என்று பதிலளித்தார் இளைய பெருமாள். இதனால் பகவானுக்கும் தமக்கும் உள்ள ஸ்வஸ்வாமி பாவஸம்பந்தம் சேஷசேஷிபாவஸம்பந்தம் காட்டப்பட்டது. பாஷ்யகாரரும், 'சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ:' என்று இந்த ஸம்பந்தத்தை பல இடங்களில் வெளியிட்டார்.

ராமன் காட்டுக்குச் சென்றபோது, காட்டில் முதலில் ராமனும் பிறகு சீதையும் பிறகு லக்ஷ்மணனும் சென்றதாக 'அக்ரத: ப்ரயயௌ' என்ற ச்லோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ராமாநுஜரும் காசியாத்திரையினின்று தெளிந்து மீண்டு திரும்பி வந்த போது காஞ்சிக்கருகில் முதலில் வேடனுடைய உருவம் தரித்த வரதனும் பிறகு பெருந்தேவியும் பிறகு ராமாநுஜரும் வந்தார்கள் என்பதையும் இங்கு நோக்க வேண்டும்.

லக்ஷ்மணன் ராமனுடைய திருவடிகளில் கைங்கர்யம் ஒன்றைத் தவிர வேறு எதையும் விரும்பவில்லை.

> ந தேவலோகாக்ரமணம் நாமரத்வம் அஹம் வ்ருணே ।
> ஐச்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா ॥

என்றார். பகவானைப் பெற விரும்புகிறவன் மற்றப் பொருள்களில் வைராக்யமும், பகவானிடத்தில் ஆசையும் பெற்றிருக்கவேண்டும். ராமாநுஜரும் பகவானுடைய திருவடிகளில் உண்டான வியாமோகத்தினால் மற்றப் பொருள்களை த்ருணமாக நினைத்தார். 'யோ நித்யம்' என்ற இவருடைய தனியனை இங்கு அநுஸந்திப்பது,

லக்ஷ்மணன் தம் அண்ணனான ராமனுக்குத் தீர்த்தத்தை நதிகளிடமிருந்து எடுத்து வந்து உபசரித்தார். பரதாழ்வான் ராமனைச் சித்திரகூடத்திலிருந்து அழைத்துவர எண்ணி அந்த மலைக்குச் சென்றபோது வஸிஷ்ட முனிவர், கௌஸல்யை முதலிய தேவிகள் அனைவரும் சென்றனர். அங்கே கங்கை நதிக்கரையில் ஸுமித்ரை முதலியானவர்களைப் பார்த்துக் கௌஸல்யை சொல்லும் வார்த்தை -

இத: ஸுமித்ரே புத்ரஸ்தே ஸதா ஜலம் அதந்த்ரித: ।
ஸ்வயம் ஹரதி ஸௌமித்ரிர் மம புத்ரஸ்ய காரணாத் ॥
ஜகந்யமபி தே புத்ர க்ருதவாந் ந து கர்ஹித: ।
ப்ராதுர் யதர்த்தஸஹிதம் ஸர்வம் தத் விஹிதம் குண: (அயோத்யா காண்டம் - 103)

என்பவை அங்குள்ள ச்லோகங்கள். "எப்பொழுதும் சோம்பலில்லாமல் இந்தக் கங்காநதியிலிருந்து என் குமாரனான ஸ்ரீராமனுக்கு உன் புதல்வன் தானாகவே தீர்த்தத்தைக் கொணர்ந்து உபசரிக்கிறான். இப்படித் தீர்த்தத்தைக் கொண்டுவரும் இந்தக் கைங்கர்யம் தோஷத்தை உண்டுபண்ணாது. இது பரிகாசத்திற்கு உரியதாகவும் ஆகாது. உலகத்தில் தண்ணீர் கிடைப்பது துர்லபமாக இருக்கும் காலத்தில் ஒரு குடம் தண்ணீர் கொணர்ந்தால் இரண்டு ரூபாய் கொடுக்கிறேன் என்று பிரபுக்களின் வார்த்தையைக் கேட்டுப் பண ஆசையால் ஒருவன் அம்மாதிரி செய்தால் அது பரிகசிப்பதற்கு உரியதாகும். ஸர்வவித பந்துவாய் ஸர்வஸ்வாமியாக உள்ள எம்பெருமானான ராமனுக்காகக் கொண்டு வரும் கைங்கர்யமானபடியால் இது எல்லோராலும் போற்றக் கூடியதாகவே முடியும்." என்கிறாள்.

ஆளவந்தார் பல சிஷ்யர்களுக்குப் பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதித்து வந்தாராம். அப்பொழுது, 'சுமந்து மாமலர் நீர்சுடர் தீபம் கொண்டு' என்ற திருவேங்கடமுடையான் விஷயமான பாசுரம் நடந்து வந்ததாம். 'நீர் கொண்டு என்று தீர்த்த கைங்கர்யம் சொல்லப்பட்டிருக்கிறபடியால் திருவேங்கடமுடையானுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்வதில் நம்மாழ்வாருக்குப் பேரவா இருந்திருக்க வேண்டும். இதைப் பூர்த்தி செய்து அவரது மனோரதத்தை ஆளவந்தார் நிறைவேற்ற எண்ணினார். காலக்ஷேபம் முடிந்ததும், "திருவேங்கடமுடையானுக்குத் தீர்த்த கைங்கர்யத்தை இந்தக் கோஷ்டியில் யார் செய்யப் போகிறார்கள்?" என்று வினவினார். பெரிய திருமலை நம்பி, "அடியேன் சித்தமாக இருக்கிறேன்" என்று சொல்லி விடைபெற்றுத் திருமலைக்குச் சென்று அந்தக் கைங்கர்யத்தை அழகுடன் செய்து வந்தாராம்.

தினந்தோறும் பாபவிநாசம் என்ற நதியிலிருந்து ஒரு கலசத்தில் இவர் தீர்த்தத்தை எடுத்து வந்து திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பிப்பது வழக்கம். ஒரு நாள் வழக்கம் போல் கலசத்தில் தீர்த்தத்தை எடுத்துச் சென்றார். அப்போது பகவான் வில்லி வேஷம் பூண்டு, அவருக்குத் தெரியாமல் கலசத்தில் துவாரத்தை உண்டுபண்ணி நீரைக் கீழே பெருகும்படி செய்துவிட்டார். கொஞ்ச தூரம் சென்றதும், "தாதா, எனக்கு ரொம்பவும் தாகமாய் உள்ளது. கொஞ்சம் நீர் கொடு" என்றார். அப்போது கலசத்தில் நீரே இல்லை. பெரிய திருமலை நம்பி திக்பிரமம் அடைந்தார். "வெகு தூரத்திலிருந்து தீர்த்தத்தை கொண்டுவந்தேன். திருமலைக்குச் சமீபத்தில் வந்து விட்டேன். கலசத்திலோ நீர் இல்லை. மறுபடி பாபவிநாசம் சென்று கொண்டு வரவும் சக்தி இல்லை. என்ன செய்வது?" என்று கலங்கினார். அப்போது வில்லிவேஷம் பூண்ட பகவான், "பெரியவரே! கவலைப்பட வேண்டாம், நான் பாணத்தைப் பிரயோகம் செய்து இங்கிருந்தே நீரை வரவழைக்கிறேன். இதிலிருந்து தீர்த்தத்தை எடுத்துச் செல்லும்" என்று சொல்லி, ஓர்

அஸ்திரத்தைப் பிரயோகம் செய்தார். திரிவிக்ரமாவதார காலத்தில் கங்கை எப்படி வேகமாகக் கிளம்பிற்றோ அது போல ஆகாசத்திலிருந்து கங்கை விழ ஆரம்பித்தது. இதற்குத்தான் 'ஆகாச கங்கை' என்று பெயர்.

நம்பி மிகவும் விஸ்மயப்பட்டு, இதிலிருந்து நீரைக் கொண்டு சென்றார். அது முதல் உண்மையை உணர்ந்து, பகவானுக்கு இங்கிருந்து தீர்த்தத்தைக்கொண்டு கொடுப்பதுதான் மிகவும் பிரீதியை உண்டுபண்ணும் என்பதை உணர்ந்து, தினமும் அப்படியே செய்ய ஆரம்பித்தார். 'தாதேத்யாமந்த்ர்ய கஸ்சித் வநபுவி த்ருஷிதஸ் தோயவிந்தூந் யயாசே' என்றார் வேங்கடாத்வரி கவி. ஆகையால், பகவானுக்குச் செய்யும் இந்தக் கைங்கர்யம் மிகவும் போற்றத்தக்கது.

இளையாழ்வானும் சாலைக்கிணற்றிலிருந்து, பகவானுடைய அபிப்பிராயத்தை உணர்ந்து, தினமும் தீர்த்த கைங்கர்யம் செய்து வந்தார் என்பது உலகப் பிரசித்தம்.
இப்படிப் பல வகைகளில் இரண்டு ராமாநுஜர்களுக்கும் ஒற்றுமைகள் உள்ளன.

இதை ஸ்ரீதேசிகன் "தத்தம் யேன தயாஸுதாம்பு நிதினா" என்கிற ஸலோகத்தால் காட்டினார். அமிர்தமாகிற கடல் தயை என்னும் அமிர்தம் இதற்கு கடல் ஸ்ரீபாஷ்யகாரர். தேவப் பெருமாளும் கருணைக் கடல். இவர் ஸமர்ப்பித்த அம்ருத ஜலத்தை பருகினார். புஷ்டியை அடைந்தார். கருமுகில் கடல் நீரை பருகும் மலை மீது அமரும். அதிக மழையைக் கொடுக்கும். அது பகவானாகிற கருமுகிலும் அமுத நீரைப் பருகி புஷ்டியை அடைந்து நமது விருப்பத்துக்கும் அதிகமாக நமக்கு பல பலரை பொழிகிறான் என்றார்.

*****

# 32. அனுமனைப் போன்ற ஆசார்யர்

ஸ்ரீவேதாந்தேசிகன் அருளிச்செய்த ஸங்கல்பஸூர்யோதயம் என்ற நாடகத்திலுள்ள 'தர்ப்போதக்ரதசேந்த்ரியாநந மநோநக்தஞ்சராதிஷ்டிதே' என்ற ச்லோகத்திலுள்ள ஒரு பகுதி 'ஹநுமத்ஸமேந குருணா' என்பது. இந்த ச்லோகத்தில் ராமாயணத்தின் ஸாரம்-அதிலும் ஸுந்தர காண்டத்தின் ஸாரதமமான அர்த்தம்-வெளியிடப் பெற்றிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே.

பத்துத் தலையுடைய ராவணன் கடல்சூழ்ந்த இலங்கை என்ற நகரை ஆண்டு வந்தான். அவன் அதர்ம மார்க்கத்தில் நின்று, ராமனுடைய தாரமான சீதையை அபகரித்துச் சென்றான். சீதைக்கு உடையவனான ராமன் தனக்கு ஆப்தனான அனுமனை அனுப்பித் தன் பொருளான சீதைக்குத் தேற்றுதல் சொல்லியனுப்பினான். சீதை சில அடையாளங்களைக் கூறித் தன்னை ராமன் அடைய வேண்டுமென்று சொல்லியனுப்பினாள். ராமன் இலங்கைக்குச் சென்று, ராவணனை கொன்று, சீதையை பெற்றுக் கொண்டான். இது ராமாயணக் கதையின் சாரம்.

ஸ்ரீராமாயணத்தை மேல்விழுந்தாற்போல் பார்த்தால் இது புலப்படும். உள்ளே பிரவேசித்து ஆராய்ச்சி செய்தால், வேதாந்தத்தில் சொல்லப்பெறும் ஸாரமான அர்த்தங்களைக் காணலாம். இலங்கை என்பது ஒன்றுதான், ராவணனும் ஒருவன்தான் என்று நினைக்க வேண்டாம். ராவணர் பலர் உண்டு; இலங்கைகளும் பல உள்ளன. 'ஒரு ராவணனையும் ஓர் இலங்கையையும் தானே கேட்டிருக்கிறோம்?' என்று நினைக்க வேண்டாம். ஒவ்வொரு ஜிவராசிக்குமுள்ள ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு ராவணன். ராவணனுக்கு பத்து தலைகள் இருப்பன போல மனத்துக்கும் பத்து தலைகள் உண்டு. வாக், பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்கள் ஐந்து; கண், காது, மூக்கு, த்வக், நாக்கு என்ற ஞானேந்திரியங்கள் ஐந்து; ஆகப் பத்துப் புலன்களும் பத்துத் தலைக்குச் சமமானவை. இந்தப் பத்துத் தலைகளைப் பெற்ற மனமாகிற ராவணன் மிகுந்த கர்வமுடையவன். இவன் கடல்சூழ்ந்த இலங்கையில் இருப்பது போல், ஸம்ஸாரமாகிற கடல்சூழ்ந்த உடல் என்ற இலங்கையில் ஜீவன் வாழ்கிறான். உண்மை ராவணன் சீதையைக் கொண்டுவந்து தன் வசமாக்கி இம்சித்தது போல், உடலுக்கு யஜமானனான ஆத்மா என்ற உயிரை இந்த மனம் தன் வசப்படுத்தி இம்சிக்கிறது. இந்தச் சமயத்தில் ராமன் அனுமனை அனுப்பி ஆறுதல் சொல்லிச் சீதையைப் பெற விரும்புகிறான். அது போலவே பகவானும் உபதேசங்களைச் செய்வித்து இந்த ஆத்மா க்ஷேமத்தை அடைய விரும்பி, தேசிகன் என்ற ஆசார்யனை, ஸம்ஸாரக் கடலில் விழுந்து அமுங்கியுள்ள ஜீவராசிகளினிடையே அனுப்பிகிறான். இதுதான் ஸ்ரீராமாயணத்தின் ஸாரமான அர்த்தம். இதைத்தான் ஸங்கல்பஸூர்யோதயம் என்ற நாடகத்தில் ஒரு ச்லோகத்தால் வேதாந்த தேசிகர் வெளிப்படுத்தினார்.

ஆசார்யனுக்கு தேசிகன் என்று பெயர்,
தேவாநுக்ரஹதாரித்வாத் சிஷ்யாநுக்ரஹகாரணாத் ।
கருணாரஸமூர்த்தித்வாத் தேசிக: ப்ரோச்யதே புதை: ॥

என்று, தேசிகன் என்ற சொல்லுக்கு பெரியோர் உரையிட்டனர். ஆசார்யன், குரு, தேசிகன் என்று சொல்லப்பெறுகிற அவனிடத்தில் தெய்வத்தின் அநுக்ரகம் பரிபூர்ணமாக இருக்கும். இறைவனின் அருளற்றவன் பெரிய பதவியை அடைய முடியாது என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. இப்படிப்பட்ட ஆசார்யன் சிஷ்யனிடத்தில் அநுக்கிரகம் புரிவான். அவன் கருணையே வடிவெடுத்தாற்போல் இருப்பான். இவன் கோபிஷ்டனாக இருந்தால் ஜனங்களை

உஜ்ஜீவிக்கச் செய்ய முடியாது அல்லவா? ஆகையால் தெய்வ அநுக்ரகம் பெற்றுச் சிஷ்யனிடத்தில் அநுக்ரகமும் கருணையும் உள்ளவன் ஆசார்யன். ஆகவே அவனைத் தேசிகன் என்பர்.

ஆஞ்சநேயர் தேசிகன் ஸ்தானத்தில் இருக்கிறார். அவர் ராமனுடைய அநுக்ரகத்தைப் பரிபூர்ணமாகப் பெற்றவர். எந்தச் சீதையை ராமனிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற நினைத்தாரோ அந்தச் சீதையினிடத்தில் அவர் நல்ல எண்ணம் கொண்டவர்; சீதையினிடத்தில் கருணையுள்ளவர். ஆகையால்தான் ராமன் அவரைச் சீதாபிராட்டியிடம் அனுப்பினான். ஸுந்தரகாண்டத்திலும் இந்த அர்த்தத்தை நன்கு காணலாம்.

'ஹநுமத்ஸமேந குருணா' என்பதை நாம் இங்கு நன்கு ஆராய்தல் வேண்டும். காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் என்று ஆறு துர்க்குணங்கள் உள்ளன. இவற்றை ஊர்மிஷட்கம் என்பர். ஸமுத்திரத்தில் மூழ்கினவனை அலைகள் எப்படி அமுக்குமோ அதுபோலவே ஸம்ஸார ஸமுத்திரத்திலுள்ள நம்மை இந்தத் துர்க்குணங்களான அலைகள் அமுக்கி அழிவை விளைவிக்கும். இந்த ஆறு தீக்குணங்களையும் விட்டு நாம் எல்லாருமே நற்பண்புகளைப் பயில வேண்டும். அதிலும் ஆசார்ய ஸ்தானத்தில் இருப்பவன் இந்த ஆறு தீமைகளுக்கு வசமற்றவனாக விளங்க வேண்டும்; இவற்றை வென்று ஜயக்கொடி நாட்டவேண்டும. ஆசார்யன் காமத்துக்கும் வெகுளிக்கும் பேராசைக்கும் மோகத்துக்கும் மதத்துக்கும் மாத்ஸர்யத்துக்கும் அடங்கியவனாக இருந்தால் அவன் தன்னையே காத்துக் கொள்ள அசக்தனாகிறான். இப்படி இருக்க, அவன் பிறருக்கு எப்படி ஞானோபதேசம் செய்ய முடியும்? அவனுடைய வார்த்தைதான் எப்படிப் பலிக்கும்? ஸ்வயம் தரிதும் அக்ஷம: கிமபராந் அஸெள தாரயேத்?

காமம் என்பது இகலோகத்தில் புலன்களுக்கு ஏற்படும் ஸுகம். க்ரோதம் என்பது கோபம். லோபம் என்றால் பேராசை. மோகம் என்பது நல்லறிவின்மை. மதம் எனப்படுவது கர்வம். மாத்ஸர்யம் என்பது பொறாமை. இந்தத் துர்க்குணங்களைத் தூரத்தில் வைக்க வேண்டும். இவற்றை வென்றவன்தான் மகான்; ஆசார்யஸ்தானத்துக்கு அருகனானவன்.

ஆசார்ய ஸ்தானத்தில் வைக்கப்பட்ட அநுமார் கீழ்க் கூறிய ஆறு துர்க்குணங்களை வென்றவர் என்பதைச் சுந்தரகாண்டத்தின் ஆரம்பத்திலேயே வால்மீகி பகவான் காட்டுகிறார். அநுமார் சமுத்திரத்தைத் தாண்டியபொழுது மைநாகமலை, நாகலோகத்துத் தாயான ஸுரஸை, ஸிம்ஹிகை என்ற அரக்கி ஆகியவர்கள் தடங்கலாக வந்தனர். இலங்கைக்குச் சென்றதும் உள்ளே போவதற்குத் தடங்கலாக இலங்காதேவியும் வந்தாள். இந்த நான்கு பேரும் காம-க்ரோத-லோப-மோகமே உருவானவர்கள்.

> ததிதம் கந்தவத் ஸ்வாது கந்தமூலபலம் பஹு ।
> ததாஸ்வாத்ய ஹரிச்ரேஷ்ட விச்ராந்தோநுகமிஷ்யஸி ॥

"அநுமநே, நீர் மிக்க மணமுள்ளதும் ருசிகரமுமான கிழங்கு வேர் பழம் முதலியவற்றை உண்டு செல்லலாம்" என்ற மைநாகமலை சொல்லிற்று. இதைப் பொருட்படுத்தாமல், கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐந்து கருவிகளுக்கு வசமற்றவராக அநுமார் தாம் நினைத்த குறியையே நோக்கிச் சென்றார். ஆகவே காமரூபமான மைநாக மலையையே இவர் வென்றவர் ஆனபடியால் காமத்தை ஜயித்தவர் என்பதில் ஐயமில்லை, கோடிக்கணக்கில் பணம்

சம்பாதிக்கலாம். இவ்வுலகத்தில் ஆசாபோகங்களை அநுபவிக்கலாம். பிறகு மோக்ஷம் போகலாம் என்றருப்பவர் எப்படி ஆசார்யர் ஆவர்? இதனால் ஏற்பட்ட விஷயம் - பம்பாய் விஜயம் கோயமுத்தூர் விஜயம் சென்னை விஜயம் என்று சொல்லிக் கொண்டும் நான் நிறைய பணம் உள்ளவன் நிறைய சிஷ்ய சம்பத்தை பெற்றவன். நிகர் யார் என்று சொல்லிக் கொண்டும், அதன் மூலமாக கர்வம் அடைந்தும் காம பரவசருமானவர்கள் எப்படி ஆசார்யர்கள் ஆவார்கள் என்பது.

ஸுரஸை என்ற நாகலோக மாதா கோரமான உருவத்தை எடுத்து அநுமாரின் எதிரில் வந்து, "எனக்கு நீ சாப்பிடும் பொருளாக ஆகிறாய்" என்ற கோபத்துடன் சொன்னாள். 'இத்யுக்த்வா ஸுரஸா க்ருத்தா' என்ற ரீதியில் அவள் இருந்தபடியால் அவள் கோபரூபியாகிறாள். அவளையும் வென்று ஆஞ்சனேயர் தம் குறிக்கோளிலேயே மனத்தைச் செலுத்தினார்.

பிறகு ஸிம்ஹிகை என்ற ராக்ஷஸி பேராசையால் அநுமனை விழுங்கிவிட எண்ணி அவரது நிழலையே பிடித்து இழுத்தாள். அவளது பேராசை எப்படிப்பட்டது என்பதை நன்கு உணரலாம். ஆகவே லோபரூபியான அவளை அநுமார் ஜயித்தபடியால் லோபத்தையும் இவர் வென்றவர்.

இலங்கைக்குச் சென்றதும், அநுமாருடைய பலத்தையும், பெண்ணான தன்னுடைய பலவீனத்தையும் அறியாமல், மோகத்தால் அவரைக் கைத்தலத்தால் வேகத்துடன் அடிக்கத் தொடங்கினாள் லங்காதேவி. அநுமான் மோகரூபியான அவளை வென்று இலங்கையுனுள் நுழைந்தார். அவள் ராக்ஷஸியானபடியாலும் தமோகுணம் நிறைந்துள்ளபடியாலும் அவள் மோகரூபி என்பதில் சந்தேகமில்லை. ஆகவே மோகத்தையும் அவர் வென்றவரானார்.

இப்படிக் காமம் க்ரோதம் லோபம் மோகம் ஆகியவற்றை வென்றதும் மனிதனுக்குக் கர்வம் (மதம்) ஏற்பட்டுவிடும். 'நமக்கு இவ்வளவு சக்தியுள்ளது; நமக்கு நிகர் யாருமில்லை' என்று நினைக்கிறான். கொக்கைக் கண்பார்வையாலேயே கொளுத்தின கௌசிகன் என்ற பிராம்மணனுக்கு மதம் உண்டாகவில்லையா? அநுமனும் மைநாகம் ஸுரஸை ஸிம்ஹிகை இலங்கை இவற்றை அநாயாஸமாக வென்றபடியால் கர்வம் உண்டாக வழி உண்டு. ஆனால் மதத்தையும் இவர் வென்றார். 'நான் சமுத்திரத்தைத் தாண்டி இலங்கைக்கு வந்தேன். இலங்கையோ பெரிய பட்டினம். சமுத்திரமும் பெரியது. ராவணனும் மிக்க வலிமையுடையவன். குரங்குகள்தாம் இங்கு வந்து என்ன செய்ய முடியும்? தேவதைகளாலும் வெல்ல முடியாதது இந்த நகரம். ஸாம தான பேதங்களால் ராமன்தான் இங்கு வந்து என்ன செய்ய முடியும்? சமுத்திரத்தைத் தாண்டி வந்த நான்தான் இவ் விஷயத்தில் என்ன செய்ய முடியும்?' என்று தாம் மதமற்று இருக்கும் தன்மையை வெளியிட்டார். 'மத்த: ப்ருத்யவர: கஸ்சித் நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ' என்று, தாம் மிகவும் தாழ்ந்தவர் என்று சீதாபிராட்டியிடம் சொன்னார். ஆகவே இவர் மதத்தையும் வென்றவர்.

மாத்ஸர்யம்-பொறாமை. ஒரு வித்வான் மற்றொரு வித்வானைப் படித்தவனாகக் கூறமாட்டான். "நானே நன்கு படித்தவன்; மிகவும் நுட்பமான பொருளை அறிந்தவன்; எனக்குத் தெரிந்தது மற்றவருக்குத் தெரியாது" என்று பிறரிடத்தில் குறையையே சொல்லிக் கொண்டிருப்பான்; பிறரைப் புகழமாட்டான். உண்மையில் நன்கு படித்தவன் என்பதற்கு என்ன அடையாளம் என்றால், சாமானியமாகப் படித்தவனையும் போற்றி, அவனுக்குச் சமம் யாருமில்லை என்று புகழ்வதுதான். அரைகுறையாகப் படித்தவன்தான் பிறரிடத்தில் குறையைச் சொல்லிக்கொண்டிருப்பான். பண்டிதம்மன்யனுக்குத்தான் இந்த துர்குணம் உண்டு. உயர்ந்த பண்டிதன் மாத்ஸர்யமற்றவனாகவே இருப்பான். அநுமார் எல்லாவற்றிலும்

சிறந்தவரானபடியால், 'ஜயத்யதிபலோ ராம:' என்று சொல்லி, ராமனையும் லக்ஷ்மணனையும் சுக்ரீவனையும் துதித்து, 'அவர்களுக்கு நான் வேலைக்காரன்' என்று தம்மைத் தாழ்ந்தவராகவே சொல்லிக்கொண்டார். ஆகவே இவரிடத்தில் மாத்ஸர்யம் என்பது லவலேசமும் கிடையாது. இதைத்தான் எல்லாரும் அறிய வேண்டும் என்று வால்மீகி பகவான் சுந்தர காண்டத்தில் காட்டினார்.

ஆசார்யனுக்குக் கீழ்க்கூறிய ஆறு துர்க்குணங்கள் இல்லாமலிருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகக் கதையின் போக்கை வால்மீகி பகவான் அமைத்துக் காட்டினார். சுந்தர காண்டத்திலேயே, காம க்ரோத லோப மோக மத மாத்ஸர்யங்களை அநுமார் வென்றவர் என்பதை வேறு சான்றுகளை இட்டும் தெரிந்துகொள்ளலாம். இப்படி உண்மைப் பொருளை உணர்த்துவதற்காகவே, 'ஹநுமத்ஸமேந குருணா' என்று வேதாந்த தேசிகர் பணித்தார்.

கீழ்ச் சொன்ன வகையில் ஆசார்யனுக்கும் ஹநுமானுக்கும் ஸாம்யம் ஏற்படவேண்டும். இது மாத்திரமல்ல. ஹநுமான் நவ வ்யாகரண பண்டிதர். ஆசார்யனும் சாஸ்த்ரங்களில் பாண்டித்யம் பெற்றிருக்க வேண்டும். தர்கம் வ்யாகரணம் முதலிய எந்த சாஸ்த்ரங்களை எடுத்தாலும் தட்டு தடங்கள் இல்லாமல் பாடம் சொல்லவும் வ்யாக்யார்த்தம் சொல்லவும் திறமை பெற்றிருக்க வேண்டும். பாக சாஸ்த்ரத்தில் எனக்கு ஸாமர்த்யம். ஜோதிஷத்தில் வைத்யத்தில் பரிசயம் என்றால் அது போதாது. ஒருவன் குடு குடு என்று பலிச்சம்ளாம் ஆடுவதிலும் கிரிகிட்டிலும் கோலியிலும் ஸமர்த்தன் என்றால் அது நமக்கு உபயோகப் படாது. ஆத்ம வித்தையில் ஸாமர்த்யம் வேண்டும். யாவித்யா ஸாவிமுக்த யே என்பது சாஸ்த்ரம். மற்றய காம சாஸ்த்ரத்திலும் வாத்ஸ்யாயன பாஷ்யத்திலும் பரிசயம் இருந்தால் என்ன லாபம். சிச்னோதரே - யோ அபிரதஸ்ய என்று இவர்களை தூஷித்துள்ளது நூல்.

*****

# 33. நடப்பது நடந்தே தீரும்

பேயாழ்வார் அவதார ஸ்தலமான மயிலையில் பத்மாவதி நாயிகா ஸமேதரான ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதி ஒன்றுள்ளது. அதில் வேங்கடேசப் பெருமாள் எழுந்தருளியிருந்து அனைவரையும் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். இந்த ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதி ஸ்ரீவேதாந்த தேசிகருடைய தேவஸ்தானத்துக்கு உள்பட்டது. எம்பெருமான் ஸர்வ ஸ்வதந்த்ரன். இதை "பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம்" என்று வேதம் பலமுறை காட்டுகிறது. ஆயினும் அவன் பக்தர்களுக்கும் ஆசார்யர்களுக்கும் உள்ளடங்கினவன் என்றும் ப்ரமாணங்கள் கூறுகின்றன. இவ்விஷயம் உண்மைதான் என்பதற்கு ஸாக்ஷியாக இக்கோயில் அமைந்துள்ளது. இது ஜனங்களுக்கு நன்கு விளங்கும் வகையில் ஸ்ரீநிவாஸப் பெருமாள் நம் ஆசார்ய ஸார்வபௌமனான வேதாந்த தேசிகனுக்கு அதீனமான வகையில் அந்த ஆசார்யனின் அநுக்ரஹம் பெற்ற பக்தர்கள் அனைவர்க்கும் ஸகலாபீஷ்டபலனையும் கொடுத்துக் கொண்டு எழுந்தருளியிருக்கிறான்.

இவ்வாலயத்தில் ஆராதனங்கள் உரிய காலங்களில் பரமைகாந்திகளான அர்ச்சகர்களைக் கொண்டு நன்கு நடத்திவருகின்றனர். மூன்று காலத்திலும் பலவேதவ்யுத்பன்னர்களைக் கொண்டு வேதபாராயணமும் செவ்வனே நடந்து வருகிறது. மற்ற கோயில்களில் இக்கால ரீதியில் பல அசுத்திகள் தவிர்க்க முடியாமல் இருந்தாலும் இவ்வாலயத்தில் ஒருவிதமான குற்றமும் இல்லாமல், பரமைகாந்திகள் கூட தீர்த்த ப்ரஸாதங்களை ஸ்வீகரிக்கும் வகையில் ஆராதன கைங்கர்யம் நடந்து வருவது விஸ்மயாவஹம். இந்த ஸமயம் வேதபாராயணத்தின் நூறாவது ஆண்டு விழாவில் மணம் மிக்க ஒரு மலர் வெளிவந்து அனைவரையும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கச் செய்கிறது. இதை பகவான் செய்யவேண்டும் என விரும்பினான் போலும். அவனது விருப்பத்தை யாரால்தடுக்க முடியும்.

நம் அனைவர்க்கும் யஜமானனான ஸர்வேச்வரன் நம் விஷயத்தில் எதை எப்படி நடத்த வேண்டும் என்று நினைக்கிறானோ அதை அப்படியே நடத்த சக்தி பெற்றவன். அவனது நினைவை ஒருவராலும் ஒரு பொழுதும் மாற்ற முடியாது. அவன் நம்முடைய ஹ்ருதயத்தில் புகுந்து கொண்டு அவனது விருப்பத்தை நாம் மாற்ற நினைத்தாலும் மாற்ற முடியாமல் செய்துவைக்கும் ஆற்றலுடையவன்.

> ஈச்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந ! திஷ்டதி ।
> ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா ॥

என்று கீதை கூறுகிறது. எனவே ஈச்வரன் அந்தர்யாமி ஆனபடியால் நம் உள்ளே இருந்து நம்மை ஆட்டி வைப்பவன். ஆகையால், அவனது விருப்பம் ஒரு நாளும் பழுதாக மாட்டாது. அவனை ஸத்யஸங்கல்பன் என்று வேதாந்தங்கள் முறையிடுகின்றன. நாம் எல்லாவிதமான சௌகரியங்களை பெற்றிருந்தபோதிலும் பெரிய அரசனாக இருந்தபோதிலும் ஒரு காரியத்தை செய்யவேண்டும் என்று நினைத்தால் அதை அப்படியே செய்து முடித்துவிடுகிறோம் என்று சொல்ல முடியாது. சில வேலைகளை நினைத்தபடி செய்து முடிக்கிறோம். சிலவற்றை செய்ய முடியாமல் கைவிட்டுவிடுகிறோம். பகவான் நம்மைப் போன்றவன் அல்லன். எந்த எந்த சமயத்தில் எதை எதை நடத்த நினைக்கிறானோ அதை அதை அவ்வப்போது முடித்துவிடுகிறான்.

அகர்த்தும் அகிலம் கர்த்தும் அந்யதாகர்த்துமப்யலம் ।
ஸங்கல்பஸசிவ: காலே சக்திர் வே லேச:ஸ: தாவக: ॥

என்றார் வேதாந்த தேசிகன். ஆகையால், பகவான் ஒரு விஷயத்தில் விருப்பம் கொண்டு நம் தலையில் ஒரு லிபியை எழுதியிருந்தால் அந்த விதி பழுதாகாமல் பலித்தே தீரும்.

ராமன் காட்டுக்கு சென்ற போது இளைய பெருமாள் மிக்க சினம் கொண்டு தகப்பனான தசரதனிடத்திலும் தாயான கைகேயினிடத்திலும் தமையனான பரதனிடத்திலும் பலவகை அவதூறுகளைச் சொன்னான். இதைக் கேட்ட ராமன் "இது தந்தை, தாய், பரதன் இவர்களது பிழையினால் ஏற்பட்டது அல்ல. நம் விதிபயன் இது. நீ யாரிடத்திலும் கோபம் கொள்ளாதே. அவரவர் விதிப்படிதான் எல்லாம் நடைபெறும். நாம் காட்டுக்கு சென்று அங்கே பல துன்பங்களை அநுபவிக்க வேண்டும் என்று பகவான் நினைத்திருக்கிறான். முற்பிறவியில் நாம் செய்த பாவ புண்யங்களை அநுபவித்துதானே ஆகவேண்டும். அதன்படி பகவான் ஏற்படுத்திய விதி இது" என்றான். இந்த கருத்தை கம்பநாட்டு ஆழ்வார் அழகாக பாசுரம் இட்டு காட்டியிருக்கிறார். அந்த பாசுரம் இதோ.

நதியின் பிழையன்று நறும் புணலின்மை அற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைம் புரத்தால் !
மதியின் பிழையன்று மகன் பிழையன்று மைந்த !
விதியின் பிழை - நீ இதற்கு என் கொல் வெகுண்டது?

என்றான். "பரதனுடைய கட்சியில் இருந்துகொண்டு அவனுக்கு நன்மையே செய்யவேண்டும் என்று எவர் விரும்புகிறார்களோ அவர்கள் அனைவரையுமே கொன்றுவிடுகிறேன், ஐயோ பாவம் ! நாம் யாருக்கும் தீமை செய்யக் கூடாது. எல்லோ விஷயத்திலும் சாதுவாகவே இருக்கவேண்டும் என எவன் நினைக்கிறானோ அவன் எல்லா துன்பங்களுக்கும் ஆளாவான். கைகேயினால் தூண்டப்பட்ட துஷ்டரான தன் தகப்பனாரை கம்பத்தில் கட்டவேண்டும். கொல்லவும் வேண்டும். பகைவர்களை வெல்லும் திறமையைப் பெற்ற நீரும் நானும் இருக்கும்போது பரதனுக்கு அபிஷேகம் செய்து வைக்க யாருக்குத்தான் சக்தி உள்ளது. இதைப் பார்த்துவிடுவோம்" என்று சீறி விழுந்த லக்ஷ்மணனைப் பார்த்து ராமர் கூறுகிறார் :-

கைகேய்யா: ப்ரதிபத்திர்ஹி கதம் ஸ்யாத் மம பீடநே ?
யதி பாவோ ந தைவோயம் க்ருதாந்தவிஹிதோ பவேத் ॥ (அ.22.16)
கஸ்ச தைவேந ஸௌமித்ரே ! யோத்துமுத்ஸஹதே புமாந் ।
யஸ்ய ந க்ரஹணம் கிஞ்சித் கர்மணோந்யத்ர த்ருச்யதே ॥ (அ.22.21)
ருஷயோப்யுக்ரதபஸோ தைவேனாபி ப்ரபீடிதா: ।
உத்ஸ்ருஜ்ய நியமாந் தீவ்ராந் ப்ரச்யந்தே காமமந்யுபி:॥ (அ.22.23)

"லக்ஷ்மணா! நான் ஒன்று சொல்லுகிறேன். பொறுமையுடன் கேள். பரதனின் தாயான கைகேயி என்னிடத்தில் எவ்வளவு அன்பு செலுத்தியிருந்தாள் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. பரதனைவிட என்னிடத்திலன்றோ ஆசையை அதிகமாகக் காட்டியிருந்தாள். நானும் அவளிடத்தில் இப்போதும் எந்த விதத்திலும் கோபத்துக்குக் காரணமான செயலைச் செய்யவில்லை. அப்படியிருக்க என்னைக் காட்டிற்கு அனுப்பித் துன்புறச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்படி உண்டாகும்? இது தெய்வ ஸங்கல்பத்தினால் உண்டானது. நம்

விதியின் பயன் என்றன்றோ கருத வேண்டும்? தெய்வத்துடன் யார்தான் போரிட முடியும்? தெய்வம் என்பது நம் எதிரில் நின்று பதில் சொல்லுகிறதா நம் கேள்விகளுக்கு? அதைக் கேட்டால் பதில் சொல்வதாக இருந்தாலும், "உன் வினைப்பயன். நான் என்ன செய்ய முடியும்?" என்று சொல்லிவிடுகிறது. காட்டில் எத்தனை மஹரிஷிகள் தவம் புரிகின்றார்கள்? அவர்கள் வெகுளி எனும் கோபத்தையும் காமம் எனும் ஆசையையும் ஜயித்துத் தவம் புரிந்து, உயர்ந்த பதவியைப் பெற வேண்டும் என்ற விருப்பமுள்ளவர்கள். காமமும் கோபமும் தம் தவத்துக்கு இடையூறு என்பதை அவர்கள் நன்கு அறிந்தவர்களே. ஆயினும் கடுந்தவம் புரியும்போது மேநகை, ரம்பை முதலிய தேவமாதர்களால் பீடிக்கப்பட்டுத் தவத்திலிருந்து நழுவி விடுகின்றனர். கோபத்துக்கும் ஆளாகின்றனர். இதற்கு விச்வாமித்ரரையே பார்த்து தெரிந்து கொள்ளலாம். இப்படி மஹான்களான முனிவர்கள் காம, கோபங்களுக்கு வசமாகிறார்களே! இதற்கு என்ன காரணம்? தெய்வம் தான் காரணம். நம்மால் என்ன செய்ய முடியும்? கடவுள் காட்டிய வழியில்தான் செல்ல முடியும். அந்தக் கடவுளை எதிர்த்து போரிட நமக்கு என்ன சக்தி இருக்கிறது?" என்று ராமர் பதிலளித்தார்.

ஆகையால் பகவான் எப்படி நினைக்கிறானோ அதன்படிதான் நடக்குமே தவிர அதை எதிர்த்து நம் விருப்பப்படி எந்தச் செயலையும் செய்ய முடியாது. இதற்குக் கர்ண பரம்பரையாகக் கேட்டதும், புராணத்தில் உள்ளதுமான ஒரு கதையை இங்கு உதாஹரணமாக வரைகிறோம்.

நாரதர் ப்ரஹ்மாவின் புதல்வர். காநசாஸ்த்ரத்தில் மிக்க தேர்ச்சி பெற்றவர். வீணையை எடுத்துக் கொண்டு பகவானின் குணங்களை வாசித்துக் கொண்டு எல்லா இடங்களிலும் ஸஞ்சரிப்பவர். இவரைப் போலத் தும்புரு என்பவரும் வீணை வாசிப்பதில் மிக்க திறமையுள்ளவர். தும்புரு நாரதர் என்று இவர்களைச் சேர்த்துச் சொல்வது வழக்கம்.

ஆயர்பாடியில் கண்ணன் வளர்ந்தபோது ஒரு ஸமயம் காட்டில் வேணுகாநம் செய்ய ஆரம்பித்தானாம். அந்த காநத்தைக் கேட்டு அனைவருமே மதிமயங்கி மெய்மறந்து திகைத்தனர். அப்பொழுது எல்லாப் பாடகர்களிலும் மேன்மை பெற்ற தும்புருவும், நாரதரும் கூடத் தங்களது வீணையைக் கீழே போட்டுவிட்டு மெய்சிலிர்த்து அப்படியே ஆழ்ந்து விட்டனராம்.

................ மது ஸூதநன் வாயில்
குழலினோசை செவியைப் பற்றி, வாங்க
நன்னரம்புடைய தும்புருவோடு
நாரதனும் தம் தம் வீணை மறந்து,
கிந்நர மிதுநங்களும் தம் தம் கிந்நரம் தொடுகிலோமென்றனரே.(பெ. தி. 3.6.5)

என்று பெரியாழ்வார் அருளிச் செய்தார்.

இப்படி காநப் ப்ரியரும், காந ப்ரவீணருமான நாரதரிடத்தில் ஒரு சிஷ்யன் இந்தக் கல்வியைப் பயில எண்ணி அவரை ஆசார்யராக வரித்தான். நாரதர் அவனிடத்தில் க்ருபை கூர்ந்து காநசாஸ்த்ரத்தை நன்றாகக் கற்றுக் கொடுத்தார். ஸாதாரணமாக, பாட வேண்டுமென்ற ஆசையுள்ளவர்கள் எப்போதும் பாடல்களைப் பாடிக் கொண்டே இருக்க வேண்டும். ராகங்களை ஆலாபநம் செய்து கொண்டே இருக்க வேண்டும். எங்காவது ஸங்கீத வித்வான் பாடும்பொழுது அந்தக் கச்சேரிக்குச் சென்று ஊக்கத்துடன் கவனித்துக் கொண்டும் இருக்க வேண்டும்.

இப்படிச் செய்தால்தான் காநசாஸ்த்ரத்தில் தேர்ச்சி பெற முடியும். நாரத முநிவர் தமக்கு மிகவும் அந்தரங்கனான இந்த சிஷ்யனுக்கு ஸங்கீதம் நன்றாகக் கற்றுக் கொடுத்து வந்தார். அத்துடன் ஸங்கீதக் கச்சேரி எங்கெங்கு நடக்குமோ அங்கங்கு தம்முடன் அந்த சிஷ்யனையும் அழைத்துக் கொண்டு போவார். அந்தந்த ஸமயங்களில் ராகங்களின் ஆலாபநங்களைச் சுட்டிக் காட்டிச் சொல்லிக் கொடுப்பார். இது வழக்கம்.

ஒரு ஸமயம் தேவ லோகத்தில் ஸங்கீதக் கச்சேரி நடந்தது. அங்கு 'ஹாஹா, ஹீஹீ என்று இரண்டு கந்தர்வர்கள் பாட ஆரம்பித்தனர். இவர்களின் ஸங்கீதக் கச்சேரி நடக்கிறது என்றாலே ஜனங்கள் சூழ்ந்து விடுவார்கள். கேட்பவர் மெய்மறந்தும் விடுவார்கள். இப்படிப் பெருமை பெற்ற இவர்களது கச்சேரி ஆரம்பித்து விட்டால், தேவமாந ரீதியில் ஆயிரம் வருஷங்களுக்கு மேல் நடைபெறும். இந்த ஸங்கீதத்தைக் கேட்க நாரதரும் தம் சீடனை அழைத்துக் கொண்டு சென்றிருந்தார். தம் அருகிலேயே அவனை உட்கார வைத்துச் சில விஷயங்களைச் சொல்லிக் கொடுத்து வந்தார்.

இந்தக் கச்சேரியைக் கேட்க எல்லா தேவர்களும் பல முநிவர்களும் திரண்டிருந்தனர். வருணன், யமன் அக்நி முதலியவர்களும் ஆநந்த பரவசர்களாய் காநாமுதத்தைச் செவியால் பருகிக் கொண்டிருந்தனர். இம்மாதிரி இருந்த போது யமன் நாரதமுநிவரின் அருகில் இருந்த அவரது சிஷ்யனைப் பார்த்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

யமனுடைய புன்னகையைக் கண்ட சிஷ்யன், "காரணமின்றியே யமன் என்னைப் பார்த்து ஏன் சிரிக்க வேண்டும்? ஒரு தடவை அல்லவே. பல தடவை சிரிக்கிறானே ! ஏதோ விசேஷம் இருக்க வேண்டும். நம் ஆசிரியரான நாரதர் நமக்கு அவ்வப்போது ஏதோ சொல்லிக் கொடுக்கிறாரே. அதைப் பற்றிப் பரிஹாஸமாகப் புன் முறுவல் செய்ய அவச்யமில்லை. இதற்காகச் சிரிக்க வேண்டுமானால் வருணன், அக்நி, குபேரன் ஆகிய அனைவருமே சிரிக்க வேண்டும். யமன் மாத்ரம் இப்பொழுது புன்னகை செய்கிறான். ஆகையால் என் ஆயுளைக் கவர எண்ணித்தான் நகைக்க வேண்டும்" என்று கவலை கொண்டான்.

உடனடியாக அவன் தன் ஆசார்யரான நாரதரிடமும் இதைத் தெரிவித்தான். நாரதர் தம் சீடனுக்கு ஏதாவது ஆபத்து விளையுமோ என பயந்தார். யமநிடமிருந்து இவனை மீட்க என்ன வழி செய்யலாம் என்று யோசித்தார். "உயிரைக் கவரும் இந்த யமனுக்குத் தெரியாமலிருக்குமிடத்தில் இவனைக் கொண்டு வைக்க வேண்டும்" என்று நினைத்தார். பிறகு தமது யோக மாயையினால் அவனை யாருக்கும் தெரியாதபடி ஐம்பது கோடி காதம் தூரத்திலுள்ள ஒரு மலையின் சிறிய குஹை போன்ற பொந்தில் வைத்து விட்டார். சிஷ்யன் அங்கு இருந்ததையோ சென்றதையோ யாருமே அறியவில்லை.

அரை மணி நேரம் ஆயிற்று. பிறகு யமன் நாரதரையே பார்த்துப் புன்னகை புரிய ஆரம்பித்தான். பல தடவை அவரைப் பார்த்து நகைத்தான். நாரதர், "நம் சீடனை எங்கோ ஓரிடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டோம். இனி யமன் என்ன செய்ய முடியும்? அவன் எதை யோசித்துக் கொண்டிருப்பான்? என்று எண்ணி, அவனைப் பல தடவை பார்த்தார். அவர் பார்த்த பொழுதெல்லாம் அவன் சிரித்துக் கொண்டே இருந்தான். இதை அவர் கவனித்துக் "யமன் நம்மிடத்திலும் ஏதோ கெட்ட அபிப்ராயத்துடன் சிரிக்கிறான். இவனை நேராகவே விசாரித்துவிட வேண்டும்" என எண்ணினார்.

உடனே நாரதர் அவனைப் பார்த்து, "தர்ம ராஜனே! முன்பு என் சிஷ்யனைப் பார்த்துச் சிரித்துச் கொண்டிருந்தாய். இப்பொழுது என்னையே நேராகப் பார்த்துச் சிரிக்கிறாய். என்னிடத்திலேயே உன் கைவரிசையைக் காட்ட விரும்புகிறாயா? இதுதான் உன்னால் முடியுமா?" என்று கேட்டார். இதைக் கேட்ட யமன் மேலும் சிரிக்க ஆரம்பித்தான்.

"நாரத முநிவரே! நான் உம்மையோ, உமது சீடனையோ ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று நகைக்கவில்லை. முதலில் உமது சீடனைப்பார்த்துச் சிரித்ததற்குக் காரணம் கூறகிறேன். உமது சீடன் ஒரு மணி அவகாசத்திற்கு மேல் ஜீவிக்க முடியாது. அதற்குள் இறந்து போக வேண்டும். இங்கிருந்து வெகு தூரத்திலுள்ள ஒரு மலையின் குஹையில் அவன் இருந்து அவன் தலைமேல் ஒரு பெரிய பாராங்கல் விழுந்து இறக்க வேண்டும் என்பது அவன் தலைவிதி. இது எப்படி நடைபெழ்ம்? அவனோ இங்கே கச்சேரியில் மூழ்கிக் கிடக்கிறான். இதை விட்டுப் போகவும் இசைய மாட்டான். கச்சேரி முடிவதற்கோ பல வருஷங்கள் உள்ளன. அவன் அந்த மலைக்கு நடந்து செல்வதும் முடியாத கார்யம். இப்படி இருக்க அவன் தலையில் எழுதியுள்ள விதி எப்படிப் பலிக்கும் என்று விதியை நினைத்து அவனைப் பார்த்துச் சிரித்தேன். உம்மைப் பார்த்து இப்போது அடிக்கடி நகைத்ததற்குக் காரணத்தையும் கூறுகிறேன். கேளும். பகவான் ஒருவனுக்கு நன்மையையோ, தீமையையோ செய்ய வேண்டும் என்று நினைத்தால், அந்த பகவத்ஸங்கல்பம் ஒருக்காலும் வீணாக ஆகமாட்டாது. கட்டாயம் பலித்துவிடும். நடக்க வேண்டியது நடந்தே தீரும். அதற்கு பல இடையூறுகள் இருந்த போதிலும் தான் நினைத்ததை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பகவான் செய்து வைத்து விடுவான். இவன் விதி மலைக் குஹையில் பாராங்கல்லால் அடிபட்டு இறக்க வேண்டும் என்று இருக்கிறபடியால் அதற்கு வேண்டிய வசதிகளை ஆசார்யரான உமது மூலமாகவே செய்துவிட்டான். அவனது விதியை ஜயித்துவிட வேண்டும் என்று எண்ணிய நீர் ஏதோ சூழ்ச்சியைச் செய்தீரே, அது அவனை விதிக்கு உள்ளாகும்படி முடித்துவிட்டதே! தேவரீர் தாமே இதற்கு காரணமானீர் என்று உம்மைப் பார்த்துச் சிரித்தேன்" என்று பதிலளித்தான்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த போது அந்த மலை குஹையிலுள்ள பெருங்கல் படபட வென்று சிஷ்யன் தலையில் விழுந்தது. அந்த ஒலியை இருவரும் கேட்டனர். நாரதரும், "நம்மால் செய்ய இயன்றது எதுவுமில்லை. எல்லாம் பகவானின் ஸங்கல்பத்தால் நடைபெறுகிறது" என்று நினைத்து ஆச்சர்யப்பட்டார்.

இவ்விதமே பகவத் ஸங்கல்பத்தால் நாம் எதிர்பார்க்காத விதத்தில் பல பல நன்மைகளும் உண்டாகும் என்பதிலும் ஸந்தேஹமில்லை. அவரவர்கள் அநுபவ பூர்வமாக இதை அறியலாம். அறிந்துமிருப்பீர்கள்.

*****

# 34. பற்றாக் குறை

இப்பொழுது எங்கே பார்த்தாலும் எங்கே சென்றாலும் ஒரே பேச்சாக இருக்கிறது. என்ன வார்த்தை அது? "என் குடும்ப வாழ்க்கையை நடத்தப் பொருள் போதவில்லையே? எப்போதும் பற்றாக்குறையாகவே உள்ளதே?" என்று. இக்காலத்தில் ஒவ்வொரு பொருளின் விலையும் விஷம்போல் ஏறிக் கொண்டே வருகிறது. 'குடும்பத்தை நடத்தப் போதுமான வருவாய் இல்லை. குடும்பத்துக்குத் தேவையான சிலவற்றைத் தான் வாங்க முடிகிறது. மற்றும் பலவற்றை வாங்கவே முடிவதில்லை' என்று அனைவருமே எங்கும் கவலைப் படுகின்றனர்.

முன்காலத்திலோ வருமானம் குறைந்திருந்த போதிலும் பொருள்கள் மலிந்திருந்தபடியால் குடும்பத்தை ஸௌகரியமாக நடத்தி வந்தனர். சிறிது சேமித்தும் வைத்துக் கொண்டனர். இக்காலத்தில் செலவுக்கே போதாமலிருக்கச் சேமிக்க வழி ஏது? இப்படி இருக்கும் நிலையில் ஜனங்கள் சொல்லும் இந்தப் பற்றாக்குறையைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

ஸுகத்துடன் இல்லற வாழக்கையை நடத்த வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர். ஸுகம் என்பது, ஒருவிதக் கஷ்டமுமில்லாமல் நினைத்தபோது எல்லா விஷயங்களையும் அநுபவிப்பதுதான். இந்த ஸுகமும் வீடு வாசல் மனை தோட்டம் மனைவி குழந்தைகள் முதலியவற்றைக் கொண்டு அடையப்படுவது. இதற்கும் மூலம் பொருள்தான். பணம் இல்லாமல் எந்த ஸுகத்தை எவன் அடைய முடியும்? இவ்வுலக வாழக்கையில் எல்லாம் அர்த்தஸாத்யமாகத்தான் இருக்கிறது.

"பணம் கையில் இல்லை என்றால் தாய் நிந்திக்கிறாள்; தந்தையும் ஸந்தோஷப்படுவதில்லை; ஸஹோதரனும் பேசுவதில்லை; வேலைக்காரன் கோபித்துக் கொள்ளுகிறான்; புதல்வனும் இவன் சொல்வதைக் கேட்பதில்லை. இவன் ஆவலுடன் மணந்துகொண்ட மனைவியும் இவனை அணைத்துக் கொள்வதில்லை. இதுவரையில், தன் உயிரையும் கொடுத்து உதவுவதற்கு ஸித்தமாக இருந்த ஸ்நேஹிதன் அப்போது இவனிடத்தில் பணமின்மையைக் கண்டு, தன்னிடம் ஏதாவது பணம் கேட்பானோ என்று பயந்து இவனைப் பார்த்தும் பார்க்காதவன் போல் போய்விடுவான். இம்மாதிரி உலகத்தில் பணமில்லாதவனை மதிப்பார் யாருமில்லை. பணம் இருக்குமிடத்தில், முன்பு ஸ்நேஹிதர்களாகவும் பந்துக்களாகவும் இல்லாதவர்களும் உறவையும் ஸ்நேஹத்தையும் கல்பித்துக்கொண்டு வந்து, நமது செல்வத்தைத் தேகத்திலுள்ள இரத்தத்தை அட்டை பூச்சி உறிஞ்சுவதுபோல் சாப்பிட்டுவிடுவார்கள். பணம் இல்லாதபோது இவனை ஒருவரும் சீந்துவார் இல்லை. ஆகையால் எவ்விதமாயினும் பணம் ஸம்பாதிக்க முயற்சி செய்ய வேண்டும்" என்று ஒரு கவியும் சொன்னான்.

ஆனாலும் ஒரு குடும்பத்திலுள்ளவன், தன் குடும்பத்துக்குப் போதுமான அளவு வருவாய் வந்தபோதிலும் அதில் அவன் திருப்தி அடைவதில்லை. தனக்குப் போதவில்லை, பற்றாக்குறை என்று சொல்லிக் கொள்கிறான். பல இடங்களில் இதைக் காணலாம். ஒருவனுக்கு நாலு காணி நிலம் இருந்து அதில் அதிக வரும்படி வந்தாலும், அதைக் கொண்டு வாழக்கையை ஸுகமாக நடத்த ஸௌகரியம் இருந்தும், திருப்தியடையாமல் இது தனக்குப் போதாது என்று சொல்லிக் கொண்டு மேன்மேலும் நிலங்களை வாங்குவதிலோ பங்களாக்களை வாங்கி அதன் மூலம் பணம் ஸம்பாதிப்பதிலோ வியாபாரம் செய்து பணத்தைத்திரட்டுவதிலோ நோக்கமுடையவனாக இருக்கிறான். உலகத்திலுள்ள அனைவருக்குமே இந்த ஸ்வபாவம் உண்டு.

எங்கேயாவது ஓரிடத்தில் இப்படி மேன்மேலும் ஆசையில்லாதவன் இருப்பானோ என்றால் அது அத்தி பூத்தது போலத்தான். உண்மையில் தன் குடும்பத்துக்குப் போதுமான வருவாய் இல்லாதவன் இப்படித் தன் குடும்பத்துக்குப் போதுமான பொருளை ஸம்பாதிக்க ஆசைப்படுவதில் தவறில்லை; ஒரு விதத்தில் அதற்குப் பொருத்தம் உண்டு. ஆயிரக் கணக்கான ரூபாய்களை ஸம்பாதித்துத் தன் குடும்பத் தேவைக்கும் மேலாகத் திரட்டி வைத்து அதிலும் திருப்தி பெறாமல் பொருள் ஈட்டுவதிலேயே மனத்தைச் செலுத்தி, தர்மகாரியங்களில் எள்ளளவும் மனத்தைச் செலுத்தாமல் இருக்கிறார்களே, இதுதான் மிகவும் வியக்கத்தக்கது.

மக்கள் யாவரும் ஒரேவிதமான பணக்காரர்களும் அல்லர்; ஒரேவிதமான ஏழைகளும் அல்லர்; படிப்பு முதலிய மற்ற எல்லா விஷயங்களிலும் போலப் பண விஷயத்திலும் தாரதம்யம் உண்டு. ஒருவன் பத்தாயிரம் ரூபாய்க்கு அதிபதி; ஒருவன் ஐம்பதினாயிரத்துக்கு; மற்றவன் லக்ஷத்துக்கு; இன்னொருவன் கோடிக்கு. இப்படியிருக்க ஒவ்வொருவனும் தனக்கு மேல் பணக்காரனைப் பார்த்துத் தான் தரித்ரன் என்று எண்ணுகிறான். இப்படி எண்ணினால் எல்லாரும் தரித்ரர்கள்தாம். தனக்குக் கீழ்நிலையில் உள்ளவர்களைப் பார்த்தால், எல்லாரும் பணக்காரர்களே, இதைத்தான் ஒரு கவியும் சொன்னான்:

> உபர்யுபரி பச்யந்த: ஸர்வோ யாதி தரித்ரதாம் ।
> அதோத: பச்யத: கஸ்ய மஹிமா நோபஜாயதே ॥

ஆகையால் தனக்குக் கீழ்நிலையிலுள்ள ஏழை மக்களைப் பார்த்து, தான் எவ்வளவோ செல்வன் என்று எண்ணி ஸந்தோஷமடைய வேண்டும். இதுதான் அறிவுள்ளவனின் தன்மை. எப்போதும் திருப்தி இல்லாமல் பற்றாக்குறையை ஏறிட்டுக்கொண்டு மேன்மேலும் பணம் ஸம்பாதிப்பதில் மேல் விழுந்து செல்கிறவன் புத்திசாலியாகமாட்டான்.

யத் ப்ருதிவ்யாம் வ்ரீஹியவம் ஹிரண்யம் பசவஸ் ஸ்த்ரிய: ।
ஏகஸ்யாபி ந பர்யாப்தம் தஸ்மாத் த்ருஷ்ணாம் பரித்யஜேத் ॥

என்று மகரிஷியும் மிகவும் அழகாகச் சொன்னார். இவ்வுலகில் பூமி தானியம் யானை குதிரை பொன் பெண் பசுக்கள் முதலிய எவ்வளவு ஐஸ்வர்யம் உண்டோ இவை அனைத்தையும் ஒருவனிடத்திலேயே கொடுத்தாலும் அவன் திருப்தியடைவானா என்றால் அது ஸந்தேஹம்தான். முன்பு இவற்றில் கோடியில் ஓர் அம்சத்தைப் பெற்றிருந்தோமோ இல்லையோ? இப்பொழுது எவ்வளவோ மடங்கு உலகம் முழுவதையும் பெற்றிருக்கிறோமே என்று திருப்தியடைவதில்லை. இன்னும் சில அம்சங்களைப் பகவான் படைத்து நமக்கு அளித்தால் அவற்றையும் பெற்று வாழலமே என்றுதான் எண்ணுகிறான். மனிதனின் சித்த விருத்தி இப்படி அமைந்திருக்கிறது.

இதில் உதாஹரணத்துக்கு ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம். யயாதி என்பவர் பேரரசர். அவர் எவ்வளவோ இன்பங்களை அநுபவித்தார். பிறகு ஒரு சாபத்தினால் அகாலத்தில் அவருக்குக் கிழத்தன்மை வந்துவிட்டது. அந்த மாறுபட்ட உடலைக் கண்டு அஞ்சினார். 'ஐயோ, எப்படி இனி இவ்வுலக இன்பங்களை அநுபவிக்க முடியும்?' என்று கவலை கொண்டார். இன்பங்களில் நசை (ஆசை) யுற்றவராய் வாலிபப் பருவத்தில் இருந்த தம் புதல்வர்களிடத்தில் கிழத்தன்மையைக் கொடுத்து அவர்களது யௌவனத்தைப் பெற்றுத் தாம் இன்பம் துய்க்க விரும்பினார். பிறருடைய யௌவனத்தைப் பெற்றாவது ஸுகிக்க வேண்டும் என்று அவர்

விரும்பினார். அதிலும் தம் புதல்வனின் யௌவனத்தை விரும்பினார். அவருடைய புதல்வனாவது நீண்ட காலம் இவ்வின்பங்களை அநுபவித்திருந்தால் ஒருவாறு பொருந்தும். அதுவுமில்லை.

இது போகட்டும். பிள்ளைகளாவது தகப்பனாருடைய வார்த்தையைக் கேட்டு யௌவனத்தைக் கொடுக்கலாம். கொடுக்க ஸம்மதிக்கிறார்களா? இல்லை. ஏனென்றால் அவர்களும் இவ்வுலக இன்பங்களை அநுபவிக்க ஆசையுள்ளவர்கள்தாமே? கடைசியில், புரு என்பவன் இசைந்தான். இவ்வாறு மிகவும் முயன்று யௌவனத்தை அடைந்து அவர் திருப்தி அடைந்தாரா என்றால் இல்லை. இறுதியில் அவரே சொல்லுகிறார்:

ந ஜாது காம: காமாநாம் உபபோகேந சாம்யதி ।
ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்ததே ॥

"ஓரிடத்தில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. அதை அணைக்க ஜலத்தை ஒருவன் கொட்டினான். அது அணைந்து விட்டது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றொருவன் வேறோர் இடத்தில் மற்றொரு ஸமயம், நெருப்புப் பிடித்துக் கொண்டபோது, 'நெய்யும் ஜலத்தைப் போல் ஒரு திரவபதாரத்தம்தானே? இதைப் கொண்டு அணைக்கலாம்' என்ற எண்ணி, அதில் நெய்யைக் கொட்டினான். அது, அணைவதற்குப் பதிலாகக் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. மேன் மேலும் இவன் நெய்யைக் கொட்ட, அந்த அக்கினி விருத்தியடைந்துகொண்டே இருந்தது; அணையவே இல்லை. அது போல இவ்வுலக இன்பங்களை யௌவனத்தைக் கொண்டு அநுபவித்துவிட்டால் ஆசை தீர்ந்துவிடும் என்று நான் நினைத்தேன். ஆனால் இது மேலும் மேலும் விருத்தியடைகிறதே தவிரத் திருப்தி ஏற்பட்டுத் தீர்ந்தபாடில்லை" என்கிறார் யயாதி.

ஒரு பெண்ணை மணந்து கொண்ட ஒருவன் அவளிடத்தில் திருப்தி பெறாமல் மள்றொருத்தியையும் விரும்புகிறான். அதே மாதிரி பல பசுக்களைப் பெற்றவன் உலகிலுள்ள எல்லாப் பசுக்களையுமே தனதாக்கிக் கொள்ள விரும்புகிறான். இது போல் நிலம் ரத்தினம் பொன் எல்லாவற்றிலும் ஒருவனுக்கே ஆசை பிறக்கிறது. இதை நினைத்தே, 'ஏகஸ்யாபி ந பர்யாப்தம்' என்றார் மகரிஷி.

இப்படித் தனக்கு வேண்டிய அளவும் அதற்கும் மேலாகவும் பொருள்களைப் பெற்றிருந்தும் திருப்தி பெறாமல் பற்றாக்குறையையே ஏறிட்டுக் கொண்டு, தான் பெறாத விஷயங்களைக் காட்டி, அதை அடையவில்லையே, இதை அடையவில்லையே என்று பேசுகிறார்களே தவிர, 'எனக்கு இதுவே போதும்' என்று சொல்பவர் ஒருவரும் இல்லையே!

ஒருவன் ஒரு க்ராமத்துக்குப் போகிறான். அங்கு 10 ஏக்கர் நிலம் நன்கு விளைச்சலுடன் இருக்கிறது. அதைப்பார்த்ததும் அட, இது நம்முடையதாக இருக்கக் கூடாதா என்று எண்ணுகிறான். அவனே மற்றுமொறு க்ராமத்துக்குச் செல்கிறான். அங்கும் இதே மாதிரி காண்கிறான். எண்ணமும் முன்போலவே உண்டாகிறது. அழகான ஒரு பெண்ணைப் பார்த்ததும் இப்பெண் என் மனைவியாக இருக்கக் கூடாதா என்று நினைக்கிறான். இப்படி எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் ஒரே நினைவுதான். வெள்ளிக்கடை, நகைக் கடை முதலிய இடங்களில் மனைவியை அழைத்துக் கொண்டு போனாலே ஒரே அனர்த்தம்தான். எல்லா நகைகளும் எல்லா பாத்திரங்களும் நம்முடையதாகவே இருக்கக் கூடாதா என்ற எண்ணம்தான்

பெண்களுக்கு உண்டாகிறது. ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு விஷயத்திலும் கிடைத்தது போதாது. மேலும் மேலும் வேண்டும் என்ற எண்ணம்தான் சம்பவிக்கிறது. படித்த பண்டிதர்களுக்கும் இது சகஜமாகிவிட்டது. பல் மயிர் புலன்கள் எல்லாம் கிழத்தன்மை அடைந்துவிட்டது. ஆனால் த்ருஷ்ணா, ஆசை யௌவனத்திலேயே இருக்கிறது. இதுதான் ஆச்சர்யம்.

படிப்பிலும், பகவதநுபவத்திலும், தர்மகாரியங்களிலும் பற்றாக்குறையைக் காட்டுவது எவ்வளவொ ச்ரேயஸ் கரம். ஒரு கல்வியைக் கற்றவன் அதில் மேல்மேலும் கற்க வேண்டும், மற்றக் கல்விகளையும் கற்க வேண்டும் என்று ஆசைப்படுவது உசிதம். தர்மகாரியங்களைச் செய்பவன் செய்த தர்மத்தை மறுபடியும் செய்ய வேண்டும் என்றும், மற்றத் தர்மங்களையும் செய்ய வேண்டும் என்றும் அதில் பற்றாக்குறையைக் காட்டி நடப்பது எவ்வளவோ நன்மைகளை விளைவிக்கும். பொருள் திரட்டுவதில் இதைக் காட்டுவது இவனுக்கோ பிறருக்கோ எவ்வித நன்மையையும் தராது. ஏனெனில், மேன் மேலும் பொருளில் ஆசை வைத்து, அதைத் திரட்டத் தீய வழிகளில் சென்று விடுவான். இறுதியில் அவனுக்கு அது தீங்கை விளைவித்துவிடும். அக்ரமமான காரியங்களில் இறங்கியபடியால் நரகம் முதலிய துக்கங்களுக்கும் ஆளாகிவிடுவான். ஆகையால் அதிக ஆசையை விட்டொழிப்பதே நன்மையைக் கொடுக்கும். 'தஸ்மாத் த்ருஷ்ணாம் பரித்யஜேத்' என்று மகரிஷியும் கூறினார்.

ஸௌபரி ஒரு மஹரிஷி. அவர் பெண்ணை மணந்து கொள்ள ஆவல் கொண்டார். 50 பெண்களை மணந்தார். அளவு இல்லா இன்பம் அடைந்தார். ஒவ்வொருவரிடத்தில் மகன் பேறு எத்தனையோ பெற்றார். ஆயினும் ஆசை போகவில்லை. குழந்தைகளின் அப்த பூர்த்தி வரையில் நாம் இருக்கலாம் என ஆசை. அது முடிந்ததும் உபநயனம் பர்யந்தம் ஆவலுடன் இருக்க ஆசை. பிறகு அவர்களுக்கு விவாஹம் பர்யந்தம்.. இப்படியே காலத்தை கழித்தார். கடைசியில் அவருக்கே ஒன்று தோன்றிற்று. ஆசைக்கு அளவே இல்லை. மநோரதம் என்னும் அகல நதிக்கு கறை ஏது என்று தீர்மானித்தார். மனோரதாநாம அதடா: ப்ரவாஹா: என்றார். இந்த ப்ரவாஹம் மனிதனை அடித்து கொண்டுதான் போகும். இதை தடுக்க முடியாது என தீர்மானித்தார்.

*****

# 35. பண்டிதன் யார்?

கடவுள் அவரவர் செய்த வினையை முன்னிட்டு இவ்வுலகில் ஜீவன்களைப் படைக்கிறார். ப்ராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவுகளில் சிலர் பிறப்பை எடுக்கின்றனர். சிலர் ஆடு, மாடு, சிங்கம், புலி முதலியவற்றில் பிறப்பை எடுக்கின்றனர். மற்றும் சிலர் செடி, கொடி, மரம் போன்றவற்றில் பிறப்பை அடைகின்றனர். இவை அவரவர் செய்த வினை காரணமாகவே ஏற்படுகின்றன. கடவுள் தாமாகவே காரணமில்லாமல் ஒருவனை அந்தணனாகவும் மற்றவர்களை ஆடு, மாடு, செடி போன்றவையாகவும் படைக்கிறார் என்பதில்லை. ஒருவன் நல்வினையைச் செய்திருந்தால் அதற்குத் தகுந்தபடி அவனுக்கு உடலமைப்பும் அழகும் புத்தியும் சாமர்த்தியமும் மற்றும் முக்கியமான பண்புகளும் கொடுத்து அவனை ஆதரிக்கிறார். தீவினையைச் செய்திருந்தால் அதற்குத் தகுந்தபடி பிறப்பு முதலியவற்றை ஏற்படுத்துகிறார். நாம் செய்யும் கருமம்தான் இவற்றுக்குக் காரணம்.

நாம் உயர்ந்த ஜாதியில் பிறக்க வேண்டும் என்றும், மிகவும் புத்திசாலியாக இருக்க வேண்டும் என்றும், மன்மதன் போல் அழகுள்ளவர்களாகக் காட்சியளிக்க வேண்டும் என்றும், கர்ணன் போல் தான தருமங்களைச் செய்து உலகத்தாரிடம் நல்ல புகழுடன் விளங்க வேண்டும் என்றும் இருந்தால் அதற்குத் தக்கவாறு நல்ல காரியங்களைச் செய்திருக்க வேண்டும். குளம், கிணறு முதலியவற்றை வெட்டி, ஆடு மாடுகளும் பாகவதர்களும் விடாய் தீரும்படியாக ஏற்பாடு செய்திருக்க வேண்டும். எம்பெருமானை ஆராதித்திருக்க வேண்டும். கோயில்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும். பாகவதர்களுக்கு ஒதுங்க நிழல் கொடுத்திருக்க வேண்டும். வைதிக வேள்விகளைச் செய்திருக்க வேண்டும். இம்மாதிரி தான தருமங்களைச் செய்திருந்தால் பகவான் உவந்து மறுபிறவியிலும் நம்மை உயர்ந்தவனாக மாற்றுவான். இந்தப் பிறவியிலும் நம்மை மேன்மேலும் உயர்ந்தவராகவே செய்வான். இப்படி நல்ல காரியங்களைச் செய்யாமல், 'எனக்கு நிறையப் பணம் கிடைக்க வில்லையே?' எனவும், 'நான் புத்தி உடையவனாக இல்லையே?' என்றும், 'அழகாக இல்லையே?' என்றும், 'நற்குணங்கள் பலவற்றைப் பெறவில்லையே?' எனவும் மனவருத்தம் பெறுவதில் லாபம் இல்லை.

தட்டான் நகைகளைச் செய்பவன். வளை, காசுமாலை, சங்கிலி, நெக்லஸ் முதலியவற்றை அவன் நன்றாகச் செய்பவன். இந்த வேலையில் அவன் மிகவும் தேர்ச்சி உடையவன்தான். சிலருக்கு வளை செய்து கொடுக்கிறான். சிலருக்குத் தோடு செய்து கொடுக்கிறான். மற்றும் சிலருக்குச் சங்கிலி முதலியவற்றைச் செய்து கொடுக்கிறான். தோடு பெற்றுக் கொண்டவன், "ஏன் எனக்குச் சங்கிலியைக் கொடுக்காமல் தோட்டைச் செய்து கொடுத்தாய்?" என்று கேட்டால், இதற்கு அவன் என்ன பதில் அளிப்பான்? நீங்களே யோசித்துப்பாருங்கள். "நீ என்னிடம் நகை செய்து கொடுக்கும்படி தங்கத்தைக் கொடுத்தபோது தோட்டைச் செய்து கொடு என்றல்லவா கேட்டாய்? நீ சங்கிலிதான் வேண்டுமென்று கேட்டிருந்தால் அதனைச் செய்து கொடுத்திருப்பேன். நீ எதை விரும்பினாயோ அதைச் செய்து கொடுத்தேன்" என்று தானே தட்டான் பதில் சொல்வான்? அதுபோல் பகவானை நாம், "ஏன் எனக்கு நல்ல பிறப்பைக் கொடுக்கவில்லை? நல்ல புத்தியையும் நற்குணத்தையும் ஏன் கொடுக்கவில்லை?" என்று கேட்டால், "உன் விருப்பத்தை அநுசரித்துத்தான் நான் கொடுத்தேன்" என்பான். "நற்புத்தியும் பணமும் வீடும் உன்னதப் பதவியுமாகிய உயர்ந்த வஸ்துக்களைத்தானே நான் விரும்புகிறேன்?" என்று கேட்டால், அதற்குப் பகவான் என்ன சொல்வான் தெரியுமா? "நீ பயனை அநுபவிக்கும் போது நல்ல பொருள்களை விரும்புகிறாய். இதற்குக் காரணமாக உள்ள வேதங்களில் சொல்லப்பட்ட நற்காரியங்களை நீ விரும்பவில்லை. அவற்றை நீ விரும்பிச் செய்திருந்தால்

உனக்கு நல்ல பயனை அளித்திருப்பேன். ஆகையால் நற்காரியங்கள் செய்வதாகிற உன் விருப்பம்தான் நான் உனக்குத் தரும் பயன்களுக்குக் காரணம். அதை அநுசரித்துத்தான் உனக்குப் பயனும் கிட்டும்" என்று விடையளிப்பான். ஆகையால் அவனவனுடைய கர்மத்தை அநுசரித்துப் பகவான் அனைவரையும் படைக்கிறான். ஆகையால் அவன்மேல் எவ்விதக் குற்றமும் இல்லை.

இப்படிப் படைக்கப்பட்டவர்களில் பண்டிதன் யார், யார் பண்டிதனாக மாட்டான் என்பதைச் சிறிது ஆராய்வோம். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை ஒரு பிழையுமில்லாமல் பூர்ணமாக அத்யயனம் செய்து, எம்பெருமான் வீதியில் எழுந்தருளும்போது முதல் கோஷ்டியிலும் கோயில்களிலும் நன்றாகச் சேவிப்பவர்கள் இருக்கின்றனர். இவர்கள் இந்தத் திவ்யப் பிரபந்தத்தைத் தூக்கத்திலும் தலைகீழாகவும் சொல்லத் திறமை பெற்றவர்கள். இவர்கள் பண்டிதர் ஆவார்களா? இம்மாதிரியே, வேதத்தை லக்ஷணத்துடன் அத்யயனம் செய்து வீதியில் எம்பெருமான் பின் கோஷ்டியிலும் கோயில்களிலும் பாராயணம் செய்கிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். இவர்களைத் தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் ஒரு தவறுமில்லாமல் சொல்வார்கள். ஸலக்ஷண கனபாடி என்ற பெயரையும் பெற்றவர்கள். இவர்கள் பண்டிதர் ஆவார்களா? தர்க்க சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் ஆங்காங்கே சபையில் தங்களது தர்க்க பாண்டித்யத்தினால் பெரிய வாதம் செய்வார்கள். கால்கள் இல்லாமலே பந்தலைப் போட்டுக் கொண்டு போவார்கள். பரிஷ்காரம், அநுகமம் முதலியவற்றைச் செய்து பிறரைப் ப்ரமிக்கச் செய்து ஆனந்த சாகரத்தில் மூழ்க அடிப்பார்கள். இவர்கள்தாம் பண்டிதரா?

வ்யாகரணம் என்னும் ஒரு சாஸ்திரம் உண்டு. இந்தச் சாஸ்திர வல்லுநர், 'மகாபாஷ்யம் என்னும் உயர்ந்த க்ரந்தத்தைப் படித்தவர்கள்தாம் உயர்ந்த பண்டிதர்கள்' என்பார்கள். இவர்கள்தாம் பண்டிதர் ஆவார்களா? இப்படி மீமாம்ஸை, வேதாந்தம் முதலிய கல்வித் துறைகளை நன்கு அப்பியஸித்து வாதப் போராடும் வகையில் தேர்ச்சி பெற்ற எத்தனையோ மகான்கள் உள்ளனர். இவர்கள் பண்டிதர் ஆவார்களா? இப்படி வைதிகத் துறையில் உள்ளவர்களைப் பற்றி விசாரிப்பது போல் லௌகிகத் துறையில் உள்ளவர்களையும் விசாரிப்போம்.

ஆகாயவிமானம் செய்வதிலும், பஸ் முதலியவற்றைச் செய்வதிலும், கணித சாஸ்திரத்திலும், சங்கீதத்திலும், விஞ்ஞானத் துறையிலும் தேர்ச்சி பெற்றவர் பலர் உள்ளனர். இவர்களைத்தான் பண்டிதர்கள் எனச் சொல்லலாமா? இவ்விஷயத்தில் நாமாக ஒன்றும் கூறுவதற்கு வரவில்லை. க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஓர் அழகிய உபதேசம் செய்கிறான். அவன் சிலரைப் பண்டிதர் என்று ஒப்புக் கொள்கிறான். கீதாசாரியனான பகவான் யாரைப் பண்டிதர் என்று மனமார்ந்து கூறுகிறானோ அவர்களை தவிர வேறு யார் பண்டிதராகமுடியும்?

உலகத்தில் கீதையைப் புகழாதவர் யாருமில்லை. கிருஷ்ண பகவானே சொன்னபடியால் அதற்கு ஒப்பற்ற ஏற்றமுண்டு. கீதையில் கூறப்படும் பொருளெல்லாம் உண்மையே என்பது அனைவரும் இசைந்த விஷயம்.

கீதையில் பின்வரும் ச்லோகத்தை அனைவரும் அப்யஸித்திருப்பார்கள். கீதையிலேயே இது ஸாரமான உபதேசம் எனவும் கூறலாம். உபநிஷதங்களிலெல்லாம் சொல்லப்படும் விஷயமே கீதையில் மிகவும் விரிவாகவும், அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணமும் சொல்லப்பெறுகிறது. உபநிஷத்தில் எது ஸாரமோ அந்த ஸாரமான அர்த்தத்தைக் கூறும் ச்லோகம் இதோ -

வித்யா வி நயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ।
சூநி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சிந: ॥

'உடலைக் காட்டிலும் உயிர் என்று சொல்லப்படும் ஆத்மா வேறுபட்டது' என்பதை அனைவரும் அறிந்திருக்கின்றனர். இதைப்பற்றி நாம் இங்கு விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இந்த ஆத்மாவும் ஒன்றா பலவா. பலவாக இருக்கும் பக்ஷத்தில் ஒருவருக்கொருவர் ஸ்வரூபத்தில் வேறுபாட்டை உடையவர்களா இல்லையா என்பதை இங்கே கவனிக்க வேண்டும். ஒரே ஆத்மாதான்; அதுவே பல சரீரங்களை எடுத்து உலகத்தில் பிறக்கிறது என்று ஒரு மதத்தைச் சார்ந்தவர் சொல்லுகின்றனர். இந்த அர்த்தத்தை மனத்தில் கொண்டுதான் கீதாசார்யன் இந்த ச்லோகத்தைப் படித்தான் என்று சிலர் மருளுவர். "படிப்பு, அடக்கம் முதலிய நற்குணங்களைப் பெற்ற அந்தணனிடத்திலும், சாமானியப் ப்ராமணனிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், மாமிசத்தைப் புசிப்பவர்களிடத்திலும் எவன் சமதர்சியோ (உள்ள ஆத்மா ஒன்று என்று நினைக்கிறானோ) அவன்தான் பண்டிதன் என்று சொல்லியிருக்கிறபடியால், ஆத்மா ஒன்றுதான் என்று ஏற்படுகிறது" என்பது அவர்களின் கருத்து.

ஆயினும், இங்கு 'ஏகம்' என்று சொல்லாமல் 'சமம்' என்று சொல்லியிருப்பதைப் பார்த்தால் கீழ்க்கூறிய ஒவ்வொரு வஸ்துவிலும் ஒவ்வோர் ஆத்மா உள்ளது; அவற்றை ஒன்றாக (சமமாக)ப் பாவிக்க வேண்டும் என்றே ஏற்படுகிறபடியால் எல்லாத் தேகங்களிலுமுள்ள ஆத்மா ஒன்றுதான் என்று சொல்வது பொருத்தமல்ல. மேலும், எல்லா உடல்களிலும் ஒரே ஆத்மாதான் என்று இருந்தால், ஒருவருக்கு வரும் சுக துக்கங்களை எல்லோருமே பெறவேண்டி நேரிடும். அதாவது பக்கத்து வீட்டில் நல்ல பால், பழம், பக்ஷணம் முதலியவற்றுடன் நன்றாகச் சாப்பிட்டால் அவன் மட்டும் சுகம் அநுபவிப்பது நியாயமல்ல. எதிர் வீட்டில் இருப்பவனும், "நான் இன்று நல்ல பாயசம், பக்ஷணம் முதலியவற்றுடன் உண்டேன்" எனக் கூறவேண்டி வரும். மேலும், இவனுக்குப் பசியும் ஏற்படாது. ஒரு நாயை மற்றொரு நாய் கடித்தால் அந்த நாய்க்குத் துன்பம் வருவதுபோல் கடித்த நாய்க்கும் துன்பம் வரவேண்டும். மற்றுமுள்ள மனிதர்களுக்கும் அந்த துன்பம் ஏற்பட வேண்டும். ஒருவனைப் பாம்பு கடித்து விட்டால் விஷம் ஏறி அவன் மூர்ச்சையடைந்து கீழே விழுகிறான். உலகத்திலுள்ள அனைவருக்குமே இந்தத் தசை ஏற்படவேண்டும். எல்லாத் தேகங்களிலும் ஒரே ஆத்மா இருக்கிறபடியால் சுகதுக்கங்களை அநுபவிக்கிற ஆத்மாவுக்கு இவ்விஷயத்தில் வேறுபாடு இருக்கவே நியாயமில்லை. எனவே ஒருவன் பசியில்லாமல் நன்கு சாப்பிட்டுக் காரில் பவனி வருகிறான்; மற்றொருவன் நடந்து போகவும் சக்தியின்றித் தவிக்கிறான்; ஒருவன் ஆனந்த சாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறான்; மற்றொருவன் துயரக்கடலில் விழுந்து துன்புறுகிறான். இப்படி உள்ளபடியால் ஒவ்வொர் உடலிலும் உள்ள ஆத்மவஸ்து வெவ்வேறு என்றே புலப்படுகிறது.

மற்றும் சிலர், "உடல் வேறு, ஆத்மா வேறுதான். ஆனாலும் இந்தப் பல ஆத்மாக்களையும் உடல் வெவ்வேறாக இருப்பதைக் கண்டு வேறுபாடாகக் கருதுவது நியாயமல்ல. எல்லோரையும் ஸமமாகவே நினைத்துப் பெண் கொடுப்பது, வாங்குவது, ஒன்றாக உட்கார்ந்து உண்பது முதலியவற்றைச் செய்தல் வேண்டும். ஆக, ஜாதியிலோ மதத்திலோ வேறுபாடு காட்டக் கூடாது. இதுதான் கீதாசாரியனின் அபிப்ராயம்" என்று நினைத்து ஏமாறுவர். இதுவும் நியாயமல்ல. இப்படிச் சொல்லும் சிலர் யானைக்குப் பெண்ணைக் கொடுக்கிறார்களா, அல்லது பூனைக்கத்தான் தம் பெண்ணைக் கொடுக்கிறார்களா? நாய்க்கும் தன் பெண்ணுக்கும் மணத்தை நடத்துகிறார்களா? அல்லது சிங்கக்குட்டியைத் தாங்கள்

மணந்துகொள்ளுகிறார்களா? ஏதோ ஒரு துரபிப்ராயத்தை மனத்தில் கொண்டு தங்கள் விருப்பத்தின்படி மேடையில் நின்று எதை எதையோ பேசுகிறார்கள். மனிதர்களில் மாத்திரம் ஏன் இப்படிப்பட்ட அநீதிச் செயலைச் சொல்ல வேண்டும்? காட்டிலுள்ள மிருகங்கள் அவ்வவற்றுக்கு ஏற்பட்ட சடங்குகளையே செய்கின்றன. ஒரு நரி பெண் சிங்கத்துடனா சேர்கிறது. யானைதான் நரியுடன் சேர்கிறதா? கிராமங்களிலுள்ள ஆடு மாடுகளும் ஒலே நியமத்துடன்தான் உள்ளன. திர்யக்குகள் அவ்வவற்றின் தர்மங்களைப் பூர்ணமாகவே நடத்துகின்றன. மாறாட்டத்தை அவை செய்து கொள்வதில்லை. இவ்விஷயத்தை நாமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகையால் இவர்கள் கூறியதும் பொருத்தமற்றதே. அப்படியானால் இந்த ச்லோகத்துக்கு என்ன பொருள் என்றால் கூறுகிறோம்.

ஒவ்வொருவருக்கும் உடல் வேறு, ஆத்மா வேறு என்பதில் ஐயமில்லை. அவரவர்களின் வினையை அநுசரித்து அவரவரகளுக்கு உடல் வெவ்வேறாக வரும் என்பதையும் நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒவ்வோர் உடலிலுமுள்ள ஆத்மா ஒரே ரூபமாக (ஒரே ஆகாரமாக) உள்ளது. இந்த உடலிலுள்ள ஆத்மா எவ்வளவு சிறியதோ எவ்வளவு பிரகாசமாக உள்ளதோ, எப்படி ஞானானந்த ஸ்வரூபமாக உள்ளதோ அப்படியேதான் மற்றோர் உடலிலுள்ள ஆத்மாவும் இருக்கிறது. இதில் வேறுபாடே இல்லை. உடலில் வேறுபாடு மாத்திரம் வினையை அநுசரித்தது. ஒரு ப்ராமண இனத்திலேயே ஒருவன் சிவப்பாகவும் மற்றொருவன் கறுப்பாகவும், ஒருவன் பெருத்தவனாகவும் மற்றொருவன் மெலிந்தவனாகவும் ஒருவன் அழகனாகவும் மற்றொருவன் குரூபனாகவும் இருக்கிறார்கள். இப்படி எல்லா இனத்திலும் உண்டு. இதற்கெல்லாம் காரணம் அவரவர் செய்த வினையே. இதைப் போலத்தான் ப்ராமணன், க்ஷத்திரியன் முதலிய வேறுபாடும், ஆடு, மாடு, புல், பூண்டு போன்ற வேறுபாடும் ஏற்படுகின்றன. இதுதான் உண்மை. இந்த அர்த்தத்தைத் தான் கீதாசார்யன் இந்த ச்லோகத்தில் கூறியுள்ளான்.

ஆகவே இம்மாதிரி அறிவு பெற்றவன்தான் பண்டிதன். பல கல்விகளைக் கற்றிருந்த போதிலும், பல ஆராய்ச்சிகளைச் செய்திருந்த போதிலும், ஆகாயத்திலே பறப்பதற்கு வேண்டிய யந்திரங்களைப் படைப்பவனாக இருந்தபோதிலும், வேதம் சாஸ்திரம் முதலியவற்றைக் கற்றறிந்தவனாக இருந்தபோதிலும் இந்த அறிவு இல்லாதவன் பண்டிதனாக மாட்டான். இப்படிப்பட்டவன்தான் மிகவும் உயர்ந்தவன். இவனைத்தான் கீதாசார்யன் புகழ்வான்.

இப்படிப்பட்ட அறிவைப் பெறுவதற்கு ஸதாசார்ய ஸம்பந்தத்தைப் பெறுதல் வேண்டும். தான் தோன்றியாகப் புஸ்தகத்திலுள்ள ஏட்டை மட்டும் புரட்டி அறிவைச் சம்பாதித்துக்கொள்ளுதல் இயலாது. இதை அநுசரித்துத்தான், "ஆசார்யனிடம் பல முறை வணங்கிப் பணிவிடைகளைச் செய்து நல்ல ஞானத்தைப் பெற்றுக் கொள்; அவர்கள் நல்ல உபதேசம் செய்வார்கள்" என்று கீதாசார்யன் முதலிலேயே உபதேசித்தான்.

*****

# 36. கன்னிகாதானம்

உலகத்தில் கன்னிகாதானம், பாணிக்ரஹணம், விவாகம் என்றெல்லாம் சொல்வது வழக்கம். இந்தப் பதங்களுக்கு அர்த்தம் வேறாக இருந்த போதிலும் கருத்து ஒன்றுதான். பெண் வீட்டுக்காரன் விவாகத்தை நிச்சயித்துப் பத்திரிகை போடும்போது, 'இந்தப் பெண்ணைக் கன்னிகாதானம் செய்வதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்டு' என்று எழுதித் தெரியப்படுத்துகிறான். பிள்ளை வீட்டுக்காரன் பத்திரிகை போடும்போது, இந்தப் பெண்ணைப் பாணிக்ரஹணம் செய்து கொள்வதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு' என்று அச்சிட்டு வெளிப்படுத்துகிறான். கடைசியில் செய்யும் காரியம் ஒன்றேதான். ஆனாலும் பெண்பெற்றவன் பெண்ணைக் கொடுக்க அதிகாரியானபடியால் கன்னிகாதானம் என்று அவனைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். பிள்ளை வீட்டுக்காரனுடைய புதல்வன் அந்தப் பெண்ணின் கையைப் பிடிக்கிறபடியால் பாணிக்ரஹணம் என்று அவனைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

ஒருவன் ஒரு பிராமணனுக்குத் தங்கத்தைத் தானம் செய்கிறான். வெள்ளி, தானியம், பூமி இவை அனைத்தையும் தானம் செய்கிறான். இப்படிப் பல பொருள்களைத் தானம் செய்வதைக் காட்டிலும் கன்னிகையின் தானமே மிகவும் உத்தமமானது. எல்லாத் தானத்தைக் காட்டிலும் இந்தத் தானத்தையே சாஸ்திரங்கள் புகழ்ந்து பேசுகின்றன; 'ஸர்வஸ்மாதபி தாநாத் வை கந்யாதாநம் பரசஸ்யதே' என்று. கன்னிகையை ஒருவனுக்குக் கொடுக்கும்போது என்ன சங்கல்பம் செய்து கொள்கிறான் என்பதைக் கவனியுங்கள். 'தசாநாம் பூர்வேஷாம் தசாநாம் பரேஷாம் ஆத்மநச்ச ஏகவிம்சதிகுலோத்தாரணார்த்தம் கந்யகாதாநாக்ய மஹாதாநம் கரிஷ்யே' என்று சொல்லுகிறான். அதாவது, 'எனக்கு முந்திய பத்துக் குலங்கள், பிந்திய பத்துக் குலங்கள், எனது குலம் ஆகிய இருபத்தோரு குலங்கள் மேன்மையாக விளங்க வேண்டும் என்பதற்காகக் கன்னிகாதானம் என்ற பெரும் தானத்தைச் செய்கிறேன்' என்கிறான். கன்னிகாதானம் செய்வதனால் இருபத்தோரு குலங்களுக்கு நல்ல கதி ஏற்படுகிறது என்றால் இப்படிப்பட்ட பலன் எந்தத் தானத்துக்கு உண்டு? ஆகையாலேயே இந்தத் தானம் பெரிய தானமாகிறது. இதில் ஒரு விசேஷம் உண்டு. மற்ற தானங்களைச் செய்த பிறகு, 'இது உன்னுடையது. எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை' என்று சொல்வதுண்டு. கன்னிகாதானத்தில், 'இந்தப் பெண் உன்னுடையவள்' என்றுதான் சொல்வது. 'எனக்கும் இந்தப் பெண்ணுக்கும் சம்பந்தமில்லை' என்று சொல்வதில்லை. ஏனேன்றால் அது உங்களுக்கே தெரிந்திருக்கும்.

இப்படிப் பலபடியாலும் கன்னிகாதானம் சிறந்ததானபடியால் புருஷப்ரஜையைப் பெற்றவனைக் காட்டிலும் ஸ்திரி ப்ரஜையைப் பெற்றவன் அதிகப் பாக்கியசாலி என்றே கூற வேண்டும். அதிலும் அதிகமாகப் பெண் குழந்தையைப் பெற்றவன் மிக்க பாக்கியசாலி. இப்படிப் பல பெண்களைத் தகுந்த வரனுக்குத் தானமாகக் கொடுக்கிறபடியால் அதிலிருந்து உயர்ந்த புண்ணிய விசேஷத்தை அவன் பெறுகிறான். தன் பெண் குழந்தைகளுக்குத் தகுந்த வரன்களைப் பார்த்துச் சீர் முதலியவற்றைச் செய்து கொடுப்பது ஒன்றுதான் கஷ்டம். வைரத் தோடு, வெள்ளிப் பாத்திரங்கள், தங்க பூஷணங்கள், வரதக்ஷிணை இவற்றைத் திரட்டிக் கொடுப்பது ஏழைகளுக்கு எளிதல்ல. எவ்வளவோ தொகை தொகையாக ரூபாயைச் சம்பாதிப்பவனுக்குச் சுலபமாகலாமோ என்னவோ! ஏழைக் குலத்தில் பிறந்தவன் இவை எல்லாவற்றையும் சம்பாதித்துச் சேர்த்துக் கொடுப்பது எப்படி முடியும்?

இப்படிச் சீர்வரிசைகளைச் செய்யாவிட்டால் பிள்ளைவீட்டுக்காரனோ, அவனைச் சேர்ந்தவனோ பிள்ளையோ கண்ணெடுத்தே பார்க்கமாட்டேன் என்கிறார்கள். ஆகையால் பல பெண்கள்

தனக்குப் பிறந்திருந்தால் சீர் முதலியவற்றை செய்து கொடுப்பது என்பது ஒன்றுதான் கஷ்டம். தன் சக்திக்கு அநுகுணமாக யாசித்தோ, யாசிக்காமலோ, சிரமப்பட்டுக் கன்னிகைகளைத் தானம் செய்துவிட்டால் அளவற்ற பலனை அடைந்து எல்லையற்ற ஆனந்தத்தைப் பெறுவான் என்பது திண்ணம். ஆகையால் பிறரை யாசித்தாவது தன் பெண்ணைத் தானம் செய்ய முயல வேண்டும். இவ் விஷயத்தில் ஏழ்மைப்பட்டவனுக்குப் பல கஷ்டங்கள் இருக்கத்தான் கூடும். ஆகையால்தான், 'கந்யாபித்ருத்வம் து:காய' பெண்ணுக்குத் தகப்பனாக இருக்கும் தன்மை மிகக் கஷ்டத்தின் பொருட்டு' என்று சொல்வது வழக்கம்.

இங்கு வேடிக்கையாக ஒரு கதை சொல்வதுண்டு. ஒருவன் தனக்கு விவாகமானதும் பல பெண்களுக்குத் தகப்பனாகிவிட்டான். அவனோ அதிக வருமானமில்லாதவன். எப்படியாவது தன் முதற் பெண்ணுக்காவது விவாகம் செய்ய எண்ணி, யாசிப்பதற்கு நகரங்களுக்குச் சென்றான். பிரபுக்கள் இவனுடைய கஷ்டத்தை அறிந்திருந்தும் நிறையப் பணம் கொடுப்பார்கள் என்று சொல்லிவிட முடியாதே! எங்கோ யாரோ ஒரு மகான் மனஸ்வியாகவும் உதாரராகவும் இருப்பார். அப்படிப்பட்ட ஓரிருவர் கொடுப்பர். மற்றவர்கள் பாங்கிலும் பெட்டியிலும் பணம் நிறைய வைத்திருந்த போதிலும் தர்ம சிந்தையே இல்லாமல், 'இல்லை' என்றே சொல்லிவிடுவார்கள். பெண்ணைப் பெற்ற இவன் ஆங்காங்கே அலைந்து ஸ்ரீரங்கம் சென்றான். ஸ்ரீரங்கநாதனை கண்குளிர வணங்கினான். நம்பெருமாளை பார்த்ததும் இவனுக்கு ஓர் ஐயம் ஏற்பட்டுவிட்டது. ஸ்ரீரங்கத்தில் பகவான் இரு கைகளையும் நன்றாக நீட்டிக்கொண்டு கவலையற்றவராகத் தூங்குகிறார். இதைக் கண்டதும் இவன் "ஸ்வாமிந், இரண்டு கைகளையும் நீட்டி ஆதிசேஷன் என்னும் படுக்கையில் விசேஷமாகத் தூங்குகிறீரே! தேவரீர் தூக்கத்திற்குத் தட்டுத் தடங்கலே கிடையாதா? ஒரு நிமிஷங்கூடப் படுக்கை போட்டுக் கொண்டு கவலையற்றுத் தூங்க என்னால் முடியவில்லையே? ஓகோ! உமக்கோ உம்முடைய குலத்திலோ ஒரு பெண்கூடப் பிறக்கவில்லை போலிருக்கிறது. அப்படிப் பிறந்திருந்தால் என்னைப் போல் பணத்துக்கு அல்லாட மாட்டீரா? மானமும் போய்விடாதா? இப்படி நன்றாகப் படுத்துக் கொண்டு தூங்குகிறபடியால் உமது வம்சத்திலேயே பெண் பிறக்கவில்லை போலிருக்கிறது" என்றானாம்.

> சேஷே சேஷே விசேஷேண ப்ரஸாரிதகரத்வய: ।
> தநமாநஹரா கந்யா கிம் ந ஜாதா குலே தவ? ॥

ஆகையால் பெண்ணுக்குத் தகப்பனாக இருக்கும் தன்மை மிக்க கஷ்டத்தைக் கொடுக்கும் என்பது வாஸ்தவம். ஆயினும் கஷ்டப்பட்டாவது பெண்களைப் பிறருக்குத் தானம் செய்துவிட்டால் அளவற்ற புண்ணியத்தை அடைவான். கோடி கன்னிகாதானம் என்று சில வம்சத்தாரைச் சொல்லுகிறார்கள். கோடி என்று ஒரு பெண்ணுக்குப் பெயரை வைத்து அந்தப் பெண்ணைத் தானம் செய்தார்கள் என்றோ, ஒருவருக்குக் கோடி கன்னிகைகள் பிறந்து அவர்களைத் தானம் செய்தார்கள் என்றோ, அவ்வம்சத்தில் கிரமமாகக் கோடி கன்னிகைகள் பிறந்து அவர்களைத் தானம் செயதார்கள் என்றோ அவர்களுக்கு அந்தப் பெயர் வந்தது. பெயர் வந்ததற்குக் காரணம் இப்படியாகத்தான் இருக்க முடியும். வேறுவிதமான காரணங்கள் இருந்தாலும் அவற்றில் நமக்குக் கண்ணோட்டம் இல்லை. கன்னிகாதானம் செய்து உயர்ந்த அந்தப் பெயரை அடைந்தார்கள் என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

ஆண் ஸந்ததியைவிடப் பெண் ஸந்ததிதான் சிறந்தது என்பதை, 'புத்ராத் சதகுணம் புத்ரீ யதி பாத்ரே ப்ரதீயதே' என்று சொல்வதுண்டு. அதாவது - புத்திரனைக் காட்டிலும் பெண் நூறு

மடங்கு உயர்ந்தவன். இதற்கு என்ன காரணம் என்றால் உயர்ந்த ஸத் பாத்திரத்தில் அந்தப் பெண்ணைக் கொடுத்தால், அதனால் இவன் உயர்ந்த புண்ணியத்தை அடைகிறான் என்று.

இங்கு, 'பாத்ரம்' என்பது 'உயர்ந்த வரன்' என்ற அர்த்தத்தைச் சொல்வதற்காக வந்தது என்று சிலர் கூறுவர். ஆனால் இங்கு வேறுபட்ட பொருளைக் கூறுவதற்குத் தான் வந்தது. பாத்திரம் என்ற சப்தத்தின் மேல் ஏழாம் வேற்றுமை சேர்த்தால் 'பாத்ரே' என்று ஆகும். 'பாதா' என்ற சப்தத்தின் மேல் நான்காம் வேற்றுமை சேர்த்தால் 'பாதரே' ஆகும். இங்கு, 'கொடுக்கப்பட்டால்' என்று மேலே கூறப்பட்டபடியால், நான்காம் வேற்றமையைத்தான் கொள்ள வேண்டும். 'ப்ராஹ்மணாய காம் ததாதி. அந்தணனுக்குப் பசுவைக் கொடுக்கிறான்' என்றே சொல்ல வேண்டும். 'அந்தணனிடத்தில் பசுவைக் கொடுக்கிறான்' என்று சொல்வதில்லை. ஆகையால், 'பாத்ரு' என்ற சப்தத்தின் மேல் நான்காம் வேற்றுமை கொண்டது 'பாத்ரே' என்ற சப்தம். பானம் பண்ணுகிறவன் பொருட்டு அல்லது ரக்ஷிக்கிறவன் பொருட்டு என்பது இதன் பொருள். நாம் ஒருவனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் அவளிடத்தில் ஆனந்த ரஸத்தை அவன் (பானம்) குடிக்க வேண்டும். அப்படிப்பட்ட புருஷனுக்குக் கொடுக்க வேண்டும். எப்பொழுதும் பெண்ணை வைதுகொண்டும், மிரட்டிக்கொண்டும், கோபத்தால் சினந்துகொண்டும், அடிக்கடி அடித்துக்கொண்டும் இருப்பவனுக்குக் கொடுப்பது பெரும் பாவத்தைக் கொடுக்கும். வேண்டிய சமயத்தில் வேண்டிய பொருளை வாங்கிக் கொடுத்து ஒரு விதமாகவும் மனத்துக்குக் கோபமோ கஷ்டமோ வராமலிருக்கும்படி பெண்ணை எவன் வைத்துக்கொள்வானோ அப்படிப்பட்டவனுக்கே கொடுக்க வேண்டும். ஆகையால்தான் மாப்பிள்ளை விஷ்ணுபோல் பூஜிக்கக்கடவன். 'ஜாமாதா விஷ்ணுவத் பூஜ்ய:' என்று பெரியோர் சொல்வதுண்டு. பகவானை எப்படி நாம் ஆராதிக்கிறோமோ அப்படியே மருமகனையும் பூஜிக்க வேண்டும். கௌரவிக்க வேண்டும். வேண்டியவற்றை வாங்கிக் கொடுத்துத் திருப்தி செய்ய வேண்டும்.

இவ்விஷயம் எல்லா மருமகனுக்கும் என்று நினைக்க வேண்டாம். நம் பெண்ணை மணந்துகொண்டு அடித்தும் வைதும், சேலை முதலியவற்றை வாங்கிக் கொடுக்காமலும் எப்பொழுதும் உபத்திரவம் செய்துகொண்டு இருக்கிறவர்களைப் பூஜிக்க வேண்டும் என்பதில்லை. பகவான் எப்படித் தன் மனைவியான லக்ஷ்மியை மார்பிலேயே வைத்துக் கொண்டு ஆதரத்துடன் இருக்கிறானோ அப்படி எவன் நம் பெண்ணை ஆதரவுடனும் பரிவுடனும் எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்து மகிழ்விக்கிறானோ அப்படிப்பட்ட மாப்பிள்ளையைக் கௌரவிக்க வேண்டும் என்பது இதற்கு கருத்து. இவை எல்லாவற்றையும் மனத்தில் வைத்துக் கொண்டுதான் கன்னிகையைத் தானம் செய்யும்போது அதற்குத் தகுந்தாற்போல் ஒரு மந்திரத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

> கந்யாம் கநகஸம்பந்நாம் ஸர்வாபரண பூஷிதாம் ।
> தாஸ்யாமி விஷ்ணவே துப்யம் ப்ரஹ்மலோ கஜிகீஷயா ॥

என்ற மந்திரத்தைச் சொல்லி, அனைவரும் தானம் செய்வது வழக்கம். 'எல்லா ஆபரணங்களோடு கூடியவளும், தங்கக் கொடிபோல் உள்ளவளுமான என் கன்னிகையை, விஷ்ணுவான உனக்கு, அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய பிரம்மலோகத்தை அடைய விரும்பிக் கொடுக்கிறேன்' என்பது இதன் கருத்து. இங்கே சாதாரணமான மனிதனுக்குத்தான் பெண்ணைக் கொடுக்கிறோம், ஆனாலும் அவனை விஷ்ணு என்று நினைக்க வேண்டும் என்று கருதி, 'விஷ்ணுவான உனக்கு' என்கிறோம்.

இப்படி விவாகம் என்றோ, பாணிக்ரஹணம் என்றோ, கன்னிகாதானம் என்றோ சொல்லி, வந்த ஒரு வரனுக்குத் தன் பெண்ணை நீர்த்தாரையுடன் தானம் செய்வது என்ற திருமணத்தை ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் நடத்தி வருகிறார்கள். இந்தத் திருமணத்துக்குப் பந்துக்களும் வேண்டியவர்களும் சென்று அவர்கள் மூலமாகப் பெரிய சம்மானத்தைப் பெற்றும் அவர்களுக்கும் சம்மானம் செய்தும் வருகிறார்களே; இதை மாத்திரம் முக்கியமான கருத்தாக எண்ணி இத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், அந்த விவாகத்தில் ஓர் ஆழ்ந்த கருத்தையும் ஆலோசித்து ஊகித்துக் கொள்ள வேண்டும். இந்த மந்திரம் விவாகத்துக்குச் செல்கிறவர்களுடைய காதுகளில் பல தடவை ஒலிக்கும். அவ்வப்போது நன்கு ஆலோசித்துப் பார்த்தால் ஓர் அரிய பெரிய விசேஷ அர்த்தம் புலப்படும். 'விஷ்ணுவுக்குக் கன்னிகையைக் கொடுக்கிறேன்' என்று சொன்னதனால், 'புருஷோத்தமனான பகவானுக்கு, கன்னிகைகளுக்குச் சமமாக உள்ள நம்மை இம்மாதிரிதான் ஆசார்யன் கொடுக்கிறான்' என்பதை ஊகித்துக் கொள்ள வேண்டும்.

இதை நன்கு விளக்குகிறோம். பகவான் ஒருவனே நம் அனைவருக்கும் கணவன், யஜமானன், பர்த்தா, புருஷன்; நாம் அனைவரும் பெண்களே. உலகத்தில் பெண்களாகச் சிலரைப் பார்க்கிறோமே, அவர்கள்தாம் பெண்கள் என்று நினைக்க வேண்டாம். ஆண்களான நாமும் பெண்களே, உடலில் ஆணுக்கு வேண்டிய அடையாளங்கள் இருக்கின்றனவே என்று நினைக்க வேண்டாம். இவை எல்லாம் அவரவர் செய்த பாவ புண்ணியங்களை அநுஸரித்து உண்டாகின்றன. எப்படித் தேவதையாகவும் மனிதனாகவும் மிருகமாகவும் மரமாகவும் ஒருவன் பிறக்கிறானோ அம்மாதிரியேதான் பெண் ஆண் என்ற பிறப்பும். ஒரு குரங்கைப் பார்த்து அதிலுள்ள ஆத்மா என்பது குரங்கே என்று சொல்ல முடியுமா? அது செய்த வினையை முன்னிட்டுக் குரங்குடல் பெற்றுள்ளது. ஆத்ம சொரூபத்துக்கு ஒருவித வேறுபாடும் இல்லையே? ஆனால் பெண்களை மாத்திரம் பெண் என்று ஏன் சொல்ல வேண்டும் என்றால், புருஷர்களுக்கு அவர்கள் அடங்கியிருப்பதனாலும், அவர்களுக்காகவே ஏற்பட்டவர்களானபடியாலும் அவர்களைப் பெண் என்று கூறுகிறோம். இது பொல் ஆண்களான நாமும் பகவானுக்காகவே ஏற்பட்டபடியாலும், அவனுக்கே அடங்கியிருக்க வேண்டியதனாலும், நாமும் பெண்களே. ஆகையால் ஒரு புருஷனுக்கும் பெண்ணுக்கும் விவாகம் நடப்பது போல் நமக்கும் பகவானுக்கும் ஏற்படுகிறது ஓர் விவாகம். இதுதான் சரணாகதி, ப்ரபத்தி, பரந்யாஸம், ஆத்மஸமர்ப்பணம். இதைத்தான் ஆசார்யர்கள் விஷ்ணுவுக்கு நம்மை ஸமர்ப்பிப்பதாகக் கருதிச் செய்கிறார்கள். இதுதான் கன்னிகாதானம். இதுதான் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம். அந்தப்புர ஸித்தாந்தம் என்று சொல்லப் படுகிறது.

ஸ்ரீஸ்வாமி தேசிகன் இதை நன்கு விவரித்துக் காட்டுகிறார்.

> தத்தா: ப்ரஜா: ஜநகவத் தவ தேசிகேந்த்ரை:
> பத்யாபிநந்த்ய பவதா பரிணீயமாநா: ।
> மத்யே ஸதாம் மஹித போகவிசேஷஸித்யை
> மாங்ல்யஸூத்ரமிவ பிப்ரதி கிங்கரத்வம் ॥

இங்கு, 'ப்ரஜா:' என்ற சொல்லைக் கருதினால் நாம் அனைவருமே பெண்களுக்குச் சமம் என்பது புலப்படும். உலகத்தில் தகப்பன் தன் பெண்ணை ஒருவனுக்குக் கொடுத்தால், மணம் புரிகிறவன் மகிழ்ச்சியுடன் அவளை ஏற்று அவளைச் சந்தோஷப்படுத்துகிறான். அவள்மூலம் தானும் இன்புறுகிறான். அவளும் அவன் கட்டிய தாலிச் சரட்டை, தன் கணவனால் பல

நன்மைகளைப் பெறுவதற்காகத் தன் உடல் இருக்கும்வரையில் காத்துவருகிறாள். அப்படியே ஆசார்யர்கள், பெண்போல் பரதந்திரர்களான ஜீவர்களைப் பகவானிடத்தில் ஸமர்ப்பிக்கிறார்கள். இந்தச் சரணாகதர்களைப் பகவான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறான். அவர்கள் உன்னைப் பரிபூர்ணமாக அநுபவிக்கிறார்கள். சரீரம் விடும் வரையும், இவர்களும் பதிவிரதைகள் ஆனபடியால், மங்களச் சரட்டைப் பக்தியுடன் காப்பாற்றுவது போல் பாகவத பகவத் கைங்கர்யத்தை ச்ரத்தையுடன் செய்து வருகிறார்கள். மாங்கல்யச் சரட்டுக்குச் சமமானது இந்தக் கைங்கர்யம். ஆகையால் ஆசார்யன் மூலமாகப் பகவானிடத்தில் செய்யப்படும் ஆத்ம ஸமர்ப்பணமே கன்னிகாதானம். இதைத்தான் பல விவாக இடங்களில் சென்று, அங்குச் செய்யக் கூடிய காரியங்களை நன்கு ஆலோசித்து உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் லோகத்தில் விவாகத்துக்குச் சென்றதும் நல்ல சாப்பாடு கிடைக்கிறது; சில லௌகிக விளையாட்டுக் கச்சேரிகள் நடக்கின்றன; நமக்கு நல்ல வெகுமதி கிடைக்கிறது என்ற இப் புடைகளில் மனத்தைச் செலுத்தாமல் உபாத்தியாயர் மந்த்ரத்தைச் சொல்லிக் கொடுத்தவுடன் அதைக் கற்றுப் பிதா தன் பெண்ணை விஷ்ணுவான வரனுக்குக் கொடுப்பதை நன்கு பராமரிசித்து விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விஷயத்தை காளிதாஸனும் சாகுந்தல நாடகத்தில் காட்டுகிறான். அந்தோ ஹி கந்யா பரக்ய ஏவ தாமத்ய ஸ ம்ப்ரேஷயிது; பிதார்மே ப்ரத்யர் பிதந்யாஸ இவாந்த ராத்மா என்பது அவனது ஸலோகம். இது கண்வ மஸரிஷியின் வசனம். நமது அந்தராத்மாவை பகவானிடம் ஸமர்ப்பனம் செய்தவன் எவ்வாறு மகிழ்சியை பெறுவானோ அவ்வாறு சந்தோஷமடைகிறேன். எப்படியும் பெண் என்னும் வஸ்து பிறரைச் சேர்ந்ததே. பகவானைச் சேர்ந்ததே இந்த ஆனம வஸ்து.

*****

# 37. ஒரே இரவு, ஒரே பகல்

உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்துக்கும் யஜமானனான ஈச்வரன் ஒருவன் இருக்கிறான். அவனன்றி உலகில் ஒன்றும் நடைபெறாது. வேதங்களில் 'ஈச்வரன் இருக்கிறான்' என்று சொல்லியிருக்கிறபடியால், உத்தமாதிகாரியான ஆஸ்திகன் அப்படியே இசைந்துவிடுவான். மத்தியமாதிகாரியான ஆஸ்திகனும் சாஸ்திரங்களில் வல்லமை பெற்ற மகான்களிடம் பழகிக் கல்வி கற்று, 'நமக்கு யஜமானனான பகவான் ஒருவன் உளன்' என்பதை உணர்ந்து கொள்வான். மந்தாதிகாரியும் சாஸ்திரங்களைப் பிரமாணமாக இசையாவிட்டாலும், மகான்களின் பழக்க வழக்கங்களை வைத்துக் கொள்ளாவிட்டாலும், உலகத்தில் அவரவருக்கு ஏற்படும் நன்மை தீமைகளைக் கண்டு, 'நமக்கு மேற்பட்ட சக்தி வாய்ந்த பொருள் ஒன்று உண்டு' என்பதைத் தீர்மானித்துக் கொள்வான். 'நாமே ஈச்வரன்' என்றும், 'நமக்கு வேண்டிய வற்றை நாமே சாதித்துக் கொள்ளலாம்' என்றும் ஏற்படும் எண்ணத்தை விட்டுவிடுவான்.

உலகத்தில் ஏற்படும் நன்மை முதலியவை அவரவர் அதீனமாக இருந்துவிட்டால் யாரும் இறந்துபோக மாட்டார்கள். அவர்களுடைய விரோதிகள் ஜீவிக்கமாட்டார்கள். தலைவலி போன்ற வியாதிகள் ஒருவருக்கும் ஏற்படா. ஒருவனும் கெடுதலை அடைய மாட்டான். கோடீச்வரனாக இருப்பவன், 'ஐயோ! இவ்வளவு ஐச்வர்யம் இருந்தும் என்ன பயன்? சிறிதளவு பழரஸங்கூட ஜீர்ணமாக வில்லையே. வாயில் ஊற்றிக் கொண்டதும் வெளியில் வந்து விடுகிறது. ஸாதாரண ஸுகத்தையும் அநுபவிக்க முடியவில்லையே!' என்று கிலேசப்பட மாட்டான். ஒன்றுமில்லாத தரித்ரனுக்குக் கல்லும் ஜீர்ணமாகிவிடுகிறது. தரித்ரர்களுக்கு 'வேண்டாம் வேண்டாம்' என்று இருந்தும் ஒன்றுக்குப் பதினாறாகப் பிள்ளைகள் பிறந்துவிடுகின்றன. பணக்காரனுக்கு ஸந்ததி அத்திப்பூப் போல் ஆகிவிடுகிறது. இம்மாதிரி நடக்கும் லோகரீதியை ஆராய்ந்து பார்த்தால், 'நாம் நமக்கு ஸ்வாமி அல்ல; நமக்கு மேற்பட்டவன் ஒருவன் இருக்கிறான்' என்பதை ஸுலபமாக உணரலாம்.

யஜமானனான ஈச்வரன், அவனவன் செய்யும் பாவபுண்ணியங்களை அநுஸரித்து, உடல்களைக் கொடுத்து நம்மைப் படைக்கிறான். நாம் பாரத பூமியில் பிறந்துள்ளோம். ஜப்பான், ஜர்மனி, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலும் அவன் கொடுத்த சரீரத்தையடைந்து பலர் பிறந்திருக்கின்றனர். இது மட்டுமல்ல, புவர்லோகம் முதல் ஸத்திய லோக வரையிலுள்ள ஜனங்களும் பகவானுக்கு அதீனமாக இருந்து, அவன் கொடுத்த ஆக்கையைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர். இம்மாதிரியே அதலம் முதலிய கீழ் லோகங்களிலும்.

பகவானுக்கு அதீனமாக இப்படி அனைவரும் இருக்க, நமக்கு ஏற்படும் நன்மை தீமைகளை நாமாக உண்டுபண்ணவோ விலக்கவோ சக்தியில்லாமல் இருப்பதை நன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தும், இதை மறந்து, காம க்ரோத லோபங்களால், 'நாநே ஸ்வாமி, நமக்கு நிகர் யாருமில்லை. நாம் எதைச் செய்தாலும் யார் என்ன செய்ய முடியும்?' என்ற சொல்லிக் கொண்டு அநீதியான காரியங்களைச் செய்பவனைக் காட்டிலும் அவிவேகி யாருமே இல்லை.

'இப்படிப் பூமியில் பிறந்த நம் ஆயு:ப்ரமாணம் எவ்வளவு? தேவலோகம் முதலிய உலகங்களில் உள்ளவர்களின் ஆயு:ப்ரமாணம் எவ்வளவு?' என்பதை ஆராய்வோம். 'சதமாநம் பவதி சதாயு: புருஷ:' என்னும் ரீதியில் அனைவருடைய ஆயு:ப்ரமாணமும் நூறு எண்ணிக்கை கொண்டதே.

ஆனால் இதை மனிதனுக்கோ தேவதைகளுக்கோ பிரம்மாவுக்கோ எடுத்துரைக்கும்போது வெவ்வேறு வகைப்படும்.

அதாவது - ஒரு மனிதனுக்கு இருபத்துநான்கு மணிநேரம் கொண்ட ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்து ஒரு தினம் ஆகிறது என்பது நமக்குத் தெரிந்ததே. பதினைந்து தினங்கள் கொண்டது ஒரு பக்ஷம். இரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம். இப்படி நூறு கொண்டது ஒரு புருஷாயுஸ்ஸு. அவரவர் பாவ புண்ணியங்களை அநுஸரித்துக் குறைந்தும் அதிகமாகவும் வருஷங்கள் ஜீவித்திருக்கிறார்கள் என்பது வேறு விஷயம்.

பித்ருக்களுக்கு, நமக்கு ஏற்பட்ட கிருஷ்ணபக்ஷம் என்ற பதினைந்து தினங்கள் ஓர் இரவு. சுக்லக்ஷம் என்ற பதினைந்து தினங்கள் ஒரு பகல். இவ்விரண்டும் சேர்ந்து நமக்கு ஒரு மாதமான நாட்கள் அவர்களுக்கு ஒரு தினம். இந்தக் கணக்கில் பக்ஷம், மாதம், வருஷம் இவற்றைப் பெருக்கி ஆயு:பிரமாணத்தைக் கணக்கிட வேண்டும்.

தேவதைகளுக்கோ நமக்கு ஏற்பட்ட ஆறு மாதம் கொண்ட தக்ஷிணாயனம் ஓர் இரவு. ஆறு மாதம் கொண்ட உத்தராயணம் ஒரு பகல். நம்முடைய ஒரு வருஷம் அவர்களுக்கு ஒரு நாள். இம்மாதிரி மாஸம் வருஷங்களைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

ஸ்ருஷ்டிகர்த்தாவான பிரம்மாவின் ஆயு:ப்ரமாணத்தைப் பார்போம்.

> சதுர்யுகஸஹஸ்ராணி ப்ரஹ்மணோ திநமுச்யதே ।
> ராத்ரிம் யுகஸஹஸ்ராந்தாம் தேஹோராத்ரவிதோ ஜநா: ॥

க்ருதம், த்ரேதா, த்வாபரம், கலி என்று யுகங்கள் நான்கு வகைப்படும். மனிதர்களுக்குக் கீழ்க்கூறியபடி தினம் பக்ஷம் மாதம் வருஷம் இவற்றின் கணக்கை அநுஸரித்து ஒவ்வொரு யுகத்துக்கும் வருஷங்களின் எண்ணிக்கை சொல்லியிருக்கிறது இப்படி ஆயிரம் சதுர்யுகம் கொண்டது பிரம்மாவுக்கு ஒரு பகல்; ஆயிரம் சதுர்யுகம் ஓர் இரவு. இந்தக் கணக்கில் பக்ஷம் மாஸம் வருஷங்களைக் கணக்கிட வேண்டுமாம். மனிதனின் வருஷ அளவையிட்டுப் பார்த்தால் பிரம்மாவின் வருஷம் வெகு தூரத்தில் போய் நிற்கும்.

இனி, 'ஒவ்வொரு ஜீவனுக்கும் எத்தனை பகல், எத்தனை இரவு?' என்பதைச் சிறிது ஆராய்வோம். 'இதை ஆராய வேண்டிய அவசியம் என்ன? ஆயு:ப்ரமாணத்தை அநுஸரித்து அவர்கள் எத்தனை நாள் ஜீவித்திருக்கிறார்களோ அதையொட்டி இரவு பகல்களைச் சொல்லிவிடலாமே. பிறந்த ஒரு குழந்தை 25 தினங்கள் இருந்தால், பகல் 25, இரவு 25 என்று ஸுலபமாக ஏற்படுமே. ஒருவன் நாற்பது வருஷங்கள் இருந்தால் அதை அநஸரித்து அவனுடைய இரவு பகல்களைக் கணக்கிட்டு விடலாம். ஆகவே மேலே கேட்ட கேள்விக்கு அவசியமென்ன?' என்று நினைக்கலாம்.

'அவரவர் ஜீவதசையை முன்னிட்டு இரவு பகல்களைக் கணக்கிடலாம்' என்று சிலர் நினைக்கலாம். ஆனால் வேதாந்தசாஸ்திர பரிசயம் செய்பவர்கள் அப்படி நினைக்க மாட்டார்கள்.

யாராக இருந்தாலும், இந்தப் பூமண்டலத்திலோ, தேவலோகம், பாதாளம் முதலிய லோகங்களிலோ பிறந்திருந்தாலும் அவர்களுக்கு இரவு என்பது ஒன்றுதான்; பகல் என்பதும் ஒன்றுதான். இதைத் தவிரப் பல இரவு, பல பகல் என்று நினைக்க வேண்டாம்.

'ஸூர்யோதயம் ஆனதும் பகல், ஸூர்ய அஸ்தமயம் ஆனதும் இரவு' என்ற கணக்கில் பல பகல்களையும் பல இரவுகளையும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, 'ஒரே பகல், ஒரே இரவு' என்று எப்படிச் சொல்வது? 'இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் உள்ளதே' என்று ஸந்தேஹப்பட வேண்டாம். அவதானத்துடன் கேண்மின்.

இருட்டு வந்தபோது இரவு என்றும், வெளிச்சம் வந்த போது பகல் என்றும் நாம் சொல்லுகிறோம். உண்மையில் ஸூர்யன் உதயமாகி வரும் வெளிச்சமும் இருட்டே. இருட்டில், பதார்த்தங்களை உள்ளபடி அறிந்து கொள்வதில்லை. நாம் பகல் என்று எதைக் கூறுகிறோமோ அந்த ஸமயமும் உண்மையான பொருள்களை நாம் அறிந்து கொள்வதில்லையே. கலசம், துணி, நெல், மனிதன், மாடு முதலியவற்றைத் தெரிந்துகொள்ளுகிறோமே என்றால், இவற்றை அறிவதனால் என்ன லாபம்? உண்மையான பரப்ரஹ்மத்தையும் அதை அநுஸரித்த மற்ற முக்கியமான விஷயங்களையும் எவ்வளவு நாள் பார்க்கவில்லையோ, அது வரையில் அஞ்ஞானமாகிய அந்தகாரம் நம்மைச் சூழ்ந்துதானே இருக்கும்?

இரவு வேளையில் விளக்கை ஏற்றி வைத்துச் சில பதார்த்தங்களை அறிந்து கொள்ளுகிறோம். அதனாலேயே இரவு பகலாகிவிடுமா? இரவு, இரவுதானே? அதுபோல் நமக்குப் பகலாகத் தோன்றும் வேளையில் ஏதோ சில பதார்த்தங்களை ஸூர்ய வெளிச்சத்தைக் கொண்டு பார்க்கிறபடியாலேயே அவ்வேளை உண்மைப் பகலாக ஆகிவிடாது. எல்லாப் பதார்த்தங்களையும் எந்த வேளையில் நாம் அறிகிறோமோ அந்த வேளைதான் பகல். நமக்கு இரவாகத் தோன்றும் காலத்தில் சில பதார்த்தங்களைத் தான் அறிந்து கொள்ளுகிறோம்; சிலவற்றை அறிந்து கொள்வதில்லை. அதுபோல் பகலிலும். பகலிலேயே, வெளிநாட்டிலுள்ளவற்றையோ லோகாந்தரத்திலுள்ளவற்றையோ பார்க்கிறோமோ? நம் முதுகின் மீது இருப்பவற்றையே பார்க்க முடியவில்லையே!

மேலும், இவ்விஷயத்தை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

> யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ I
> யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே: II

யோகாப்பியாஸம் செய்பவன் பரப்ரஹ்மத்தினிடத்திலேயே மனத்தைச் செலுத்தியிருப்பான். வெளி விஷயங்களில் கண்ணோட்டத்தைச் செய்யான். ஸாமானிய ஜனங்களோ வெளி விஷயத்திலேயே நோக்கமுள்ளவர்கள்; பரப்ரஹ்மத்தைச் சிறிதும் நினைக்க மாட்டார்கள். ஆகையால் யோகம் செய்பவனுக்குப் பரப்ரஹ்மம் பகலாகிறது; வெளி விஷயங்கள் இருட்டு. பாமர ஜனங்களுக்கு வெளி வியாபாரங்கள் பகல்; பரப்ரஹ்மம் இரவாகிறது.

எனவே, சாஸ்திர ரீதியிலும் உலகத்தை ஒட்டியும் படித்தவர்களுக்குப் பரப்ரஹ்மம் பகலாகவும், மற்ற விஷயங்கள் இரவாகவும் ஆகின்றன. ஆகையால், இந்த ஸம்ஸாரத்தில் உள்ளவரையில் நேராகப் பரப்ரஹ்மத்தைப் பார்க்க முடியாதாகையால், எத்தனை ஸூர்யர்கள் உதித்தாலும் இரவும் பகலும் ஒரே இரவேதான்!

'எல்லாப் பதார்த்தங்களையும் நேராகப் பார்க்கும் வேளையான பகல் உண்டா? அது எப்போது?' என்று கேட்டால், 'உண்டு. அதுதான் மோக்ஷ தசை.' ஆகையால் ஸம்ஸாரத்தில் அநாதிகாலம் சுழன்றுகொண்டு இருக்கும் காலம் முழுவதும் இராப்பொழுதே. பிறகு சரணாகதியாகிற உபாயத்தை அநுஷ்டித்து வைகுண்டத்தை அடைகிறோம். அங்கு மேலே இருக்கும் காலமேல்லாம் ஒரே பகல். அதனால் எல்லா ஜீவர்களுக்கும் ஒரே பகல்தான். ஒரே இரவுதான். இதுதான் உண்மை.

பூதத்தாழ்வார், "பகற் கண்டேன், நாரணனைக் கண்டேன்" என்று வெகு ரஸமாக அருளிச் செய்தார். உண்மையில் மோக்ஷதசையில் பகவான் அல்லவா உத்தம ஸூர்யன்? இவ்வுலகில் ஸாமானியமான ஸூயன் உதிக்கிறான்; அதே தினத்தில் அஸ்தமித்துவிடுகிறான். அதனால் இரவும் பகலும் மாறிமாறி வருகின்றன. 'அச்யுதபானு' வுக்கு இம்மாதிரி இல்லாததனால், மோக்ஷதசையில் ஒரே பகல்தான் நமக்கு.

உலகில் மனிதனுக்கு இரவு பகல் உண்டாகும்போது நடுவில் 'விடியற்காலம்' என்று ஒன்று ஏற்படுகிறது. அம்மாதிரி இங்கும். ஆசார்ய ஸம்பந்தம் ஏற்பட்ட ஜீவன் தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தை அடையப் போகிறான். ஆசார்ய ஸம்பந்தம் ஏற்பட்டு மோக்ஷத்தை அடையும் வரையில் உள்ள காலம் 'விடியற்காலம்'; அதற்கு முந்திய காலம் 'உறக்கம்'. இதற்குப் பிந்திய காலம் 'விழிப்பு'. இந்த நடுவான காலம் 'ஸ்வப்னத்தைப் போன்ற காலம்'.

இதைத்தான் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், "ஸ்வாபோத்போதவ்யதிகரநிபே போக மோக்ஷாந்தராலே" என்று அருளிச் செய்திருக்கிறார்.

இதனால் என்ன ஏற்படுகிறது என்றால், நாம் செய்த வினையின் பயனாக ஸம்ஸாரத்தில் பிறக்கிறோம். பெரும் இருட்டிலே சுழன்று சுழன்று தவிக்கிறோம். புலி, கரடி, பாம்பு, ராக்ஷஸன், முள், கல் முதலியவை சூழ்ந்த பெரிய காட்டில் இரவில் தன்னந்தனியனாக ஒருவன் அகப்பட்டுக் கொண்டால், 'இருள் போய் வெளிச்சம் எப்போது உண்டாகப் போகிறது? இவ்விடத்தை விட்டு எப்போது போகப் போகிறோம்?" என்று தவிப்பானே, அம்மாதிரி ஸம்ஸாரமாகிற 'இருள் சூழ்ந்த இந்தக் காட்டில் தவிக்கும் நாம், 'இந்தக் காட்டை விட்டு நற்கதியை எப்படி அடைவோம்?' என்று எண்ணுகிறோம். ஸதாசார்யனை அணுகி, உபாயத்தை அநுஷ்டித்து, ஒரே பகலாக உள்ள மோக்ஷத்தை அடைந்து, பகவானைப் பிரத்யக்ஷீகரித்து ஸர்வவித ஸுகங்களையும் அநுபவிக்க வேண்டும் என்றும்.

*****

# 38. படித்தவன் பணக்காரனா?

உலகத்திலுள்ள மக்கள் அனைவருமே பணக்காரர்களும் அல்லர்; ஏழைகளும் அல்லர். சிலர் அளவற்ற பணத்தை வைத்துக் கொண்டு செலவு செய்யத் தெரியாமலும் தாங்களும் சுகபோகங்களை அநுபவிக்காமலும் பிறருக்கும் கொடுக்காமலும் பாங்குகளிலும் பெட்டிகளிலும் வைத்துக் கொண்டு அழகு பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சில செல்வர்கள் இஷ்டப்படி செலவு செய்தும் மாளிகை முதலியவற்றைக் கட்டிக் கொண்டும் அளவற்ற இன்பங்களை அநுபவித்துக் கொண்டும் பொழுது போக்கிக் கொண்டிருக்கின்றனர். ஏழை மக்கள் உண்டிக்கும் உடைக்குமே இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு, தினந்தோறும் ஏற்படும் செலவுக்கே பணம் இல்லாமல் தவித்துக் கொண்டு ஏங்கியிருக்கின்றனர். அனைவரையுமே பணக்காரர்களாகச் செய்ய முடியாது; ஏழைகளாகவும் செய்ய முடியாது. இது உலக இயற்கை.

தசரத சக்ரவர்த்தி கைகேயியினிடத்திலுள்ள ஆசையினால் அவளுடன் சுகங்களை அநுபவிப்பதற்காக, "பணக்காரர்களையும் ஏழையாக்குகிறேன்; ஏழைகளையும் பணக்காரர்களாக்குகிறேன். உன் மனத்திலுள்ள விருப்பத்தைச் சொல்" என்று சொன்னான். இதெல்லாம் வாயால் மாத்திரம் சொல்ல முடியுமே தவிரச் செயலில் செய்து நிறைவேற்ற இயலாது. இப்பொழுது உள்ள அரசாங்கங்களும் லாட்டரிச் சீட்டுகளை நடத்தி வருகின்றன. இதனால் ஏதோ சில மக்கள் பணக்காரர்களாகிறார்களே தவிர எல்லாரும் ஆக முடிவதில்லை. இது தெய்வத்தின் செயலானபடியால் நாம் இதனுள் புகுந்து என்ன செய்ய முடியும்?

இப்படிப் பெரும்பாலும் உலகில் சில பணக்காரர்களையும் சில ஏழைகளையும் பார்த்துக்கொண்டிருக்கிறோமே, இவர்களில் யார் பணக்காரர்கள், யார் ஏழைகள் என்று யோசிப்போம். மேலே குறிப்பிட்ட தலைப்பைப் பார்த்து யாரும் மிரள வேண்டாம்; சீற்றமும் கொள்ள வேண்டாம்; முணு முணுக்கவும் வேண்டாம். படித்தவர்கள் ஏழை மக்களே என்றும், பணக்காரர்கள் முட்டாள்கள் என்றும் சொல்வதற்காக நாம் வந்தோம் என்று நினைக்க வேண்டாம். உலகரீதி எப்படி உள்ளது என்று ஆராயவே இந்தத் தலைப்பை எடுத்தோம்.

ஒரு பணக்காரன் நிறையப் பணம் வைத்துக் கொண்டு மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கிறான். ஆனால் அவன் ஏதோ ஒரு காரணமாக ஒரு பாரத்தில் (Form) கையொப்பம் இடு என்றால், "ஐயோ! நான் படிக்கவில்லையே, கையொப்பம் போடத் தெரியாதே" என்று சொல்கிறான். கடன் வாங்கினவன் அவனுக்கு மணியார்டர் மூலமாகப் பணம் அனுப்பினால் கட்டைவிரலில் மையை வைத்துக் கொண்டு கைநாட்டுச் செய்கிறான். நாம் படிக்கவில்லையே என்ற வருத்தம் அவன் மனத்தில் எள்ளளவும் இல்லை; பணம் திரட்டுவதுதான் அவன் நோக்கம்.

பல கல்விகளைக் கற்றும், பல புத்தகங்களை எழுதியும் அறிவு நிரம்பப் பெற்றுள்ள படித்தவர்கள் ஒவ்வொரு நாளைக் கழிப்பதற்கே பணமில்லாமல் வருந்துகின்றனர். பெரிய புலவராக இருந்தும் பணத்துக்காக, படிக்காத பணக்காரர்களிடத்தில் வயிறு வளர்ப்பதை முன்னிட்டுத் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார். உத்தியோகமோ உன்னதப் பதவியோ படிக்காதவர்களுக்குத்தான் வெகு எளிதில் கிடைக்கிறது. நன்றாகப் படித்து, முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கும் அறிவாளிகளுக்கு எளிதில் வேலை கிடைப்பது மிகவும் கடினமாக உள்ளது. பணத்தை அதிகமாகத் திரட்டுகிறவன் அதிகமாகப் படித்தேயிரான்.

நாலு சாஸ்திரங்களையும் வேதங்களையிம் நீதிநூல்களையும் நன்கு கற்று மேடையில்

உட்கார்ந்து சாஸ்திர நெறிபிறழாமல் நன்கு உபந்யாஸம் செய்பவனுக்குக் கடைசியில் ஸம்பாவனை குறைந்தே வருகிறது. அரைகுறையாகப் படித்து ஆனந்த விகடன், கல்கி முதலியவற்றிலுள்ள ஹாஸ்யக் கதைகளை எடுத்துச் சொல்லி ஜனங்களைக் கவர்கிறவனுக்குக் கடைசியில் ஸம்பாவனை நிறைய வருகிறது. பொதுமக்களுக்கும், 'குமுதம் முதலிய பத்திரிகைகளையும், சினிமா முதலியவற்றையும் பார்த்தே இவர் சொல்லுகிற கதைகளைத் தெரிந்துகொள்ளலாமே. சாஸ்திர விஷயம் ஒன்றுமே இவர் மேடையில் சொல்லவில்லையே?' என்பதைக் கணிசிக்கும் திறமை இல்லை.

இப்படி எல்லா விதத்திலும் நன்கு படித்தவர்களுக்குச் செல்வத்தைச் சம்பாதிக்க அவகாசமே ஏற்படுவதில்லை. இதற்கு என்ன காரணம் என்பதைப் பார்ப்போம். படிப்பு என்பது கல்வி. இதற்கு அதிஷ்டான தேவதை ஸரஸ்வதி. செல்வத்துக்கு அதிஷ்டான தேவதை மகாலக்ஷ்மி. இவ்விருவருக்கும் ஒற்றுமை இல்லாமலிருப்பதுதான் இதற்குக் காரணம். இது தவிர வேறு என்ன சொல்ல முடியும்? இவர்களது ஒற்றுமைக் குறைவு மக்களுக்குத் தீமையை விளைவித்து விடுகிறது. படித்தவன் பணம் இல்லாததனால் கஷ்டப்படுகிறான். பணக்காரன் கல்வியின்மையால் திண்டாடுகிறான்.

இவர்களின் ஒற்றுமையின்மைக்கு என்ன காரணம்? மாமியாருக்கும் மருமகளுக்கும் ஒற்றுமை எப்படி ஏற்படும்? நாட்டுப் பெண் தன் வீட்டுக்கு வந்ததும் அவளை அயலாக நினைத்தும் தன்னை எஜமானியாக நினைத்தும் அவளுக்கு எவ்வளவு தீங்கு செய்ய இயலுமோ அவ்வளவும் செய்துவிடுகிறாளே மாமியார். வீட்டிலுள்ள தன் பெண்ணை எப்படிப் பாவிக்கிறாளோ அப்படி நாட்டுப் பெண்ணைப் பாவிப்பதில்லை. கடைக்குச் சென்று ஏதாவது பொருள் வாங்கினால் தன் பெண்ணுக்கென்று எடுக்கிறாளே தவிரத் தன் மருமகளுக்கு எதையும் வாங்குவதில்லை. மாமியார் என்ற பதவியில் ருந்தாலே இந்த மோகம் ஏற்பட்டுவிடுகிறது. முதலில் ஒருத்தி நாட்டுப் பெண்ணாக இருந்து தன் மாமியார் செய்யும் கொடுமைகளை அநுபவித்து மிகக் கஷ்டத்துடன் இருப்பவள்தான்; அவள் ஒரு மருமகளைப் பெறும்போது தான் பெற்ற கொடுமைகளை மறந்துவிட்டு, அவளைப் படாதபாடு படுத்துகிறாள். தான் பெற்ற தீமைகளை மறந்துதான் செய்கிறாளோ, அல்லது நாட்டுப் பெண்களுக்கு இப்படித்தான் செய்ய வேண்டும் என்று செய்கிறாளோ! இதை உலகத்தில் பல இடங்களில் நாம் கண்டுள்ளோம்.

இந்த இயல்பு லக்ஷ்மியையும் ஸரஸ்வதியையும் மாத்திரம் எப்படி விடும்? லக்ஷ்மியின் முதற் புதல்வர் ப்ரம்மதேவர். அவர் மனைவி ஸரஸ்வதி. எனவே ஸரஸ்வதி லக்ஷ்மிக்கு நாட்டுப் பெண்ணாகிறாள். இவர்களுக்கு ஒற்றுமை எப்படி ஏற்படும்? இது காரணமாகத்தான் மக்களுக்கு மாறாட்டம் ஏற்படுகிறது. ஆகையால் பணம் உடையவர்களுக்கு அதிகப் படிப்பு வருவதில்லை. படிப்பு உள்ளவர்களுக்குப் பணம் கிடைப்பதில்லை. இதற்கு ஒரு கதை கூறுகிறோம்.

ஓர் ஊரில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் நிறையக் கற்றவர்; வேதங்களை முறைப்படி ஓதியவர்; அவைகளில் சென்று நன்கு பேசும் திறமை உடையவர். படிப்பு என்பது ஓர் உருவம் எடுத்து வந்ததோ என்று சொல்வதுபோல் அவர் காணப்பட்டார். அவர் எவ்வளவு கல்வி பயின்றிருந்தாரோ அவ்வளவு வறுமை அவரைப் பிடித்து வருத்தியது. கந்தலாடையைத்தான் அவர் அணிவார். கிழியாத ஆடையை அவர் பார்த்ததே இல்லை. பட்டுப் பீதாம்பரத்துக்கு ப்ரஸக்தி ஏது? அவர் கட்டிக் கொண்டிருக்கும் ஆடையில் ஊசி நுழைவதற்குக்கூட இடம் இராது. இப்படி இருக்கும் இவருக்கு உண்ண உணவேது? எனவே ஏதோ ஒரு பழம் செம்பை எடுத்துக்

கொண்டு உஞ்சவிருத்திக்கு வெளியில் செல்வார். இவர் முன்னோர் சம்பாதித்து வைத்த பொருள் இந்தச் செம்பு ஒன்றுதான்.

இவர் தினந்தோறும் காலையில் தம் அநுஷ்டானத்தை நன்கு செய்து முடித்து ஒவ்வொரு வீதியிலும் சென்று இந்தச் செம்பில் அமுதுபடியைப் பெற்று வருவார். இவர் கற்றுக் கொண்ட ஸ்தோத்திரபாடங்களுக்கு இந்தச் சமயத்தில் நல்ல அவகாசம் ஏற்பட்டது. கிடைத்த அமுதுபடியைப் பெற்று, மனைவியிடம் கொடுத்துச் சோதித்துச் சமையல் செய்யச் சொல்வார். இவர் மனைவியும் சிரத்தையுடனும் அன்புடனும் அதை வாங்கி எம்பெருமானுக்கென்றெண்ணிச் சமையல் செய்து கணவரிடம், "அன்னம் சித்தமாக உள்ளது" என்று சொல்வாள். அந்தணர் கடவுளுக்குப் பூஜை செய்து "நீ கொடுத்த இவ்வமுதுபடியை நீயே புசிக்க வேண்டும்" என்று சொல்லி ஆராதிப்பார். பகவத் நிவேதிதமான அன்னத்தைப் பத்தினியும் அவருமாகப் புசிப்பார்கள்.

இம்மாதிரி சில காலம் சென்றது. ஸரஸ்வதி, "நம்மிடம் பக்தியுடன் கல்வியைப் பெற்றுள்ள இவ்வந்தணர் வறுமையில் ஆழ்ந்திருக்கிறாரே; இவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்' என்று நினைத்தாள். ஒரு நாள் இவர் ஸ்நானம் செய்யப் பொய்கைக்குச் சென்றிருந்தார். இதுதான் சமயம் என்றெண்ணி ஸரஸ்வதி தேவி, "அந்தணரே, இங்கே வாரும்" என்று கூப்பிட்டாள். இவர் நான்கு பக்கமும் பார்த்தார். கண்ணுக்கு யாரும் புலப்படவில்லை. ஏதோ ப்ரமம் என்று எண்ணித் தமது வேலையில் ஆழ்ந்தார். மறுபடியும் ஸரஸ்வதியின் அழைப்பு இவர் காதில் ஒலித்தது. திரும்பிப் பார்த்தார். அழகிய மாது ஒருத்தி இவர் கண்ணுக்குப் புலப்பட்டாள். "அந்தணரே, நீர் கவலைப்பட வேண்டாம். எவ்வளவோ கல்வியைப் பயின்றும் வறுமையால் வருந்துகிறீர். இதோ என் கையிலுள்ள விலையுயர்ந்த முத்துக்களை உமது செம்பில் பெற்றுக் கொள்ளும்" என்றாள்.

இதைக் கேட்டு அந்தணர் மிக்க மகிழ்ச்சியுடன் அதைச் செம்பில் பெற்றுக்கொண்டார். ஸரஸ்வதி மறைந்துவிட்டாள். இவர் மிக்க சந்தோஷத்துடன், 'ஏதோ ஜன்மாந்தரத்தில் செய்த புண்ணிய விசேஷம்' என்று எண்ணி மிக்க பரபரப்புடன் வீட்டுக்கு வந்தார். அந்த மாது இவரது செம்பில் இரத்தினங்களைப் போட்டபோது பார்த்திருந்த ஒருவன் இவரைத் தொடர்ந்தே வந்தான். இவர் தமது இல்லத்துக்கு வந்ததும் மனைவி அங்கில்லாதது கண்டு, உள்ளே இருக்கும் மேடையில் செம்பை வைத்துவிட்டுத் தோட்டத்துப் பக்கம் சென்றார். பின் தொடர்ந்தவன், 'இது தான் சரியான சமயம்' என்று எண்ணி அந்தச் செம்பை அபகரித்துக் கொண்டு போய்விட்டான்.

இவர் மனைவியிடம் நடந்த சமாசாரத்தைச் சொல்லி உள்ளே வந்து பார்த்தபோது ரத்தினத்தையும் காணவில்லை; செம்பையும் காணவில்லை. அப்பொழுது இவர்களுக்கு ஏற்பட்ட மனவருத்தத்தைச் சொல்ல வேண்டுமா? ஏதோ மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு அன்றைத் தினத்தைக் கழித்தார்கள்.

மறுதினம் அந்தணர் வழக்கம்போல் ஸ்நானம் செய்யக் குளத்துக்குச் சென்றார். இவருக்கு அளவற்ற ஐசுவரியத்தைக் கொடுத்தபடியால் இவர் எப்படி வருகிறார் என்று காண ஸரஸ்வதி அங்கு வந்தாள். முன்போலவே இவர் காட்சியளிப்பதைக் கண்டு, "அந்தணரே, ஏன் இன்றும் இம்மாதிரி வேஷத்துடன் வருகிறீர்? நேற்று நான் கொடுத்த பொருள்களைக் கொண்டு எவ்வளவோ சௌகரியங்கள் செய்து கொண்டிருக்கலாமே?" என்றாள். இவருக்குக் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. "அம்மணி, நீ எனக்குக் கொடுத்தது, என் செம்பும் பறிபோன

நிலையை உண்டாக்கியது. உஞ்சவிருத்தி செய்யச் செம்பும் இல்லாமல் இப்பொழுது தவிக்கிறேன்" என்றார்.

இதைக்கேட்ட ஸரஸ்வதி, "நீர் கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லிப் புதிய வஸ்திரத்தில் வைரங்களையும் ரத்தினங்களையும் கட்டி, "இதை எடுத்துச் செல்லும்' என்று கூறினாள். இவர் சந்தோஷத்துடன் அதைப் பெற்றுக் கொண்டு இல்லம் திரும்பினார். இவர் கையிலுள்ள மூட்டையில் ஏதோ சாப்பிடும் பொருள் உள்ளது என்று எண்ணி ஒரு கழுகு ஆகாயத்திலிருந்து தெய்வச் செயலாக வந்து மூட்டையைப் பறித்துக் கொண்டு போயிற்று. இதைக் கண்டு துக்கசாகரத்தில் மூழ்கினார் அந்தணர்.

மறுதினமும் வழக்கம் போல் குளத்தில் ஸநானம் செய்யும் சமயத்தில் ஸரஸ்வதி இவரைக் கண்டாள். 'அடடா! இது என்ன ஆச்சரியம்! நேற்றுப் போலவே இன்றும் காணப்படுகிறார். இவருக்கு நாம் கொடுத்தது உபயோப்படாமற் போய்விட்டதே!' என்று எண்ணி, இவரை அழைத்து ஒரு பூசணிக்காயைக் கொடுத்தாள். அதில் விலையுயர்ந்த ரத்தினங்களை வைத்திருந்தாள். ஆனால் இவரிடம் அதைச் சொல்லாமல் கொடுத்து, "வீட்டுக்குச் சென்று சமையல் செய்து சாப்பிடும்" என்று சொன்னாள். அதிர்ஷ்டஹீனரான இவர் அதைப் பெற்றுக் கொண்டு நடந்தார். வழியில் இவருக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று; 'அரிசி முதலிய எவையும் நம் வீட்டில் இல்லையே. இந்தக் காயை மாத்திரம் எப்படிச் சமைத்துச் சாப்பிடுவது? ஆகையால் யாருக்காவது இதை விலைக்குக் கொடுத்து அரிசி முதலியவற்றை வாங்கிக் கொள்ளலாம்' என்று இவர் நினைத்த சமயத்தில் எதிரில் ஒருவன் வந்து பூசணிக்காயை விலைக்குக் கேட்டான். இரண்டு ரூபாயைப் பெற்றுக் கொண்டு அதைக் கொடுத்துச் சாமான்களை வாங்கி அன்றைத் தினத்தைக் கழித்தார்.

மறுநாள் வழக்கம்போல் குளக்கரைக்கு வந்த இவரை ஸரஸ்வதி கண்டு விசாரிக்க முயன்றாள். இவர் நடந்ததைக் கூறினார். அப்போது ஸரஸ்வதி மிக்க வருத்தமடைந்து, 'நம்மை அடைந்தவர்களுக்கு இப்படியும் ஒரு துர்த்தசை ஏற்பட்டுவிட்டதே! இவரை எவ்விதமாவது செல்வராக்குவது நம் கடமை. முயன்றும் பயன் இல்லாமல் போய்விட்டதே. இனி என்ன செய்வது?" என்று வருந்தினாள். செல்வத்துக்கு அதிஷ்டான தேவதையான மகாலக்ஷ்மியிடம் இவ்விஷயத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்று எண்ணி மகாலக்ஷ்மியை துதித்தாள். மகாலக்ஷ்மி பிரசன்னமாகி வந்து, "என்னைக் கலக்காமல் ஒருவனைப் பணக்காரனாக்குவது உன்னால் முடியாது. முன்பே என்னிடம் இதைச் சொல்லியிருந்தால் இவரைப் பணக்காரராக்கியிருப்பேனே. ஆனாலும் உன் விருப்பப்படி இவரைச் செய்கிறேன். இவரை வீட்டுக்குப் போகச் செய்" என்று சொல்லி மறைந்தாள்.

அந்தணர் ஸரஸ்வதியிடம் விடை பெற்று வீட்டுக்கு வந்தார். இந்தச் சமயத்தில், இரண்டு ரூபாயைக் கொடுத்துப் பூசணிக்காயைப் பெற்றுக் கொண்டவன் வீட்டுக்குச் சென்று அதை அரிந்தான். அரிந்தவுடன் அதிலிருந்து ரத்தினங்கள் கீழே குவிந்தன. இதைக் கண்டு அவன் திக்ப்ரமம் அடைந்தான். 'இது என்ன! காயில் எப்படி ரத்தினங்கள் இருக்கும்? ஏதோ தெய்வச் செயலாக உள்ளது. இதை நம் வீட்டில் வைத்துக் கொண்டால் அரசர் மூலமாக அனர்த்தங்கள் ஏற்படும்' என்று எண்ணி, இவரது இல்லத்துக்கு வந்து அந்தக் காயை இவரிடம் கொடுத்துவிட்டான்.

முன்பு பணமூட்டையை எடுத்துச் சென்ற கழுகு அந்த மூட்டையை இவர் இல்லத்தின் நடுவே

போட்டுவிட்டது. காய் மூட்டை இரண்டையும் கொண்டு அந்தணர் பெரிய பணக்காரராகிவிட்டார். ஒருவரிடம் பணம் நிறைய இருந்தாலே அவர் அனைவர் மதிப்புக்கும் உரியவர் ஆகிறார் என்பது இயல்பு. அதுபோல் இவரும் எல்லோராலும் மதிக்கப்பட்டார். இதைக் கண்டு, முன்பு செம்பைத் திருடிக் கொண்டு போனவன், 'நமக்கு இவர்மூலமாக ஏதாவது துன்பம் ஏற்பட்டுவிடும்' என்று பயந்து, அந்த செம்பை இவரது வீட்டில் வைத்துப் போய்விட்டான். இவர் அதைப் பெற்று மேலும் பணக்காரரானார். இப்படி இந்தக் கதையை பெரியோர் சொல்வதுண்டு.

ஆகையால் பணம் இருந்தால் படிப்பு இராது: படிப்பு இருந்தால் பணம் இராது. புலவர்களுக்கு வறுமைதான் அதிகம். எத்தனையோ புலவர்கள் வறுமையினால் துன்பப்பட்டார்கள் என்று கேட்டிருக்கிறோம். பல பிரபுக்களிடம் சென்று தன் வறுமையைக் கூறிப் பணம் சம்பாதிக்க முயன்றிருக்கின்றனர். ஒரு புலவர் போஜ அரசனிடம் சென்று, "மிகச் சூடான கஞ்சியை நான் சாப்பிடுவதனால் என் கண்டத்தில் இருக்கும் ஸரஸ்வதி வெப்பத்தைத் தாங்க முடியாமல் கண்டத்திலிருந்து வெளிவந்துவிட்டாள்' என்கிறார். இதிலிருந்து அவரிடத்தில் வறுமையும் ஸரஸ்வதியும் குடிகொண்டிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது.

ஓரிரண்டு இடங்களில் மாமியாரும் நாட்டுப்பெண்ணும் சண்டையிடாமல் மிகக் கௌரவமாகவும் ஒரவரிடம் ஒருவர் மிக்க அன்புடனும் இருப்பதுண்டு. அதுபோல் ஏதோ சிலரிடத்தில் ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் குடிகொண்டிருப்பர். ஜன்மாந்தரத்தில் செய்த ஸுக்ருதம்தான் அதற்குக் காரணம். அப்படிப்பட்ட மனிதன் மிகப் பணக்காரனாகவும் கல்வி கற்றவனாகவும் இருந்து, கற்றதன் பயனாகத் தன் செல்வத்தைத் தான் நன்கு அநுபவித்தும் பிறருக்குப் பல விதத்தில் கொடுத்து உபகாரம் செய்தும், கோயில் முதலியன கட்டியும், பல ஏழை மக்களுக்கு அன்னமிட்டும் வஸ்திரங்களைக் கொடுத்தும் கல்வியைக் கற்பித்தும் கற்பிக்க உபகாரம் செய்தும் எல்லா ஜனங்களாலும் புகழப்பெற்று வாழ்வான்.

*****

# 39. இரு சகோதரர்கள்

உலகில் தாய் தந்தை, அண்ணன் தம்பி, மாமா மைத்துனன், மனைவி கணவன் என்ற வகையில் உறவினர்களைச் சொல்வதுண்டு. இதில் சகோதரர் என்று சிலரைச் சொல்வதுண்டு. ஒரு தகப்பனாருக்குப் பிறந்தவர்களை ப்ராதா என்பர். ஒருவனுக்கு ஒரு மனைவியின் வயிற்றில் பிறந்த புத்திரர்களைச் சகோதரர் என்று சொல்வதுபோல் ஒரு தகப்பனாருக்கு இரண்டு மூன்று மனைவியரின் வயிற்றில் பிறந்தவர்களையும் சகோதரர் என்று அழைப்பது வழக்கம்.

தசரத சக்கரவர்த்தியின் மனைவியரான கௌசல்யை சுமித்திரை கைகேயி என்ற மூவரிடத்திலும் பிறந்த ராமன் லக்ஷ்மணன் பரதன் சத்துரக்னன் ஆகியவர் சகோதரர்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இப்படியே பாண்டுவின் புதல்வர்களான பஞ்ச பாண்டவர்களையும் சகோதரர் என்றே சொல்கிறோம். குந்தி பாண்டுவின் மனைவி. இவள் கன்னிகையாக இருந்தபோதே துர்வாஸ முனிவரிடமிருந்து புதல்வரைக் கொடுக்கும் ஆறு மந்திரங்களை உபதேசம் பெற்றவள். இதில் முதல் மந்திரத்தினால் கர்ணனைப் பெற்றெடுத்தாள். பிறகு மணமானதும் தர்மபுத்திரரையும் பீமனையும் அர்ஜுனனையும் மூன்று மந்திரங்கள் மூலமாகப் பெற்றாள். இவளிடமிருந்து இரண்டு மந்திரங்களை உபதேசம் பெற்ற பாண்டுவின் மற்றொரு மனைவியான மாத்ரி நகுலனையும் ஸஹாதேவனையும் பெற்றாள். இப்படிப் பாண்டுவின் இரு மனைவியரான குந்திக்கும் மாத்ரிக்கும் பிறந்த பஞ்ச பாண்டவர்களைச் சகொதரர் என்கிறோம். இம்மாதிரியே தக்ஷப்ரஜாபதிக்கு மனைவியரான கத்துரு, வினதை என்ற இருவருக்குப் பிறந்த பாம்புகளும் கருடனும் தமக்குள் பிராத்ருகோஷ்டியில் சேர்ந்தவர்கள்.

ஒரே தகப்பனாருக்குப் பல மனைவியரிடத்தில் பிறந்த பலரை ப்ராதாக்கள் என்று சொல்வது போலவே சகோதரர்கள் என்றும் சொல்வதுண்டு, இவர்கள் வெவ்வேறு தாயின் வயிற்றில் பிறந்தவர்களாகையால் பிந்நோதரர்களே. ஆயினும் சகோதரர்கள் என்றே விவகரிக்கிறோம். ஆகையால்தான் ராமன் தனக்கு ஸபத்நி மாதாவான சுமித்திரைக்குப் பிறந்த லக்ஷ்மணனைச் சகோதரன் என்றே கூறுகிறான். 'தம் து தேசம் ந பச்யாமி யத்ர ப்ராதா ஸஹோ தர:' என்று. இவ்விடத்தில் ப்ராதா என்றும் சகோதரன் என்றும் லக்ஷ்மணனைக் கூறுவது எப்படிப் பொருந்தும் என்பதை மற்றொறு வியாஸத்தில் பரக்கக் காட்டுகிறோம்.

சாதாரணமாக ஒவ்வொருவனும் தன்னிடத்திற்போல் பிறனிடத்திலும் நல்ல அபிப்ராயத்தை வைத்து அவனுக்குத் தன்னால் இயன்றவரை நன்மையையும் பிரியத்தையும் செய்ய வேண்டியது அவசியம். அவன் நமக்குப் பந்து அல்ல, இவன் பந்து என்று வேறுபாட்டைக் காட்டாமலிப்பது உத்தமனின் உயர்ந்த குணம். பந்துக்களிடத்திலாவது அவசியம் எவன் நன்மையைப் பாராட்டுகிறானோ அவன் மத்தியம புருஷன். ப்ராதாக்களிடத்திலாவது ப்ரீதி வைப்பவன் சாமானியன். தன்னுடன் பிறந்த ப்ராதாவையும் மதிக்காமலும், தான் மிக்க சௌகரியத்துடன் வாழும்போது அவனைக் கவனிக்காமலும், தன் வாழ்வையே முக்கியமாகக் கருதிச் சகோதரனுக்கு நன்மையே செய்யாமலும் இருக்கிறவன் மனித கோஷ்டியிலேயே சேர்ந்தவனல்லன்.

தான் எல்லாச் சுகங்களுடனும் இருந்து தன் சகோதரன் கஷ்டப்படும் தசையைப் பார்த்து, 'ஐயோ!' என்று எள்ளளவும் இரக்கமில்லாதவன் எப்படி உயர்ந்த மனிதனில் சேர்வான்? தன் புதல்வன் கஷ்டப் பட்டால் அதை எப்படிப் பார்த்துப் பொறுக்க மாட்டானோ அது போலல்லவோ சகோதரனிடத்திலும் இருத்தல் வேண்டும்? சகோதரனையும் புத்திரனையும் சமமாகவே பாவிக்க

வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. வாலியும் சுக்ரீவனும் ப்ராதாக்களாக இருந்தபோதிலும் இருவருக்குமே மற்றவரிடத்தில் ப்ராத்ருவாஞ்சை இல்லை. தம்பியான சுக்ரீவனைத் துரத்திவிட்டுத்தான் ஒருவனாகவே ராஜ்யத்தில் மகுடம் சூடித் தம்பியின் மனைவியையும் காதலித்து வாலி இருந்தான். சுக்ரீவனும் ராமனுடன் சிநேகம் செய்துகொண்டு, தமையனான வாலியை கொல்ல முயன்றான். இப்படி இருந்த இவர்களுக்கு தம்பி தமையன் என்ற பற்றுதல் எப்படி இருக்கக் கூடும்?

ராவணனும் விபீஷணனும் உடன் பிறந்தவர்களே. இவர்களில் விபீஷணனுக்குத் தமையனான ராவணனிடத்தில் ஓரளவு ஆசை இருந்தது. ஆகையினாலேயே பல முறை தமையனுக்கு இவன் உபதேசம் செய்தான். "சீதையை ராமனிடத்தில் கொடுத்துவிடு. நாம் அனைவரும் சுகமாக வாழலாம். நான் சொல்வது இப்போது உனக்குக் கசப்பைக் கொடுக்கும். பிற்காலத்தில் இது நன்மையை விளைவிக்கும். உலகத்தில் எப்பொழுதும் சிரிக்கச் சிரிக்கச் சொல்லிப் ப்ரீதியை உண்டுபண்ணுகிறவர்கள் நிறைய இருக்கின்றனர். உனக்கு நன்மையை தேடி விஷயத்தைச் சொல்கிறவர்யாருமில்லை. இது உலக இயற்கை. ராமனின் பாணத்தால் அடிபட்டு நீ வருந்தும் நிலையை நான் பார்க்க விரும்பவில்லை" என்று பல முறை உபதேசித்தான். விபீஷணனுக்கு ராவணனிடத்தில் எவ்வளவு அன்பு இருந்ததோ அதில் சிறிதளவும் ராவணனுக்கு விபீஷணனிடத்தில் இருக்கவில்லை. அதனால்தான் திக்காரம் செய்து விபீஷணனைத் திரஸகரித்துவிட்டான்.

பாண்டுவின் புதல்வர்கள் பஞ்ச பாண்டவர்கள். திருத்ராஷ்டிரனின் புதல்வர்கள் துரியோதனாதிகள். பாண்டுவும் த்ருதராஷ்டிரனும் ப்ராத்ரு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். ஆகையால் இவ்விருவரின் புத்திரர்களான பாண்டவர்களையும் துரியோதனாதிகளையும் ப்ராத்ரு கோஷ்டியில் சேர்த்துச் சொல்வது வழக்கம். நேர்முகமான ப்ராதாக்கள் அல்லராயினும் அருஜுனன் யுத்த சமயத்தில், "இவர்கள் ப்ராதாக்ளாகையால் இவர்களைக் கொல்வது ந்யாயமல்ல. இவர்களது இரத்தம் சூழ்ந்த இந்தப் பூமியை ஆள்வதும் உசிதமல்ல" என்று சொல்லித் தன் காண்டீவத்தையும் அம்புகளையும் கீழே போட்டுவிட்டான். இவனது ப்ராத்ருவாஞ்சை எப்படி இருக்கிறது என்பதை இதிலிருந்து நன்கு உணரலாம்.

நெருப்பை இட்டுக் கொளுத்துகிறவன், விஷத்தைக் கொடுப்பவன் போர் செய்ய ஆயுதங்களைக் கையில் எடுப்பவன், செல்வத்தை திருடுகிறவன், பத்தினியையோ பூமியையோ அபகரிப்பவன் ஆகியவர்களை 'ஆததாயி' என்பர். இப்படிப்பட்ட ஆததாயியைக் கண்டால் சிறிதளவும் யோசனை செய்யாமல் அவன் அகப்பட்ட மாத்திரத்தைக் கொண்டே அவனைக் கொன்றுவிட வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. இப்படியிருந்தும் அர்ஜுனன், இவர்களைக் கண்டதும் இரக்கத்துடன் பேசலானான். பஞ்ச பாண்டவர்களின் விஷயத்தில் துரியோதனாதிகள் இந்த ஆறுவித அக்ரமங்களையும் செய்தவர்கள். அர்ஜுனனுக்கு அவர்கள் செய்த அக்ரமத்தில் சிறிதவளவும் நோக்கமே இல்லாமல், தமையன், தம்பி என்ற பாசமே ஊன்றியிருந்தது. இது அவனுடைய உயர்ந்த குணத்துக்கு எடுத்துக்காட்டு. இவ்வளவு நல்ல எண்ணத்தை அர்ஜுனன் பெற்றிருந்தும். அர்ஜுனன் முதலிய பாண்டவர்களிடத்தில் துரியோதனாதிகளுக்கு நல்ல எண்ணமே இல்லை.

சிலர் சகோதரர்களிடத்தில் அதிகப் பற்றுதலை உடையவர்போல் பாவனை செய்வார்கள். பேசும்போது, 'நம்மிடத்தில் இவர் இவ்வளவு பாசம் வைத்திருக்கிறாரே!' என்று கருதும்படியாகப் பேசுவர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் அவர் பேச்சைக் கண்டே மயங்குவார்கள். ஆனால்

அவர்கள் தம் ப்ராதாவினிடத்தில் சிறிதளவும் உள்ளன்பு உடையவர்களாக இருக்க மாட்டார்கள்; ஒரு சிறிய உபகாரமும் செய்யமாட்டார்கள்; ஒரு சல்லிக்காசுகூடக் கொடுத்து உதவ மாட்டார்கள். சிலர் உபதேசத்தில் மாத்திரம் பெயர் பெற்றவர்கள்; தமது அநுஷ்டானத்தில் சிறிதளவும் கைதேர்ந்தவரல்லர்.

ஸாஹஸப் பக்ஷி என்று ஒரு பறவை; அது, 'சாகசமான காரியங்களைச் செய்யாதே' என்று உபதேசம் மாத்திரம் செய்யுமாம். அது தனது செயலில் சாகச வேலையையே எப்பொழுதும் செய்யுமாம். அதாவது ஒரு காட்டில் சிங்கம் நன்றாக மாமிசங்களைத் தின்று குகையில் படுத்து உறங்கும். பாதித் தூக்கத்தில் வாயைத் திறந்து கொட்டாவி விடும். அந்தச் சமயத்தைக் கவனித்துக் கொண்டே இருக்கும் இந்தப் பறவை, சிங்கத்தின் பற்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் மாமிசப் பருக்கைகளை ஒரு நொடியில் கொத்தி எடுத்துக் கொண்டு ஓடிப் போகுமாம். இதன் செயல் எப்படிப்பட்டது. இதன் உபதேசம் எப்படிப்பட்டது என்பதை கவனியுங்கள். 'சாகச செயலை செய்ய வேண்டாம்' என்று பிறருக்கு உபதேசித்து, தான் பெரும் சாகசத்தை அல்லவா செய்கிறது? சிங்கத்தின் பற்களிலுள்ள மாமிசத்தை இது எடுக்கும்போது சிங்கம் வாயை மூடிக்கொண்டால் இதன் கதி என்னவாகும்?

ஒரு தகப்பன் தன் புதல்வனுக்கு நீதிநூல்களை கற்று கொடுக்கிறான். 'தாய் தந்தையரிடத்தில் அன்புடன் இரு. அவர்கள் சொல்வதைக் கேள். பெரியோர்களை வணங்கு. நல்லவன் என்று பெயர் பெறு. பொய் பேசாதே' என்று நீதிகளை சிறிய புதல்வனுக்கு கற்பிக்கிறான். அந்த சமயத்தில், இவனுக்கு ஆறு மாதம் முன்பு ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்த கடன்காரன் இவனிடம் பணம் வாங்க வருகிறான். அவனைப் பார்த்ததுமே இவன் வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போல் இருந்தது. இந்த சமயத்தில்தான், 'பொய் சொல்லாதே' என்பதை தன் புதல்வனுக்கு நன்கு கறிபிக்கிறான். கடன்காரனை பார்த்ததும், நாம் என்ன செய்வது என்று யோசித்து பையனை பார்த்து, "குழந்தாய்! அதோ ஒருவர் வருகிறாரே, அவர் இங்கு வருவார். நான் வீட்டுக்குள் சென்று என்னை மறைத்துக் கொள்கிறேன். அவர் வந்ததும் 'உன் தந்தை எங்கே?" என்று கேட்பார். அதற்கு நீ, "என் தந்தை வெளியூருக்கு சென்றிருக்கிறார். அவர் திரும்பி வர இரண்டு மூன்று நாளாகும்' என்று சொல்லிவிடு" என்று கூறி உள்ளே சென்றுவிட்டான். கடன்காரன் வந்து கேட்க, புதல்வனும் தகப்பன் சொன்னபடியே சொல்லி அனுப்பிவிட்டான்.

பிறகு தகப்பன் வெளியில் வந்ததும் பையன், "அப்பா! பொய் சொல்லாதே என்று எனக்கு நீங்கள் கற்றுக் கொடுத்தீர்கள்; பிறகு பொய் சொல்லும்படியாகவே செய்து விட்டீர்களே?" என்று கேட்டான். புதல்வனின் கேள்விக்கு தகப்பன் தலைகுனிவதை தவிர வேறு என்ன செய்ய முடியும்? இதற்கு அவர் பதில் ஒன்றை சொன்னார். வக்கீல் தொழிலைச் செய்பவர் ஒருவர். எப்பொழுது கோர்ட்டில் பொய் சொல்லித்தானே இருக்க வேண்டும். ஒருநாளாவது சொல்லாமல் இருக்க வேண்டும் என்று எண்ணி ஒரு நாள் விராமம் எடுத்துக்கொண்டார். வீட்டில் இருக்கும்போது போன் அடித்தது. மனைவி எடுத்தாள். வக்கீலை அவசியம் வரச்சொல் என்று இவளிடம் சொல்ல அதற்கு இவர் சொன்ன பதில்: நான் இங்கு இல்லை என்று சொல்லிடு என்று. ஆக இப்படியெல்லாம் பொய் பேச சமயம் வந்துவிடும் என்றார்.

இது போலவே சிலர் சொல்வதொன்று, செய்வதொன்று. அர்ஜுனன் உண்மையிலேயே சொல்வதைச் செய்கையில் நிரூபித்து, ப்ராத்ருப் பற்றைக் காட்டி, 'போர் புரிய மாட்டேன்' என்று கூறி, வில்லை எறிந்துவிட்டான் என்றால், அவனது இந்த உயர்ந்த குணம் மிகச் சிறப்புள்ளது.

இம்மாதிரி, ப்ராதாக்கள் ஒருவருக்கொருவர் ஆசையில்லாதவர்களையும் ஆசை உள்ளவர்களையும் பார்த்து வருகிறோம். ஆயினும் இனிக் கூறப்போகிற தாழ்ந்த புத்தியுடைய இரு சகோதரர்களைப் போல் உலகத்தில் எங்கும் பார்த்திரோம். அந்த இரு சகோதரர் கதையைக் கேண்மின் -

ஒரு காட்டில் விபாவசு, சுப்பிரதீகர் என்ற இரண்டு சகோதரர்கள் இருந்தனர். இவர்கள் ஒரு முனிவரின் புதல்வர்கள். இவர்கள் தங்களது சொத்தைப் பிரித்துக் கொள்ள சமயம் நேர்ந்தது. 'இந்த சொத்தை நான்தான் எடுத்து கொள்வேன்' என்று விபாவசு சொன்னார். சுப்பிரதீகரும், 'இதையேதான் நானும் எடுத்துக் கொள்வேன்' என்று விவாதித்தார். ஒரே சொத்தை இருவரும் அடைய வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டதனால் ஒருவருடன் மற்றவர் குரோதமாகப் பேச முயன்றனர். கோபம் அதிகமாகிவிட்டது. இக்காலத்திலும் சொத்து பிரிவினை விஷயமாக பிணக்கு ஏற்படுவதை பல இடங்களில் பார்த்திருக்கிறோம். பிராதாக்களில் எவனாவது ஒருவன் நல்லவனாக இருந்தால், "ஐயோ! இதற்காகவா சண்டை! இதை நீயே எடுத்துக் கொள். எனக்குச் சம்மதம்" என்று சொல்லிவிடுவான். இருவரும் துஷ்டர்களாக இருந்தால் சண்டை முதிர்ந்து, ஒருவரை மற்றவர்தடியாலோ கத்தியாலோ அடித்துக் கொண்டு இறந்நு போவதை தவிர வேறு தீர்மானத்தை பார்க்க முடியாது.

இந்த சகோதரர்களுக்கு கோபம் அதிகமானபடியால், விபாவசு சுப்ரதீகரை பார்த்து, "நீ யானையாய் போக வேண்டும்" என்று சபித்துவிட்டார். தம்பி சுப்ரதீகர், விபாவசுவை ஆமையாக போக வேண்டும் என்று சபித்தார். முனிபுத்திரர்களான இவர்களுக்கும் சொத்து பிரிவினை எதில் முடிந்தது என்பதை கவனியுங்கள். இருவருக்கும் சாபத்தால் உருவம் மாறிவிட்டது. உருவம் மாறியும் ஒரே காட்டில் இருந்தபடியால் பகைமை வளர்ந்தே வந்தது.

வினதையின் புதல்வனான கருடபகவான் வேடச்சேரி முழுவதையும் உண்டார். அப்படியும் பசி அடங்கவில்லை. தம் தகப்பனாரிடம் சென்று தமது பெரும் பசியை கூறினார். தந்தை கருடனை பார்த்து "இதோ அந்த காட்டிலுள்ள யானையையும் ஆமையையும் சாப்பிடு" என்றார். கருடபகவான் தந்தை கூறியபடியே யானையையும் ஆமையையும் உயிருடன் தம் கால் நகங்களால் எடுத்துக் கொண்டு ஒரு பொய்கைக்கு சென்றார். இரண்டு நகங்களிலும் தொங்கிக் கொண்டிருந்த யானையும் ஆமையும் 'ஐயோ! நம் உயிர் போய்விடப் போகிறதே!' என்று எண்ணாமல், அப்போதும் தமக்குள் சண்டையிட்டன. கருடன் தம் நகங்களின் நுனியில் அவற்றை இடுக்கிகொண்டு ஓர் ஆலமரத்தை அடைந்தார். பிறகு பெரிய கற்பாறையை அடைந்தார். தமது அலகின் நுனிக்கு அவற்றை எடுத்து சென்றார். பிறகு கழுத்துக்கும் எடுத்து சென்றார். பிறகு வயிற்றுக்குள் தள்ளினார்.

இந்த யானையும் ஆமையும் எங்கே கொண்டு போனாலும் எங்கே வைத்தாலும் தமக்குள் போர் செய்துகொண்டே இருந்தன; சண்டையை நிருத்தவேயில்லை. தங்களுக்கு கருடபகவானால் ஏற்பட்ட ஆபத்தையும் துன்பத்தையும் சிறிதளவும் மதிக்காமல், இவை முற்பிறவியில் ஏற்பட்ட சொத்துப் பிரிவினை மூலமான சண்டையை செய்துகொண்டே இருந்தன. இவற்றின் சகோதரபாசம் எப்படி இருக்கும் என்பதை அனைவரும் சிந்தியுங்கள். 'ஐயோ! நம் உயிர் இப்போதே போய்விட போகிறதே!' என்று கொஞ்சமும் கலங்காமல், அப்பொழுதும் இவை ஓயாமல் சண்டையிட்டன. பிறவி மாறியும், ஆபத்து நேர்ந்தும் பூர்வ வாஸனையை இவை விடவில்லை. இப்படியும் உலகில் அண்ணன் தம்பிகள் இருக்கிறார்கள் என்றால் அவர்களை நாம்

என்ன செய்வது! இதை ஸ்ரீவேதாந்ததேசிகன் கருட பஞ்சாசத்தில் அழகாக இந்த ச்லோகத்தில் எடுத்துக் காட்டினார் -

ஸாந்த்தக்ரோதாநுபந்தாத் ஸரஸி நகமுகே பாதபே கண்டஸைலே
துண்டாக்ரே கண்டரந்தரே ததநு ச ஜடரே நிர்விசேஷம் யுயுத்ஸூ ।
அவ்யாதஸ்மாநபவ்யா தவிதிதநகரச்ரேணி - தம்ஷ்ட்ராபிகாதேள
ஜீவக்ராஹம் க்ருஹீத்வா மகடகரடிநெள பக்ஷயந் பக்ஷிமல்ல: ॥

ஆகையால், கீழ்க்கூறிய சகோதரர்போல் இருக்காமல், மற்றவருடைய சுக துக்கங்களை தம் சுக துக்கங்களாக கருதியும், மேலும் மேலும் அன்பு காட்டியும், ஒற்றுமையுடன் ப்ராதாக்கள் இருப்பது மிக்க சிறப்பை தரும்.

*****

# 40. பக்தனின் பெருமை

நாம் வணங்க வேண்டிய மகான்கள் எத்ததையோ பேர் இருக்கின்றனர். எந்த இடத்தில் எந்த விசேஷம் இருக்கிறது என்பதை நம்மால் உணர முடியாது. நீறு பூத்த நெருப்புப் போல் எத்தனையோ பெரியவர்கள் இருக்கின்றனர். அவர்கள் தம்மிடத்திலுள்ள விசேஷ மேன்மையை தெரியப்படுத்தாமல் இருப்பார்கள். அதைக் கொண்டே அவர்களிடத்தில் ஒருவிதமான ஏற்றமும் இல்லை என்று நினைக்கக் கூடாது. சிலர் தங்களிடத்திலுள்ள விசேஷங்களை தாமாகவும் பிறர் மூலமாகவும் வெளிப்படுத்தி தங்களை உலகத்து மக்கள் கௌரவிக்கும்படியாக செய்வார்கள். இதைக் கொண்டே அவர்களிடத்தில் ஞானம் ஆசாரம் பக்தி முதலிய குணங்கள் இருப்பதாக ப்ரமிக்க வேண்டாம்.

ஒரு கலசத்தில் தண்ணீரோ எண்ணையோ நெய்யோ பூர்ணமாக இருந்தால் அந்த கலசம் தளும்புவதில்லை. அரைகுரையாக இருந்தால் அது அதிக ஒலியை எழுப்பும். அது போல் சிலர் நிறைய ஞானத்தையும் ஊக்கத்தையும் ஒழுக்கத்தையும் பக்தியையும் பெற்றவர்கள். தங்களைப் பற்றி எதுவும் பேசமாட்டார்கள். பிறர் மூலமாக தங்களுக்கு கௌரவத்தை உண்டாக்க முயற்சியும் செய்ய மாட்டார்கள். இத்தகைய மகான்களே மகான்கள். உத்தமர்கள். மேடையிலிருந்து தங்களை பற்றி புகழ்ந்து கொண்டும் ஆங்காங்கே தங்களுக்கு ஸத்காரம் ஏற்பட்டது என்று சொல்லிக் கொண்டும் திரிகிறவர்கள் அப்படிப்பட்ட மகான்களில் சேரமாட்டார்கள்.

'அப்ரயத்நாகனா: ஸேவ்யா க்ருஹஸ்தைர் விஷயா: ஸதா ।' என்றபடி, தாமாகவே பகவத் ஸங்கல்பத்தினால் ஏற்படும் பிறர் மூலமான ஸத் காரியங்களையும் லௌகீக சௌகர்யங்களையுமே அவர்கள் பெற விரும்புவார்கள். இம்மாதிரி லௌகீக விஷயத்தில் இந்த மகான்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவே மாட்டார்கள். சந்யாவந்தனம், பகவதாராதானம், மற்றும் சில தர்மங்களில் எம்பெருமானின் உவப்புக்காக தாங்களே முயற்சி செய்ய விரும்புவார்கள்.

சாஸ்திரங்களில், பகவானை சேவிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறது. ஆயினும், அந்த பகவான் தன்னைவிட பக்தர்களே உயர்ந்தவர்கள் என்று கூறுகிறான்; 'மம மத்பக்த-பக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்' என்று. 'எனக்கு என்னிடத்தில் ப்ரீதி உண்டு. என்னைச் சேர்ந்து என்னிடம் பக்தி செலுத்துகிறவரிடம் அதிகப் ப்ரீதி உண்டு. அந்த பக்தரிடத்தில் பக்தி செய்பவனிடத்தில் மிக்க அதிகப் ப்ரீதி உண்டு. இப்படி மேன்மேல் பக்தி செய்பவனிடத்தில் ப்ரீதிக்கு அளவே இல்லை' என்று பகவானே கூறுகிறான். ஆகையால் பகவானிடத்திலும் அந்தப் பாகவதனிடத்திலும் எவனுக்கு உண்மையான பக்தி உள்ளதோ அவனை நான் வணங்குகிறேன் என்பதே பகவானுடைய ஸங்கல்பம்.

இந்த பக்தர்களிடத்தில் பகவானுக்கு எவ்வளவு ஆசையிருக்கிறதோ அவ்வளவு கோபமும் அந்த பக்தர்களுக்கு துன்பம் விளைவிப்பவரிடத்தில் உள்ளது. பக்தர்களுக்கு ஒருவன் விரோதத்தை உண்டு பண்ணினால் அவனை பகவான் வெறுப்பான்; அவனிடம் கடும் சினம் கொள்வான்; தன்னையும் அறியாமல் அவனிடத்தில் கோபத்தை காட்டி நிக்ரஹ பானங்களைத் தொடுப்பான். 'கோபஸ்ய வசமேயிவாந்' என்பதுதான் உண்மை. பாகவதர்களுக்கு விரோதம் செய்கிற மற்றவரிடம் மட்டுமே கோபம் கொள்வான் என்பதில்லை. பகவான் தன் கையே பாகவதர்களுக்கு இடையூறு செய்யும்போல் தோன்றினால் அதையும் கத்தியால் வெட்டிவிடுவான். இதை பாகவதம் விளக்கமாக காட்டுகிறது.

கார்ய வைகுண்ட லோகத்தில் பகவான் சிம்ஹாசனத்தில் லக்ஷ்மியுடன் வீற்றிருக்கிறான். அப்பொழுது ப்ரம்மாவின் மானஸ புத்திரர்களான ஸனகர் முதலியவர்கள் அங்கே செல்கிறார்னள். ஸனகர், ஸனந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் என்ற நால்வரும் ஐந்து உள்ளவர்கள். ஞானத்திலோ முதிர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் அனைவரையும் சமமாக பார்ப்பவர். எப்பொழுதும் பகவத் த்யானம் செய்பவர்கள்; முனிவர்கள்; எல்லா இடத்திலும் செல்வதற்கு தடையற்றவர்கள்; எந்த சமயத்திலும் செல்ல உறிமை பெற்றவர்கள். இவர்களை வேண்டாம் என்று யாருமே தடுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட இந்த நால்வரும் வைகுண்ட லோகத்திலுள்ள பகவானை சேவிக்க சென்றபோது ஜயன் விஜயன் என்ற இரண்டு த்வாரபாலகர் தங்கள் கையிலுள்ள பிரம்பை எடுத்து நீட்டி தடுத்து இவர்களை கேலியும் செய்தார்கள்.

பகவானின் சேவையில் அபிலாக்ஷையுடன் வந்த தங்களுக்கு இம்மாதிரி ஏற்பட்ட ஏமாற்றத்தை கண்டு இவர்கள் மிக்க சினம் கொண்டனர்; 'பகவானின் சமீபத்திலேயே வாசம் செய்தும் அடிமையைச் செய்தும் இருக்கிற உங்களுக்கு ஏன் இப்படிப்பட்ட விபரீத புத்தி உண்டாயிற்று? உங்களது மதி மயக்கத்திற்கு காரணம் யாது? ப்ராசந்த புருஷனான பகவானுக்கு நீங்கள் வேலைக்காரராக இருக்க தகுதியேயில்லை. ஆகையால் சாபத்தைக் கொடுத்தோம் என்றனர்.

அப்பொழுது, சர்வஜ்ஞனான பகவான் ஏதோ பெரிய அனர்த்தம் உண்டாகிவிடும் என்று எண்ணி தன் சிம்ஹாசனத்திலிருந்து இவர்கள் இருக்குமிடம் வந்து ஸனகாதி முனிவர்களை வேண்டிக்கொள்கிறான். 'மகரிஷிகளே! எனக்கு நீங்களே உயர்ந்த தெய்வம். உங்களுடைய அருள் எனக்கு அவசியம் வேண்டும். என் வேலைக்காரர் செய்த குற்றம் என்னுடைய குற்றமே' என்று சொல்லி இருதியில் ஒரு ரசகனமான விஷயத்தைக் கூறுகிறான்.

'எந்த பகவானுடைய ஸத் சரித்திரங்களைக் கூறுவதும் கேட்பதுமாகிய புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது எல்லா ஜனங்களையும் பரிசுத்தமாக்குகிறதோ அத்தகைய பகவானான நான் உங்களால் அல்லவோ சத்தை பெருகிறேன்? நீங்கள் செய்யும் பூஜையினாலும் நிவேதனங்களினாலும் ஸ்தோத்திரங்களினாலும் மனதில் செய்யக் கூடிய த்யானத்தினாலும் என் உடல் பெருத்துவிடுகிறது. என் ஸ்வரூபமும் நிலை பெறுகிறது. ஆகையால் உங்களுக்கு தடை செய்பவர்களை இப்பொழுதே கொல்ல வேண்டும். உங்களுக்கு பிரதிகூலமாக என் கையே இருக்க நேர்ந்தால் அதையும் அறுத்துதள்ளுவேன் என்றான். இதிலிருந்து பக்தனின் மகிமை எப்படிப்பட்டது என்பதை நாம் நன்கு உணரலாம். பகவான் தன் கைகளையே அறுத்து தள்ளுகிறேன் என்று சொல்லுகிறான் என்றால் விரோதத்தைச் செய்யும் மற்றவர்கள் விஷயத்தை பற்றி கேட்கவும் வேண்டுமா?

பக்தர்களிடத்தில் பகவான் இப்படி அதிகமான அபிநிவேசத்தை வைத்திருப்பதனால் அவர்களிடத்தில் விரோத மனப்பான்மையை காட்டவே கூடாது. அவர்களுக்கு இயன்ற வரையில் அநுகூலமாகவே நடந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவனுக்கும் மனம் வாக்கு சரீரம் என்று மூன்று கரணங்கள் உள்ளன. இந்த முக்கரணங்களினாலும் பாகவதர் விஷயத்தில் அபசாரப்படாமல் இருப்பதும் உபசாரம் செய்துகொண்டு இருப்பதுமே கடமை.

ஸ்ரீவைகுண்டம் என்ற உலகத்தையடைந்து அங்கு எம்பெருமானுடைய அநுபவத்தை பெறுவதாகிற மோக்ஷத்தை அடைய, வேதாந்தங்களில் முப்பத்திரண்டு வழிகள் கூறப்பட்டுள்ளன. இவற்றுக்கு 'ப்ரஹமவித்யா' என்று பெயர். சாண்டில்ய வித்யை, உபகோஸல வித்யை, தஹர வித்யை, ஸத் வித்யை இம்மாதிரியானவை அவை. இவற்றுள் ஏதாவது ஒரு

ப்ரஹமவித்யையை பயின்று வந்தால் பரிபூர்ண ப்ரஹமாநுபவம் என்ற மோக்ஷம் கிடைக்கும். இவற்றை அநுஷ்டிப்பவன்தான் பக்தன், பாகவதன், ப்ரபன்னன் என்று சொல்லப் பெறுகிறான். இவன் விஷயத்தில் பகவானுக்கு அளவற்ற உவப்பு உண்டாகிறது. 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' என்றும் 'வாசுதேவ: சர்வம்' என்றும் எம்பெருமானையே தனக்கு தாரகனாகவும் போஷகனாகவும் போக்யனாகவும் நினைப்பவன் இவன். உலகத்திலுள்ள மாந்தர் தங்கள் தங்களுக்கு சோறு பால் வெற்றிலை முதலியவற்றை தார: பொஷ: போக்யங்களாக நினைப்பார்கள். இந்த பக்தன் இவற்றில் பற்றற்று, 'எல்லா பொருள்களும் பகவானே என்று நினைக்கிறான் அல்ப சுகங்களில் ஆசையற்று 'எல்லாம் பகவானுக்கே' என்று எண்ணி தன் முக்கரணங்களையும் பகவானிடத்திலேயே அர்ப்பனம் செய்கிறபடியால் இவனை பகவான் 'மகாத்மா' என்று சொல்கிறான். உலகத்தில் ஏதோ சில காரணத்தை முன்னிட்டு ஒருவனை 'மகாத்மா' என்று சொல்லுவது வழக்கம். அதுபோல் இல்லாமல் பகவானே கொண்டாடிய இவன்தான் மகாத்மா. இத்தகைய மகாத்மாவை பகவான் தான் பெற்றபிறகு ஒரு சமயத்திலும் கைவிடமாட்டான். இவர்கள் ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தபிறகு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி 'நான் மறுபடி ப்ரக்ருதி மண்டலத்திற்கு போய் வருகிறேன். எனக்கு பதிலாக மற்றொரு பொருளை ப்ரதிநிதியாக வைக்கிறேன்' என்று சொன்னாலும் பகவான் இவனை அனுப்பமாட்டான். 'பிணை கொடுக்கிலும் போக ஒட்டாரே' என்றன்றோ சொல்வது?

இந்த பக்தர்கள் தங்களது பக்தியோகம் முடிந்து உடலை மோக்ஷத்துக்கு போகவிடும்போது தங்களுடைய பாவங்களையும் புண்ணியங்களையும் தங்களது சத்ருக்களிடத்திலும் ஸ்நேகிதர்களிலத்திலும் விட்டு போகிறார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. பகவானிடத்தில் அதிக பக்திபெற்ற இவர்களுக்கு பாவம் இருக்குமா என்று நினைக்கவேண்டாம். அனாதிகாலமாக ஸம்ஸாரத்தில் சூழன்றுகொண்டு இருந்தவர்கள்தாமே இப்பொழுது பக்தர்களானார்கள்? அந்தந்த உடலை எடுத்து ப்ரக்ருதி மண்டலத்தில் இருக்கும்போது அளவற்ற பாவங்கள் அனைவருக்கும் ஏற்படுவது சகஜம்தானே? அறிவு பெற்று ஆசார்யனை அடைந்து காலக்ஷேபங்களை செய்து வேதாந்த ஞானம் முதிர்ந்து வந்து பிறகுதான், 'பகவானுடைய உத்தரவுபடி நாம் இருக்கவேண்டும். அவனிடம் அடைக்கலம் நாம். அவனுடைய சட்டதிட்டங்களுக்கு அடங்கியிருக்கவேண்டும். பாவங்களை செய்யக் கூடாது' என்ற எண்ணங்கள் பெரும்பாலும் உண்டாகும். ஆகையால் எத்தனையோ பிறவிகளில் இவர்கள் அநேக பாவங்கள் செய்திருக்கலாம், ஆகவே இவர்கள் செய்த எல்லா பாவங்களும் இருதியில் உடலை விடும்போது இவர்களிடத்தில் அபசாரப்பட்டிருக்கும் விரோதியினிடத்தில் சேர்ந்துவிடும். ஆகையால்தான் பக்தர்களிடத்தில் விரோத மனப்பான்மை காட்டக்கூடாது. சாதாரணமாக நாம் செய்த பாவங்களே அளவற்று இருக்க, பாகவதர்களிடத்தில் அபசாரப்பட்டு அதனால் வரும் அவரது பாவங்கள் அனைத்தையும் பெற்றுக் கொண்டால் இவற்றுக்கு விமோசமே இல்லாமல் போய்விடும். அதனால்தான் ஒரு பாகவதனிடத்தில் தெரிந்தோ தெரியாமலோ ஏதாவது குற்றம் செய்துவிட்டால் அவருடைய பாவமும் நம்மிடம் வந்துவிடுமே என்று எண்ணி, அவரது கடைசி காலத்திலாவது அவரிடம் சென்று, 'அடியேன் தேவரீரடத்தில் பல குற்றங்களை செய்திருப்பேன். அடியேனை மன்னிக்க வேண்டும்' என்று ப்ரார்த்திப்பார்கள்.

ஆகையால் அவருடைய பாவங்கள் நமக்கு வந்துவிடுமே என்று அஞ்சி அவரிடம் கோபத்தை காட்டாமல் இருப்பவன் உத்தமன்.

ப்ரஹ்மவித்பாபவர்காணாமநந்தாநாம் மஹீயஸாம் I
தத்த்வேஷிஸங்க்ரமம் ஜாநந் த்ரஸ்யேத் ததபராதத: II

'அந்த பாகவதர் நம்மிடத்தில் ஏதாவது விரோதத்தைக் காட்டினால் நாம் எப்படி வெறுமனே இருப்பது ? பதிலுக்குப் பதில் ஏதாவது செய்ய வேண்டாமா? அவர் எவ்வளவோ நம்மிடத்தில் விரோதத்தைக் காட்டுகிறாரே. ஆகவே நாமும் அவருக்கு ஏதாவது விரோதத்தைச் செய்வது நல்லது' என்று நினைக்கக் கூடாது. அவர் செய்த பாவங்களுக்கு சிக்ஷையைக் கொடுக்க பகவான் இருப்பதனால் நாம் வாளா இருப்பதே நல்லது. அப்படி ஏதாவது நாம் செய்ய ஆரம்பித்தால் ஈர்வரன் செய்ய வேண்டிய வேலையை நாம் எடுத்துக் கொண்டதுபோல் ஆகிவிடும். அதனால் நம்மை ஈச்வரன் வெறுப்பான். 'வோடுமீச்வரக்ருத்யாநி தத்விரோதாதபீப்ஸதி' என்று அருளிச் செய்தார் ஸ்ரீஸ்வாமி தேசிகன்.

இப்படியும் சிலர் நினைக்கலாம்: இரண்டு பாகவதர்கள்; அவர்களில் ஒருவன், 'நானும் பகவத் பக்தன்தானே?. மற்றொரு பக்தனிடத்தில் விரோதத்தை செய்தால் நமக்கு ஒரு வித தீங்கும் வராது. அவருடைய பாவங்கள் நம்மிடம் வந்துவிடுமே என்று அஞ்சவேண்டாம். நாமும் பக்தரானபடியால் நமது பாவம் நம் விரோதிகளிடத்தில் போவது போல் நம்மிடம் வந்த அவரது பாவங்களும் நமது விரோதிகளிடத்தில் போய்விடப்போகின்றன. ஆகையால் நமக்கு ஒருவித தீங்கும் இல்லை என்று எண்ணலாம் அல்லவா? நமது பாவம் போலவே பாகவதர்களின் பாவம் நம்மிடம் வந்ததும் நமது பாவங்களாகவே ஆகிறபடியால் அது கடைசியில் நம் விரோதியினிடத்தில் போகப்போவது வாஸ்தவம்தான். ஆனாலும் அந்த பாவம் உடல்போவதற்கு முன்பாகவே பலன் கொடுக்கக்கூடியதாக இருந்தால் அது உடனே பலித்து பெரிய அநிஷ்டத்தை கொடுத்துவிடும்; பெரும் கஷ்டத்தை கொடுத்து துன்புறுத்தும். எல்லா பாவங்களும் வெகுகாலம் கழித்துதான் பக்குவமாகும் என்ற நிர்பந்தம் இல்லையே? ஆகையால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் நமக்கு வராமல் இருக்கவேண்டும் என்று எண்ணி பக்தர்களும் ஒருவரிடம் ஒருவர் அபசாரபடாமல் இருப்பதுதான் நல்லது.

இப்படியே பாகவதரின் புண்ணியங்களும் அவர்களின் ஸ்நேகிதர்களிடத்தில் வரும்; ஆகையால் சில்லரையான சில தொண்டுகளை பாகவதர்களிடத்தில் செய்து அவர்களது அளவற்ற புண்ணியங்களை எளிதில் பெற்றுவிடலாம். ஆகையால் அவர்களிடத்தில் அபசாரப்படாமல் இருப்பதும் சில நற்காரியங்களை செய்திருப்பதும் நன்மையை கொடுக்கும். எனவே பாகவர்கள் எல்லோரிடத்திலும் ஒரேவிதமான அபிமானத்தை வைத்தும், வேறுபாட்டை காட்டாமலும் இருந்து உபசரிக்கவேண்டும். இதில், 'நமக்கு இவர்தான் வேண்டியவர். இவர் வேண்டாதவர் என்ற பாகுபாட்டை காட்டக் கூடாது. ஏனெனில் பகவத் பக்தி என்ற ஒரு பெரும் குணத்தை இட்டுத்தானே நாம் பாகவதர்களை உபசரிக்கிறோம்? அது யாரிடத்தில் இருந்தால் என்ன? ஒரே விதமாகத் தானே நாம் அவர்களை கருதவேண்டும்? இப்படி கருதாமல் விஷம புத்தியுடன் நடந்தால் நம்மை எம்பெருமான் வெறுப்பானே தவிர உவக்கமாட்டான். கல்விகளை நன்கு கற்று ஞானம், அநுஷ்டானம், வைராக்யம், பக்தி இவற்றை பெற்ற வித்வான்களிடத்தில் சமமான எண்ணத்தை வைத்து எல்லோரையும் நாம் ஒரே விதமாக ஆதரிப்பதுதான் பகவானை சந்தோஷிப்பிக்கும்.

*****

# 41. காக்கும் இயல்பினன்

உலகத்தில் எம்பெருமானை ஆபத்பாந்தவன், அநாத ரக்ஷகன் என்று அழைப்பதுண்டு. ஸர்வேச்வரனுக்கு எத்தனையோ பேர்களும் குணங்களும் உள்ளன. 'பலபல ஆபரணம், பேரும் பலபலவே' என்பர் சான்றோர். நம் தோஷங்கள் எப்படி எண்ணிக்கையற்றனவோ அவ்வாறே எம்பெருமானின் குணங்கள் எண்ணிக்கையற்றவை. ஆகாயத்தில் நக்ஷத்ரங்களை எண்ண முடியுமா? ஆற்றிலுள்ள மணலை எண்ண முடியுமா? நம் தோஷங்களைத்தான் எண்ண முடியுமா? அப்படியே பகவானின் குணங்களையும் திருநாமங்களையும் எண்ண முடியாது. 'ஸ்ரீரங்கேச த்வத்குணாநாமிவாஸ்மத்தோஷாணாம் க: பாரத்ருச்வா?' என்று பராசரபட்டர் அருளிச்செய்தார். இப்படி பல திவ்ய குணங்கள் உள்ளன என்பதை ஸ்ரீபாஷ்யகாரர் தமது கத்யத்தில் மிகவும் ஸ்பஷ்டமாக அருளிச் செய்யத் தொடங்கிப் பல குணங்களைப் படித்து, இவை முதலான உயர்ந்த பல குணங்களை உடையவனே என்று சொல்லி முடித்தார்.

இப்படி எவ்வளவோ ஸத்குணங்கள் எம்பெருமானுக்கு இருந்தபோதிலும் அநாதி பாப வசத்தால் இருள்தருமா ஞாலத்தில் பிறந்துள்ள நாம் "ஆபத்பந்து அநாத ரக்ஷகன் ஆபத்ஸகன்" என்ற பகவானின் இரண்டு தன்மைகளில் புகுந்து கடவுளைத் துதிக்கிறோம். ஏனெனில் இங்குப் பிறந்தவர்கள் அனைவரும் துயரத்தைத்தான் அநுபவிக்கின்றனர். சுகம் என்பது லவலேசம் இல்லாவிட்டாலும் அதைச் சுகமாக நினைத்து அநுபவிக்கிறோம். உண்மையில் அந்தச் சுகமும் முன்னும் பின்னும் துக்கத்தையே அளிக்கக் கூடியதாகையால் பெரும்பாலும் இவ்வுலகம் துக்க பூயிஷ்டமே. ஆகையால் துன்பத்தை அடைந்துள்ள நாம் எம்பெருமானைக் கூப்பிட்டு நமது இடரை நீக்க விரும்பி, 'ஆபத்பந்துவே, அநாதரக்ஷகனே'! என விளித்து, நம் துயரத்தைப் போக்க பிரார்த்திக்கிறோம்.

நாம் சம்பாதிப்பதும் சாப்பிடுவதும் படிப்பதும் உறங்குவதும் ஆங்காங்கே சென்று வேலை பல செய்வதும் எல்லாம் பகவான் நினைக்காவிட்டால் நடக்கமாட்டா. கடவுளின் சங்கல்பம் இல்லாவிட்டால் கையையும் காலையும் அசைக்க முடியாது. நீட்டவும் மடக்கவும்தான் முடியுமா? கண்களிலுள்ள இமைகளைக் கொட்டத்தான் முடியுமா? இவற்றை எல்லோருமே நன்கு உணர்ந்தவர். ஆயினும் ஏதோ சில காரியங்களைச் செய்து பயனை கண்டுவிட்டால், 'நான் இதைச் செய்தேன்; இந்தப் பணத்தைச் சம்பாதித்தேன்; பங்களாவைக் கட்டினேன்; என்னைத் தவிர வேறு யாரால் இந்த வேலைகளைச் செய்ய முடியும்?' என்று அகங்காரப்பட்டுப் பகவானை நினைப்பதில்லை. இவர்கள் பாகவதர்களை எப்படி நினைக்க போகிறார்கள்? பாகவதர்கள் தங்கள் வீட்டை அண்டி வந்தால் அலட்சியமாகப் பேசி அனுப்பிவிடுகிறார்கள். 'தேவரீர் என் குடிசைக்கு வந்து என்னையும் என் சம்பந்தப்பட்டவர்களையும் அநுக்ரகித்தீர். தேவரீர் திருவடித் தூள் பட்டுத்தான் நாங்களும் எங்களுடைய வீடும் பரிசுத்தமாகி ஸத்தை பெற்றோம். இதற்கு முன்பு இந்த வீடு வனமாக இருந்தது; இப்பொழுது பவனமாயிற்று' என்று சொல்லுகிறவர் பணமுள்ள பிரபுக்களில் யாரோ சில மகான்களே இருக்கிறார்கள்.

எல்லோரும் இவ்வாறே இருக்கின்றனரா? இல்லவே இல்லை. பாகவதர்களைப் பார்த்ததும் மறைந்து விடுகிறார்கள். எத்ததனையோ முறை அவர்கள் வீட்டுக்கு வந்தபோதிலும் முகங்கொடுத்து பேசாமலே, 'ஏதோ நம்மிடம் யாசிக்க வந்துள்ளனர்' என்று நினைத்து வாளா இருக்கிற பெரிய பிரபுக்களையும் பார்த்திருக்கிறோம். நேரில் சந்திக்கும்போதே இப்படி நேர்ந்தால் இவர்கள் கடிதம் எழுதி அதன் மூலமாக அந்தப் பிரபுக்களிடமிருந்து என்ன பதிலை

எதிர்பார்க்க முடியும்? அந்தோ! தங்கள் ஐசுவரியம் முழுவதையுமே பாகவதர்கள் எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள் என்றே நினைக்கின்றனர். உண்மையில் இந்தப் பாகவதர்கள் அந்தப் பிரபுவினுடைய பணத்தையோ வீட்டையோ மற்ற பொருள்களையோ எடுத்துக் கொள்வதில்லை. அந்தப் பிரபு ஏற்கனவே ஏதாவது நற்காரியம் செய்திருந்தால் அதனால் உண்டான புண்ணியங்களை இவர்கள் அவனெதிராகவே அவன் கொடுக்காமலே எடுத்துச் செல்கின்றனர்.

இவ்விஷயத்தை ஸ்ரீராமன், விபீஷணன் சரணாகதன் ஆனபொழுது வானர முதலிகளிடம் விஸ்தாரமாக் பேசியிருப்பதை நாம் மறுபடி விஸ்தரிக்க வேண்டியதில்லை. இப்படி பகவான் மூலமாகவே நமக்கு எல்லாம் ஏற்பட்டது என்பதை மறந்து மார்பைத் தட்டிக் கொண்டு தம்மையே புகழ்ந்து திரிகின்றனரே சிலர். சில சமயம் தாங்கள் செய்யும் வேலை பயனளிக்காவிட்டால், 'பாழாய்போன தெய்வம் கெடுத்து விட்டது' என்று தெய்வத்தின் மேல் குறை கூறுவாரும் உண்டு. இவ்விதமான இருப்பையும் நாம் உலகத்தில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். உண்மையில் பகவானை நம்பி இருப்பவன் ஆஸ்திகன். அவன் ஒருகாலும் பகவானை பழிக்கமாட்டான். தனக்கு ஏற்படும் இடர்களில் அவனையே கூப்பிட்டு தன்னை காக்க வேண்டிக் கொள்வான்.

பக்தனான ப்ரஹ்லாதனுக்கு எத்தனையோ இன்னல்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு சமயமும் பகவான் தானே ரக்ஷித்தான்? த்ரௌபதியின் துன்பத்தைக் கிருஷ்ணன்தானே நீக்கினான்? கஜேந்திராழ்வானுக்கு எற்பட்ட கஷ்டத்தை ஆபத்பந்துவான ஸர்வேச்வரன் அலை குலைய தலைகுலைய வந்து காப்பாற்றினான். நான்கு கைகளை உடைய பகவான், சரணாகதி செய்த அந்த சிறந்த யானையை காப்பாற்ற கருதி, 'அதற்கு என்ன ஆபத்து எற்பட்டதோ? எந்த வழியில் அதை நீக்கலாம்?' என்ற எண்ணத்துடன் எட்டு கைகளையும், அதற்கு தக்கவாறு எட்டு ஆயுதங்களையும் எடுத்துகொண்டு காப்பாற்ற ஓடி வந்தான். காகாஸுரனையும் கழுகையும் வேடனையும் குரங்கையும் ராக்ஷஸனாகிய விபீஷணனையும் அவரவர்களுக்கு தக்கவாறு உதவி புரிந்து ரக்ஷித்தான்.

இறைவன் காக்கும் தன்மையை உடையவனாகையால், ஆண் பெண் பெரியவர் குழந்தை உயர்ந்த ஜாதியில் பிறந்தவன், அல்லாதவன் என்ற வேறுபாட்டை பார்க்க மாட்டான். யாராக இருந்தாலும் ஆபத்து நேரும்போது மனப்பூர்வமாகப் பகவானை நினைத்து கதறினால் அவன் நேராக வந்தோ, மறைமுகமாக இருந்தோ ரக்ஷிப்பதில் ஊக்கமுடையவன். இவ்விஷயத்தை இதிஹாஸ புராணங்களை நேராகப் படித்தோ, வித்வான்கள் உபந்யாஸம் சொல்லப் கேட்டோ அனைவரும் தெரிந்துகொண்டிருப்பதனால், தங்களுக்கு துன்பம் நேரும்போது ஸஹஸ்ரநாம பாராயணம் செய்து, ஸர்வேச்ரனை 'ஆபத்பந்து, அநாதரக்ஷகன்' என்று துதிக்கின்றனர்.

இதிஹாஸ புராணங்களிலுள்ள கதைகள் இருக்கட்டும்; பெரியோர் மூலமாக இவ்விஷயத்தில் கேட்டிருக்கிற ஒரு கதையை இங்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

ஓர் ஊரில் ஒரு குலாலன் இருந்தான். அவன் அவ்வூர் மக்களுக்கும் வெளியூர் மக்களுக்கும் மண்பாண்டங்களைச் செய்து விற்று ஜீவிக்கிறவன். இக்காலத்தில் மண்பாண்டம் என்றாலே தெரியாமல் இருக்கலாம். எவர்சில்வர் பாத்திரங்களும் பிளாஸ்டிக் பண்டங்களும் மலிந்து கிடக்கிறபடியால் அவற்றைத்தான் மக்கள் உபயோகிக்கின்றனர். முற்காலத்தில் இவை இல்லையாதலால் மண் பாத்திரங்களையே உபயோகித்து வந்தனர். மண் பாத்திரங்களில்

சமையல் செய்து சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என்று வைத்தியர்களும் சொல்வதுண்டு. இந்த குலாலன் தான் செய்த பாத்திரங்களை விற்று ஜீவிக்கிறவனாதலால் மக்கள் கேட்கும் போதெல்லாம் இல்லையென்னாமல் கொடுத்து வந்தான்.

ஒரு சமயம் சங்கராந்திப் பண்டிகை வந்தது. பண்டிகைக்கு அனைவரும் தங்கள் வீட்டிலுள்ள பழைய மண்பாத்திரங்களை விலக்கிப் போட்டுவிட்டுப் புதிய பாத்திரங்களை எடுத்துக் கொள்வது வழக்கம். ஸங்கராந்திப் பண்டிகை வந்துள்ளபடியால் குலாலன் அதற்கு தக்கவாறு முன்னமே பாத்திரங்களை செய்துவிட்டான். ஆனால் அவை பச்சையாக இருந்தன. முதலில் பாத்திரங்களை செய்ததும் சூளையில் வைத்து வேகவைத்து பிறகு உபயோகப்படுத்துவது வழக்கம். குலாலன் பாத்திரங்களை செய்ததும் சூளையில் அடுக்க வழக்கம் போல் முயன்றான். அப்பொழுது ஜோதிஷ சாஸ்திரத்தில் பரிசயமுள்ள ஒரு மகான் அவனைப் பார்த்து, "இப்பொழுது கிரகங்களின் சஞ்சாரங்களைப் பார்த்தால் இருபது நாள் மழை விடாமல் பெய்யும் என தோன்றுகிறது. ஆகவே நீ சூளையில் இவற்றை அடுக்கினால் யாவும் வீணாகிவிடும். பிறகு உனது விருப்பம்" என்றார்.

இதைக் கேட்டதும் அவனுக்கு பயம் வந்துவிட்டது. 'இவ்வளவு பொருள்களும் வீணாகிவிடும். மேலும், ஊரிலுள்ள மக்களுக்கு ஸங்க்ராந்திக்கு கொடுக்க முடியாமலும் போய்விடும். என்ன செய்வது?' என்று யோசித்தான். கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். அவன் அவ்வூரிலுள்ள மக்களை பார்த்து, "உங்களுக்கு இப்பொழுது பாத்திரங்களை கொடுக்க வேண்டும். மழையோ விடாமல் பெய்யப் போகிறது. சூளை போட்டால் நம் இருவருக்கும் கஷ்டம். எனவே பச்சையான இந்த பாத்திரங்களையே உங்களுக்கு கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்லி வழக்கம் போல் அவரவர்களுக்கு கொடுக்க வேண்டடியவற்றை அவரவர் வீட்டில் வைத்து போய்விட்டான்.

ஒரு வாரம் ஆயிற்று. ஒரு வீட்டில் ஒரு சின்னப் பூனை அவன் வைத்திருந்த ஒரு பெரிய பாத்திரத்தில் குட்டி போட்டுவிட்டது. இதை யாரும் அறிந்து கொள்ளவில்லை. இப்படியிருக்க, அவ்வூரில் ஒரு பெரிய மகான் குயவனைப் பார்த்து, "நீ பச்சைப் பாத்திரங்களை வைத்துவிட்டாயே. இவற்றை நாங்கள் எப்படி உபயோகிப்பது? ஒரே நாளில் தண்ணீர் பட்டதும் இவை உடைந்துவிடாதா? இப்பொழுது இரண்டு நாள் மழைக்கு யோகமில்லை. இதற்கு முன் பொழிந்துவிட்டது. மேலும் இரண்டு மூன்று தினங்கள் கழித்துத்தான் மழை பெய்யும். நான் உனக்கு உத்தரவாதம் அளிக்கிறேன்" என்றார்.

அவன் இதைக் கேட்டதும், "சரி, இப்பொழுதே பாத்திரங்களை அடுக்கி சூளை போட்டுவிடுகிறேன்" என்று சொல்லி, எல்லா பாத்திரங்களையும் அடுக்கிவிட்டான். ஒரு பாத்திரத்தில் பூனை குட்டி போட்டிருப்பதை இவனும் கவனிக்கவில்லை; வீட்டிலுள்ளவர்களும் கவனிக்கவில்லை. நெருப்பையும் வைத்து விட்டான். சூளை நன்றாக எரிந்து கொண்டிருக்கிறது. குட்டியின் தாயான பூனை, வழக்கம் போல் அவ் வீட்டில் குட்டிகளுக்கு பால் கொடுக்க வந்தது; அதிர்ச்சி அடைந்தது. குட்டிகளும் இல்லை, பாத்திரமும் இல்லையே என்று இரு கண்களிலும் நீர் ததும்ப அழுது புலம்பி, நான்கு பக்கமும் பார்த்தது. பிறகு வாசனையை உணர்ந்துகொண்டே சூளை எரியும் இடத்துக்கு வந்து சேர்ந்தது; கத்திற்று. இதைக் கேட்டதும் பாத்திரத்திலுள்ள பூனைக் குட்டிகளும் கத்த ஆரம்பித்தன. மிகவும் கோரமான அழுகை குரல் உண்டாயிற்று.

இதைக் கேட்டதும் குலாலன் திகிலடைந்தான். "ஐயோ! நான் என்ன செய்வது? சூளையையும் பிரிக்க முடியாதே! பூனைக் குட்டியையும் மீட்டுக் கொடுக்க முடியாதே! மகாபாவியானேனே!" என்று புலம்ப ஆரம்பித்தான். தெய்வத்தை நினைத்தான்; தன் செயலை நொந்தான்: "பூனைக் குட்டியும் அழியக் கூடாது. பாத்திரங்களும் வீணாகக் கூடாது. ஆபத் காலத்தில் பந்துவான நீதான் என்னை காப்பாற்ற வேண்டும். இப்படி காப்பாற்றிக் கொடுக்க எனக்கு வேறு நாதனும் இல்லை" என்று சொல்லி புலம்பினான். அவ்விரண்டு தினங்களும் சோறு தண்ணீர் எதுவும் இல்லாமல் இங்கேயே படுத்துக் கொண்டான்.

பூனையின் செயலை சொல்லவும் வேண்டுமா? அதுவும் திக்பிரமத்தை அடைந்து கதறிக் கொண்டே பகவானை நினைத்தவண்ணம் இருந்தது. பகவான் இவர்களை கை விடுவானா? ஆபத் காலத்தில் காப்பாற்றும் தனது தன்மையை விட்டுவிடுவானா? அவனுக்கு இது பெரிய பிருதமன்றோ!

இரண்டு நாட்கள் சென்றன. மனக் கவலையுடன் குலாலன் சூளையில் இருந்த பாத்திரங்களை எடுத்தான். எந்த பாத்திரத்தில் பூனை குட்டிகள் இருந்தனவோ அந்த பாத்திரமும் அதற்கு மேலும் கீழுமுள்ள பாத்திரங்களும் பச்சையாகவே இருந்துவிட்டன. மற்ற எல்லா பாத்திரங்களும் சூளையில் நன்கு வெந்து பளபளவென்று இருந்தன. இவன் பார்க்கும்போதே ஏதோ பகவத்செயல் ஒன்று நடந்திருப்பதை உணர்ந்தான். பாத்திரங்களை எடுத்ததும் பூனைக்குட்டிகள் மிக்க பரபரப்புடன் வெளியே ஓடிவந்தன. தாய் பூனை ஓடிவந்து அவற்றை அணைத்துக் கொண்டது. குலாலன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். இதல்லவோ எம்பெருமானின் செயல்? இப்படி எம்பெருமானைத் தவிர வேறு யாரால் செய்யமுடியும்?

"கடவுளை வணங்கியவன் ஒருகாலும் துன்பத்தை அடையமாட்டான்" என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு குலாலன் வியப்புடன் வீடு சென்றான். இதை கண்களால் நேரில் பார்த்துக் கொண்டிருந்த மக்களும் பகவானின் ஆச்சரியமான சக்தியையும் இரக்கத்தையும் புகழ்ந்துகொண்டு தங்கள் தங்கள் இல்லத்தை அடைந்தனர். பூனையும் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்து பகவானை மனத்தால் வாழ்த்திக் கொண்டே குட்டிகளுடன் தன் இருப்பிடம் சேர்ந்தது.

இப்படி அனைவரையும் ஆபத்காலத்தில் நினைத்த மாத்திரத்திலேயே காக்கும் சுபாவத்ததை உடையவன் பகவான்: ஆகையால் அவனையே எப்பொழுதும் மூன்று கரணங்களாலேயும் பூஜித்து இன்புறுவோமாக.

ஆபத்ஸகன் எனப்பெயர். தனக்கு ஆபத் நேர்ந்தாலும் அவன் காப்பாற்றிக் கொள்வான். நமக்கு வந்தாலும் ரக்ஷிப்பான். அவனுக்கு ஆபத்காலத்தில் நம்மை ஸகாயாக தோழனாக உடையவன். த்ரௌபதி ப்ரஹ்லாதன் கஜேந்தரன் இவர் மூலமாகத்தானே தனக்கு வரும் அபகீர்தியை ரக்ஷித்துக் கொண்டான். இவர்கள்தானே அவ்பொழுது அவனுக்கு ஏற்படும் ஆபத்தை ரக்ஷித்தார்கள். இல்லாவிடில் அவனுக்கு சரணாதரக்ஷசுத்வம் என்னும் பிறிது பழாய் விடுமல்லவா?

"ஸயக் பவிஷ்யதி தத: சரணாகதானாம் ஸம்ரக்ஷிதா". இது பிருதம் வரதத்வதீயம் என்றார். ஸ்வாமி தேசிகன். துயரறு சுடரடிததொழுது எழு என்மனமே என்றார் ஆழ்வார். அவனுக்கு பூதனை சகடாஸுரன் முதலியவர்களால் வரும் துயர். நமக்கு, கண்ணனுக்கு இவர்களால் என்ன

ஆபத்நேரிடுமோ என்ற துயர். இப்படி ஏற்பட்ட ஆபத்தை - கஷ்டத்தை நீக்குபவன் எனவும் பொருள் கொள்வது உண்டு. காக்கும் இயல்பினன் கண்ணபிரான் என்றார் ஆழ்வாரும்.

ஸ்ரீபராசரபட்டர் காலத்தில் நடந்து விஷயம். ஸ்ரீங்கத்தில் ப்ராகாரம் சிதிலமாய் விட்டது. அப்பொழுது ஒரு சில்பி மேஸ்த்ரி வேலை செய்தான். ஓரிடத்தில் ஒரு பெரிய தவளை ஒன்று மதிள் சுவரில் யானைபோல் பருத்திருந்தது. அதைப்பார்த்தான். இதற்கு எப்படி ஆஹாரம் கிடைக்கும். வழியே இல்லையே. நாம் எவ்வளவு ஆஹாரம் உட்கொண்டாலும் ஸுதலமாவதில்லை என்று யோசித்தார். இதெல்லாம் பகவத் ஸங்கல்பம். அவனல்லவா காக்கும் ஸ்வபாவமுள்ளவன் என்று நினைத்து தானும் அவன் மேல் பாரத்தை வேலை செய்யாமல் சும்மா இருந்து விட்டான். பகவான் என்ன செய்வார். நம்மிடம் பாரத்தை ஒப்படைத்தபடியால் தினமும் அவன் வீட்டுக்கு சாப்பாடு கட்டிக் கொண்டு தலையில் சிம்மாடு வைத்து அதில் ஆஹாரத்தை வைத்து கொடுத்து வந்தான். சில நாட்கள் சென்றன. அவன் இறந்தான். அதிலிருந்து பகவானும் தலையில் சுமந்து போகவில்லை. ஸ்ரீபட்டர கேட்டார்: ரங்கநாதா! இனிமேலாவது சாப்பாடு கட்டி சுமந்து கொண்டு போகும் வேலை நின்றதா என்றார். பகவானும் சிரித்தார். ஆக பகவானின ரக்ஷணப்ரகாரத்ததை எப்படி வர்ணிக்க முடியும். தாய் வயிற்றில் இருக்கும் சிசுவை யார் காப்பாற்றுகிறது. அதற்கு யார் ஆஹாரம் கொடுக்கிறார்கள். பிறந்த பிறகாவது தாய் பால் பருகுகிறது என்று சொல்லலாம். ஆக ரக்ஷணத்துக்காக ஏற்பட்டவன் பகவான்.

*****

# 42. எது உண்மை ?

நாம் வைதிக மதத்தைச் சேர்ந்தவர்கள்; வேதத்தையும் அதன் மூலமாக உடைய ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்களையும் ஒப்புக் கொண்டு அவற்றில் சொல்லும் எல்லா அர்த்தங்களையும் அநுஸரித்து நடக்கிறவர்கள். எனவே நம்முடைய மதம் வைதிக மதம். வேதம் முதலியவற்றில் அநேக தர்மங்கள் கூறப் பெற்றிருக்கின்றன. செய்யக் கூடாதவை எவை என்பதையும் விளக்கிக் கூறியிருக்கின்றன வேதம் முதலியவை.

செய்ய வேண்டியவற்றைச் செய்தும், விட வேண்டியவற்றை விட்டும் எவன் நடக்கிறானோ, அவனே உத்தமன். அஹிம்ஸை என்பது முக்கியமான தர்மம். ஒருவரையும் ஹிம்ஸிக்காமலிருப்பது என்பது இதன் பொருள். ஹிம்ஸை என்பது செய்யக் கூடாதது. இதுபோல் 'உண்மை பேசுவது' என்பதும் ஒரு தர்மம். இது அனைவராலும் முக்கியமாக அநுஷ்டிக்கப்பட வேண்டிய தர்மம்.

வேதங்களில் சொல்லியுள்ள பல தர்மங்களிலும் இது உயர்ந்தது. யாகம், யஜ்ஞம் முதலியவற்றைச் செய்ய எவ்வளவோ யோக்கியதைகள் வேண்டும். பிறப்பு, சக்தி, காலம் முதலியவற்றை இட்டுத்தான் யாகம் முதலியவற்றை செய்ய முடியும். உண்மை பேசுவதற்கு இவ்வளவு வேண்டாம், எப்போது வேண்டுமானாலும் பேசலாம்; யாரும் பேசலாம். பணம் காசு முதலியவற்றுக்கு செலவில்லை. எல்லா வர்ணத்தாரும் பேசலாம். ஆண் பெண் என்ற நியதி இல்லை.

இதை ஒரு நியமமாக வைத்துக் கொண்டு இருப்பவன் சொல்வதெல்லாம் அப்படியே பலிக்கும். உண்மை பேசுபவரில் அரிச்சந்திரனை ஓர் உபமானமாக கூறி கொண்டாடுவதுண்டு.

ஸத்யம் வதத மா (அ) ஸத்யம் ஸத்யம் தர்மஸ் ஸநாதந: I
ஹரிச்சந்த்ரச் சரதி வை திவி ஸத்யேந சந்த்ரவத் II

"உண்மையையே பேசுங்கள். பொய் பேச வேண்டாம். உண்மைதான் உயர்ந்த தர்மம். ஹரிச்சந்திரன் உண்மையையே பேசி வந்தபடியால் ஆகாசத்தில் சந்த்ரன் போல் விளங்குகிறான்" என்பது இதன் பொருள்,

இங்கு, 'அரிச்சந்திரன் ஸத்ய வசனத்தினால் சந்திரன் போல் விளங்குகிறான்' என்றபடியால் மற்றத் தர்மங்களைச் செய்பவர்கள் நக்ஷத்திரங்கள் போல் விளங்குபவர்கள் என்று ஏற்படுகிறது. இதனால் மற்ற தர்மங்களை காட்டிலும் ஸத்யபாஷணம் சாலச் சிறந்தது என்பதும் ஏற்படுகிறது.

ஈச்வரன் மனிதர்களுக்கு வாக் மநஸ் உடல் என்று மூன்று கரணங்களை கொடுத்திருக்கிறான். அதில் வாக்கு, பேசும் சக்தியை யுடையது. நாம் பேசும் ஸமயத்தில் அவ்வாக்கை கொண்டு உண்மையையே உரைத்தால் நம் வாக்குக்கும் பயன் ஏற்படுகிறது; கொடுத்த பகவானுக்கும் ஸந்தோஷம் உண்டாகிறது. உண்மையைப் பேசாமல் பொய்யைப் பேசினால், பகவான் கோபமடைந்து, மறுபிறவியில் அவனை ஊமையாக்கிவிடுகிறான்.

உள்ளதை உள்ளபடி சொல்ல ஒருவிதப் பிரயத்னமும் தேவையில்லை. பொய் பேச வேண்டுமானால்தான், அயலார் உள்ளபடி நினைக்க வேண்டுமே என்று எண்ணி சில

விஷயங்களை சேர்த்து இட்டுக் கட்டி சொல்ல வேண்டும். இம்மாதிரி சொல்வதுதான் சிரமம். உள்ளதை அப்படியே சொல்வதற்கு ஒருவித சிரமமும் இல்லையே.

ஆனால், 'ஸத்யம் (உண்மை) என்பது எது?' என்று அறிவதுதான் சிரமம். இதை நன்கறிந்து அநுஷ்டித்து வந்தால் நாமும் நல்ல கதியை அடையலாம்; பிறரையும் நற்கதி அடைவிக்கலாம்.

'ஸத்யம் என்பது எது?' என்பதை சிறிது ஆராய்வோம். உள்ளதை உள்ளபடி சொல்வதுதானே ஸத்தியம்? இதற்கு படிப்பு வேண்டுமா? ஆராய்ச்சிதான் வேண்டுமா? ஆபால கோபாலம் இது தெரிந்த விஷயம்தானே என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இதை ஆராய்ந்து அறிவதுதான் கஷ்டம்.

பாரத யுத்தத்தில் ஒரு யானைக்கு 'அச்வத்தாமன்' என்ற பெயரிட்டு அதைக் கொன்று தர்மபுத்திரரிடம் 'அச்வத்தாமா ஹத: குஞ்ஜர:' என்று சொல்லச் சொன்னார்கள். தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசையால் அப்படியே சொன்னார். உண்மையில் 'அச்வத்தாமா' என்ற யானை கொல்லப்பட்டது வாஸ்தவம். ஆனாலும் இவர் சொன்ன இந்த சொல் உண்மையாகுமா?

ஒரு கடன்காரன் தன் வீட்டில் நிறைய பணம் வைத்திருக்கிறான். கடன் கொடுத்தவன் இதை தெரிந்து அவனை அணுகிக் கேட்கும்போது, 'என் கையில் பணம் இல்லையே. நான் எப்படி கொடுப்பது?' என்று சொன்னான். இவன் வீட்டில் பணம் இருந்தும் கொடுக்க இஷ்டமில்லாதவனாகவும், பொய் சொல்லவும் விருப்பமில்லாதவனாகவும் தத்ஸமயம் 'கையில்' பணம் இல்லாததை கொண்டு அவ்வாறு இவன் சொன்ன வார்த்தை உண்மையாகுமா?

ஒருவன் தன் ஸ்நேஹிதனிடத்தில் வைர மோதிரத்தை கொடுத்து, 'நான் தேசாந்தரம் சென்று வந்ததும் கொடு' என்று சொல்லியிருந்தான். நண்பன் வைர மோதிரத்தை பெற்றுக் கொண்டு ஒரு தடியிலே வைத்து வெள்ளிப் பூணால் மறைத்து வைத்துக் கொண்டான். சில நாளானதும் தேசாந்தரம் சென்றவன் திரும்பி வந்து கேட்டான். அப்போது வெள்ளிப் பூண் போட்ட தடியை வைத்துக் கொண்டிருந்தவன் ஸ்நேஹபாவத்தை மாற்றிக் கொள்ளாமலே 'இந்த தடியைப் பிடி' என்று சொல்லி சில காரியங்களை செய்து விட்டு, "ஐயோ, நான் உன் மோதிரத்தை முன்பே உன் கையிலேயே கொடுத்துவிட்டேனே:" என்று சொல்லுகிறான். அவனுக்கு அந்த தடிக்குள் மோதிரம் இருப்பது தெரியாது ஆகையால் தடியை அவன் வீட்டிலேயே வைத்துவிட்டு, "என்னை ஏமாற்றிவிட்டாயே" என்று வைதுகொண்டு போகிறான். நீதி ஸ்தலத்தில் விசாரணைக்கு சென்றபோதும் இம்மாதிரியே நடக்கிறது. இங்கு மோதிரத்துடன் கூடிய தடியைக் கொடுத்துவிட்டு, 'நான் மோதிரத்தை கொடுத்துவிட்டேனே' என்று சொல்வது உண்மையாகுமா?

ஸீதாதேவி அசோகவனத்தில் ஆஞ்ஜநேயரிடம் பலவாறு பேசியபிறகும், ராக்ஷஸிகள் கேட்டபோது, "நானும் அந்த குரங்கை கண்டு பயந்தேன். காமரூபியான ராவணன்தான் இந்த வேஷத்தைப் போட்டுக் கொண்டு வந்திருப்பான். உங்களுக்குத் தான்அந்த மர்மம் தெரியும்; எனக்குத் தெரியாது" என்று சொன்னாள். இப்படி ஸீதை சொன்னது உண்மையாகுமா? பொய்யானால் ஸீதை பொய் பேசலாமா?

கைகேயி வரம் கேட்டதன் பயனாக ஸுமந்திரர், ராமனையும் லக்ஷ்மணனையும் சீதையையும் தேரில் ஏற்றிக் கொண்டு, குதிரைகளை விரட்டிக் கொண்டு போகிறார். இதைக் கண்ட தசரதர்

மனம் நொந்து மூர்ச்சையடைந்து மெதுவாக எழுந்திருந்து ஸுமந்திரரை நோக்கி, "ஸுமந்திரா! நீ தேரை ஓட்டாமல் திரும்பிவிடு. ராமன் முதலியவர்களை அழைத்துக் கொண்டு வந்துவிடு. காட்டுக்குப் போக வேண்டாம்" என்று கூச்சலிடுகிறார். இதைக் கேட்ட ஸுமந்திரர், ராமனை நோக்கி, "அரசர் உத்தரவுப்படி திரும்பிவிட வேண்டும்" என்றார். இதைக் கேட்ட ராமன், "ஸுமந்திரா! நீ ஏன் பயப்படுகிறாய்? எங்களைக் காட்டில் விட்டுத் திரும்பித் தசரதரைப் பார்க்கும் போது, 'நான் தேரைத் திருப்பிக் கொண்டு வந்துவிடு என்று சொல்லியும் என் வார்த்தையை பொருட்படுத்தாமல் ஓட்டிக் கொண்டு போய்விட்டாயே' என்று மிரட்டுவார் என்று பயப்படுகிறாயா? அப்படி கேட்டால் 'என் காதில் விழவில்லை' என்று சொல்லிவிடு" என்று சொல்லி, ஸுமந்திரரை தேரோட்டும்படி செய்து விட்டான். இங்கே, தசரதனிடம் 'காதில் விழவில்லை' என்று ஸுமந்திரரைச் சொல்லும்படி செய்தான். ஸுமந்திரர் அவ்வாறு தசரதரிடம் சொன்னால் அந்த சொல் உண்மையாகுமா? இவ்வாறு ராமன் ஸுமந்திரரைச் சொல்லச் சொன்னதுதான் நியாயமாகுமா?

ஒருவன் கையில் கத்தியை எடுத்துக் கொண்டு பசுவைக் கொல்ல, பசுவின் பின் தொடர்ந்து ஓடினான். அந்தப் பசு பல இடங்களிலும் வேகமாக ஓடி, ஓர் முனிவரின் ஆசிரமத்துக்குள் புகுந்துவிட்டது. முனிவரும் அதைப் பார்த்தார். சிறிது நேரம் ஆனதும் கத்தியை வைத்திருந்தவன் (காதுகன்) அங்கு வந்து, 'இங்கு ஒரு பசு ஓடி வந்ததா?' என்று கேட்டான். முனிவர், "இங்கு ஒரு பசுவும் வரவில்லை, பார்க்கவும் இல்லை" என்று சொன்னார். இங்கு இவருடைய இந்த வார்த்தை உண்மையா? பொய்யா?

வெண்ணையைத் திருடி உட்கொண்ட கண்ணனைத் துரத்திக் கொண்டு வந்தாள் யசோதை. தன் ஆத்திரம் தீர இவனை அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓடி வருகிறாள். மாயாவியான கண்ணன் அவளை காட்டிலும் வேகமாக பயந்து ஓடுகிறான். இவனது மாயையைக் கேட்க வேண்டுமா? மறைந்து மறைந்து கண்ணன் ஓடிவந்து 'ததிபாண்டன்' என்னும் ஓர் தயிர் வியாபாரியை அடைந்தான். தன்னை காக்க கெஞ்சி கூத்தாடினான். அவன் கண்ணனை தயிர்ச்சாலுக்குள் வைத்து மறைத்து, அதன் மேல் உட்கார்ந்துவிட்டான். யசோதை அங்குமிங்கும் தேடி, ததிபாண்டனையும் பார்த்து, "இங்கே கண்ணன் வந்தானா?" என்று கேட்டாள். அவன், "உன் திருட்டு கண்ணன் திருடுவதற்கு எங்கே சென்றிருக்கிறானோ? வெண்ணையையோ பெண்களையோ களவு செய்வதற்கு எங்காவது போயிருப்பான். நாங்கள் ஏமாறுபவர்களல்ல. இங்கு வரவில்லை" என்று சொல்லிவிட்டான். இப்படி இவன் சொன்னது உண்மையா, பொய்யா?

இம்மாதிரி பல விஷயங்கள் உள்ளன. உலகத்திலும் புராணங்களிலும் சில பேச்சுக்கள் உண்மைபோல் தோன்றுகின்றன; சில பொய்போல் தோன்றுகின்றன. அதனால் இதன் மர்மம் அறிவது கஷ்டம். எனவே பெரியோர்கள் 'உண்மை எது' என்பதை ஒரு விதமாக நிஷ்கர்ஷம் செய்திருக்கிறார்கள்.

சில உண்மை போல் தோற்றமளிக்கும்; ஆனால் அவை பொய்யே. சில பொய் போல் தோற்றமளிக்கும்; ஆனால் அவை உண்மையாகிவிடும்.

மக்களுக்கு நன்மையைக் கொடுப்பதாகவும், பிரியமாகவும் எது இருக்கிறதோ அது ஸத்யம். 'ஸத்யம் பூதஹிதம் வாக்யம்' என்றும், 'ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம்' என்றும் சொல்லியிருப்பதனால் இப்படி ஏற்படுகிறது.

இத்துடன் வாக்குக்கும் மனத்துக்கும் 'ஐகரூப்ய' மும் வேண்டும். மனத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு வாக்கை வேறு விதமாக உபயோகப்படுத்தினால் அந்த வார்த்தை உண்மையாகாது. மனத்தில் எதை நினைக்கிறானோ அதையே பேச்சளவில் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் 'ஐகரூப்யம்' உண்டாகும். அப்படிச் சொல்பவன்தான் மகாத்மா. மனத்திலும் வாக்கிலும் உடலிலும் ஏகரூபமாக நடப்பவன் மகாத்மா என்றும், முக்கரணங்களினாலும் மாறி நடப்பவன் துராத்மா என்றும் சொல்லப்படுகிறது.

ஏகரூபமாக நடப்பவன் கபடமாக பேசமாட்டான். கபட வார்த்தையை, 'சலபாஷணம்' என்பர். 'யத் சலேந அநுவித்தம் ந தத் ஸத்யம்' என்று மகரிஷி சொல்லுகிறார். ஆகையால், கபடமற்ற பேச்சும், பிற உயிர்களுக்கு நன்மை தரும் பேச்சும் 'ஸத்யம்' என்று கொள்ளவேண்டும்.

'அச்வத்தாமா ஹத: குஞ்ஜர:' என்ற தர்மபுத்திரர் பேச்சும், 'கையில் பணமில்லை' என்ற கடன்காரன் பேச்சும், தடியைக்கொடுத்து, 'மோதிரத்தை கொடுத்துவிட்டேனே' என்றவன் பேச்சும் கபடத்துடன் வந்த பேச்சானபடியால் (மனத்தில் ஓர் அபிப்ராயத்தை வைத்துக் கொண்டு வாக்கினால் வேறு விதமாக சொன்னபடியால்) இவை உண்மை பேச்சு ஆகா.

ஸீதை 'இந்த குரங்கை நான் அறிய மாட்டேன்' என்று சொன்னதும், 'ஆசிரமத்துக்குள் பசு வரவில்லை' என்ற முனிவரின் பேச்சும், 'கிருஷ்ணன் இங்கு வரவில்லை' என்ற ததிபாண்டன் வார்த்தையும் பொய் போல் தோன்றினாலும் பொய் அல்ல. அவை உண்மை பேச்சுக்கள்தாம் - ஆஞ்சநேயருக்கும் கண்ணனுக்கும் ஹிம்ஸை வராமலிருக்க வேண்டுமென்று ஹிதத்தை நினைத்து பேசினபடியால்.

"பசுமாம்ஸத்தை தின்ன வேண்டுமென்ற எண்ணத்துடன் கத்தியை எடுத்துக் கொண்டு வந்தவனக்கு 'பசு இங்கு இல்லை' என்று சொன்ன வார்த்தை எப்படி ஹிதமாகும்? பசுவுக்குத்தானே அது ஹிதமாகும்?" என்று கேட்கலாம். தத்ஸமயத்தில் அந்த பசுவை தின்று மனோரதம் பூர்ணமானாலும் பிறகு இவனுக்கு அது நரகத்தை கொடுக்கும்; ஆகையால் அப்படி நடக்காமல் இவ்வார்த்தை தடுத்தபடியால் இது அத்யந்த ஹிதமாயிற்று. "யத் பூதஹிதம் அத்யந்தம் தத் ஸத்யம் இதி தாரணா" என்று வியாஸர் கூறினார்.

'என் காதில் விழவில்லை" என்று தசரதரிடம் சொல்லு என்று ராமன் ஸுமந்திரரிடம் சொன்னதும் அதை அநுஸரித்து ஸுமந்திரர் தசரதரிடம் சொன்னதும் நியாயமே.

"தசரதருடைய வரத்தை அநுஸரித்து, அவரை ஸத்ய ஸந்தராக்க நினைத்து, நான் காட்டுக்கு போவது நிச்சயமானபடியால், மறுபடியும் தசரதரிடம் தேரை திருப்பி ஓட்டிக் கொண்டு வந்தாலும் பயனில்லை. அவருக்கு துக்கம் இரண்டு பங்காகுமே தவிர குறையாது. இப்போது நாம் அவ்வளவு தூரம் வந்துவிட்டபடியால் நம் உருவம் மறைந்ததும் அவரது துக்கம் மாறினாலும் மாறிவிடலாம். எனவே அவரது ஹிதத்தை உத்தேசித்து 'என் காதில் விழவில்லை' என்று சொல்லு" என்று சொல்லிவிட்டான் ராமன். ஆகையால் இந்த வாக்கியம் உண்மையிலேயே முடிந்தது.

வாஸத்தவத்தில் கேட்பது என்பது மூன்று வகை. 1, வாயால் கேட்பது. 2, காதால் கேட்பது. 3. சொன்னபடி நடப்பது. நான் தர்மங்களை உபதேசம் செய்தேன். ஆனால் அவன் அதன்படி

கேட்கவில்லை என்றால் இதன் அர்த்தம் என்ன ? நான் சொல்படி நடக்கவில்லை என்பதுதானே பொருள்? "நச்ரோஷயஸீ விநங்க்ஷ்யஸி" என்று அர்ஜுனனிடம் க்ருஷ்ணன் கூறினார். இதன் பொருள் என்ன? இவர் சொல்வதை அர்ஜுனன் காதால் கேட்டுக்கொண்டுதானே உள்ளான்? ஆக நான் சொல்படி செய்யாவிட்டால் என்று அர்த்தம். அதுபோல் ராமன் சுமந்தரனிடம் "நாச்ரௌஷம்" என்று சொன்னதற்கு நீ சொன்னது காதில் விழுந்தது ஆனால் நீ சொற்படி நடக்க மாட்டேன் என்று பொருள் கூறி நிர்வகிக்கலாம். ஸபையில் தீர்மானித்த பிறகு ஏகாந்தத்தில் வேண்டாம் என்றால் அத ஞாயம் இல்லை என அபிப்ராயம் ராமனுக்கு.

அஹிம்ஸையை முக்கியமான தர்மமாக் கொண்டாடும் நாம் யாகம் முதலியவற்றில் விலக்கை காண்கிறோம். பசு ஹிம்ஸை செய்து யாகத்தை பூர்த்தி பண்ணுகிறோம். அது போல் 'ஸத்யம் வத' என்று சொன்ன ஸத்ய தர்மத்துக்கம் விலக்கு உண்டு.

விவாக காலத்திலும், ஸ்த்ரீயுடன் சேரும் காலத்திலும், பிராணாபத்திலும், ஸர்வதனத்துக்கும் அபஹாரம் நேரும் காலத்திலும், பசுவுக்கும் பிராமணர்களுக்கும் ஆபத்து வரும் காலத்திலும் பொய் பேசலாம். இது பாவத்தை கொடுக்காது.

உண்மையில் யாகங்களில் பசுவை கொல்வது ஹிம்ஸையில் சேராது என்று சாஸ்திரம் கூறியிருக்கிறது. அது போல மேலே சொன்ன ஸமயங்களில் ஏற்படும் பேச்சுக்களும் பொய்யில் சேரா; உண்மையானவையே.

இப்படி உண்மை பேசுவதனால் தானும் நல்ல லோகத்தை அடைகிறான்; பிறர்க்கும் நற்கதி கொடுக்கிறான். இதையே தர்மமாக கைக் கொண்டபடியால் இவன் பேசும் பேச்செல்லாம் அர்த்தத்திலும் உண்மையிலேயே முடிகிறது.

ஸ்ரீராமன் ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரம் செய்து, "உனக்கு நான் நற்கதியை கொடுத்தேன்" என்றான். 'இவன் பரமாத்மா; இவனுக்கு கொடுக்க சக்தி உண்டு' என்பது ஒரு புறம் இருக்கட்டும். மனுஷ்ய பாவனையை வைத்து இவன் பேசும் போது இப்படி கூறுகிறார். என்ன காரணம்? இவன் 'உண்மை பேசுவது' என்பதையே கைக் கொண்டவன். இவன் பேச்சு எப்படி பொய்யாகும்? இவன் சொல்வதேல்லாம் பலித்தேதானே ஆகவேண்டும்? சிலர், நடக்க போகும் விஷயத்தை அநுஸரித்து பேசுவர். சிலர் பேச்சை அநுஸரித்து விஷயம் நடக்கும். ஸ்ரீராமன் இரண்டாவது வகையை சேர்ந்தவன். 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்று வால்மீகி இவனை கொண்டாடுகிறார்.

ஓர் அரசனை கொல்வதற்காக பகைவனான அரசனும் அவனது ஸேனையும் ஒடி வந்தனர். பயந்த அரசன் வீதஹவ்யருடைய ஆசிரமத்துக்குள் நுழைந்துவிட்டான். விரோதி அரசன் வீதஹவ்யரைப் பார்த்து, "இங்கு யாராவது அரசன் ஒடிவந்தானா?" என்று கேட்டான். அதற்கு முனிவர், "ந ஹ்யஸ்தி க்ஷத்ரிய: கச்சித் ஸர்வே ஹீமே த்விஜாதய:. இங்கு ஒரு க்ஷத்திரியனும் இல்லை. அனைவரும் பிராம்மணர்களே" என்று கூறிவிட்டார். விரோதி அரசன் சென்றுவிட்டான். ஆசிரமத்துள் நுழைந்து பார்த்தால், பயந்து ஓடி வந்த அரசன் க்ஷத்திரிய அடையாளங்கள் போய் பிராமண அடையாளங்களை பெற்றுவிட்டான். இந்த முனிவரின் வார்த்தை இவ்வுலகிலேயே உண்மையாகிவிட்டது.

ஆகையால், ஸத்ய தர்மத்தை நன்கு அறிந்து அநுஷ்டித்து வந்தால் எல்லாவித மேன்மைகளையும் பெறலாம்.

வஸுதேவர் கம்ஸனிடம் தனது எட்டாவது குழந்தையை கொண்டு கொடுப்பதாக வாக்களித்தார். என்ன செய்தார். க்ருஷ்ண ஜனனமானது. யசோதை வீட்டில் குழந்தையை ஒப்படைத்தார். பெண்தான் பிறந்தது என்றும் பொய் சொன்னார். இங்கு க்ருஷ்ணன் வஸுதேவரிடம் பொய் சொல்லும்படி நியமித்துவிட்டார். பகவானான க்ருஷ்ணனே பொய் பேசச் சொன்னார். இது தர்மமா? அதர்மமா? ஸத்யமா, பொய்யா என்பதை கவனித்துக் கொள்ள வேண்டும். இப்படி பல இடங்கள். ஆகையால் எது பொய் எது மெய் என்பதை ஆராய்ந்து கொள்ளவேண்டும்.

*****

# 43. ஸம்பத்தும் விபத்தும்

உலகத்தில் ஆபத்து ஸம்பத்து என்று சொல்லும் வழக்கம் உண்டு. தோட்டங்கள், மாளிகைகள், நிலங்கள் முதலிய செல்வங்களைப் பெற்றவனைப் பெரிய ஸம்பன்னன் என்று சொல்லுவார்கள். எல்லா விதமான சௌகரியங்களையும் பெற்று மிக்க மகிழ்ச்சியுடன் இருக்கும் அவனை அதிருஷ்டசாலி என்றும், நல்ல ஐச்வரியத்தைப் பெற்ற மிக்க ஸம்பன்னன் என்றும் உலகத்தோர் உரைப்பதுண்டு. சாப்பிடுவதற்கு ஒரு சௌகரியமும் இல்லாமல் திண்டாடித் தெருவில் திரிகிறவனை மிகவும் துரதிருஷ்டசாலி என்றும் மகாதரித்ரன் என்றும் சொல்லுவதையும் கேட்டிருக்கிறோம். இந்த மனிதன் விபத்துக்கு ஆளானவன். ஸம்பத்து விபத்து என்ற இரண்டும் ஒவ்வொருவனுக்கும் உண்டு. ஒரு சமயம் மிகுந்த ஐசுவரியத்துடன் வாழ்கிறவன் மற்றொரு சமயம் அதிருஷ்டஹீனனாக மிகவும் கவலையோடு இருப்பான். கஷ்டத்துக்கு ஆளான ஒருவன் மற்றொரு சமயத்தில் எல்லாவித ஸம்பத்துக்களையும் பெற்று மிக்க சிறப்புடன் வாழ்வான். மனிதனுக்கு அதிருஷ்டம் என்பது இவன் ஜீவித்திருக்கும் எல்லா நாட்களிலுமே இருக்கும் என்று சொல்ல முடியாது; சக்கரத்தின் அரம் போல் அது கீழும் மேலும் போய்க் கொண்டே இருக்கும்.

நீசைர் கச்சத்யுபரி ச தசா சக்ரநேமிக்ரமேண ।

என்று கவிகள் கூறியுள்ளனர். இதை நாம் அநுபவத்திலும் கண்டிருக்கிறோம். பஞ்ச பாண்டவர்கள் முதலில் மிகுந்த கஷ்டத்துடன் இருந்தவர்களே. பிறகு அவர்களே ராஜ்யத்தில் முடிசூடி விளங்கினார்கள். முதலில் துரியோதனன் நல்ல தசையில் இருந்ததையும் பிறகு அவனுக்கு துர்தசை விளைந்ததையும் கேட்டுத்தானே இருக்கிறோம்? ஆகையால் நல்ல சுகத்துடன் வாழ்ந்து கொண்டு பெரிய பதவியைப் பெற்று அதிருஷ்டசாலியாக இருப்பவன் தாழ்ந்தவர்களைத் திடீரென்று அவமதித்து ஏளனம் செய்யாமல் இருக்க வேண்டும். இப்படி இருப்பவன்தான் உத்தமன்.

சபையில் நியாயத்தைச் சொன்ன விபீஷணனை 'வெளியில் போ' என்று சொல்லிப் புறக்கணித்த இலங்காதிபதியான ராவணனின் கதி என்ன ஆயிற்று? ஆகையால், 'நாம் பணக்காரனாக ஆகிவிட்டோம். நமக்கு யார் நிகர் இந்த நானிலத்தில்?' என்று எண்ணி, ஸாதுக்களை அலட்சியமாக நினைத்து ஏதாவது பேசி பரிபவப்படுத்துவது, யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்வது போலத்தான் முடியும். பகவானுடைய அநுக்ரகத்தினால் நமக்கு கிடைத்துள்ள ஸம்பத்தை நல்ல வழியில் விநியோகப்படுத்தி ஸாதுக்களை உபசரிப்பது மேன்மேலும் ச்ரேயஸ்ஸைக் கொடுக்கும். மகா லக்ஷ்மியின் கடாக்ஷலேசம் எவனிடத்தில் விழுகிறதோ அவன் பெரிய செல்வனாகிறான், எவனிடத்தில் விழவில்லையோ அவன் வறியவனாகிறான். இதை ஸ்ரீகுணரத்நகோசத்தில் ஸ்ரீபராசரபட்டர் மிகவும் அழகாகவும் சமத்காரமாகவும் அருளிச் செய்கிறார். 'ஒருவன் மகாராஜாவாக ஆகிறான். அவன் ஓதநீர் வையகமாண்டு வெண்குடைக்கீழ்ப் பூதேவர்கள் உகக்கும்படி விளங்குகிறான். அவனது தலைக்கு நேராக இருக்கும் வெண்குடையில் எல்லாப் பக்கங்களிலும் மணிகள் கட்டியிருக்கின்றன. அதனால் 'கல் கல்' என்று செவிகளைத் துளைக்கும்படி மணியோசை கேட்கிறது. இப்படிப் பெரிய ஸம்பன்னனாக அவன் விளங்குவதற்கு காரணம் மகாலக்ஷ்மியின் கடாக்ஷவீக்ஷணம்தான். அவனுக்கு எதிரிலேயே பற்களை வரிசையாக காட்டிக் கொண்டு பெருந்தரித்ரன் யாசகத்துக்குக் கையை நீட்டி எதையாவது கேட்டு நிற்கிறானே, அது அந்த மகாலக்ஷ்மியின் கடாக்ஷவீக்ஷணம் இல்லாமையால் ஏற்பட்டது" என்கிறார்.

ஏகோ முக்தாதபத்ரப்ரசயமணிகணாத் காரிமௌலிர் மநுஷ்ய:
த்ர்ப்யத்தந்தாவலஸ்தோ ந கணயதி நதாந் யத் க்ஷணம் க்ஷோணிபாலாந், ।
யஸ் தஸ்மை திஷ்டதேசந்ய: க்ருபணமசரணோ தர்சயந் தந்த பங்க்தீ
தத்தே ஸ்ரீரங்கராஜப்ரணயிநி ! நயநோதஞ்சிதந்யஞ்சிதாப்யாம் ॥

(ஸ்ரீகுணரத்ந கோசம் - 16)

இந்த ஒரே ச்லோகத்தில், பெருஞ் செல்வத்துக்கும் கொடிய வறுமைக்கும் காரணம் மகாலக்ஷ்மியின் கடாக்ஷம் விழுவதும் விழாததுமே என்று தெளிவாகச் சொன்ன இந்த ஆசார்யரின் கருத்து என்னவென்றால், லக்ஷ்மீகடாக்ஷத்தினால் பெருஞ் செல்வத்தைப் பெற்ற ஒருவன்மிக்க ஏழைமையுற்றவர்களை மதிக்காமல் கர்வத்துடன் அவமதித்தால் அவனுக்கே இரண்டாவது தசை ஏற்பட்டுவிடும் என்பதுதான். ஆகையால், பிற்பாடு நமக்கு ஏற்படும் நிலையையும் அநுஸரித்துச் சரியான பாகவதர்களிடத்தில் செல்வத்தை விநியோகித்து வாழ வேண்டும்.

இதுவரையில் உலகத்தில் ஏற்படும் ஸம்பத்தையும் விபத்தையும் பற்றிக் கூறினோம். இனி உள்நுழைந்து ஆராய்ந்து பார்த்தால், பணம் ஐச்வர்யம் வீடு வாசல் முதலியவை ஸம்பத்து அல்ல; உலகத்தில் ஏற்படும் துன்பங்களும் விபத்தல்ல. பின் எது செல்வம் என்றால், எம்பெருமானை எப்போதும் ஸ்மரிப்பதுதான் ஸம்பத்து. அவனை இடைவிடாமல் வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் ஸர்வகாலமும் தியானிப்பது உயர்ந்த செல்வத்தில் சேரும். "ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்". எம்பொருமானுடைய நினைப்புத்தான் அழியாத செல்வம்' என்று ச்ருதியிலும் சொல்லியிருக்கிறது. விபத்து என்பது, பகவானை ஸ்மரிக்காமல் இருப்பதுதான். பகவானை ஒரு கணமும் எவன் நினைக்காமல் இருக்கிறானோ அவனுக்கு அந்தக் கணமே பேராபத்தை விளைவிக்கக் கூடும் க்ஷணம்.

யந் முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே ।
ஸா ஹாநிஸ் தந் மஹத் சித்ரம் ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா ॥

என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆகையால், எந்த க்ஷணம் நாம் பகவானை ஸ்மரிக்கவில்லையோ அந்த க்ஷணமே ஆபத்தைக் கொடுக்கக்கூடியது; சித்தத்துக்குப் பிரமத்தைக் கொடுக்கக் கூடியது; அனர்த்தத்தைக் கொடுக்கக் கூடியது. எல்லாச் செல்வங்களையும் இழந்த க்ஷணம் அது. எனவே, பகவானை ஸ்மரிப்பதுதான் ஸம்பத்து; பகவானை மறப்பதுதான் ஆபத்து.

விபதோ நைவ விபத:, ஸம்பதோ நைவ ஸம்பத: ।
ஹரிஸம்ஸ்மரணம் ஸம்பத், ஹரிவிஸ்மரணம் விபத் ॥

உண்மையில் நாம் கஷ்டப்பட்டுச் ஸம்பாதிக்கும் செல்வமாகிய ஸம்பத்து, ஸம்பத்தில் சேராது; விபத்தில்தான் முடியும். ஸ்ரீஹர்ஷன் என்ற மகாகவி நைஷத காவியத்தில் இதுபற்றி மிகவும் அழகாக சொல்லியிருக்கிறான்:-

பூர்வ புண்யவிபவவ்யயலப்தா;
ஸம்பதோ விபத ஏவ விம்ருஷ்டா: ।
பாத்ரபாணிகமலார்ப்பணமாஸாம்
தாஸு சாந்திகவிதிர் விதித்ருஷ்ட: ॥

"ஒருவன் வீடு வாசல் பணம் ஐச்வர்யம் அதிகாரம் முதலியவற்றைப் பெற்று மிக்க சுகத்துடன் இருக்கிறான் என்றால், அவன் தன்னை மஹா ஸம்பன்னன் என்றும், தனக்கு ஏற்பட்டுள்ள ஸம்பத்துக்கு அளவே இல்லை என்றும் மகிழ்ச்சி கொள்கிறான். இவனது அறியாமையினால் இப்படி நினைக்கிறான். இவனுக்கு அமைந்தது ஸம்பத்து அல்ல; நன்கு ஆராய்ந்து பார்த்தால் அது விபத்துத்தான். ஏனென்றால், இவ்வளவு ஐச்வரியம் இவனுக்கு எதனால் ஏற்பட்டது? பூர்வஜன்மங்களில் இவன் செய்த புண்யங்களே இதற்குக் காரணம். புண்யபலனான பணம் முதலிய ஐச்வர்யம் இவனுக்குக் கிடைத்தவுடனே இவனுடைய புண்யங்கள் அழிந்துவிடுகின்றன. பலன் கொடுக்கும் வரையில்தான் இவன் முன்பு சம்பாதித்த புண்யங்கள் இருக்கும். ஒருவன் சொர்க்கலோகத்தில் சுகத்தை அநுபவிக்கக் கருதி ஒரு வேள்வியைச் செய்தால் அதனால் ஏற்படும் புண்யம் இவன் சொர்க்க லோகம் சென்று சுகத்தை அநுபவிக்கும் வரையில்தான் இருக்கும். சுகத்தை அநுபவித்தவுடன் அதற்குக் காரணமான புண்யம் அழிந்துவிடும். ஒருவன் ஜன்மாந்திரத்தில் பண்ணின பாவங்களினாலோ இந்த ஜன்மத்தில் பண்ணின பாவங்களினாலோ கஷ்டங்களை அநுபவித்தால் அவன் அநுபவித்தபிறகு அவனுடைய பாவங்கள் செலவாகிவிடுகின்றன. அது போலவே, நமக்கு இப்பொழுது கிடைக்கும் செல்வம் முதலியவை பூர்வபுண்ய பலனாக வந்தபடியால் நாம் பண்ணின புண்யத்திற்கு வ்யயம் (நாசம்) ஏற்படுகிறது. நமக்கு ஏற்படும் செல்வசுகத்தைப் பார்த்துக் களிக்கக் காரணமே இல்லை. நாம் பண்ணின புண்யங்களுக்கு அழிவல்லவோ இதனால் ஏற்பட்டது? ஆகையால், நன்கு யோசித்துப் பார்த்தால், நம் புண்ணியங்கள் அழிந்துவிட்டபடியால், அவற்றினால் விளையும் ஸம்பத்து விபத்தில்தான் முடியும்.

முற்காலங்களில் சதுச்சாஸ்திர பண்டிதனாக இருப்பவன் நல்ல விவேகியாக இருந்தால் பிறரிடமிருந்து ஸம்மானத்தை எதிர்பார்க்க மாட்டான். ராஜஸதஸ்ஸுக்குச் செல்லமாட்டான். அங்கே ஸத்காரங்களைப் பெற மாட்டான். பல்லக்கில் இவனை அழைத்து வரவேண்டும் என்று அரசன் நினைத்தால் அதை இவன் நிராகரித்துவிடுவான். 'நாம் கஷ்டப்பட்டு வேதங்களையும் வேதாந்தங்களையும் பெற்றோம். பிரம்மஞானத்தை விசாரம் செய்து அடைந்தோம். இதனால் நமக்குப் பெரிய புண்யம் (பகவானுடைய அநுக்ரகம்) ஏற்பட்டுள்ளது. இந்த அரசன் நம்மை மரியாதையுடன் பல்லக்கில் அழைத்துச் சென்று ஸத்காரங்களைச் செய்தால், நாம் ஸம்பாதித்து வைத்துள்ள புண்யத்தை நாம் இழந்துவிடுவோம்; அவற்றை அரசன் பெறுவான் என்று எண்ணி, இத்தகைய மரியாதைகளை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள் மகான்கள். பெரிய க்ருபணன் மிகவும் சிரமப்பட்டுச் சம்பாதித்த தன் பணத்தை செலவழிக்க எப்படி விரும்பமாட்டானோ அப்படித்தான் வித்வானான மகானும் க்யாதி லாப பூஜைகளுக்கு ஆசைப்பட்டுத் தன் பெருமையை இழக்கும் விஷயத்தில் க்ருபணனாக இருப்பான்.

தண்டகவனத்திலிருந்த ரிஷிகள் ஸ்ரீராமனிடம் சரணாகதி செய்த போது அவர்கள் கூறிய மிகவும் அழகான வாக்கியத்தைக் கவனித்து ரஸிக்க வேண்டும். (ஸ்ரீமத் ராமாயணம் - அரண்யகாண்டம - 1-21) 'ரக்ஷிதவ்யா ஸ்த்வயா வயம் சச்வத் கர்பபூதாஸ் தபோதநா:' என்கிறார்கள். இங்கே, 'தபோதநா:' என்ற சொல்லின் பொருளைச் சுவைத்து அநுபவிக்க வேண்டும். தனிகன் எப்படி தனத்தைச் செலவு செய்ய விரும்பமாட்டானோ அது போலவே மகரிஷிகளும் மிகவும் சிரமப்பட்டுச் சம்பாதித்த செல்வமான தவத்தைச் செலவழிக்க மறுப்பார்கள். ஆகையால் கீழ்ச் சொன்ன வகையில் ஸம்பத்து விபத்தில்தான் முடியும்.

புத்திசாலியான ஸமர்த்த புருஷன், 'இப்படி நம்முடைய பூர்வ புண்யங்கள் அழிந்துவிடுகின்றனவே; இதற்கு என்ன பரிகாரம்?' என்பதை ஆழ்ந்து ஆலோசித்துப் பார்க்க வேண்டும். இதன் சாந்திக்காகச் சாஸ்திரங்களில் சொல்லும் வகையில் இவன் நடந்துகொள்ள வேண்டும். அதாவது இவன் தனக்குக் கிடைத்துள்ள செல்வத்தைத் தக்க பாத்திரத்தில் விநியோகிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மறுபடியும் பூர்வ புண்யங்களுக்குச் சமமாக அதேமாதிரி புண்யங்கள் உண்டாகிவிடும். பூர்வ புண்யங்களின் வ்யயம் இதனால் ஏற்பட்டதாக ஆகாது; அதாவது இவன் தன்னிடத்தில் பூர்வ புண்யத்தினால் உண்டான செல்வங்களைத் தான் அநுபவிப்பதுடன் நில்லாமல், சரியான பாத்திரத்தில் கொடுக்க வேண்டும். நான்கு பேருக்குத் தானம் செய்ய வேண்டும். கொடுக்கும்போது, பெறுகிறவன் உயர்ந்த பாத்திரமா என்பதை யோசிக்க வேண்டும். சில சமயம் 'இவன்தான் உயர்ந்தவன்' என்று எண்ணித் தெரியாத்தனமாக அஸத்பாத்திரத்தில் கொடுத்துவிடுவான். ஸத்பாத்திரத்தை அஸத்பாத்திரம் என்று எண்ணிக் கொடுக்காமல் இருந்து விடுவான். இதனால் இவனுக்கு பாவமே விளையும். எவன் நல்லவன், எவன் தீயவன் என்பதை கவனிப்பது யாருக்கும் எளிதல்ல. இம்மாதிரி சமயங்களில் ஸத்பாத்திரத்தை நிச்சயித்து அவனுக்குத் தானம் செய்வது எப்படி முடியும்? இதையெல்லாம் யோசித்து, மொத்தத்தில் ஒரு நூறு பேருக்கு சில வஸ்துக்களைத் தானம் செய்தால், அவர்களில் ஒருவனாவது நல்லவனாக இருப்பான். ஆகையால், அதனால் நமக்குப் புண்யம் ஏற்படும் என்று எண்ணி பெரியவர்கள் மொத்தத்தில் வைஷம்யம் பார்க்காமல் கொடுப்பார்கள். அதனால் புண்யத்தையும் பெற முடியும். இதுதான் செல்வனின் புண்யம் அழியாமல் இருப்பதற்கு வழி. அரசன் தன் பதல்வனின் அப்த பூர்திக்காக ததியாராதனத்தை ஏற்பாடு செய்தான். அனைவரும் சாப்பிடும் சமயம். அப்த பூர்த்திக்கான குழந்தை தவழ்ந்து வந்து மஹா னஸம் சென்றது. அது சுட சுட இருக்கும் பால் பாயஸத்தை தன்மேல் கொட்டிக்கொண்டது. அந்த சுடுகையினால் மூர்ச்சையடைந்துவிட்டது. இதை மடப்பள்ளிக்காரர்கள் அரசனிடம் விக்ஞாபித்தார்கள். அரசன் மிக புத்திசாலி. இதை தெரியப்படுத்தினால் ததியாராதனம் நின்றுவிடும் என்று எண்ணி தனது மடியில் சிசுவை வைத்துக் கொண்டு போஜனத்துக்கு பிறகு அவர்களிடம் இருந்து ஆசியைப் பெற்றான். ஒவ்வொருவரும் குழந்தைமேல் மந்திராக்ஷதையை சேர்க்கச் சொன்னான் 100 அல்லது 200 சேர்த்த பிறகு ஒரு வைதீக ப்ராஹ்மணன் சேர்க்கும்போது சிசு 'க்வ' 'க்வ' என்று கூச்சலிட்டது. அலறி எழுந்தது. உடனே அந்த ப்ராஹ்மணன் கையை பிடித்து எல்லோரிடமும் சொன்னான் நடந்ததை. அதாவது எவனிடம் எந்த மஹிமை உள்ளது என்பதை எப்படி அறியமுடியும். ஆகையால் பல பேருக்கு தான தர்மங்கள் செய்தால் அதில் ஒருவனிடமாவது நியமம் இருக்கும். அதனால் நன்மை ஏற்படும். தான தர்மாதிகளின் செய்கை ஸபலமாகும் என்று. அதனால்தான் ஸமஷ்டியாக ஸமாராதனம் தானம் முதலியவைகளை செய்வது. ஆக ஸத்பாத்ரத்தை கண்டுபிடிக்க முடியும். எல்லோரும் ஸத்பாத்ரமாக இருந்தாலும் ஒருவனிடம் உத்கர்ஷம் உண்டு. எனவே நம்முடைய ஸம்பத்தை விபத்தென்று கருதி அதற்கு தகுந்தாற்போல் நடந்துகொள்ள வேண்டும்.

1. உலகத்தில் ஏற்படும் சுக துக்கங்கள் ஸம்பத்து விபத்துக்கள்.
2. பகவானை நினைப்பதுதான் ஸம்பத்து; அவனை மறப்பதே விபத்து.
3. உலகத்தில் கிடைக்கும் ஸம்பத்தே விபத்து என்று கருதி, அந்த விபத்துக்குப் பரிகாரமாக ஸத்பாத்திரங்களில் செல்வத்தை விநியோகிக்க வேண்டும்.

பள்ளிக்கூடம் பல இடங்களில் நடை பெறுகிறது. அங்கு ஆசிரியர் பணத்தை வாங்கிக்கொண்டு பசங்களை சிக்ஷிக்கிறார். இது ஆச்சர்யமல்ல. வீடு வீடாகச் சென்று ஒருவன் சிக்ஷிக்கிறான்.

அதுதான் ஆச்சர்யம். யார் அவன் என்றால் பிச்சைக்காரன். இவனுக்கு சம்பளமில்லை. எதை கற்றுக்கொடுக்கிறான் தெரியுமா? ஓ பணக்காரனே! எப்பொழுதும் எல்லா பிறவியிலும் உன்னைப் போல் பணக்காரனாகவே இருக்க வேண்டும. நான் பிறர்க்கு கொடாமல் இருந்தேன். இப்படி எனக்கு நிலை ஏற்பட்டது. என்னைப் போல் நீ ஆகாமல் உன்னைப் போலவே இருக்கவேண்டும் என்று நம்மை சிக்ஷிக்கிறான். இதுதான் ரஹஸ்யம்.

இங்கு "ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்" என்ற பதிகத்தில் சொன்னது என்ன? லௌகீக ஸம்பத்தையும் லௌகீக விபத்தையும் சொல்ல வந்ததல்ல பாசுரம். இவையெல்லாம் நசித்துவிடும். ஆக அழியாத செல்வம் அவனை நினைப்பதுதான். திருநாரணன் தாளை கெட்டியாக பிடித்துக்கொள்வதுதான் உன்னதமான ஸம்பத்து. அதுதான் நமக்கு உய்யும் வழி என்பதை பலபடியால் உபதேசம் செய்கிறார்.

*****

# 44. ஸாயுஜ்யம்

ஒரு மகாநகரம்; அதில் ஒரு மகான் வாழ்ந்து வந்தார். அவர் கல்வி கற்றவர்களில் சிறந்தவர்; ஞானம் அநுஷ்டானம் வைராக்யம் முதலிய நற்குணங்கள் நிறைந்தவர்; வேதங்களை நன்கு ஓதியவர்; வேதாந்த சாஸ்திரத்தைக் கசடறக் கற்றவர். அவரிடம் பல சீடர்கள் வேதாந்த சாஸ்திரத்தை கற்று வந்தனர். அந்த நகரத்திலுள்ள அனைவருமே அவரிடம் சென்று ஸத்விஷயங்களை கேட்டறிந்து அறிவாளிகளாக விளங்கினர்.

பெரிய ஞானி ஒருவர் ஓர் ஊரில் இருந்தால் அவ்வூரில் வியாதி, துர்பிக்ஷம், திருடன் இவர்கள் இருக்க மாட்டார்கள் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. மகான்களுடைய மாகாத்மியத்தினால் இவை அங்கு நடமாடுவதில்லை. அனைவரும் வியாதியற்றவர்களாக அரோக திடகாத்ரர்களாக இருப்பார்கள். மழை பெய்யாமலே இராது. 'நிகாமே நிகாமே ந: பர்ஜந்யோ வர்ஷது' என்ற ரீதியில், நினைக்கும் சமயங்களில் மழை பெய்யும். 'வேதம் ஓதிய அந்தணர்க்கோர் மழை' என்று தமிழர்களும் 'வேத வேதாந்தங்களை அப்யஸித்த மகான்களுக்காகவே மழை பெய்யும்' என்று சொன்னார்கள். திருடனும் இருக்கமாட்டான்.

அவ்வூரில் வசிக்கும் மகான் நல்ல ஞானியானபடியால் திருடியவன் இவன்தான் என்ற ஞானத்ருஷ்டியால் அறிந்து தன்னை கண்டுபிடித்து விடுவார் என்று திருடன் தன் தொழிலையே செய்யமாட்டான். ஆகையால் வியாதியும் துர்பிக்ஷமும் திருடனும் அவ்வூரில் நடமாடுவதில்லை. மேலும், அவர் ஸத்விஷயங்களை நன்கு அறிந்தவரானபடியாலும் பிறருக்கு அடிக்கடி நல் விஷயங்களை உபதேசிப்பவரானபடியாலும் ஞான துர்பிக்ஷமும் அவ்வூரில் இராது. அவருடைய சேர்க்கையால் அவ்வூரிலுள்ள அனைவரும் ஞானவான்களாகவே இருப்பர்.

ஒரு சமயம் அந்த மகான் காலக்ஷேபம் சொல்லும் தறுவாயில், ஒரு சிஷ்யன் அவரிடம் சில சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள சில கேள்விகள் கேட்டான்.

சிஷ்யன், "ஸ்வாமி, தேவரீரிடமிருந்து பல அபூர்வ விஷயங்களை அறிந்து கொண்டேன். ஆயினும் ஒரு விஷயத்தில் ஸம்சயம் இருக்கிறது. அதையும் நிவிருத்தி செய்து வைக்க வேண்டும்; அதாவது சரணாகதி செய்தபிறகு இவன் இசைந்த காலம் வரையில் இங்கு வசித்து பிறகு வைகுண்டத்தை அடைகிறான். அங்கு சென்றதும் பகவானுடன் ஸாயுஜ்யத்தை பெறுவதாக வேதம் கூறுகிறது. 'ஸாயுஜ்யம் ஸமவாப்ய நந்ததி ஸமம் தேநைவ தந்ய: புமாந்' என்று பெரியவர்களும் கூறுகின்றனர். ஸாலோக்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம், ஸார்ஷ்டிதா என்பவை இவனுக்கு உண்டு என்றும் சொல்லுகின்றன ப்ரமாணங்கள். இவற்றை விவரித்து எனக்கு தெளியும்படி கூற வேண்டும்" என்றான்.

ஆசார்யன் - நீ மிகவும் புத்திசாலி; ஸத்விஷயங்களில் ஈடுபடுகிறவன். உனக்கு தெரியும்படி நன்கு விளக்கி சொல்கிறேன், கேள். ப்ரபன்னனான ஒருவன் ஸ்ரீவைகுண்ட லோகத்துக்கு சென்று அங்குள்ள பரமாத்மாவைப் பரிபூர்ணமாக அநுபவிக்கிறான். ச்ரிய:பதியான பரமபுருஷனை ஸர்வ தேசத்திலும் ஸர்வ காலத்திலும் ஸர்வ அவஸ்தைகளிலும் அவனுடைய திருமேனி குணம் விபூதி சேஷ்டிதங்கள் இவற்றுள் ஒன்றிலும் குறையாதபடி அவனை அநுபவித்து ஸர்வவித கைங்கரியங்களையும் செய்கிறான் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. இதைத்தான் மோக்ஷம் என்பர். நீ கேட்ட ஸாலோக்ய ஸாரூப்யாதிகளில் ஸாயுஜ்யம் என்று ஒன்றை கேட்டாயே; அந்த ஸாயுஜ்யம்தான் மோக்ஷம்.

லோகேஷு விஷ்ணோர் நிவஸந்தி கேசித்,
ஸமீபம் ரிச்சந்தி ச கேசித் அந்யே ।
அந்யே து ரூபம் ஸத்ருசம் பஜந்தே
ஸாயுஜ்யம் அந்யே ஸ து மோக்ஷ உக்த: ॥

சிலர் சாலோக்யத்தையே மோக்ஷம் என்பர்; சிலர் ஸாமீப்யத்தை மோக்ஷம் என்பர்; ஸாத்ருச்யம்தான் மோக்ஷம் என்று சிலர் சொல்வர். நன்கு கற்றவர் ஸாயுஜ்யம்தான் மோக்ஷம் என்பர். உண்மையில் ஸாயுஜ்யம்தான் மோக்ஷம் என்று ப்ரமாணம் கூறுகிறது. பகவானைத் தியானம் செய்பவர்களில் சிலர் எம்பெருமானுடைய லோகத்தில் வாஸம் செய்வர். இதுதான் ஸாலோக்யம். ஒரே லோகத்தில் இவர்கள் பகவானுடன் வாஸம் செய்கிறபடியால் இவர்களுக்கும் பகவானுக்கும் ஸாலோக்யம் ஏற்பட்டுவிட்டது. சிலர் எம்பெருமானுக்கு சமீபத்தில் வசிப்பர். இதுதான் ஸாமீப்யம். இவர்களுக்கு பகவானுக்கு சமீபத்தில் வாஸம் ஏற்பட்டுவிட்டபடியால் ஸாமிப்யம் கிடைத்தது. சிலர் பகவானுக்குச் சமமான ரூபத்தை அடைகின்றனர். ஆகையால் இவர்களுக்கு ஸாரூப்யம் ஏற்பட்டது. மற்றும் சிலர் பகவானுடன் ஸமமான போகத்தையே அடைகின்றனர். இதுதான் ஸாயுஜ்யம் என்பது. இதுதான் மோக்ஷம்.

இதை நன்கு தெளிவிக்க ஓர் உதாரணம் காட்டுகிறோம். காஞ்சியில் தேவாதிராஜனுடைய உத்ஸவம் நடைபெறுகிறது. பகவான் அநேக உபசாரங்களுடன் வீதியில் வாகனங்களில் ஸேவை ஸாதிக்கிறார். இதை ஸேவிப்பதற்காக ஒருவர் வெளியூலிருந்து காஞ்சிபுரம் சென்றார். அவருக்கு அப்பொழுது பகவானுடன் ஸாலோக்யம் ஏற்பட்டது. கோயிலுக்கோ வீதியில் எழுந்தருளியிருக்கும் பகவானுக்கு சமீபத்திலே அவர் சென்றதும் அவருக்கு ஸாமீப்யம் வந்துவிட்டது. அவர் பகவானை அநேக ஸ்தோத்திரங்களை சொல்லி கண்ணில் நீர் பெருக ஆனந்தபாஷ்பத்தோடு பரவசராக துதித்தார்.

அங்குள்ள அர்ச்சகர்கள் மாலை, பரிவட்டம், சந்தனம், புஷ்பம் முதலியவற்றை கொடுத்து அவரை உபசரித்தார்கள். பகவான் உடுத்து களைந்த பீதகவாடைகளை அவர் பெற்றபடியால் அவருக்கு ஸாரூப்யம் ஏறபட்டுவிட்டது. பிறகு பகவான் அமுது செய்த பிரசாதம் முதலியவற்றை இவர் பெற்று அங்கேயே புசித்தார். இதனால் இவருக்கு ஸாயுஜ்யம் ஏற்பட்டுவிட்டது. கிருஷ்ணாவதார காலத்தில் ஆயர்பாடியிலுள்ள பையன்களுடன் கிருஷ்ணன் காட்டுக்கு சென்று தயிர்சாதத்தை எல்லோரும் ஒன்று சேர்ந்து புசித்தார்கள் என்பதை ஸ்ரீபாகவதத்தில் கேட்டிருக்கிறோம். இப்படி இவ்விஷயம் நன்கு மனத்தில் பதிவதற்காக காட்டினோமே தவிர, மோக்ஷத்தில் ஏற்படும் ஸமமான போகம் பெறுதல் என்று சொல்லக்கூடிய ஸாயுஜ்யமே உண்மையில் மோக்ஷம் என்று அறிந்துகொள்ள வேண்டும், ஸாயுஜ்யம் என்றால் ஸயுக்கினுடைய தன்மை. ஒரே போக்கியமான பொருளில் கூட இருந்து எவன் அநுபவிக்கிறானோ அவனை ஸயுக் என்பர்.

'ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா' என்பது வேதம். ஸர்வவித போகங்களையும் ப்ரஹ்மத்துடன் இந்த முக்தன் என்ற ஜீவன் அநுபவிக்கிறான் என்பது இதன் பொருள். பயஸா ஸஹ ஓதநம் புங்க்தே - பாலுடன் சாதத்தை ஒருவன் சாப்பிடுகிறான் என்றால் இங்கு சாப்பிடுபவன் ஒருவன். இவன் சாப்பிடும் பொருள் இரண்டு; பால், பிரசாதம், வெறும் பிரசாதத்தை மாத்திரம் இவன் சாப்பிடவில்லை. பாலுடன் கலந்த பிரசாதத்தை சாப்பிடுகிறான் என்று சொன்னதனால் போக்தா ஒருவன், போக்யம் இரண்டு என்று ஏற்படுகிறது.

'ஸுஹ்ருதா ஸஹ ஓதநம் புங்க்தே - சிநேகிதனுடன் பிரசாதத்தை சாப்பிடுகிறான் என்றால், இங்கு சாப்பிடுகிறவர் இருவர்: தானும் சிநேகிதனும். சாப்பிடப்படும் பொருள் ஓதனம் ஒன்றுதான். முன்பு சொன்ன உதாரணத்தில் போக்யம் இரண்டானபடியால் அதற்கு போக்ய ஸாஹித்யம் என்று பெயர். இரண்டாவது உதாரணத்தில் போக்தா இருவரானபடியால் போக்த்ரு ஸாஹித்யம் என்று அதற்கு பெயர். ப்ரஹ்மத்துடன் இந்த ஜீவாத்மா எல்லாவிதமான போகங்களையும் அநுபவிக்கிறான் என்று வேதத்தில் கூறியிருக்கிறபடியால், போக்த்ருஸாஹித்யம் இங்கு சொல்லப்பட்டதாக கொள்ள வேண்டும். எல்லாவிதமான போகங்களையும் பரமாத்மாவும் அநுபவிக்கிறான், முக்தனும் அநுபவிக்கிறான் என்ற திரண்ட பொருள் ஏற்படுகிறது. ஆகவே ப்ரஹ்மத்திற்கு சமமான போகத்தை இவன் அடைகிறபடியால் இவன் ஸயுக் என்று சொல்லப்படுகிறான். அப்படிப்பட்டவனின் தன்மைதான் ஸாயுஜ்யம். ஆக ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் இந்த நான்கில் ஸாயுஜ்யம்தான் மோக்ஷம்.

சிஷ்யன் - ஸ்வாமி, ஸாயுஜ்யம் என்பதை உதாரணத்தோடு நன்கு விளக்கி காட்டியாயிற்று. நன்றாக தெரிந்து கொண்டேன். இதைத்தான் மோக்ஷம் என்றும் தேவரீர் சொல்லியாயிற்று. அப்படியானால் ஸார்ஷ்டிதா என்று புதிதாக ஒன்று சொல்லப்படுகிறதே; அது ஸாயுஜ்யத்தைக் காட்டிலும் வேறாகத்தானே இருக்க வேண்டும்? ஸாயுஜ்யம் என்ற மோக்ஷத்தைக் காட்டிலும் அது இன்னும் மேற்பட்டதா? அதை விவரித்து சொல்ல வேண்டும்.

ஆசார்யன் - நீ கேட்கும் கேள்வி உயர்ந்தது. இதற்கு விடை அவ்வளவு சுலபமாக எல்லோராலும் சொல்ல முடியாது. ஸ்வாமி தேசிகன் ஒருவர்தாம் விடையளிக்க முடியும். அவர் அருளிச் செய்த ச்லோகம் இதோ -

> ஸாயுஜ்யம் உபயோரத்ர போக்தவ்யஸ்ய அவிசிஷ்டதா I
> ஸார்ஷ்டிதா தத்ர போகஸ்ய தாரதம்ய விஹிநதா II

மோக்ஷத்தில் ஈச்வரன், முக்தன் என்ற இரண்டு பேருமே அநுபவிக்கிறார்கள் என்று சொன்னோமே, அதில் ஈச்வரன் சில பொருள்களை அநுபவிக்கிறான், முக்தன் வேறு சில பொருள்களை அநுபவிக்கிறான் என்பது இல்லை. பகவான் எதை எதை அநுபவிக்கிறானோ அவற்றை இவனும் அநுபவிக்கிறான். அநுபவிக்கப் படும் பொருளில் வேறுபாடு இல்லை. இதைத்தான் ஸாயுஜ்யம் என்ற சொல்வது. ஆனால் எல்லாப் பொருளையும் இருவரும் அநுபவித்தாலும் ஈச்வரன் அநுபவிப்பது அதிகமாகவும் முக்தன் அநுபவிப்பது கொஞ்சமாகவும் இருக்குமோ என்றால் அதுவும் இல்லை. இதை சொல்வதற்குத்தான் 'ஸார்ஷ்டிதா' என்று ச்ருதி ஓதுகிறது. அதாவது பொருளில் எப்படி வேறுபாடு இல்லையோ அதே மாதிரி அந்த பொருளின் அநுபவத்திலும் ஏற்ற சுருக்கம் இல்லை. பகவான் எந்த எந்த பொருளை எப்படி எப்படி அநுபவிக்கிறானோ அப்படியே அந்த பொருளை இவனும் அநுபவிக்கிறான். அநுபவ பிரகாரத்திலும் காலத்திலும் வேறுபாடு இல்லை; இதுதான் ஸார்ஷ்டிதா என்பது.

சிஷ்யன் - ஸ்வாமிந், ஸாயுஜ்யம், ஸார்ஷ்டிதா என்று வேதத்தில் கூறியிருப்பதன் பொருளை அறிந்துகொண்டேன். என் ஸம்சயம் நிவிருத்தியாயிற்று. மிகவும் தன்யனானேன். ப்ரணாமத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்ச பாண்டவர்கள் த்ரௌபதியுடன் ஸ்வர்கம் செல்லுகின்றனர். போகும்போது முதலில் த்ரௌபதி கீழே விழுந்துபிட்டாள். தர்மபுத்ரரிடம் நகுலன் கேட்கிறான். இதற்கு என்ன காரணம்

என்று. அவர் சொல்லும் பதில்: நாம் ஐவரும் கணவராக இருந்தும் நம்முடன் சேரும்போது போகத்தை அதிகம் கொடுக்கவில்லை. அர்ஜுனன் முறையில் அதிக ஆவேசத்துடன் போகத்தை புணர்ந்தான். அதுதான் என்றார். ஆக நம்முடன் ஸாயுஜ்யம் போல் அர்ஜுனனிடம் ஸார்ஷ்டிதா.

ஒரு பெண் ஒரு புருஷனுடன் கலவியுறியும்போது கபடத்துடன் அநுபவிக்கிறாள். அவளே தனக்கு ப்ரியமான புருஷன் கிடைக்கும்போது கபடமில்லாமல் இருக்கிறாள் என்றால் இதில் எவ்வளவோ வித்யாஸப்படுகிறது அல்லவா? "யமேவ ஏஷ: வ்ருணுதே தேவைப்ய: தஸ் யெஷ ஆத்மா. விவ்ருணேதே தனும் ஸ்வாம்" என்றது ச்ருதி. இதை தான் நன்றாக ஆராய வேண்டும். அதிக காதல் கொண்ட புருஷனுடன் சேரும் பெண் தனது உடலை முழுவதும் அநுபவிப்பதற்கு இடம் கொடுப்பாள். அது எப்படியோ அப்படியே பகவானும் தனது எல்லா பொருளையும் விவரித்துக் காட்டி அவனை அநுபவிக்கும்படி செய்வான். தனது பொருளில் ஒன்றும் குறைவில்லாமலும் அநுபவிக்கப்படும் பொருள்களில் ஏற்றச் சறுக்கம் இல்லாமலும் பரஸ்பரம் வேறுபாடு இல்லாமலும் அநுபவிக்கச்செய்கிறான். இதுதான் ஸார்ஷ்டிதா என்று கூறுப்படுகிறது.

நாம் நமது காதலியுடன் போகம் புரியும்போது சில சமயம் ஸாயுஜயத்தோடு நிற்கும். சில நேரத்தில் ஸார்ஷ்டிதையும் ஏற்படும். இது ப்ரஸித்தம்.

பாலர்களுடன் ஸ்ரீக்ருஷ்ணன் தயிர் சாதம் சாப்பிடுகிற அழகே அழகு. ப்ரஸாதத்தை கைகளில் வைத்துக் கொண்டும், விரல்களின் சந்தில் ஊறுகாயை வைத்துக் கொண்டும் புசித்தார்கள். பையனின் விரல்களில் உள்ள ஊறுகாயை வாயால் கடித்தும் அவர் கையிலுள்ள ப்ரஸாதத்தை வாயால் கவ்வி சாப்பிடுவதும் தன் கையில் உள்ள ஊறுகாய் ப்ரஸாதம் இவைகளை அவர்களும் கவ்வி சாப்பிடுவதாகவும் இருந்தது அந்த நிலை. இதுதானே ஸார்ஷ்டிதா? இதைக் கண்டுதானே ப்ரஹ்மா ஆஸுயைக் கொண்டார்.

மேலும் ஸ்ரீபாகவதத்தில் எது ஸாரமான பாகம் என்று கேட்க "ராஸக்ரீடைதான் ஸாரம்". ராஸக்ரீடை ஸாரக்ரீடை ஒரு கண்ணன் இரண்டு பெண்கள். இரண்டு பெண்கள் ஒரு கண்ணன் என்று இவ்வாறு கை கோத்துக் கொண்டு விளையாடினார்கள். அப்பொழுது கண்ணன் வாயில் இருக்கும் வெற்றிலை பாக்கு முதலியவைகளை அவர்கள் அவன் வாயோடு சேர்த்து சும்பனிபீர்கமாக வாயிலிருந்து பிடுங்கி ஒருவள் புசித்தாள். மற்றவர் வேறு விதமாக. இவனும் அப்படியே செய்தான். இவ்வாறு பலப்ரகாரமாக விளையாட்டை நடத்தினான். இது முக்த தசையைக் காட்டிலும் அதிகமாக விளங்கிற்று என்றார் சுகர். அதனால்தான் ராஸக்ரீடை ஸாரக்ரீடை ஆயிற்று.

*****

# 45. மூன்று மனிதர்கள்

உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் இருக்கின்றனர். அவர்களைப்பற்றி இங்கு நாம் சொல்லவில்லை. விலக்ஷணமான மனிதர்கள் மூன்று பேர் இருக்கின்றனர். அவர்களைப் பற்றித் தான் நாம் இங்கு வரைகிறோம். 'பொன் விளைவது பூமியிலே' என்று ஒரு பழமோழி கூறுவதுண்டு. உண்மையில் பூமியில் பொன் விளைகிறது. இது வாஸ்தவம். சுரங்கம் முதலிய இடங்களில் ஸுவர்ணத்தைப் பல சிரமங்களை கொண்டு ஆராய்ந்து எடுக்கிறார்கள். இது ஒரு விதம். மற்றொரு விதம், பொன்னைப் பூமியிலிருந்து எடுக்கிறார்கள். அது எப்படி என்றால் பழவர்க்கங்களைக் கொடுக்கும் தோட்டங்களை வைப்பது, தானியங்களை கொடுக்கும் நிலங்களை பயிர் செய்வது, வியாபாரங்களை செய்வது இப்படி. இவற்றின் மூலமாக பணத்தை சம்பாதித்து சுவர்ணத்தை வாங்குவது. இம்மாதிரி நேராகவும் பூமியிலிருந்து தங்கத்தை பெறலாம். பரம்பரையாகவும் பூமியிலிருந்து தங்கத்தை பெறலாம். இப்படிப்பட்ட பூமியைப் பெற்று மிக்க மகிழ்ச்சியுடன் பணக்காரராக இருந்து வாழ்கிறவர்கள் மூன்று மனிதர்கள்; அவர்கள் யார் என்றால் - சூரன், க்ருதவித்யன், அறிவாளியான சேவகன். இவர்களைத்தான் இங்கு மூன்று மனிதர்கள் என்று குறித்தோம்.

> ஸுவர்ணபுஷ்பாம் ப்ருதிவீம் சிந்வந்தி புருஷாஸ்த்ரய: ।
> சூரச்ச க்ருதவித்யச்ச யச்ச ஜாநாதி ஸேவிதும் ॥

(மகா பாரதம் - உத்யோக பர்வதம்)

பூமியில் பிறப்பவன் எவனுமே தான் பணக்காரனாக இருக்க வேண்டும், அதற்கு தனத்தை நிறைய சம்பாதிக்க வேண்டும், அதற்கு என்ன வழி செய்யலாம், எல்லோருக்கும் மேலாக மேன்மையுடன் எப்படி விளங்கலாம் என்று ஆலோசிப்பது உண்டு. ஒரு பள்ளியில் பையனை வித்யாப்யாஸம் செய்யச் சேர்க்கும்போதே அவன் பெற்றோர் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? இவன் நன்றாகப் படிக்க வேண்டும்; நல்ல உத்யோகம் பார்க்க வேண்டும்; பணத்தை நிறைய சம்பாதித்து மேன்மையுடன் இருக்க வேண்டும்; நாமும் அதனால் மகிழ வேண்டும் என்று. இது எல்லோருக்கும் உள்ள குணம். இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் பார்த்துக் கொள்ளலாம். ஒரு வியாபாரத்தில் ஈடுபடுபவன் இப்படியல்லவா நினைக்கிறான்? வியாதிகளை நீக்க ஏற்பட்டிருக்கும் மருந்தை வியாபாரம் செய்பவன் என்ன நினைக்கிறான்? நன்றாக நீங்கள் யோசித்துப் பாருங்கள். 'நமக்கு வியாபாரம் நன்றாக நடக்க வேண்டும்; பணம் நிறைய வேண்டும்' என்றுதானே? இப்படி நினைப்பவனுடைய அபிப்பிராயம் எப்படி முடிகிறது? எல்லோரும் வியாதியால் துன்புறவேண்டும் என்றுதானே? அப்போதுதானே இவனது வியாபாரம் வலுக்கும்? வைத்யர்கள் நன்றாக பணத்தை சம்பாதித்து மாடியைக் கட்டிக்கொண்டு இருக்க வேண்டும் என்று நினைத்தால், அந்த நினைவு எதில் முடிகிறது? எல்லோரும் வியாதியை எப்போதும் பெற வேண்டும் என்பதில்தான். அப்போதுதான் இவர்களது வியாபாரம் ஜீவிக்கும். இப்படி ஒவ்வொரு தொழிலிலும் இதை நன்கு ஆலோசித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இப்படி ஒவ்வொருவனும் தங்கத்தை புஷ்பிக்கக் கூடிய பூமியை பெற்று பணக்காரனாக இருந்து வாழ வேண்டும் என்று நினைத்தாலும் அது எல்லோருக்கும் சுலபமாக முடிவதில்லை; மூன்று மனிதர்களுக்கே அது சுலபமாக முடிகிறது. அவர்களில், சூரன் ஒருவன். அசகாயசூரன் என்று ஒருவனைப் புகழ்கிறோமே அவன்; அதாவது எந்த காரியத்தை நினைத்தாலும் அதில் பல தடங்கல்கள் ஏற்பட்டாலும் அவற்றை நீக்கி, பின்வாங்காமல் காரியத்தைச் செய்து முடிக்கிறானே

அவன்தான் சூரன். இப்படிப்பட்டவனுக்கு எல்லாம் சுலபமாகத்தானே முடியும்? சிலர் வியாபாரம் செய்து பெரிய மனிதராகவேண்டும் என்று நினைப்பார்கள். அவர்கள் அந்த காரியங்களை செய்யும் போது மகத்தான இடையூறுகள் பல ஏற்பட்டுவிடும். சரி, இனி நாம் என்ன செய்வது என்று பின்வாங்கிவிடுவார்கள். பெரும்பாலும் நற்காரியங்களை செய்வதற்கு பல தடங்கல்கள் கட்டாயம் ஏற்படும். எப்படிப்பட்ட மகான்களாக இருந்தாலும் இவை நேரிடத்தான் செய்யும். கெட்ட காரியங்களைச் செய்பவர்களுக்கு தடங்கலே ஏற்படாது. இது கண்கூடு. இராவணன் சீதையை அபகரித்துக் கொண்டு போனபோது என்ன தடங்கல் ஏற்பட்டது? நடுவில் தடங்கலாக வந்த ஜடாயுவும் மாண்டுவிட்டார். ராமனின் பட்டாபிஷேகத்துக்கு எத்தனை விக்னங்கள் ஏற்பட்டன !

ச்ரேயாம்ஸி பஹூவிக்நாநி பவந்தி மஹதாமபி I
அச்ரேயஸி ப்ரவ்ருத்தஸ்ய குதோ யாந்தி விகாதகா: II

கொடியவன் ஒருவன், பெருந்துஷ்டன், எப்போதும் தப்புக் காரியங்களையே செய்பவன், சாஸ்திரவிருத்தமான வேலைகளையே செய்கிறவன், திருடுபவன், கள் குடிப்பவன் இப்படிப்பட்டவனுக்கு சீக்கிரத்தில் தண்டனை ஏற்படுவதில்லை. இவன் செய்த பாவகர்மங்களுக்கு உடனே பெரும் சிக்ஷையை கொடுக்க வேண்டும் பகவான். ஆனாலும் இந்த பாவியின் பாபகர்மாவிற்கு பலன் உடனே கிடைப்பதில்லை. அது மாத்திரம் அல்ல. காலமும் அவன் செய்யும் வேலைக்கு அநுகூலமாகவே ஒத்துப் போகும்.

நது ஸத்யோ அவிநீதஸ்ய த்ருச்யதே கர்மண: பலம் I
காலோப்யங்கீபவத்யத்ர ஸஸ்யாநாமிவ பக்தயே II

என்றார் வால்மீகி மகரிஷி. இராவணன் செய்த சீதாபஹாரத்தை காட்டிலும் கொடிய பாவம் ஏதாவது உண்டா? அவனுக்கு வழியில் யமன் போல் வந்த ஜடாயுவும் மாண்டுவிட்டார் அல்லவா? அவன் செய்த தப்புக் காரியத்திற்கு காலம் அநுகூலமாகவே இருந்தது. ஆகையால் அஸத்காரியங்களில் விக்னம் ஏற்படாது; ஸத்காரியங்களில் அது ஏற்பட்டே தீரும். இம்மாதிரி சமயங்களில், 'விக்னம் வந்துவிட்டதே. நம்மால் ஏதும் செய்ய முடியாது' என்று பின்வாங்குவர் சிலர். இவர்கள் பலமற்றவர்கள், திறனற்றவர்கள், வழி தெரியாதவர்கள். சூரனாக இருப்பவன் எப்படிப்பட்ட விக்னங்கள் வந்தபோதிலும் அவற்றை பொருட்படுத்தாமல், தான் ஆரம்பித்த காரியத்தை சாதித்தே தீருவான். இவனிடத்தில் தைரியலக்ஷ்மி இருக்கிறபடியால் பூமியைப் பெற்று அதன் மூலமாக பணத்தை திரட்டிவிடுவான்.

இரண்டாவது மனிதன் க்ருதவித்யன் என்பவன்; கல்விகளைப் பயின்று அவற்றின்மூலம் வித்வான் எனப் பெயர் பெற்றவன். 'வித்வாந் ஸர்வத்ர பூஜ்யதே' என்ற ரீதியில், இவன் சென்ற இடமெல்லாம் கௌரவத்துடன் வாழ்வான். முற்காலங்களில் வித்வான்களுக்கே பெருமதிப்பைக் கொடுத்து வந்தார்கள். அந்த காலத்தில் எல்லோரும் பெரும்பாலாகப் படித்தவர்களானபடியால் வித்வான்களின் பரிச்ரமத்தை அறிந்திருந்தார்கள்; ஆகையால் தங்களை போல் பல சிரமங்களையும் பொருட்படுத்தாமல் இரவு பகல் தூக்கமின்றியே பசிவேளையிலும் கிடைத்தால் சாப்பிடுவது, இல்லையெனில் பட்டினி கிடப்பது என்ற ரீதியில் இருந்து கல்விகளைப் பெற்றவர்கள் என்று எண்ணி, கௌரவப்படுத்துவது வழக்கம்,

வித்வாநேவ விஜாநாதி வித்வஜ்ஜநபரிச்ரமம் I
நஹி வந்த்யா விஜாநாதி குர்வீம் ப்ரஸவவேதநாம் II

(அப்பய்ய தீக்ஷிதர் - குவலயானந்த:)

என்றபடி, உண்மையான வித்வான்களுக்கன்றோ வித்வான்களின் பரிச்ரமத்தை அறிய முடியும்? மலடி எப்படிப் பிறருடைய ப்ரசவ வேதனையை அறிவாள்? ப்ரசவ வேதனை எப்படி இருக்கும் என்று அவளைக் கேட்டால் அவளால் யாது சொல்ல முடியும்? அதுபோல, அவித்வான்களுக்கு வித்வானின் பரிச்ரமம் எப்படி தெரியும்? ஆகையால் அரைகுறையாக படித்தவர்களுக்கோ, படிப்பே இல்லாமல் ஏதோ ஒரு அதிருஷ்டவசத்தால் நிறைய பணம் சம்பாதித்தவர்களுக்கோ, வித்வான்களின் பெருமையும் வித்யை கற்றவர்களின் பெருமையும் தெரியா; ஆகையால் அவர்கள் வித்வான்களை வெகுமதிக்க மாட்டார்கள். இக்காலத்தில் இது சகஜம். 'துஷ்ட: ஸர்வத்ர பூஜ்யதே' என்று படிக்க வேண்டும். போஜாராஜாவின் ஸபையில் எத்தனையோ வித்வான்கள் வெகுமதிக்கப்பட்டு வாழந்தார்கள் என்பது உலகப் பிரசித்தம்.

உயர்ந்த கல்விகளையும் வேதநூல்களையும் வேதாந்தங்களையும் அவற்றின் உள்ளர்த்தத்தை ஆசிரியர்கள் மூலமாக உபதேசம் பெற்று ஆராய்ந்து பார்த்த பெரும் வித்வான்கள் சாதாரண மனிதர்களல்லர்; மகா பாகவதர்கள், மகரிஷிகள் என்றே இவர்களைச் சொல்ல வேண்டும். இவர்களின் வாக்கிலிருந்து வரும் வார்த்தைகளெல்லாம் சாதாரண வார்த்தைகள் அல்ல. இவர்கள் சொல்லுவது பெரும்பாலும் பலித்துவிடும். சாதாரணமாக உலகத்திலுள்ள ஸாதுக்கள் சொல்லும் வார்த்தை, மேல் ஏற்படக்கூடிய பொருளை அநுசரித்து இருக்கும். இவர்களுடை வார்த்தையை அநுசரித்து மேற்பயன் (பொருள்) பலிக்கும். இவர்கள் வாக்கிலிருந்து எது வந்தாலும் அப்படியே அது பலித்துவிடும்.

லௌகிகாநாம் ஹி ஸாதூநாம் அர்த்தம் வாக் அநுவர்த்ததே I
ரிஷீணாம் புநராத்யாநாம் வாசம் அர்த்தோநுதாவதி II

(பவபூதி - உத்தர ராம சரிதம்)

என்றபடி, இந்த வித்வான்களுடைய வாக்கு ஏற்பட்டபடி பொருள் அமையும். இப்படிப்பட்ட அருள்வாக்கை உடையவர்களானபடியால் இவர்கள் எங்கே சென்றாலும் எல்லோராலும் பூஜிக்கப் பெறுவார்கள். இவர்கள் மனம் வைத்தால் போற்றவும் போற்றுவார்கள்; வேறு விதமாக மனம் இருந்தால் தூற்றவும் தூற்றுவார்கள். ஆகையால் பயந்தும் பக்தியுடனும் இவர்களை எல்லோரும் பூஜிப்பார்கள் என்பதும் ஒரு ரகசியம்.

மூன்றாவது மனிதன் - "யஸ்ச ஜாநாதி ஸேவிதும்' என்று சொல்லப்பட்டவன்; நிபுணசேவகன் அவன். யஜமானனிடத்தில் வேலை செய்யும் சேவகன் அதிஸமர்த்தனாக இருக்க வேண்டும். எந்த எந்த சமயத்தில் யஜமானனிடத்தில் எப்படி எப்படி நடந்து கொண்டால் நம்மேல் யஜமானன் மிக்க திருப்தியடைந்து எல்லா சௌகரியங்களையும் செய்து வைப்பான் என்று அறிந்து, அம்மாதிரி நடக்க தெரிந்து கொள்ள வேண்டும் சேவகன். இவன்தான் எல்லோரைக்காட்டிலும் மேம்பட்டவன். ஒரு யஜமானனிடத்தில் நூறு சேவகர்கள் இருந்தார்களேயானால் அவர்கள் எல்லாரிடத்திலும் யஜமானன் ஒரே விதமான திருப்தியுடன் இருப்பான் என்று சொல்ல முடியாது. அவரவர் தங்கள் தங்கள் காரியங்களைப் பிழையின்றி சரிவர செய்து வந்தாலும் சில சேவகர்களிடத்தில்தான் யஜமானன் அதிக திருப்தியை காட்டுவான். இதற்கு காரணம் யாதேனில் இவர்கள் வேலையை சரிவர செய்வது மட்டுமல்ல, யஜமானன் எந்த எந்த காரியத்தை

செய்தாலும் அதுதான் சரி, நீங்கள் செய்வதுதான் நியாயம், மற்றவர்கள் செய்வது அநீதியில் சேர்ந்தது என்று அந்த யஜமானன் திருப்தியடைவதற்காக சில மதுரமான பேச்சுக்களை பேசி மயக்குகிறானே, இது தான் அவன் திருப்தியடைகிற காரணமாகிறது. 'நம்மை ஏமாற்றி, நம்மிடமுள்ள பணத்தை பறித்துக் கொள்வதற்காக, நம் மனம் திருப்திபெற இவன் பேசுகிறான்' என்பதை யஜமானன் அறிந்து கொள்வதில்லை.

ஸுலபா: புருஷா ராஜந் ஸததம் ப்ரியவாதின: ।
அப்ரியஸ்ய ச பத்யஸ்ய வக்தா ச்ரோதா ச துர்லப: ॥
(ஸ்ரீமத் ராமாயணம் - அரண்யகாண்டம் 37)

என்றபடி, சிரிக்க சிரிக்க சொல்லி யஜமானனைத் திருப்தியடைய செயதுவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் சுலபமாக எங்கும் கிடைக்கலாம். இவர்கள் யஜமானனின் பணத்தை பறிக்க ஆவல் கொண்டவர்கள்; ஆகையால் யஜமானன் அநீதி செய்தாலும் 'நீ செய்ததுதான் சரி' என்று சொல்லி அவனை மயக்கிவிடுவார்கள். இப்படி நடப்பவன்தான் நிபுணசேவகன். இவனிடத்தில் யஜமானன் கையாளாக இருந்து விடுகிறான். இவன் இருக்குமிடம் தேடி யஜமானன் தன்னிடமுள்ள பணத்தை கொடுத்து வருவான். நம்மிடமுள்ள பணத்தை அபகரிக்க இவன் இம்மாதிரி சூழ்ச்சிகளை செய்கிறான் என்பதை யஜமானன் எப்படி அறிவான்? இவன்தான் தனத்தினால் கர்வம் கொண்டுள்ளானே! ஆக இப்படிப்பட்ட சேவகன் யஜமானனிடமிருந்து சம்பாதித்து பூமியிலிருந்து சுவர்ணங்களை திரட்டிவிடுவான்.

மேற்கூறிய மூன்று மனிதர்களில் இவன்தான் பணத்தை திரட்டுவதில் அதிஸமர்த்தன். சூரனாக இருக்கலாம்; படித்தவனாகவும் இருக்கலாம்; ராஜாவினிடத்தில் ஸேவை பண்ணத் தெரியாமல் இருந்துவிட்டால் என்ன பலன்? இதைக் காட்டுவதற்காகவே, ஒரு கோவையில் மூவரையும் காட்டும்போது, சூரனும் க்ருதவித்யனும் நிபுணஸேவகனும் என்று ஒரே மாதிரி சொல்ல வேண்டியிருக்க. அப்படி சொல்லாமல், சூரனும், க்ருதவித்யனும், ஸேவைசெய்ய எவன் அறிகிறானோ அவனும் என்று விலக்ஷணமாக கூறியுள்ளது. கீதையை முழுக்க உபதேசம் செய்தபிறகு அர்ஜுனனை பார்த்து ஸ்ரீகிருஷ்ண பகவான் "இது பெரும் ரகசியம். எல்லோருக்கும் உபதேசம் செய்ய கூடாது" என்ற சொல்லும்போது, ஓர் அழகான ச்லோகம் அமைந்துள்ளது -

இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந ।
ந சாசுச்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோப்யஸூயதி ॥ (கீதை - 18-68)

இந்த ச்லோகம்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது இங்கு. 'விரதம் செய்யாதவனுக்கு சொல்ல வேண்டாம். அபக்தனுக்கு இதை சொல்ல வேண்டாம். சுச்ரூஷை செய்யாதவனுக்கு சொல்ல வேண்டாம்' என்று சொன்னவர், 'அஸூயை உள்ளவனுக்கும் சொல்ல வேண்டாம்' என்று ஒரே ரீதியில் சொல்ல வேண்டியிருக்க, 'எவன் நம்மிடத்தில் பொறாமையை காட்டுகிறானோ அவனுக்கு சொல்ல வேண்டாம்' என்று விலக்ஷணமாக சொல்லியிருக்கிறார். இதிலிருந்து என்ன ஏற்படுகிறது என்றால், கீழ்கூறியவர்களுக்கு சொன்னாலும் சொல்லலாம்; அஸூயை உள்ளவனுக்கு ஒருகாலும் இதை உபதேசிக்ககூடாது என்பது. அது போல் இங்கும், எவன் யஜமானனிடத்தில் ஸேவை செய்ய அறிந்திருக்கிறானோ அவன் பூமியிலிருந்து பணத்தை பறித்து கொள்கிறான் என்று விலக்ஷணமாக கூறியதனால், கீழ் கூறிய இரண்டு பேரை காட்டிலும் இவன் பணம் திரட்டுவதில் அதிஸமர்த்தன் என்று ஏற்படுகிறது. ஆக, சூரனாகவோ படித்தவனாகவோ இருக்க வேண்டும். அல்லது சூரத்தன்மையும் படிப்பும் இல்லாமற்

போய்விட்டாலும் ஸேவை செய்யத் திறன் பெற்றவனாக இருக்க வேண்டும். இவன் எளிதில் பணத்தை சம்பாதித்து விடுவான்.

உதாஹரணமாக நவாபு காலம், முகலாய ராஜ்யம். அப்பொழுது கத்தரிக்காய் வாசலில் வண்டியில் விற்பனை. அரசன் மந்திரியை பார்த்து கத்தரிக்காய் தினமும் விற்பனையாகிறதே. அது அப்படி உயர்ந்ததா என்று கேட்டான். அதற்கு சேவகனான மந்திரியின் விடை - காய் கறிகளில் அதுதானே உயர்ந்தது. அதை அறிவிக்கவே அதன் தலையில் பகவான் க்ரீடம் வைத்துள்ளானே என்றான். இதைக் கேட்ட அரசன் தினமும் அரசன் அதை வாங்கி சாப்பிட்டான். சில நாட்கள் ஆயின. அதிக உஷ்ணமானபடியால் உடலில் சிறங்கு சொறி உண்டாகிவிட்டன. அரசன் கஷ்டப் பட்டான். பிறகு மந்திரி கூறியதை மறந்து கத்தரி அப்படி என்ன உயர்ந்தது என்றான். அதற்கு இந்த மந்திரி சேவகன் அதைவிட தாழ்ந்த பதார்த்தம் எதுவுமே இல்லை. அதனால்தான் அதன் ப்ருஷ்டபாகத்தில் பகவான் ஆணியை அடித்திருக்கிறான் என்றான். இதற்கு பின் வாங்குதை நிறுத்தினான். இதனால் என்ன தெரிந்துகொண்டோம். அரசன் மனோபாவத்தை அநுசரித்து நடந்து கொள்ள வேண்டும் என்பது.

*****

# 46. அமுதமும் விஷமும்

'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாகும்' என்ற பழமொழியை நாம் அனைவரும் கேட்டிருக்கிறோம். எந்த பொருளையும் அளவுக்கு மீறி உபயோகப்படுத்தினால் நன்மை கிட்டாது. அன்னத்தை நாம் தினந்தோறும் உபயோகப் படுத்துகிறோம். அதுவே நமக்கு முக்கியமான ஆஹாரம். நமது பிராணனை அது நிலை நிறுத்துகிறது. இதையே அளவுக்கு மீறி அதிகமாக உட்கொண்டால் பிரணனையும் போக்குகிறது. 'அந்நம் ம்ருத்யும் தமு ஜீவாதுமாஹு:' என்று வேதம் கூறுகிறது. ஒருவனை நேசித்து நமக்கு அவனைத் தோழனாக்கி கொள்கிறோம். அவனிடத்தில் ஸ்நேகம் வைப்பது என்பது உயர்ந்ததுதான். ஆயினும் அதிலும் அளவுக்கு மீறி ஸ்நேகத்தைப் பாராட்டினால் அது விபரீதத்திலும் முடிந்துவிடும்.

இராமனுடைய பாணத்தால் அடிபட்ட வாலி தனது அந்திம தசையில் புத்ரனான அங்கதனைப் பார்த்து, "அதிக ஸ்நேகமும் வைக்க வேண்டாம்; ஸ்நேகம் வைக்காமலும் இருக்க வேண்டாம்; அதிகமாக நேசித்தலும், நேசிக்காமலே இருத்தலும் அதிக கஷ்டத்தை கொடுக்கும்" என்று உபதேசிக்கிறான்.

ந சாதிப்ரணய: கார்ய: கர்த்தவ்யோப்ரணயச்ச தே।
உபயம் ஹி மஹாந் தோஷஸ் தஸ்மாதந்தரத்ருக் பவேத் ॥

(ஸ்ரீமத்ராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம் - 22-23)

எனவே எந்த விஷயத்திலும் 'அதி'யை (மிகுதியை) விடவேண்டும். தானம் என்பது உலகில் உயர்ந்த தருமம். அதையும் அளவுடன் செய்யவேண்டும். தன்னை மீறி அதிகமாக செய்தால் தானும் கஷ்டத்தை அடைய வேண்டிவரும். அதிதானத்தால் மஹாபலி விஷ்ணுவால் கட்டப்பட்டான் என்பதை அறிந்திருக்கிறோம் அல்லவா? அதிக ஆசை வைத்தபடியால் ராவணன் என்னும் இராக்கதன் கொல்லப்பட்டான். ஆகையால் விளையாடுதல், தூங்குதல், புசித்தல், கொடுத்தல், நேசித்தல் முதலிய எல்லா விஷயங்களிலும் அளவுக்கு மீறிப் பற்று வைக்கக் கூடாது.

அளவுக்கு மீறினால் அமுதமும் விஷமாகும் என்பது மாத்திரமல்ல; உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுமே ஒரு சமயம் அமுதமாகும்; அதுவே மற்றொரு சமயம் விஷமுமாகும். இதை நினைத்து, 'அமுதமும் விஷமாகும்; விஷமும் அமுதமாகும்' என்றான் காளிதாஸன்.

விஷமப்யம்ருதம் க்வசித் பவேத்,
அம்ருதம் வா விஷமீச்வரேச்சயா ॥

எந்தப் பொருளை நாம் அநுகூலம் என்று நினைக்கிறோமோ அந்த பொருளே மற்றொரு சமயம் பிரதிகூலமாகவும் முடிகிறது; எந்த பொருளை நாம் பிரதிகூலம் என்று கருதுகிறோமோ அதுவே மறுசமயம் அநுகூலமாகவும் அமைந்து விடுகிறது. சந்தனம், விசிறி முதலிய பொருள்களை நாம் கோடை காலத்தில் உபயோகிக்கிறோம். இவை இல்லாவிட்டால் அந்த கோடைகாலத்தில் கஷ்டத்தை அடைகிறோம். மின்சார விசிறி இல்லாவிட்டால் மக்கள் எவ்வளவு வருத்தத்தை அடைகின்றனர்! ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து காற்று அதிகமாக அடித்து மழை பெய்யும் காலத்தில் இவற்றை கண்டாலே எரிச்சல் உண்டாகிறது.

ஒருவன் குளிர்ஜுரத்துடன் கஷ்டப்படுகிறான். உடலெல்லாம் நடுக்கம்; எவ்வளவு கம்பளங்களை மேலே போட்டு கொண்டாலும் நடுக்கம் அடங்கவே இல்லை. அப்பொழுது அவன் நண்பன் வந்து "நான் மிக குளிர்ச்சியை தரக்கூடிய குளிர்பானத்தை அருந்தினேன். உனக்கு தனியாகத் தயாரித்த பானத்தை கொடுக்கிறேன்" என்றால், கொடுத்தவன் விஷயத்திலும், அந்த பானத்திலும் எவ்வளவு வெறுப்பு உண்டாகிறது! இதே பானம் கோடைகாலத்தில் கிடைக்க வேண்டுமே என்று எண்ணுகிறான்.

ஒரு சமயம் புத்ரனை கண்டதும் மகிழ்ச்சி அடைகிறான். மற்றொரு சமயம் அதே புத்ரனை கண்டதும் வெறுப்படைகிறான். நன்கு படித்து பெரியோர் சொல்லும் வார்த்தைகளை கேட்டு பெரிய உத்யோகத்தில் இருந்து கைநிறைய பணத்தை ஸம்பாதிக்கும் புத்ரனை கண்டதும் தானாகவே களிப்பு வருகிறது. இதே புத்ரன் ஊதாரித்தனமாக பொழுதை போக்கி ஊரார் தூற்றும்படியாக நடந்துகொண்டால் மனத்துக்கு வெறுப்புத்தானே உண்டாகும்? இம்மாதிரியே மனைவி, கணவன் முதலியவர்களிடத்திலும் ஒருவருடன் ஒருவர் நடந்துகொள்ளும் முறையை அநுசரித்து களிப்பும் வெறுப்பும் உண்டாவதை பல இடங்களில் கண்டுள்ளோம். பித்தரோகம் வந்தபோது பால் கசக்கும். அப்பொழுது அதை வெறுக்கிறோம். ஸாதாரண ஸமயத்தில் அதை ஆவலுடன் பருகுகிறோம். ஆகையால் ஒவ்வொரு பொருளுமே ஒரு சமயம் அநுகூலமாகவும், மற்றொரு ஸமயம் பிரதிகூலமாகவும் இருக்கிறது. இதைத் தான் கவி அழகாக எடுத்துரைத்தான். இப்படித் தோற்றமளிப்பதற்கு காரணம் என்ன? ஈச்வரனுடைய இச்சைதான்.

அயோத்தி என்னும் மாநகரில் அஜன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் சுயம்வரத்தில் இந்துமதி என்னும் (அப்ஸரஸ்) பெண்ணை மணந்து கொண்டான். சிறிது காலம் அவளுடன் வாழ்க்கை நடத்தினான். ஒரு நாள் இந்துமதியுடன் உத்யானத்தை அடைந்தான் இவ்வரசன். அங்கு அவளுடன் விளையாடிக்கொண்டும், அழகிய பொருள்களை கண்டு களித்தும் பொழுதை கழித்தான்.

அப்பொழுது ஆகாயத்தில் நாரத முனிவர் வீணையை கையில் எடுத்து எம்பெருமான் நாமங்களை சொல்லி பாடி கொண்டே சென்றார். அவரது வீணையில் ஒரு புஷ்பமாலை பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த மாலை அனைவரையும் அறியாமல் கீழே விழுந்தது. விழும் சமயம் அது இந்துமதியின் மேல் விழுந்தது, அது காரணமாக இந்துமதி சாப விமோசனம் அடைந்து தன் உருவமுற்றாள். தன் பத்தினியான இந்துமதி, மாலை மேலே விழுந்தது காரணமாக உயிரிழந்தாள் என்ற காரணத்தால் அஜன் மிகவும் துன்பமுற்றான். அவளுக்கு முன்பு உண்டான சாபத்தால் அப்ஸரஸ் உருவத்தை விட்டு இந்துமதியின் உருவம் ஏற்பட்டிருந்தது. நாரத பகவான் வீணையின் மாலை விழுந்து அந்த சாபம் போம் என்றும் இருந்தது. எனவே அவள் தம் ரூபத்துடன் சென்றுவிட்டாள்.

ஆயினும் அஜனுடைய கஷ்டம் எப்படி நீங்கும்? அவன் தன் மனைவியின் மரணத்தை நினைத்து அதிகமாக வருந்த ஆரம்பித்தான்; நான்கு பக்கங்களும் பார்த்தான். இந்த மாலை தவிர வேறொன்றையும் இவள் மரணத்துக்கு காரணம் என்று கருதுவதற்கில்லை என்று ஊகித்தான். "மாலையே! நீ அல்லவோ இந்துமதியின் உயிரை போக்கினாய்? உன்னை நானும் என் மார்பில் போட்டுக் கொள்கிறேன். என் உயிரையும் போக்கு" என்று புலம்பி மாலையை போட்டுக் கொண்டான். அவனது உயிர் போகவில்லை. ஒரு பொருள் ஒருவருக்கு தீங்கை கொடுக்கிறது. மற்றவருக்கு தீமையை செய்வதில்லை. எது அமுதமோ அது விஷமும் ஆகிறது; விஷமும் அமுதமாகிறது. ஒரே மாலை இந்துமதியின் உயிரை போக்கி விஷமாயிற்று; அதே

மாலை அஜனது உயிரை போக்கடிக்கவில்லை. ஆகையால் ஒரு வஸ்து ஒருவருக்கு அநுகூலமாகவும் மற்றவருக்கு பிரதிகூலமாகவும் ஆகிறது.

ப்ரஹ்லாதன் ஹிரண்யகசிபு கொடுத்த விஷத்தை பருகினான். அவனை அது ஒன்றுமே செய்யவில்லை. மற்றொருவன் அந்த விஷத்தை சாப்பிட்டிருந்தால் அது அப்போதே அவனது உயிரை போக்கியிருக்கும். நஞ்சை பருகி பலர் மரணமடைந்ததை பார்த்திருக்கிறோம் அல்லவா?

கிருஷ்ண பகவான் பூதனை என்னும் கொடிய அரக்கியின் மடியில் உட்கார்ந்து நஞ்சு கலந்த பாலை உட்கொண்டார். அதனால் ஒரு தீங்கும் உண்டாகவில்லை. பரமசிவன் சமுத்திரத்தை கடைந்தபோது உண்டான ஹாலாஹலம் என்னும் கொடிய விஷத்தை சாப்பிட்டார். அவரை அந்த விஷம் என்ன செய்தது? ஆகையால் பகவத் ஸங்கல்பத்தினால் அமுதமும் விஷமாகலாம்; விஷமும் அமுதமாகலாம்.

மைசூர் என்னும் நகரத்துக்கு அருகில் வைகுண்டநாதன் கோயில் ஒன்று இருந்தது. இப்போதும் அது முன்போல் பாதுகாக்கப் பெறாமல் இருக்கிறது. அந்த கோயிலருகில் ஒரு பக்தன் எப்போதும் எம்பெருமானை வணங்கியும் துதித்தும் வலம் வந்தும் பாதுகாத்துக் கொண்டிருந்தான். அவன் சொன்னதெல்லாம் பலித்தது. எப்பெருமான் அவனிடத்தில் அதிக ஆவல் கொண்டிருந்தான். இதை கொண்டு சிலர் அவனை கௌரவித்தார்கள். சிலர் பொறாமையினால் வெறுத்தார்கள். வெறுத்தவர்கள் ஒரு நாள் கோயில் பூசாரியிடம் ஆயிரம் ரூபாய் கொடுத்து, அந்த பக்தன் வரும்போது விஷம் கலந்த தீர்த்தத்தை கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். பூசாரி முதலில் கொடுக்க மாட்டேன் என்று மறுத்துவிட்டான். ஆனாலும் பொறாதவர்கள் பயமுறுத்தினார்கள். தன் பிராணனுக்கு பயந்தும் பணத்தின் ஆசையினாலும் விஷம் கலந்த தீர்த்தத்தை கொடுக்க அவன் தீர்மானித்துவிட்டான்.

மறுநாள் அந்த பக்தன் துதிகளை செய்து கொண்டு கடவுளை வணங்க வந்தான். பூசாரி உண்மையில் விஷத்தை கொடுக்க மனமில்லாதவனானபடியால் விஷயத்தை பக்தனிடம் சொல்லிவிட்டான். "இதற்கு நீ பயப்பட வேண்டாம். இது எம்பெருமானின் ஸங்கல்பம். நீ அப்படியே கொடு" என்று சொல்லி, விஷம் கலந்த தீர்த்தத்தை வாங்கி கொண்டு, "அச்சுத, அனந்த, கோவிந்த" என்று பகவந்நாமங்களை சொல்லி பருகினான் பக்தன். அவனை அது ஒன்றுமே செய்யவில்லை. இப்படி எல்லாம் பகவத் ஸங்கல்பம் மூலமாக நடக்கிறபடியால் எந்த பொருளும் அநுகூலமுமன்று; பிரதிகூலமுமன்று. எல்லாம் கடவுளின் பொருளானபடியால் உண்மையில் எல்லா பொருள்களிடத்திலும் உயர்ந்த நன்மையே உண்டு.

அவரவர் செய்த வினையை முன்னிட்டு சில பொருள்கள் அற்பமான சுகத்தை அளிப்பனவாகவும், துக்கத்தை கொடுப்பனவாகவும் தோற்றமளிக்கின்றன. வினைகளிலிருந்து விடுபட்டு முக்தர்களானவர்கள் எல்லாவற்றிலும் அதிகமாக ஸுகத்தையே காண்பர். எனவே எல்லா பொருள்களும் எம்பெருமானின் விபூதி என கருதி அவற்றில் நன்மையையே பாராட்ட வேண்டும்.

அன்னம் ம்ருத்யும் உத ஜீவாதும் ஆஹு: என்றது வேதம். தினமும் ஆஹாரார்த்தமாக அன்னம் சாப்பிடுகிறோம். சில சமயம் அதுவே மென்னை பிடித்துவிடுகிறது. மரணஹேதுவாக ஏற்படுகிறது. ஸ்ரீராமனிடத்தில் எவ்வளவு அன்பு பாராட்டினாள் கைகேயி. பரதனிடம் கூட

அவ்வளவு ப்ரீதி காட்டவில்லை. எப்படி நடந்து கொண்டாள் என்பதையும் உணர்ந்திருக்கிறோமே.

ராமனும் தாயினிடம் கூட அவ்வளவு ப்ரீதி செலுத்தவில்லை. கைகேய்யா: ப்ரதிபத்தி: ஹி கதம் ஸ்யாத் மம பிடனே. என்னை துன்புறுத்த கைகேயிக்கு இப்படி எண்ணம் எப்படி உண்டாயிற்று என்கிறான் ராமன். நெருப்புக்கு ஏற்பட்ட ஸவபாவம் ஔஷண்யம் அது எப்படி ப்ரஹ்லாதன் விஷயத்தில் இல்லாமலும் சீதனமாகவும் போய் விட்டது. எல்லாம் பகவத் ஸங்கல்பம். அம்பரீஷரிடம் அபசாரப்பட்ட துர்வாஸரை துரத்திவந்த ஸுதர்சன ஆழ்வான், அவர் வேறிடம் செல்லும்போது அதிக பராக்ரமத்துடன் கொளுத்த ஆரம்பித்தது. அதுவே அம்பரீஷரிடம் செல்லும்போது குளிர்ந்திருந்தது. ஏன்?

ராமனால் ஏவப்பட்ட த்ருண ரூபமான ப்ரஹ்மாஸ்த்ரம் எங்கு எங்கு சென்றாலும் தாபத்தை கொடுத்தது. அப்பொழுது அது விஷயம் தற்செயலாக ராமனிடம் திரும்பிய போது குளிர்ச்சிகரமாக அமைந்தது. பிறகு அவன் வேறு பக்கம் போகபோக தாபகரம் விஷம். இதெல்லவற்றிற்கும் காரணம் அவன் ஸங்கல்பம். இதனால் அமுதமும் விஷம். விஷமும் அமுதம்.

அவரவர் மனைவி புத்ரர்களே ஒரு சமயம் அமுதம் பிற சமயம் விஷம், இது கண்கூடு.

"சதேவ ப்ரீதயே பூத்வா பன: து: காய ஜாயதே ததேவ கோபாய சயத: ப்ரஸாதாய ச ஜாயதே என்பது விஷ்ணுபுராணம். இதனால் என்ன தெரிந்து கொண்டோம் என்றால், எல்லாம் பகவத் விபூதியானதால் எல்லாம் ப்ரியம் அத்யந்த அநுகூலம் என்பது. இப்படியானால் ஒரு கேள்வி.

நாம் ஏன் சந்தனத்தை பூசிக் கொள்கிறோம்? அமெத்யத்தை ஏன் பூசிக்கக் கூடாது. பன்னீர் ஏன் தெளிக்க கூடாது? இது பக்ஷ்யம இது அபக்ஷ்யம் என்று ஏன் ஒதுக்க வேண்டும். வெங்காயம் சாப்பிட்டால் என்ன? உள்ளி பூண்டு புசித்தால் என்ன. இதற்கு விடை உபய லிங்காதிகரண வ்யாஸ ஸூத்ரத்திலும் பாஷ்யத்திலும் என்னுடைய வ்யாக்யானமான பாவ சந்திரிகையிலும் பார்த்துக் கொள்ள வேண்டும். நீ பகவத் விபூதி. பிறனும் பகவத் விபூதி. அப்படியிருக்க உன்னுடைய தனத்தை என் அவனிடம் கொடுப்பதில்லை. உன் பத்ரனுக்கும் மனைவிக்கும் அலங்காரம் செய்கிறாய். பிறர் புத்ரனுக்கும் சத்ரு புத்ரனுக்கு ஏன் அப்படி செய்கிறதில்லை. உன்னுடைய தனத்தை அபஹரித்தால் ஏன் கோபம். பாம்பை பார்த்தால் ஏன் உத்வேகம். இப்படி ப்ரச்னம் செய்தால் என்ன பதில் சொல்வாய். இது என்னுடையது. பையன் என்னுடையவன். இது பயங்கரம். என்றெல்லாம் கூறுவாய். இதுதான் ஏன். கர்மம் புண்ய பாபம் என்று சமாதானம். இவை இல்லாதவனுக்கு அநுகூலத்வம் ப்ரதிகூலத்வம் தோன்றாது. ஸர்வம் போக்யம் என்றே தோன்றும். ஜடபரதர் பகவத் பக்தர். இது சாப்பிடக்கூடும் இது கூடாதது என்பது அவருக்கு இல்லை. எல்லாவற்றையும் தான் சாப்பிட்டார். நமக்கு கர்ம சம்பந்தம் உள்ளபடியால் தோன்றாது. அதனால்தான் இது ஹேயம் இது உபாதேயம் என்ற பித்து. அதனால் இவ்வாறு கேள்வி உண்டாகிறது. பகவானிடத்தில் மனதை வைத்தவனுக்கு உலகத்தில் உண்டாகும் உபத்ரவமே இல்லாதபடியால் எதிலும் தோஷபுத்தி உண்டாகாது. ஆக இது அமுதம் இது விஷம் என்கிற விஷம் புத்தி என்பதே கிடையாது. எல்லாம் அநுகூலமாம்.

*****

# 47. ஒரு தனிகனின் கேள்வி

ஓர் ஊரில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் வேதங்களை ஓதியவன்; ஸகல கல்விகளையும் கற்றவன். கல்வி கற்றவர்களில் சிறந்தவனாக விளங்கியது போலவே செல்வர்களிலும் சிறந்தவனாக அவன் விளங்கினான். ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் ஓர் இடத்தில் வசிக்கமாட்டார்கள் என்று பெரியோர்கள் சொல்வது இவனிடத்தில் இல்லை. இவ்வளவு கல்வியும் செல்வமும் நிறைந்தவனாக இருந்த போதிலும் ஈகை என்ற குணம் இவனிடத்தில் அணுவளவும் இல்லை.

எவ்வளவு படித்திருந்தபோதிலும், எவ்வளவு பணக்காரனாக இருந்தபோதிலும், வறுமையுற்ற ஜனங்களுக்கு தான தர்மங்களை செய்பவனையே உலகத்தார் மதிப்பர். எனவே இவனை ஒருவரும் புகழவில்லை; மதிக்கவில்லை. இப்படி இருந்தும் இவன் பணத்தை சேமிப்பதிலேயே கண்ணோட்டமுடையவன். தினந்தோறும் எப்படியாவது சிறிதளவாவது பணத்தை சம்பாதித்து பெட்டியில் வைத்து பார்க்காமல் இருக்கமாட்டான்.

இவன் உயர்ந்த குலத்தில் பிறந்த பெண்ணை மணம் செய்து கொண்டான். அவளுக்கு சுசீலை என்று பெயர். மிக்க அழகு வாய்ந்தவள். அவள் தன் பெயருக்கு தகுந்த படி நற்குணமுள்ளவள். அவள் தன் பர்த்தாவின் போக்கை நினைத்து வருந்துவாள். 'இப்படி பணத்தை சேமித்து என்ன செய்யபோகிறான்? கடைசிக் காலத்தில் இது இவனுடன் போகப் போவதில்லையே?' என்று நினைப்பாள். இவ்விஷயத்தை பர்த்தாவிடம் சொல்ல விரும்பியும் அச்சத்தினால் சொல்லாதிருந்தாள்.

ஒரு நாள் அந்தணன் ஏதோ ஒரு காரியத்துக்காக தன் பந்துக்கள் உள்ள கிராமத்துக்கு சென்றான். அங்கு ஒரு பௌராணிகர் ராமாயண காலக்ஷேபம் நடத்தி வந்தார். அந்தணன் கதா காலக்ஷேபம், திருவிழா முதலிய ஸத்காரியங்கள் நடக்கும் இடங்களுக்கு போனால் பணம் செலவழிந்துவிடுமே என்று போகாமல் இருப்பவன். ஆயினும் இங்கே பந்துகளின் நிர்ப்பந்தத்தினால் போக வேண்டி நேரிட்டது. பௌராணிகர் இவனை கண்டதும், இவனுடைய குணங்களை முன்பே கேட்டிருந்தபடியால், இவனுக்கு நற்புத்தியை உண்டு பண்ண கருதி மிகவும் அழகாக வேதாந்த அர்த்தங்களை உபதேசித்தார்.

ஆத்மா அழியாப் பொருள்; உடல் செல்வம் மக்கள் வீடு வாசல் முதலியவை அழியக் கூடியவை. நித்யனான ஆத்மா அவனவன் செய்த புண்ணிய பாவங்களை அநுஸரித்து தேவன் மனிதன் ஆடு மாடு முதலிய சரீரங்களில் பிரவேசிக்கிறான். நிலையாக ஒரு சரீரத்திலும் இருப்பதில்லை. சரீரம் மின்னல் போல் அழிந்துவிடுகிறது. இப்படி இருக்க, நாம் அழியாமல் ஸ்திரமாகவே இருக்க போகிறோம் என்று எண்ணி அதர்மங்களையே செய்கின்றனர். தான தர்மங்களை செய்வதில்லை. இரவில் படுத்துக் கொள்ளும்போது, 'எப்போது சூரியோதயம் ஆகப்போகிறது? எப்படி பணத்தை சேமிக்கலாம்?' என்று யோசனையில் ஆழ்ந்து விடுகிறார்கள். நாம் அழிந்துவிட்டால் நமக்கு நல்ல கதி ஏற்படுமா ஏற்படாதா என்பதை யோசிப்பதே இல்லை. இரவு வரும்போது ஒருவித மகிழ்ச்சி. பகல் உண்டாகும்போது ஒரு வித உத்ஸாஹம். இதனால் நமது ஆயுள் குறைந்து விடுகிறதே என்பதை யோசிப்பதே இல்லை. நம் வாழ்வில் என்ன தர்மங்களை செய்கிறோம் என்பதையும் கவனிப்பதில்லை என்றெல்லாம் இவர் உபதேசித்தார்.

இதைக் கேட்டதும் அந்தணனுடைய மனத்தில் ஒரு வித எண்ணம் தோன்றிற்று: 'பௌராணிகர் சொல்லும் விஷயம் வாஸ்தவம்தானே? நாம் போகும்போது இவ்வளவு பொருளையும் எடுத்துக்

கொண்டா போகப் போகிறோம்? நாம் வரும்போது இவற்றை எடுத்துக் கொண்டா வந்தோம்? போகும்போதும் அப்படித்தானே? நாம் போகும்போது பாவ புண்ணியங்கள்தாமே நம்முடன் வரப்போகின்றன? இனித் தான தர்மங்களையே செய்ய வேண்டும். உலகிலுள்ள ஜனங்கள் நம்மை புகழ வேண்டும். நாம் நற்கதியை பெற வேண்டும்' என்று.

இவ்வளவு நல்ல எண்ணம் உண்டாயினும் இவன் பௌராணிகருக்கு ஒரு காசுகூட கொடுக்கவில்லை. மறுநாள் தன் வீட்டை அடைந்தான். இங்கு நடந்த விஷயங்களை மனைவியிடம் சொன்னான். இவன் மனைவி இதைக் கேட்டு ஆனந்தமடைந்து தன் கணவனிடம் சொல்லத் தொடங்கினாள்.

"நாதா, இவ்விஷயத்தை நான் முன்பே யோசித்தேன். தங்களிடம் சொல்லப் பயந்தேன். ஏதோ அதிருஷ்டவசத்தால் தங்களுக்கு நல்ல எண்ணம் தோன்றியுள்ளது. நம் முன்னோர் செய்த பாக்கியமே இது. கோவிலுக்கு சென்று பகவானை அர்ச்சிக்க வேண்டும்; புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்ய வேண்டும்; ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும்; நிறைய கோதானம் செய்ய வேண்டும். நாம் பிறருக்கு கொடுத்தால்தான் நமக்கு பகவான் கொடுப்பார். இந்த பிறவியில் ஒருவருக்கு நாம் பூமிதானம் செய்தால் நாம் மறுபிறவியில் பூமியை ஆளக்கூடிய பாக்கியம் பெறுவோம். வாகனத்தை கொடுத்தால் சொந்தமான யானத்தை பெறலாம். பிராமணர்களுக்கு எதை எதை கொடுக்கிறோமோ அந்த அந்த பொருள் நமக்கு பன்மடங்காக பெருகும். நம் பெரியோர்கள் நிறைய தான தர்மங்களை செய்தபடியால் நாம் பணக்காரர்களாக இருக்கிறோம். நாமும் அப்படி செய்தால்தான் நம் ஸந்ததியும் க்ஷேமத்தை அடையும். நாமும் சொர்க்கத்தை பெற்று இந்திரனுக்கு சமமான போகத்தை பெறலாம்" என்றாள்.

இதை கேட்டதும் அந்தணன் தானங்களை செய்வதில் ஈடுபட்டான். தங்க கொப்பு போட்ட நூற்றுக்கணக்கான பசுமாடுகளை நல்லவர்களுக்கு தானம் செய்தான். 'முன்பு இருந்த லோபியா இவன்?' என்று சொல்லும்படியாக இவன் நடந்து கொண்டான். இவனது ஆயுள் முடிவு பெற்றது. இவனுடைய தர்மதேவதைகள் இவனை வழியில் பல பல போகங்களை நடத்தி, இந்திரலோகத்தை அடைவித்தனர். தேவேந்திரன் இவனை கண்டு மகிழ்வுற்று தன் சிம்மாஸனத்தின் வலப் பக்கத்தில் ஓர் ஆசனமிட்டு, அதில் இவனை உட்கார வைத்து தங்க பூண் இட்ட வெள்ளி தடியை கையில் கொடுத்து உபசரித்தான். இவன் பரம ஸந்தோஷத்துடன் ரம்பை ஊர்வசி முதலிய தேவஸ்திரீகளுடன் விளையாடிக் கொண்டு தேவேந்திரனுக்கு சமமாக போகத்தை அநுபவித்து வந்தான்.

சில நாள் கழிந்தன. தேவேந்திரனுடைய இடப் பக்கத்திலுள்ள ஓர் ஆசனத்தில் வெள்ளி தடியை கையில் பிடித்து கொண்டு உட்கார்ந்திருந்த ஒரு மனிதனை கண்டான். 'ஐயோ! இவன் எப்படி இங்கு வந்தான்? இந்த ஆசனத்தில் நமக்கு சமமாக உட்கார இவனுக்கு என்ன தகுதி உள்ளது? நம் ஊரில் நம் வீட்டுக்கு எதிரிலுள்ள ஏழை பிராமணன்தானே இவன்? நாம் எவ்வளவு பணத்தை தான தர்மங்களில் செலவு செய்து இந்த பதவியை அடைந்தோம்? ஏழை அந்தணனான இவனுக்கு தானம் செய்ய பணம் ஏது? இது என்ன அநியாயம்'? என்று திகைத்தான். மிக்க கவலையுடன் தனக்கு சமமாக அவனுக்கு போகத்தை கொடுத்த இந்திரனை வெறுத்தான். 'இந்திரனை எப்படி கேட்டுத் தெரிந்துகொள்வது? இவனை எப்படி விரட்டுவது?' என்றெல்லாம் யோசித்தான். ஊரில் இருந்த போது அவனிடத்திலுள்ள பொறாமை இங்கும் விடவில்லை.

சில நாள் கழிந்ததும் இந்திரனை பார்த்து மனம் தாங்க முடியாமல், "இந்திரனே! நான் அநேக தானங்களை செய்தபடியால் என்னை நீங்கள் இந்த ஆசனத்தில் உட்காரவைத்தீர்கள். செல்வத்தின் வாஸனையையே அறியாதவன் இவன். இவனுக்கு தானம் செய்ய வழியே இல்லை. எப்படி இவனை எனக்கு சமமாக உடகார வைத்தீர்? பணக்காரனான எனக்கும் ஏழையான இவனுக்கும் போகத்தில் ஒற்றுமையா? இது எப்படி கூடும்?" என்று கேட்டான்.

இந்திரன் - அந்தணரே! நான் இந்த தேவலோகத்துக்கு அதிகாரி. மேலிருந்து எனக்கு எப்படி உத்தரவு வருகிறதோ, அப்படி பலனை கொடுக்க எனக்கு உரிமை உண்டு. இவனுக்கு ஆசனமிட்டு போகங்களை கொடுக்கும்படி உத்தரவு வந்தது. அதன்படி செய்தேன். அவ்வளவுதான் தெரியும். இதன் உண்மையை வேறு யாரிடமாவது கேட்டு தெரிந்துகொள்ளும்" என்று கூறிவிட்டான்.

அந்தணனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படியாவது இவனை விரட்ட வேண்டும் என்ற எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது. இதனால் ஸ்வர்க்க லோகத்தில் ஏற்பட்ட அநுபவமும் சுகமாகவே தோன்றவில்லை. இப்படியிருக்க, ஒரு நாள் நாரத மகரிஷி அங்கு வந்தார். அவரை கண்டதும் எழுந்திருந்து உபசரித்து இவ் விஷயத்தை கேட்டான்.

"நாரத மகரிஷியே! தேவலோகம் என்பது சிறந்த உலகம். இது புண்ணியம் செய்பவர்களுக்காக ஏற்பட்டது. எவன் தான தர்மங்கள் செய்கிறானோ அவன் இவ்வுலகத்தில் ஸுகத்தை அடைவான். தானங்களை செய்யாதவர்களுக்கு இங்கு இடம் இருக்காது. இது திண்ணம். இப்படி இருக்க தேவேந்திரனுடைய இடப் பக்கத்தில் உள்ளவன் பரம ஏழை. தினந்தோறும் சாப்பிடுவதற்கே திண்டாட்டம் உடையவன். இவன் தானங்களை எப்படி செய்வான்? இவனுக்கு இந்த இடத்தை கொடுத்தது நியாயமல்ல. நான் எவ்வளவோ தானங்களை செய்து இவ்விடத்தை பெற்றேன். எனக்கும் இவனுக்கும் போகத்தில் ஒற்றுமை இருக்க முடியாதே. இவ்விஷயத்தை இந்திரனிடம் கேட்டால் பதில் சொல்ல முடியாமல் திகைக்கிறார். தானமே செய்யாமல் இவன் இவ்விடத்தை பெற்றிருக்கிறான். ஐயோ! நானும், தெரிந்திருந்தால் என் பொருளை வீணே செலவு செய்யாமல் இருந்திருப்பேனே! இவனை போலவே நானும் இந்த பதவியை பெற்றிருக்கலாமே. என் சொத்துக்களை செலவு செய்து பசுமாடுகளை வாங்கி பல அந்தணர்களுக்கு கொடுத்தேனே. என் சந்ததிகளுக்கும் வைக்காமற் செய்துவிட்டேனே!" என்றான்.

நாரதர் இதை கேட்டு புன்சிரிப்புடன், "ஊரை விட்டு இங்கு வந்த பிறகு கூடவா உனக்கு நல்ல எண்ணம் உண்டாகவில்லை? நீ அடைந்த போகத்துக்கு சமமான போகத்தை அடைய, தானம் போல் இன்னோர் உபாயமும் உண்டு: பாரதம், ராமாயணம் முதலிய புராதன கதைகளை கேட்பவனும் இந்த போகத்தை அடைவான். இதற்கு நீ அஸூயை பட்டு பயனில்லை" என்றார்.

அந்தணன், "ஐயோ! இப்படியென்றால். நானும் பாரதம் முதலிய புண்ணிய கதைகளை கேட்டே இந்த போகத்தை அடைந்திருக்கலாமே! வீணே பணத்தை செலவழித்து ஏன் இப்படி வரவேண்டும்?" என்றான்.

நாரதர், "அந்தணனே, கல்விகள் பலவற்றை கற்று வேதம் ஓதிய அந்தணனுக்கு எவனொருவன் தங்க பூண் பெற்ற கொம்புகளையுடைய பசுமாடுகளை தானம் செய்கிறானோ அவனும், புண்ணியமான பாரதம் முதலிய கதைகளை எவன் கேட்கிறானோ அவனும் சமமான போகத்தை

பெறுவர் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதிலும் பணம் உள்ளவன், கதைகளை கேட்பதனால் மாத்திரம் பரிசுத்தியை அடைய மாட்டான். தன் அதிகாரத்துக்கு தகுந்தபடி தானங்களையும் செய்ய வேண்டும். உன்னை போல் உள்ளவர்களுக்கு கதைகளை கேட்பதனால் மட்டும் இந்த போகம் உண்டாகாது. ஸத்பாத்திரங்களில் தானம் செய்ய வேண்டும். ஆகையால் அவன் விஷயத்தில் நீ வேறு விதமான எண்ணம் கொள்வது தகாது. நீயும் அவனுடன் கலந்து பழகி போகங்களை அநுபவிப்பாயாக" என்றார். நீ எவ்வளவோ தான தர்மங்களை செய்தாய். அப்படியிருந்தும் அஸூயை உன்னைவிட்டுப் போகவில்லையே. இதுதான் முக்யமான குணம். தயா, ஸர்வ பூதேஷு, க்ஷார்தி:, அகஸூயா, சௌசம், அநாயாஸ:, மங்களம், அகார்பண்யம் அஸ்ப்ருஹா, இவை எட்டும் ஆத்ம குணங்கள். நாற்பது ஸம்ஸ்காரங்கள் மனிதனுக்கு உண்டு. அவற்றைவிட இந்த ஆத்ம குணங்கள்தான் சிறந்தவை. தீழ் கைகா தமதர்மஸீத்ரத்தில் நாற்பது ஸம்ஸ்காரங்களும் இந்த ஆத்ம குணங்களும் சொல்லப்பட்டன. அதிலும் ஸம்ஸ்காரம் குறைந்திருந்தபோதிலும் இந்த ஆத்ம குணங்கள்தான் உயர்ந்தன. இதனால் மனிதன் க்ஷேமத்தை அடைவான். ஸமஸ்காரங்கள் முக்யமல்ல. சொல்லப்பட்ட குணங்கள் முக்யமானவை. இதன் மூலமாகவே எல்லா லோகங்களிலும் எல்லா போகங்களையும் அநுபவிக்கலாம் என்பது ஸாஸ்த்ரம். இதை நாரத பகவான் தனிகனுக்கு உபதேசம் செய்தார். ஆக அஸூயையும் மமதை விட்டு விட்டு அவனுடன் கலந்து சுகம் அநுபவிப்பாயாக என்றார்.

ஸ்வாமி தேசிகனும் இதை எடுத்துக் காட்டியுள்ளார். "ஆசார ஆத்ம குண உபாய புருஷார்த்த விசேஷத: அதிகாரிணி வைசிஷ்ட்யம் ப்ரக்ருஷ்யேத உதத ரோத்தரம்.

ஆசார விசேஷம். ஸ்நாந ஸந்தியாதி ஆசாரங்களில் ஏற்றச் சுறுக்குக்கு ஈடாக அதிகாரிகளின் மேன்மையில் ஏற்றச் சுறுக்கம் கேவல புண்ட்ர ஸ்நாநம் செய்பவன் வாருண ஸ்நாநம் செய்பவனை காட்டிலும் எப்படி உயர்ந்தவனாவான் என்பதையும் கவனிக்கவும். தேவதாந்தர பஜனம் செய்பவன் பகவத் பஜனம் செய்பவனைவிட எப்படி உயர்ந்தவன். ஸ்ரீமன் நாராணனை பஜனம் செய்பவன்தானே உயர்ந்தவன்? ஸவர்காதி புருஷார்த்தத்தை விரும்புவனைவிட மோக்ஷத்தை விரும்புவன்தானே ஸ்ரேஷ்டம் என்பது தாத்பர்யம். ஆசார்யர்களிலும் உத்தமன் மத்யமன் அதமன் எனப் பிரிவு உண்டு. இதில் உத்தம ஆசார்ய சம்பந்தம் உள்ளவன்தான் க்ஷேமத்தை அடைவான். க்யாதி லாப பூஜைகளிலும் டம்பத்திலும் ஆசைப்பட்டவன் ஆசார்ய பதவியில் இருந்தால் அவனை ஆச்சர்யத்தவன் எப்படி க்ஷேமம் அடைய முடியும். நம்மை போல் இந்த ஆசார்யன் ஆகிவிட்ட படியால் அவன் தன்னை காப்பதற்கே சக்தியற்றவன். பிறர்களை எப்படி உஜ்ஜீவிக்கச் செய்வான். இதை யோசிக்காமல் கேவல ஸங்பேத மாத்திரைத்தைக் கொண்டு ஈடுபடுகின்றனர். ஐயோ, ஆத்ம க்ஷேமத்தை விரும்புவர்கள் ஏமாராதீர்கள்.

இதை கேட்ட அந்தணன் வியந்து, முனிவர் கூறியபடியே நடந்துகொண்டான்.

தானம் போகோ நாச: திஸ்ரோ கதய: பவந்தி வித்தஸ்ய யோ ந ததாதி ந புங்தே தஸ்ய த்ருதீயா கதிர்பவத் என்பது சாஸ்த்ரம். பணத்தைக் கொண்டு என்ன செய்யலாம். நல்ல பாத்ரத்தில் தானம் செய்யலாம். தான் அநுபவிக்கலாம். இரண்டும் இல்லை என்றால் எவனாவது அபஹரித்து விடுவான். இம்மூன்றும்தானே அதற்கு ஏற்பட்டது. அக நாரதர் கூறியபடி ஸத்பாத்ரத்தில் கொடுப்பதுதான் யுக்தம் என்பதை நன்கு உணர்ந்தான். நாம் மரணமானால் எவன் கூட வந்து நம்மை காப்பாற்றப் போகிறானர்? அவரவர்கள் தன் வேலைகளைத்தான் பார்ப்பார்கள். உடன் வருவது பணமுமில்லை. மிதரனும் இல்லை. பந்துக்களும் இல்லை. நாம் செய்யும் புண்ய பாபங்கள்தான் உடன்வரும். ஆக தனத்தை செலவு செய்து மாற்றி ஸுக்ருத

ரூபமாக எடுத்து செல்லலாம். எத்தனை கோடி ஸம்பாதித்தால் என்ன. பேராசைதான் நிற்கும். அதனால் அவன் அவன் அதிகாரத்துக்கு தகுந்தார்போல் ஸத்கார்யங்களைச் செய்ய முன் வரவேண்டும்.

*****

# 48. மனம் ஏன் மாறியது

கடவுள் மனிதர்களை படைக்கும்போது ஒவ்வொருவருக்கும் காது, கண், மூக்கு, நாக்கு, மனம் முதலிய பல கருவிகளை கொடுக்கிறான். கண் காது முதலியவை வெளிப்புலன்கள். மனம் உட்புலன். ஒவ்வொரு இந்திரியமும் தனக்கு ஏற்பட்ட வெளி விஷயங்களை கிரகித்து ஆத்மாவுக்கு அந்த அந்த பொருள்களின் அறிவை உண்டுபண்ணுகிறது. வெளிப் புலன்கள் வெளியிலுள்ள பதார்த்தங்களை அறிவிக்கும்போது மனம் உடனிருந்து வேலை செய்கிறது. மனம் ஆத்மாவுக்கு ஏற்பட்ட சுக துக்கங்களை எடுத்துக் கூறும் கருவி. இது வெளியிலுள்ள பதார்த்தங்களை நேரிடையாக அறிவிக்க திறமையற்றது. முன்பு அநுபவித்த அர்த்தங்களை வேறு வெளிப்புலன்களை எதிர்பார்க்காமலே நினைப்பதற்கு மாத்திறம் திறமை பெற்றது.

இந்த கருவி ஒவ்வொரு பிராணியினிடத்தும் இருந்துகொண்டு நல்ல கதியை கொடுப்பதற்கும் தீய கதியை கொடுப்பதற்கும் வல்லமை பெற்றது. சாதாரணமாக இன்று ஒன்றை நாம் நினைக்கிறோம். நாளைதினம் வேறொன்றை நினைக்கிறோம். மறுநாள் மற்றும் ஒன்றை. ஒரே நிலையில் மனம் இருப்பதில்லை. கணந்தோறும் மனம் மாறுதலையடைந்துகொண்டே வருகிறது. தானம் செய்யவேண்டும் என்று நினைப்பவன், யாசகரை கண்டதும் அவனுக்கு ஏதோ கொடுக்கவேண்டும் என்று உள்ளே செல்கிறான். பணத்தை வைத்திருக்கும் பீரோவைத் திறக்கும்போது முதலில் நூறு ரூபாய் கொடுக்கவேண்டும் என்று எண்ணினவன் ஐம்பது ரூபாய் கொடுத்தால் போதும் என்று எண்ணிவிடுகிறான். பர்ஸை திறக்கும்போது இருபத்தைந்து கொடுத்தாலே போதும் என்ற எண்ணம் உண்டாகிறது. கடைசியில் யாசகனுக்கு கொடுப்பது பஞ்சபாண்டவர்களின் கட்டில்கால் கதையாகிறது. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் மனம் மாறுதல் அடைவதை பார்த்தே வருகிறோம்.

ஆகையால் நல்ல காரியங்களை செய்வதோ கெட்ட காரியங்களை செய்வதோ எல்லாம் மனத்தின் வசமாகவே உள்ளன.

சொர்க்கம், மோக்ஷம் முதலிய நல்ல கதியை அடைவதும் நரகம் முதலிய பெரும் பாதாளத்தில் விழுவதும் மனத்தினால்தான் ஏற்படுகின்றன. கோவிலில் சென்று பகவானை ஸேவிக்க வேண்டும் என்றும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யவேண்டும் என்றும் ஸ்ரீராமாயணம் முதலிய ஸத் கதைகளை நடத்தி வைத்து கேட்கவேண்டும் என்றும் தான தர்மங்கள் செய்யவேண்டும் என்றும் மனம் ஒருவனுக்கு எண்ணத்தை கொடுத்தால் அம்மாதிரி நடந்து அவன் நல்ல கதியை பெறுவான். திருடவேண்டும் என்றும் எப்படியாவது பணத்தை சேமிக்கவேண்டும் என்றும் பொய் கூறவேண்டும் என்றும் நல்ல கதைகளை சொல்வோரை கெடுக்கவேண்டும் என்றும் மனம் ஒருவனுக்கு எண்ணத்தை கொடுத்தால் அம்மாதிரியே அவன் நடந்துவிடுகிறான். அதன் மூலமாக நரகம் முதலிய தீயலோகத்திற்கு சென்று துக்கத்தை அநுபவிக்கிறான். எனவே, மனத்துக்கு எவ்வளவு வலிமை உள்ளதோ அவ்வளவு மகிமை உள்ள வலிமை மற்ற எதற்கும் இல்லை என்றே சொல்லலாம்.

மனம் நம் வசமாகிவிட்டால் எல்லாவற்றையும் எளிதில் சாதிக்கலாம். அது இஷ்டப்படி வெளி விஷயங்களில் சஞ்சரிக்க தொடங்கினால் அது போகும் வழியே மனிதனும் சென்று தீய செயலுக்கு ஆளாகிவிடுவான். ஆனால் ஒரு சமயத்திலும் மனம் ஒரு நிலையில் நிலையாக இருப்பதில்லை. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு விஷயத்தை நினைத்துக் கொண்டிருக்கிறது. இதுதான் சஞ்சலமாயிற்றே. ஒரு வாலிபன் ஒரு பெண்ணை மணந்துகொள்ள

பெரியோர்களுடன் அவளை பார்க்க போகிறான். பெண்ணை பார்த்ததும் அவன் மனம் அவளிடத்தில் லயிக்கிறது. பிறகு நிச்சயம் செய்து விவாகத்துக்கு ஒரு நாளும் ஏற்படுத்துகிறார்கள். விவாக தினத்தன்று அந்த பெண்ணின் கையை பிடித்ததும் என்ன காரணமோ, இந்த பெண் தனக்கு வேண்டாம் என்று வெறுத்துவிடுகிறான். குடும்பத்தில் மிக்க ஆசையுடன் வாழ்கையை நடத்திக் கொண்டுவரும் தம்பதிகளும் திடீரென்று மனம் உடைந்து வேறுபாடு அடைகின்றனர். இவளிடத்தில் அவனுக்கு இருந்த மனம் மாறிவிடுகிறது. அவளுக்கும் கணவனிடத்தில் மனம் மாறுபடுகிறது.

'இதற்கு முன்பு இம்மாதிரி நண்பர்களையே உலகத்தில் பார்த்ததில்லை' என்று கூறத்தக்க இரு நன்பர்கள் திடீரென்று மனவேறுபாட்டை பெற்றுவிடுகின்றனர். ஒரு பள்ளியில் ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் அரை குறையாக கற்றவர்; பூரணமான அறிவு பெற்றவரல்லர். ஏதோ அதிர்ஷ்டத்தினால் ஆசிரியர் பதவியை பெற்றுவிட்டார். அவர் பையன்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க அவ்வளவு திறமை பெற்றவரல்லர். ஆயினும் அவருக்கு பாடங்களை கற்பிக்க அவகாசம் ஏற்பட்டது. அதில் ஒரு பையன் முன்பே வேறு ஆசிரியரிடம் நன்கு கற்றவன். அவன் உதவியை கொண்டு இவர் பாடத்தை நடத்தினார். அதன் மூலமாக அவனிடத்தில் ஏற்பட்ட ஆசைக்கு அளவே இல்லை. இந்த பையன் எதை சொன்னாலும் அவர் கேட்பார். இவன் இஷ்டப்படியே பள்ளியிலும் தன் இல்லத்திலும் ஏற்படும் வேலைகளிலும் பொதுவான காரியங்களிலும் இந்த ஆசிரியர் நடந்து வந்தார். சிறிது காலமாயிற்று. இந்த ஆசிரியருக்கும் பையனுக்குமே மனத்தில் முன்போல் அன்பு இல்லை. பையனுக்கும் மனம் அவரிடத்தில் மாறிவிட்டது.

இப்படி பல விஷயங்களில் உலகத்தில் மன மாறாட்டம் அதிகமாக ஏற்படுகிறது. ஏன்? மனம் குரங்கு போன்றது. குரங்கு ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு தாவும். மறுபடி அந்த கிளையிலிருந்து இந்த கிளைக்கு தாவும். வேறொரு கிளைக்கும் தாவும். ஒரே நிலையில் இல்லாத பிராணி அது. 'குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை' என்று சொல்லுவதுண்டு. குரங்கு கையில் பூமாலை கிடைத்தால் அதை என்ன என்ன செய்யும் என்று சொல்ல வேண்டுமா? பூவினின்று மணக்கும் மணத்தையா அது கவனிக்கும்? மிக மென்மையாக மாலை உள்ளது என்று பூவின் பெருமையைத்தான் அது கவனிக்குமா? உடனடியாக கசக்கி மாலையை எறிந்து எடுமே.

ஏதோ அதிருஷ்டத்தினால் ஓர் உயர்ந்த ரத்தினம் குரங்கின் கையில் கிடைத்தால் அதை அது என்ன செய்யும்? மூக்கால் மோந்து பார்க்கும், முத்தமிடும், நாவினால் நுகரும், தூரத்தில் எறியும், மறுபடி எடுக்கும். அடிக்கடி அதை பார்த்து சிரிக்கும். அந்த ரத்தினத்தை கல்லால் பொடி செய்யாமல் இருந்தால் போதும்; அதுவே அந்த ரத்தினத்தின் அதிர்ஷ்டம். அல்லது அந்த ரத்தினத்தை அடைபவனது அதிர்ஷ்டம். இம்மாதிரி நிலையை உடைய குரங்குக்குச் சமமானது மனம். இது பகவானிடத்திலோ வித்வானான உயர்ந்த பாகவதனிடத்திலோ ஸத் விஷயங்களிலோ நிலைத்திருக்காது.

மோகமாகிய பெருங்காட்டில் மனக்குரங்கு சஞ்சரிக்கும். அழகிய பெண்களின் கொங்கைகளாகிய மலையில் செல்லும் ஆசையாகிய கிளைகளில் தாவும். இதை எப்பெருமானிடத்தில் பக்தியாகிய கயிற்றால் கட்டினால்தான் நிலைத்து நிற்கும். இப்படி மனம் மிக சஞ்சலமாக இருக்கும் தன்மையை நினைத்தே, 'சஞ்சலம் ஹி மந: கிருஷ்ண' என்று அர்ஜுனன் கிருஷ்ணனிடம் சொன்னான். கிருஷ்ண பரமாத்மாவும் "மனத்தை அடக்குவது

சிரமம்தான். ஆயினும் மிக்க பயிற்சியினாலும் வைராக்கியத்தினாலும்தான் அடக்கி கொள்ள வேண்டும்" என்றான். எந்த விஷயத்தையும் அப்யாஸத்தால் பயிலலாம். உதாரணமாக, மிக்க வலிமை பெற்ற ஒரு காளை மாட்டை கழுத்தில் எடுத்து போட்டுக் கொண்டு ஒரு மைல் தூரம் யாராலும் செல்ல முடியாது. ஆயினும் இதை எளிதிலேயே செய்யலாம். ஒருவன் பதினைந்து தினங்கள் கொண்ட ஒரு சிறிய கன்றை கழுத்தில் போட்டு கொண்டு ஒரு மைல் தூரம் சென்றான். இதை எளிதில் செய்ய முடியுமே. இம்மாதிரி அந்த கன்றையே மாதக்கணக்கிலும் வருஷக்கணக்கிலும் கழுத்தில் எடுத்துக்கொண்டே இரண்டு மைல் மூன்று மைல் தூரம் செல்ல ஆரம்பித்தான். முதல் தினத்திலிருந்து வழக்கத்திலேயே வந்துள்ளபடியால் கன்று பெரிதாகியுங்கூட ஆயாஸமின்றி எடுத்துச் செல்ல முடிந்தது இவனுக்கு, கன்றும் நாளுக்கு நாள் வயதாகியும் பலிஷ்டமாகியும் வந்தது. இவன் நேற்று எடுத்து சென்ற கன்றுதானே என்று தினந்தோறும் எடுத்து செல்லலானான். இத அப்யாஸத்தால் ஏற்படுகிற விஷயம். திடீரென்று ஒரு பெரிய மாட்டை யாரால்தான் எடுத்து செல்ல முடியும்?

இம்மாதிரியே மனத்தை நாம் நல்ல விஷயங்களில் அப்யஸித்து வந்தால் மாறாட்டமில்லாமல் ஒரே விஷயத்தில் நிலைத்து நிற்கும் என்ற அபிப்ராயத்துடன் ஸ்ரீகிருஷ்ணன், 'அப்யாஸேந து கௌந்தேய, வைராக்யேண ச க்ருஹ்யதே' என்றான். ஆகையால் கணவன் மனைவி தாய் தந்தை புதல்வன் நண்பர்கள் முதலிய இவர்களுக்கு பரஸ்பரம் இருக்கும் அன்பு ஒரு நிலையில் இருக்காது. மாறாட்டத்தை அடைந்தே தீரும். யஜமானன் தனக்கு அடுத்த வேலைக்காரனிடத்தில் அதிக அன்பை பாராட்டுகிறான்; அவன் சொன்னபடி கேட்கிறான். வேலைக்காரன் இட்டதே சட்டம். இம்மாதிரி இருந்தும் அந்த யஜமானன் அந்த சிப்பந்தியினிடத்தில் மன மாறாட்டத்தை அடைந்து அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுவதை பல இடங்கிளில் பார்க்கிறோம்.

இப்படி உலகத்தில் மன மாறாட்டம் அடைவதை பல இடங்களில் பார்த்திருப்பதோடு அல்லாமல் ராமாயணத்திலும் இதை கேட்டிருக்கிறோம். தசரத சக்கரவர்த்தியின் மூன்றாம் மனைவியான கைகேயி ஸ்ரீராமனிடத்தில் வைத்திருந்த அன்பை ஒரு நிமிஷத்தில் மாற்றிக்கொண்டாளே. 'அயோத்தியை ராமன் ஆண்டால் என்ன? பரதன் ஆண்டால் என்ன? எனக்கு ஒருவிதமான வேறுபாடும் இல்லை. இவ்விருவரிடத்திலும் வைஷம்ய புத்தி எனக்கு இல்லை' என்று சொல்லி, ராமனிடத்தில் அதிக ஆவல் கொண்ட கைகேயி ராமனின் பட்டாபிஷேகத்தை கலைக்க வேண்டும் என்று எண்ணி சொல்ல வந்த கூனியின் கழுத்தில் உயர்ந்த முத்தாபரணத்தை போட்டாள் அல்லவா? இப்படிப் பட்ட இவளது மனம் ஏன் மாறியது? "இப்போதே ராமனை பதினான்கு வருஷம் காட்டுக்கு அனுப்புகிறேன், பரதனுக்கு அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி, கணவனான தசரதனிடத்தில் இவ்விஷயத்தை கூறினாள் அல்லவா?

ஸ்ரீராமன் சிறியவனாக இருந்தபோது உண்டை வில்லை எடுத்து கூனியின் கூனைப் பார்த்து விளையாட்டு என்று கருதியே அடித்தான். அது அவளுக்கு துன்பத்தை கொடுத்தபடியால் அவளது மனம் மாறியது. இது நியாயமே. கைகேயின் மனம் ஏன் மாறியது? இவள் ராமனிடத்தில் அதிக அன்பு கொண்டவள்தானே?

'எல்லாம் எம்பெருமானின் ஸங்கல்பத்தினால் நடக்கின்றன' என்று வேதாந்திகள் கூறுகின்றனர். ஒரு பொருளினிடத்தில் பிரீதியை வைப்பதோ பகையை பாராட்டுவதோ நமது முயற்சியினால் நடப்பதன்று; நம்முடைய நினைப்பினால் நடைபெறுவதுமன்று. இவை பகவத்

ஸங்கல்பாயத்தம், 'ஆத்மனஸ் து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி' என்று வேதமும் கூறுகிறது. நாம் ஒருவரிடத்தில் அதிக ஆவலை காட்ட வேண்டும் என்று எண்ணம் கொண்டாலும் அது அப்படியே நடைபெறுவதில்லை. நம் மனம் வேறு விதமாகவே முடிகிறது. பகவான் அந்த அந்த விஷயங்களுக்கு தகுந்தாற்போல் முன்பே ஒரு காரணத்தை ஏற்பாடு செய்து மன மாறாட்டத்தை உண்டு பண்ணுகிறான்.

கைகேயி தனக்கு திருமணமாவதற்கு முன்பு தந்தையின் இல்லத்திலிருந்து வந்தாள். அப்பொழுது துர்வாஸர் என்ற முனிவர் கேகய மகாராஜனின் அரண்மனைக்கு வந்தார். அரசன் முனிவரை கண்டு உகந்து வரவேற்று அர்க்கிய பாத்யாதிகளை ஸமர்ப்பித்து, "ஸ்வாமிக்கு என்ன திருவுள்ளம்? அதை செய்ய அடியேன் ஸித்தனாக இருக்கிறேன்" என்றான். முனிவர் மிக்க மகிழ்ச்சியுடன், "நான் ஒரு வேள்வி செய்ய நினைத்திருக்கிறேன். இது பதினைந்து தினங்களில் முடிவு பெறும். இதற்கு வேண்டிய பொருள்களையும் உன் அரண்மனையில் தனியாக ஓர் இடத்தையும் தர வேண்டும்" என்று கேட்டார். அரசன், "துர்வாஸரோ மிகக் கோபம் கொண்டவர்; ஏதாவது இவ்விடத்தில் தீய செயல் ஏற்பட்டால் சபித்துவிடுவார். ஆகையால் அவருக்கு இங்கு இடம் கொடுப்பது ஏதாவது அநிஷ்டத்தில் முடியும்' என்று எண்ணி, "முனிச்ரேஷ்டரே, தேவரீர் வேள்வி செய்யத் தகுந்த இடமாக, இந்த நாட்டில் பதினைந்து மைல் தூரத்தில் ஒரு கட்டிடத்தை கட்டித் தருகிறேன். வேண்டிய பொருள்களையும் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றான். முனிவர் அதற்கு சம்மதிக்கவில்லை.

இவ்விஷயத்தை கேட்ட கேகய மகாராஜனின் புதல்வியான கைகேயி தந்தையை பார்த்து "அப்பா! நீர் இந்த முனிவருக்கு அரண்மனையிலேயே இடம் கொடும். நான் பக்கத்திலேயே இருந்து இவரை உபசரிக்கிறேன். அதை பற்றி உமக்கு கஷ்டம் வேண்டாம்" என்றாள். கேகயன், பெண் சொன்னபடியே சம்மதித்தான். துர்வாஸர் வேள்வியை செய்யத் தொடங்கினார்.

பத்து தினங்கள் சென்றன. தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நகரிலுள்ள ஜனங்கள் முனிவரைத் தரிசிக்க வருவார்கள். முனிவர் அந்த சமயம் யோகத்தில் ஆழ்ந்திருப்பார். ஜனங்கள் புனிதத்தன்மை பெற்ற முனிவரின் முகத்தை தரிசித்து வலம் வந்து பல பாடல்களை பாடி செல்வர். இப்படி இருக்கும் தருணம் கைகேயி, யோகத்தில் ஆழ்ந்திருக்கும் முனிவர் அசையாமலும் பேசாமலும் ஒரே நியதியுடன் இருப்பதை கண்டு, முனிவரின் முகத்தில் ஒரு சித்திரத்தை வரைய நினைத்துவிட்டாள். இவள் அறியாத பெண்ணாகையால் ஏதோ விளையாட்டாக எண்ணிவிட்டாள். சித்திரம் வரைவதில் மிக்க திறமை பெற்றவள் இவள். அசையாமலும் ஆடாமலும் இவர் இருந்தபடியால் இவரது இரு தாடைகளிலும் ஒரு புலியையும் ஒரு சிங்கத்தையும் வரைந்துவிட்டாள். இதை முனிவரும் அறியவில்லை.

மறு நாள் காலை ஜனங்கள் முனிவரை தரிசிக்க வந்தனர். புலி போலவும் சிங்கம் போலவும் இவர் காக்ஷி அளித்தார். இதைக் கண்ட ஜனங்கள் மிரண்டு திரண்டு, "ஐயோ! புலியும் சிங்கமும் இங்கு வந்து பயமுறுத்துகின்றனவே! திடீரென இவை இங்கு எப்படி வந்தன?" என்று கூக்குரல் இட்டு ஓடத்தோடங்கினர். அரசன் இதைக் கேட்டு வந்து பார்த்துப் பயந்தான். பெரும் கூச்சல் ஏற்பட்டது. முனிவர் யோகத்திலிருந்து எழுந்து 'இது என்ன? எல்லா ஜனங்களும் என்னை கண்டு வெறுக்கிறார்களே! நேற்றைய முந்திய தினம்போல் என்னிடத்தில் ஜனங்கள் நெருங்கவில்லையே!' என்று யோசித்தார். ஜனங்களின் பேச்சை கேட்டு விஷயத்தை தெரிந்து கொண்டார். பிறகு உட்கண்ணால் கைகேயியின் செயல் இது என்று எண்ணி அவளைச் சபித்தார்.

"கைகேயி, இப்பொழுது ஜனங்கள் என்னை கண்டு வெறுத்தது போல் உன்னையும் ஒரு சமயம் எல்லா ஜனங்களும் வெறுப்பார்கள். அப்படி அனைவரும் வெறுக்கும்படியான ஒரு செயலை நீ செய்வாய். இப்படிப்பட்ட செயலை செய்தும் உன் மனத்தில் கலக்கமும் வருத்தமும் ஏற்படா, முகத்திலும் ஒரு விகாரமும் ஏற்படாது" என்ற முனிவர் சபித்தார். இதை கேட்ட கைகேயி, "ஸ்வாமிந், ஏதோ அறியாத்தனமாக செய்துவிட்டேன்; இதை பொறுத்தருளவேண்டும்" என்றாள். துர்வாஸர், "நீ என்னை இது வரையில் நன்கு உபசரித்தபடியால் ஒரு சமயத்தில் உன் பர்த்தாவைக் காப்பாற்றுவாய். அதன் மூலமாக பர்த்தா உன் இஷ்டப்படி நடந்து உன் வார்த்தையை கேட்டு உன்னை மகிழ்விப்பான். இப்படி சித்திரம் வரைந்து அபசார பட்டதனால் முன்கூறிய சாபத்தையும் பெறுவாய்" என்று சொல்லி தாம் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு சென்றுவிட்டார். அவருடைய அநுக்கிரகம், சம்பராசுரனைத் தசரதர் வென்றபோது கைகேயிக்கு பலித்தது. சாபம் ஶ்ரீராமனை காட்டுக்கு அனுப்பும்படியான மனத்தை உண்டு பண்ணிற்று.

ஆகையால் மனிதனின் மனம் ஒரே விஷயத்தில் நிலைத்து நிற்காது. எனவே கெட்ட விஷயங்களில் மனத்தை செலுத்தாமல் ஸத்விஷயங்களில் பயிற்சி செய்து நிலைக்க செய்து நல்ல கதியை பெற விரும்ப வேண்டும்.

மனைவி புருஷர்களுக்கே ஏதோ ஒரு காரணத்தால் மனம் மாறி டைவர்ஸ் செய்து கொள்ளுகிறார்களே. எத்தனை வருடம் குடித்தனம் செய்துள்ளனர். எவ்வளவு நகை புடவை ஆஹாரங்கள் பெற்றுள்ளனர். எப்படியோ மாறிவிடுகிறது. தாய் தந்தை புத்ரன் இவர்கள் கொடுக்கும் ஆனந்தம் அல்பம். மஹத்தான ஆனந்தத்தை அளிக்கும் பர்தாவை எவள் விடுவாள்? மஹா பாபம் என்றாள், ஸீதா பிராட்டி கௌஸல்யையினிடம்.

குரங்கு போல் உள்ள மனதை வெளி விஷயங்களாகிற கிளைகளில் ஸஞ்சரிக்க விடாமல் எம்பெருமானிடம் உயர்ந்த பிரியம் என்ற கிளையில் சஞ்சரிக்க வைக்க வேண்டும் என்று மனதை விளித்து ஆழ்வார்கள் பாடுகின்றனர். இதுதான் ஸம்ஸார பந்தத்திற்கு மோக்ஷத்துக்கு காரணம்.

நஞ்சமே, நல்லை நல்லை உன்னைப் பெற்றால் என் செய்யோம் இனி என்னக் குறைவினம். மைந்தனை மலராள் மணாளனை துஞ்சும்போது விடாது தொடர் கண்டாய. என்றவைகளை கவனிக்கவும்.

*****

# 49. யத்ர ப்ராதா ஸஹோதர:

தலைப்பைக் கண்டதுமே அனைவருக்கும் ஸ்ரீமத்ராமாயணத்தில் மனம் ஓடும்.

> தேசே தேசே களத்ராணி தேசே தேசே ச பாந்தவா: |
> தம் து தேசம் ந பச்யாமி யத்ர ப்ராதா ஸஹோதர: ||

என்ற ச்லோகம் ஸ்ரீராமாயணத்தில் யுத்த காண்டத்தில் உள்ளது. ராமலக்ஷ்மணர்களுடன் ராவணன் யுத்தம் செய்த போது, ஆதிசேஷ அவதாரமான லக்ஷ்மணன் மிகச் சினம் கொண்டு அநேக பாணங்களை வர்ஷம் போல் வர்ஷித்து, ராவணனுடைய ரதத்தின் மேல் கட்டியிருந்த த்வஜபடத்தையும் ஸாரதியின் தலையையும் அறுத்தான். மேலும், ராவணனுடைய வில்லையும் முறித்தான். இதனால் கடுங் கோபத்துடன் ராவணன் சீறியெழுந்து, 'உடலில் ஏற்பட்ட நோய் வேருடன் உடனே அறுக்கப்படாவிட்டால் மனிதனை எப்படி வலிமை பெற்று கொன்றுவிடுமோ அவ்வாறு ராம லக்ஷ்மணர்களின் பலம் நம்மை விரைவில் அழித்துவிடும்' என்று எண்ணியும், 'இவர்களுக்கு அவ்வப்போது யோசனைகளைக் கூறி உதவும் விபீஷணனை முதல்முதலில் கொன்றுவிட்டால் இவர்களைப் பிறகு அநாயாஸமாக ஜயித்துவிடலாம்' என்று நினைத்தும், விபீஷணனை கொல்வதற்காக, மயனால் கொடுக்கப்பட்ட சக்தி என்னும் ஆயுதத்தை எடுத்துப் பிரயோகித்தான். இதை கண்டதும் லக்ஷ்மணன் தனக்கும் ராமனுக்கும் உயிர்நிலை போல் இருக்கிற விபீஷணனுக்கு ஆபத்து நேர்ந்துவிடும் என்று பயந்து, சக்தி என்னும் அந்த ஆயுதத்துக்கு முன்தான் நின்று, அநேக பாணங்களை ஏவி அந்த சக்தியை அறுக்க முயன்றான். ராவணன் இதைக் கண்டு லக்ஷ்மணனை சக்தி அடித்து கொன்றால் மிகவும் சந்தோஷம் என்று எண்ணினான். லக்ஷ்மணன் பலவாறு முயன்றும் முயற்சி பலன்அளிக்கவில்லை. மிக்க வேகத்துடன் வந்த சக்தி லக்ஷ்மணனின் மார்பில் பாய்ந்துவிட்டது. அதனால் அவன் மயக்கத்துடன் கீழே விழுந்தான். இந்த சமயத்தில் லக்ஷ்மணனைப் பார்த்து ராமன் கூறிய வாக்கியமே இது.

"அந்தோ என் அருமை சகோதரனை இழந்துவிட்டேனே! என் மனைவி சீதையின் பொருட்டு சகோதரனை பலி கொடுக்க நேர்ந்ததே. சுமித்திரை முதலியவர்களிடத்தில் 'லக்ஷ்மணன் எங்கே?' என்று கேட்டால் என்ன சொல்வேன்? மனைவி என்பாள் ஒருத்தியை அடைவது எல்லாத் தேசத்திலும் எளியது, எந்த எந்த ஊருக்கு செல்லுகிறோமோ ஆங்காங்கு ஒரு பெண்ணை அடைந்துவிடலாம். அதன் மூலமாக மாமியார், மாமனார், மைத்துனன், அவர்கள் உற்றார்கள் முதலியோரையும் சுலபமாக பெற்றுவிடலாம். ஆனால், ப்ராதாவான சகோதரன் இருக்கும் தேசத்தை பார்க்க முடியாது. அதாவது எல்லா உறவினரையும் பெற்றுவிடலாம்; பிராதாவான சகோதரனை மாத்திரம் பெற முடியாது" என்று ராமன் மிக்க வருத்தத்துடன் லக்ஷ்மணனை கண்டு வானர வீரர்களுடன் புலம்புகிறான்.

இங்கு, மேல் கதையின் தொடர்பு எவ்வாறு போகிறது என்பதை நாம் விவரிக்க வரவில்லை. இந்த லோகத்தில் லக்ஷ்மணனை ப்ராதா என்றும் சகோதரன் என்றும் ராமன் கூறியது எவ்வாறு என்பதை மாத்திரம் ஆராய முன்வந்துள்ளோம்.

லக்ஷ்மணன் ராமனுக்கு ப்ராதா என்பதில் ஐயமில்லை. தன் ஸபத்னி மாதாவான (சிற்றன்னை) சுமித்திரையின் புதல்வன் லக்ஷ்மணன் ஆனபடியால் ராமனுக்கு அவன் தம்பி என்பது வாஸ்தவம். ஒரு புருஷனுக்கு பல மனைவியரிடத்தில் பல புத்திரர்கள் பிறந்தால் அனைவரும்

அண்ணன் தம்பி என்ற முறையை அடைந்தவர்கள்தாம். ஆயினும் அவர்கள் சகோதரர்கள் ஆகமாட்டார்கள். ஒரு தாயின் வயிற்றில் உடன் பிறந்தவர்களைத்தான் சகோதரர் என்று சொல்வது வழக்கம். லக்ஷ்மணனையும் சத்துருக்னனையும் சகோதரர்கள் என்று சொல்லலாம்; இவர்கள் இருவருக்கும் சுமித்திரை ஒருத்தியே தாயானபடியால். ஆகையால் கைகேயியின் புதல்வனான பரதன் ராமனுக்கு ப்ராதாவாக இருந்தபோதிலும் எப்படி சகோதரனாக மாட்டானோ அவ்வாறே ராமனுக்கு லக்ஷ்மணனும் ப்ராதாவாக இருந்த போதிலும் சகோதரர் ஆகமாட்டான். மேலும் ப்ராதா என்று சொன்னாலே போதும்; சகோதரன் என்று சொல்வது அதிகம். அல்லது சகோதரன் என்று சொன்னாலே போதும்; ப்ராதா என்று சொல்வது அதிகம். பல கேள்விகள் இங்கு அவகாசம் பெறுகின்றன. இதற்கு பல பெரியோர்கள் சொல்லும் வகையில் விடை அளிக்கிறோம்.

எல்லா உலகங்களுக்கும் மூலகாரணமாகவும் எல்லாவிதமான பந்துவாகவும் உள்ள பகவான் லோக கண்டகனான ராவணனை கொல்ல வேண்டும் என்று தேவதைகளால் பிரார்த்திக்கப் பெற்று, தசரத சக்ரவர்த்திக்கு திருக்குமாரனாக அவதரித்தான். பகவான் தயை, ஸௌசீல்யம், ஸௌலப்யம், வாத்ஸல்யம் முதலிய திருக்கல்யாண குணங்களுக்கு இருப்பிடமானவன். இப்படி உயர்ந்த குணங்களுக்கு ஸமுத்திரம் போன்றவன் ஆனபடியால் புதல்வனிடத்தில் பிதா இருக்க வேண்டிய நிலையையும், பிதாவினிடத்தில் புத்திரன் இருக்க வேண்டிய நிலையையும், ப்ராதாக்கள் ஒருவருக்கொருவர் இருக்க வேண்டிய நிலையையும், மற்றும் பந்துக்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ள வேண்டிய நிலையையும் தானே அநுஷ்டானமுகத்தினாலும் உபதேசமுகத்தினாலும் காட்டுகிறான்.

ராமன் சித்திரகூடத்தில் இருந்த போது, அவனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைக்க வேண்டும் என்ற மனோபாவத்துடன் வந்த பரதனை லக்ஷ்மணன் வேறு விதமாக நினைத்தான். அப்பொழுது ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து, "ஒரு ப்ராதா தன் மற்றொரு ப்ராதாவை கொல்வதும் அடிப்பதும் வேறு விதமாக கருதுவதும் ந்யாயமாகுமா? நமக்கு உயிர் நிலையன்றோ அவன்? பிதாவைத்தான் கோபத்துடன் ஏதாவது பேசிவிடலாமா?" என்று உபதேசித்தான்.

சுக்ரீவன் தன் அண்ணனான வாலியை கொன்று தனக்கு கிஷ்கிந்தையில் அபிஷேகம் செய்து வைக்க வேண்டும் என்று ராமனிடத்தில் வேண்டிக்கொண்டான். வாலி சில அபராதங்களை செய்திருக்கிறான் என்பதை மனத்தில் கொண்டு சுக்ரீவன் தனதிடத்தில் செய்த சரணாகதியை ஏற்று கொண்டு, சுக்ரீவனிடத்தில், "உனது விருப்பத்தை நிறை வேற்றி வைக்கிறேன்" என்றான் ராமன். இதை அருகில் கேட்டுக் கொண்டிருந்த லக்ஷ்மணன் ராமனை நோக்கி, "அண்ணா, இவ்விருவரும் அண்ணன் தம்பிகளாயிற்றே. அவர்கள் பிறகு ஒன்று சேர்ந்து விடுவார்கள். இந்த சமயத்தில் சுக்ரீவன் சொன்ன வார்த்தையை கேட்டு அதன்படி நடப்பது எனக்கு உசிதமாக தோன்றவில்லை" என்றான். இதை கேட்ட ராமன், "லக்ஷ்மணா, உலகத்திலுள்ள அண்ணன் தம்பியர் எல்லாரும் ஒரே அபிப்ராயத்துடன் இருப்பார்கள் என்று நினைக்க வேண்டாம். அதிலும் குரங்கு சாதியில் பிறந்த சுக்ரீவனின் ஒழுக்கத்தை நினைக்க வேண்டாம். ஒரு தகப்பனாருக்கு பல மனைவியர் இருந்தபோதிலும் எந்த தாய் வயிற்றில் பிறந்தாலும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதை தலையால் வகிக்க வேண்டும். இம்மாதிரி பரதன் ஒருவன்தான் உத்தமனான ப்ராதா, மற்ற யார் அப்படி இருக்க முடியும்?" என்று பதில் சொன்னான்.

இப்படி ராமன் பல இடங்களில் கூறுவதை நன்கு ஆராய்ந்து பார்த்தால் ஒரு விஷயம் புலப்படுகிறது. அதாவது ஒரு தகப்பனுக்கு ஒரு தாயினிடத்தில் பிறக்கும் புதல்வர்களை

சகோதரர்கள் என்று எப்படி நினைக்கிறோமோ அப்படியே ஒரே தகப்பனுக்கு பல தாயாரிடத்தில் பிறக்கும் புதல்வர்களையும் சகோதரர்கள் என்றே நினைக்க வேண்டும்.

இங்கு ராமன், லக்ஷ்மணன் பிந்நோதரனாக இருந்த போதிலும் அவனை சகோதரன் என்றே கருதுகிறான் போலும். 'சகோதரனிடத்தில் எவ்வளவு வாஞ்சையை வைப்பேனோ அவ்வளவு வாஞ்சையை லக்ஷ்மணனிடத்தில் வைத்திருக்கிறேன்' என்பதை நன்கு வெளிக்காட்ட, 'ஸஹோதர:' என்று சொன்னான். ஸஹோதர துல்யன் என்று பொருள்.

இப்படி சகோதரன் என்பதற்கு சகோதரதுல்யன் எனப் பொருள் கொண்டு ஓர் அர்த்தம் சொல்லப்பட்டது. மற்றொரு சமாதானமும் கேண்மின்.

ராமன் காட்டுக்கு வந்ததும் குகனை சந்தித்தான். குகப் பெருமாளின் பக்தி அதிசயத்தையும் குணாதிசயத்தையும் கண்டு, வேறு சாதியில் பிறந்திருந்தபோதிலும் அவனை தன் சகோதரன் என்றே நினைத்தான்.

பிறகு சுக்ரீவனை தம்பியாக கருதினான். விபீஷணன் அரக்க வம்சத்தில் பிறந்திருந்த போதிலும் அவனையும் தன் சகோதரனாக கருதினான்.

தாய் தந்தை இருவருமே வேறாக இருக்கும்போதும் குக பெருமாளையும் சுக்ரீவனையும் விபீஷணனையும் சகோதரர் என்று ராமன் கருதினான் என்றால் ராமனின் குணம் எவ்வளவு விஞ்சியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி இவர்களையே சகோதரர்கள் என்று நினைப்பவன் ஒரு தகப்பனாருக்கே பல மனைவியர் மூலம் பிறந்தவர்களை சகோதரர்கள் என்று ஏன் நினைக்கமாட்டான்? ஆக லக்ஷ்மணனை சகோதரன் என்று இவன் நினைக்க தட்டில்லை;

மற்றொரு சமாதானமும் கேண்மின் - 'ப்ராதா ஸஹோதர:' என்ற இடத்தில் 'ஸஹ:, அதர:' என்று பிரிக்க வேண்டும். ஸஹ:- ஸஹநசீல:, பொறுத்து கொள்பவன். பசிதாகம் முதலியவை எவ்வளவு துன்புறுத்தினாலும் அவற்றை லக்ஷ்யம் செய்வதில்லை. நன்கு பொறுத்து தன் வேலையை சரிவர செய்பவன். அதர: - பயமற்றவன். போரில் பயந்து பின்வாங்குபவனல்லன். முன்னிலையிலிருந்து எதிரியை அம்புகளினால் அடித்து விரட்டுகிறவன். இப்படி ஸஹ: அதர: என்று பதம் பிரித்து பொருள் கூறுவதனால் ப்ராதா, ஸஹோதர: என்ற இரண்டும் சேர்த்து சொன்னது சாலப் பொருத்தம் பெறுகிறது.

இப்படி பல முறையில் இவ்விடத்தில் சமாதானம் கூறுவதுண்டு. இந்த பிரகாரங்களை காட்டிலும் மற்றொரு விதத்தில் ரஸகனமான சமாதானம் ஆன்றோர் சொல்வர்.

தசரதர் புத்ர சந்ததியை முன்னிட்டு புத்ர காமேஷ்டி என்னும் வேள்வியை செய்தார். அப்பொழுது தேவதைகள் ஒன்று சூழ்ந்து மகாவிஷ்ணுவினிடத்தில், 'ராவணனை ஸம்ஹரிக்க, தேவரீர் தசரதனுக்கு நான்கு புத்திரர்களாகப் பிறக்க வேண்டும்' என்று வேண்டி கொண்டனர். புத்ரகாமேஷ்டி முடியும் தருணத்தில் அக்னியிலிருந்து ப்ராஜாபத்ய புருஷன் கையில் பாயஸ கலசத்தை எடுத்துக் கொண்டு வெளிவந்தான். அவனிடமிருந்து பாயஸ கலசத்தை தசரதர் பெற்று, முனிவர்களின் நியமனத்தை முன்னிட்டு, தம் மூன்று மனைவியருக்கும் பாயஸத்தை ஒருவிதமாக பிரித்து கொடுத்தார். ப்ராஜாபத்ய புருஷன் கொடுத்த பாயஸம் மூலமாகத்தான் ராமன், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் ஆகிய நால்வரும் பிறந்தார்கள் என்பது நிர்விவாதம்.

இவர்கள் நால்வருக்கும் காரணமான பாயஸம் ஒரே கலசத்தில் இருந்தபடியால் இவர்கள் நால்வருமே ஒரே உதரத்திலிருந்து உண்டானவர்கள் என்று சொன்னால் விரோதமில்லை. எனவே ஒரே கலசத்தின் உதரத்தில் (மத்யத்தில்) நின்ற பாயஸம் மூலமாக இவர்கள் உண்டான படியால் இவர்கள் சகோதரர்கள் என்று சொல்வதை யாரால் மறுக்க முடியும்?

பாயஸத்தை புசித்த கௌஸல்யை முதலியவர்கள் மூலமாக இவர்கள் பிறந்தபோதிலும் பாயஸம் என்பது ஒரே கலசத்தில் முதலில் வைக்கபட்டபடியால் அதை வைத்துகொண்டு சகோதரர் என்று சொல்லலாமே. இதை நினைத்துதான் ஸ்ரீராமன் லக்ஷ்மணனை சகோதரன் என்று சொன்னது. இப்படி பெரியோர் சொன்ன வழி மிக்க சுவையுடனும் போற்றத்தக்கதாயும் உள்ளது.

ஆகையால், 'யத்ர ப்ராதா ஸஹோதர:' என்று ராமன் கூறியதாக வால்மீகி சொன்னது மிக பொருத்தமேயாகும்.

ராமன் இங்கு லக்ஷ்மணனை புகழ்ந்து பேசினான். இன்னும் ஓர் இடத்தில், சத்ருக்னனையும் பரதனையும் புகழ்ந்து பேசுகிறான். "கோதாவரிக்கரையில், லக்ஷ்மணனிடம், பரதனோடும் சத்ருக்னனோடும் உன்னோடும் நான் எப்பொழுதும் சேர்ந்து ஸந்தோஷிக்கப் போகிறேன்" என்றான். லக்ஷ்மணனிடம் நேரில் இருக்கும் போதே இப்படிச் சொல்வதின் கருத்து என்ன. அவர்களடன் சேராமல் உன்னுடன் சேர்ந்திருப்பது சேர்கையில் சேர்த்தியில்லை என்பது. இதனால் பரதனையும் சத்ருக்னனையும் புகழ்ந்தான் ஆயிற்று. இவ்வாறு, ஸஹோதரப்பாசம் ராமன் காட்டுகிறான்.

யஷப்ரச்னத்தில் தர்ம புத்ரன் "ஒருவனை பிழைப்பிக்கச் செய்கிறேன். நீ யாரை வேண்டுகிறாய்"? என்றதற்கு யஷனைப்பார்த்து "எனது ஸபத்நிபுதரனான நகுலனைதான் வேண்டுகிறேன்" என்றான். ஸஹோதரன் அல்லாதவனாக நகுலன் இருந்தபோதிலும் ஸஹோதர வாஞ்சை எப்படி உள்ளது என்பதை கவனிக்கவேண்டும். இதுதான் முக்யம்.

இக்காலத்தில் பணத்தின் ஆசையாலும் வேறு வித நினைவாலும் ஸஹோதரர்களே சண்டை செய்து கொலைவரையில் நாடுகிறார்கள். அந்தோ !. முன்பு எல்லாம் பந்து பரிபாலனம் அதிகம். வாலியும் சுக்ரீவனையும் ராவணனையும் விபீஷணனையும் போல் இருக்கிறார்கள். குணத்தை நாடுவதில்லை. ராமாதிகள் போல் இருக்க வேணும்.

*****

# 50. உயிரா, மானமா?

'உயிர் பெரிதா, மானம் பெரிதா?' என்று வசனம் சொல்லுவதுண்டு. ஸாமான்யமான பாமர ஜனங்களில் கூட இதை சொல்லாதவர் ஒருவருமில்லை. தனக்கு எவ்வளவு ஆபத்து நேர்ந்தபோதிலும் உயிரையும் பேணாமல் மானத்தைத்தான் காப்பாற்றிக் கொள்வான் நல்லவன்.

இக்காலத்து மக்களோ, 'உயிர்தான் பெரிது, மானம் பெரிதல்ல' என்ற எண்ணி, எவ்வளவு அவமதிப்பு வந்த போதிலும் அதைத் தள்ளி, உயிரைக் காப்பாற்றுவதற்கு அநுகுணமான செயல்களை செய்வதிலேயே ஊக்கமுள்ளவர்களாக உள்ளனர். அவர்கள் இதைக் கேட்டால் நம்மிடம் வெறுப்பும் கொள்வர். காலத்தின் போக்கு இவ்விதமாக ஆகிவிட்டதே! முன்காலத்தில், 'நமக்குப் பொருளும் பெரிதல்ல, உயிரும் பெரிதல்ல, மானமே பெரிது. அதையே காப்பாற்ற வேண்டும். அதற்கு தகுந்த செயலையே செய்ய வேண்டும்' என்று எண்ணி அதன்படி நடப்பர். இதுதான் அறிவாளிகளின் தன்மை.

ஏனெனில், உயிர் அழிந்துபோகும். ஆனால் மானம் என்பது எப்பொழுதும் அழியாமல் இருக்கக்கூடிய வஸ்து. மனிதன் இறந்துவிட்டாலும் அவனுடைய புகழ் அழிந்து போவதில்லை. கோபுரம் கட்டுதல், குளம் வெட்டுதல், தானம் செய்தல், பள்ளிக்கூடம் ஏற்படுத்துவது - இவை போன்ற பல நற்செயல்களைப் பல ஆண்டுகள் கழித்தும் ஜனங்கள் கூறித் துதிப்பதைப் பார்க்கிறோம் அல்லவா?

தர்மமோ அதர்மமோ செய்து உயிரைப் பேண முன் வருகிறீர்களே, இந்த உயிர் அதர்மம் செய்தும் எத்தனை நாள் இருக்கப் போகிறது? ஒரு நாள் அழிந்தே தீருகிறது. தினந்தோறும் இதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோமே. இவன் செய்த அக்ரமந்தான் நிலைத்து நிற்கிறது. இது இவ்வுலகில். மேலுலகிலும் இதன் பலனாக நரகத்தையே அநுபவிக்கப் போகிறான். இதெல்லாம தெரிந்தும் மானத்தையும் விட்டு உயிரைப் பேண ஆசைப்படுகிறார்களே? இதென்ன ஆச்சரியம்!

இதனால்தான் பீமஸேனனும்,
ப்ராணம் வாபி பரித்யஜ்ய மாநமேவாபிரக்ஷது ।
அநித்யோ பவதி ப்ராணோ மாநஸ் த்வாசந்த்ரதாரகம் ॥

என்று சொன்னான்.

'உயிர் என்பது எப்படி அழியும்? அது ஆத்மாதானே? அதுதான் அழியாப் பொருளாயிற்றே. அது நித்தியம் என்று அனைவரும் இசைந்ததுதானே? கீதையிலும் அதை உலர்த்த முடியாது, கொளுத்த முடியாது, வெட்ட முடியாது என்று சொல்லவில்லையா? ஆகவே, அழியும் பொருள் அது என்று எவ்விதம் சொல்ல முடியும்?' என்று நினைக்கலாம்.

ஆத்மா அழியாப் பொருள்தான். அதை நினைத்து, 'உயிரா மானமா?' என்னும் தலைப்பு வந்ததல்ல. லோகத்திலும் தப்புச் செய்பவனைப் பார்த்து, 'உயிர் பெரிதா, மானம் பெரிதா?' என்று சொல்லுகிறார்கள். இவ்விடங்களில், இப்பொழுது சரீரத்துடன் இருக்கும் ஆத்மாவைப்பற்றிய பேச்சு இது.

கீதாசார்யன், அர்ஜுனனைப் பார்த்து, 'நீ யுத்தம் செய்யாமலிருந்துவிட்டால் எதிரிகள் பலவந்தமாக உன் மேல் அம்புகளைப் போட்டு கொன்றுவிடுவார்கள். உனக்கு பெரிய அபகீர்த்தி ஏற்பட்டுவிடும். இதைவிட, யுத்தம் செய்து அவர்களை வெல்வதே உயர்ந்தது. மேலும், 'யுத்தம் ஆரம்பித்தபோது பயத்தினால் அர்ஜுனன் ஓடிப்போனான்' என்று பலம் உள்ளவர்களும் மற்றவர்களும் பரிஹஸிப்பார்கள். இந்த அபகீர்த்தி எப்போதும் நிலைநிற்கும். சௌகர்யம் வீர்யம் பராக்ரமம் முதலியவற்றை பெற்ற உனக்கு இந்த அபகீர்த்தியைவிட மரணமே மேலானது என்று தோன்றும்" என்று சொன்னார்.

உலகிலுள்ளவர் அனைவரும் ஒரே விஷயத்தில் அபிருசி உள்ளவர் அல்லர். சிலர் படிப்பிலும், சிலர் பணத்திலும், சிலர் ஸுகமாக உயிர் வாழ்வதிலும், சிலர் மானத்திலும் ஆசை கொண்டவர்கள்.

படிப்புத்தான் முக்கியம் என்று சிலர் கருதுவர். இது வாஸ்தவமே. படிப்பில்லாமல் அறிவு வளருமா? மனிதனுக்கு கௌரவம்தான் ஏற்படுமா?

ஒருவனுக்கு விவாகம் நடந்தது. நடை உடை பாவனைகளைப் பார்த்து, அவன் நன்கு படித்தவன் என்று ஏமாந்து, பெண்ணைக் கொடுத்துவிட்டார் பெண்ணின் தந்தை. அவனுக்கோ எழுத படிக்க தெரியாது. மனிதனைப் பார்த்தால் தோற்றத்தில் மட்டும் கம்பீரமாக இருந்தான். ஒரு ஸமயம் அவன் மாமனார் வீட்டுக்கு சென்றான். அவன் சென்று இரண்டு தினம் கழித்து அவன் மாமியாருக்கு உடல் நிலை சரியில்லாமற் போகவே அவன் மாமனார் அவளை அழைத்துக் கொண்டு வைத்தியத்துக்கு வெளியூருக்குச் சென்றார். போகும்போது, சென்றவுடன் தாயின் உடல் நலத்தைப் பற்றி கடிதம் எழுதச் சொன்னாள் பெண்.

ஒரு வாரம் கழித்துத் தந்தையிடமிருந்து மகளுக்கு கடிதம் வந்தது. பெண் படிக்காதவளாதலால், தன் கணவனிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னாள். அவன் எழுதப் படிக்க தெரியாதவன் என்பதை இனிமேல்தானே அறியப் போகிறாள்? கணவனும் தன் குட்டு வெளிப்படாமல் இருக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. கடைசியில் கடிதத்தை எடுத்தான். இப்படியும் அப்படியும் பார்த்தான். 'ஐயோ, நாம் சிறுவயதில் பெற்றோர் சொல்லை அலட்சியம் செய்து ஏமாற்றிப் படிக்காமல் இருந்துவிட்டோமே. இப்போது நாம் அல்லவோ ஏமாந்தோம்?' என்று தன் பால்ய விளையாட்டுக்களை நினைத்து அழுதுகொண்டே கடிதத்தைப் படிப்பது போலப் பாவனை செய்தான்.

அவனது அபிப்ராயம் அந்த பெண்ணுக்கு எப்படித் தெரியும்? 'நம் தாய்க்குத்தான் ஏதோ ஆபத்து வந்துவிட்டது. எனவேதான் வெளியில் சொல்லாமல் துக்கம் தாங்காமல் மனத்திலேயே படித்துக்கொண்டு தன் கணவர் அழுகிறார்' என்று எண்ணினாள். மிகவும் பயமடைந்து அழுதாள். சிறிது நேரத்தில் அக்கம்பக்கத்திலுள்ள அனைவரும் கூடி அழ ஆரம்பித்துவிட்டனர். இப்படியிருக்க, படித்த பெண் ஒருத்தி திடீரென்று அங்கு வந்து, அழும் காரணத்தை கேட்டாள். மனைவி விஷயத்தை சொல்லி கடிதத்தைக் காட்டினாள். வந்த பெண் அதை வாசித்தாள். அதில், "க்ஷேமம். நான் ஸௌக்யமாக வந்து சேர்ந்தேன். அம்மாவை நல்ல டாக்டரிடம் காட்டினேன். நல்ல மருந்துகள் கொடுத்தார். பூர்ண குணம் அடைந்தாள். அம்மாவின் உடம்பைப் பற்றிக் கவலை வேண்டாம். நாளைத் தினமே புறப்பட்டு வருகிறோம்" என்று இருந்தது.

இதையே வாசித்து காட்டினாள். அனைவரும் திக்ப்ரமமடைந்து மாப்பிள்ளையைப் பார்த்தனர். அவன் விழிக்கிறான். பதில் சொல்ல முடியாமல். பிறகு விஷயத்தை அறிந்து கொண்டனர்.

மனைவி அங்கு இருந்த ஒரு தோழையைப் பார்த்து,

சதுர: ஸகி மே பர்த்தா யோ ந வாசயதி பரைர் லிகிதம் |

என்றாள். அதாவது, "என் கணவர் மிகவும் ஸமர்த்தர்; பிறர் எழுதிய கடிதத்தைப் படிக்கமாட்டார்" என்றாள். இதன் உண்மையை அறிந்த தோழி,

தஸ்மாதபி சதுரதர: ஸ்வயமபி லிகிதம் ஸ்வயம் ந ஜாநாதி ||

என்று வேடிக்கையாகப் பதில் சொன்னாள்.

"உன் கணவர் பிறர் எழுதியதைப் படிப்பதில்லை. இது என்ன ஆச்சரியம்? என் கணவர் தாம் எழுதியதையே மறுபடி படிக்கச் சொன்னால் படிக்கத் தெரியாதவர் ஆயிற்றே. ஆக என் கணவர் அல்லவா மிகவும் ஸமர்த்தர்?" என்றாள். ஆகையால் படிப்பில்லாதவனின் நிலை இவ்விதமாகும்.

சிலர் பணத்தையே பிரதானமாக கருதுவர். இதுவும் ஒரு விதத்தில் வாஸ்தவமே.
படிப்பிருந்தும் பணமில்லாதவனை மதிப்பதில்லையே. பணம் இருந்தால் அல்லவோ ஆடை ஆபரணங்களை அணிந்து தன்னை உயர்ந்தவனென்று பிரகடனம் செய்து கொள்ளலாம்? விஷயங்களை உள்ளபடி அறிந்த பெரியவர்கள் கூட பணமில்லாமல் வெறும் படிப்பு மட்டும் உள்ளவனை திரஸ்கரிக்கிறார்கள்.

மற்றும் சிலர் உயிரையே பிரதானமாக் கருதுகின்றனர். அதாவது ஸுகமாக இந்த பூலோகத்தில் இருந்து வாழ்வதே முக்கியம் என்று நினைக்கிறார்கள். இதற்காக நியாயமான வழிகளிலோ, மற்ற வழிகளிலோ பணத்தை ஸம்பாதிப்பதில் முயற்சி எடுத்து கொள்கிறார்கள். 'நாம் இந்த பூலோகத்தில் இருப்பது எல்லா விதத்தாலேயும் ஸுகங்களை அநுபவிப்பதற்காகவே' என்று நினைக்கிறார்கள். கோடிக் கணக்கான பணத்தை ஸம்பாதித்துப் பெட்டிகளிலோ பாங்குகளிலோ வைத்து அழகு பார்ப்பதில் மாத்திரம் என்ன பயன்? நல்வழியிலேயோ மற்றப்படியோ தனத்தை ஸம்பாதித்து எல்லா இந்திரியங்களையும் திருப்திப்படுத்துவதுதான் பூமியில் பிறந்ததற்குப் பரம பலன் என்று நினைப்பர். சார்வாகனும், "சாம்பலாகப் போய்விட்டால் இந்த சரீரம் மறுபடி வரப் போவதில்லையே. இவ்வுடலைக் கொண்டு ஸுகத்தை எவ்விதம் அநுபவிக்க முடியும்? ஆகையால் இந்த உடல் இருக்கும்போதே கடனை வாங்கியாவது நெய்யைக் குடி. ஸுகங்களை எவ்வவு அநுபவிக்கலாமோ அவ்வளவையும் அநுபவித்துவிடு" என்று சொல்லுகிறான்.

இந்த நிலையில் சில மகான்கள், "ஈச்வரன் நமக்கு பிறப்பை கொடுத்திருக்கிறான். இந்த சரீரத்தில் இந்த ஆத்மா இருக்கிறது. அந்த பிராணன் தரித்திருப்பதற்காக சாப்பிட வேண்டுமே தவிர அதர்மமான வழிகளில் இறங்கி சாப்பிடுவதோ மற்ற காரியங்கள் செய்வதோ தகாது" என்கிறார்கள்.

ஆகவே, சாஸ்திரமே நமக்கு கைவிளக்கு, அதை ஆதாரமாக கொண்டே நாம் நடக்க வேண்டும். விபரீதமான வழிகளில் சென்று அதர்மங்களை செய்யக் கூடாது. அப்படி செய்தால், இவ்வுலகில்

நமக்கு அபகீர்த்தியும் அவமானமும் ஏற்படும்; மேலும், நரகத்துக்குப் போகவும் நேரிடும். ஆகையால் அவமானகரமான செய்கைகளை செய்யாமல் நல்வழியிலேயே நாம் நடக்க வேண்டும். பெரியவர்கள் மானத்தையே பிரதானமாக கருதி அதற்காக உயிரையும் விட ஸித்தமாக இருக்கிறார்கள்.

இதை வலியுறுத்தும் வகையில் ஒரு நீதி ச்லோகமும் உண்டு -

> அதமா தநமிச்சந்தி தநமாநௌ ஹி மத்யமா: ।
> உத்தமா மாநமிச்சந்தி மாநம் ஹி மஹதாம் தநம் ॥

கீழ் நிலையில் உள்ளவர்கள் பணத்தையே பெரிதாக நினைப்பவர்கள்; நடுநிலையில் உள்ளவர்கள் தனத்தையும் மானத்தையும் விரும்புகிறவர்கள்; உத்தம புருஷர்களோ, 'எங்களுக்கு மானமே பெரியது; அதுவே தனம்; வேறு வேண்டாம்' என்று நினைப்பார்கள்.

ஆகையால், பூமியில் பிறந்த ஒவ்வொருவரும், 'இவன் நல்லொழுக்கத்துடன் கூடியவன்; உண்மையாக நடப்பவன்' என்று யாவரும் புகழும் வகையில் நல்ல பெயரை ஸம்பாதித்துக் கொண்டு இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

மாப்பிள்ளை மாமனார் வீட்டுச் சென்றான். அறைகுறை படிப்பு. பூரணமில்லை. மைத்துனன்மார்கள் படித்தவர்கள். பெண்ணும் படித்தவள். சாப்பிடும் காலம். ஒருமைத்துனன் மற்றவனைப் பார்த்து மாப்பிள்ளை எப்படி இருக்கிறான் என்று வினவினார். அதற்கு பதில்: ஜாமாத வ்ருத்த ஸம்பன்ன: குணரூப ஸமந் வித: கந்த விஹீனோஸௌ பாலாச குஸுமம் யிதா என்று சொல்லி சிரித்தான் என்றான். மாப்பிள்ளை குணம் அழகு வ்ருத்தம் எல்லாம் பொருந்தியவர். ஆனால் படிப்பில்லாதவர். பலாச புஷ்பம் எப்படி கேவலம் அழகோ அப்படி என்று பொருள். இதைக் கேட்டதும் மருமகனுக்கு கோபம் வந்துவிட்டது. உடனே எழுந்தான். தனக்கு மானம்தான் பெரியது என்று மஹா பண்டிதனிடம் அணுகி நான்கு வருஷங்களுக்குள் மேதாவியாக திகழ்ந்தான். மாமனார் வீட்டுக்கு வந்தான். சாப்பிடும் சமயம். ரஸம் பரிமாறினாள். அப்பொழுது ரஸம் எப்படி என்றான் ஒருவன். அதற்கு மாப்பிள்ளை. "சாரு சாருதாம்பாதி இங்கு தீ ஜீரமிச்ரிதம். கிஞ்சித் லவண ஹீனேன பாலாச குஸம்யதா" என்று சிரித்தான். ரஸம் பார்வைக்கு அழகுதான். பெருங்காயம் ஜீரகம் எல்லாம் சேர்த்து செய்யப்பட்டதுதான். ஆனால் உப்பு இல்லாமல் ருசி இல்லை என்றான். பலாச புஷ்பம் போல் என்றான். இதைக் கேட்டதும் முன் தாங்கள் சொன்னது நினைவுக்கு வந்து அவனிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டனர்.

ஒரு பெண் நன்றாகப் படித்தவள். ஒருவனைக் காட்டி விவாஹம் செய்து கொள் என்றான் பிதா. அதற்கு அவள் நான் கேட்கும் ப்ரச்னங்களுக்கும் பதில் சொன்னால் ஸம்மதம் என்றாள். யஸய ஷஷ்டி சதுர்தீஸ்யாத், விஹஸ்ய ச விஹாய ச அஹம் கதம் த்விதீயா ஸ்யாத் த்விதியா ஸயாமஹம் கதம் என்று கேட்டாள். 'ராமஸய' என்பது ஆறாம் வேற்றுமை. அதுபோல் உள்ளது. 'விஹய்ய என்பது' விஹாய என்பது ராமாய என்பது போல் உள்ளது இது நான் காம் வேற்றுமை. இதை அநுசரித்து விஹஸ்ய என்பது ஆறாம் வேற்றுமை என்று விஹாய என்பதை நான்காம் வேற்றுமை என்றான். 'அஹம்' கதம், 'ராமம்' போல் என்பது உம் கூடியது. இதை த்விதீயை என்றான். இவை எல்லாம் அவ்ய யத்தில் சேர்ந்தது. இதை சப்தமாக நினைத்து ராம சப்தத்துக்கு ஒப்பிட்டு பேசினான். அவ்வளவுதான். இப்படி சொல்லுபவனுக்கு எப்படி 'நான் த்விதியையாக (மனைவியா) ஆவேன் என்றாள். ஆக முன் காலங்களிலும் பெண்கள் கூட ஸம்ஸ்க்ருதத்தில்

நன்கு பயிற்சி பெற்றவர்கள். இக்காலத்தில் நன்கு படித்தவர்கள். ஆக மானம்தான் பெரியது. மற்றவை பெருமை வாய்ந்ததல்ல.

*****

# 51. மூன்று குற்றங்கள்

உலகிலுள்ள மக்கள் அனைவரும் தம் யஜமானனான பகவானுடைய பிரீதியை முன்னிட்டு அவன் சொன்ன சட்டதிட்டங்களுக்கு அடங்கி ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும். எந்த காரியத்தை செய்தால் பகவான் நம்மிடத்தில் ஸந்தோஷமடைந்து 'அளியன் நம் பையல்' என்று கருதுவானோ அப்படிப்பட்ட வேலையைச் செய்ய வேண்டும். எந்த வேலையைச் செய்தால் அவனுக்கு வெறுப்பு உண்டாகுமோ அதைச் செய்யப் கூடாது.

'ஸர்வேச்வரனுக்கு எது ப்ரீதியைக் கொடுக்கும்? எது அப்ரீதியைக் கொடுக்காது? என்பதை எப்படி நாம் அறிவது என்று கவலைப்பட வேண்டியதில்லை. வேதம், ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணங்கள், தர்ம சாஸ்திரம், கீதை முதலிய நூல்களைக் கொண்டு ஸுலபமாக இவற்றை நாம் அறிந்து கொள்ளலாம். பகவான் தன் அபிப்ராயத்தை வேதங்கள் மூலமாக நன்கு வெளிப்படுத்தியிருக்கிறான். அதை அநுஸரித்து முனிவர்களும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் நாம் ஸுலபமாக அறியும் வண்ணம் பல நூல்களை அருளியிருக்கிறார்கள். பகவான், தானும் பூமியில் அவதரித்து நல்லவற்றையும் கெட்டவற்றையும் தெரிவித்திருக்கிறான்.

சூரியன் உதிக்கும் ஸமயத்திலும் ஸூர்யன் அஸ்தமிக்கும் வேளையிலும் தூங்குவது, ஜலத்தை அசுத்தம் செய்வது, திருடுவது, பெரியோர்களை நிந்திப்பது, கெட்ட சொற்களை உபயோகிப்பது, கொலைசெய்வது, கள் குடிப்பது, சிசுஹத்தி செய்தல், பொய் பேசுதல், பரஸ்திரீயுடன் ஸம்பந்தம் வைத்துக்கொள்ளல், விரோதத்துக்கு காரணமில்லாமலே பிறரை ஹிம்ஸித்தல் - இப்படி அநேகம் செய்யக்கூடாத செயல்கள் உள்ளன. இவற்றில் எதைச் செய்தாலும் எம்பெருமானுக்குக் கோபமே அதிகம் உண்டாகும் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

ஆயினும் இவற்றுள் முக்கியமான மூன்றை இங்கு எடுத்து கொள்ளுவோம். 'கோபம் இன்னது என்பதையே அறியாதவள் பிராட்டி' என்று நம் ஆசார்யர்கள் சொல்லுவர். குற்றவாளியைப் பார்த்துப் பகவான் ஒரு ஸமயம் கோபிக்கும்போது பிராட்டி அருகில் வந்துவிட்டால், பகவானுடைய கோபம் அப்போதே மறைந்து விடுமாம். ஏன்? க்ருபாமூர்த்தியான பிராட்டி ஸமீபத்தில் இருக்கும்போது பகவானுடைய கோபாக்னி அணைந்துவிடுமாம். அப்படிப்பட்ட ப்ரபாவமுள்ளவளுக்கே மூன்று குற்றங்கள் பொறுக்க முடியாதவை. அவ்விதமானால் பகவானுக்குக் கேட்க வேண்டுமா?

பொய் பேசுதல், பரஸ்திரீ கமனம், காரணமில்லாமல் ஹிம்ஸித்தல்-இவை மூன்றும் திவ்ய தம்பதிகளுக்குப் பொறுக்க முடியாதவை. இவற்றைச் செய்தவனிடத்தில் இவர்களுடைய கோபம் அதிகமாக இருக்கும். 'க்ஷிபாம்யஜஸ்ரமசு - பாநாஸுரீஷ்வேவ யோநிஷு' என்ற கணக்கில் மேன் மேலும் இவர்களை நரகத்திலேயே தள்ளுவான்.

ஸ்ரீராமர், தம்பி லக்ஷ்மணனுடனும், மனைவி ஸீதையுடனும் வனவாஸம் செய்தபோது, ஸுதீக்ஷ்ண மகரிஷியின் ஆச்ரமத்தில் ஓர் இரவைக் கழித்தார். காலையில் அவரிடத்தில் விடைபெற்று மேலே சென்ற போது ஸீதையினிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டார். பிராட்டியும் ஆயுதங்களைக் கொடுத்துக் கம்பீரமாயும் ஸ்நேக பூர்வகமாயும் ராமரிடத்தில் ஒரு வார்த்தை சொல்லுகிறாள்:

த்ரீண்யேவ வ்யஸநாந்யத்ர காமஜாநி பவந்த்யுத ।
மித்யாவாக்யம் குருதரம் தஸ்மாத் குருதமே உபே ॥
பரதாராபிகமநம் விநா வைரம் ச ரௌத்ரதா ।
மித்யாவாக்யம் ந தே பூதம் ந பவிஷ்யதி ராகவ ॥
குதோபிலஷணம் ஸ்த்ரீணாம் பரேஷாம் தர்மநாசநம் ।
தவ நாஸ்தி மனுஷ்யேந்தர் ந சாபூத்தே கதாசன ॥
ப்ரதிஜ்ஞாதஸ் த்வயா வீர தண்டகாரண்யவாஸிநாம் ।
ரிஷீணாம் ரக்ஷணார்த்தாய வத: ஸம்ப்ரதி ரக்ஷஸாம் ॥

(ஸ்ரீமத் ராமாயணம் - ஆரண்ய காண்டம்-9)

என்று.

"பொய் பேசுதல் எல்லா குற்றங்களைக் காட்டிலும் கொடியது. இதையும் காட்டிலும் மிகக் கொடியவை பரஸ்த்ரீ கமனமும், காரணமில்லாமல் ஹிம்ஸித்தலும். இவை துக்கத்தைக் கொடுப்பவை. ராமா, நீர் பொய் பேசுவதில்லை என்பது லோகப்ரஸித்தமானது; எனக்கும் தெரியும். இதுவரையிலும் நீர் பொய் பேசியதில்லை; இனிமேலும் பொய் பேசமாட்டீர். இரண்டாவதான பரதார கமனமும் உம்மிடத்தில் இல்லை. நீர் பரஸ்திரீகளைக் கண்களாலுங்கூட பார்ப்பதில்லை. இதுவும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் மூன்றாவதாக சொன்ன குற்றம் மாத்திரம் உம்மிடத்தில் ஸம்பவிக்கும் போல தோன்றுகிறதே. காட்டிலுள்ள ராக்ஷஸர்களை ஸம்ஹரிப்பதாகப் பிரதிஜ்ஞை செய்திருக்கிறீரே. அவர்கள் நம்மிடத்தில் என்ன குற்றம் செய்திருக்கிறார்கள்? தாய் தந்தையர் சொற்படி பதினான்கு வருஷம் காட்டில் வாஸம் செய்து திரும்ப வேண்டியதுதானே முக்கியம்? நமக்கு ஸம்பந்தமற்ற மற்ற விஷயங்களில் நாம் ஏன் தலையிட வேண்டும்?" என்றாள்.

இதிலிருந்து, பல குற்றங்கள் இருந்த போதிலும் இவற்றுள் இம்மூன்று குற்றங்கள் மிகக் கொடியவை என்பதை அஜ்ஞாத நிக்ரஹையான பிராட்டி தன் வாயாலேயே வெளிப்படுத்தினாள்.

இம் மூன்று குற்றங்களை பற்றி சிறிது ஆராய்வோம்.

**பொய் பேசுதல்.**

மனிதன் எக்காரணத்தைக் கொண்டும் ஸத்யத்திலிருந்து நழுவக்கூடாது; பொய்யே பேசக்கூடாது. பொய் பேசுவதனால் பல அனர்த்தங்கள் ஏற்படும். ஸத்ய வசனம் எப்படியும் இவனைக் காப்பாற்றும். 'ஸத்யமூலானி ஸர்வாணி ஸத்யாந் நாஸ்தி பரம் பதம்' என்று ஜாபாலி மகரிஷியிடம் ஸ்ரீராமர் கூறுகிறார். நம்முடைய பிதாவை ஸத்திய ஸந்தராக்க எண்ணியே தமது செல்வம் அனைத்தையும் விட்டு ராமர் காட்டை அடைந்தார்.

தர்ம புத்திரருக்கும் துர்யோதனாதிகளுக்கும் இடையே சூதாட்டாம் நடந்தது. கபடத்தினால் தர்ம புத்ரருக்கு தோல்வி ஏற்பட்டது. இதனால் பஞ்ச பாண்டவர்களுக்கே உரியவளான த்ரௌபதியை தாஸீ (வேலைக்காரி) என்று சொல்லி, த்ரோணர், பீஷ்மர், க்ருபர் மற்றும் பல மகான்கள் நிறைந்திருந்த சபையில் அவளது கூந்தலைப் பிடித்து இழுத்து துச்சாதனன் பரிபவம் செய்தான். அப்போது அவள் பல தர்மங்களை எடுத்துச் சொல்லி கடைசியில் கூறுகிறாள் "இது சபையா? இதில் பல வ்ருத்தர்கள் இருந்தால் அல்லவா இது சபையாகும்? ஆனால் இங்கும் பல

வ்ருத்தர்கள் (பீஷ்மர், த்ரோணாதிகள்) இருக்கிறார்களே என்றால் இவர்கள் வயதில் மாத்திரம் வ்ருத்தர்கள். எவர் தர்மங்களை எடுத்து சொல்கிறார்களோ அவர்களே உண்மையான வ்ருத்தர்கள். எங்கு ஸத்யம் இல்லையோ, அது தர்மத்திலும் சேராது. சில சமயத்தில் ஸத்யம் போல் தோன்றும்; ஆனால் அது கபடத்துடன் கூடியதாக இருந்தால் உண்மையில் ஸத்யம் ஆகாது. எனவே, கபடத்துடன் சேராமல் ஸத்ய வசனம் இருக்க வேண்டும்; அந்த மாதிரி ஸத்யத்துடன் கூடியதுதான் தர்மமாகும்; அப்படிப்பட்ட தர்மத்தை சொல்பவர்கள் தான் வ்ருத்தர்கள். அப்படிப்பட்ட மகான்களால் சூழப்பெற்றதுதான் சபையாகும். இங்கு ஸத்யமும் இல்லை; தர்மமும் இல்லை; வ்ருத்தர்களும் இல்லை; எனவே இது சபையாகாது. ஆகையால் இங்கு அக்ரமம்தான் மிஞ்சியிருக்கும்" என்றாள்.

ந ஸா ஸபா யத்ர ந ஸந்தி வ்ருத்தா;
ந தே வ்ருத்தா யே ந வதந்தி தர்மம் ।
ந வை தர்மோ யத்ர ந ஸத்யமஸ்தி
ந தத் ஸத்யம் யத் சலேநாநுவித்தம் ॥

இங்கு நாலாவது பாதத்தில் கூறப்பட்டதை உற்று நோக்க வேண்டும். இதை உதாஹரணத்துடன் விளக்குகிறேன்: பஞ்ச பாண்டவர்கள் ஸ்வர்க்கம் செல்லுகிறார்கள். வழியில் ஆங்காங்கே ஒவ்வொருவர் விழுந்துவிடுகிறார். கடைசியில் தர்மபுத்திரர் மாத்திரம் இந்திரனைக் காண்கிறார். திடீரேன்று திரும்பி பார்த்து தம்முடன் வந்தவர்களைக் காணாமல் அவர் இந்திரனைப் பார்த்து, "என் அருமை ஸஹோதரர்களும் மனைவியும் எங்கே?" என்று புலம்பிக் கேட்கிறார். அதற்கு இந்திரன், ஒரு தூதனைக் காட்டி, "தர்மபுத்திரா! இவனுடன் செல். அவர்களை பார்க்கலாம்" என்றான்.

தர்மபுத்திரர் மிகவும் ஆவலுடன் சென்றார். சிறிது தூரம் சென்றவுடன், வரும் தர்மபுத்திரரைப் பார்த்து, பீமன் முதலியவர்களும் த்ரௌபதியும், "தர்மபுத்திரரே, நீர் இங்கு வர வேண்டும். உம்முடைய காற்று எங்கள் மேல் வீசுகிறபடியால் நரகயாதனையே இல்லாமல் இருக்கிறது. இன்னும் சிறிது நேரம் இங்கேயே இரும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

இதைப் பார்த்த தர்மபுத்திரருக்குக் கஷ்டம் ஏற்பட்டு விட்டது. 'ஐயோ' என்று புலம்பினார். சிறிது நேரம் கழித்துத் தூதனுடன் இந்திரனை அடைந்தார். "தேவேந்திரா, என் தம்பிகள் நரகத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால் போதாதா? நான் அங்கே செல்லாமல் இருந்திருப்பேனே. ஏதோ வ்யாஜத்தைக் காட்டி என்னை அங்கே போகும்படி செய்தாயே. எனக்கும் நரகயாதனை வேண்டுமா?" என்று கேட்டார். இதற்கு இந்திரன் ரஸகனமாகன பதிலைக் கூறினான்.

"முன்பு பாரத யுத்தத்தில் ஸ்ரீகிருஷ்ணனுடைய சூழ்ச்சியை நீ நன்கு உணர்ந்திருந்தும், பொய் சொல்ல கூடாது என்ற எண்ணம் இருந்தும், ஜயத்தில் ஆசையுள்ளவனாக, 'அச்வத்தாமா ஹத:' என்று உரத்த குரலிலும், 'குஞ்சர' என்று மெல்லிய குரலிலும் சொன்னாய். ஒரு யானைக்கு 'அச்வத்தாமா' என்ற பெயரை வைத்து அதை ஸம்ஹாரம் செய்தது வாஸ்தவமே. ஆயினும் இந்த கபடத்தை நன்கு உணர்ந்திருந்தும், கபடபூர்வமாக இதை நீ சொன்னபடியால் அதன் பலனை நீ அவசியம் அநுபவித்தே தீரவேண்டும் என்று எண்ணி இவ்விதம் செய்தேன். நீ வியாஜத்தோடு பொய் சொன்னாய்; நானும் ஒரு வியாஜத்தினால் உன்னை நரகத்துக்கு அனுப்பினேன்" என்றான்.

"ஆகையால் உண்மையும் கபட பூர்வமாக சொன்னால், அது குற்றத்தில்தான் சேரும். இப்படி சொன்னதனால்தான், பாரத யுத்தத்தில் நாலு அங்குலம் பூமிக்கு மேல் நின்று கொண்டிருந்த தர்மபுத்திரருடைய தேர், அதர்மம் இவருக்கு ஏற்பட்டுவிட்டது என்று எண்ணி, தர்ம தேவதையினால் பூமியைத் தொடும்படி செய்யப்பட்டது.

மற்றொரு சமயம் தர்மபுத்ரர் தேவலோகத்தில் ஸுகம் அநுபவிக்கும் போது ஜனங்கள் இங்கும் அங்கும் போய் கொண்டிருந்தனர். என்ன காரணம் என்று தர்மபுத்ரர் கேட்க ஹரிசந்திரனின் தங்க விக்ரஹம் பார்க்க என்று சொன்னார்கள். நானும் பார்க்கப் போகலாமா என கேட்க இந்திரன் சொன்னது: நீ கபடமாகவாவது பொய் பேசுபவர். ஹரிசந்திரன் அப்படியல்ல. ஆக நீ போய் பார்த்தால் அந்த விக்ரஹம் இரும்புமயமாகிவிடும் என்றானாம்.

ஆகையால் பொய் சொல்லக்கூடாது; ஸத்யம் சொல்வதிலும் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

**பரதாராபிகமனம்**

இதுவும் ஒரு பெரிய பாதகம். ராவணன் முதலானவர்களுடைய விருத்தாந்தங்களை நாம் நன்கு உணர்ந்திருக்கிறபடியால் இதை அதிகம் விவரிக்க வேண்டாம். இந்த தோஷம் உள்ளவர்களுக்கு ராவணனுடைய சித்திரவதைதான் ஏற்படும் என்பதை நினைக்க வேண்டும்.

'நமக்கு இஷ்டமான ஒரு பரஸ்த்ரீயை ஒருவருக்கும் தெரியாமல் நாம் அநுபவித்தால் யாருக்குத் தெரிய போகிறது?' என்று சிலர் எண்ணலாம். மனிதர்களை ஏமாற்றினாலும் தெய்வத்தை ஏமாற்ற முடியாது. தெய்வத்தினிடத்தில் சிக்ஷை கட்டாயம் ஏற்பட்டுவிடும். ஸர்வாந்தர்யாமியான எம்பெருமான் நம்முடைய ஹ்ருதயத்தில் எப்பொழுதும் இருக்கிறபடியால் அவருக்கு தெரியாமல் நாம் எதை செய்ய முடியும்?

புருஷன் இருந்தாலும் இறந்தாலும் பரஸ்திரீயை அபஹரிப்பது குற்றமாகாது என்று சொல்வது மிகவும் கீழ்த்தரமானது. இதைத்தான் பெரிய குற்றமாக சீதை கணக்கிட்டிருக்கிறாள்.

**காரணமின்றி பிறரை ஹிம்ஸித்தல்**

இதையும் பெரிய குற்றமாக ஸீதை கருதுகிறாள். காட்டிலுள்ள முனிவர்கள் என்ன குற்றம் செய்கிறார்கள்? 'க்ருஷ்ணா ராமா' என்று அவர்கள் தனியே உடகார்ந்து தவம் யாகம் முதலியவற்றை செய்கிறார்கள். இவர்களை ராக்ஷஸர்கள் எவ்வளவு ஹிம்ஸை செய்கிறார்கள்? இவர்கள், 'ராக்ஷஸர்களுக்கு ஏதாவது தீங்கு வரவேண்டும்' என்று எண்ணி அபிசார யாகம் செய்கிறார்களா? இல்லையே. உண்மையில் இவர்கள் செய்யும் நல்ல காரியங்களால் உலகம் முழுவதற்கும் க்ஷேமமே ஏற்படும். கோவில்களில் த்ரிகாலமும் பூஜைகள் நன்றாக நடந்து வந்தால் நாட்டுக்கு அபிவிருத்திதானே ஏற்படும்? இதை ஒருவன் கெடுக்க வந்தால் அவனைவிடப் பெரிய பாவி வேறு யார்? விச்வாமித்ரர் செய்த யாகத்தை ஸுபாஹு, மாரீசன் என்பவர்கள், ரத்தம் மாம்ஸம் முதலியவற்றை கொட்டி அழிக்க ஆரம்பித்தனர். விச்வாமித்ரர் இவர்களுக்கு கெடுதலை நினைத்தா யாகம் செய்தார்? இல்லை. ஆயினும் காரணம் இல்லாமல் ஸத்புருஷர்களை ஹிம்ஸிப்பது ராக்ஷஸர்களுக்கு ஸகஜமாகிவிட்டது. இக்காலத்திலும் இத்தன்மை உடையவர்கள் எவ்வளவோ பேர் இருக்கின்றனர். கடைசியில் தீங்கு செய்வர்களுக்கே ஆபத்து ஏற்படுகிறது.

இப்படி பிராட்டி ராமனிடத்தில் இந்த மூன்று குற்றங்களை எடுத்துக் கூறுவதன் கருத்தை சிறிது ஆராய்வோம்.

மேலே நடக்குப் போகும் விஷயங்களை ராமனுக்கு குறிப்பால் உணர்த்துகிறாள். "இம்மூன்று குற்றங்களும் கொடியவை; இவற்றை செய்பவனை உடனே தண்டிக்க வேண்டும். ராவணன், தான் ஒரு ஸன்யாசி என்று சொல்லப் போகிறான். இது ஒரு முதல் குற்றம். பிறகு என்னை அபகரிக்கப் போகிறான். இது இரண்டாவது குற்றம். காட்டில் தவம் செய்யும் ஸாதுக்களை காரணம் இல்லாமல் ஹிம்ஸிக்கிறான். இது மூன்றாவது குற்றம். ஆக இம்மூன்று குற்றங்களுள்ள இந்த ராவணனை உடனடியாக தண்டிக்க வேண்டும்" என்று காட்டுகிறாள் போலும்.

ஆகையால் நாம் தினந்தோறும் நல்ல காரியங்களையே செய்ய வேண்டும். ஒரு குற்றத்தையும் செய்யக் கூடாது. எத்தனையோ குற்றங்கள் சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டுள்ளன. எதைச் செய்தாலும் பகவானுக்கு நம்மிடத்தில் அப்ரீதிதான் ஏற்ப்படும். அவற்றிலும் மேலு கூறிய மூன்று குற்றங்கள் பகவானுக்கும் பிராட்டிக்கும் நம்மிடத்தில் வெறுப்பையே விளைவிக்கும். இந்த குற்றங்கள் வெளியில் தெரிந்துவிட்டால் ஜனங்களும் நம்மை அவமதிப்பார்கள். எனவே சரீர சுத்தி, வாக்கு சுத்தி, அகாரணமாக ஒருவரையும் ஹிம்ஸிக்காமல் இருக்கவேண்டும் என்னும் சுத்தி என்ற இம்மூன்றையும் மனிதன் ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும்.

*****

# 52. ஸம்மார்ஜனம்

ச்ரிய: பதியான ஸர்வேச்வரன் ஜீவராசிகளுக்கு ஆக்கையையும், கண் காது முதலிய உறுப்புக்களையும் கொடுப்பது எதற்காக? ஆத்மாக்களுக்கு இவற்றைக் கொடுத்து இதன் மூலம் அவன் ஏதோ ஒரு மகிழ்ச்சியை பெற விரும்புகிறான் போலும். 'ஸ்வம் உத்திச்ய ஸ்ரீமாந்' என்று பெரியோர் பணிப்பர். 'விசித்ரா தேஹஸம்பத்தி:, ஈச்வராய நிவேதிதும்' என்று அவன் கொடுத்த உடல். இந்திரியங்கள் முதலியவற்றைக் கொண்டு, அவன் உகப்பு அடைய வேண்டும் என்று எண்ணி நாம் ஏவல் தேவைகளைச் செய்ய வேண்டும். இப்படி செய்பவர்களிடத்திலேயே எம்பெருமான் மிகவும் ஸந்தோஷமடைகிறான்; மற்றவர்களிடத்தில் வெறுப்பை அடைவான்.

'அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன்' என்று ஆழ்வார் சொல்லுகிறபடி, மனம் செல்லும் வழியில் நடந்து கொள்வது மிகவும் வெறுக்கத்தக்கது. இப்படி நடப்பவன் தன் ஸ்வரூபத்தின் பலனைப் பெறமாட்டான். எந்த வேலைகளைச் செய்தால் பகவான் மேன்மேலும் ஸந்தோஷமடைந்து நம்மை கண்குளிரக் கடாக்ஷிப்பானோ, அத்தகைய வேலைகள் இரண்டு வகைப்படும்.

ஆஜ்ஞை என்றும், அநுஜ்ஞை என்றும் ஏவல் தேவைகள் இரண்டு வகையாகப் பிரிக்கப் பெற்றிருக்கின்றன. அவனவன்வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஈடாக எவற்றைச் செய்யாவிட்டால் எம்பெருமானுக்கு கோபம் உண்டாகுமோ அவை ஆஜ்ஞா கைங்கரியங்கள். எவற்றை செய்யாவிட்டால் எம்பெருமானுக்கு கோபம் உண்டாகாதோ, செய்ததனால் ஸந்தோஷம் உண்டாகுமோ அவை அநுஜ்ஞா கைங்கரியங்கள். இவற்றினால் அவரவர் கோரிய பயன்களையும் பெறலாம். ஸந்த்யாவந்தனம், பகவதாராதனம் முதலியன ஆஜ்ஞையாகும். கோயிலில் விளக்கேற்றுவது, விளக்குமாறு கொண்டு சுத்தம் செய்வது, கோலமிடுவது முதலியவை அநுஜ்ஞையாகும். அநுஜ்ஞையாக செய்யப்படும் இந்த கைங்கரியங்களிலும் முறைதவறு முதலிய குற்றங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும. அப்படி தவறினால் ஆஜ்ஞாகைங்கரியத்தை செய்யாமலிருந்தால் என்ன குற்றம் ஏற்படுமோ அந்த குற்றம் இவற்றிலும் ஏற்படும்.

பகவானுக்கு புஷ்பங்களை மாலையாக கட்டி ஸமர்ப்பிக்க வேண்டும் என்று எண்ணி புஷ்பமாலையை தொடுப்பவன் அசுத்த ஸ்தலங்களில் புஷ்பங்களை வைப்பதோ, காலில் நூலைக் கட்டித் தொடுப்பதோ செய்தால் இந்த கைங்கரியம் குற்றமுள்ளதாகவே முடியும். எனவே இவற்றை நன்றாக கவனித்து சரிவர செய்தல் வேண்டும்.

> யாவத்ய: பாம்ஸுகணிகா:, மார்ஜநே கேசவாலயே I
> வர்ஷாணி திவி தாவந்தி ரிஷ்டத்யஸ்தமலோ நர: II

எம்பெருமானுடைய கோயிலில் விளக்குமாறு எடுத்து எவன் சுத்தம் செய்கிறானோ அப்போது அதிலிருந்து எவ்வளவு தூசுகள் வெளிவருகின்றனவோ, அத்தனை வருஷகாலம் அவன் அழுக்கற்றவனாக ஸ்வர்க லோகத்தில் ஸுகத்தை அநுபவிக்கிறான். இவன் செய்யும் தொழில் சிறியதாக இருந்த போதிலும் பகவானுடைய கோயிலில் செய்கிறபடியால் அளவற்ற பலனைக் கொடுக்கிறது.

யுவனாச்வனின் புதல்வன் மாந்தாதா, பெரும் பலமுடையவன். சக்ரவர்த்தி, ஸார்வபௌமன் என்னும் சொல் இவனையே குறிக்கும். எல்லா உலகையும் ஏகதேசமாக எவன் ஆட்சி புரிகிறானோ அவனைத்தான் சக்ரவர்த்தி என்று சொல்வது. மாந்தாதா ஏழு தீவுகளோடு கூடிய பூமி முழுவதையும் ஆண்டு வந்தான்.

யாவத் ஸூர்ய உதேதிஸ்ம யாவத் திஷ்டதி மேதிநீ ।
தத் ஸர்வம் யௌவநாச்வஸ்ய மாந்தாது: க்ஷேத்ரமுச்யதே ॥

என்று கூறுவர். இவ்வளவு ஐச்வர்யங்களைப் பெற்றும், அவன் கர்வமில்லாமல் தான தர்மங்களையும் நித்யமான கைங்கரியங்களையும் செய்துகொண்டு குருவினிடத்தில் அதிகப் பக்தியுடன் இருந்தான்.

அவன் ஒரு ஸமயம், 'இவ்வளவு ஸம்பத்து நமக்கு எப்படி உண்டாயிற்று?' என்று எண்ணினான். இதை அறிய விரும்பி மனைவியுடன் தன் குலகுருவான வஸிஷ்ட மகரிஷியை வணங்கி வினவினான். இதை கேட்ட வஸிஷ்டர் சொன்னார் - "அரசே! நீ முற்பிறவியில் சூத்திரனாகப் பிறந்திருந்தாய். பிறருக்குப் பல ஹிம்ஸைகள் செய்து வந்தாய். உன் பார்யையான இவள் முன்பிறவியிலும் உனக்கு மனைவியாகவே இருந்தாள். உனக்கு பல பணிவிடைகள் செய்து வந்தாள். நீங்கள் இருவரும் வாஸுதேவனுடைய ஒரு கோயிலில் வேலைக்காரர்களாக இருந்தீர்கள். அந்த கோயிலுக்கு காலை மாலை இரு வேளைகளிலும் நீரைக் கொண்டு வந்து தெளிப்பது. சாணத்தைக் கொண்டு மெழுகுவது, விளக்குமாறு கொண்டு விளக்குவது, கோலமிடுவது முதலிய நற்காரியங்களைச் செய்து வந்தீர்கள். இப்படிப் பல நாள் பக்தியுடனும் சிரத்தையுடனும் செய்து வந்தபடியால் உங்களுடைய ஜன்மாந்தர பாபங்கள் தொலைந்தன.

உலகில், மாதம் முடிந்தவுடன் கையில் சம்பளத்தைப் பெற வேண்டும் என்று எண்ணி, அதையே முக்கியப் பலனாகக் கருதி வேலையைச் செய்பவர் சிலர் உள்ளனர். அவர்களுக்கு இவ்வுலகத்திலும் ஸுகமில்லை; பரலோகத்திலும் ஸுகமில்லை. இங்குள்ள யஜமானனும் திருப்தியடைய மாட்டான். பகவானும் ஸந்தோஷம் அடைய மாட்டான். தாழ்ந்த வேலையோ, உயர்ந்த வேலையோ எதுவாக இருந்தாலும் அதில் இழிகிறவன் சிரத்தையுடன் செய்து முடிக்க வேண்டும். அவனே எல்லா ஸுகங்களையும் பெறுவான். நீங்கள் உண்மையில், 'இது பகவத் கைங்கர்யம். இதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ் வேலை நமக்கு கிடைத்ததே' என்று எண்ணி ஆதரவுடன் செய்தபடியால் உங்களுக்கு நிகர் ஒருவருமில்லை.

இப்படி இருந்த ஸமயத்தில் ஒருநாள், குரு க்ஷேத்திரத்தில் பிறந்த ஸௌவீரன் என்னும் அரசன் தன் மனைவியுடனும் சைனியத்துடனும் நீங்கள் இருந்த கோயிலுக்கு வந்தான். ஸகல ஐச்வர்யத்தோடும் ஆபரணங்களோடும் கூடிய அரசனைப் பார்த்ததும், உனக்கு அவனைப் போல் பெரிய அரசனாக வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. உன் மனைவியும் சந்தனம் புஷ்பம் ஆபரணம் முதலியவற்றினால் அலங்கரிக்கப் பெற்ற அரசனது மனைவியைக் கண்டு, 'நாமும் இவள் போல் இருக்கக் கூடாதா? இவ்வளவு மேன்மை நமக்கும் உண்டாகக் கூடாதா?' என்று விரும்பினாள்.

நன்றாகப் படித்தவனையோ, நல்ல அழகுள்ளவர்களையோ, உயர்ந்த செல்வனையோ பார்த்து நாமும் அம்மாதிரி ஆக வேண்டும் என்று எண்ணுவது உலக வழக்கந்தானே? நம்மைப் போல் அவர்களும் ஆகவேண்டும் என்று நினைப்பதுதான் தவறு. இப்படிப்பட்ட உங்களுடைய

மனோரதத்தை அனைவருடைய ஹ்ருதயத்திலும் வாசம் செய்யும் பகவான் அறிந்தவனானபடியால் இதைப் பூர்த்தி செய்ய நினைத்தான். அன்றிரவு கோயிலில் உள்ள விளக்கு எண்ணெய் இல்லாததனால் அணையும் தறுவாயில் இருந்தது. திரியும் குறைந்துவிட்டது. இதைக் கண்ட நீ, உண்பதற்காக வைத்திருந்த எண்ணெயை விளக்கில் சேர்த்தாய். உன் மனைவியும் மேல் வஸ்திரத்தின் நுனிப்பாகத்தைக் கிழித்து திரியாக வைத்தாள். உடனே விளக்கு நன்றாக ஜ்வலிக்க ஆரம்பித்தது. இப்படி உயர்ந்த வேலைகளை நீங்கள் செய்தபடியால் உன்னதமான ராஜ்யத்தையும், உங்களது உடலில் உஜ்வலமான ஒளியையும் பகவான் கொடுத்தார்.

நீ வேளாளனாக இருந்து பகவானுக்குப் பணிவிடை செய்தபடியால் அளவற்ற மகிமையைப் பெற்றாய். பலனில் ஆசையில்லாதவனாக, வேறு எங்கேயும் மனத்தை செலுத்தாதவனாக எப்போதும் விஷ்ணுபூஜையைச் செய்பவன் எவ்வளவு பலனைப் பெறலாம் என்பதை இதிலிருந்து யோசிப்பாயாக. பகவானை ஆராதிப்பவன் ஒரு ஸமயத்திலும் கஷ்டப் படமாட்டான். புஷ்பம் தீபம் தூபம் நீராஜனம் சந்தனம் முதலிய உயர்ந்த வஸ்துக்களைக் கொண்டு பகவானைப் பூஜிப்பாயாக. கோயில்களில் தும்பு தூசி இல்லாமலிருக்கும்படி ஸம்மார்ஜனத்தைச் செய். இன்னும் மேன் மேலும் ஐச்வர்யத்தைப் பெறுவாய்.

மெதுவாகவும், நான்கு பக்கங்களிலும் கீழேயும் பார்த்துக்கொண்டு, பூமியில் இருக்கும் ஜந்துக்களுக்கு ஒரு விதத் தீங்கும் வராமலிருக்கும்படி விளக்குமாறு கொண்டு கோயிலைச் சுத்தம் செய்ய வேண்டும். இப்படிச் செய்பவன் அக்னிஷ்டோமம் வாஜபேயம் அச்வமேதம் முதலிய நற்காரியங்களைச் செய்தால் ஏற்படும் பலனைப் பெறுவான். கோடிக்கணக்கான வருஷங்கள் விஷ்ணுலோகத்தில் வஸிப்பான். கடைசியில், நான்கு வேதங்களையும் கற்றவனாகவும், அழகுள்ளவனாகவும், நற்குணம் பொருந்தியவனாகவும், ராஜாவாகவும், அனைவராலும் கொண்டாடப் பெறுபவனாகவும் பிறப்பான். தான் இறந்து போகும்வரையில் கோயிலில் இம்மாதிரி வேலையைச் செய்பவனும், புதிய ஆலயங்களை ஏற்படுத்திப் பகவானைப் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு செய்பவனும் வைகுண்ட லோகத்தை நேராக அடைந்துவிடுவார்கள்.

நரம் கலந்த ஸிம்ஹ உருவத்தைத் தங்கம் முதலிய உலோகங்களால் செய்வித்துப் பூஜை செய்ய ஏற்பாடு செய்பவன் விஷ்ணுலோகத்தை விட்டு வரவே மாட்டான். இப்படி பகவதாலயத்தில் ஆதரவுடன் பகவத் கைங்கரியத்தை செய்பவன் தன் இருபத்தொரு தலைமுறையிலுள்ள பந்துக்களை ஸ்வர்க்க லோகத்துக்கு அனுப்புகிறான். ஸமுத்திரமும் அழிந்து விடலாம்; இமயமலையும் சிதறிவிடலாம். ஆனால் நாராயணனுடைய கோயிலைச் சுத்தி செய்பவன் விஷ்ணுலோகத்திலிருந்து கீழே விழமாட்டான்.

அரசே! நீ செய்த புண்ணியத்தின் பலன் இது. இனி மேன்மேலும் பகவதாலயங்களை ஏற்படுத்தி அங்கு நற்காரியங்களைச் செய்து கொண்டுவா. மேன்மேலும் க்ஷேமத்தைப் பெறுவாய்" என்றார் வஸிஷ்டர்.

கீழ்ச் சொன்ன அநுஜ்ஞா கைங்கரியம் எத்தனையோ வகையாக இருந்த போதிலும், தூசி இல்லாமல் ஸம்மார்ஜனம் செய்து சுத்தி செய்வது பார்வைக்குத் தாழ்ந்ததாகத் தோன்றியபோதிலும் இது எவ்வளவு பலனைக் கொடுப்பது என்பதை உணர வேண்டும். இதுதான் உயர்ந்த கைங்கரியம். திருமழிசைப்பிரான் ஓர் ஆச்ரமத்தில் உடகார்ந்து யோகம் செய்தபோது அவ்விடத்தை ஒரு கிழவி பரிசுத்தி செய்து நித்திய யௌவனத்தைப் பெற்றாள்

என்பதைக் கேட்டிருக்கிறோம். நம் ஆசார்யர்களும் பகவானுடைய திருவீதியிலுள்ள குப்பைகளைப் போக்கிச் சுத்தம் செய்வதாகிய கைங்கரியத்தைச் செய்தார்கள். இப்படிப்பட்ட ஆசாரியர்களை நான் வணங்குகிறேன் என்றார் ஸ்ரீஸ்வாமி தேசிகன்.

கர்மப்ரஹ்மாத்மகே சாஸ்த்ரே கௌதஸ்குதநிவர்தகாந் |
வந்தே ஹஸ்திகிரீசஸ்ய வீதீசோதககிங்கராந் ||
(ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் - உபோத்காதிகாரம்)

"யானைமலை என்னும் காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் தேவராஜனுடைய வீதிகளைச் சோதிக்கும் கிங்கரர்களை வணங்குகிறேன்" என்றார். பகவானுடைய வீதி என்பது அவன் எழுந்தருளும் இடம்; அதாவது வேதம். அவ்வேதத்தை நன்கறிந்து, தப்பர்த்தங்களைச் சொல்லுகிறவர்களை நிரஸித்துச் சரியான வழியில் நின்று அர்த்தங்களைச் சொல்லுகிறவர்கள், பகவானுடைய வீதியாகிய வேதத்தை சோதிப்பவர்கள். அப்படிப்பட்ட கிங்கரர்களை வணங்குகிறேன் என்றும் பொருள்படும்படி கூறினார். இதனாலேயே பகவான் மேன்மேலும் திருப்தி அடைவான் என்பது திண்ணம்.

ஏழு தீவுகளுடன் கூடிய பூமியை ஆண்டுவந்தவர் அம்பரீஷர் என்னும் அரசர். அவன் என்ன செய்தான் தெரியுமா? தினமும் கோயிலுக்குச் செல்வான். செறுக்கு இல்லாமல் தானே ஸம்மார்ஜனீயை எடுத்து தூசி இல்லாமல் கோயிலை சுத்தம் செய்வான். எம்பெருமானும் இவனது நடத்தையைப் பார்த்து அருள் புரிந்தான்.

மேலும் தனது சக்ராயுதத்தையே இவனைக் காக்க இவனிடம் ஒப்படைத்தான். சீக்ர கோபியான துர்வாஸரும் இவனிடம் அஞ்சினார் என்பதும் புராணப் ப்ரஸித்தம்.

நமது இராமாநுஜ ஸம்ப்ரதாயமே திருக்கச்சிகள் மூலமாக தேவாதிராஜன் பரப்பினான் என்பதும் ஆறு வார்த்தைகள் ஏற்பட்டு நமது ராமாநுஜன் ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்தார் என்பதையும் உணர்க.

*****

# 53. ச்ராத்தம் செய்வது ஏன்?

நம் முன்னோர்களின் பழக்க வழக்கங்கள் மிகவும் வியக்கத்தக்கவை. எந்தக் காரியங்களை அவர்கள் செய்தாலும் அவற்றுக்கு ப்ரமாணம் இல்லாமலிராது. சாஸ்திரங்களில் ஆழ்ந்த கவனத்தை செலுத்தி, அவை விதித்தபடி நடப்பர். எந்த அநுஷ்டானத்தையும் ப்ரமாணமின்றச் செய்ய மாட்டார்கள். நாஸ்திகவாதம் செய்பவர்கள் இக்காலத்தில் பலர் இருக்கின்றனர். அவர்கள் ஆங்காங்கு மகான்களுடைய அநுஷ்டானத்தை தூஷித்து கொண்டு, எதையும் சரி என்று ஒப்புக் கொள்ளாமல், மேடைகளில் எவற்றையாவது பேசி, வீண்பொழுது போக்கி தூற்றுகிறார்கள்.

'எதற்காக இந்த பழக்க வழக்கம் உண்டாயிற்று?' என்பதை நன்கு ஆலோசித்தால் எவரையும் எவரும் தூற்ற மாட்டார். வெகு காலமாக நடத்தி வந்துள்ள ஆசாரங்கள் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான் இருக்கும் என்பதை ஆலோசிக்க வேண்டும். இக்காலத்தில் தான் தோன்றிகளாக அவரவர் புத்திக்கு எட்டின அளவு புதுப் புது ஆசாரங்களைக் கடைப்பிடித்து வருகிறார்கள். அவற்றுக்கு ப்ரமாணத்தை எங்குமே தேடிப் பிடிக்க முடியாது. அவரவர் க்யாதி, லாபம், பூஜை இவற்றில் ஈடுபட்டுப் புதிய ஆசாரங்களைச் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். முன்னோர்களின் அநுஷ்டானம் என்றால் அப்படி இருக்காது. ப்ரமாணங்களையும், லௌகிக ஸந்தர்ப்பங்களையும் ஆராய்ந்து செய்யப்பட்டதாகவே அது இருக்கும்.

நம் முன்னோர்களும் அவர்களை ஒட்டிய நாமும் நம் பித்ருக்களை உத்தேசித்து ச்ராத்தம் என்னும் சடங்கை செய்து வருகிறோம். இதை மிகவும் சிரத்தையுடன் செய்து வருகிறபடியால் 'ச்ராத்தம்' என்று இதை சொல்லுகின்றனர். இதை செய்வதனால் நம் பித்ருக்கள் திருப்தியடைகின்றனர்.

இங்கே சில ஸந்தேஹங்கள் சிலருக்கு உண்டாகக்கூடும். நம் பித்ருக்கள் திருப்தியடைய வேண்டுமானால் அவர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்களை உட்கார வைத்து ஸகலவிதமான போஜனங்களையும் இட்டால் திருப்தியடைவரே தவிர, அவர்கள் இறந்த பிறகு அவர்களுக்குப்பதிலாக யாரோ சில ப்ராமணர்களை உட்காரவைத்து அன்னமிட்டால் பித்ருக்கள் எப்படித் திருப்தியடைவர்? ஒருவருக்குப் பதிலாக மற்றவர் உண்டால், உண்ணாதவனுக்குப் பசி நீங்கிவிடுமா?

உண்மையில் நம் தாய் தந்தையர் வெளியூருக்கு சென்ற போது அவர்களுக்கு பதிலாக இங்கே சில ப்ராமணர்களுக்கு போஜனமிட்டால் வெளியிலுள்ள பித்ருக்களுக்கு பசி அடங்கிவிடுகிறதா? அவ்வாறு செய்யும் நம் விஷயத்தில் ப்ரீதிதான் உண்டாகுமா?

நன்கு ஆலோசித்தால், நம் முன்னோர்கள் இறந்த பிறகு எங்கு உள்ளனர் என்பதே தெரியாது. சிலர் இகலோகத்திலேயே வேறு பிறப்பை அடைந்திருக்கலாம். மனிதனாகவோ, மிருகமாகவோ, வேறு பிராணியாகவோ பிறப்பு நேர்ந்திருக்கலாம். சிலர் பாவங்கள் நிறைய செய்திருந்தால் நரகத்துக்கும் சென்றிருக்கலாம். சிலர் புண்ணியங்களை அநுஸரித்து ஸ்வர்கத்தை அடைந்திருக்கலாம். மற்றும் சிலர் எம்பெருமானிடத்தில் ஸதாசார்யர் மூலமாக நன்கு சரணாகதி செய்திருப்பார்கள். அவர்கள் மோக்ஷத்தை பெற்று எல்லையில்லாத ஆனந்தத்தை அநுபவித்து கொண்டிருப்பார்கள். இவர்களை குறித்து நாம் எப்படி ச்ராத்தம் செய்ய முடியும்? செய்வதனால் தான் அவர்களுக்கு என்ன லாபம் உண்டாகிறது? எப்படி அவர்கள் நாம் செய்வதிலிருந்து திருப்தி பெற முடியும்?

மேலும், நாம் பித்ருக்களைக் குறித்து ச்ராத்தம் செய்தால் அவர்கள் ஸந்தோஷப்பட்டு நமக்கு ஆயுஸ்ஸு, சரீர வலிமை, ஸந்ததி, ஆரோக்யம் முதலியவற்றையும், பசு முதலிய ஸம்ருத்தியையும் கொடுக்கிறார்கள்; நாம் செய்யாவிட்டால் சபிக்கிறார்கள் என்று சொல்கிறார்களே. இது பெரும் மூடத்தனமான பேச்சாகவே உள்ளது. நரகத்தில் ஒரு சமயம் பித்ருக்கள் இருந்தால் அவர்களுக்கு இம்மாதிரி பலனை கொடுக்க ஸாமர்த்தியம் ஏது? மோக்ஷத்துக்கு சென்றிருந்தால் அவர்களுக்கு நம்மைப்பற்றிய எண்ணமே இராது. எல்லாரிடத்திலும் அவர்கள் ஸமமான புத்தியையன்றோ செலுத்துகின்றனர்? இவர்கள் நம் புத்ரன், புத்ரி, மனைவி என்ற எண்ணம் அவர்களுக்கு ஏது?

ஸ்வர்க லோகத்தில் தேவரூபர்களாக நம் பித்ருக்கள் இருக்கிறார்கள் என்று சிலர் சொல்லுகின்றனர். 'அப்படியென்றால் தேவதைகளும் பித்ருக்களை ஆராதிக்கிறார்கள் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? ஆகையால் பித்ருக்கள் என்பவர் யார்? அவர்களைக் குறித்துச் செய்யும் ச்ராத்தம் முதலியன எப்படி அவர்களைத் திருப்தி செய்விக்கின்றன? அவர்கள் இருக்கும் இடம் எது?' என்ற கேள்விகள் ஆஸ்திகர்களுக்கும் உண்டாகக் கூடும்.

இதற்கு லௌகிக யுக்திகளைக் கொண்டும், சாஸ்திரங்களைக் கொண்டும் ஸமாதானம் கூறுகிறோம். முதலில் நாம் அனைவரும், 'மறை உரைக்கும் பொருளெல்லாம் மெய் என்று ஓதுவார்' என்ற ரீதியில் ஆஸ்திகர்களாகையாலும், சாஸ்திரங்களுக்கு உள்ளடங்கி நடக்கிறபடியாலும் சாஸ்திரங்களை கொண்டு விடை கூறுகிறோம்.

ஞானத்திலும் வயதிலும் பராக்ரமத்திலும் மிகப் பெரியவரான பீஷ்மாசாரியர் தம் தந்தையான சந்தனுவைக் குறித்து ச்ராத்தம் செய்தார். அப்போது பிண்டத்தை கொடுக்க முயன்றார். தந்தையான சந்தனு தம் புதல்வரான பீஷ்மர் செய்த ச்ராத்தத்தினால் மகிழ்ந்து தமக்காகக் கொடுத்த பிண்டத்தை தாம் நேரில் கையில் வாங்க வேண்டுமென்று கையை நீட்டினார். பீஷ்மர் மோதிரங்களுடனும் வளையல்களுடனும் கூடிய சிவந்த விரல்களை கொண்ட கையை பார்த்தார். முதலில், 'இதென்ன!' என்று திகிலடைந்தார். பிறகு தம் தந்தையின் இது போன்ற கையை முன்பு அவர் ஜீவித்திருந்த தசையில் பார்த்திருந்ததனால், இப்போது அது நினைவுக்கு வந்து, இது தம் தந்தையின் கையே என்று நிச்சயித்தார். ஆயினும் சாஸ்திரத்துக்கு அடங்கி இவர் நடக்கிறவரானபடியால் பூமியின் மேலுள்ள தர்ப்பங்களின் மேலேயே இவர் அந்த பிண்டத்தை இட்டார். சந்தனு தம் புதல்வரின் ந்யாயமான வழியை கண்டு ஸந்தோஷப்பட்டு, "பீஷ்மநே! என் அருமைப் புதல்வனே! உன் செயலைக் கண்டு மிகக் களிப்புற்றேன். உயர்ந்த புதல்வனைப் பெற்றவனானேன். தர்மங்களை அறிந்தவனாகவும், அறிவிக்கேற்ப ஆசாரத்தையுடையவனுமான உன்னுடைய நீதி தவறாத நடத்தை என் மனத்தை கவர்ந்தது. உலகத்திலுள்ள மக்களுக்கு வழிகாட்டியாக நீ நின்றாய். உனக்கு இஷ்டமான வரத்தை கொடுக்க முன் வந்துள்ளேன்" என்றார்.

பீஷ்மர், "தந்தையே! எனக்கு இவ்வுலகில் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. தேவரீர் எனக்கு நேரில் வந்து அநுக்ரகம் செய்ய முன் வந்ததே போதுமானது. ஆயினும் எனக்கும் உலகிலுள்ள ஜனங்களுக்கும் தெளிவு உண்டாகும்படி நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூற வேண்டும்" என்றார்

இது கேட்ட சந்தனு, "புதல்வா! நீ எவ்வளவு நாள் இந்த பூவுலகில் இருக்க விரும்புகிறாயோ அவ்வளவு நாள் ஜீவித்திருப்பாய். மரணத்தை நீ எப்போது விரும்புகிறாயோ அப்போது வரும்"

என்று கூறி, அவருக்கு 'ஸ்வச்சந்த மரண மடைதல்' என்னும் வரத்தை அளித்து, "நீ கேட்கும் கேள்விகளுக்கும் பதில் கூறுகிறேன்" என்றார்.

இது கேட்ட பீஷ்மர், கையைக் கூப்பிட்டுக்கொண்டு முன்பு கூறப்பட்ட ச்ராத்த விஷயமான எல்லா கேள்விகளையும் கேட்டார்.

சந்தனு கூறிய பதில்கள்

நம் தாய்தந்தையர் இறந்த பிறகு இவ்வுலகில் வேறு ஜன்மத்தைப் பெறுவதோ, நரகத்தை அடைவதோ, ஸ்வர்கத்தில் ஸுகத்துடன் இருப்பதோ, மோக்ஷத்தைப் பெறுவதோ உண்மை. ஆயினும் பித்ரு தேவதைகள் என்று சொல்லப்பெறும் சிலர் உண்டு. அவர்கள் பிரம்மாவின் புதல்வர்கள். ஸ்வர்க லோகத்தில் தேவதாரூபியாக அந்தப் பித்ருக்கள் இருக்கின்றனர். அதனால் அவர்களைப் பித்ரு தேவதைகள் என்றே அழைக்கின்றனர். இந்திரன், சூரியன் முதலிய தேவதைகளைக் குறித்து யாகம், இஷ்டி, ஹோமம் முதலியவற்றை செய்வதுபோல் பித்ரு தேவதைகளைக் குறித்து ச்ராத்தம் என்ற சடங்கு செய்யப்படுகிறது. ஸ்வர்க்கம் என்ற லோகாந்தரத்திலுள்ள இந்திரன் முதலிய தேவர்கள் எப்படி நம்மால் கொடுக்கப்படும் ஹவ்யம் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளுகிறார்களோ அப்படியே லோகாந்தரத்திலுள்ள பித்ருக்களும் நாம் கொடுக்கும் கவ்யத்தை வாங்கிக்கொள்கின்றனர். யாகம் செய்யும் இடத்தில் இந்திராதி தேவர்கள் தம்மை ஆவாகனம் செய்த பிறகு சரீரத்துடன் வருவது போல், பித்ரு தேவதைகளும் நம் கண்களுக்குப புலப்படாத ஸூக்ஷ்ம சரீரத்தை எடுத்துக் கொண்டு வருகின்றனர். ஒரே ஸமயத்தில் பல இடங்களில் இந்திரனைக் குறித்தே பல யஜமானர்கள் யாகம் செய்தால், பல சரீரங்களை எடுத்துக்கொண்டு ஒரே இந்திரன் ஆங்காங்கு வருவது போல், பல புத்திரர்கள் தங்களது ஒரு தந்தையைக் குறித்துப் பல இடங்களில் ச்ராத்தம் செய்தால் ஆங்காங்கு ஒரே பித்ரு தேவதைகள் பல உருவத்துடன் வந்து கவ்யத்தைப் பெற்று கொள்கிறார்கள்.

மானிட பிறவியில் பிறந்த ஸௌபரி என்னும் ஓர் மகரிஷி பல உருவங்களை எடுத்துப் பல பெண்களுடன் இன்பங்களை அநுபவித்தார் என்று கேட்டிருக்கிறோம். ஒரு மனிதனுக்கே இவ்வளவு சக்தி இருக்க, பிரம்மதேவனால் படைக்கப் பெற்றவர்களும், புத்திரர்கள் செய்யும் சடங்குகளில் கடைக்கும் கவ்யத்தைப் பெற்று கொள்வதற்காகவே ஏற்பட்டவர்களுமான பித்ரு தேவதைகளுக்கு ஏன் இவ்வளவு சக்தி இராது?

'ச்ராத்தங்களில் அந்தணர்களுக்கு அன்னமிட்டால் அவர்களே திருப்தியடைவார்கள். இப்படியிருக்க பித்ரு தேவதைகளுக்கு எப்படி பசியடங்கும்?" என்று ஸந்தேகப்பட வேண்டாம். கர்ப்பிணியான பெண் ஆஹாரம் உட்கொண்டால் கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கு பசி அடங்கிவிடுகிறதாம். அது நேரில் ஆஹாரத்தை உட்கொள்ளாவிட்டாலும் அதனுடைய பசி அடங்குவது போல், அந்தணர்கள் ஆஹாரம் உட்கொள்ள, பித்ரு தேவதைகளின் பசியடங்கி அவர்கள் திருப்தியடைகிறார்கள். பிறந்த சிசு ஓர் இடத்தை அசுத்தம் செய்தால் அதை உடன் சுத்தி செய்ய வேண்டுமாம். இல்லாவிட்டால் அந்த அசுத்தம் உலருவது போல் சிசுவும் உலர்ந்துவிடுமாம். அசுத்தத்தில் ஒருவன் துப்பினால் உடனே இவனது நெஞ்சு காறுகிறது. ஆஞ்சநேயர் ஸமுத்ரத்தைத் தாண்டியபோது ஸிம்ஹிகை என்ற அரக்கி அவருடைய நிழலைப் பிடித்து இழுக்க, ஹனுமார் மேலே செல்ல முடியாமல் பின்னுக்கே வந்தார் என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் கேட்டிருக்கிறோம். இழுபட்டது நிழலாக இருக்க, அவர் மேலே செல்ல முடியாமைக்குக் காரணம் யாது?

முன்பு மலைகளுக்கு இறக்கை இருந்தபடியால் அவற்றுக்கு பறக்க வசதி இருந்தது. மனிதனைப் போலுள்ள அரக்கர்கள் எவ்வாறு ஆகாயத்தில் பறந்தார்கள்? மந்திரபலத்தினால் வித்தையைப் பெற்றவர்கள், ஒவ்வொரு தெருவிலும், மனிதர்களால் செய்ய முடியாததும், மிக்க வியப்பைத் தரக் கூடியதுமான எத்தனையோ வேலைகளை செய்வதைப் பார்த்திருக்கிறோம். தேள் கொட்டிவிட்டால் மந்திரத்தை உபயோகித்து, அதனால் உண்டான விஷத்தையும் வலியையும் நீக்குகிறார்கள். பசு தின்ற புல் பாலாக மாறுகிறது. அதே புல்லை மனிதனோ எருதோ தின்றால் பாலாக மாறுவதில்லை. இப்படிப் பல விஷயங்களில் ஒவ்வொர் அதிசயத்தைக் கண்ணால் பார்க்கிற நமக்கு பித்ருதேவதை விஷயத்தில் மாத்திரம் ஐயம் ஏன்?

அவரவர் ஜனக பித்ருக்களின் (தாய் தந்தைகளின்) நாம கோத்திரங்களுடன் மந்திரங்களைச் சொல்லி ஓர் அந்தணனிடம் ஆவாகனம் செய்து இந்த பிராம்மணர்களுக்கு அன்னமிட்டால் நம் பித்ரு தேவதைகள் திருப்தியடையக் குறையில்லை. மந்திரங்களுடைய பலம் அப்படிப்பட்ட மேன்மை வாய்ந்தது. இது கொண்டு, 'வெளியூரில் சென்றிருந்த பித்ருக்களோ, வேறு மனிதர்களோ ஏன் திருப்தி பெறவில்லை?' என்ற கேள்வி கேட்கத் தக்கதன்று. வீடு கட்டுகிறவன், கிணறு வெட்டுகிறவன் முதலிய வேலைக்காரர்கள் ஒவ்வொர் இடத்திலும் புதிதாக வேலைகளை ஆரம்பிக்கும்போது சாணத்தில் அறுகம்புல்லை வைத்துப் பூஜை செய்கின்றனர். பல தினங்களானாலும் அந்த சாணத்தில் கிருமி வருவதில்லை. ஸாதாரணமாக தெருவிலே உள்ள சாணங்களில் மறுதினமே கிருமிகள் அடைத்துக் கொள்கின்றன. இப்படிப் பல விஷயங்கள் உள்ளன.

ஆகையால் பிரம்மாவினால் படைக்கப்பட்ட அவரது புதல்வர்களான பித்ரு தேவதைகளைக் குறித்தே சடங்குகளைச் செய்கிறோம். இதனால் அவர்கள் திருப்தியடைந்து நமது ஜனக பிதாக்கள் ஸ்வர்க்கத்திலோ, நரகத்திலோ, பூமியில் வேறு பிறவியிலோ இருந்தாலும் அவர்களுக்கு பிரம்ம புத்திரர்களான பித்ருதேவதைகள் அந்த அந்த ஸமயங்களில் ஒரு விதமான ஸௌக்கியத்தை கொடுக்கின்றனர். நம்மிடமும் திருப்தியடைந்து ஸர்வ பலனையும் அளிக்கின்றனர். இல்லாவிட்டால் சபிக்கின்றனர். ஒரு புதல்வன் தகப்பன் மூலமாகப் பல முன்னேற்றங்களைப் பெற்றுப் பெரியவனாகி நன்கு ஸம்பாதிக்கும்போது, ஜீவதசையிலுள்ள தகப்பனுக்கு அன்ன மிடாவிட்டால் தந்தைக்கு மனத்தில் எப்படித் தாபம் உண்டாகுமோ அது போலத்தான் பித்ரு தேவதைகளும் ச்ராத்தம் செய்யாவிட்டால் கோபமடைவார்கள்.

ஆகையால் பித்ரு தேவதைகள் திருப்தியடைவதற்கும் அவர்கள் மூலமாக நம் தாய்தந்தையரும் நாமும் ஒரு வித ஸௌக்யத்தை அடைவதற்கும் இந்தச் சடங்குகளை விடாமல் செய்ய வேண்டும் என்பது எம்பெருமானின் கட்டளை. செய்யும்போது அவரவர் நாம கோத்திரங்களைச் சொல்லி பித்ரு தேவதைகளை ஆவாகனம் செய்ய வேண்டும் என்பது கட்டளை. இதில் சொல்ல வேண்டிய பல விஷயங்களை அநேக கல்பம் வாழ்ந்துள்ள மார்கண்டேயர் கூறுவார் என்று சந்தனு தம் புத்ரரான பீஷ்மருக்கு உபதேசித்து மறைந்து விட்டார்.

பீஷ்மாசாரியர் தம் தகப்பனின் உபதேசம் மூலமாகத்தம் ஸம்சயங்களை நீக்கிக் கொண்டு மார்கண்டேயரிடம் இதை அறிந்துகொள்ள அவரை அணுகி, முன்பு நடந்த விஷயங்களை கூறினார். அது கேட்ட மார்கண்டேயர், "கல்வியில் சிறந்தவனே! பிதாவின் மனோரதம் பூர்த்தியடைய வேண்டும் என்று எண்ணி ராஜ்யத்தையும் இழந்த பீஷ்மனே! இவ்விஷயத்தில் எனக்கும் ஸனத்குமாரனுக்கும் நடந்த ஸமாசாரத்தை கூறுகிறேன், கேள்" என்று சொல்லத் தொடங்கினார்.

நான் என் தந்தையின் அநுக்ரகத்தினால் நீண்ட ஆயுளைப் பெற்றவன். அவரிடத்தில் அதிக பக்தியை வைத்தபடியால் எங்கும் பரவிய புகழைப் பெற்றவன். ஒரு சமயம் மேரு மலையை அடைந்து தவம் செய்யத் தொடங்கினேன். அந்த மலையின் வடதிசையில் ஒளியுடன் திகழும் என் அருகில் அணுகும் அழகிய விமானத்தைக் கண்டேன். அதில் ஒரு கட்டிலில் சூரியன் போல் விளங்கிப் படுத்துக் கொண்டிருந்த ஒரு சிறிய உருவத்தைக் கண்டேன். உடனே எழுந்து, அவ்விமானத்தில் இருக்கும் புருஷனுக்கு அர்க்யம் பாத்யம் முதலியவற்றை ஸமர்ப்பித்து, "தேவரீர் யார் என்று அறிய விரும்புகிறேன்" என்றேன். அந்த விமானத்தில் இருந்தவர் புன்சிரிப்புடன் பெரிய உருவத்தை எடுத்துக்கொண்டு, "நான் பிரம்மாவின் புதல்வன்; ஸனத்குமாரன் என்று பெயர். எப்போதும் குமாரனைப் போல், சிறு குழந்தையைப் போல், காமம் க்ரோதம் முதலிய துர்க்குணமற்றவனானபடியால் ஸனத்குமாரன் என்று எனக்குப் பெயர்" என்றார். பிறகு பித்ருக்களின் விஷயங்களையும், அவர்களைப் பற்றிய சடங்குகள் விஷயமாகவும் வினவினேன். அதற்கு அவர் கூறிய விடைகளிலிருந்து தேறியவற்றைக் கூறுகிறேன்.

பித்ரு கணங்கள் ஏழு வகையாக உள்ளன. இவற்றுள் நான்கு கணங்கள் (கூட்டம்) உருவமுடையன; மற்ற மூன்று கணங்கள் உருவமற்றவை. எந்த உலகங்களில் ஸுகாநுபவத்துக்கு உறுப்பான பொருள்கள் எப்போதும் இருக்கின்றனவோ, நித்தியமும் நினைக்கும்போது உண்டாகின்றனவோ, அந்த உலகங்களில் பிரம்மாவின் புதல்வர்களான பித்ரு தேவதைகள் இருக்கின்றனர். வைராஜர், அக்நிஷ்வாத்தர், பாஹிஷத் என்ற பெயர்களுடைய மூன்று கணம் மூர்த்தியற்றவை. இந்த மூன்று கணத்தைத் தேவதைகள் பூஜிப்பர். ஸுகலர்கள் ஆங்கிரஸர்கள், ஸுவதர்கள், ஸோமபர்கள் என்ற நான்கு கணம் மூர்த்தி பெற்றவை. இவர்களைக் க்ரமமாகப் பிராமண க்ஷத்திரிய வைச்ய சூத்திரர்களான நான்கு வர்ணத்தாரும் ச்ராத்தம் செய்து பூஜிக்கின்றனர். ஆகையால் இந்த நான்கில் ஒவ்வொரு கணத்தினரும் கிரமமாக நான்கு வர்ணத்தினருக்கும் பூஜ்யராகின்றனர்.

1. 12 மாஸங்களிலும் ஸங்க்ராந்தி தர்பணம் செய்ய வேணும்.

2. 12 ஆமா வாஸ்யாதினங்களில் செய்ய வேணும்.

3. மஹாளய தர்பணமும் விடாமல் செய்ய வேணும்.

4. அஷ்டகா அந்வஷ்டகா தர்பணம் செய்ய வேணும்.

5. கேதுக்ரஸ்தம் - ஸூர்யக்ரஹணம். ஸூர்யோபராககாலம் தர்பணம் செய்ய வேணும்.

6. ராகுக்ரஸ்தம் சந்திரக்ரஹணம். சந்திரோப ராகுகாலம் தர்பணம் செய்ய வேணும்.

1. இவைகளில் க்ரமமாக ச்ராத்தமே செய்ய வேணும் ச்ராத்தப்ரிதிநிதி தான் தர்பணம்.

2. க்ரமமாக செய்ய வேண்டிய ச்ராத்த ப்ரிதிநிதி சங்கல்ப ச்ராத்தம் செய்கிறார்கள்.

3. ஆமச்ராத்தமும் செய்வர் சிலர். சிலர் கோயில் தளிகை விடுவார்கள்.

4. முக்யமாக வர ருண ஸ்நானம் செய்ய வேண்டும். அதற்கு ப்ரதிநிதியாக கௌண ஸநானம்.

5. மோக்ஷத்திற்காக பக்தியோகம் தான் முக்யம் உபாயம். ஸ்வதந்த்ர ப்ரபத்தி கௌணம், அதிலும் கௌணம் உக்திநிஷ்டை அதிலும் கௌணம் ஆசார்ய நிஷ்டை.

6. முக்யமான கல்பம் செய்ய முடியாமல் போனால் தான் கௌணம் செய்வது.

7. முக்ய கல்பத்தில் அதிகாரி, கௌணத்தை செய்தால் பலனில்லை என்பது சாஸ்த்ரம்.

8. கோதானம் செய்வதற்கு பதிலாக கௌணமாக க்ருச்ரா ரணம் செய்வர்.

9. அநேக காலம் ஸாயம் ப்ரத: ஆஹுதி செய்வதற்காக பதிலாக ப்ராயச்சித்தமாக ஸர்வப்ராயச்சித்தஹோமம் செய்கிறார்கள்.

10. அநேக தர்ச பூர்ணமாஸம், ஸ்தாலீபாகம் செய்யாமல் இருப்பதால் ப்ராயச்சித்தமாக ஸர்வப்ராயச்சித்த ஹோமம் செய்வர்

11. இவையெல்லாம் உண்மையில் செய்ய முடியாமல் போனால்தான் ப்ராயச்சித்தமாக செய்யலாம்.

12. செய்ய முடியாமையை தானாக ஏறிட்டுக் கொண்டு ச்ராத்தத்திற்கு பதிலாக கோயிலிலே தளிகை விடுவது முதலியவை தகாது.

இங்கு விஷ்ணு புராணம்:

1. ப்த்ரு தேவதைகள் கூறுகின்றனர் - எங்களை உத்தேசித்து வஸ்த்ரம் ரத்னம் யானம் மற்ற ஸர்ஸபோகங்களும் ச்ராத்தத்தில் ப்ராஹ்மணர்களின் பொருட்டு எவன் கொடுக்கிறானோ அவன் விஷயத்தில் நாங்கள் (ப்த்ரு தேவதைகள்) ஸந்தோஷமடைந்து தன தான்யம் மற்றய ஸௌபாக்யம் ஸந்ததி இவைகளை கொடுப்போம் என்று.

2. எவன் பக்திச்ரத்தையோடு கூடியவனாய் அன்னத்தால் யதாசக்தி ச்ராத்தம் செய்து அந்தணர்களை பூஜிக்க வைக்கிறானோ அவனிடம் எங்களுக்கு அதிகம் ப்ரீதி.

3. அப்படி சக்தி இல்லாதவன் தான்யம், ஆமம் முதலியவைகளையும் தக்ஷிணைகளையும் கொடுத்து போஜனம் செய்து வைக்க வேணும்.

4. அதிலும் சக்தி இல்லை என்றால் கை நிரம்ப எள்ளையும் தக்ஷிணையும் கொடுத்து விப்ரனை வணங்கி வழி பட வேண்டும்.

5. 7 எண்ணிக்கைக்கு குறையாத எள்ளை எடுத்து கை ரொம்ப ஜலம் சேர்த்து தர்பணம் செய்தல் நல்லது. இவ்வாறு எங்களை உத்தேசித்து செய்தால் ஸந்தோஷமடைவோம்.

6. எதையும் செய்ய சக்தி இல்லாதவன் காட்டுக்குச் சென்று இருக்கைகளையும் மேலே தூக்கிக் கொண்டு உடலெல்லாம் தெரியும் வகையில் ஸூர்யாதி திக்பாலகர்கள் அறியும் வகை கூச்சலிட்டு சொல்ல வேண்டும். அதாவது எனக்கு பணம் இல்லை தான்யம் இல்லை மற்றெதுவும் இல்லை. ச்ராத்தம் செய்ய ஸௌகர்யமில்லை. என் பித்ருக்கள் திருப்தியடையவேண்டும் என்று நடுவழியில் புலம்ப வேண்டும். அகதிகள் இதை செய்யலாம். எள்ளு நீர் இல்லாவிடிலும் கண்ணீர் இல்லையா என்பர். இதையும் இல்லாமையை ஏறிட்டுச் சொல்வது கூடாது.

| | |
|---|---|
| ஸுமதி | கேசினி |
| 60 ஆயிரம் பிள்ளை | அஸ்மஞ்சஸன் |
| இல்லை | அம்சுமான் |
| இல்லை | திலீபன் |
| | பகீரதன் |

பகீரதன் மூலமாக கங்கை வந்தது. பாக்ரதி என பெயர். இந்த பகீரதன் தீலிபன் அம்சுமான் அஸமஞ்சஸன் என்று மூன்று தலை முறை தர்பணம் செய்த படியால் மித்ரு பிதாமஹ ப்ர பிதாமப்ன் என்கிற கணக்கில் நாமும் செய்கிறோம். தர்மசாஸ்த்ரம் கூறியிருப்பதற்கு இது ஒரு ஔசித்யம் என்பதை உணரவும்.

*****

# 54. கோடரி

கோடரி பரசு - இந்த தலைப்பைக் கண்டதும் பரசுராமனின் அவதாரம் நினைவுக்கு வரலாம். ஸ்வாமி தேசிகன் இந்த அவதாரவ்ருத்தாந்தத்தை தயாசதகத்தில் விவரித்துக் கூறியுள்ளார். அதாவது நாம் பசுயாகம் செய்வது சாஸ்த்ரத்துக்கு ஸம்மதமானது. அதுபோல் இவரும் நரபசுயாகம் செய்தார். அம்பரீஷோபாக்யானத்தில் நரபசு பலிசெய்து யாகம் செய்ய முயன்றர் என்பது ராமாயணத்தில் ப்ரஸித்தம். இங்கு துஷ்டர்களான அரசர்களை வேரறுக்கச் செய்தார். தனது கோடரியைக் கொண்டு எல்லா அரசர்களையும் வெட்டி வீழ்த்தினார். இது பார்வைக்கு கொடும்செயல் என்று தோன்றும். இல்லவே இல்லை. பசுக்களைக் கொன்று யாகம் செய்தால் உண்மையில் அந்த பசு புண்யலோகம் அடைகிறது. அதுபோல் துஷ்ட க்ஷத்ரியர்களாகிய பசுக்களைக் கொன்று இவர் யாகம் செய்கிறார். அரசர்களுடன் போர் புரிவது இவருடைய வேள்வி. இதனால் இந்த பசுக்கள் தங்களது பாபங்களைக் களைந்து புண்ய லோகம் செல்லுகிறார்கள். இந்த க்ஷத்ரியப்பூண்டை (வனத்தை) அழிப்பதற்கு ஸாதனமானது இவரது பரசு. "மழுவினால் அவன் அரசை மூவெழுகால் மணி முடி பொடியடுத்து உதிரக்குழுவுவார் புனலுன் குறித்து வெங்கோபம் தவிர்ந்தவன்" என்றர். திருமங்கை மன்னன். துஷ்ட க்ஷத்ரிய வனத்தை அழித்தது அவரது கோடரி. இங்கு நாமே கோடரி என்று சொல்வதற்கு இந்த வ்யாஸம்.

கோடரி என்னும் பொருளை எல்லோரும் அறிந்திருக்கின்றனர். இது காட்டை அழிப்பதற்கும், விறகுகளை வெட்டுவதற்கும், இன்னும் பல வேலைகளுக்கும் உபயோகப்படுகிறது. தீச்செயல்களைச் செய்பவர்களைக் கோடரி என்றும், கோடரிக் காம்பு என்றும் நிந்திப்பதுண்டு. ஹிரண்யகசிபு என்னும் அசுரன் எம்பெருமானிடத்தில் பக்தி வெள்ளத்தைப் பெற்றிருந்த தன் புதல்வனான பிரஹ்லாதனைக் 'கோடரிக் காம்பு' என்று சொல்லுகிறான்.

> தைதேயசந்தநவநே ஜாதோயம் கண்டகத்ரும: ।
> யந்மூலோந் மூலபரசோர் விஷ்ணோர் நாலாயிதோர்பக: ॥ (ஸ்ரீமத் பாகவதம் 7-5-17)

அரக்கர் குலத்தைச் சந்தனமரக் காடாகவும், அதில் ப்ரஹ்லாதன் என்பவன் முள்மரமாகவும், இந்தச் சந்தன வனத்தை அழிக்க ஏற்பட்டிருக்கிற ஸ்ரீவிஷ்ணுவாகிய கோடரிக்கு ப்ரஹ்லாதன் என்ற குழந்தை காம்பாகவும் நினைத்துக் கூறுகிறான் ஹிரண்யகசிபு. இவனது புத்தியை அநுஸரித்து அரக்கர் குலத்தை சந்தன காடாகவும், ஸ்ரீவிஷ்ணுவைக் கோடரியாகவும், ப்ரஹ்லாதனைக் காம்பாகவும் நினைக்கிறான் போலும்.

இவ்வுலகத்தில் பிறந்து உபயோகமற்றவனாக ஒருவன் இருந்தால் அவனையும் கோடரி என்று நிந்திப்பதுண்டு. புவியில் பிறந்தவன் நன்கு கல்வி கற்றும், பணத்தைச் சேமித்தும், தானதர்மங்களைச் செய்தும் காலத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க வேண்டும்.

கம்பர் தசரத சக்கரவர்த்தியைப் பற்றிக் கூறுகிறார் - ஈந்தே கடந்தான் இரப்போர்கடல், எண்ணில் நல்நூல் ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும் அளக்கர், வாளால் காய்ந்தே கடந்தான் பகைவேலை, கருத்து முற்றும் தோய்ந்தே கடந்தான் திருவின் தொடர் போகபௌவம்.

தசரத சக்கரவர்த்தி நான்கு கடல்களையும் தாண்டினான். அதாவது யாசகர்கள் வந்து தன்னிடம் எதையாவது இரந்தால், இல்லை என்று சொல்லாமல் அவர்களின் மனத்தைத் திருப்தி

செய்வித்தான். இப்படி யாசகர்கடல் ஒன்றைத் தாண்டினான். அறிவு என்னும் ஸமுத்திரத்தை நல்ல நூல்களை ஆராய்ந்து தாண்டினான்; அதாவது கல்விகளில் சிறந்தவனாக விளங்கினான். எதிரிகளை வாளால் வென்று நின்றான். இதனால் பகைக்கடலைக் கடந்தான். இவ்வுலகில் பிறந்து சிற்றின்பங்களைப் பலவாறு அநுபவித்தபடியால் போகக் கடலையும் கடந்தான். இப்படி நற்காரியங்களைச் செய்து கொண்டு, தன் பிறவியை வீணாக்காமல் இருப்பவனே உயர்ந்தவன். இதற்கு முரணாக இருப்பவன் வெறும் கோடரிதான். இதை ஒரு கவி வெகு சமத்காரமாகப் பேசுகிறார் -

- சார்ங்கதரபத்ததி:-

ந த்யாதம் பதமீச்வரஸ்ய விதிவத் ஸம்ஸாரவிச்சித்தயே
ஸ்வர்கத்வாரக பாடபாடநபடுர் தர்மோபி நோபார்ஜித: ।
நாரீபீநபயோதரோருயுகலம் ஸ்வப்நேபி நாலிங்கிதம்
மாது: கேவலமேவ யௌவநவநச்சேதே குடாரா வயம் ॥

மனிதன் ஸம்ஸாரக் கடலைத் தாண்ட வேண்டும். இது முக்கியமானது. ஸம்ஸாரம் என்பது மனிதனுக்குப் பல கஷ்டங்களைக் கொடுக்கக்கூடியது. இது பல இன்பங்களை அளிக்கும்போல் தோற்றமளிக்கும். அவை அனைத்தும் உண்மையில் இன்பங்கள் அல்ல. ஒருவன் பாழுங்கிணற்றில் புலிக்குப் பயந்து இறங்கி அங்கே பல ஸர்ப்பங்களையும் துஷ்ட ஜந்துக்களையும் கண்டு அஞ்சும் ஸமயத்தில், மேலே வந்த புலி என்ன செய்யுமோ என்று நடுங்கி அண்ணாந்து பார்த்த போது அங்குள்ள செடியின் தேன் கூட்டிலிருந்து விழும் தேனைப் பருகினால் எவ்வளவு சுகம் உண்டாகுமோ, அவ்வளவுக்கு இணையானதுதான் ஸம்ஸார இன்பம். இப்படிப்பட்ட சுகத்தை விரும்பி, இதைப் பெற நியாயமான மார்க்கத்தை விட்டு அநீதி மார்க்கத்தில் இறங்கிவிடுகிறோம். இப்படி அற்பமான இன்பத்தை அநுபவிக்கப் பணம் தேவைப்படுகிறது அல்லவா? அதற்காகப் பொய் பேசுவது, திருடுவது, கொலை செய்வது போன்ற தொழில்களில் ஜனங்கள் இறங்குகின்றனர்.

உண்மையில் மனைவி, புதல்வன், பெண், பேரன் முதலிய பந்துக்கள் அனைவரும் நமக்குச் சத்ருக்களே. ஸ்நேகிதர்கள் அல்லர். நாம் என்னவோ இவர்களை அநுகூலர்களாக நினைத்திருக்கிறோம். உண்மையில் அப்படி நினைப்பது தவறுதான்.

நம் மனைவி மக்கள் முதலியவர்கள் நமக்கு அநுகூலமாக இருக்கிறார்களே, நாம் சொல்வதைக் கேட்கிறார்களே, நம் விருப்பப்படி நடந்துகொள்கிறார்களே; அப்படி இருக்க அவர்களைச் சத்ருக்கள் என்று எப்படிச் சொல்லலாம்? கேண்மின். ஆகையால்தான் இவர்கள் அநுகூல சத்ருக்கள் ஆகின்றனர். நமது ஆத்மா நற்கதி பெற வேண்டும் என்று எண்ணி முயன்றால் அதற்கு இவர்கள் அநுகூலர்களாகவே இருந்து தடை செய்கின்றனர். நமக்கு ஸ்வாமியான பகவானிடத்தில் பக்தியை வளர விடாமல் இகலோகத்தில் ஸுகங்களைக் கொடுத்து மயக்கத்தை உண்டுபண்ணுகின்றனர். 'நாம் யார்? நாம் எதற்கு இங்கு பிறந்தோம்? நம் உடலை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து அவனுடைய ஏவல் தேவைகளை செய்ய வேண்டாமா?" என்ற எண்ணங்களை மறந்து, 'நம் புதல்வன், மனைவி, புதல்வி இவர்கள் நாம் இறந்த பிறகு எப்படி ஆகிவிடுவார்களோ? கஷ்டப்படாமல் இருக்க வேண்டுமே' என்ற எண்ணத்தை நாம் அடைகிறோம். அதற்கு தக்கபடி பணத்தை சேமிப்பதில் முயற்சி உண்டாகும்படி மோகத்தை

கொடுத்துவிடுகிறது இந்த ஸம்ஸாரம். 'நாம் இறந்த பிறகு எப்படி ஆவோம்? எந்த ஜன்மத்தை அடையப்போகிறோம்?' என்ற தன் விஷயமான நினைவை மனிதன் விட்டுவிடுகிறான். பாவம்!

இதை நினைத்தே கூரத்தாழ்வான் கூறினார் -

புத்ராதய: கதமமீ மயி ஸம்ஸ்திதே ஸ்யு:, இத்யப்ரதிக்ரியநிரர்த்த கசிந்தநேந I
தூயே, ந து ஸ்வயமஹம் பவிதாஸ்மி கீத்ருக், இத்யஸ்தி ஹஸ்திகிரிநாத ! விமர்சலேச: II
(ஸ்ரீ வரத ராஜஸ்தவம் - 77)

ஆகையால் பந்துக்கள் நமக்கு அநுகூல சத்ருக்களே தவிர, உண்மையில் ஸுஹ்ருத்துக்கள் அல்லர். சக்கரவர்த்தி திருமகளின் தர்மபத்னியான சீதையை அபகரித்து வந்த ராவணனின் புதல்வனான இந்திரஜித்து ராவணனுக்கு அநுகூலனா, சத்துருவா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். பகவானான ராமனிடத்தில் பக்தி உண்டாகி வளரும்படி உபதேசம் செய்தான் ராவணனுக்கு விபீஷணன். இவ் வார்த்தையை, முன்பு தூது சொன்னவனை வதம் செய்யக்கூடாது என்று சொன்ன விபீஷணன் வார்த்தையை கேட்டதுபோல் ராவணன் கேட்டிருந்தால் எவ்வளவு நன்மையைப் பெற்றிருப்பான்! புத்திரன் என்ற பெயரை வைத்துக் கொண்டு இந்திரஜித்து தன் தகப்பனான ராவணன், விபீஷணன் வார்த்தையை அநுசரிக்க விடாமல் செய்துவிட்டான் அல்லவா? எனவே புத்திரன் என்ற பெயரைக் கொண்டு சத்ருவாகவே இருந்தான் தந்தைக்கு. இதையே விபீஷணன் பகிரங்கமாகக் கூறினான்.

'புத்ரப்ரவாதேந து ராவணஸ்ய த்வமிந்த்ரஜித்மித்ரமுகோஸி சத்ரு;
யஸ்யேத்ருசம் ராகவதோ விநாசம் நிசம்ய மோஹா தனுமன்யஸே த்வம்' என்று.
- யுத்தகாண்டம் (15-10)

இப்படிப் பற்பல இடங்களில் இவ்விஷயத்தைக் கண்டு கொள்ளலாம். மேலும் கேண்மின்; பூலோகத்தில் பிறந்த நமக்குத் தேவதைகள் சத்ருக்களே தவிர அநுகூலர்கள் அல்லர். ஏன்? நாம் எம்பெருமானிடத்தில் பக்தியைச் செலுத்தினால் அதற்கு தேவர்கள் தடங்கல் உண்டு பண்ணுகின்றனர்.

ஸத்யம் சதேந விக்நாநாம் ஸஹஸ்ரேண ததா தப: I
விக்நாயுதேந கோவிந்தே ந்ருணாம் பக்திர் நிவார்யதே II

நாம் உண்மையே பேச வேண்டும் என்று எண்ணினால் அதற்கு நூறு தடங்கல்கள் உண்டாகின்றன. ஒரு வாதம் செய்பவர். கோர்ட்டில் அவர் 'நாம் தினமும் ந்யாய ஸ்தலத்தில் பொய்யே சொல்லுகிறோமே. ஒரு நாளாவது சொல்லாமல் இருக்க எண்ணினார். அதற்காக ஒரு நாள் லீவ் எடுத்துக் கொண்டார். அன்றை தினம் செல்லவில்லை. ஆனால் இவரை வரவழிக்கவேண்டும் என்று தொலைப் பேசியில் பேசினார்கள். அப்பொழுது மனைவி எடுத்து இவரிடம் சொன்னாள். அதற்கு இவர் சொன்னது. நான் வீட்டில் இல்லை என்று சொல்லிவிடு என்று. பாருங்கள் பொய் என்பது, தானாக வந்துவிடுகிறது. தவம் செய்கிறவர்களுக்கு ஆயிரக் கணக்கான விக்னங்கள். எம்பெருமானிடத்தில் பக்தி செய்பவர்களுக்குக் கணக்கிட முடியாத விக்னங்கள். இப்படி இடையூறுகளை தேவர்கள் செய்து, பகவானிடத்தில் இவர்களை சேரவொட்டாமல் செய்து விடுகின்றனராம். நாம் தேவர்களுக்கு யாகம் முதலிய புண்ணிய காரியங்களைச் செய்து வருகிறபடியால், 'பகவானிடத்தில் ஒருவன் பக்தி செய்தால் முடிவில்

இவன் பகவானை அடைந்துவிடுவான். நமக்கு ஓர் ஆள் குறைந்துவிடுவான்' என்று எண்ணி அதைத் தடுத்து விடுவார்களாம். எப்படி நமக்கு இவ்வுலகில் பசு முதலியவை உபயோகப்படுகின்றனவோ, அப்படித் தேவர்களுக்கு நாம் உபயோகப்படுகிறோம். ஆகையால் தம் ஆட்களில் இவர்கள் குறைந்துவிடுகிறார்கள் என்று எண்ணி, இறைவனிடத்தில் பக்தியை நமக்கு வளரவொட்டாமல் தடுத்துவிடுகிறார்கள்.

ஆக, தேவர்கள் நமக்கு மழை, ஐச்வரியம் முதலியவற்றைக் கொடுத்து இவ்வுலகிலேயே என்றும் இருக்கும்படி செய்து, அநுகூலர்களாக நடிக்கிறார்களே தவிர, உண்மையில் அநுகூலர்கள் அல்லர், சத்ருக்களே. இது போலவே நம் பந்துக்களும் பல இன்பங்களைக் கொடுத்து இவ்வுலகத்தில் நம்மை ஸ்வாதீனம் செய்து கொள்கிறார்கள். பகவானிடத்தில் ஏற்படும் நற்புத்தியையும் தடுத்துவிடுகிறார்கள். நாமும் அவர்களுக்கு வசப்பட்டு ஸத்விஷயங்களை மறந்து, அவர்களின் முகமலர்ச்சிக்காக அநீதி மார்க்கத்தில் இறங்கிப் பணம் முதலியவற்றை சேமித்து கொடுத்து ஆத்மஹத்தியை செய்து கொள்கிறோம். இதுதான் உண்மை. ஆகையால் அற்பமாயும் அஸ்திரமாயும் உள்ள இன்பத்தைக் கொடுக்கக்கூடிய இந்த ஸம்ஸார அநுபவத்தை அடியோடுவிட்டு, ஸ்திரமாயும், பெரியதாயுமுள்ள ஆனந்தத்தை கொடுக்கக்கூடிய மோக்ஷத்தை பெற விரும்ப வேண்டும். அதற்காக நமக்கு யஜமானனான ஸர்வேச்வரனுடைய திருவடியைத் தியானிக்க வேண்டும். இப்படி செய்பவன்தான் பிறவி பயனை பெறுபவன். இவன்தான் உத்தமாதிகாரி.

இப்படி உலக இன்பத்தில் வைராக்யம் இல்லாதவன் இந்தப் பூலோக வாழ்க்கையை விட்டு ஸ்வர்க லோகத்தில் ஏற்படும் ஆனந்தத்தையாவது விரும்ப வேண்டும். அதற்காக ஸ்வர்க்லோக வாசற்கதவைத் திறப்பதற்கு சாஸ்திரங்கள் ஏற்படுத்தின ஸோமயாகம் முதலிய தர்ம காரியங்களைச் செய்தல் நல்லது. இப்படி செய்பவன் இரண்டாம் அதிகாரி.

இவ்வகையில் மூன்றாம் அதிகாரி ஒருவன் இருக்கிறான். மோக்ஷத்திலும் பரலோகத்திலும் ஆசையற்றவனாக இருந்த போதிலும், இகலோகத்தில் ஏற்படும் சிற்றின்பத்தில் ஆசையுள்ளவனாய், அதற்கு தகுந்த உபாயங்களை செய்து சுகங்களை அநுபவிக்க அவன் முயலுகிறான். எவ்வளவொ பணத்தை பெற்று பெரிய தனிகராக இருந்ததும், தாம் சிறிதளவும் அநுபவிக்காமல் பணத்தை சேமித்து வைப்பதில் மாத்திரம் கண்ணோட்டமுடையவர் பலர் இருக்கின்றனர். அந்தோ! இவர்கள் தேனீக்கள் தேனைத் திரட்டி வைப்பதுபோல் பணத்தை திரட்டி வைக்கிறார்களே தவிர, அதை அநுபவிப்பதில்லை. பணம் இருந்தும், உயர்ந்த மாளிகை இல்லை; உன்னத உடைகள் இல்லை; வாகனங்கள் இல்லாமல் நடந்தே செல்லுவார்கள். சரியான உணவும் உண்பதில்லை. பசி இருந்தும், வெறும் கேழ்வரகு மாவை உபயோகப்படுத்திப் பசியை நீக்கிக் கொள்ள முயல்வர். எதற்கும் செலவு செய்யாமல், திரட்டிய பணத்தை பார்ப்பதில் மாத்திரமே இவர்களுக்கு ஆனந்தம். இவர்களது பணத்தை எவனோ கொள்ளையடித்துக்கொண்டு போகப் போகிறான். அவன் உயர்ந்த உப்பரிகையைக் கட்டிக் கொண்டு ரம்பைக்கும் ஊர்வசிக்கும் சமமான பெண்களுடன் கலந்து அநேகவிதமான போகபோக்கியங்களை அநுபவிக்கப் போகிறான். பிறருக்குத்தான தர்மங்களைச் செய்து உலகில் பிரசித்தியையும் பெறுவான். பணத்தை திரட்டியவன் இவ்வுலகத்திலும் சுகத்தை அநுபவிக்காமல் வெறும் ஏமாற்றத்தை பெறுவான்.

ஒரு வேடிக்கையை பாருங்கள். இதை நன்கு கேட்டு ஆலோசியுங்கள், ஒருவன் பல வங்கிகளில் டிபாசிட்டு செய்து உள்ளான். எவ்வளவு தெரியுமா? கணக்கில்லை. அவன் எப்பொழுதும் வங்கி

புஸ்தகத்தைப் புரட்டிப்பார்த்து ஆனந்திப்பான். ஆனால் அதில் செல்லாக்காசு கூட பிறருக்கு எடுத்துக் கொடான். தானும் அப்பணத்தின் மூலம் ஸுகத்தை அநுபவிக்கமாட்டான். ஆனாலும் நான் பணக்காரன். நானே பணக்காரன் என்று மார்பு தட்டித்திரிவான். இவன் இப்படியிருக்க மற்றொருவன் பரம தரித்ரன். அவனிடம் நானே பணக்காரன் செல்வந்தன் என்று சொல்லுகிறாயே. அது தவறு. நானும்தான் செல்வன்தன் என்று கோஷமிட்டான். அது எப்படி நீதான் மஹாதரித்ரனாச்சே என்றான் பணக்காரன். அதற்கு தரித்ரன் சொன்ன பதில் - மிக ஆச்சர்யமானது - நீ எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் அதைக் கொண்டு ஏதாவது ஸுகத்தை அநுபவிக்கிறாயா? அல்லது பிறருக்குத்தான் தானம் கொடுக்கிறாயா? தானம் போகம் இரண்டுக்கும் பயன் படாத பணம் உன்னுடையது. எனக்கும் பணம் நிறைய உள்ளது. ஸ்வர்ணமயமாகவே உள்ளது. இதோ உள்ளதே மேருமலை. இது என்னுடையது. இது தானத்துக்கும் போகத்துக்கும் பயன் படாதே என்கிறாயா? ஆம். உன்னுடையதும் அப்படித்தானே. இதில் என்ன எவ்வளவு வாசியுள்ளது என்று பரிஹஸித்தான்.

"தான போக விஹீனேன தனேந தனவான் யதி ।
தான போக விஹீனேன மேருணா தனவானஹம் । என்பது நீதி.

ஆகையால் மோக்ஷத்தைப் பெற விரும்பி பகவானின் திருவடிகளில் த்யானம் செய்பவன் உத்தம அதிகாரி. ஸ்வர்கத்தை விரும்பி அதற்கு உறுப்பான வேள்வி முதலியவற்றைச் செய்பவன் இரண்டாம் அதிகாரி. இகலோகத்தில் சுகத்தை விரும்பி அதற்கு தகுந்தபடி முயற்சி செய்து சுகங்களை அநுபவிப்பவன் மூன்றாம் அதிகாரி. இம்மூன்று வழிகளிலும் இறங்காமலும், மூன்று விதமான பலனையும் பெறாமலும் பூவுலகத்தில் பிறந்து இருக்கிறவன் வெறும் கோடரியாகிறான். கோடரி வனத்தை அழிப்பதுபோல் இவனும் ஓர் வனத்தை அழிக்கிறான். அந்த வனம் எது என்றால் யௌவனம்தான். அதாவது ஒரு தாயின் வயிற்றில் ஒரு குழந்தை பிறந்தால் அந்தத் தாயின் யௌவனம் போய்கிடுகிறது. 'ஒரு சால் ஓட்டினாலும் புழுதிதான், ஒரு குழந்தை பெற்றாலும் கிழவி தான்' என்று பழமோழி சொல்வதுண்டு. இப்படி குழந்தைகள் பிறக்க பிறக்க தாய்க்கு யௌவனம் போய் மிகவும் கிழத்தன்மை உண்டாகிறது.

பிறந்த குழந்தை பெரிதாக வளர்ந்த பிறகு மேற்கூறியபடி மூன்று வகையில் ஏதாவது ஒரு வகையை கைப்பிடித்து ஸுகங்களை அநுபவித்தால் தாயின் யௌவனம் சென்றாலும், தான் ஸுகப்பட்டான் என்பதாவது உண்டு. அதுவும் இல்லாதவனுக்குத் தாயின் யௌவனத்தைப் போக்கடித்தது ஒன்றுதான் அவன் செய்தது. இங்கு யௌவனம் என்பதில் வனம் என்று இருப்பதையும் கவனிக்க வேண்டும். ஆக இவன் வெறும் கோடரிதான். ஆகையால் இப்படி நாம் இல்லாமலிருப்பதற்கு தகுந்தபடி நல்ல காரியங்களை செய்து உயர்ந்த ஸுகத்தை அநுபவிக்க முயற்சி செய்வோமாக.

தானம் என்பது எல்லோருக்கும் வரும் ஸ்வபாவமல்ல. சிலருக்குத்தான் ஏற்படும். கொடுப்பது ப்ரியமாகப் பேசுவது தைர்யமாக இருப்பது ஸமயத்துக்குத் தகுந்தபடி பேசுவது இவையெல்லாம் அப்யாஸத்தால் வருவதல்ல. உடன் பிறக்க வேண்டும். முன் பிறவியில் கேட்பவர்களுக்கு நாஸ்தி இல்லை. நாஸ்தி இல்லை என்று சொன்னபடியால் இந்த பிறவியில் தேஹி - தேஹி கொடு கொடு என்று சொல்லுகிறோம். அப்பொழுதும் இரண்டு எழுத்து. இப்பொழுதும் இரண்டு எழுத்து.

*****

# 55. பித்ரு காரியத்தில் ஒரு விசேஷம்

மார்க்கண்டேயர் என்னும் மகரிஷி ஸனத்குமாரருடைய அநுக்ரகத்தினால் திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெற்றார். எந்தக் காலங்களிலுமுள்ள பொருள்களையும் உட்கண்ணால் காண வல்லமையை அடைந்தார். நடந்தது நடப்பது நடக்கப் போவது ஆகிய எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்தார்.

முன்பு தம்மிடத்தில் சில வினாக்களைக் கேட்ட பீஷ்மரைப் பார்த்து, "பித்ரு காரியத்தை நாம் சிரத்தையுடன் செய்ய வேண்டும். எப்படியாவது திரவியங்களை ஸம்பாதித்து அதை விடாமல் செய்ய வேண்டும். ஏதோ மோகத்தால் ஹிம்சை செய்தாலும் அதைப் பித்ருக்களுக்கு நிவேதனம் செய்துவிட்டால் அது ஒருவித மேன்மையையும் கொடுக்கும். இதற்குத் திவ்ய சக்ஷுஸ்ஸால் கண்ட ஓர் இதிஹாஸத்தைக் கூறுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினார்.

பரத்வாஜர் என்னும் முனிவரை நாம் அறிந்திருக்கிறோம். அந்த முனிவருக்கு ஏழு புதல்வர்கள். அனைவரும் எல்லாக் கல்வியும் கற்றவர்கள்; வேதமனைத்தையும் ஓதுபவர்கள்; மிக்க ஆசாரசீலர்கள். பரமாத்மாவினிடம் தமது மனத்தைச் செலுத்தி யோகாப்யாஸத்தில் இழிந்து திகழ்ந்தனர். இவர்கள் மறுபிறவியில் விசுவாமித்ர மகரிஷிக்குப் புதல்வராகப் பிறந்தார்கள். வாக்துஷ்டன், க்ரோதனன், ஹிம்ஸ்ரன், பிசுனன், கவி, கஸ்ருமன், பித்ருவர்த்தி என்று பெயர் பெற்றவர்கள். வாக்துஷ்டன் எப்போதும் தூஷணச் சொல்லைச் சொல்லுபவன். க்ரோதனன் கோபமுள்ளவன். ஹிம்ஸ்ரன் ஹிம்ஸை செய்பவன். பிசுனன் கோள் சொல்லுபவன். கவி பரலோகத்தில் பயம் உள்ளவன். கஸ்ருமன் ஆகாயத்தில் ஸஞ்சரிக்க விருப்பமுள்ளவன் (பரலோகத்தை விரும்புபவன்). பித்ருவர்த்தி தந்தையை அநுஸரிப்பவன்.

இவர்கள் தங்கள் பெயர்களுக்குத் தகுந்தபடி நடத்தை உள்ளவர்கள். கார்க்யர் என்னும் முனிவரை ஆசார்யராக வரித்து, அவரிடம் வேதம் ஓதிக் கொண்டு வந்தார்கள். தங்கள் பிதாவான மகரிஷி (விசுவாமித்திரர்) ஆசார்யருடைய வார்த்தையைக் கேட்டு மிக்க நியமத்துடன் பரம ஆஸ்திக்யத்துடனும் நற்காரியங்களைச் செய்து வந்தார்கள். தம் ஆசார்யனிடத்தில் வினயத்துடனும் பக்தியுடனும் பணி புரிந்து வந்தார்கள். ஆசார்யர் இவர்களின் பக்திக்கு பரவசராகி எல்லா வேதங்களையும் கல்விகளையும் கற்றுக் கொடுத்தார்.

தினந்தோறும் ஆசார்யனது பசுவைக் காட்டுக்கு ஓட்டிச் சென்று, புல் முதலியவற்றை மேயவைத்துச் சாயங்காலத்தில் இல்லத்துக்கு ஓட்டிக்கொண்டு வந்துவிடுவார்கள். சில சமயம் ஒரு வாரம் பத்து நாள்கூட வெளியிலேயே மேயவைத்துக் கொண்டிருப்பார்கள்.

> ஸ்தித: ஸ்திதாம் உச்சலித: ப்ரயாதாம்,
> நிஷேதுஷீம், ஆஸநபந்ததீர: ।
> ஜலாபிலாஷீ ஜலம் ஆததாநாம்
> சாயேவ தாம் பூபதிரந்வகச்சத் ।। (ரகுவம்சம்)

என்று வஸிஷ்ட மகரிஷியின் தேனுவினிடத்தில் திலீபன் நடந்து கொண்டது போல், இவர்கள் கார்க்யருடைய பசுவினிடத்தில் மிகவும் பக்தி ச்ரத்தையுடன் இருந்தார்கள்.

ஒரு நாள் வழக்கம்போல் முனிவரின் பசுவைக் காட்டுக்கு ஓட்டிச் சென்றனர். நான்கு தினங்கள் கடந்தன. இவர்களுக்குப் பசி அதிகமாகிவிட்டது. உண்ண உணவும் இல்லை; குடிக்க நீரும் கிடைக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தனர். கவி, கஸ்ருமன் ஆகிய இருவரையும் தவிர மற்றவர்கள், "இந்த ஆசார்யனின் பசுவைக் கொன்றாவது பசியைத் தீர்த்துக்கொள்ளலாம்" என்றார்கள். கவியும் கஸ்ருமனும், "பசுவைக் கொல்வது பெரும் பாதகம். கோவினிடத்தில் தேவதைகளும் மகரிஷிகளும் திரிமூர்த்திகளும் மகாலக்ஷ்மியும் வஸிக்கிறார்கள். நம்மால் பூஜிக்கப்பட வேண்டிய இதைக் கொல்வது எப்படி? மேலும், நம் ஆசார்யனின் பசு இது. நம் ஆசார்ய பக்தி, இதைக் கொன்றால் மிக நன்றாக விளங்குமே! அனைவரும் நம்மை இகழ்வார்கள். நாம் இறந்தாலும் இறக்கலாம்; பசுவைக் கொல்வது யுக்தமாகாது" என்றர்கள்.

மிஞ்சிய ஐவரும் ஒரே பிடிவாதமாக 'இதை ஹிம்ஸித்துப் பசியைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்' என்று தீர்மானித்தார்கள். அப்போது பித்ருவர்த்தி என்பவன் அவர்களைப் பார்த்து, "நான் நித்ய ச்ராத்தம் செய்பவன். ஆகையால் இந்தப் பசுவைக் கொன்று நம் பித்ருக்களைக் குறித்து ச்ராத்தம் செய்து நாம் உண்டால் நமக்குத் தோஷம் வராது" என்றான். அனைவரும் அதைக் கேட்டு அவ்வாறே செய்ய முயன்றனர். ச்ராத்தம் முடிந்தது. அனைவரும் உண்டு பசியைத் தீர்த்துக் கொண்டனர்.

எவ்வளவு தர்மிஷ்டராக இருந்தபோதிலும் பாவம் செய்பதில் அவர்களுக்கு அபருசி வந்துவிடுகிறது. இது மனிதர்களின் இயற்கை. ஒருவன் நல்ல காரியங்களைச் செய்துகொண்டே வருவான். ஆயினும் நடுவில் திடீரென்று ஏதோ ஒரு பாபவசத்தால் அக்ரமம் செய்ய முயல்வான். இந்த ஒரு நியதி அவர்களையும் விடவில்லை. வீடு திரும்பினர். கன்று வருவதை மாத்திரம் கண்ட மகரிஷி, "பசு எங்கே?" என்று கேட்டார். அவர்கள் கண்களில் நீரைத் தாரை தாரையாக் பெருக்கிக் கொண்டு, "ஐயோ! நாங்கள் என்ன செய்வது! பெரும்புலி ஒன்று வந்து பசுவைத் தின்றுவிட்டது. நாங்கள் எவ்வளவு முயன்றும் பயனளிக்கவில்லை. நாங்கள் பயந்து ஓடி வந்தோம்" என்று ஒரே மாதிரி கூறினார்கள். மகரிஷி வருத்ததுடன், "உங்களுக்காவது ஓர் ஆபத்தும் நேராமல் இருந்ததே. அதைப்பற்றிப் பெருமகிழ்ச்சியடைகிறேன்" என்று சொல்லி, சிஷ்யர்கள் சொன்னதை நம்பித் தம் வேலையில் ஈடுபட்டார்.

இவர்கள் பசுஹிம்ஸை செய்ததனாலும், ஆசார்யனிடத்தில் பொய் கூறியதனாலும் பெரும் பாவம் இவர்களுக்கு ஏற்பட்டது. சில தினங்கள் ஆனபிறகு இவர்களுக்கு இறப்பு நேர்ந்தது. க்ரூரமான செயல் செய்தபடியால் ஹிம்ஸைத் தோழிலையுடைய வேட்டுவச் சாதியில் சோதரர்களாகப் பிறந்தார்கள். கோஹத்தி செய்திருந்தபோதிலும் ச்ராத்தத்தில் பித்ருக்களுக்கு அதைக் கொண்டு அர்ச்சனை செய்தபடியால் முன்ஜன்ம ஸ்மரணம் இவர்களுக்கு இருந்தது. தசார்ணம் என்னும் தேசத்தில் இவர்கள் பிறந்தனர். தங்கள் தொழிலைச் சரிவரச் செய்தனர். பேராசையையும் பொய்யையும் அறவே விட்டார்கள். எவ்வளவு எதைச் செய்தால் உயிர் தங்குமோ அதை மாத்திரம் செய்து ஜீவித்திருந்தனர். ஸர்வ காலங்களிலும் பகவானை ஆராதித்து பக்தியோகத்தில் ஆழ்ந்து அமர்ந்திருந்தனர். தாங்கள் செய்த பாவச் செயலால் தாழ்ந்த பிறவியைப் பெற்றிருந்த போதிலும் ஹிம்ஸை செய்யப்பட்ட கோவை (பசுவை)ப் பித்ருக்களுக்கு நிவேதனம் செய்ததனால் பூர்வஜன்மங்களின் ஸ்மரணமும், முன்பு செய்த யோகாப்யாஸமும் இவர்களை விடவில்லை.

இவர்கள் முதியோரான தங்கள் தாய் தந்தையர்க்கு ஒருவிதக் குற்றமுமின்றிப் பணிவிடை செய்து வந்தார்கள். காலக்கிரமத்தில் பெற்றோர் இறந்த பிறகு, தங்களது வில் முதலிய ஆயுதங்களை விட்டுப் பிராணத்தியாகம் செய்தனர். பிறகு ஜாதிஸ்மரர்களாய், காலஞ்சரம் என்னும் மலையில் மிருகங்களாய்ப் பிறந்தனர். அந்தப் பிறவியிலும் பகவானிடத்தில் மனத்தை செலுத்தி யோகத்திலேயே ஆழ்ந்திருந்தனர். மிகப் பொறுமையுடனும், ஸுகதுக்கங்களைச் சமமாகப் பாவித்தும், சிற்றின்பத்தில் பற்று இல்லாமலும், நல்ல காரியங்களைச் செய்து கொண்டும் காட்டில் வசித்து வந்தனர். பிறகு, முன்பு பசுவை ஹிம்ஸை செய்ததனாலும் ஆசார்யனிடம் பொய் கூறியதனாலும் இன்னும் எத்தனை பிறவி பிறக்க வேண்டுமோ என்று வருந்தியவர்களாய், நீரையும் பருகாமல் மலைச் சிகரத்திலிருந்து கீழே விழுந்து உயிரை விட்டனர்.

பிறகு ஒரு தீவில் சக்ரவாகப் பறவைகளாகப் பிறந்தனர். ஆஹாரம் இல்லாமல் அந்தப் பிறவியையும் போக்கடித்துக் கொண்டார்கள். பிறகு மானஸ ஸரஸ்ஸில் ஹம்ஸங்களாகப் பிறந்து முந்திய பிறவிகளில் நடந்ததை நினைத்துக் கொண்டு மிக்க நியமத்துடன் ப்ரஹ்ம த்யானத்திலேயே ஈடுபட்டனர். அந்த ஸரஸ்ஸில் தபத்துடனும் யோகத்துடனும் இருந்த பொழுது நீபதேசத்துக்கு அரசனான விப்ராஜன் சேனைகளோடு அவ்விடத்துக்கு வந்தான். அவன் அழகிய உருவத்துடனும், ஆடை ஆபரணங்கள் முதலியவற்றுடனும் நன்றாக விளங்கினான். அவனைக் கண்டதும் ஏழாவதான (பித்ருவர்த்தி) ஹம்ஸம், 'நாமும் இவனைப் போல் ஆடை ஆபரணங்களை அணிந்து அழகிய மஹிஷிகளுடன் விளையாட வேண்டும்' என்று நினைத்தான். தன் சகோதரர்களான ஹம்ஸங்களுடனும் சொன்னான். அதைக் கேட்ட ஐந்தாவதான கவி என்ற ஹம்ஸமும், ஆறாவதான கஸ்ருமன் என்ற ஹம்ஸமும், "உனக்கு மந்திரிகளாக நாங்கள் பிறக்கிறோம்" என்று கூறின.

மற்ற ஹம்ஸங்கள், மூன்று ஹம்ஸங்களைப் பார்த்து, "தவத்திலும் யோகத்திலும் விளங்குகிற உங்களுக்கு ஏன் இப்படிப்பட்ட புத்தி உண்டாயிற்று? தியானத்தில் ஆழ்ந்தவர்களுக்கு வேறு விஷயத்தில் பற்று இருக்கலாமா? எனவே நீங்கள் மூவரும் அவரவர் விருப்பப்படி, ஒருவன் காம்பில்யம் என்னும் நாட்டில் அரசனாகவும், மற்ற இருவரும் மந்திரிகளாகவும் பிறக்கக்கடவீர்கள்" என்று சாபமிட்டன.

இதைக் கேட்ட மூவரும், "நாங்கள் என்ன செய்வது? எப்படிப்பட்டி தர்மசிந்தை உள்ளவர்களுக்கும் அதர்மத்தில் எண்ணம் மின்னல் போல் தோன்றி மறைவதுண்டு. விசுவாமித்ர மகரிஷி எல்லாப் புலன்களையும் அடக்கி உக்ரமானதபஸ்ஸைச் செய்துகொண்டிருந்த போதிலும் மேனகை முதலிய அப்ஸரஸ் ஸ்திரீகளிடம் மோகம் கொண்டு தவத்திலிருந்து நழுவினதைக் கேட்டதில்லையா? கௌதமர் என்னும் மகரிஷி இந்திரன் அனுப்பிய ஓர் அப்ஸரஸ் ஸ்திரீயினிடம் ஆயிரக்கணக்கான வருஷங்களைக் கழித்துக்கொண்டு தமது தவத்திலிருந்து நழுவி, அவ்வளவு வருஷங்கள் கழிந்ததையும் ஒரு நிமிஷம் கழிந்ததாகவே எண்ணி ஏமாற்றம் அடையவில்லையா? எனவே நாங்களும் விப்ராஜன் என்னும் அரசனைப் பார்த்ததும் அவனைப் போல் பல போகங்களை அநுபவிக்க விரும்பினோம். இதைக் கொண்டு நீங்கள் சபிக்க வேண்டுமா?" என்றனர்.

மற்ற நான்கு ஹம்ஸங்களும், "உங்களுடைய மனோரதமும் பூர்த்தியாக வேண்டும். எங்கள் சாபமும் பலித்தே ஆக வேண்டும். ஆனால் இந்த சாபத்துக்கு ஒரு முடிவு உண்டு. இங்கிருந்து (யோகத்திலிருந்து) நழுவி ராஜவம்சத்திலும், மந்திரி வம்சத்திலும் பிறப்பீர்கள். பித்ருவர்த்தி என்பவனுக்கு ஸர்வ பிராணிகளுடைய பாஷையின் ஞானமும் உண்டாகும். நீங்கள்

ராஜபோகத்தில் இருக்கும்போது ஒரு ஸமயம் ஒரு புருஷன் இரண்டு ச்லோகங்களைச் சொல்வான். அதிலிருந்து உங்களுக்கு எங்கள் ஞாபகமும், உங்கள் பூர்வஜன்ம ஸ்மரணமும் கிடைக்கும். அதிலிருந்து யோகத்தை செய்து நற்கதியைப் பெறுவீர்கள்" என்றார்கள்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்து விப்ராஜன் இந்த ஹம்ஸங்களை நன்கு பார்த்தான். இவற்றின் அடக்கம், நடத்தை, ப்ரஹ்மத்யானம், தவம் முதலியவற்றை ஆராய்ந்தான். பறவையினத்தில் பிறந்து இவற்றுக்கு இவ்வளவு மேன்மை எப்படி ஏற்பட்டது என்று ஆலோசித்துக்கொண்டு, இவற்றுள் ஏதாவது ஓர் அன்னத்துக்கு புதல்வனாக நாம் பிறக்க வேண்டும் என்று நினைத்தான். தன் புதல்வனான அணுஹனுக்கு ஆட்சியைத் தந்து, மானஸ ஸரஸ்ஸின் கரையிலேயே தவம் செய்யத் தொடங்கினான்.

இப்படியிருக்க, ஏழு ஹம்ஸங்களில் பித்ருவர்த்தி என்பவன், அணுஹன் என்னும் அரசனுக்கு ப்ரஹ்மதத்தன் என்ற பெயருடன் குழந்தையாகப் பிறந்தான். கல்விகளில் தேர்ச்சி பெற்றான். தியானம், தவம் முதலியவற்றை விடாமல் செய்து வந்தான். சாபம் பெற்ற மற்ற இருவரும் பாஞ்சாலன், கண்டரீகன் என்ற பெயர்களுடன் மந்திரியின் புதல்வர்களாகப் பிறந்தார்கள்.

அணுஹன் தன் புதல்வனான ப்ரஹ்மதத்தனின் அறிவையும், ஸகலவிதத் திறமையையும், எல்லாப் பாஷைகளிலும் வல்லவனாக இருக்கும் தன்மையையும் பார்த்து ராஜ்யத்தில் அவனை அபிஷேகம் செய்வித்து யோகம் மூலமாக நற்கதியை அடைந்தான். சாபம் கொடுத்த நான்கு ஹம்ஸங்களும் ச்ரோத்ரிய குலத்தில் மிகவும் தரித்ரனான ஒருவனுக்குப் புதல்வர்களாகப் பிறந்தார்கள். பல பிறவியாகத் தொடர்ந்து வந்த யோகாப்யாஸத்தை தொடர்ந்து நடத்தி வந்தார்கள்.

அந்தணர் குலத்துக்குத் தக்கபடி வேதங்களை ஓதி நன்கு விளங்கினர்.

ஒரு சமயம் தம் தகப்பனாரிடம் சென்று இரு கைகளையும் கூப்பிக்கொண்டு வணங்கி, "தந்தையே! நாங்கள் உங்களுக்குப் புதல்வர்களாகப் பிறந்துள்ளோம். எங்களுக்கு வேண்டியவற்றைத் தேவரீர் செய்து வைத்தீர். நீர் ஆசார்யன், உம்மிடம் விடை பெற்றுக்கொண்டு தவம் செய்யக் காட்டுக்குப் போகிறோம்" என்றனர்.

தந்தை, "அருமைப் புதல்வர்களே! நானோ தரித்ரப் ப்ராஹ்மணன். மணி போல் எனக்கு நான்கு பிள்ளைகள் பிறந்து எல்லாக் கல்விகளையும் கற்றபிறகு என்னை விட்டு செல்வது ந்யாயமா? எனக்கு பொருள் முதலியவற்றை திரட்டி கொடுப்பவர் யார்? புதல்வனுக்கு பொருள் திரட்ட வயதான பிறகு தந்தையை அநாதரித்து போவது ந்யாயமா?" என்றான். இதை கேட்ட புதல்வர்கள், இரண்டு ச்லொகங்களை கூறி, "காம்பில்யம் என்னும் நாட்டின் அரசனான ப்ரஹ்மதத்தனிடம் இந்த ச்லோகங்களை கூறுங்கள். அவன் பல பிரகாரமாக பகுமானங்களை கொடுப்பான்" என்று சொல்லிக் காட்டுக்கு சென்று யோகத்தில் ஆழ்ந்தனர்.

ஓர் இரவு ப்ரஹ்மதத்தன் மனைவியுடன் படுத்திருந்தான். அப்போது ஒரு பெண் எறும்புக்கும் ஆண் எறும்புக்கும் கலகம் ஏற்பட்டது. அவை ஒன்றுக்கொன்று ரோஷத்தால் பேசிக்கொண்டிருந்தன. ஆண் எறும்பு எவ்வளவு சமாதான முறையில் சொல்லியும் பெண் கேட்கவில்லை. இந்த விவாத வார்த்தையைக் காதால் கேட்டு ப்ரஹ்மதத்தன் சிரித்தான். அவனது சிரிப்பைக் கண்ட அவன் மனைவி தன்னைப் பரிகசித்து சிரிக்கிறான் என்று எண்ணி

கோபம் கொண்டாள். இவன் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. "எறும்பின் பாஷை உங்களுக்குத் தெரிவதாவது?" என்று கேட்டான். அதிலிருந்து உண்ணாவிரதத்தைத் தொடங்க ஆரம்பித்தாள். ப்ரஹ்மதத்தனும் மிகக் கோபம் கொண்டு காட்டுக்கு சென்றான்.

அங்கு அசரீரி வாக்கின் மூலமாகத் தன்னை அணுகி ஒரு பிராமணன் வருவதை அறிந்துகொண்டு தன் ராஜ்யத்துக்குத் திரும்பிச் சென்றான். அப்போது முன்சொன்ன நான்கு சகோதரர்களின் தந்தையான பிராமணன், 'இது தான் சமயம்' என்று எண்ணி புதல்வர்கள் சொன்ன ச்லோகங்களை படித்தான். அந்த இரண்டு ச்லோகங்கள் இவை -

ஸப்த வ்யாதா தசார்ணேஷு ம்ருகா: காலஞ்ஜரே கிரௌ
சக்ரவாகா: சரத்வீபே ஹம்ஸா: ஸரஸி மாநஸே ||
தேபி ஜாதா: குருக்ஷேத்ரே ப்ராஹ்மணா வேதபாரகா: |
ப்ரஸ்திதா தீர்கமத்வாநம் யூயம் கிமவஸீதத ||

"முதலில் தசார்ண தேசத்தில் ஏழு வேட்டுவர்களாகப் பிறந்தோம். காலஞ்ஜர மலையில் மிருகங்களாகப் பிறந்தோம். பிறகு ஒரு தீவில் சக்ரவாகப் பறவைகளாகப் பிறந்தோம். பிறகு மானஸ ஸரஸ்ஸில் ஹம்ஸங்களாகப் பிறந்தோம். அதன் பிறகு நாங்கள் நால்வர் குருக்ஷேத்திரத்தில் அந்தணர்களாகப் பிறந்தோம். இப்பொழுது நற்கதியைப் பெறப் புறப்பட்டோம். நீங்கள் மூவர் மாத்திரம் ஏன் ராஜ்யத்தில் இருந்து கவலைப்படுகிறீர்கள்?" என்பது இதன் பொருள்.

மந்திரிகளுடன் அவ்வரசன் இதைக் கேட்டதும் பூர்வ ஜன்ம ஸ்மரணம் ஏற்பட்டு, இந்த அந்தணனுக்குப் பெருத்த சம்மானங்களளித்து, தன் வயிற்றில் பிறந்த (விப்ராஜன், முன்பு ஹம்ஸத்தின் வயிற்றில் பிறக்க ஆசைப்பட்டவன்) விஷ்வக்ஸேனனுக்கு முடிசூட்டிவிட்டு, இரண்டு மந்திரிகளுடன், நான்கு அந்தணர்கள் இருக்கும் காட்டுக்குச் சென்று அவர்களிடம் சேர்ந்தான்.

"பிறகு எழுவரும் சேர்ந்து முன்போல் யோகம் முதலிய நற்காரியங்களை நன்கு நடத்தி நற்கதியைப் பெற்றனர். இவ்விஷயத்தை ஸனத்குமாரருடைய அருளினால் உட்கண் பெற்ற நான் நேரில் பார்ப்பது போல் பார்த்தேன். ஹிம்ஸையைச் செய்தாலும் அதைப் பித்ருக்களுக்கு நிவேதனம் செய்து ச்ராத்தத்தில் விநியோக்ப்படுத்தினால் காலக்கிரமத்தில் ஹிம்ஸை செய்ததனால் வரும் பிறவிகள் வந்தாலும் ச்ரேயஸ்ஸைக் கொடுத்துவிடும்" என்று மார்க்கண்டேயர் பிஷ்மருக்குச் சொன்னார்.

இங்கு ஒரு ஹாஸ்யமான கதை நடந்தது. அதை எழுதுகிறோம். ஒரு ஆஸ்திக குடும்பம் எப்பொழுதும் வேதாத்யயனம் தான தர்மம் யாகம் ஹோமம் பித்ருச்ராத்தம் முதலியவைகளைச் செய்வது வழக்கம். இவர்கள் தன் புத்ரனுக்கு விவாஹம் நடத்த மற்றொரு குடும்பபெண்ணை தேடி முடித்தனர். அந்த குடும்பம் அவ்வளவு ஆஸ்திக குடும்பமல்ல. யாகம் ஹோமம் ச்ராத்தம் முதலியவைகள் என்ன என்பதே தெரியாது. பெண் வாழ்க்கைக்காக புக்ககத்தில் இருக்கும் ஸமயம். இவர்கள் பித்ருச்ராத்தம் செய்ய வேண்டிய காய் கறி சாமான் இலை இவைகளை வாங்கிவந்தனர். இதைப்பார்த்து இவை எதற்காக என்று இந்த பெண் கேட்டாள். இவர்களும் இது உனக்குத் தெரியாதா? இதைக் கொண்டு ச்ராத்தம் செய்தால் பித்ருக்கள் புசித்து நமக்கு அநுக்ரஹம் செய்வார்கள் என்று சொன்னார்கள். அன்றைய தினம் 2 ஸ்வாமிகள் நிமந்தரணத்து

வந்து நன்கு புசித்து சென்றனர். இவர் சாப்பிட்டதால் மேல் லோகத்தில் உள்ள பித்ருக்கள் ஸந்தோஷம் அடைவார்கள் என்று சொன்னதை மனதில் வைத்துக் கொண்டாள் இந்தப் பெண். ஆறு மாதங்கள் கடந்தன. இந்த பெண்ணின் புருஷன் வெளியூருக்குச் சென்றிருந்து இரவு ஒரு மணிக்கு வந்தான். இவன் மிக அலுப்பால், தன் மனைவியிடம் என்னை எழுப்பிவிடாதே என்றான். மறு நாள் காலை 10 மணி. இவனோ எழுந்திருக்கவில்லை. மாடியில் தூங்குகிறான். வயிறோ பசியால் வதைக்கிறது. இந்தப் பெண் மாடியும் கீழுமாக போய் வந்து என்ன செய்வது என்று யோசித்தாள். வயிற்றில் ஒன்றுமில்லாமையையும் பார்க்கிறாள். எழுப்ப வேண்டாம் என்று சொன்னதையும் யோசிக்கிறாள். இவளுக்கும் பசி. கடைசியில் ஒன்று தோன்றிற்று. யாராவது வீதியில் செல்லுகிறார்களா அந்தணர்கள் என பார்த்தாள். ஏதோ அதிர்ஷ்டம். இரண்டு பேர்கள் தென்பட்டனர்கள். அவர்களை அழைத்து அமுது செய்து வைத்து தக்ஷிணையும் கொடுத்து, அப்பாடா என்று சொல்லி தானும் சாப்பிட்டு பாத்திரங்களை ச்சுத்தி செய்து படுத்துக் கொண்டு விட்டாள். நேரமானது. புருஷன் எழுந்துவந்து ஸ்நானங்களைக் கரமமாக முடித்து சாப்பிடவந்தான். ஒன்றுமே இல்லை. இவன் மனைவியைக் கேட்க "இப்பொழுதுதானே உங்களை உத்தேசித்து இருவர்க்கு அன்னமிட்டேன். பசி அடங்கவில்லையா" என்று கேட்டாள். இவனுக்குக் கோபம் அதிகம். அவர்கள் யாரோ சாப்பிட்டால் எனக்கு எப்படி பசி அடங்கும் என்று சீறினான். இவளோ மேல் லோகத்திலிருப்பவர்களுக்காக இங்கு இருப்பவருக்கு அன்னமிட்டால் பசியடங்கும் என்று சொன்னீர்களே. இப்பொழுது மாடியில் உள்ள உங்களுக்குக்கூடவா பசி அடங்கவில்லை என்றாள் இந்த பெண். பார்த்தான் யோசித்தான். உயிருடன் உள்ள என்னை உத்தேசித்து ச்ராத்தம் செய்துவிட்டாயா என்றான்.

ஜாபாலி என்னும் முனிவர் இம்மாதிரிதான் இராமனிடம் கேட்டான். 'அஷ்டகை பித்ருச்ராத்தங்கள் இவை யெல்லாம் ப்ரயோஜனமற்றவை. இறந்து போனவன் இங்கு எதை சாப்பிடப் போகிறான். இவையெல்லாம் ஜனங்களுக்கு உபத்ரவம்தான் என்று'.

இராமபிரான் இவர் சொன்னதை க்ரூரமாக கண்டித்து பதில் கூறியுள்ளார். இராமாயணத்தில் இது ப்ரஸித்தம். நாம் ச்ராத்தம் செய்வதால், அவர்கள் வேறு பிறவி எடுத்து சஞ்சரித்திருந்தாலும், பித்ருதேவதைகள் ஸந்தோஷமடைந்து அன்றைதினம் எதிர்பாராத வகையில் சில லாபங்கள் அவர்களுக்கு கிடைக்குமாறு செய்வார்கள். நாம் முறைப்படி மணி ஆர்டர் முதலியவைகளைச் செய்தால் அது சரியாக விலாஸதாரர்களுக்கு கிடைக்கும். முறைதவறினால் கிடைப்பது அரிது. ஆனால் கொடுக்கும் ரூபாயை அப்படியேவா கொடுக்கிறான். வேறு ரூபாய்களைத்தானே. அதே போல் வேறு வகையில் இவர்களுக்கு சேரும்படி பித்ருதேவதைகள் செய்கின்றன. நாம் செய்யும் யாகங்களால் தேவதைகள் அல்லது பகவான் த்ருப்தி அடைந்து பயன் கொடுப்பதுபோல் இங்கும் பகவத் ஸங்கல்பத்தால் நடைபெறுகிறது. இதற்காக தபம் புரிந்து வரம் வாங்கிக் கொண்ட பித்ருதேவதைகள் விஸ்வாதிகள் சபித்துவிடுகிறார்கள் என்பதையும் அறியவேண்டும்.

நாம் ஒருவனுக்கு உதவி செய்தால் அவனே நமக்கு உதவி செய்வான் என்பதில்லை. பகவான் ஸந்தோஷமடைந்து மற்றவர் மூலமாகவும் செய்து தருவதுண்டு. இதை எல்லாவற்றையும் கருதிதான் நாம் நற்கார்யங்களை செய்கிறோம்.

*****

# 56. மக்களின் போக்கு

உலகிலுள்ள மக்களின் தன்மை விந்தையானது; மிக்க வியப்பைத் தரக்கூடியது. ஒரு செயல் நன்றாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும் அதை ஒருவன் செய்தால், மறறொருவனும் அதையே தொடர்ந்து செய்ய விரும்புகிறான். இதைப் பார்த்து மூன்றாமவனும் தொடருகிறான். இப்படியே அனைவரும். இதுவே ஜனங்களின் இயல்பாகிவிட்டது.

புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்
த சாபி காவ்யம் நவமித்யவத்யம் ।
ஸந்த: பரீக்ஷ்யாந்யதரத் பஜந்தே
மூட: பரப்ரத்யய நேயபுத்தி: ॥

என்றான் மகாகவி காளிதாஸன். ஒரு செயல் பழங்காலமாக ஏற்பட்டது என்ற காரணத்தை முன்னிட்டு அது குணத்துடன் கூடியதாகவே இருக்கும் என்று சொல்ல முடியாது. மற்றொரு செயல் இப்போது ஏற்பட்டது என்ற காரணத்தினாலேயே அது குற்றமுள்ளதாக இருக்கும் என்றும் சொல்ல முடியாது. ஆகையால் பெரியோர்கள் குண தோஷங்களை நன்கு ஆராய்ந்து, நடு நிலையிலிருந்து நழுவாமலிருந்து, குணமுள்ளதை எடுத்துக்கொண்டு மற்றதை விட்டு விடுகிறார்கள். பாமரன் இதை அறிய இயலாதவனாக, ஒருவன் போகும் வழியையே தொடருகிறான்; அதை ஆராய்வதில்லை.

எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து செய்வதென்பது முற்காலத்தில் பெரும்பாலும் எல்லாருக்குமே இருந்தது. இக்காலத்திலோ இது மாறுதலை அடைந்துள்ளது. தாங்கள் எதையுமே யோசிப்பதில்லை. 'ஒருவன் செய்கிறான்; ஆகையால் நானும் அதைச் செய்கிறேன்' என்கிறான். ஆக, மக்கள் ஆட்டுமந்தை போல் நடந்து கொள்கின்றனர். இதற்கு ஒரு கதையைக் கூறுகிறோம்.

ஓர் ஊரில் ஓர் ஓவியர் இருந்தார். அவர் சித்திரம் வரைவதில் மிக்க திறமை பெற்றவர். அவர் எழுதும் ஓவியத்தில் ஒரு குற்றமும் சொல்ல முடியாது. அனைவருமே அவரை இவ்விஷயத்தில் புகழ்வர். ஆனாலும் ஒருவர் நற்காரியங்களை செய்தால் அதில் பொறாமை கொண்டு அவரை இகழ்வது உலகத்தில் உண்டல்லவா? அதுபோல் அவரது சித்திரத்தைக் கண்டு பொறாமை பூண்டு தோஷங்களைச் சொல்பவரும் உண்டு. இதை அறிந்த ஓவியர், தமது சித்திரம் முறைப்படி அமைந்திருப்பதனால் தோஷமில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தும், ஜனங்களின் அறிவை ஆராய விரும்பினார். இதற்காக ஒரு சூழ்ச்சி செய்தார்.

அவர் புதியதாக ஓர் ஓவியத்தை வரைந்தார். அது மிக்க அழகு வாய்ந்தது. வரைந்த சித்திரத்தை அவர் இரண்டாகப் படம் பிடித்தார். இவ்விரண்டும் எவ்விதத்திலும் வேறுபாடு இல்லாமல் அமைந்திருந்தன. ஜனங்களின் திறமையை ஆராய்ந்தறிய விரும்பிய அவர், ஒரு நாள் ஒரு படத்தைக் கடைத்தெருவில் பலரும் பார்க்கும்படி மாட்டி வைத்தார். அதன் பக்கத்தில் மைக்கூடு ஒன்றையும், தூரிகை ஒன்றையும் வைத்தார். மற்றொரு பக்கத்தில், 'இந்த சித்திரத்தில் குறை இருந்தால் அதை தெரியப்படுத்த, அந்தக் குறை இருக்கும் இடத்தை மையால் குறிப்பிட வேண்டும்' என்று பலகையில் எழுதி மாட்டியிருந்தார். இவ்வாறு செய்துவிட்டு அவர் தமது இல்லம் சென்றார்.

இது கடைத் தெருவில் மாட்டியிருந்தபடியால் அனைவரும் காண்பதற்கோ, குறை கூறுவதற்கோ வசதி ஏற்பட்டிருந்தது. தெருவில் வந்தவர்களில் சிலர் இதை பார்த்து, இதில் எங்கே குறை கூறலாம் என்று யோசித்தார்கள். சிலர் இந்த படத்தையும், பலகையில் எழுதியிருப்பதையும் கண்டு, உண்மையிலேயே இதில் குறை இருக்கும் என்று எண்ணித் தூரிகையில் மையைத் தோய்த்து, அவர்களுக்கு குறை என்று தோன்றிய இடத்தில் குறியிட்டு சென்றனர். யோசித்திருந்த சிலரும் தங்களுக்குத் தோன்றிய இடத்தில் குறியிட்டுச் சென்றுவிட்டனர். மாலை வரையில் அந்த தெருவில் வந்தவர் அனைவரும் இம்மாதிரி அந்த சித்திரத்தில் ஒவ்வோர் இடத்திலும் குறை என்று தோன்றும்படி செய்துவிட்டுச் சென்றனர்.

மாலைவேளை வந்தது. ஓவியர் வந்து பார்த்தார். குறையைக் காட்டும் குறி அந்தச் சித்திரத்தில் இல்லாத இடமே இல்லை. இதைக் கண்டு, 'ஒரு குற்றமும் இல்லாத இந்த சித்திரத்தில் இப்படிக் குறை கூறியிருக்கிறார்களே!' என்று வியந்தார். 'இப்படியும் இந்த ஜனங்களின் தன்மை உள்ளதே!' என்று எண்ணி, மேலும் அவர் ஜனங்களைப் பரீக்ஷிக்க விரும்பினார்.

ஒரு மாதம் கழிந்தது. முன்பு போல் மற்றோர் ஓவியத்தைக் கடைத்தெருவில் வைத்து, பக்கத்தில் ஒரு பலகையில், 'இந்த சித்திரத்தில் குணமுள்ள பகுதிகளை காட்டும்படி குறிப்பிடுங்கள்' என்று எழுதி வைத்தார். ஜனங்கள் தெருவில் திரண்டு சென்றனர். சிலர் இதில் என்ன செய்யலாம் என்று யோசித்து நின்றனர். மற்றும் சிலர் இதில் எதையும் குறிப்பிடாமல் சென்றுவிட்டால் தங்களை மூடர்கள் என நினைத்து விடுவார்களோ என்று எண்ணி சில பகுதிகளில் குணபாகத்தை காட்ட குறியிட்டனர். இதை கண்டதும் சிலர், 'நாமும் ஏதாவது செய்ய வேண்டும்' என்று எண்ணி, அந்த சித்திரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் குறியிட்டு சென்றனர்.

மாலை ஆனதும் ஓவியர் வந்தார். குறி இல்லாத இடமே அதில் இல்லாததைக் கண்டு, 'ஐயோ! இப்படியும் ஸ்வய புத்தி இல்லாமல் ஜனங்கள் இருக்கின்றனரே! இவர்களைத் திருத்த வழியே இல்லையே!' என்று எண்ணி வீட்டுக்குத் திரும்பினார்.

மறுநாள் அவர், குணக்குறி காட்டும் ஓவியம், தோஷக்குறி காட்டும் ஓவியம் ஆகிய இரண்டையுமே அந்தக் கடைத்தெருவில் மாட்டினார். முன்போல் அதன் பக்கத்தில் ஒரு பலகையையும் வைத்து வீடு திரும்பினார். 'ஜனங்களே! இந்த இரண்டு ஓவியங்களும் ஒரே மாதிரியானவை என்பதில் சந்தேகமே இல்லை. இதில் உண்மையில் தோஷம் என்பதே இல்லை. நீங்கள் தோஷக் குறியை வைத்திருக்கிறீர்கள். அதே இடத்தில் குணக்குறியையும் வைத்திருக்கிறீர்கள். இதில் எது உண்மை என்பதை யோசித்து நீங்களே சொல்லுங்கள்' என்று அதில் எழுதியிருந்தது.

முன்போல் தெருவில் வந்த அதே ஜனங்கள், அந்தப் படங்களையும் பலகையையும் பார்த்து, நேற்றுத் தோஷக்குறி இட்ட இடத்திலேயே மறுபடியும் குணக்குறி இட்டிருக்கிறோமே என்று எண்ணி, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தும், சொல்லிக்கொள்ள முடியாமலும் மனத்தில் நொந்து கொண்டார்கள். இதில் 'எது உண்மை?' என்று கேள்விக்குத் தங்களுக்கு ஸ்வயபுத்தி இல்லாமல் இருப்பதுதான் உண்மை என்பதை தவிர வேறு என்ன எழுத முடியும் என்று எண்ணி அவரவர் வீடு திரும்பினர்.

இப்படி இவ்விஷயத்தில் மற்றொரு கதையும் நாம் கேட்டிருக்கிறோம். ஒருவன் ஸேது ஸ்நானத்துக்குச் சென்றான். கையில் ஒரு தாமிர பாத்திரம் வைத்திருந்தான். அங்கே

ஜனங்களின் பெருங்கூட்டத்தைக் கண்டு, இதைக் கரையில் வைத்துவிட்டு ஸ்நானம் செய்யப் போனால் எவனாவது எடுத்துவிடுவானோ என்று பயந்து மணற்குவியலில் மறைத்து வைத்து மணலாற் செய்த ஒரு லிங்கத்தை அதன்மேல் அடையாளத்துக்கு வைத்து, ஸ்நானம் செய்யச் சென்றான். அவன் ஸ்நானம் செய்து வந்ததும் தன் தாமிர பாத்திரத்தை எடுக்க முயன்றான். கோடிக்கணக்கான மணற் குவியல்கள் புலப்பட்டன. எதைத் தள்ளினாலும் அதில் ஒன்றுமில்லை. இவன் போகும்போது இவன் செய்தது ஒரே குவியல்தான். பிறகு அங்கு வந்தவர்கள் இவனது குவியலைப் பார்த்து, 'இம்மாதிரி செய்துவிட்டுத்தான் ஸ்நானம் செய்ய வேண்டுமாக்கும்' என்று எண்ணிப் பல குவியல்களை ஏற்படுத்தி விட்டனர். தாமிர பாத்திரத்தை வைத்தவன் மக்களின் போக்கை எண்ணி, ஒரு ச்லோகத்தை சொன்னான் -

> கதாநுகதிகோ லோகோ ந லோக: பாரமார்த்திக: ।
> ஸேதௌ ஸைகதலிங்கேந நஷ்டம் மே தாம்ரபாஜநம் ॥

ஆக ஒருவன் ஒன்று செய்தால் அதை தாமும் செய்ய வேண்டும் என்று மக்கள் எண்ணுகின்றனர். ஒருவன் அலங்காரம் செய்து கொண்டால் தாமும் அம்மாதிரியே செய்து கொள்ளவேண்டும் என்று நினைக்கின்றனர். இதைப் பெரும்பாலும் பெண்களிடத்தில் காண்கிறோம். ஒருவன் ஒருவனைப் பூஜித்தால் அவனை நாமும் பூஜிக்க எண்ணுகிறோம். ஒருவன் ஒரு விஷயத்தை மேடையில் பேசும்போது அது நன்றாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனிடத்திலுள்ள அபிமானத்தினால் அவனைச் சிலர் ஸ்தோத்ரம் செய்தால் மற்றவர்களும் அவர்களைத் தொடர்ந்து அதை ஆமோதித்து ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இப்படி இவ்வுலகத்தில் பல இடங்களில் பார்த்து வருகிறோம். இதனால் நல்லவர்களுக்கு மகிமை இல்லாமற் போகிறது. ஸாதாரணமானவர்களுக்கு ஏற்றம் ஏற்படுகிறது. இதுவும் இந்த கலியின் செயல் போலும்.

உண்மையை யோசிப்பதில்லை. ஒரு பொய்யை ஆயிரம் தடவை ஆயிரம் பேர்கள் சொன்னால் அது உண்மையாகிவிடுகிறது. ஒருவனை யோக்யன் என்று சொன்னால் எல்லோரும் சொல்லிவிடுகிறார்கள். அயோக்யன் என்றாலும் அப்படித்தான். இதில் உண்மையை கண்டு பிடிப்பது கஷ்டம்.

*****

# 57. தர்ம ஸூக்ஷ்மம்

தர்மத்தின் நுட்பத்தை அறிவது மிகவும் கடினமானது. ஒருவன் எவ்வளவு அதிகமாகக் கல்வி கற்றிருந்தபோதிலும், 'இதுதான் தர்மம். இது தர்மமன்று' என்று எளிதில் சொல்லிவிட முடியாது. வேதங்களைக் கற்றிருக்கலாம்; ஸ்ம்ருதிகளை ஆராய்ந்து பார்த்திருக்கலாம்; மற்றும் தர்ம சாஸ்திரம் வ்யாகரணம் மீமாம்ஸை ந்யாயம் முதலிய நூல்களையும் ஆசார்யர்களிடம் பயின்றிருக்கலாம். ஆனாலும் இவற்றைக் கொண்டே 'இதுதான் தர்மம்' என்று ஸ்தாபிக்க முடியாது. 'பொய் பேசுதல் கூடாது' என்று சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதனால் பொய் பேசுவது அதர்மம். 'எவனையும் ஹிம்ஸிக்கக்கூடாது' என்று நூல்களில் பல இடங்களில் சொல்லியிருப்பதனால் ஹிம்ஸிக்கை அதர்மம் என்று ஏற்படுகிறது. ஆனாலும் சில இடங்களில் பொய் பேசுவதும் ஹிம்ஸிப்பதும் தர்மமாக முடிகின்றன. ஒருவனைக் கத்தியால் அறுப்பது ஹிம்ஸை; ஆகையால் அதைச் செய்தல் கூடாது என்று சொல்லுகிறோம். ஆனாலும் டாக்டர் நோயாளியின் முதுகிலுள்ள கட்டியைக் கத்தியால் அறுத்துத் தள்ளுகிறார். சஸ்திர சிகிச்சைகள் பல நடக்கின்றன. இதனால் அந்த டாக்டர் ஹிம்ஸை செய்கிறார் என்று சொல்லுகிறோமா? இது தர்மத்தில் சேருகிறது. யாகம் செய்பவன் யாகத்தில் ஆடுகளை ஹிம்ஸிக்கிறான். ஆனாலும் அந்த ஆட்டுக்கு உயர்ந்த உலகம் கிடைக்கிறபடியால் இது அதர்மத்தில் சேராமல் தர்மத்திலேயே சேருகிறது.

ஒரு முனிவர் வனத்தில் தவம் செய்துகொண்டிருக்கிறார். அப்பொழுது ஒரு திருடன் ஒரு பசுவைக் கொல்லுவதற்காகத் துரத்திக்கொண்டு ஓடினான். அந்தப் பசு முனிவரின் ஆசிரமத்துக்குள் நுழைந்துவிட்டது. சிறிது நேரம் கழித்து அந்தக் கொலைகாரன் முனிவரிடம் வந்து, "ஒரு பசு இந்தப் பக்கமாக வந்ததா?" என்றான். அதற்கு முனிவர் என்ன பதில் அளிக்க வேண்டும்? 'பசு இங்கு வந்தது' என்று சொன்னால் உண்மை சொல்லுவதாகிறது! ஆனால் பசுவுக்குத் தீங்கு உண்டாகிவிடும். இல்லை என்றால் பொய் சொல்லுவதாகிறது. இம்மாதிரி தர்ம ஸங்கடங்களில் என்ன சொல்லுவது என்பதை ஆராய்ந்து கூற வேண்டும்.

> வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> தீமை இலாத சொல்

என்று திருவள்ளுவர் சொல்லுகிறபடி, பிறருக்கு யாதொரு துன்பமும் உண்டாகாதபடி பொய் பேசுவதும் உண்மையாகும். இவற்றை ஆலோசித்துத் தகுந்தபடி நடக்கவேண்டும்.

குடும்பங்களிலேயும் சில சமயம் மனைவிக்கும் தன் தாயாருக்கும் கலகங்கள் ஏற்படலாம். தாயின் பக்கம் பேசினால் மனைவி கோபிக்கிறாள்; மனைவி பக்கம் பேசினால் தாய்க்குக் கோபம் வருகிறது. ஓர் அதிகாரியினிடத்தில் வேலை செய்பவர்களும் சில சந்தர்ப்பத்தில், 'என்ன செய்வது? என்ன சொல்வது?' என்று தெரியாமல் திணறுகிறார்கள். யஜமானன் ஏதாவது தப்பான செயலைச் செய்துவிட்டால் அதைத் தப்பு என்று சொன்னால் யஜமானன் கோபமடைந்து வேலையிலிருந்தே நீக்கிவிடுவான். இதுதான் நியாயம் என்று சொன்னால் தன் மனத்திலேயே கிலேசம் உண்டாகிப் படாதபாடு படுகிறான். இப்படிப்பட்ட ஸங்கடங்கள் நேரும் இடத்தில் மிகவும் ஆராய்ந்து தர்மத்தின் நுட்பத்தைத் தெரிந்து கொண்டு நடக்க வேண்டும். இதை அறிவதுதான் மிகவும் சிரமசாத்தியம். எல்லாக் கல்விகளையும் கற்று ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்ற விருதுபெற்ற ஸ்ரீவேதாந்ததேசிகன் என்ற ஆசார்யரே,

"செய்யக்கூடாதவற்றைச் செய்யக் கூடியவை என்று நினைக்கிறேன். செய்யக்கூடியவற்றை அதர்மங்கள் என்று விட்டுவிடுகிறேன்" என்று பேசுகிறார்.

கர்த்தவ்யமித்யநுகலம் கலயாம்யக்ருத்யம்
ஸ்வாமிந், அக்ருத்யமிதி க்ருத்யமபி த்யஜாமி ।

என்று, எல்லாவற்றையும் அறிந்தவரே இப்படிப் பேசுகிறார் என்றால், நம்போல் உள்ளவர், 'இதுதான் தர்மம், இதுதான் அதர்மம்' என்று எப்படி நிச்சயிக்க முடியும்?

வாலியை இராமன் மறைந்திருந்து கொன்றுவிட்டான். 'இது தர்மமா, அதர்மமா?' என்ற ஐயம் இன்னமும் ஜனங்களுக்கு உண்டாகிறது.

ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம ।

'தர்மத்தின் நுட்பத்தை நன்கு படித்தவர்களேகூட அறிய இயலாது என்றால், குரங்கினத்தில் பிறந்த நீ எப்படி அறிவாய்?' என்று இராமன் சொன்ன பிறகும் ஜனங்கள் இவ் விஷயத்தில் ஏதோ ஒருவிதமாகவே கருதுகிறார்கள். இவ்விஷயத்தில் பல ஆராய்ச்சிகளை எடுத்துக் காட்டி, இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது தர்மம்தான் என்பதை மற்றொரு ஸந்தர்ப்பத்தில் விளக்கிக் காட்டுகிறோம்.

கற்புள்ள பெண்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். ஆயினும் அகல்யை, துரௌபதி, ஸீதை, தாரை, மண்டோதரி என்ற ஐந்து பேர்களைப் பெரியோர் குறிப்பிடுகின்றனர். உண்மையில் ஸீதையையும் மண்டோதரியையும் விலக்கி மற்ற மூவரையும் பார்த்தால் அந்த மூவரிடத்தில் நமக்கு ஒருவிதமான எண்ணம் உண்டாகவே செய்கிறது. இந்த மூவரின் கதை யாருக்குத் தெரியாது!

'அபாம்ஸூலாநாம் ஸ்வயம் அக்ரகண்யா' என்றபடி, அகல்யை இந்த ஐந்து பேர்களில் முதல்முதலாக எண்ணப் பெறுகிறாள். இவர்களைப் பதிவிரதைகளின் கோஷ்டியில் சேர்த்தது மாத்திரமல்லாமல், 'இவர்களின் பேரை சொல்வதனால் எல்லாப் பாவங்களும் போய்விடும்' என்கின்றனர். ஆகவே தினமும் காலையில் இவர்களை நினைக்க வேண்டும். இதற்காக ஒரு ச்லோகமும் உண்டு.

அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாரா மந்தோதரீ ததா!
பாஞ்ச கந்யா: ஸ்மரேந் நித்யம் பஞ்சபாதகநாசிநீ!!

என்று. ஆகையால் இவர்களைக் கற்புள்ள பெண்களின் கோஷ்டியில் எடுத்து, அநுதினமும் இவர்கள் பெயரைச் சொல்ல வேண்டும் என்று நூல்களிலும் பெரியோர் சொல்லியிருக்கிறபடியால், இவ் விஷயத்தில் தர்மத்தின் நுட்பத்தை நம்மால் ஆராய முடியாது. பெரியோர் எல்லாமறிந்து ஆராய்ந்து கூறியிருப்பதனால் ஆவர்கள் எதை சொல்லுகிறர்களோ அதுதான் தர்மம். அவ் விஷயத்தில் அறிவுக்கேடர்களான நாம் எதையும் ஆராயச் சக்தியற்றவர்கள்.

இன்னமும் ஒரு விஷயம் கேண்மின்: பஞ்ச பாண்டவர்களின் விருத்தாந்தம் யாருக்குத்தான் தெரியாது? அவர்கள் பிறந்த வரலாறும் அவர்கள் நடந்துகொண்ட விஷயமும் அனைவர்க்கும்

தெரியுமே. இவர்கள் வ்யாஸ மகரிஷியின் பேரர்கள் (பௌத்திரர்கள்). வ்யாஸர் பராசரர் மூலமாக மத்ஸ்யகந்நி என்னும் செம்படவப் பெண்ணுக்குப் பிறந்தவர். அதுவும் அந்த பெண் கன்னிகையாக இருந்தபோது பிறந்தவர். அந்த வ்யாஸர் தம் சகோதரனுடைய மனைவியினிடத்தில் பாண்டு என்னும் அரசனை உண்டு பண்ணினவர். பாண்டுவின் தகப்பனார் இறந்தபிறகு வ்யாஸர் மூலமாகப் பாண்டு என்ற அரசன் பிறந்தான். பாண்டுவுக்குப் புதல்வர்களாகப் பிறந்தவர்கள் பஞ்ச பாண்டவர்கள். பாண்டு என்ற அரசன் இருந்தபோதே துர்வாஸ முனிவரின் உபதேசம் பெற்று, ஐந்து மந்திரங்கள் மூலமாகக் குந்தியினிடத்திலும் மாத்ரியினிடத்திலும் யமன் வாயு இந்திரன் அச்வினி தேவதைகள் என்ற இவர்களிடமிருந்து இவர்கள் ஐந்து பேரும் பிறந்தவர்கள். தகப்பனான பாண்டு தன் தகப்பன் இறந்த பிறகு வ்யாஸரிடம் பிறந்தவன். ஆகையால் பாண்டுவை, 'கோளகன்' என்று சொல்வர். தகப்பன் இருக்கும்போதே யமன் முதலியவர்களிடமிருந்து உண்டானவர்களானபடியால் பாண்டவர்களைக் 'குண்டர்' என்பர். இப்படி இவர்களது வம்ச பரம்பரை.

இவர்களாவது, 'நாம் உண்டான வழி செவ்வையாக இல்லையாதலால் நம் நடத்தையையாவது நன்றாக நடத்தி நாட்டார் கௌரவிக்கும் வழியில் நடக்க வேண்டுமே' என்று இருந்தார்களா என்றால் அதுவுமில்லை. ஒரு த்ரௌபதியை ஐந்து பேரும் மணந்து கொண்டார்கள். தர்மபுத்திரருக்குத் த்ரௌபதி மனைவியாக இருக்கும்போது மற்றவர்களுக்கு அவள் தாயாக இருக்கிறாள். மற்றவர்களுக்கு மனைவியாக இருக்கும்போது முற்பட்டவர்களுக்கு நாட்டுப்பெண்ணாக ஆகிறாள். இப்படியிருக்க, இவர்கள் அனைவரும் ஒரு பெண்ணான த்ரௌபதியினிடத்தில் மனைவிப் புத்தியை எப்படிச் செய்தார்கள்? இம்மாதிரி இவர்களது வம்ச பரம்பரையும் ஆசாரமும் இருந்தபோதிலும், 'இந்தப் பஞ்சபாண்டவர்களை மனத்தினால் நினைக்கும்போதே பாவங்கள் நீங்கிவிடுகின்றன; அளவற்ற ஸுகம் ஏற்படுகிறது; நன்மையைப் பெற்று மிகவும் ஆனந்தமாக வாழலாம்' என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஆகையால், 'இதுதான் தர்மம், இது தர்மமன்று' என்று நம்மால் நிச்சயம் செய்ய இயலாது. 'நதிமூலம் ரிஷிமூலம்' என்று சொல்வதுண்டு. இவற்றை விசாரிக்காமல் இருப்பதுதான் நன்மையைத் தரும். எல்லாக் கல்விகளையும் கற்று மகான் என்று உலகத்தாரால் கொண்டாடப் பெறுகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். அவர்களிற் சிலர் தாழ்ந்த ஆசாரங்களைக் கைப்பற்றுபவர்கள் போல் நமக்குப் புலப்படும். அதைக் கொண்டு நாம் அவர்கள் விஷயத்தில் ஏளனமாக நடந்துகொள்வது சரியல்ல. அவர்களை அவமதித்தால் பகவான் வெறுப்பைத்தான் அடைவான். அவர்கள் தங்கள் குடும்ப ரக்ஷணத்துக்காகச் சில ஆசாரங்களை விட்டுச் சில ஊனமான காரியங்களைச் செய்வார்கள். பகவான் அவர்கள் மூலமாக உலகத்திலுள்ள ஜனங்களுக்கு உபதேசம் செய்விக்கவும் ஜனங்களைப் பரிசுத்தமாக்கவும் இம்மாதிரி செய்திருக்கிறான் என்று நாம் உணர வேண்டும். ஸந்தியாவந்தனம் செய்யும் காலத்தையும் உபேக்ஷித்து அந்தச் சமயத்தில் ஒரு மகான் உபதேசம் செய்கிறார் என்றால் அதைக் குற்றமாக நினைத்து அவமதிப்பது நியாயமல்ல. இம்மாதிரி எல்லா விஷயங்களிலும் கண்டு கொள்வது.

தர்மத்தின் ஸூக்ஷ்மத்தை அறிவது எளிதன்று என்பதற்கு இன்னமும் ஓர் உதாரணம் கேண்மின் -

ஒரு பூனை ஒரு குருவியைப் பிடித்துக்கொண்டது. அதைப் பலர் பார்த்துக்கொண்டிருந்தனர். "ஐயோ! அநியாயமாகப் பூனை குருவியைப் பிடித்து ஹிம்ஸிக்கிறதே" என்றனர் சிலர். மற்றும் சிலர், "அதனுடைய ஆஹாரத்தை அது பிடித்துத் தின்கிறது; அதற்கு நாம் என்ன செய்வது?" என்றனர். இந்த சமயத்தில் பூனையை விரட்டிக் குருவியைக் காப்பாற்றுவது தர்மமா? அல்லது

வெறுமனே இருப்பது தர்மமா? இந்தச் சமயத்தில் ஒரு மகான் அங்கு வந்தார். அவரைக் கண்டதும் எல்லாரும் எழுந்திருந்து தண்டனிட்டு, "ஸ்வாமிந்! எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது அதைத் தேவரீர் விளக்கித்தர வேண்டும்" என்றனர். அவர், "அது என்னவென்று சொல்லுங்கள். எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன்" என்றார், இவர்கள் நடந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்லி, "பூனையிடமிருந்து குருவியைக் காப்பாற்றுவது தர்மமா? அல்லது வெறுமனே இருப்பது தர்மமா?" என்றனர். இதைக் கேட்டதும் மகான், "இதைப்பற்றி நான் ஒரு கதையைக் கூறுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினார்.

ஒரு சமயம் தேவலோகத்திலிருந்து மூன்று கந்தர்வர்கள் அழகிய விமானத்தில் ஏறிப் பூலோகத்துக்கு வந்தனர். அப்பொழுது ஒரு பாம்பு ஒரு தவளையைக் கவ்விக்கொண்டது. பாம்பின் வாயில் அகப்பட்ட தவளை கத்த ஆரம்பித்தது. இவர்கள் அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே திரும்பி நன்கு பார்த்தனர். கந்தர்வர்களில் ஒருவன், "ஐயோ! இது என்ன அநியாயம்! தவளையைப் பிடித்துப் பாம்பு ஹிம்ஸிக்கிறதே! இதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கலாமா? தவளையை எப்படியாவது விடுவிக்க வேண்டாமா?" என்றான். இதைச் சொன்னதுதான் தாமதம், அந்த விமானத்திலிருந்து கந்தர்வன் கீழே விழுந்து விட்டான். மற்றொரு கந்தர்வன், "பாம்பு தன் உணவைத் தின்னத் தவளையைப் பிடித்திருக்கிறது. பாம்பின் ஆஹாரத்துக்காக அன்றோ தவளை ஈச்வரனால் படைக்கப்பட்டுள்ளது? இதில் என்ன தவறு?" என்றான். இதைச் சொன்னதுமே அவனும் விமானத்திலிருந்து 'தொப்பென்று விழுந்துவிட்டான். இருவரும் கீழே விழுந்ததையும் அதன் காரணத்தையும் கண்ட மற்றொருவன், 'இரண்டு விதமாகச் சொன்னதும் அதர்மம்' என்று எண்ணி, 'நாம் எதையும் சொல்லாமல் மௌனமாக இருப்பதுதான் உத்தமம்' என்று வெறுமனே இருந்துவிட்டான். இவன் கிரமமாக விமானத்திலேயே இருந்து, தான் வந்த காரியத்தை முடித்துக்கொண்டு தேவலோகம் சென்றுவிட்டான். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். மற்றவற்றை நீங்களே யோசித்துப் பாருங்கள் என்று சொல்லி, மகான் போய்விட்டார்.

ஆகையால் தர்ம ஸங்கடங்கள் நேரும் இடத்தில், ஆராய்ந்து தர்மத்தைக் கடைப்பிடிப்பது ச்ரமம்தான். பெரியவர்களை அணுகித் தெரிந்துகொள்வதுதான் நல்லது.

யக்ஷப்ரச்னத்தில் தர்மபுத்ரர் சொன்னதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தர்மஸ்ய ஸூக்ஷ்மம் நிஹிதம் குஹாயாம் 'மஹாஜனோ யேந ததர் ஸபந் தா: என்பது. சில சமயம் தர்மம் அதர்மமாகலாம். அதாமாக்த தோன்றுமது தர்மமாகலாம். ஸத்யம் அஸத்யம் ஆவது உண்டு. அஸத்யம் ஸத்யம் ஆவதும் உண்டு அதை இங்கும் நினைக்கவும்.

மேலும் இங்கு ஒரு கதையை பெரியோர் கூறுவர். ஒரு குடும்பம் அதில் தகப்பன் மனைவி புதல்வன் வேலைக்காரன். வேலைக்காரனுக்கும் இந்த மனைவிக்கும் வெகுநாளாக தொடர்பு உண்டு. அதன் மூலம் இந்த பிள்ளை பிறந்தவன். இவனுக்கு இருபது இருபத்தைந்து வயது விவாஹம் செய்யவில்லையே என்று ஊரார் பேச்சு. அதை ஒட்டி விவாஹம் நடந்தது. நாட்டுப் பெண் சாது. மஹா பதிவ்ருதை. இவள் வீட்டில் இருந்தால் வேலைக்காரனுடன் தொடர்பு கொண்ட நமக்கு உபத்ரவம் என்று எண்ணினாள் மாமியார். அதனால் நாட்டுப் பெண் மீது விபசாரப்பட்டத்தை சாத்தி புத்ரனிடம் சொல்லி அவளை ஒதுக்கி வைத்துவிட்டாள். பெண்ணோ ஒன்றும் அறியாதவள். வ்யவஹாரஸ்தலம் மூலமாக தனது பதிவ்ருத்யத்தை சொன்னாள். அதற்கு அவர்கள் குடம் பாம்பில் கைவிட்டு பரிக்ஷை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இவளும் தன் பதிவ்ரத்யம் நன்கு அறிந்தவளானபடியால் ஒப்புக்கொண்டு செய்தாள்.

அப்பொழுது தன் கனவனைக் காட்டி இந்த ப்ராமனனைத் தவிற நான் யாரையுமே நேசரித்தது இல்லை என்று சொல்லி குடத்தில் கைவிட்டாள். ஆனால் அந்த பாம்பு கடித்துவிட்டது. மாமியாருக்கு சந்தோஷம். ஒரு தடவை இரண்டு முறை நடந்தது. அப்பொழுதும் அப்படிதான் நாட்டுப் பெண் யோசித்தாள். சாஸ்த்ரம் ஏன் எப்படி பொய்யாயிற்று என்று. அந்த ஊரில் உள்ள ப்ரபல ஜோஸியரை அனுகி கேட்டாள். அவர் ஜாதகத்தை பார்த்து நன்கு புரிந்து கொண்டார். பெண்ணே நீ இனி ஒரு தடவை குடப்பாம்பில் கை விடு. ஆனால் இந்த தாலி கட்டின ப்ராஹ்மனரல்லாதவரைத் தவிர நான் யாரையும் நேசிக்கவில்லை என்று சொல். ஒன்றும் பயப்பட வேண்டாம் என்று சொன்னார். பெண்ணும் பலாத்காரமாக இந்த ஒரு முறை குடத்தில் கை விடுகிறேன் என்று சொல்லி நிர்பந்தித்து கைவிட்டாள். அப்பொழுது பாம்பு ஒன்றும் செய்யவில்லை. அனைவரும் ஆச்சர்யப் பட்டார்கள். இங்குதான் உள்ளது தரம் ஸூக்ஷமம். ஏன்? ப்ராமணன் அல்லாத வேலைக்காரனுடன் தோடர்பு கொண்டவள் அந்த ப்ராமண ஸ்த்ரி. அதின் பிறந்த புதல்வன் ப்ராமணன் அல்ல. இது உண்மையானபடியால் பாம்பு கடிக்கவில்லை. மாமியார் முகம் வாடிவிட்டது. அவள் குற்றம் வெளி வந்தது. புதல்வனும் புரிந்து கொண்டு மனைவியுடன் வாழ்க்கையை நடத்தி தாயை தூரமாக விலக்கிவிட்டான்.

இதனால் தர்ம ஸூக்ஷமம் வெளி வந்தது. இதை அறிவதுதான் மிக கஷ்டம். ஆக தர்மாதர்மங்களை பெரியவர்களிடமிருந்து கேட்டு அதன்படி நடக்க வேண்டும். இதை நினைத்துத்தான் ஸ்ரீராமபிரான் வாலியினிடம் சொன்னார் "ஸூக்ஷ்ம: பரம துர்ஞ்யே: சதாம் தர்ம: ப்லவங்க" என்று. இப்படிப்பட்டவர்களுக்குத்தான் நேராக பஞ்ச ஸம்ஸ்காரம் செய்வதும் ப்ராஹ்மணப் பெண்ணை ப்ராஹ்மணன் அல்லாதவனுக்கு திருமணம் செய்வதும் மஹா பாபம். புகழ் வருவதற்காக இப்படிப்பட்ட வேலையை செய்கிறார்கள். இது எம்பெருமானுக்கு நிக்ரஹத்தைக் கொடுக்கும். இதன் முடிவு, கலியுகமானபடியால் பிற்காலத்தில்தான் விளங்கும். இங்கு ஸங்கேதம் ப்ரயோஜனமில்லை. ஆத்மா க்ஷேமமடைய வழி வகுத்துக் கொள்ள வேணும். இதெல்லாம் முன்கால் வ்யவஸ்தை. இப்பொழுது எல்லோரும் ஸமமாகிவிட்டோம்.

*****

# 58. பவநாசினி

புனிதமான பாரதபூமியில் ஜனங்களை உஜ்ஜீவிக்கும்படி செய்யப் பல திவ்ய தேசங்கள் போல் பற்பல புண்ணிய நதிகளும் புண்ணிய தீர்த்தங்களும் உள்ளன. காவேரி, கங்கை, நர்மதை, கிருஷ்ணா, ஹ்ரத்தாபநாசினி, ஸ்வாமி புஷ்கரிணி முதலிய பல தீர்த்தங்கள், தங்களிடத்தில் ஸ்நானம் செய்கிறவர்களைப் புனிதமாக்கி, அவர்களின் பாவங்களை நீக்கி, அவர்களுக்கு உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுத்து நன்மைகளைத் தருகின்றன.

கங்கை என்னும் நதி தன்னிடத்தில் ஸ்நானம் செய்பவர்களை மாத்திரம் பரிசுத்தமாக்குகிறது என்பது அல்ல; கங்கை என்ற பெயரை வாயால் சொல்லி வேறு ஏதேனுமொரு ஸாதாரண தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தாலும் செய்பவனைப் பரிசுத்தமாக்குகிறதாம். காவேரி என்னும் நதி இப்படிப் பட்ட கங்கையைக் காட்டிலும் புனிதம்.

கங்கை தன்னிடத்தில் ஸ்நானம் செய்யும் பாவிகளின் பாவத்தைப் பெற்றுத் தானும் பாவம் உள்ளதாக ஆகிறதாம். தனக்கு இப்படி ஏற்பட்ட பாவத்தைப் போக்கிக் கொள்ளப் புனிதமான காவேரியில் சேருகிறதாம். காவேரியும் ஜனங்களுடைய பாவங்களையும், கங்கையினுடைய பாவத்தையும் அடைந்து, 'நாம் என்ன செய்வது?' என்று யோசிக்கிறதாம். அதற்காக ஸ்ரீரங்கப்பட்டணம் என்னும் திவ்ய தேசத்தில் அரவணைமேல் பள்ளிகொண்டுள்ள ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித் தாமரைகளைப் பிடித்துக் கொண்டு தன் கஷ்டத்தை முறையிட்டுக் கொள்கிறதாம்.

இப்படி எல்லா நதிகளுக்கும் மேன்மையும் தாழ்வும் ஏற்படுகின்றன. ஸ்ரீஅஹோபிலம் என்னும் திவ்ய தேசத்தில் பெருகிக் கொண்டு ஓடும் பவநாசினி என்னும் நதியின் பிரபாவத்தை சிறிது ஆராய்வோம். இதனுடைய மாஹாத்ம்யம் வாசாமகோசரம் என்று ஸ்ரீநாரத பகவான் பணிக்கிறார். இதன் பெயரே இதன் மகிமையை வலியுறுத்துகிறது. எல்லா ஜனங்களுடைய பாவத்தையும் இது நீக்க வல்லது. அதனால் ஏற்படும் தன் பாவத்தையும் நீக்கிக்கொள்ள வல்லது. இது ஸ்வபர நிர்வாஹகமாம். இருட்டிலுள்ள பொருளை அறிய விளக்கை ஏற்றுகிறோம். அவ்விளக்கு மற்றப் பொருள்களைப் பிரகாசப்படுத்துவது போல் தன்னையும் பிரகாசப்படுத்திக் கொள்கிறது. அதுபோல் இந்த நதியும் மக்களின் பாவங்களைப் போக்கடிப்பதோடல்லாமல் பாவிகள் தன்னிடத்தில் ஸ்நானம் செய்வதனால் ஏற்படும் தன் பாவத்தையும் போக்கடித்துக்கொள்கிறது.

அஹோபிலம் என்னும் பர்வதத்தில் எங்காவது ஏதாவது ஜலப்பரப்பு தென்படுமேயானால் அவையெல்லாம் புண்ணிய தீர்த்தங்கள்; கங்கைக்கு ஸமமானவை. ஹ்ருத்தாபநாசினி. ஸ்வாமி புஷ்கரிணி, ஆகாச கங்கை, பூமி கங்கை, சந்திர புஷ்கரிணி, கங்கை, கோதாவரி, காவேரி, தாமிரவருணி, நர்மதை முதலிய புண்ணிய நதிகளும் புண்ணிய தீர்த்தங்களுமெல்லாம், ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய ஆஜ்ஞையால் இந்த மலையிலுள்ள தீர்த்தங்களில் கலந்துகொள்கின்றன. இந்த எல்லாப் புண்ணிய தீர்த்தங்களைக் காட்டிலும் பவநாசினி உத்தமமானது. கோடிக்கணக்கான ஜன்மங்களில் செய்த பாவங்களும் விலகுகின்றன.

'தீர்த்தாநாம் உத்தமா பவநாசிநீ' என்று புராணங்கள் இதை மிகவும் புகழ்கின்றன. அஹோபிலத்துக்குப் போகும்போது இந்த நதியைக் கண்களால் பார்த்த மாத்திரத்திலேயே பாவங்கள் யாவும் போய்விடுகின்றனவாம். இந்தத் தீர்த்தத்தைப் பகவானுக்கு அபிஷேகம் செய்து பருகினால் ஸகல ரோகங்களும் போகின்றன. அவன் முன்னோர்களும் நரகத்திலிருந்து

விடுபட்டு ஸந்தோஷம் அடைகின்றனர். பவநாசினி என்னும் நதி பெருகும் இடத்துக்கு சென்றாலே பாவங்கள் விலகுகின்றன. உலகத்திலுள்ள மனிதர்கள் அளவற்ற பாவங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தப் பாவங்களை நீக்க எத்தனையோ விதமான க்ருச்ரங்கள் சாஸ்திரங்களில் கூறப்பெற்றிருக்கின்றன. இவற்றைச் செய்தால்தான் அவரவர்கள் பாவங்கள் போகும். அப்படிச் செய்யாமலிருந்தாலும் பவநாசினி என்னும் இந்த நதியில் ஸ்நானம் செய்தும், இந்தத் தீர்த்தத்தைக் கொண்டு சாளக்ராம சிலைக்கு அபிஷேகம் செய்தும் இந்தத் தீர்த்தத்தைப் பருகினால் ப்ரஹ்மஹத்யாதி ஸர்வ பாபங்களும் தொலைந்துவிடும்.

பவநாசினியில் ஸ்நானம் செய்தால் ஸர்வ மங்களமும் கிடைக்கும். ஸர்வ ரோகங்களும் போகும். ஸர்வ ஆரோக்யங்களும் கிட்டும்.

ப்ரஹ்மதேவன் ஜனங்களுடைய பாவத்தைச் சுலபமாகப் போக்கடிக்க கருதி, பவநாசினி என்னும் இந்த நதியைப் படைத்தான். தர்மதேவதையைப் பார்த்து, "நீ நதிரூபமாக ப்ரவஹித்து அஹோபிலத்தில் இருக்க வேண்டும். உன்னிடத்தில் ஸ்நானம் செய்பவர்கள் புனிதமாகி க்ஷேமத்தைப் பெறுவார்கள்" என்றான். உடனே ப்ரஹ்மாவின் நியமனத்தை முன்னிட்டுத் தர்மதேவதை பவநாசினியாயிற்று.

போர்க்களத்தில் எவர் மரணமடைகிறார்களோ உபவாஸத்துடன் விரதத்தை எவர் செய்கிறார்களோ, பிறந்தது முதல் இறந்து போவது வரை மாமிசத்தையே எவர் உண்ணாமலிருக்கிறார்களோ இவர்களுக்குச் சாஸ்திரங்களில் எந்த எந்த புண்ணிய லோகங்கள் சொல்லியிருக்கின்றனவோ அவையனைத்தும் பவநாசினி நதிக்கரையில் வாஸம் செய்பவர்களுக்கு கிடைக்கும் என்கிறார் ஸ்ரீநாரத மகரிஷி.

எம்பெருமானின் அவதாரமான நரங்கலந்த சிங்கரூபமான எம்பெருமான் ஒன்பது வகைப்படுகிறான்.

> 'ஜ்வாலாஹோபிலமாலோலக் ரோடகாரஞ்ஜபார்கவா: ।
> யோகாநந்தச் சத்ரவட: பாவநோ நவமூர்த்தய: ।।

இவர்களுள் ஜ்வாலாந்ருஸிம்ஹன் அவதரித்து இரணியனின் ஹ்ருதயத்தை இருகூறாகப் பிறந்தான். தன் பக்தனான பிரஹ்லாதனுக்குப் பலவிதமான ஆபத்துக்களை விளைவித்த அவுணனின் ஆகத்தை வள்ளுகிரால் போழ்ந்த பின்னும் அவனது சீற்றம் தணியவில்லை. இதைக் கணிசித்த தேவர்கள் அஞ்சி, 'என்ன செய்வது?' என்று திகைத்தார்கள். அவர்கள், "தம் தபந்தமிவாதித்யம் மத்யாஹ்நே தீப்ததேஜஸம் । அபிஷிக்தமயோத்யாயாம் ஜகதத்யாநுபச்யது" என்கிறபடி, கங்கை முதலிய புண்ணிய நதிகளால் எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்தால் சீற்றம் தணியுமோ என்று எண்ணினார்கள். அப்படியே தேவகங்கையை அழைத்து நம் ஸ்வாமியை நீராட்டினார்கள். அதுதான் பவநாசினி என்று பெயர் பெற்று விளங்கியது.

பவநாசினி விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்துக்கு வந்தபோது பெரு வேகத்தைக் காட்டிற்று. வந்த வேகம் உலகம் முழுவதையுமே அழித்துவிடும்போல் தோன்றிற்று. பகீரதனால் பிரார்த்திக்கப்பெற்ற கங்கை ஆகாசத்திலிருந்து வரும்போது பரம வேகத்துடன் பரமசிவனின் சிரஸ்ஸில் விழுந்தது போல் இந்த நதியும் பயங்கரமாகத் தோற்றமளித்தது. மன்னவர் அனைவரும் அஞ்சினர். விண்ணுலகமும் கலங்கியது. இதில் உண்டான அலைகள் பெரும்

சப்தத்தை உண்டாக்கின. இதைப் பார்த்துப் பயந்த தேவேந்திரன், யக்ஷர், கின்னரர், கிம்புருஷர் முதலியவர்கள் என்ன செய்வது என்று உணராமல், கடைசியில் தங்கள் குலகுருவான ப்ருஹஸ்பதியை அடைந்தனர்.

தேவகுருவான ப்ருஹஸ்பதி. "நீங்கள் அஞ்ச வேண்டாம். நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த நதியை ஸ்தோத்திரம் செய்யுங்கள். யாரோ ஒரு மகரிஷி தேவேந்திர பதவி அடைய வேண்டுமென்று எண்ணி தபஸ் செய்து, அதன் மூலமாகப் பயங்கரமான நதியை ஸ்ருஷ்டித்துவிட்டாரோ என்று, இந்திரனே, நீ அஞ்சுகிறாய் போலும். உண்மையான நதியே இது. இதனை நீங்கள் சரணமடைந்து துதியுங்கள். ஜ்வாலா ந்ருஸிம்ஹனுடைய திருமேனி ஸம்பந்தமும் திருவடி ஸம்பந்தமும் பெற்றபடியால் அவ்வெம்பெருமான் போலவே பெருமுழக்கத்துடன் இந்த நதி வெளியே வந்துள்ளது. ஸ்துதிப்ரியனான பகவானைப் போலவே இதுவும் ஸ்துதிப் பிரியை" என்றார்.

இதனைக் கேட்ட தேவர் அனைவரும் அந்த நதியை அடைந்து பல முகங்களாலே ஸ்தோத்திரம் செய்தனர். ஆயினும் இந்த நதி தன் சீற்றத்தைக் குறைத்துக்கொள்ள வில்லை. அஞ்சின தேவர்கள், 'ஆவார் ஆர் துணை?' என்று கலங்கிய சமயத்தில், தீடீரென்று ஆகாசத்திலிருந்து ஒரு வாணி சொல்லத் தொடங்கியது: "தேவர்களே, இந்த அஹோபில க்ஷேத்ரத்தில் க்ஷேத்ரபாலகனாகப் பணி புரிந்து வருகிறார் கபாலபைரவர் என்பவர். அவரைச் சரணமடையுங்கள்" என்று. இதைக் கேட்ட இந்திரன் முதலியவர்கள் கபாலபைரவரைத் தேடிப் பார்த்தனர். அவர்களின் கண்ணில் அவர் புலப்படாமல் இருக்கவே, மானஸிகமாக அவரை ஸ்தோத்திரம் செய்து தம் இருப்பிடம் சென்றார்கள்.

கபாலபைரவர் இந்திரனின் ஸ்தோத்திரத்துக்கு வசப்பட்டு இந்த நதியின் கோபத்தை சமிப்பிக்க ஒரு வழியைக் கையாண்டார். துதிக்கு வசப்படாதவர் யாருமில்லை; எனவே நாமும் இதைத் துதிப்போம் என்று எண்ணினார். "பவநாசினியே, உலகில் பாவம் செய்தவர்களை காக்க வேண்டும் என்று எண்ணி, பகவான் தன் திருவடியில் உன்னை உண்டு பண்ணினான். மலர்ந்த முகத்தை உடையவளாக நீ ஆகி, பயத்தினால் நடுங்கி கொண்டிருப்பவர்களைக் காக்க வேண்டும்" என்று பலவாறு புகழ்ந்தார். பவநாசினி இந்தத் துதிக்குப் பயப்படவில்லை. தனது வேகத்தை மீண்டும காட்டினாள். பர்வதங்களெல்லாம் பெயர்ந்துவிடும்போல் அதிக கர்வத்துடன் வந்தாள். கபாலபைரவர் தமது ஸ்தோத்ரம் வீணாகப் போனது கண்டு கடுங்கோபம் கொண்டார். யாவரும் எதிர்பாராத வகையில் திடீரென்று தமது தலையை அறுத்து அந்த நதியில் எறிந்து விட்டார்.

இதைக் கண்ட இந்த நதி வெட்கமுற்றுத் தனது வேகத்தை தடுத்துக் கொண்டாள். அவரது தலையுடன் பெருகி ஓடுவதற்கு அஞ்சினாள். பிறகு அந்தர்வாஹினியாக பாதாளலோகத்துக்குச் சென்றுவிட்டாள். அங்கும் அழகிய ரூபத்துடன் வந்த ஒரு நங்கையை ஆதிசேஷன் கண்டு, "நீ யார்?" என்று வினவினான். இவள் தன் வரலாற்றைக் கூறினாள்.

இதைக் கேட்ட ஆதிசேஷன், "நதி பிரவகித்துச் செல்லும்படியான வசதிகள் இங்கு இல்லை. நீ பூலோகத்துக்கே சென்றுவிடு" என்றாள். பிறகு இவள் பூலோகத்துக்கு வந்து சேர்ந்தாள். தன் உற்பத்தி இடமான ஒரு மரத்தடியில் அந்த பைரவர் தலையைப் பிரதிஷ்டை செய்தாள். அவருடைய சிரஸ், அங்கு வந்து ஸேவிக்கும் ஜனங்களுடைய கோரிக்கையை

நிறைவேற்றுகிறதாம். பிறகு இந்த நதி மேற்கே சென்று கிருஷ்ணா நதியுடன் சேர்ந்து, தன் பர்த்தாவான ஸமுத்திரராஜனை அடைகிறது.

இங்கே பைரவர் எவ்வளவு தியாகம் செய்தார் என்பதைக் கவனிக்க வேண்டும். சிங்கவேள் குன்றத்துக்கு யஜமானனான பகவானும் இந்தப் பைரவருக்கு மறுபடி தலையை கொடுக்க முயன்றார். பைரவர், 'பின்னுள்ளோர் என்னைக் கண்டு, லோகஜீவனார்த்தமாகத் தன் தலையையும் அறுத்து போட்டான் பைரவன் என்னும் புகழ் எனக்கு எப்பொழுதும் இருக்க வேண்டும். தலையைப் பெற்றுக் கொண்டால் என் புகழ் மறைந்துவிடும்' என்று மறுத்துக் கூறினார்.

பகவான் மிகவும் சந்தோஷத்துடன் இந்த க்ஷேத்ரத்துக்கு வந்து, "பைரவனுடைய ப்ரீதிக்கு எவர் பாத்திரமாகிறார்களோ அவர்களுக்கு நான் எல்லாவித ஐசுவரியத்தையும் கொடுக்கிறேன்" என்றான். இவ்வாறு பவநாசினி என்னும் புனித நதி பகீரதனால் கொண்டுவரப்பட்ட கங்கையைக் காட்டிலும், திருமாலிருஞ்சோலை மலையில் அழகருடைய திருவடிகளிலிருந்து உண்டான நூபுரகங்கையைக் காட்டிலும் அதிகமான வைபவத்தை உடையது. மற்றுமுள்ள காவேரி முதலிய நதிகளை காட்டிலும், புண்ணிய தீர்த்தங்களைக் காட்டிலும் உயர்ந்தது.

'கங்கையில் புனிதமான காவிரி நடுவு பாட்டு' என்று திருமாலையில் காவிரி என்னும் நதி, கங்கையைக் காட்டிலும் பெருமையையுடையது என்றார். இப்பொழுது அந்த காவிரியைக் காட்டிலும் நவந்ருஸிம்ம ஸம்பந்தமுள்ள பவனாசினி மிகப் பெருமை பெற்றது.

*****

# 59. திருமகள் வசிக்கும் இடம்

பகவானுடைய அருள் பெற்றவனே பரலோகத்தில் மிக்க மேன்மையுடன் விளங்கி பல உயர்ந்த இன்பங்களைப் பெற்று ஸுகமாக வாழ்வான். இறைவனுடைய அருள் எவனிடத்தில் வரும் என்றால், பத்து விதமான நிந்திக்கத் தகுந்த செயல்களை விட்டவனிடத்தில் வரும். தேகத்தினால் செய்யப்படும் மூன்று வகைச் செயல்களை விட வேண்டும்; வாக்கினால் செய்யப்படும் நான்கு வகைச் செயல்களை விட வேண்டும்; மனத்தினால் செய்யப்படும் மூவகைச் செயல்களையும் விட்டொழித்தல் வேண்டும்.

தேகத்தினால் செய்யப்படும் மூன்று வகைக் கர்மங்கள் பரஹிம்ஸை செய்வது, திருடுவது, பரதாரங்களை தொடுவது என்பவை. வாக்கினால் செய்யப்படும் நான்கு வகை கர்மங்கள் - கெட்ட பேச்சு, கடுஞ்சொல், கோள் சொல்லல், பொய் சொல்லுவது என்பன. மனத்தினால் செய்யப்படும் மூன்று வகைக் கர்மங்கள்-பிறர் பொருளை விரும்புவது, ஸகலப் பிராணிகளிடத்திலும் அன்பு செலுத்தாமலிருத்தல், புண்ய பாவங்களுக்குத் தகுந்தபடி, நமக்கு யஜமானனான எம்பெருமான் பலனைக் கொடுக்கிறான் என்ற எண்ணமில்லாமலிருத்தல் என்பவை. ஆக இந்த பத்தும் பெரும் குற்றங்களில் சேர்ந்தவை; கொடிய பாவச் செயல்கள். எனவே ஒவ்வொருவனும் உடலாலும் வாக்காலும் மனத்தாலும் இந்த பாவங்களைச் செய்யாமலிருந்தால் எம்பெருமானுடைய அருள் அவனுக்கு கிட்டும். இப்படி இறைவனின் அருள் பெற்றவன் யாருடைய மனத்துக்கும் எட்டவொண்ணாமலிருக்கும் இடத்தைப் பெற்று, அளவிட முடியாத இன்பங்களை பெறுவான்.

பொருள் உடையவன், இவ்வுலகத்தில் சிற்றின்பங்களைப் பெறுவான். உலக வாழ்க்கையைப் பெற விரும்புகிறவன் பொருளைத்தான் முக்கியமாகக் கைப்பற்ற வேண்டும். பொருளுக்கு அதிஷ்டான தேவதை திருமகள்; மகாவிஷ்ணுவின் முக்கிய மஹிஷி. இவளுடைய கடாக்ஷத்தினால்தான் பொருளைப் பெற்றவனாகிறான். நாம் பொருளைப் பெற மகாலக்ஷ்மியின் அருளைப் பெற வேண்டும். நாம் மகாலக்ஷ்மியைப் பெற விரும்பின மாத்திரத்திலேயே அவள் கிட்டிவிடுவாள் என்று சொல்ல முடியாது; அவளுடைய மனத்தில் 'இவனை நாம் அடைந்து எல்லாவிதமான ஐச்வர்யத்தையும் கொடுக்க வேண்டும்' என்ற நினைவு இருந்தால்தான் நமக்கு இவை கிட்டும். நமது விருப்பம் மாத்திரம் காரணமாகாது.

நாம் ஐச்வர்யத்தையே அடைய எண்ணி ஆகாசமார்க்கமாக விமானத்தில் சென்றாலும் பயனில்லை; பாதாளத்திலுள் புகுந்தாலும் அவ்விதமே; பல தேசங்களுக்கு ஓரிடத்திலும் நிலையாக நில்லாமல் இரவு பகலின்றியே ஓடிக்கொண்டே இருந்தாலும் பலனில்லை.

நாம் முன் ஜன்மத்தில் பலருக்கு தான தர்மங்களைச் செய்திருந்தால்தான் திருமகள் திருவருள் புரிவாள். 'கொடுத்து வைத்தது கிடைக்கும்' என்பது பழமொழி. நாம் ஒருவருக்கும் கொடுக்காமல் இருந்தால், நமக்கு மாத்திரம் யார் கொடுப்பார்கள்?

ஒருவன் ஒன்றுமே செய்யாமலிருக்கிறான். எங்கும் போவதில்லை. பணம் திரட்ட ஆவலும் அடைவதில்லை. திடீரென்று அவனிடம் பணம் குவிந்து விடுகிறது. மற்றொருவன் நாடெங்கும் ஓடியும் ஒரு சல்லிக்காசும் பெறுவதில்லை. 'ஐயோ! நான் பல இடங்களுக்குச் சென்றேன். பல பெரிய மனிதர்களையும் பார்த்தேன். ஆயினும் என்னிடத்தில் பொருள் சேரவே இல்லை. இவனோ வீட்டில் இருந்து கொண்டே பெரிய தனிகனாகிவிட்டான்' என்று

அஸூயைப்படுகிறான். இதற்கு யார் என்ன செய்வது? அவனவனுடைய அதிர்ஷ்டம்தான் அதற்குக் காரணம். எனவே லக்ஷ்மியின் அநுக்கிரகம் யாரிடத்தில் இருக்கிறதோ அவனுக்குத்தான் ஐச்வர்யம் கிடைக்கும். 'திருமகள் யாரிடத்தில் திருப்தியுடன் வஸிப்பாள்?' என்றால் இதை தேவி தானே கூறுகிறாள்.

ஸ்ரீபீஷ்மாசார்யர், சரதல்பத்தில் படுத்திருந்தபோது, தம்பிமார்களுடன் தர்மபுத்திரர் பீஷ்மாசார்யரிடம் பல தர்மங்களைக் கேட்கிறார். அவற்றுடன், "ஸ்ரீ என்ற லக்ஷ்மி எத்தகைய ஆண்களிடத்திலும் எத்தகைய பெண்களிடத்திலும் எப்போது குடியிருப்பாள்? அதை எனக்கு சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

ஸ்ரீபீஷ்மர் கூறுவதாவது :- தர்மபுத்திரனே, முன்பு ஒரு காலத்தில் இவ் விஷயத்தைப் பற்றிப் பெரியவர்களிடம் கேட்டிருப்பதை உன்னிடம் கூறுகிறேன். ருக்மிணி ப்ரத்யும்னனுடைய தாய், க்ருஷ்ணனுடைய பத்னி. இவள் தன் கணவனான க்ருஷ்ணனுடன் இருந்த போது நாராயணனுடைய மடியில் அமர்ந்துகொண்டும், மின்னல் போல் பிரகாசித்துக்கொண்டும், தாமரை மலர்கள் போல் மலர்ந்த கண்களையுடையவளுமான ஸ்ரீதேவியைப் பார்த்து, "எல்லா உலகுக்கும் தாயே! ப்ருகு மகரிஷியின் புதல்வியே! உலகில் சிலர் மிக்க தனிகர்களாக இருக்கின்றனர்; பலரோ மிகவும் தரித்ரர்களாக இருக்கிறார்கள். ஸாதாரணமான உணவுக்கும் உடைக்குங்கூட கஷ்டப்படுகிறார்களே; எல்லா விதமான ஐச்வர்யத்துக்கும் உன் அருள்தான் காரணம் என்று எனக்குத் தெரியும். ஏழை மக்களிடத்தில் உன் அருள் இருப்பதில்லை; நீ அவர்களிடத்தில் வஸிப்பதில்லை என்பது நன்கு வெளியாகிறது. அது ஏன்? நீ யாரிடத்தில் நிலையாக வஸிக்கிறாய்? நீ யாரை விரும்புவதில்லை? இதனுடைய உண்மையை விளக்கிக் கூற வேண்டும்" என்ற கேட்டாள்.

இதற்கு ஸ்ரீதேவி கூறுகிறாள்: "உலகமெல்லாவற்றுக்கும் யஜமானன் ஸ்ரீமகாவிஷ்ணு. அவன்தான் நாராயணன். அவன் எனக்குப் பர்த்தா. எல்லா உலகங்களையும் படைத்துப் பிரளய பாலத்தில் அசேதன வஸ்துக்கள் போல் சிறிதேனும் அறிவில்லாமல் இருக்கும் ஜீவராசிகளுக்குச் சரீரம் இந்திரியம் முதலியவற்றையும், புத்தியையும், வேதம் முதலிய நல்ல நூல்களையும் கொடுக்கிறான். 'இந்த வேதம் முதலிய நூல்களைக் கொண்டு நல்ல வழியில் நடந்து நல்ல கதியைப் பெறுவார்கள் மக்கள்' என்று எண்ணுகிறான். அப்படி யார் நடக்கிறார்களோ அவர்களிடத்தில் அதிக அன்பைப் பாராட்டுவான். என் கணவனான எம்பெருமான் யாரை விரும்புகிறானோ அவனைத்தான் நானும் விரும்புவேன். அவனிடத்தில் நித்தியவாஸம் செய்வேன். அவனுக்கு எல்லாவித ஐச்வர்யத்தையும் கொடுப்பேன்.

"ருக்மிணி தேவியே! நீ உயர்ந்த விஷயத்தைக் கேட்டு விட்டாய். நான் சொல்லும் பதிலிலிருந்து எல்லா ஜனங்களும் நல்ல மார்க்கத்தில் இருந்து என் அருளைப் பெற விரும்பியே இவ் விஷயத்தைக் கேட்டாய் போலும். முக்கியமாகச் சில விஷயங்களை கூறுகிறேன்.

"எவன் ஆஸ்திக்யத்தில் தைரியத்தை அடைந்திருக்கிறானோ, அதன்படி நல்ல வேலைகளைச் செய்கிறானோ, பிறர் தன்னைத் தூஷிக்கும் போது மனத்தில் கோபமடையாமல் இருக்கிறானோ, தெய்வத்தினிடத்தில் அதிக பக்தியை செலுத்துகிறானோ, செய்நன்றியை மறவாமல் இருக்கிறானோ, எல்லா புலன்களையும் அடக்கி ஸன்மார்க்கத்தில் செல்கிறானோ, அவனிடத்தில் நான் வஸிப்பேன்.

"ரஜோகுணத்தையும் தமோ குணத்தையும் அடக்கி ஸத்வகுணம் மேல் நோக்கியிருக்கும்படி எவன் நடந்து கொள்கிறானோ அவனிடத்திலும் வாஸம் செய்வேன்.

"தர்மம் என்பது க்ஷேமத்தை கொடுக்க கூடியது; நம்மால் அது காப்பாற்றப்பட்டு, நம்மை அது காப்பாற்றுகிறது. அதை நன்கு செய்கிறவனிடத்திலும், தர்மங்களை அறிந்த பெரியோர்களை வணங்கி அவர்களிடத்தில் அடக்கமுடையவர்களிடத்திலும், பகவான் கொடுத்துள்ள இரவு பகல் என்ற காலங்களில் வீணேபேச்சு முதலிய அநாவசியமான வேலைகளில் ஈடுபடாமல் காலத்தை வீணாக்காமல் பகவத் விஷயத்தில் பொழுது போக்குகிறவர்களிடத்திலும் நான் வஸிப்பேன்.

"தானம் செய்வதிலும், தனக்குப் பொருள் இல்லாமலிருந்தாலும் இதை எப்படியாவது தானம் செய்வது நல்லது என்பதிலும் நினைவு இருக்கிறவர்களிடத்திலும், தன்னையும் தன்னைச் சேர்ந்த வீடு முதலிய பொருள்களையும் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பவர்களிடத்திலும், பசு, பிராம்மணன் இவர்களிடத்தில் அதிக ஆவலைக் காண்பிக்கிறவர்களிடத்திலும் எப்போதும் வஸிப்பேன். அவர்களை ஒரு கணமும் விட்டுப் பிரியேன்.

'அழகு, அடக்கம், கற்பு, புருஷனிடத்தில் பணிவிடை, அயல் வீட்டுக்குச் செல்லாமை, குழந்தைகளிடத்தில் அன்பு, மாமியார் மாமனார்களிடத்தில் பக்தி, பணிவிடை, ஸ்நானம் செய்யும்போது லௌகிக வஸ்துக்களை உபயோகித்தாலும் பசுமஞ்சளை நன்றாக தேய்த்து உடம்பு முழுவதும் பூசிக் கொள்வது முதலிய நற்செயல்களைச் செய்யும் பெண்களிடத்தில் நான் ஸ்திரமாகவே வஸிப்பேன்.

"பசு பாத்திரம் தானியம் இவற்றினிடத்தில் ஊக்கமுடைய பெண்களிடத்தில் எப்போதும் வஸிப்பேன்.

"பாண்டங்களில் ஆதரவில்லாமல் 'தடார் மடார்' என்று கீழே தள்ளி உடைக்கிற பெண்களிடத்திலும், எதையும் ஆராயாமல் திடீரென்று கோபமடைந்து எதிர்வார்த்தை சொல்லும் மாதர்களிடத்திலும், எப்போதும் கணவனுக்கு முரணாகப் பேசுகிறவர்களிடத்திலும், தன் வீட்டில் தங்காமல் அண்டை வீட்டில் நோக்கமுள்ளவர்களிடத்திலும், நாணமில்லாதவர்களிடத்திலும் நான் வஸிக்கவே மாட்டேன்.

"நெற்றியில் அடையாளமில்லாதவர்களிடத்திலும், அலங்காரம் செய்துகொள்ளாதவர்களிடத்திலும், 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று தன் வீட்டை அடைந்தவர்களுக்குப் பிச்சை போடாதவர்களிடத்திலும் நான் வஸிக்கவே மாட்டேன்.

"நாஸ்திகனிடத்திலும் ஜாதிஸங்கரம் செய்பவனிடத்திலும், ஒழுக்கம் தவறி நடக்கிறவனிடத்திலும், நன்றி செலுத்தாதவனிடத்திலும், கொடுஞ்செயலைச் செய்பவனிடத்திலும், பொறாமைப்படுகிறவனிடத்திலும், எப்போதும் தூங்குகிறவனிடத்திலும், கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷப்பட்டு, 'இதுவே போதும். இனிமேல் ஸம்பாதிக்க முயல வேண்டாம்' என்பவனிடத்திலும் நான் வஸிக்கமாட்டேன்.

"அந்தணர்களையும் பசுக்களையும் ஹிம்ஸை செய்பவரிடத்திலும், சுத்தமான புண்ணிய தீர்த்தத்தை அசுத்தம் செய்பவரிடத்திலும், நிர்வேதமுள்ளவரிடத்திலும், மிக உத்ஸாகமில்லாமல்

எப்போதுமே துயரப்பட்டுக்கொண்டிருப்பவனிடத்திலும், நினைத்த வேலையை செய்ய முயலாதவனிடத்திலும் நான் வஸிக்கவே மாட்டேன்.

"புஷ்பங்களிலும் மேகங்களிலும் ஆபரணங்களிலும் நக்ஷத்திரங்களிலும் யாகங்களிலும் யானை மாடு முதலியவற்றை கட்டும் இடத்திலும் குளங்களிலும் உயர்ந்த பக்ஷிகளும் ஜலக்கரையிலுள்ள மரங்களிலும் பெருஞ்சொலைகளிலும் நான் வஸிப்பேன்.

"நாராயணனிடத்தில் நான் வஸிப்பேன். என் கணவனான இவனிடத்தில் வஸிக்கும்போது உருவத்துடனும், மற்ற இடங்களில் உருவமில்லாமலும் வஸிப்பேன்.

"பொய் கொலை முதலிய கெட்ட செயல்களைச் செய்பவர்கள் பணக்காரர்களாக இருக்கிறார்களே என்று நினைக்கலாம். நான் அவர்களிடத்தில் நிலைத்திருக்க மாட்டேன். நற்காரியங்கள் செய்பவரிடத்தில் ஸ்திரமாக இருப்பேன்" என்று திருமகள் விரிவாக உரைத்தாள். இவ்வாறு ஸ்ரீபீஷ்மர் தர்மபுத்திருக்குக் கூறினார்.

பகவான் ஸர்வவ்யாபி. அவனை அநந்தன் என்று வேதம் ஓதுகிறது. அவன் நாராயணன். சேதனம் அசேதனம் என இரண்டு பொருளுக்கு ஆதாரம் என்றும் இரண்டு பொருள்களிலும் வ்யாபித்திருக்கிறான் என்று பெரியோர்கள் கூறுவர். அப்படியே நானும் எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்து இருக்கிறேன். அதாவது பரவியிருக்கிறேன். இது பொதுப்படை கருத்து. இப்பொழுது சொல்வதெல்லாம் விசேஷ அபிமானம் கொண்டு இருப்பேன் என்பது சொல்லப்படுகிறது.

*****

# 60. பிறந்த இடத்தையே அடையும்

உலகத்தில் எத்தனையோ ஸித்தாந்தங்கள் இருக்கின்றன. இந்த ஸித்தாந்தங்களை ஆதரிக்கும் ஜனங்களும் ஆங்காங்கு உலாவுகின்றனர். சார்வாக மதம் புத்த மதம் முதலிய மதங்களை ஆதரிக்கும் ஜனங்கள் உலகத்தில் இருந்த போதிலும், வேதாந்தி மதம்தான் அதிகமாகப் பிரசாரத்தில் இருந்து வருகிறது. அந்த ஸித்தாந்திகளைத்தான் அதிகமாக நாம் காண்கிறோம். உபநிஷத்தில் சொல்லக்கூடிய அர்த்தங்களைப் பெரும்பாலும் இவர்கள் இளைந்து கூறுகிறபடியால், இவர்களின் ஸித்தாந்தம் ஓங்கியிருக்கிறது. இவர்களின் பிரசாரமும் நிலைத்திருக்கிறது.

இந்த வேதாந்த ஸித்தாந்திகள் மூவர் - விசிஷ்டாத்வைத ஸித்தாந்தி, அத்வைத ஸித்தாந்தி, த்வைத ஸித்தாந்தி என்று. இவர்களுக்குள் சிற்சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும், உபநிஷத் என்ற வேதாந்த பாகத்துக்குப் பொருள் கூறுவதில் ஈடுபாடு இருக்கிறபடியாலும், பரப்ரஹ்மத்தை இசைந்து அதை அடைவதில் அபிப்ராயம் இருக்கிறபடியாலும் இவர்களை வேதாந்திகள் என்று சொல்வது வழக்கம். விசிஷ்டாத்வைதிகளிலேயே எத்தனையோ அபிப்பிராய பேதங்கள் உள்ளன. அதுபோலவே, வேதாந்திகளிலும் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம் அல்லவா?

எம்பெருமானின் ஸ்வரூப ரூப குண விபவ ஐச்வர்யாதிகளை வேதாந்தங்களில் கூறியபடி யதாவஸ்திதமாக அங்கீகரித்துள்ள எம்பெருமானாரின் மதத்தைச் சேர்ந்தவர்கள் விசிஷ்டாத்வைதிகளான நாம். நம் பாஷ்யகாரரான யதிராஜர் கூறியிருக்கும் பொருளெல்லாம் உலக அநுபவத்தை அநுஸரித்தவையே. லோகாநுபவத்துக்கு முரணாக ஒரு பொருளையும் அவர் உரைக்கமாட்டார். வேதங்களிலும் உலக விவகாரங்களை அநுஸரித்தே பொருள்கள் கூறப்பெற்றிருக்கின்றன. நன்கு ஆழ்ந்து ஆலோசித்துப் பார்த்தால், உலக விவகாரத்துக்கு எதிராக வேதங்களில் எந்தப் பொருளும் கிடையாது என்பது தேர்ந்து நிற்கும். நம் பாஷ்யகாரரும் அப்படியே கூறுவது இயல்பு.

இதற்கு உதாரணமாக ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டுகிறோம். எந்தப் பொருளிலிருந்து எந்த வஸ்து உண்டாகிறதோ, உண்டான அந்த வஸ்து, தனக்குக் காரணமான அந்தப் பொருளையே காலாந்தரத்தில் அடைந்துவிடுகிறது. அதாவது காரணப் பொருளிலே காரியப் பொருள் லயித்துவிடுகிறது. மரக்கட்டையிலிருந்து உண்டாகும் நாற்காலி, பலகை, மணை முதலியவை காரியங்களாக இருக்கும்போது ஒருவிதத் தன்மையைப் பெறுகின்றன. கடைசியில், காலாந்தரத்தில் அவை அழியும்போது மரக்கட்டையாகவே ஆகின்றன. தங்கத்தினால் செய்யப்பெறும் வளை, மோதிரம், மற்ற வகைகளான நகைகள் கடைசியில் எப்படி ஆகின்றன என்பதை சொல்ல வேண்டுமா? மண் கட்டியிலிருந்து உண்டாகும் கலசம் அகல் முதலிய பொருள்கள் அழியும் காலத்தில் மண்ணில் லயிக்கின்றன. இதை நம் அநுபவத்தில் பார்த்துத்தான் இருக்கிறோம். ஆகையால் எந்த பொருளும் தான் அழியும் காலத்தில் தன் காரணமான மூலப்பொருளில் தன் காரியத்தன்மைகளை விட்டு லயித்து விடுகிறது; எனவே தான் பிறந்த இடத்தையே மறுபடியும் அடைந்துவிடுகிறது.

வேதாந்தங்களில் மூலப்ரக்ருதி என்ற ஒரு காரண பொருள் உண்டு. அது மஹத் அஹங்காரம் இந்திரயங்கள் பஞ்ச தன்மாத்ரைகள் பஞ்ச பூதங்கள் என்ற ரீதியில் மாறுதலை அடைகிறது. அதாவது ப்ரக்ருதியிலிருந்து மஹத் என்ற தத்துவமும், மஹத்திலிருந்து அஹங்காரம் என்ற

தத்துவமும், அந்த அஹங்காரம் மூன்று விதமாகப் பிரிந்து அதில் ஒன்று பதினொரு இந்திரியங்களாகவும், மற்றொன்று சப்த தன்மாத்ரையாகவும் மாறுகின்றன. இந்த தன் மாத்ரை ஆகாயமாகவும், அந்த ஆகாயம் ஸ்பர்ச தன்மாத்ரையாகவும், அது வாயுவாகவும் வாயு ரூபதன்மாத்ரையாகவும், அது தேஜஸ்ஸாகவும், அதுவும் ரஸ தன்மாத்ரையாகவும், அதுவும் ஜலமாகவும், அதவும் கந்த தன்மாத்ரையாகவும், அதவும் ப்ருதிவியாகவும் மாறுதலை அடைகின்றன. இப்படி மூலப்ரக்ருதி, எல்லா வஸ்துக்களுக்கும் காரணமாக இருக்கிறது. இப்படி உண்டான தத்துவங்களிலிருந்து உலகம் உண்டு பண்ணப் பெறுகிறது.

இம்மாதிரியே ச்ருஷ்டிக்ரமத்தில் மதங்களில் பேதங்கள் பலவகை இருக்கலாம். நம் கண்ணுக்குப் புலப்படும் ஒவ்வோர் உடலிலும், முன்கூறியபடி இருபத்துநான்கு தத்துவங்கள் அடங்கியுள்ளன. இதற்கு லயம் வரும் காலத்தில் எப்படி உண்டாயிற்றோ அப்படியே கிரமமாக லயித்துவிடுகிறது. அதாவது அது அது தான் பிறந்த இடத்தை அடைந்து மூலப்ருக்ருதியாகவே நிற்கிறது. இந்த எல்லாப் பொருளிலும் எம்பெருமான் ஸ்வரூபத்தினால் பரவியிருக்கிறபடியால் அவன் பிரதானனாக இருந்து காரியங்களை உண்டு பண்ணுகிறான். ஆகையால் எல்லாவற்றுக்கும் அவன்தான் மூலக் காரணம். அந்த அந்த பொருள்கைளை உடலாக வைத்துக் கொண்டு மாறுதலை அடைந்து தானே உலகமாக இருக்கிறான். பிரளய காலத்தில் அந்த அந்த தன்மைகளை விட்டு மூலக்பொருளாக நிற்கிறான். இப்படி உபநிஷத்துக்களில் கூறப்பெற்றிருக்கும் விஷயம் உலக அநுபவத்தை எவ்வாறு ஒத்திருக்கிறது என்பதை சொல்லாமலே உணர்ந்துகொள்ளலாம் அல்லவா?

உலக அநுபவத்துக்கும் வேதாந்தங்களில் சொல்லப்பெறும் விஷயங்களுக்கும் ஒற்றுமை இருப்பதற்கு இது ஓர் உதாரணம் ஆயிற்று. இவ்வாறே பல விஷயங்களில் ஒற்றுமை இருப்பதை மற்றொரு சமயத்தில் எடுத்துக்காட்டுகிறோம். ஸ்ரீபாஷ்யகாரர் வேதங்களுக்கும் உலக விவகாரத்துக்கும் ஒற்றுமையில்லாமையை பேசமாட்டார் என்பதைத்தான் நாம் உணர வேண்டும்.

ஒவ்வொன்றும் தான் பிறந்த இடத்தைனே அடையும் என்பதைப்பற்றி நம் தூப்புல் குல மணியான ஸ்ரீவேதாந்த தேசிகர் அதி ரஸமாகவும் சமத்காரமாகவும் ஒரு விஷயத்தில் கூறியிருப்பதை நாம் நன்கு அறிந்து ரஸிக்க வேண்டும். முதலாழ்வார்கள் மூன்று பேர்; பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் அவர்கள். இந்த திவ்ய ஸூரிகள் திருக்கோவலூரில் வந்து சேர்ந்து சிறு இடைகழியில் இருட்டில், இடியும் மழையும் தாங்க முடியாமல் தங்கி, அங்கு எம்பெருமானை ப்ரத்தியக்ஷமாக கண்டு, மூன்று திருவந்தாதிகள் பாடினார்கள். இம்மூன்றும் கங்காப் பிரவாகம் போல் அமைந்துள்ளன.

கங்கை எம்பெருமானின் திருவடியிலிருந்து உண்டாயிற்று என்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம்; அவ்வெம்பெருமானின் திருவடியிலிருந்து உண்டான கங்கை மூன்று பிரிவாக வெள்ளமிட்டது. தேவ லோகம், மனுஷ்ய லோகம், பாதாள லோகம் என்ற மூன்று இடங்களுக்கும் மூன்று பிரிவை அடைந்த கங்கை சென்றது. இப்படி பிரிந்த கங்கைதான் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூன்று ஆழ்வார்களின் மூன்று திருவந்தாதிகளாக மாறுதலை அடைந்தது. முன்பு கங்கையாக இருந்த பொழுது எம்பெருமானின் திருவடியிலிருந்து உண்டாயிற்று அல்லவா? இப்படி அந்த கங்கை திருவந்தாதிகளாக மாறியபிறகு அதே திருவடியை அடைந்துவிட்டது. பிறந்த இடத்தையே மறுபடியும் அது அடைந்துவிட்டது. அதாவது மூன்று திருவந்தாதிகளும் எம்பெருமானின்

திருவடிகளை சொல்வதற்காகவே வந்தன. கங்கை மூன்று வெள்ளமிட்டு தோன்றிற்று அல்லவா? அப்படி தோன்றிய வெள்ளங்கள் போல் மூன்று திருவந்தாதிகள் தோன்றின. எம்பெருமானின் திருவடிகளையே அவை போற்றுகின்றன. இது உண்மை. இந்த அர்த்தத்தையே ஸ்ரீஸ்வாமி தேசிகன் சமத்காரமாக கூறினார். இதனால் உபநிஷத்துக்களிலும் உலக அநுபவத்திலும் ஏற்பட்ட 'பிறந்த இடத்தையே அடையும்' என்னும் நீதியை நன்கு விளக்கிக் காட்டினார். இதுதான் தூப்புல் குலமணியின் ஸாமர்த்திய விசேஷம். ஸ்ரீஸ்வாமியின் தேஹளீச ஸ்துதியிலுள்ள அழகிய ஒரு ச்லோகத்தை கண்டு களியுங்கள். அந்த ச்லோகம் இதோ -

ஸ்வச்சந்த விக்ர மஸமுந்ந மிதாத முஷ்மாத்
ஸ்ரோதஸ்த்ரயம் யதபவத் தவ பாதபத்மாத் ।
வேதாள - பூத - ஸரஸாமபதிச்ய வாசம்
ப்ராயேண தத்ப்ரஸவ பூமிமவாப பூய:॥

இம்மாதிரி வேதாந்தங்களிலும் லோகாநுபவத்திலும் உள்ள அர்த்தவிசேஷங்களை அழகிய உதாரணத்துடன் அழகிய ரீதியில் ரஸகனமாக எல்லோரும் அறியும் வகையில் எடுத்துக் காட்டுவது ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கே உரியது. இப்படி பற்பல விஷயங்கள் உள்ளன.

*****

# 61. ஆசார்ய காளமேகம்

நம் அநுபவத்திலுள்ள அறுபது ஆண்டுகளில் 'ஆனந்த' என்பது ஓர் ஆண்டு. இந்த 'ஆனந்த' என்ற ஆண்டு பிறக்கும் போதே அனைவருக்கும் விசேஷமான ஆனந்தம் பெருகிக் கொண்டே வரும் என்பதை இந்தப் பெயரிலிருந்தே அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

எம்பெருமானுக்கு பல கல்யாண குணங்கள் உள்ளன என்பதை வேதம் பலபடியாகக் கூறுகிறது. ஒவ்வொரு குணத்துக்கும் அளவே இல்லை. ஸ்ரீபாஷ்யகாரரும் சரணாகதி கத்யத்தில் 'ஸ்வாபாவிக - அநவதிகாதிசய' என்ற சுர்ணிகையால் இந்த அர்த்தத்தை விசேஷமாக அருளிச் செய்தார். இப்படி மறைகளிலே ஸித்தமான குணங்களில் ஆனந்தம் என்பது உயர்ந்ததோர் குணம். இந்த குணத்தை உபநிஷத்தில் ஆனந்த மீமாம்ஸா ப்ரகரணத்தில் பலபடியாக விசாரித்துப் பரமாத்மாவின் ஆனந்தத்துக்கு அளவே இல்லை என்று முடித்துவிட்டது. இந்த குணத்தை மேன்மேலும் எவ்வளவு பெருக்கிக் கொண்டு போனாலும் ப்ரஹ்மாநந்தத்தின் முடிவை அறுதியிட முடியாது. இந்த தன்மை எல்லா குணங்களுக்கும் உண்டு என்பதை ஸ்ரீஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்நத்திலும் அருளிச்செய்தார்.

இப்படிப் பகவானுடைய குணங்களில் ஆனந்தம் என்பது ஒரு குணம். அவனுடைய ஸ்வரூபமும் ஆனந்தமயம். எம்பெருமான் பெயரும் ஆனந்தம்; குணமும் ஆனந்தம். இப்படி எல்லா பிரகாரத்தாலேயும் மேன்மை பொருந்திய தன்மையைச் சொல்லுகிறது 'ஆனந்த' என்னும் பதம். இந்த பெயரை பூண்ட இந்த ஆண்டுக்கு ஏற்பட்ட ஏற்றம் அளவிட முடியாதது.

இந்த வருஷம் நன்கு மழை பெய்து ஸுபிக்ஷம் ஏற்பட்டு அனைவருமே ஸௌக்கியத்துடன் இருப்பார்கள் என்பதற்கு அறிகுறியாக சென்ற வருஷத்தில் மார்கழி மாஸத்தில் கர்ப்போடகம் நன்றாக அமைந்திருந்தது. ஆகையால் ஆகாயத்தில் நிறைய காளமேகங்கள் ஸஞ்சரிக்கும். அவற்றை கண்டு ஜனங்கள் குதூகலம் அடைவார்கள். உலகத்திலுள்ள தாபங்கள் நீங்கும். மேகங்களைப் பார்த்ததும் ஜனங்களுடைய தாபங்கள் நீங்கும் என்பதை சொல்லவும் வேண்டுமோ? கருமேகங்கள் ஸஞ்சரித்தால் மழை பொழியும். மழைமுகம் காணாத பயிர்களின் வாட்டம் நீங்கும். ஜனங்களுக்கு ஸந்தோஷம் உண்டாகும்.

அசோக வனத்தில் ஸீதாதேவி இருந்தபோது ஆஞ்சநேயர் மரக்கிளையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ராவணன் வந்து ஸீதையை மிரட்டிவிட்டு சென்றதும், த்ரிஜடை தனக்கு ஏற்பட்ட ஸ்வப்னத்தை கூறி ஆச்வாஸம் செய்தாள். ஸீதா தேவிக்கும் பல சுப சகுனங்கள் ஏற்பட்டன. இதனால் வாட்ட மடைந்த ஸீதாதேவியின் முகம் மிக்க ஸந்தோஷத்தை அடைந்தது. 'காற்றினாலும் வெயிலினாலும் வாட்டமடைந்த நிலத்திலுள்ள பயிரின் விதை மழையினால் ஸந்தோஷமடைவது போல' என்று வால்மீகி மகரிஷி பின்வரும் ச்லோகத்தினால் அருளிச்செய்தார்:

> ஏதைர் நிமித்தைரபரைச்ச ஸுப்ரூ:
> ஸஞ்சோதிதா ப்ராகபி ஸாதுஸித்தை: ।
> வாதாதபக்லாந்தமிவ ப்ரநஷ்டம்
> வர்ஷேண பீஜம் ப்ரதி ஸஞ்ஜஹர்ஷ ॥

எனவே, மேகங்களைப் பார்த்ததுமே ஜனங்கள் தம்முடைய தாபங்கள் விலகிவிடுகின்றன என்று ஆவலுடன் இருப்பார்கள். இதை போலவே, ஜ்ஞாநம் அநுஷ்டானம் வைராக்யம் முதலிய நற்குணங்கள் நிரம்ப பெற்ற ஆசார்யர்களை பார்த்ததுமே தங்களுடைய எல்லாவித இன்னல்களும் சூரியனை கண்ட பனி போல சுலபமாக மறைந்துவிடுகின்றன என்று நினைத்து, ஜனங்கள் ஆனந்தப்படுகின்றனர். யோசித்து பார்த்தால் ஆசார்யருக்கும் மேகத்துக்கும் பல விதங்களிலும் ஒற்றுமைகள் இருக்கின்றன.

1, மேகங்கள் உப்பு கடலிலிருந்து உப்பு ஜலத்தை எடுத்து எல்லோருக்கும் பலவிதத்திலும் உபயோகப்படும்படியான நன்நீராக மாற்றி அளிக்கின்றன. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் 'மேகங்கள் .... ஸர்வோபஜீவ்யமாய் உமிழுமாப் போலே' என்று அருளிச் செய்தார். ஆசார்யர்களும் நான்கு வேதங்களாகிற ஸமுத்திரத்தில் அநபேக்ஷிதார்த்தங்களை விட்டு, அத்யாவச்யகமான விஷயங்களை எடுத்து கொண்டு ஜனங்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். வேதங்களில் நமக்கு மிகவும் அவசியமான பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை வேதங்களை கொண்டு நேரடியாக நாமாகவே எளிதில் புரிந்துகொள்ள முடியாது. அந்த அர்த்தங்களை ஆரார்யர்கள் தாங்கள் நன்கு உணர்ந்து நமக்குப் புரியும் வகையில் உபதேசம் செய்கிறார்கள்.

2. மேகம் ஒரே இடத்தில் இருந்துகொண்டே மழை பெய்வதில்லை. ஆங்காங்கு உசித ஸ்தலங்களில் ஸஞ்சரித்து மழை பெய்கிறது. 'உயிரளிப்பான் மாகங்களெல்லாம் திரிந்து' என்றார் ஆழ்வார் திருவிருத்தத்தில். அதுபோல் ஆசார்யரும் ஸ்ரீரங்கம் முதலிய அந்த அந்த திவ்யதேசங்களுக்கும் திவ்ய க்ஷேத்ரங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள ஜனங்களின் உஜ்ஜீவனத்துக்காக ஜ்ஞாந ஜீவனத்தை கொடுக்கிறார்கள்.

ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீரங்கம் காஞ்சீபுரம் முதலிய திவ்ய தேசங்களுக்கு சென்று வேதாந்தார்த்தங்களை உபதேசம் செய்து எல்லா ஜனங்களையும் உய்விக்க செய்தார்.

3. மேகங்கள் மழை பெய்து பள்ளத்தை மேடாக்குகின்றன. அதுபோல ஆசார்யர்களும், 'நீசனேன் நிறைவொன்றுமிலேன்' என்று இருக்கும் ஜ்ஞாநசூன்யர்களை ஜ்ஞாநவான்களாக உத்தம புருஷர்களாக ஆக்குகிறார்கள்.

4. மேகங்கள் எப்போதுமே மழை பெய்வதில்லை. சிற்சில கால விசேஷங்களில்தான் மழையைக் கொடுக்கின்றன. ஆசார்யர்களும் எப்போதுமே உபதேசம் செய்வதில்லை. சில கால விசேஷங்களில்தான் செய்கிறார்கள். 'ஸமித்பாணி' என்ற ரீதியில் சிஷ்யன் வந்து கேட்கும்போதுதான்.

5. சரியான சமயங்களில் மேகம் மாைழயை கொடுக்காவிட்டால் வியாதி, துர்ப்பிக்ஷம் முதலிய கெடுதல்கள் உண்டாகின்றன. அதுபோல் ஆசார்யரும் உபதேசம் செய்யாமல் இருந்துவிட்டால் அநேக ஆபத்துக்கள் ஏற்படும். 'சரீரமே ஆத்மா' என்ற எண்ணம், 'நாநே ஈச்வரன்' என்ற எண்ணம் முதலியவை உண்டாகி 'அதோத: பாபாத்மா சரணத நிமஜ்ஜாமி தமஸி' என்கிற ரீதியாம்.

6. மேகங்கள் சில காலங்களில் மழை பெய்து கொண்டே இருக்கும். எவ்வளவு பெய்தாலும் அவற்றுக்கு திருப்தி இல்லையோ என்று தோன்றும். அதுபோல ஆசார்யர்களும் உத்ஸாஹம் கரைபுரண்டு பொழுது போவதும் தெரியாமல் உபதேசம் செய்து கொண்டே இருப்பார்கள்.

7. மேகங்கள் உபகாரத்தை எதிர்பாராமல் மழை பொழியும். ஆசார்யர்களும் பணம் முதலியவற்றை எதிர் பார்த்து உபதேசம் செய்யமாட்டார்கள்.

8. மேகம் சில சமயங்களில் மழைத் துளிகளாக பெய்யும். சில சமயங்களில் பெருமழையாக (ஜனங்கள் போதும் போதும் என்று சொல்லும்படி) அதிகமாக பெய்யும். அதுபோல ஆசார்யர்களும் சில சமயங்களில் மந்த்ரங்களை மாத்திரம் உபதேசிப்பார்கள்; சில சமயங்களில் மந்த்ரார்த்தங்களை விஸ்தாரமாக உபதேசிப்பார்கள்.

9. மேகம் பயிர் காடு ஏரி வீடு வீதி முதலிய எல்லா இடங்களிலும் ஸமமாகத்தான் பெய்கிறது. ஆனால் பயிர் முதலிய இடங்களில் பெய்யும் மழை ஸபலமாகிறது. முத்துச் சிப்பியில் விழும் மழைத் துளி முத்தாகிறது. அதுபோல ஆசார்யர்களும் எல்லோருக்கும் ஸமமாகத்தான் உபதேசம் செய்கிறார்கள். ஒருவரிடத்தில் விசேஷமாக பலிக்கிறது; இன்னொருவரிடத்தில் ஸாதாரணமாக பலிக்கிறது; மற்றொருவரிடத்தில் பயனற்றதாக ஆகிறது.

இவ்வகையில் மேகத்துக்கும் ஆசார்யர்களுக்கும் பலவிதமாக ஒற்றுமைகளை ஆன்றோர் கூறுவதுண்டு. இங்கு நம் பெரியோர்களால் கூறப்பட்ட ரஸகனமான ஒரு ச்லோகத்தின் அர்த்தத்தை அநுபவிப்போம்.

> லக்ஷ்மீகாந்தாக்யஸிந்தௌ சடரிபுஜலத: ப்ராப்ய காருண்யநீரம்,
> நா தாத்ராவப் யக்ஷிஞ்சத் ததநு ரகுவராம்போஜசக்ஷுர்ஜராப்யாம் ।
> கத்வா தாம் யாமுநாக்யாம் ஸரிதமத யதீந்த்ராக்யபத்மாக ரேந்த்ரம்,
> ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி ஸததம் தேசிகேந்த்ரப்ரமௌ கை: ॥

உலகத்தில் சாதாரணமாக மேகங்கள் ஸமுத்ரத்திலிருந்து தண்ணீரை எடுத்து மலையில் பொழியும். பிறகு மழைஜலம் மலையிலிருந்து அருவியாக வரும். பிறகு நதியை அடையும். பிறகு நதி கால்வாய் வழியாக ஏரியை அடையும். ஏரியிலிருந்து மதகுகள் வழியாக பயிரில் பாய்ந்து செழிக்க செய்யும். அதுபோல் இங்கும் நம்மாழ்வார் என்ற காளமேகம் ஸ்ரீமந்நாராயணன் என்ற ஸமுத்ரத்திலிருந்து தயை என்னும் தண்ணீரை எடுத்து, நாதமுனிகள் என்னும் மலையில் வரஷித்தது. பிறகு அந்த தண்ணீர் உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி என்ற இரண்டு அருவிகளாக வெளியில் வந்தது. ஆளவந்தார் என்னும் நதியை அடைந்தது. அந்த நதியிலிருந்து பெரிய நம்பிகள் என்ற பெரிய வாய்க்கால் வழியாக ஸ்ரீபாஷ்யகாரர் என்னும் ஏரியை அடைந்தது. பிறகு எழுபத்துநான்கு ஸிம்ஹாஸனாதிபதிகள் என்ற மதகுகள் வழியாக பிராணிகள் என்னும் பயிரில் பாய்ந்தது. அதனால் பிராணிகளாகிற நாம் க்ஷேமமடைந்தோம்.

இப்படி ஆசார்ய பரம்பரை மூலமாக ஜ்ஞாந உபதெசம் பெற்று எம்பெருமானுடைய தயாநுகூலத்துக்கு பாத்திரராகி ஆத்மலாபத்தை அடைகிறோம்.

ஆழ்வார்கள் தாங்கள் நாயிகாபாவத்தை அடைந்து பறவைகளையும் மேகங்களையும் தூதாக விடுகின்றனர். ஆண்டாள் மேகத்தை தூதாக விடுவது நாச்சியார் திருமொழியில் ஸ்பஷ்டம்.

காளிதாஸன் மேகஸந்தேசம் என்னும் காவியத்தை இயற்றினான். அதில் ஒரு யக்ஷன் தன் மனைவிக்கு மேகத்தை தூது விடுவதாக சொல்லப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் 'தேசிகாஸ் தத்ர தூதா:' என்ற ரீதியில், தூது விடப்பட்டவர்கள் ஆசார்ய ஸ்தானத்தில் சேர்ந்தவர்கள். 'தூமஜ்யோதிஸ்ஸலிலமருதாம் ஸந்நிபாத:' க்வ மேக:' என்ற இடத்தில் புகை, நெருப்பு, தண்ணீர், காற்று இவற்றின் சேர்க்கையே மேகம் என்று சொல்லியிருக்கிறது. ஆசார்யர்களுக்கு ஜ்ஞாநம், அநுஷ்டானம், வைராக்யம் ஆகிய மூன்றும் அவசியம் வேண்டும். அதுபோல ஸலில (ஜல) ஸ்தானத்தில் காட்டப்பட்டது காருண்யம். இதை காட்டத்தான் 'ப்ராப்ய காருண்யநீரம்' என்று அபியுக்தர் ப்ரயோகம் செய்தார். ஜ்ஞாநம், அநுஷ்டானம், வைராக்யம் இவை எவ்வளவு இருந்தபோதிலும் 'ஐயோ! இந்த சேதனன் இவ்வளவு கஷ்டப்படுகிறானே. இவனும் உபதேசம் பெற்று நல்ல கதியை அடைய மாட்டானா?' என்ற இரக்கம் இல்லாவிட்டால் பயன் யாது? ஆகவே, இந்த தயை என்பது ஜனங்களுக்கு தண்ணீர் போல் ஜீவனாடியாகிறது. இப்படி நான்கு குணங்களோடு கூடிய ஆசார்யர்கள் மேகத்துக்கு ஒப்பாகின்றனர்.

*****

# 62. பகவத் கீதையும், திருப்பாவையும்

| | பகவத் கீதை | | திருப்பாவை |
|---|---|---|---|
| 1 | உலகுக்குத் தந்தையான கிருஷ்ணனால் உபதேசிக்கப்பட்டது | 1 | உலகத்துக்குத் தாயான ஆண்டாளால் உபதேசிக்கப்பட்டது. |
| 2 | தேவர்க்கும் தேவனான பகவானாலே உபதேசிக்கப்பட்டது | 2 | கிருஷ்ணனுக்கு உபதேசித்து அவனுக்கும் ஆச்சார்ய பூதையான ஆண்டாளாலே உபதேசிக்கப்பட்டது. |
| 3 | அர்ஜுனனை வியாஜமாக்கி உலகத்துக்கு உபதேசிக்கப்பட்டது | 3 | கிருஷ்ணனை வியாஜமாகக்கி உலகதத்துக்கு உபதேசிக்கப்பட்டது. |
| 4 | அர்ஜுனனுக்கு உபதேசம் செய்து அதன் மூலமாக அவனுக்கு ஆசார்யனாலே உபதேசிக்கப்பட்டது, | 4 | கிருஷ்ணனுக்கு உபதெசித்து அவனுக்கும் ஆசார்ய பூதையான ஆண்டாளாலே உபதேசிக்கப்பட்டது. |
| 5 | தனது க்ஷத்ரிய தர்மத்தை இழந்த அர்ஜுனனைக் குறித்து உபதேசிக்கப்பட்டது. | 5 | ஜகத்ரக்ஷணத்தை தர்மமாக கொண்டு இருந்தும், அதை அடியோடு விட்ட பகவானைக் குறித்து உபதேசிக்கப்பட்டது. |
| 6 | இதில் உபதேசம் செய்ததால் பலர் மாண்டனர். | 6 | இதில் உபதேசம் மூலம் மக்கள் அனைவரும் உஜ்ஜீவித்தனர். |
| 7 | சர்வக்ஞனான பகவானால் உபதேசம் செய்யப்பட்டிருந்தும் அர்ஜுனன் மறந்தான். | 7 | இங்கு ஆண்டாளால் உபதேசிக்கப்பட்ட அனைவரும் மறந்தார்கள் அல்லர். வழி தொடர்ந்தார்கள். |
| 8 | பாரதத்தில் சொல்லப்பட்டிருந்தும் பகவத்கீதை உபநிஷத்தாக கருதப்படுகிறது. | 8 | திவ்ய பிரபந்தத்தில் சேர்ந்து திருப்பாவையும் உபநிஷத்தாக கருதப்படுகிறது. த்ரமிட உபநிஷத்துகளாக கருதப்பட்டாலும், உபநிஷத்துக்கும் வித்து ஆன படியால் மிகச் சிறந்த உபநிஷத்து. |
| 9 | அர்ஜுனன் எனும் புருஷனான தோழனைக் குறித்து கிருஷ்ணன் உபதேசித்தது. | 9 | பெண்களான தோழிகளைக் குறித்து, ஆண்டாள் உபதேசிக்கிறாள். ஏலோ ரெம்பாவாய் ஏல் = ஏற்றுக்கொள்! ஓர் = இதன் பொருளை தெரிந்துகொள்!. எம்பாவாய் = எனது தோழியே! என்பதும் பொருள் திருமங்கை மன்னனின் 11-5 திரு மோழியான மானமரும் மென்னோக்கி" என்பதில் தோழியை குறித்து சொல்வது போல் இங்கும் உணர்க. |
| 10 | கிருஷ்ணன் சரம உபாயமான ப்ரபத்தியை கடைசியில் உபதேசம் செய்தான். | 10 | அதே உபாயத்தை ஆண்டாள் முதலிலேயே மார்கழி என்பதால் உபதேசம் செய்தாள். மார்கழி மார்கசீர்ஷம் தலையான உபாயம். |

| | | | |
|---|---|---|---|
| 11 | கீதையை மக்களுக்கு உபதேசம் செய்து ஜகதாசார்யன் ஆனான் கண்ணன். | 11 | ஜகதாசார்யனான கண்ணனுக்கும் ஆசார்யை சிறுவர்களுக்கு வேதங்களை பயிற்றுவிப்பது போல், வேதாந்த அர்த்தங்களை உபதேசித்து ஆசார்யை ஆனாள். |
| 12 | ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கி பல அல்லல்களை அடைந்து, வாடிக்கிடக்கும் மக்களுக்கு, தத்வஞானம் உண்டாவதற்காக கண்ணனால் உபதேசம் செய்யப்பட்டது. ஆக சோகநிவிருத்திக்காக ஏற்பட்டது கீதை. | 12 | தஜ்வாலையுடன் கூடிய ஒரு பள்ளத்தில் சிக்குண்டு தவிக்கும் ஜீவர்கள் நற்கதி அடைய, வராஹ எம்பெருமானிடம் இருந்து உபதெசம் பெற்று, இவள் உபதேசித்தாள். ஆக சோக நிவருத்திக்காக ஏற்பட்டது இதுவும். |
| 13 | விஜயனுக்கு மூன்று வகையில் சோகங்கள் ஏற்பட்டன.<br><br>1. பந்துக்களை அழிப்பதால் பாபம் ஏற்படும் என்ற சோகம்.<br><br>2. தைவ ஸம்பத்து உள்ளவனுக்குத் தான் நற்கதி, ஆஸுர ஸம்பத் உள்ளவனுக்கு இல்லை என்று சொல்வதின் மூலம் நாம் ஆஸுர ஸம்பத்தில் சேர்ந்திருந்தால் என் செய்வது? என்ற சோகம்.<br><br>3. கடினமான கர்ம, ஞான, பக்தி யோகஙங்களை உபதேசமாகப் பெற்றதால், தம்மால் அவற்றை செய்ய முடியாதே என்ற சோகம். இம் மூன்றையும் ஸ்ரீகிருஷ்ணன் கீதோபதேசம் மூலமாகப் போக்கடித்தான். | | 1. இங்கும், ஆயர்பாடியில் துர்பிக்ஷம் ஏற்பட்டதால், இதை விலக்க, நோன்பு செய்தனர். இதனால் துர்பிக்ஷத்தால் ஏற்பட்ட சோகம் நோன்பின் மூலம் அகன்றது.<br><br>2. ஆயர்ப பெண்கள் நந்தனுடைய புதல்வனான கண்ணனைக் கணவனாக வரிக்க வேண்டும் என்று யமுனைக் கரையில் அர்ச்சித்தார்கள். கண்ணனைக் கணவனாக அடையாமையைப் பற்றிய சோகம். இதுவும் நோன்பால் அகன்றது.<br><br>3. மக்கள் உண்டியே உடையே என்கிற வகையில் திரிந்து கொண்டும் தவிக்கின்றனர். நற்கதியை அடைய இவர்களுக்கு வழி அறியாமல் இருந்தபடியால் சோக ஸமுத்ரத்திலேயே மூழ் இருந்தனர். அந்த சோகமும், இதனால் நிவ்ருத்தமானது. நோன்பு, கண்ணனை பர்த்தாவாக அடைவது, தத்வங்களை உணர்த்துவது இவை மூன்றும் இத் திருப்பாவையில் உபதேசிக்கப் பட்டபடியால், மேல் கூறிய மூன்று சோகங்களும் அகன்றன. |

## திருப்பாவை - பொருள் விளக்கம்

மேன்மை பொருந்திய பாவையால் சொல்லப்பட்டது.

பாவைக்காக = நோன்புக்காக சொல்லப்பட்டது.

பாவையின் பொருட்டு (தோழியின் பொருட்டு) சொல்லப்பட்டது.

பாவையை - பெண்களை அழைத்து சொல்லப்பட்டது.

பாவையை அடைய (புருஷ காரார்தம்) சொல்லப்பட்டது

பாவை மூலம் (லக்ஷமி மூலம் = நீளாதேவியின் மூலம்) பகவானை அடைய சொல்லப்பட்டது.

பாவை = வழி (சரணாகதியைச் சொல்ல ஏற்பட்டது.

பாவை = பலத்தை அடைய சொல்லப்பட்டது.

இப்படி பல வகையில் பொருள் கொள்ளலாம்.

*****

## திருப்பாவை - அடிவரவில் விசேஷம்:

திருப்பாவையில் உள்ள முப்பது பாசுரங்களுக்கும் அடிவரவு முன்னிட்டு விலக்ஷணமான வேதாந்த விழுப்பொருள் ஒன்று வரைகின்றோம்.

1. மார்கழி வையத்து(ள்) ஓங்கி நிற்கிறது. மார்கசீர்ஷமான ப்ரபத்தி, பூலோகத்தில் சிறந்து விளங்குகிறது.

2. ஆழிமாயனை புள்ளும் கீசு கீசு (க்ருஷ்ண க்ருஷ்ண) என்று அழைக்கின்றது.

3. கீழ்வானம் வெள்ளென்றது. ஆசார்யனை அடைந்தது முதல் மோக்ஷம் அடையும் வரையுள்ள ப்ரபாத காலம் - அறிவுற்றகாலம்.

4. தூமணி (ஜீவன்) நோற்று சுவர்கம் புகும்.

5. கற்றுக் கறவை (ஆசார்யர்) கனைத்தது இளம் கன்றுக்கே. (சிஷ்யர்க்கே).

6. புள்ளின் வாய்க்கீண்டானை, உங்கள் புழைக்கடைத் தோட்டத்து (ஹ்ருதயம்) வாவியுள் காணலாம்.

7. எல்லே (என்ன ஆச்சர்யம்)!

8. நாயகனாய் நின்றவன், அம்பரம் (ஹ்ருதய ஆகாசம்)!

9. உந்து மதகளிற்றன் (யானை போன்றவன்) அவனே குத்து விளக்கு (நிலையான விளக்கு)!

10. முப்பத்து மூவர் அமரர்க்கு முன் செல்ல ஏற்றவன் (எல்லா தேவர்களுக்கும் அரசன்)!

11. (அவனை) அங்கண் மாஞாலத்தரசர் (ஜீவர்கள் தங்களது) மாரிமலை முழைஞ்சில் (ஹ்ருதயத்தில்) அன்று த்யானித்தார்கள்.

12. ஒருத்திமாலே! (நிகரற்ற ஆண்டாளிடத்தில் மோகமடைந்த திருமால்).

13. கூடாரை (பாவங்களை) வெல்லும் சீர் உடையவன் அவன்!

14. கறவைகள் (ஆசார்யர்கள்) பின் சென்று சிற்றஞ்சிறுகாலான (பிரபத்தியைச் செய்து) வங்கக் கடல் கடைந்த மாதவனால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்.

## இந்த முப்பது பாசுரம் கொண்ட திருப்பாவையில் ஒவ்வொரு பாசுரங்களிலும் அமைந்த வேதாந்த அர்த்தத்தை வரிசையாக காட்டுகிறோம்.

1. மார்கழி வையத்து ஓங்கி என்ற மூன்று பாசுரங்களால் அடைவே மூல மந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்ற மூன்று மந்த்ரங்கள் காட்டப்படுகின்றன.

2. அம்பரமே, உந்து, முப்பத்து இதில் பிரணவார்த்தம் அ, உ, ம என்று பிரணவத்தை சூசிப்பித்துக் கொண்டு விளக்கப்படுகிறது. குத்து என்று ஆரம்பிப்பதன் மூலம் வேற்றுமையான அர்த்தம் காட்டப்படுகிறது. அமலனாதி, உகந்த உள்ளத்தனாய், மந்திபாய் என்று அமலனாதி பிரானில் உள்ளது போல் அமைந்துள்ளது. இதனுடைய பொருள் உந்தன்னோடு உறவேல் நமக்கு எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் என்பதில் நன்றாக விளக்கப்பட்டுள்ளது.

தனியனில் பரார்த்யம் ஸ்வம் என்று பட்டர் அருளிச் செய்தார். "அகாரேண உச்யதே விஷ்ணு "என்பதால் பிரணவத்தினுடைய அர்த்தம் உபநிஷத்தில் காட்டப்பட்டபடியால் அதன் விசேஷத்தை ஆண்டாள் இங்கு அருளிச் செய்தாள். கம்பன் சுமித்திரை வாயிலாக, "பின்னும் பகர்வரள் மகனே இவன்பின செல் தம்பி, என்னும்படி அன்று, அடியார்க்கு ஏவல் செய்து" என்று இப்பொருளை வெளியிட்டான். இந்த பிரணவத்தின் அர்த்தங்களை அர்ஜுனன் ரதத்திலும் அக்ரத: ப்ரயயோ ராம: என்கிற ஸ்லோகத்திலும் கண்டு கொள்வது என்கிறார் வேதாந்த தேசிகன் "அபிரக்ஷிதும் அக்ரத: ஸ்திதம் த்வாம்" என்று பரமார்த்த ஸ்துதியிலும் சொன்னார்.

உந்து என்ற பாசுரத்தால் வைணவ சம்பிரதாயத்துக்கு முக்கியமாக ஏற்பட்ட சரணாகதிக்கு புருஷகார பூதையான பிராட்டியின் பெருமை சொல்லப்படுகிறது. அதாவது புருஷகார ப்ரதிபாதனம். குத்து, முப்பத்து இந்த இரண்டு பாசுரத்திலும் வரிசையாக த்வயத்தில் சொல்லப்பட்ட இரண்டு கண்டங்கள் சொல்லப்படுகின்றன. முதல் பாசுரம் ப்ராபகத்வபரம், இரண்டாவது ப்ராப்யத்வபரம். உக்கமும் தட்டொளியும் என்று அங்கு கைங்கர்யம் சொல்லப்பட்டது. ஒன்றே அமையுமாயிருக்க, இரண்டு பாசுரங்கள் சொன்னதன் மூலம் த்வயத்தில் உள்ள இரண்டு பாகம் சொல்லப்படுகிறது என்பதில் பொருத்தம் உண்டு.

முப்பத்து மூவர் என்கிற பாசுரம் பரித்ராணாய சாதூனாம் என்கிற கீதையில் சொன்ன அர்த்தம் சொல்லுவதற்காக வந்தது. துஷ்டர்களை ஸம்ஹரிப்பதற்கும் சாதுக்களை ரக்ஷிப்பதற்கும் எம்பெருமானின் அவதாரம் என்பது கீதையின் பொருள். இங்கும் "கப்பம் தவிர்க்கும்" என்றும் "செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும்" என்றும் சொல்வதின் மூலம் இது புலப்படும். பிரபந்நனுக்கு மேலே வரக்கூடிய விஷயங்களும் அங்கு சொல்லப்படுகின்றன.

வையத்து வாழ்வீர் என்ற பாசுரத்தில் ஸாங்க பிரபதன அனுஷ்டானம் சொல்லப்படுகிறது. உய்யும் ஆறு எண்ணி என்று சொல்வதால் அங்கங்கள் கூறப்பட்டது. மோக்ஷத்துக்காக அனுஷ்டிக்கும் சரணாகதியில் பிரசித்தமான ஐந்து அங்கங்களுடன் பலத்யாகம் என்கிற அங்கம் அதிகம் இருப்பதை மனதில் வைத்து ஆறு என்று சொன்னாள்.

த்வயம் என்கிற மந்திரத்தைச் சொல்லி ப்ரபத்தியை அனுஷ்டிக்கிறோம். அம்மந்திரத்தில் ஆறுபதங்கள் இருக்கின்றன. அதையும் நினைவு படுத்துகிறாள்.

நோற்று சுவர்க்கம் என்பதில் ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம் என்கிற மூன்று குணங்களும் அதன் வாயிலாக வரக்கூடிய கார்ய பரம்பரையும் சொல்லப்பட்டதாகிறது. ராவணன் ரஜோ குணம் உள்ளவன். கும்பகர்ணன் தமோ குணம் படைத்தவன். விபீஷணன் ஸத்வ குணம் உள்ளவன்.

மாயனை ... போய பிழையும் என்பதில் "சர்வதர்மான் பரித்யஜ்ய" என்று கீதாசார்யனால் சொல்லப்பட்ட அர்த்தம் விளக்கப்படுகிறது. உபநிஷத்தில் "தத் யதா இஷீகதுலம்" என்று ஸஞ்சித ப்ராரப்த பாபங்களின் அழிவை சொல்கிறது. இதைத்தான் கீதாசார்யன் "சர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று எடுத்துக் காட்டினான். இதையே ஆண்டாளும் சொன்னாள். ஆக கீதை எப்படி உபநிஷத்தோ அதுபோல் இதுவும் உபநிஷத்து. பாஷ்யகாரர் கத்யத்தில் மனோ, வாக். காயம் என்ற தோடங்கி இவ்விஷயங்களை விவரித்து இருக்கிறார்.

"கீழ்வானம்" என்கிற பாசுரம் லீலாவீபூதி, போகவிபூதி என்ற இரண்டு விபூதியையும் எம்பெருமான் பெற்றவன் என்றும், லீலா விபூதி தூங்குவதற்கு இடம் என்றும் போக விபூதி போகங்களுக்கு இடம் என்று காட்டுகிறது. அடைக்கலம் புகுந்த பிறகு இங்கு உள்ளவரை இருக்கும் காலம், "ப்ரபாத காலம்", "பொழுது விடியும் காலம்" (பின்மாலை) என்று சொல்லப்பட்டதாகிறது. பக்தன் பிரபந்தன் இவர்களுடைய வேறுபாடும் இதில் தெரியும்.

எல்லே இளம்கிளியே என்பதில் லீலா விபூதி இருள்தருமா ஞாலமாகையால் அனைவரும் எப்போதும் ஒரே சமயத்தில் தூங்குகிறபடியால் அவர்களை எழுப்ப ஆண்டாள் முயற்சிக்கிறாள். நீளா தேவியினிடமுள்ள மோகத்தால் தூங்கி கொண்டிருக்கும் எம்பெருமானை எழுப்புவது போல் இங்கும் விஷய சுகங்களில் மண்டியிருக்கும் ஜீவர்களை எழுப்புகிறாள். பிரதிக்ஞையை மீறி நடந்தவனும் தாரை, ருமா இவர்களிடத்தில் ஈடுபட்டவனுமான சுக்ரீவனை ராமன் லக்ஷ்மணன் மூலமாக எழுப்புவது போல் இங்கும் நம்மை எழுப்பிகிறாள். இதில் நானேதான் ஆயிடுக என்பது சாரம். இதில் பாகவத ப்ராதான்யமும் விசிஷ்டாத்வைதமதமும் காட்டப்படுகிறது. ப்ரஹ்லாதன் தன்னை எம்பெருமானாகவே நினைத்து "அவனேநான்" என்று சொன்னான். "த்வம்வா அஹமஸ்மி பகவோ தேவதே" என்றது உபநிஷத்து.

ஸோம்ஹ, ஸோம்ஹ என்பது உபாசன பிரகாரம். இவ்வாறு ஸோஹம், ஸோஹம் என்று சொல்லிக் கொண்டே வந்தால் ஹம்ஸ என்று மாறி விடுகிறது. இதனால் தான் பரமஹம்ஸம் என்று உபாசனம் செய்பவர்களை சொல்வது, தாஸத்வம் என்பது ஜீவனுக்கு ஏற்படும். ஆக ஸோஹம் என்பது தாஸோஹம் என்பதில் முடியும். ஜீவாத்மாவிக்கும் பரம் பொருளுக்கும் ஒருவகையில் அபேதம் ஒருவகையில் பேதம் என்பது இங்கு புலப்படும். பேதம், அபேதம் இரண்டும் ஒன்றுக்கொன்று முரண் ஆனபடியால் பொருத்தம் உள்ளதாக ஆகாதே என்று ஆத்மபாவத்தை முன்னிட்டு அபேதமும் வரலாம். விருத்தமான இந்த இரண்டும் ஒரிடத்திலே இருப்பது இயலாதது. ஆயினும் நரசிம்மம் என்று ஒருவரையே நரம் என்றும் சிம்மம் என்றும் கூறுகின்றோம். அதுபோல் இங்கும் நான் என்று சொல்லக்கூடிய பொருளும். இதை பட்டர் "விருத்தே வையக்ரீ ஸுகடித ஸமாநா திகரணே ந்ரஸிம்த்வே பிப்ரத் வரத பிபரா மாஸித ஜகத்" என்பதால் ஸூசிப்பித்தார்.

ஆகையாலே தத்துவமன்று. தத் = அந்தப்ரம்மம். த்வம் = நீ அன்று என்று சொல்லப்பட்டது.

கடோகநிஷத்தில் உத்திஷ்டத, ஜாக்ரத, ப்ரபோதத, நிசாமயத என்று எழுந்து இருத்தல், விழித்தல், அறிவு, பெறுதல், பார்த்தல் என்று சொல்லப்பட்டது. இவை திருப்பாவையில் உள்ளன. எழுந்திருக்கும்போது ஹரிநாம கீர்த்தனம் செய்ய வேண்டும். நடந்து செல்லும்போது கேசவனைப் பாடவேண்டும். சாப்பிடும்போது கோவிந்தனை, தூங்கும்போது மாதவனை என்றது ஸாஸ்திரம். இதிலும் ஹரி என்ற பேரரவம், கேசவனைப் பாடவும், கோவிந்தா உந்தன்னைப் பாடி, வங்கக் கடல் கடைந்த மாதவனை என்று சொல்லி இருப்பதை நோக்கவும். காலை, பகல், மாலை மூன்று வேளையிலும் சந்தியாவந்தனம் முடிந்தவுடன் ரங்கநாதனையும் திருவேங்கடமுடையானையும் தேவப் பெருமானையும் யதுகிரி நாதனையும் வணங்கவேண்டும் என்பது சாஸ்திரம்.

ஸ்ரீரங் மங்கலநிதிம் கருணா நிவாஸம் ஸ்ரீவேங்கடாத்ரி சிகராலய காளமேகம்

ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்வல பாரிஜாதம் ஸ்ரீசம் நவாமி சிரஸா யதுசைல தீபம்

இங்கும் "பையத்துயின்ற பரமனடி" "வெள்ளத்தரவில்" "இங்ஙநே போந்தருளி என்பதில் ரங்கநாதன் துதிக்கப்பட்டார். "செல்வ திருமாலால்" என்பதால் திருவேங்கடமுடையானும் தேவாதிராஜனை என்பதாலும் புள்ளரையன் கோயில் என்பதாலும் தேவப் பெருமாள் சொல்லப்பட்டார். ஏற்றக் கலங்கள் பாட்டில் ஆற்றப் படைத்தான் மகனே என்பதால் செல்வப்பிள்ளை சம்பத்குமாரன் சொல்லப்பட்டான்.

உங்கள் புழக்கடை என்பதில் வேதாந்தத்தின் சாரமான அர்த்தம் சொல்லப்படுகிறது. இதை நமது ஸ்வாபதேசத்தில் பார்த்துக் கொள்ளவும். அங்கண்மான் ஞாலத்து என்பதிலும் உலகில் பிறந்திருக்கும் மக்கள் தங்களுடைய அழகிய கண் காது மூக்கு ஆகிய புலனுடன் கூடிய சரீரத்தில் அபிமானத்தை விட்டு எம்பெருமான் திருவடிகளைப் பற்றவேண்டும். சரீரத்துக்கு அரசனான ஜீவன் தனது சரீரத்தில் பிடித்தம் இல்லாதவனாய் எம்பெருமானிடம் ஆசையைப் பெற்றவனாய் எம்பெருமானிடம் கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற வேதாந்த அர்த்தம் சொல்லப்படுகிறது.

அன்று இவ்வுலகம் என்பதில் அடி போற்றி என்பதுதான் சரணாகதி. சென்றங்கு என்பதால் சரீரத்தின் அழிவுக்கு அநுகுணுமான விவேகம். தசேந்திரியானனம் என்பது ப்ரமாணம். பொன்ற என்பதால் கள்ளர் அழைத்து கொண்டு போகும் வழியே எம்பெருமான் அழிக்கிறான் என்பது இங்கு கூறப்படுகிறது. போற்றி போற்றி என்று ஆறு முறை சொல்லுவதன் மூலம் எம்பெருமானுடைய ஆராதனகாலத்தில் எம்பெருமானுக்கு நம்மால் சமர்ப்பிக்கப் படவேண்டிய ஆசனங்கள், விவக்ஷிதங்கள்: தேவதைகளை வர்ணிப்பதற்கு திருவடி முதல் திருமுடி வரை துதிப்பது, (கவிகள் மனிதனை வர்ணிக்கும்போது கூந்தலில் ஆரம்பிப்பர்). க்ருஷ்ணன் எம்பெருமானின் அவதாரம் ஆனபடியால் இப்பாட்டில் முதலில் அடிபோற்றி என்றது தேசிகனும் பகவத் த்யான சோபானத்தில் 'பாதாம் போஜம்' என்கிற ச்லோகத்தால் இந்த க்ரமத்தை காட்டியுள்ளார். இங்கு போற்றி என்று ஆறு ரஸம் சொல்லப்படுகிறது. நம்மால் உட்கொள்ளப்படும் பொருள்களின் சுவை ஆறு வகை.

(1) பக்ஷ்யம், போஜ்யம், சோஷ்யம், லேக்யம், காத்யம், பேயம்.

(1) பக்ஷணம், ஹவிஸ், வற்றல், துகையல், காய்கறி, பாயஸம், ஔபசாரிகம், அர்க்யாதி.

(2) ஸாம்ஸ்பர்சிகம் - புஷ்பம், சந்தனம் முதலியவை

(3) ஸாந்த்ருஷ்டிகம் - தீபம், கற்பூர ஹாரத்தி, தூபம்

(4) ஆப்யவ்யவஹாரிகம் - போஜனம். இப்படி போஜனத்தில் ஆறு ரசங்கள்.

"வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து" என்று பாசுரத்தில் கஷ்டம் நீங்குவது மாத்திரம் பர்யாப்தம் ஆகாது. அவசியம் சுகமும் வேண்டும். அதாவது "அநிஷ்டநிவ்ருத்தி, இஷ்டப்ராப்தி இவை இரண்டும் பலம். ரோக நிவ்ருத்தி, ஆரோக்யம் இவை இரண்டும் இன்றியமையாதது. கடன் இல்லாமை, மூலதனத்தை அடைவது இவ்விரண்டுமே வேண்டும். சரணாகதி செய்த பிறகு அவித்யா நிவிருத்தி அதாவது துக்கத்தின் ஆழிவு. இது தான் மோக்ஷம் என்பது தார்க்கீகர்களின் மதம். அத்வைதிமதத்திலும் ஆனந்த அனுபவம் மோக்ஷத்தில் இல்லை என்று இதை கண்டிப்பதற்காக மகிழ்ந்து என்று அதிகம் சொன்னான்.

ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்பது மோக்ஷத்தின் நாலுவகை. ஸாயுஜ்யம் என்பதுதான் முக்யமான மோக்ஷம். முந்தியவை இதற்கு முன்தசைகள். (லோகேஷு) கோபிகைகளுக்கு கோகுலவாசம் சாலோக்யம். நந்தகோபனுடைய இல்லத்தை சேருதல் சாமீப்யம். மாலே மணிவண்ணா, கூடாரையிலும் ஸாமீப்யமும் ஸாயுஜ்யமும் சொல்லப்படுகின்றன.

கூடாரையில் சதம் மாலா ஹஸ்தா: சதம் அஞ்சன ஹஸ்தா: சதம் சூர்ணவஸ்தாக: சதம் வாஸோ ஹஸ்தா: என்று உபநிஷத்தில் மாலை, மை, மணத்தூள், ஆடை, ஆபரணம் இவைகள் ஒவ்வொன்றையும் நூறு நூறு பெண்மணிகள் எடுத்து வந்து முக்தனை அலங்கரிக்கிறார்கள் என்று சொல்லப்பட்ட விஷயம் கூறப்படுகிறது. தம் பிரும்மகந்த: பிரவிசதி, பிரும்மரஸ: பிரவிசதி. பிரும்மதேஜ: பிரவிதி, பிரக்ஞயா விபஸ்யதி என்று ஐந்து குணங்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. "என்றனைய பல்கலனும் என்பதால் அபஹதபாப்மா என்ற சொல்லப்பட்ட எட்டு குணங்களுக்கு ஆவரிபாவம் காட்டப்படுகிறது. ஆடையுடுப்போம் என்பதால் எம்பெருமானுக்கு தாம் செய்யும் தொண்டுகளுக்குப் பொருத்தமான கரணகளேபரம் இந்திரியம் சரீரம் முதலியவைகளை எடுத்துக் கொள்வது விளக்கப்பட்டது. பால்சோறு என்பதால் அமுதமாகிய பிராட்டியுடன் கூடின எம்பெருமானாகிற ஷாட்குண்யமான அன்னம் தெரிவிக்கப்படுகிறது. "ஸோச்நுதே சர்வாந்" என்று வேதத்தில் சொல்லப்பட்ட விஷயம் கூடியிருந்து என்பதால் பாட்டப்பட்டது. காமாநீ, காமரூபீ, அனுஸஞ்சரன் என்பதும் இங்கு அறியத்தகுந்தது. குறிர்ந்து என்பதால் "ஏஷ பிரும்ம பிரவிஷ்டோஸ்மி கிரீஷ்மே சீதமிவ ஸ்ரதம்" என்கிற விஷயம் சொல்லப்பட்டது. ஆக வைகுண்டத்தில் முக்தனுக்கு ஏற்படும் ஸாயுஜ்யம் இந்த பாசுரத்தில் ஆண்டாளால் நன்கு வெளியிப்பட்டது. அத்துடன் ஸார்ஷ்டிதையும் சொல்லப்பட்டது. அதாவது "ஸார்ஷ்டி தாதத்ர போகஸ்ய தாரதம்ய விஹீனதா" என்று சொல்லுகிறபடி ஏற்றத்தாழ்வு இல்லாமல் அநுபவிப்பது.

இத்திருப்பாவையில் பதினைந்து பாசுரம் வரையில் தூங்குபவர்களை எழுப்புவது, பதினாறு முதல் கணக்கிட்டால் இருபத்தி ஆறாவது பாசுரம் பதிநொன்று. அதாவது ஏகாதசி ஆகிறது. மாலே என்கிற பாசுரம் அது. மார்கழி நீராடுவான் என்று இதில் விரதம்

உபதேசிக்கப்படுகிறது. ஏகாதசி அன்று நாம் விரதம் அனுஷ்டிக்கிறோம். பிறகு துவாதசி. அதுபோல் இங்கும் இருவத்தி ஏழாவது பாசுரம் துவாதசி. ஆகையால் தான் இப்பாசுரத்தில் மூடநெய் பெய்து என்று சொல்லப்படுகிறது. சாந்தோக்ய உபநிஷத்தில் பிருத்யன், எஜமானன் இவர்கள் இருவரும் சேர்ந்து போகங்களை அனுபவிப்பதாக உள்ளது. "யதா ச்ரேஷ்ட" என்கிற உபநிஷத்து வாக்கியத்தை நினைவு கூறலாம்.

"கறவைகள் பின்சென்று "நாம் ஆசாசார்யர்களை பின் சென்று வேதாந்தங்களைப் படிக்க வேண்டும். நாதமுனி, ஆளவந்தார், ராமானுஜர் முதலிய ஆச்சார்யர்கள் இங்கே கறவைகள் அவர்களைத் தொடர்ந்து வணக்கம், வினயம் முதலியவைகளுடன் வனம் என்று சொல்லப்பட்ட பிரும்மத்தை அறிந்து அனுபவிக்க வேண்டும்.

வங்கக் கடல் த்வய மந்திரத்தை இப்பாசுரம் எடுத்துக்காட்டுகிறது. 'மாதவன்' என்பது பூர்வ கண்டத்தினுடைய விவரணம். "செல்லத் திருமால்" என்பது உத்திரகண்டத்தினுடையது.

இத்திருப்பாவையில் முதல் பாசுரத்தில் "கார்மேனிச் செங்கண்" என்றும், "செங்கண் சிறுச் சிறிதே" என்றும் "செங்கண் திருமுகத்து" என்றும் மும்முறை செங்கண் என்று சொல்லப்பட்டுள்ளது. இதிலிந்து மூன்று கண்களை உடைய எம்பெருமானான அழகிய லக்ஷ்மிநரஸிம்ஹனிடத்தில் ஆண்டாளுக்கு பக்தி அதிசயம் காட்டப்பட்டாகிறது. "தபன இந்து அக்னி நயன.." என்று ஸ்வாமி தேசிகன் மூன்று கண்ணை உடையவன் லக்ஷ்மி நரஸிம்ஹன் என்று சொன்னார் காமாஸிகாஷ்டகத்தில்.

"கோவிந்தா என்பதையும் இத்திருப்பாவையில் மூன்று முறை உபயோகித்திருக்கிறாள். "கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா", "குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா", "பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா" என்று. அன்று துயில் உறியும்போது த்ரௌபதி கண்ணனை அழைத்தாள். அங்கும் கோவிந்தா என்று மும்மறை கூறியிருப்பதை அநுசரித்து கண்ணனிடத்தில் அப்பெயரையே சொல்லி ஆண்டாளும் அநுபவிக்கிறாள்.

எம்பெருமானுக்கு திருப்பாவை ஜீயர் என்று பெயர். ப்ரதிதினமும் பாஷ்யக்காரர் திருப்பாவையை காலக்ஷேபமாக சாதித்து வந்தபடியால் இத்திருநாமம் இவருக்கு உண்டாயிற்று. மேலும் இப்ப்ரபந்தத்தை அநுசந்தித்துக் கொண்டே பிக்ஷை பெருவதற்கு செல்வதாலும் இப்பெயர். மேலும் திருப்பாவை ஒவ்வொரு பாசுரமும் ஆச்சார்யனான பாஷ்யக்காரரையே சொல்லவந்தது. இக்காதைகளால் சொல்லப்படுகிறவர் எம்பெருமான். ஆகையால் இவருக்கு திருப்பாவை ஜீயர் என்று பெயர் உண்டாயிற்றாம். மேலும் சரணாகதி கத்யத்தில் பாஷ்யகாரர் த்வயத்தினுடைய அர்த்தமான சரணாகதி என்னும் பிரபத்தியை வெளியிட்டு இருக்கிறார். "ஆண்டாளும் பிரபத்தி என்னும் உபாயத்தை மார்கழி" மார்கசீருஷம் அதாவது பிரபத்தி என்பதால் வெளியட்டார். ஆகையால் பாஷ்யகாரரும், கோதை பிராட்டியும் சகோதர சகோதரி பாவத்தை பெற்றனர். ஒரே விதமான கருத்தை உடையவர்கள் அன்றோ சகோதரர்கள் ஆவார்கள். "ஸ்ரீபெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே" என்று இவள் வாழித்திருநாமம் அமைந்தது. தனுர்மாதம் : ப்ரணவோ தனூ என்பதையும் நோக்கவும்.

ஆதிசங்கராச்சாரியார் திருவாதிரை என்னும் ஆருத்ரா நக்ஷத்திரத்தில் பிறந்தவர். அவர் பௌத்தம் முதலிய பாஹ்ய மதங்களைக் கண்டித்தார். அவர் மற்ற மதங்களைக் கண்டித்ததற்கு கருத்து என்ன என்றால், பிபூதியாகிற உலகமும் விபூதிமானான

தெய்வமும் இல்லை. அதாவது "சர்வமும் சூன்யம்" என்பதை எப்படியாவது நிரகிக்க வேண்டும். இரண்டுமே உண்டு என்று சொன்னால் அவர்களுக்கு திருப்தி ஏற்படாது என்று கூடமான ஆசயத்தை (எண்ணம்) மனதில் வைத்து உலகம் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம். எல்லாம் பிரமத்தால் ஏற்பட்டது. பிரமத்துக்கு அதிஷ்டானம் ஒன்று அவசியம் இருக்க வேண்டுமே அது இல்லாவிடில் பிரமம் சம்பவிக்க முடியாதே என்று சொல்லி அவர்களை திருப்தி படுத்தினார். ஆக பரமாத்மா என்பது உண்டு என்பதை ஒப்புக் கொண்டார். உலகம் இல்லை என்பதில் நோக்கம் இல்லை. ஆகையால்தான் மக்களுக்கு உண்மையை அறியப்படுத்த வேண்டும் என்று எண்ணி ஏக தண்டதாரியான அவர் அதே நக்ஷத்திரத்தில் த்ரிதண்டதாரியான ராமானுஜராக அவதரித்தார். சித், அசித், ஈஸ்வரன் என்ற மூன்று தண்டத்தைப் பெற்றார். முன்பு ஈஸ்வரன் என்கிற ஒரு தண்டம்.

காலையில் எழுந்தவுடன் நாம் ஹரிநாம சங்கீர்த்தனத்தை ஏழுமுறை செய்யவேண்டும். இவ்விஷயம் ஆஹ்னிக க்ரந்தத்தில் காட்டப்பட்டுள்ளது. நாம் ஹரி என்கிற நாமத்தை உச்சரிக்கிறோம். ஹரி என்கிற ராமன், நமக்கு புருஷகார பூதையாயும் அவனுக்கு தர்ம பத்நியாயும் அமைந்துள்ள சீதாதேவியை காலையில் எழுந்தவுடன் நினைக்கிறான். "சீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரன் பிரதி புத்யதே" என்பது ராமாயணம். திருப்பாவையிலும் பிராட்டியை சொல்லக்கூடிய திரு என்கிற சொல் ஏழுமுறை சொல்லப்பட்டுள்ளது. நாம் ஏழுமுறை பகவானை சொல்வதுபோல் அவனும் ஏழுமுறை திரு என்று பிராட்டியை சொல்கிறான். நித்ய விபூதியில் உள்ள பிராட்டியானவள் புருஷகாரபூதை ஆகிறாள். ராமாவதாரத்தில் சீதை அப்படி ஆகிறாள். கிருஷ்ண அவதாரத்தில் நீளா தேவி. அர்ச்சனையிலே நமக்கு ஆண்டாள் புருஷகாரம். ஆர்த்ராபராதினி என்று ஸ்வாமி தேசிகனும் இதை விளக்கினார். அல்லி நாட் தாமரை மேல் ஆரணிங்கின் இன் துணைவி என்கிற ஆண்டாள் தனியனிலும் இது தெரிவிக்கப்படுகிறது.

18வது உந்து என்கிற பாசுரம் உயர்ந்தது. இதில் புருஷகாரபூதையான பிராட்டி சொல்லப்படுகிறாள். இப்பாசுரம் மார்கசீருஷ மாசத்தில் பிறந்தது. பகவத் கீதையும் பதினெட்டு அத்யாயம் கொண்டது. அதிலும் சரமஸ்லோகம் பதினெட்டாவது அத்தியாயம். பொதுவாக 18 என்கிற எண்ணுக்கு மகிமையே அதிகம். இவ்விஷயம் எனது ராமாயணசுதா என்னும் நூலில் பால கண்டத்தில் விஸ்தாரமாக கூறப்பட்டிருக்கிறது. அங்கு கவனித்துக் கொள்ளவும். இத்திருப்பாவையில் செங்கண், கோவிந்தா என்பதை மும்முறை சொன்னதுபோல் நாராணா என்ற நாமமும் மும்முறை சொல்லப்பட்டிருக்கிறது.

1. நாராயணனே நமக்கே பறை தருவான். 2. நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்

3. நாற்றத்துழாய் முடி நாராணன் என்ற இடங்களில்.

கேசவாதி த்வாதச நாமங்கள் என்பது பிரசித்தமானது. நாம் ஸந்தியாவந்தனம் செய்யவும் பொழுது பன்னிரண்டு நாமங்களை சொல்லி உடலில் இவர்களை வைக்கிறோம். புண்ட்ராதாரணம் போதும். இவர்களை சொல்லி புண்டரத்தை தரிக்கிறோம். திருப்பாவையில் ஆண்டாளால் காட்டப்பட்ட பன்னிரண்டு திருநாமம் ஒன்று உண்டு. (1) நாராணன் (2) ஓங்கி உலகளந்த உத்தமன் (வாமனன்) (3) தாமோதரன் (செய்த தாமோதரனை) (4) கேசவன் (கேசவனைப் பாடவும்) (5) தேவாதிதேவன் (6) மாதவன்

(7) வைகுந்தன் (8) முகில் வண்ணன் (9) பங்கயக் கண்ணன் (10) மணிவண்ணன் (11) கோவிந்தன் (12) நெடுமால் இவைகள்.

மாயனை என்பது திருப்பாவையில் நான்கு முறை சொல்லப்பட்டிருக்கிறது (1) மாயனை மன்னு (2) மாமாயன் மாதவன் (3) மாயனைப்பாடு (4) அறைபறை மாயன் என்று. நான்கு வேதங்களின் ஸாரார்த்தத்தை காட்டுகிறது. மாயன் என்ற பதம்.

திருப்பாவையில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. ஆயர்பாடியில் உள்ள பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நோன்பு நோற்கின்றனர். ஸர்வஸ்மாத்பரனான கண்ணனை பர்தாவாக அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன், நோன்பு நோற்கப்படுகிறது என்று ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்ட வரலாறு. ஸர்வேச்வரனை பர்தாவாக அடைய வேண்டும் என்கிற எண்ணம் உடையவர்கள் இப்பெண்களானபடியால் இவர்கள் கன்னிகைகள் என்றே சொல்லவேண்டும். விவாஹமான பெண்களாய் இருந்தால், அவனை கணவனாக வேண்டி நோன்பு நோற்க அவச்யம் இல்லை. ஆண்டாளும் இவ்வரலாற்றைத் தான் இத்திருப்பாவையில் குறிப்படிகிறாள்.

இவள் பாசுரத்திலும் செல்வச் சிறுமீர்காள்! பிள்ளாய்! நாயகப் பெண்பிள்ளாய் என்றெல்லாம் அழைக்கிற படியால் கன்னிகைகளாகவே இவர்கள் இருக்க வேண்டும் என்று புலப்படுகிறது. ஆயர்ச்சிறுமியரோமுக்கு என்பதை நோக்கினாலும், மிகச்சிறிய பெண்கள் தான் நோன்பு நோற்கின்றனர் என்றே புலப்படுகிறது. விஷயச்சுவை அறியாத, பெண்கள் இவர்கள் ஆனபடியால் ச்ருங்கார சஸத்திற்கு இங்கு அவகாசமே இல்லை. உரைகளில் ச்ருங்கா ரஸத்தை புகுத்தி எழுதி உள்ளனர். இவையெல்லாம் ரஸோக்தி என்று சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர், க்ருஷ்ணன் மதுரையில் அவதரித்தான். அதை விட்டு ஆயர் குலம் அடைந்தான். ராமாவதாரத்தில் ராமனிடத்தில் ஈடுபட்ட மஹரிஷிகள் இவனை அனுபவிக்கக் கருதி, ஆயர்பாடியில் பெண்களாகவும் பசுக்களாகவும் பிறந்தனர் என்பது ப்ரமாணத்தில் ஏற்பட்டது. ஆக அவர்களை அனுபவிப்பதற்காகவே கோகுலம் சென்றான. வயது முதிர்ந்த பெண்களை விட்டுவிட்டு மற்ற பெண்கள் அனைவரிடமும் ச்ருங்கார ரஸத்தின் மூலமாகவே அனுபவித்தான் என்பது.

ராஸக்ரீடையில், பெண்கள் அனைவருமே, கணவன் புதல்வன், பெற்றோர், மாமனார், மாமியார் என அனைவரையும் விட்டுவிட்டு கண்ணனை அணுகி, காதலை அனுபவித்தனர் என்பதும் பாகவதத்தில் உள்ளது. இவ்வாறு, சொல்லி இருக்க இப்பெண்கள் கன்னிகைகளே என்று எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? பிறருடைய மனைவியை, கண்ணன் எப்படி அனுபவிக்கலாம்? அது குற்றமல்லவா? தர்மத்தை நிலைநாட்ட அவதரித்தவனன்றோ இந்த ப்ரபு? இவனே இவ்வாறு குமார்கத்தில் சென்றால் உலகம் எவ்வாறு நன்மார்க்கத்தில் செல்லும். 'ஸங்கரஸ்ய ச கர்த்தாஸ்யாம்' என்று உபதேசித்தான் கண்ணன். உலகமக்களுக்கு, கலப்பு இல்லாதிருப்பதற்காகவே நான் அவதரித்த படியால் இதை எவ்வாறு செய்வேன் என்றான். இவ்வாறு கேள்விகளை கேட்டுகொண்டு பாகவதமே பதில் கூறுகிறது.

"தர்ம வ்யதிக்ர மோத்ருஷ்ட: ஈச்வரானாம்ச ஸாஹஸம். தேஜீயஸாம் ந தோஷாய வஹ்னே: ஸர்வ புஜோயதா! வினச்யத்யாசரன் மௌட்யாத்யதாருத்ரோ அப்திஜம் விஷம் ஈச்வரானாம் வஸஸ் ஸத்யம் ததைவாசரிதம் க்வசித்" என்று.

மஹிமை பெற்றவர்களுக்கு இவை எல்லாம் குற்றத்தில் சேராது. ஸர்வேச்வரன்

எல்லோருக்கும் மேற்பட்டவனானபடியால் அவன் எதைச் செய்தாலும் ஜீரணம் செய்து கொதள்ளமுடியும். அவன் கர்மத்துக்கு வச்யன் அல்லன். அவன் செய்த விளையாட்டு இவை அனைத்தும் ஆயர்பாடியில் வெண்ணைத் திருடி கள்வன் எனப் பெயர் பெற்றான். அவன் செய்த சௌர்யம் நம்முடைய பாபத்தை போக்கும். அவனது ஜாரத்தன்மையும் நமது குற்றத்தை அகற்றும். அவ்வாறான வைபவம் பெற்றவன் அவன். இவை எல்லாம் அவனைக் குற்றவாளி ஆக்காது. அக்னீ பரிசுத்தமானது. தன்னிடத்தில் சேர்க்கபட்ட பொருள் அனைத்தையும் பஸ்பமாக்கும் தன்மை உடையது. சுத்தமான பொருட்கள் அல்லது அசுத்தமான பொருட்கள் எவற்றை அதில் சேர்த்தாலும், அதற்கு இயற்கையாக அமைந்த சுத்தி எக்காரணத்தாலும் குறைந்துவிடாது.

பரமசிவன் ஸமுத்ரத்தை கடைந்த போது உண்டான விஷத்தை உட்கோண்டான். அந்த விஷபானம் அவனை என்ன செய்தது? அதைப் பார்த்து, நாம் விஷத்தை பருக முடியுமா? எல்லாவற்றையும் ஜீரணித்துக் கொள்ளும் சக்தி பெற்றவர்கள் எதையும் செய்யலாம். நமக்கோ அவ்வாறான சக்தி இல்லை. அவனது உபதேசத்தை மாத்திரம் நாம் உபஜீவிக்க வேண்டும். அவனது ஆசாரத்தை நாம் கைப்பற்றலாகாது. பார்த்த ஸாரதியான கண்ணனுடைய உபதேசம் நமக்கு மருந்து. ஸ்ரீராமபிரானின் உபதேசமும், ஆசரணமும் நமக்கு மருந்து ஆகும்.

ஸ்வாமி தேசிகன் இவ்விஷயத்தில் சொன்ன ஸமாதானத்தை பார்ப்போம். த்ரௌபதி ஐந்து புருஷனை மணந்து கொண்டாள். அதை அனுஸரித்து நாமும் பல புருஷர்களை மணந்து கொள்ளலாமா? அவ்வாறு ஏற்பட்டது. த்ரௌபதியின் ப்ராசீனமான பரமசிவன் அளித்த வரம், திவ்யமான பரமபுருஷனுடைய மற்ற பெண்களோடு ஏற்படும் காதல் ராகம் முதலிய வியாதிகளை போக்கடிக்கும் மருந்தாக அமைகிறது. ஆக இது கண்ணனுக்கு குற்றத்தை அளிக்காது. மேலும் இவன் பல பெண்களுடன் கலந்து இருந்த போதிலும் நித்ய ப்ரஹ்மசாரி ஆகிறான்.

உத்தரையின் வயிற்றில் இருக்கும் சிறு குழந்தை அச்வத்தாமாவின் அஸ்த்ர பலத்தால் கரிக்கட்டை ஆகிவிட்டது. கீழே விழுந்ததும் அனைவரும் புலம்ப ஆகாசவாணி நித்ய ப்ரஹ்மசாரியின் பாதஸ்பர்சம் ஏற்பட்டால் குழந்தையாக மாறிவிடும் என்று சொன்னது. பீஷ்மாசார்யர் ஹனுமன் இவர்கள் முன்வரவில்லை. இவர்களை நாம் நித்ய ப்ரஹ்மசாரிகள் என்று சொல்வதுண்டு. ஸ்ரீக்ருஷ்ணன், இந்த சமயம் நான் நித்ய ப்ரஹ்மசாரியாக இருந்தால் என்னுடைய பாத ஸ்பர்சம் ஏற்பட்டு இக்கரிக்கட்டை சிசுவாக ஆகக் கடவது! என்று சொல்லி, தன் திருவடியால் ஸ்பர்சித்தான். குழந்தையாக மாறி, அழ ஆரம்பித்தது. இதையே காரணமாகக் கொண்டு அவன் நித்ய ப்ரஹ்மாசாரி என்று சொல்வது மிகையாகாது. எனவே பல பெண்களுடன் இவன் விளையாடின போதிலும் இவனது ப்ரஹ்மசர்யம் நீங்கவில்லை. நிறைந்திருந்தது. ஆயர்பெண்கள் இவனிடம் பலவகையில் ச்ருங்கார ரஸத்தை காட்டினர். இவனும் இவ்வாறே நடந்தான். இவன் ஊர்த்வ ரேதஸ்ஸாகவே இருந்தான். அதோ ரேதஸ்ஸை உடையவன்தான் ப்ரஹ்மசாரியாக மாட்டான். இவன் அப்படியல்லன். இதையும் பாகவதம் கூறுகிறது. லலிதவிலாஸ வல்கு என்கிற ச்லோகத்தால். இவ்வாறு நம்மால் இருக்கமுடியுமா? ஆக அவன் நித்யசுத்தன்.

மேலும் பதி ஸுதன் பந்துக்கள் அனைவரையும் விட்டு உன்னுடைய வேணுநாதத்தை கேட்டு மகிழ்ச்சியால் வந்த நாங்கள் பதிவ்ரதைகளே என்று பதில் கூறினர். க்ருஷ்ணனிடத்தில். நீதான் எங்களுக்கு எல்லாவிதமான வந்துவானபடியால், பர்தாவும்

நீதான் இவ்வாறு சாஸ்த்ரங்கள் சொல்லியிருக்க உன்னை விட்டு மற்றொரு புருஷனை நாடினால் தான் எங்களது கற்பு குறைந்து விடும். ஆக நாங்கள் வ்யபிசாரிகள் அல்லர் என்றும் பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் இவன் ஆயர்பாடியில் எந்தப் பெண்களோடு விளையாடினானோ, அவர்கள் அனைவரும் அதே நேரத்தில் அந்தந்த பந்துக்களுடனும் தங்கள் தங்களது கணவனுடனும் கூடி மகிழந்தனராம். புருஷனைவிட்டு பெண்கள் இல்லாத வகையில் காட்சி அளிக்கவில்லையாம். தனது யோக மஹிமையால் அந்தந்தப் பெண்கள் அந்தந்த புருஷனுடன் விளையாடும் வகையில் ஆச்சர்ய சேஷ்டிதத்தை ஏற்படுத்தி வைத்தானாம்.

மற்றும் ஒரு விஷயம் கேண்மின். ஒருவன் பலஜன்மங்களை கர்மவசத்தால் எடுத்துக் கொள்கிறான். முன் பிறவியில் சண்டாளனாக இருந்தவன் மருபிறவியில் அந்தணனாகப் பிறக்கிறான். சண்டாளப் பிறவியில் இருக்கும்போது செயல்கள் பாப புண்யங்கள் அவனைவிட்டு போவதில்லை. ஆயினும் மறுபிறவி அந்தணனானபடியால் அவனை வைதிக கர்மங்களில் அந்வயத்தை ஏற்றுக்கொள்கிறோம். சரீரம் மாறினபடியால் அந்த உடலில் செய்த பாபங்களையிட்டு இந்த உடலில் இவனை பஹிஷ்க்கரிப்பதில்லை. உதாஹரணமாக அந்தண உடலில் ப்ரஷ்டனாக இருந்தால் இவனை நிமந்த்ரணத்தில் வைப்பதில்லை. பூர்வஜன்மத்தில் இருந்த வைகளைக் கொண்டு எதையும் சொல்வதில்லை. ஏன்? உடல் வேரானபடியால். அது போல் இங்கும் கவனிக்க வேண்டும். "க்ருஷ்ணரூபாணி அஸங்க்யானி" என்ற வகையில் கண்ணனது உடல்பல ஒவ்வொரு உடலும் க்ருஷ்ணனாகவே ஸேவை அளிக்கக் கூடியவை. நித்யப்ரஹ்ம சாரியின் பாதஸ்பர்சத்தால் இக்குழந்தையின் சாபம் நிங்கும் என்று அசரீரிவார்த்தையைக் கேட்டதும் க்ருஷ்ணன் தனக்கு ஸஜாதியமான மற்றொரு உடலை எடுத்து வந்தான். இந்த உருவம் புதியதாயும் வேராகவும் ஆனபடியால் இதற்கு எந்தவிதமான கோதும் இல்லை. எனவே இவன் நித்யப்ரஹ்மசாரி என்றக்காரணத்தால் பரிக்ஷித் ஸ்வயரூபத்தை அடைந்தான் என்று இவ்வாறான மார்கங்களைக் கையாண்டு பதில் சொல்லலாம்.

இப்படி இவன் பெண்களுடன் விளையாடின போதிலும் இவனுக்கும் குற்றமில்லை. ஆய்பெண்களுக்கும் எந்தவிதமான தோஷமுமில்லை.

ஆயர் சிறுமியர்களாக இருந்தாலும் ச்ருங்கார ரஸத்துக்கு அவகாசமில்லை என்பதும் சரியன்று. கன்னிகைகளுக்கும் காமவிகாரம் என்பது உண்டு. ருதுமதி ஆகாவிடிலும் மனதில் விகாரம் ஏற்படலாம். கன்னிகைகளையும் ஆலிங்கனம் அதரசும்பனம் முதலிய காமவிகாரங்கள் மூலம் 'அனுபவிப்பதும் உண்டு இது கண்கூடு. எனவே தர்மசாஸ்த்ரங்களில் கன்னிகை ஆலிங்கனம் செய்தால் ப்ராயச்சிதம் சொல்லப்பட்டுள்ளது. விகாரமே ஸம்பவிக்காது என்றிருந்தால் ஆலிங்கனாதிகளுக்கு ப்ரஸக்தியே இல்லை. ப்ராயச்சித்தமும் சொல்ல வேண்டாம். ஆகையால் கண்ணன் ப்ரௌடையான பெண்களுடன் விளையாடினாலும் கன்னிகைகளுடன் லீலா ரஸத்தை அநுபவிப்பதாக இருந்தாலும் திருப்பாவையில் இது சொல்லப்படுவது பொருத்தமாகலாம்.

*****

# AUTHOR'S WORKS

| Sanskrit | Tamil |
|---|---|
| Dharmibhasyatvavaada | Srimadramayanasudha |
| Tattvadarpanam | Mummatasaram |
| Brahmasutravimarsam | Sri Ahobilakshetramahatmyam |
| Sribhashyacandrika | Thulakaverimahatmyam |
| Lakshmitattvanirnayam | Sri Godasukthisudha |
| | Saroddharam |
| | Tattvaprabhashanam |
| | Besides, many articles published in Sri Nrusimha Priya over a period of three decades. |